காலை மன்னா

அனுதின தியானத்திற்கான சிந்தனைத் துணுக்குகள்



"வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே; ... இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான்" (யோவான் 6 : 58).

காலை மன்னா

பழைய ஏற்பாட்டுக் காலத்தில், தேவன் தம்முடைய ஜனங்களுக்கு வனாந்தரத்தில் கிருபையாகவும் இலவசமாகவும் காலைதோறும் புத்தம்புதிய மன்னாவைக் கொடுத்தார். அது தூதர்களின் அப்பமாகவும், பணியாரத்தைப் போன்ற ருசியுள்ள தாகவும், தேனைப் போல இனிமையானதாகவும் இருந்தது. இப்புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் காலைதோறும் தேவன் நமக்கு மன்னாவைத் தருகிறாரா? ஆம்! நிச்சயமாகவே தருகிறார். கர்த்தராகிய இயேசு தாமே வானத்திலிருந்து இறங்கிவந்த ஜீவமன்னாவாக (ஜீவ அப்பம்) இருக்கிறார்.

இருப்பினும், காலைதோறும் தவறாமல் நமக்கு அருளப்படுகிற மற்றொரு மகிழ்ச்சியூட்டும் மன்னா உண்டு. அது என்ன? "அவருடைய **இரக்கங்களுக்கு** முடிவில்லை. **அவைகள் காலைதோறும் புதியவைகள்**; உமது உண்மை பெரிதாயிருக்கிறது" (புல. 3 : 22, 23). எத்தனை தரம் நாம் இஸ்ரவேலரைப் போல (இல்லை, இஸ்ரவேலரைக் காட்டிலும் மோசமான விதத்தில்) முறுமுறுத்து, கலகம் செய்து, அவர் நமக்காகக் கொண்டிருந்த அவரது சித்தத்தையும் திட்டத்தையும் புறக்கணித்துத் தள்ளியிருக்கிறோம்! ஆயினும் அவர்களது வனாந்தரப்பயணம் முழுவதிலும் மன்னா ஒருபோதும் ஒழிந்து போகாதிருந்தது போல, அவருடைய இரக்கங்கள் நம்மை விட்டு ஒருபோதும் நீங்கிப்போகவில்லை. இந்தக் காலையிலுங்கூட நமக்குள் ஜீவசுவாசம் இருக்கிறதே! கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அது நம் மேலுள்ள அவருடைய முடிவில்லாத இரக்கங்களினி மித்தமாக அன்றோ?

'காலை மன்னா' என்னும் இந்நூலின் பக்கங்கள் யாவும் தேவன் உங்கள் மேல் எவ்விதம் இரக்கமுள்ளவராயிருந்து வருகிறார் என்பதைக் காண்பிக்கின்றன. காலைதோறும் அதைப் பொறுக்குங்கள், புசியுங்கள்; அது தேனைப் போல ருசி யுள்ளதாய் இருக்கிறதா, அல்லவா என்பதைப் பாருங்கள்!

ஜனவரி 1

நம் முன் செல்லும் தேவனுடன் ஓர் ஆண்டு

"நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளைச் செவ்வை யாக்குவேன். ... வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப் பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன்"
(ஏசாயா 45 : 2, 4).

இப்புத்தாண்டில் இவ்வாக்குத்தத்தம் நம்மிடத்தில் உண்மையாய் நிறைவேறும். நிச்சயமாகவே கர்த்தர் நமக்கு முன்னே போவார். கோணலான சூழ்நிலைகளையும் மாறுபாடான ஜனங்களையும் நாம் சந்திக்கக் கூடும். ஆகிலும் நாம் கர்த்தருக்குப் பின்செல்வோமாயின் அவர் அவற்றைச் (அவர்களை) செவ்வையாக்குவார். நம்முடைய ஆவிக்குரிய முன்னேற்றத் தைத் தடுத்துநிறுத்துவதாக நம்மை அச்சுறுத்தக்கூடிய வெண்கலக் கதவுகள், இருப்புத் தாழ்ப்பாள்கள் போன்ற அநேக தடைகள் நமக்கு எதிரிட்டு வரக் கூடும். ஆனால் கர்த்தர் தாமே அப்படிப்பட்ட வெண்கலக் கதவுகளைச் சின்னபின்னமாக உடைத்து, இருப்புத்தாழ்ப்பாள்களை முறித்துப்போடுவார்.

'*அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்கள்*' - நம் பாதையில் ஆங்காங்கே சிற்சில அந்தகாரமான பகுதிகள் இருக்கக் கூடும். ஆனால் கர்த்தர் தாமே அந்தகாரத்தில் இருக்கிற அநேக விலையேறப்பெற்ற ஆத்துமாக்களை விசேஷித்த பொக்கிஷங்களாக நமக்குத் தருவதாக இவ்வாண்டில் வாக்குப்பண்ணுகிறார்.

'*ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்கள்*' - இங்கு 'ஒளிப்பிடம்' என்பது 'உன்னதமானவரின் மறைவில்' நாம் தங்கியிருப்பதை அதாவது ஜெப ஜீவியமாகிய இரகசிய அறையைக் காண்பிக்கிறது (சங். 91 : 1; மத். 6 : 6). ஓர் ஆழமான ஜெபஜீவியம் உள்ளவர்களுக்கென புதையல்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன.

இஸ்ரவேல் ஜனங்களைப் போல நாம் ஒரு வனாந்தரப் பிரயாணம் செய்துகொண்டிருக்கிறோம். ஆனால் கர்த்தர் தாமே நமக்கு முன்னே போவதாக வாக்குப்பண்ணுகிறார். "*என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்*" (யாத். 33 : 14). நமக்கு இளைப்பாறுதல் தருவதற்காக அவருடைய சமுகமானது நம் முன் செல்லுகிறது. நாம் நம்முடைய நித்திய இளைப்பாறுதலை அடையும் வரை அது நம்முடனேகூடச் செல்லும்.

கர்த்தர் '*என் சமுகம் உன்னுடன் தங்கியிருக்கும்*' என்று அல்ல, '*என் சமுகம் உன்னுடனே கூடச்* ***செல்லும்***' என்றே கூறியிருக்கிறார். தேவ சமுகத்திற்கு முன்னோக்கிச் செல்லும்படி நம்மை ஊக்குவிக்கும் ஓர் உந்துவிசை உண்டு. அது நம்மை முன்னேறிச் செல்லப்பண்ணும். அது நம்மை முன்னோக்கிச் செல்லக்கூடிய **தீ**விரமான ஒரு கிறிஸ்தவனாக்கும். சுவிசேஷத்திற்கும் முன்னோக்கிச் செல்லும்படி நம்மை ஏவி எழுப்பும் ஒரு வல்லமை இருக்கிறது. '*ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்* ***போய்,*** *சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள். இதோ, சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்*' (மத். 28 : 19, 20). "*கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; ... புறப்பட்டுப்* ***போங்கள்***" (யாத். 14 : 14, 15). இப்புதிய வருடத்தில் நம் யுத்தங்கள் யாவற்றையும் கர்த்தர் தாமே நடப்பிக்கும்படி விரும்புகிறார். ஆனால் அதற்கு ஒரு நிபந்தனை உண்டு. அது, நாம் முன்னேறிச் ***சென்றுகொண்டேயிருக்க வேண்டும்*** என்பதே.

நம் வருங்காலத்தைக் கர்த்தர் தம் கரங்களில் வைத்திருப்பதால் அது ஆசீர்வதிக்கப்பட்டதாயிருக்கப்போகிறது என்பதை நாம் அறிவோம். அவர் நிச்சயமாகவே நம்மைக் குறித்துப் பெரிய திட்டங்களை வகுத்திருக்கிறார். இவ்வருடத்தில் நாம் கடந்துசெல்ல வேண்டிய பாதையை நாம் அறியாதவர்களாயிருக்கலாம். ஆனால் நமக்கு ***முன் செல்வது யார்*** என்பதை நாம் அறிவோம். இந்த அறிவே அனைத்து மாற்றங்களையும் உண்டுபண்ணுகிறது.

"*கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்; நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்*" (ஏசாயா 58 : 11).

இயேசு நம் முன்னே செல்வதால் அஞ்சிடோம்;
முற்றுமுடிய நம்மை நடத்துவார்.

ஜனவரி 2

அவர் உன்னை விசாரிக்கிறவர்!

'சீயோனோ: கர்த்தர் என்னைக் கைவிட்டார், ஆண்டவர் என்னை மறந்தார் என்று சொல்லுகிறாள். ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், பாலுண்கிற தன் பாலகனை மறப்பாளோ?

அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. இதோ, என் உள்ளங்கைகளில் உன்னைச் செதுக்கிவைத்திருக்கிறேன்; உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது' (ஏசாயா 49 : 14 - 16 -Eng.).

நம்முடைய துன்பங்களிலும் தொல்லைகளிலும் நாம் எத்தனை சந்தர்ப்பங்களில் தேவன் நம்மைக் கைவிட்டுவிட்டார் என்றும், அவர் நம்மை மறந்துவிட்டார் என்றும் நினைக்கிறோம்! மேற்காணும் வேதபகுதியில், கர்த்தர் தாம் நம் மேல் எவ்வளவதிகமாகக் கரிசனையுள்ளவராயிருக்கிறார் என்பதையும், நம்மை எவ்வளவாய் விழிப்புடன் பாதுகாக்கிறார் என்பதையும் நமக்குக் காண்பிக்க விரும்புகிறார்.

'*ஸ்திரீயானவள் பாலுண்கிற தன் பாலகனை மறப்பாளோ?*' - தாய்மார் வளர்ச்சியடைந்திருக்கும் தங்கள் பிள்ளைகளைச் சில சமயங்களில் மறந்துவிடுகின்றனர். ஆனால் பாலுண்கிற ஒரு பிள்ளையை ஒரு தாய் ஒருபோதும் மறக்கமாட்டாள். ஏனெனில் அவள் இன்றி அப்பிள்ளை உதவியற்ற ஒரு நிலையில் இருக்கிறது. ஆனால் இங்கு கர்த்தர் வெளிப்படுத்தும் ஆர்வமூட்டும் சத்தியம் யாதெனில், அந்தத் தாய் பாலுண்கிற தன் பிள்ளையை ஒருவேளை மறந்து அதற்கு இரங்காமற்போனாலும், அவர் நம்மை ஒருபோதும் மறந்துபோகமாட்டார் என்பதே. மேலும், "*மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்*" (ஏசாயா 54 : 10) என்பது அவரது வாக்குத்தத்தமாயிருக்கிறது. தன் தாயைப் பற்றிக்கொண்டிருக்கிற ஒரு குழந்தையைப் போல அவரைப் பற்றிக்கொண்டு, அவர் மேல் நம்பிக்கையாயிருக்கிறவர்களின் மீது அவர் எவ்வளவு நினைவுள்ளவராயிருக்கிறார்!

'*இதோ, என் உள்ளங்கைகளில் உன்னைச் செதுக்கிவைத்திருக்கிறேன்*' - நம் உடலின் வேறெந்தப் பகுதியிலும் எழுதப்பட்டிருப்பதைப் போலல்லாது, நம் உள்ளங்கைகளில் எழுதப்பட்டிருப்பது நாம் எப்போதும் பார்க்கக்கூடியதாயிருக்கும். ஒரு நபருடைய கையில் செதுக்கப்படும் பெயர் அந்நபருடைய கண்களுக்கு முன் எப்போதும் இருப்பதால் அது அவரால் மறக்கப்படக்கூடாததாய் இருப்பது போல, தம்மால் நம்மை ஒருபோதும் மறக்க முடியாது என்பதைத் தேவன் நமக்கு உறுதிப்படுத்த விரும்புகிறார். நம் பெயர்கள் அவரது உள்ளங்கைகளில் வெறுமனே 'எழுதப்பட்டிருக்கவில்லை'; அவை 'செதுக்கப்பட்டிருக்கின்றன'. நம் கரங்களில் எதையாகிலும் செதுக்கிவைப்பது என்பது மிகவும் வேதனையளிக்கக் கூடியதாக இருக்கும். மேலும் செதுக்கிவைக்கப்பட்ட ஒன்றினை

இலகுவாக அழித்துப்போடவும் இயலாது. ஒருவர் தனது கரத்தில் யாருடைய பெயரைச் செதுக்கி வைத்திருக்கிறாரோ அந்நபரை மிக அதிகமாய் நேசிக்கிறார் என்பது வெளிப்படை. அவ்வாறிருக்க, கர்த்தர் நம்மைத் தமது உள்ளங்கைகளில் செதுக்கிவைத்திருக்கிறாரென்றால், அவர் நம் மேல் எவ்வளவதிகமாகப் பாசம் வைத்திருக்க வேண்டும்!

"*உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது*" - தாம் நம்மைச் சுற்றிலும் அக்கினி மதிலாய் இருப்பதாகக் கர்த்தர் வாக்குப்பண்ணியிருக் கிறார் (சக. 2 : 5). நம்முடைய இரட்சிப்பும், ஜெபஜீவியமும், கர்த்தரோடு நாம் செய்திருக்கிற உடன்படிக்கைகளும் அவருக்கு முன்பாக மதில்கள் போல் இருக்கும்போது, கர்த்தர் நம்மைச் சுற்றிலும் அக்கினி மதிலா யிருந்து, யாதொரு சத்துருவும் உட்புகாதவாறு நம்மை விழிப்புடன் பாதுகாத்துக்கொண்டிருப்பார். உன்னைச் சுற்றிலும் ஒரு அக்கினி மதில் இருக்குமாயின், உன்னைத் தாக்கும்படி சத்துருவால் அதற்குள் பிரவேசிக்க முடியாது. அவன் அப்படிச் செய்ய முயற்சித்தால் அந்த அக்கினி அவனைப் பட்சித்துப்போடும்.

ஆம்! அருமையான தேவபிள்ளையே, நீ கர்த்தரால் நன்றாகப் பாதுகாக்கப்பட்டு, அவருடைய நல்ல பராமரிப்பின் கீழ் வைக்கப்பட்டிருக் கிறாய். எனவே நீ உன் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடு. 'கர்த்தர் உன்னைப் பொறுப்பெடுத்திருக்கிறாரென்றால், நீ இளைப்பாறிக் கொண்டிரு' என்று தலைமைப் பேராயர் லெய்ட்டன் கூறுகிறார்.

தாய் தன் சேயை மறந்துவிட்டாலும்
மறவேன் உன்னை என்றதாலே ஸ்தோத்திரம்
வரைந்தீரன்றோ உம் உள்ளங்கையில்
வல்லவா எந்தன் புகலிடமே!

ஜனவரி 3

மேன்மை

'***என் மேன்மையைப் பெருகப்பண்ணி, என்னை எப்பக்கத்திலும் தேற்றுவீர்***' (சங். 71 : 21 -Eng.).

நீ இரு விதங்களில் மேன்மையடையலாம். ***முதலாவதாக,*** சங்கீதம் 71 : 21-இன்படி தேவன் உன் மேன்மையைப் பெருகப்பண்ணும் போது நீ உண்மையாகவே மேன்மையடைவாய். ***இரண்டாவதாக,*** தானியேல் 8 : 4 -இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்டுக்கடாவைப் போல, நீ

எப்பக்கத்திலும் முதன்மையானவனாய்த் திகழும்படி உன்னை நீயே முன்னோக்கி உந்தித்தள்ளிக்கொண்டு, உன் சொந்த சித்தம் செய்வதினாலும், பணம், பொருள், மற்றும் நயவசனிப்பான வார்த்தைகளால் ஜனங்களை உன்வசப்படுத்திக்கொள்வதினாலும் நீ மேன்மையடையலாம். ஆனால், தேவன் உன் மேன்மையைப் பெருகப்பண்ணும்போது ஒரு காரியம் மிக நிச்சயமானது - எல்லா இடங்களிலும் நீ தேறுதலைக் கண்டடைவாய்; உன்னுடைய சோதனை நேரங்களிலும், கலக்கமான வேளைகளிலும் தேவன்தாமே உன்னைத் தேற்றுவார். மறுபக்கத்தில் உன்னை நீயே உயர்த்த முற்படுவாயாகில், அது உன் அழிவிற்கே வழிவகுத்துவிடும்.

தானியேல் 8 : 4 - 7 -இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்டுக்கடா மேற் கிலும் வடக்கிலும் தெற்கிலும் தன்னைத்தானே உந்தித்தள்ளிக்கொண்டு, அதன் மூலம் மேன்மையடைந்ததாக நாம் வாசிக்கிறோம். '*அந்த ஆட்டுக்கடா மேற்கும் வடக்கும் தெற்கும் பாய்கிறதைக் கண்டேன்; அது தன் இஷ்டப்படியே செய்து மேன்மையடைந்தது*' (Eng.). இவ்விதம் தன்னைத் தானே முன் நோக்கி உந்தித்தள்ளிக்கொண்டு அதின் மூலம் மேன்மை யடைந்த அந்த ஆட்டுக்கடாவுக்குச் சம்பவித்தது யாது? 7 -ஆம் வசனத்தில், ஒரு வெள்ளாட்டுக்கடா உக்கிரத்தோடே அதற்கு விரோதமாகப் பாய்ந்து அதைத் தரையிலே தள்ளி மிதித்து அழித்துப்போட்டது என நாம் வாசிக்கிறோம். அரசியல் சம்பந்தமாகவோ, ஆவிக்குரிய பிரகாரமாகவோ அல்லது வேறெந்த விதத்திலாயினும் தலைவர்களாக வேண்டுமென்று விரும்பி அதிகாரத்தைப் பறித்துக்கொள்ள முற்படுகிற அனைவருக்கும் இது ஒரு எச்சரிப்பாகும். நீ பிறரோடு போட்டியிட்டு உன்னை நீயே உந்தித் தள்ளிக்கொண்டு மேன்மையடையப் பிரயாசப்படுவதினாலும், உன் நிர்வாகத் திறன், செயல் திறன், நயவசனிப்பு, பிறரைக் கவரத்தக்க மற்ற பல ஏதுக்கள் போன்றவற்றால் மாறுபாடான வழியில் ஜனங்களை உன் வசப்படுத்திக் கொள்வதினாலும் நீ மேன்மை அடையக் கூடும். ஆனால் அதன் முடிவோ அபாயகரமானதாயிருக்கும் என்பதை நினைவிற்கொள்வாயாக. நீ கைப்பற்றிக்கொண்ட அந்த உயர்ந்த ஸ்தானத்தில் நீ ஒருபோதும் ஆறுதலையும் இளைப்பாறுதலையும் கண்டடையமாட்டாய். ஆனால் மறுபக்கத்தில் தேவன் உன்னை உயர்த்தும்போது ஒருவரும் உனக்கு எதிர்த்துநிற்க முடியாது; அத்துடன் ஒவ்வொரு சூழ்நிலையிலும் அவர்தாமே உன்னை ஆற்றித்தேற்றுவார்; நீ ஆறுதலடைவதுடன் மற்றவர் களுக்கும் ஆறுதலாய் இருப்பாய்.

'*உன்னுடைய திறமை உன்னை உயர்ந்த ஸ்தானத்திற்கு எடுத்துச் செல்லக் கூடும்; ஆனால் உன் சுபாவம் மட்டுமே உன்னை அந்த ஸ்தானத்தில் நிலைகொள்ளச் செய்யும்*'.

ஜனவரி 4

ஆரம்பமும் முடிவும் தேவனோடு!

"**ஆதியிலே தேவன்...** " (ஆதி. 1 : 1).

வேதாகமத்தின் ஆரம்ப வசனத்திலும் கடைசி வசனத்திலும் **தேவன்** இடம்பெறுகிறார். வேதாகமத்தின் கடைசி வார்த்தை "ஆமென்" என்ப தாகும் (வெளி. 22 : 21). தேவனின் நாமங்களுள் ஒன்று "ஆமென்" என்பதா கும் (வெளி. 3 : 14). ஆமென் என்ற வார்த்தைக்கு 'அது அப்படியே', 'அப்படியே ஆகக்கடவது' என்று அர்த்தமாம். நாம் நம்முடைய ஜீவியத்தைத் தேவனுடனேயே ஆரம்பித்து, தேவனுடனேயே முடிக்க வேண்டும். அப்படியானால் இப்பூமியில் நம் ஜீவியத்தை நாம் முடிக்கும் போது தேவன் நம்மை அங்கீகரித்துப் பாராட்டும் வகையில் நம்மை நோக்கி, "ஆமென்" என்று சொல்லுவார்.

பழைய ஏற்பாட்டின் கடைசி வசனம் '*சாபம்*' என்னும் வார்த்தையில் முடிவுறுகிறது (மல். 4 : 6 -Eng.). நியாயப்பிரமாணம் என்று அறியப்படுகிற பழைய ஏற்பாடானது, ஆசீர்வாதத்தில் அல்ல, சாபத்தில் முடிவுற்றது. நம் ஜீவியத்தின் முடிவு தேவனோடுகூட இருக்கவேண்டுமென்றால், நாம் நியாயப்பிரமாணத்தினால் கட்டப்பட்டவர்களாயிராமல் அன்பினால் கட்டப் பட்டவர்களாயிருக்க வேண்டும்.

வேதாகமம் 'தேவன்', 'வானம்' என்ற வார்த்தைகளோடு ஆரம் பித்து, தேவனோடும் பரலோகத்தோடும் சம்பந்தப்பட்ட வார்த்தைகளோடு முடிவடையும்போது, ஆதியாகமம், 'தேவன்', 'வானம்' என்று ஆரம்பித்து, 'மரணம்', 'எகிப்திலே சவப்பெட்டி' ஆகிய வார்த்தைகளுடன் முடிவுறு கிறது. '*யோசேப்பு மரித்தான். எகிப்து தேசத்தில் அவனை ஒரு சவப்பெட்டி யிலே வைத்துவைத்தார்கள்*' (ஆதி. 50 : 26 -Eng.). தேவன் நம்முடைய ஜீவியத்தின் முடிவில் நமக்குப் பரலோகத்தை அருளும்போது, எகிப் தாகிய இந்த உலகமோ நமக்கு மரணத்தையும் சவப்பெட்டியையுமே கொடுக்கக் கூடியதாயிருக்கிறது.

தேவனுடைய பிள்ளையே, உன்னுடைய ஜீவியத்தைத் தேவனோடு ஆரம்பிப்பது முக்கியமானதாகும். ஒவ்வொரு வருடத்தையும், ஒவ்வொரு மாதத்தையும், ஒவ்வொரு நாளையும், ஒவ்வொரு வேலையையும், நீ செய்யத் துவங்குகிற ஒவ்வொரு காரியத்தையும் நீ தேவனோடு ஆரம்பிப்பது இன்றியமையாததாகும். அவற்றை மகிமையாய் முடிப்பது அதாவது அவற்றைத் தேவனோடுகூட முடிப்பது அதைப் பார்க்கிலும் அதிக இன்றியமையாததாகும்.

ஜனவரி 5

உனக்கு வழிநடத்துதல் வேண்டுமா?

"***கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் எவனோ அவனுக்குத் தாம் தெரிந்துகொள்ளும் வழியைப் போதிப்பார்***" (சங். 25 : 12).

'நீ பரிசுத்த ஆவிக்குள் ஜீவிக்கும் ஒரு நபராயிருந்தால், நீ ஒரு இயற்கையான ஜீவியம் செய்கையில் உன் வாழ்நாள் முழுவதும் செய்யக் கூடிய அனைத்து செயல்களையும் பார்க்கிலும் அதிகமானவற்றை ஒரு மணி நேரத்தில் செய்து முடிக்கக் கூடியவனாயிருப்பாய்' என்று ஒரு தேவமனிதன் கூறியிருக்கிறார். நாம் இரு விதங்களில் வாழ்க்கை நடத்த லாம் என்று நம் சபையின் முன்னாள் உதவி தலைமை பாஸ்டராயிருந்த பாஸ்டர் S. B. ஏர்னஸ்ட் அவர்கள் கூறுவதுண்டு. பறவைகளால் நடக்கவும் கூடும், பறக்கவும் கூடும். நடப்பதின் மூலம் ஒரு பறவையானது சிறிதளவு தூரத்தை மட்டுமே கடந்துசெல்லக் கூடும். ஆனால் பறப்பதன் மூலம் அது மலைகளையும் ஆறுகளையும் மற்ற பல தடைகளையும் கடந்து செல்லக் கூடும். ஆவியானவரால் வழிநடத்தப்படும் ஜீவியமானது ஒரு பறவை பறந்துசெல்வதைப் போன்றதாகும்.

எகிப்திலிருந்து கானானுக்குச் செல்லும் பிரயாணம் சில நாள் பிர யாண தூரம் மட்டுமே ஆகும். ஆனால் இஸ்ரவேல் ஜனங்கள் கானானைச் சென்றடைய நாற்பது ஆண்டுகளாயின. அவர்களை வழிநடத்தியவர் கர்த்தரே அன்றி, மனுஷன் அல்ல. அவ்வாறிருக்க, அவர் ஏன் அவர்களை நாற்பது ஆண்டுகள் சுற்றிநடக்கப் பண்ணினார்? ஆம்! நம்முடைய இருதயத்தின் நிலைக்குத் தக்கதாகவே தேவன் நம்மை வழிநடத்துகிறார்.

தம்முடைய ஜனங்களை வனாந்தரத்தின் வழியாக எடுத்துச்செல்ல வேண்டுமென்பது தேவனுடைய விருப்பமாய் இருக்கவில்லை; ஆனால் அவர்களுடைய இருதயத்தின் நிலைவரத்தின் நிமித்தமாகவே அவர் அவ்விதம் செய்ய வேண்டியதாயிற்று. நம்மில் சிலருக்கு வாழ்நாள் முழுவதும் ஒரு வனாந்தரப் பிரயாணமாகவே இருக்கிறது. வனாந்தரம் என்பது பூக்களோ, புல்வெளியோ, இலைகளோ, நிழலோ, கனிவர்க்கங் களோ இல்லாத ஒரு இடமாகும். அது வறண்டதும் மனித சஞ்சாரமற்றது மான ஒரு இடமாகும். தேவன் நமக்கு வழிநடத்துதலைத் தரவேண்டு மாயின், அவர் தாம் விரும்புகிற பாதையில் நம்மை வழிநடத்த வேண்டு மாயின், நம் இருதயம் தேவனோடு செம்மையானதாய் இருக்க வேண்டும். நம் இருதயம் முரட்டாட்டமுள்ளதாகவும், கடினமானதாகவும் இருக்குமாயின், தேவன் நம்மை நடத்துகிற பாதைகள் நமக்குக் கடினமாகவே தோன்றும்.

"தங்கள் கோணலான வழிகளுக்குச் சாய்கிறவர்களைக் கர்த்தர் அக்கிரமக்காரரோடே போகப்பண்ணுவார். இஸ்ரவேலுக்கோ சமாதானம் உண்டு" (சங். 125 : 5). நம்முடைய கோணலான வழிகளை நாம் பற்றிப் பிடித்துக்கொண்டிருந்தால், கர்த்தர் தம்முடைய பூரணமான வழிகளை நமக்குக் காண்பிக்க மாட்டார். எனவே நாம் கர்த்தருக்குப் பயந்து பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுவோமாக.

ஜனவரி 6

இராக்காலத்தில் கிரியை செய்கிற தேவன்

'அப்பொழுது கர்த்தர் இராமுழுதும் பலத்த கீழ்காற்றினால் சமுத்திரம் ஒதுங்கும்படி செய்தார்' (யாத். 14 : 21).

தேவன் தம்முடைய ஜனங்களுக்காக எவ்விதம் கிரியை செய்கிறார் என்பதைக் காண்பது ஆர்வமூட்டுவதாயிருக்கிறது. இஸ்ரவேலருக்கு முன்பாகச் சிவந்த சமுத்திரமும், அவர்களுக்குப் பின்னாக அவர்களைப் பின்தொடர்ந்து வந்த எகிப்தியரின் சேனையும் இருந்தபோது, அச்சந்தர்ப்பத்தில் தேவன் அவர்களுக்காகக் கிரியை செய்தார். தேவன் அந்த இரவு - ஆம் ***அந்த இரவு முழுவதும்*** - கிரியை செய்துகொண்டிருந்தார் என்பதை நாம் மறவாதிருப்போமாக. பல சந்தர்ப்பங்களிலும் நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் அந்தகாரமான இரவுகளைச் சந்திக்கும்போது, தேவன் ***இரவு முழுவதும்*** நமக்காகக் கிரியை செய்கிறவர் என்ற உண்மையை நாம் மறந்துவிடுகிறோம். சில சமயங்களில் எங்கே போவது, என்ன செய்வது, நாளைய தினத்தை எவ்விதம் சந்திப்பது என்றறியாதவர்களாய் நாம் அந்தகாரத்தில் இருப்பது உண்மையே. உதவி ஏதுமற்ற நிலையில், நாம் வனாந்தரத்தில் தனித்து விடப்பட்டதைப் போல் உணருகிறோம். ஆனால், '***அந்த இரவு முழுவதும்***' நமக்காகக் கிரியை செய்கிற ஒரு அற்புதமான இரட்சகர் நமக்கு இருக்கிறாரே! அவருக்கு ஸ்தோத்திரம்!

உலகிலுள்ள மிகவும் விலையேறப்பெற்றவையும் பிரகாசமுள்ளவையுமான கற்கள், வெகு நீண்ட காலங்களாகப் பூமியின் அடித்தளத்தில் முற்றிலும் அந்தகாரத்தில் கிடக்கும்போதுதான் அவ்விதம் உருவாக்கப்படுகின்றன. நாம் புதிய எருசலேமாகக் கட்டியெழுப்பப்படுவதற்கென்று தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜீவனுள்ள கற்களாயிருக்கிறோம். எவ்வளவதிகமாய் நாம் அந்தகாரத்தின் வழியாகச் செல்லுகிறோமோ, அவ்வளவதிகமாய் நாம் அவருடைய மகிமைக்காகப் பிரகாசிக்கிறோம்! அந்தகாரமான இரவை வெற்றியுடன் கடந்து வந்தவர்களுக்காகக் கர்த்தர் பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமாக விடியற்காலத்தில் வருவார்.

அருமையான தேவபிள்ளையே, காரியங்கள் அசாத்தியமானவையாகத் தோன்றும் ஒரு சூழ்நிலை தற்போது உன்னைச் சந்தித்துக்கொண்டிருக்கக் கூடும். உன் 'இரவானது' அதிக அந்தகாரமாயிருக்கக் கூடும். அந்த இரவின் காரிருளினூடாகத் தேவன் கிரியை செய்துகொண்டிருக்கிறார் என்பதையும், எல்லாவற்றையும் உன் நன்மைக்காக மாற்றிக் கொண்டிருக்கிறார் என்பதையும் நீ மறந்துவிடாதே. இந்தச் சிந்தனையினால் பெலப்படுத்தப்பட்டு, திடனடைந்தவனாக, 'முன்னேறிச் செல்' (யாத். 14 : 15 -Eng.) என்ற அவருடைய கட்டளைக்கு நீ கீழ்ப்படிவாயாக.

ஜனவரி 7

பெரிய கிருபையின் மிகப் பெரிய வல்லமை

"தேவன், மகா மச்சங்களையும், ஜலத்தில் ... திரளாய் ஜநிப்பிக்கப்பட்ட சகலவித நீர் வாழும் ஜந்துக்களையும் ... சிருஷ்டித்தார்" (ஆதி. 1 : 21).

'ஜலமானது திரளாய் ஜநிப்பித்த பெரிய திமிங்கலங்களைத் தேவன் சிருஷ்டித்தார்' என மேற்காணும் வேதபகுதியின் ஆங்கில மொழி பெயர்ப்பு கூறுகிறது. திமிங்கலங்கள் ஆழமும் விசாலமுமான தண்ணீர்களிலேயே பிறப்பிக்கப்பட முடியும். அவ்வாறே, பெரிய பரிசுத்தவான்கள் பெரிய கிருபையினால் மட்டுமே உண்டாக்கப்படக் கூடும்.

ஒரு பெரிய மீனானது (திமிங்கலம்) வழிதவறிச் சென்ற யோனாவைச் சமுத்திரத்தின் அபாயங்களிலிருந்து பாதுகாத்து, முற்றிலும் மாற்றப்பட்ட ஒரு மனிதனாகக் கரையில் கொண்டுபோய்ச் சேர்த்ததாக நாம் வாசிக்கிறோம். வழிதவறிச் செல்லும் தேவபிள்ளைகளைப் பாதுகாக்கும்படி, அவர்களுடைய தவறுகளைச் சுமந்து, தங்கள் ஜெபங்களின் மூலம் பாவம் நிறைந்த இவ்வுலகத்திலிருந்து அவர்களைத் தப்புவித்துப் பாதுகாத்து, அவர்கள் க்ஷேமமாகப் பரலோகக் கரையைச் சென்றடையும்படி அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய பெரிய பரிசுத்தவான்கள் நமக்குத் தேவை! அப்படிப்பட்ட விசாலமான இருதயமுள்ள பரிசுத்தவான்களே சபையின் மிகப் பெரிய தேவையாயிருக்கிறார்கள். பின்மாற்றமடைந்திருந்த கொரிந்திய சபையாரிடம் அப். பவுல், 'எங்கள் வாய் உங்களோடே பேசத் திறந்திருக்கிறது, எங்கள் இருதயம் விசாலமடைந்திருக்கிறது' (II கொரி. 6 : 11 -Eng.) என்று கூறுகிறார்.

பெரிய திமிங்கலங்கள் மிக அதிகமான தண்ணீர்களில்தான் எப்போதும் இருக்க வேண்டும். இல்லையேல் அவை மாண்டுபோகும்.

நாம் பெரிதும் உன்னதமுமான அழைப்பினால் அழைக்கப்பட்டிருக் கிறோம். எனவே நமக்குப் 'பெரிய கிருபை' அவசியமாயிருக்கிறது; அக்கிருபை இன்றி நம்மால் பிழைத்திருக்கவே முடியாது.

அருமையான வாசகரே, நமக்குள்ளிருக்கும் பெரிய கிருபையானது நம்மைப் பெரிய பரிசுத்தவான்களாய் மாற்றக்கூடியதாயிருக்கிறது. அப்.பவுல், "*நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன்*" (I கொரி. 15 : 10) என்று கூறுகிறார். தேவகிருபைக்கு எல்லையே இல்லை. ஆயினும் அதற்கு நாம் என்ன எல்லையை விதிக்கிறோமோ, அதுவே நம் ஜீவியத்தில் அதன் எல்லையாயிருக்கும்.

பாய்ந்து வரும் நதியானது சமுத்திரத்தில் விழும் முகத்துவாரங் களில்தான் திமிங்கலங்கள் பிடிக்கப்படுகின்றன. ஆழ்கடலில் வாசம் பண்ணுகிற அவை வழிவிலகி, ஆழமில்லாத இடங்களுக்கு வந்துவிடும் போதுதான் கண்ணிக்குள் அகப்பட்டுவிடுகின்றன. எனவே நாம் வழி விலகி ஆவிக்குரிய வறட்சிக்குச் சென்று கண்ணியில் அகப்பட்டுவிடாத வாறு கவனமாயிருப்போமாக.

ஜனவரி 8

'ஷாலோம் ஷாலோம்'

"***உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் ('உம் மேலேயே தங்கியிருக்கும் மனதை உடையவன்'** -Eng.)* ***உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்***" (ஏசாயா 26 : 3).

மேற்காணும் வசனத்தில் 'பூரண சமாதானம்' என்பதற்கு மூல எபிரெய மொழியில் '*ஷாலோம் ஷாலோம்*' என்று கூறப்பட்டுள்ளது. அதன் அர்த்தம், 'இரட்டிப்பான சமாதானம்' அல்லது 'இரட்டிப்பான ஆரோக் கியம்' என்பது ஆகும். உன் மனது கர்த்தர் மேலேயே தங்கியிருந்தால், அல்லது நீ கர்த்தரிலேயே நம்பிக்கையாயிருக்கும்போது கர்த்தர் உன்னை *ஷாலோம் ஷாலோமில்* அதாவது பூரண சமாதானத்தில் அல்லது பூரண ஆரோக்கியத்தில் பாதுகாப்பார். உன் மனது கர்த்தர் மீது தங்கியிராமல், எப்போதும் உன் பிரச்சினைகளின் மேலேயே இருக்குமாயின், நீ எப்போதும் கவலைப்பட்டுக்கொண்டேயிருப்பாய். மாறாக, உன் ஆவிக் குரிய கண்கள் கர்த்தர் மேலேயே பதிக்கப்பட்டிருக்குமாயின், நீ எப்போ தும் ஆழ்ந்த அமைதியை அல்லது பூரண சமாதானத்தை அனுபவிப்பாய்.

ஒருவேளை இன்று நீ வியாதிப்பட்டிருக்கக் கூடும். உன் மனது அந்த வியாதியின் மீதே தங்கியிருக்குமாயின், அவ்வியாதியின் அறிகுறிகளும் அதன் தோற்றமும், அதைக் குறித்து மற்றவர்கள் கூறும் அபிப்பிராயங்களும் உன்னைப் பயமுறுத்தும். ஆனால் நீ கர்த்தரில் நம்பிக்கையாயிருந்தால், அதாவது உன் மனது கர்த்தரிலேயே தங்கியிருந் தால், அவர் உன்னைச் சுகமாக்க வல்லவராயிருப்பது மாத்திரமல்ல, நீ இழந்துபோன ஆரோக்கியத்தையும் சமாதானத்தையும் உனக்கு மீண்டும் தரவும் வல்லவராயிருக்கிறார்.

அருமையான தேவபிள்ளையே, நீ ஒருவேளை தேவனில் நம்பிக்கையாயிருப்பதாகக் கூறலாம். ஆனால் உன் மனது அங்குமிங்கும் அலைந்து திரிந்து, கவலைப்பட்டு, உன் பிரச்சினைகளின் மேலேயே தங்கியிருக்கக் கூடும். தேவனுடைய வசனம் கூறுவது யாது? "*நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டு தலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்*" (பிலி. 4 : 6, 7). உன் எல்லா ஜெபங்களுக்கும் நீ விரும்புகிற வண்ணமாக பதில் கிடைக் கும் என்று இவ்வசனம் கூறுகிறதில்லை. ஆனால் உன் கவலைகளைத் தேவன் அறிந்திருக்கிறார் என்ற நிச்சயம் உன்னில் உண்டாகும்போது, நீ மன அமைதியைப் பெற்றுக்கொள்ளுகிறாய்.

உன் பிரச்சினைகளைக் காட்டிலும் உன் தேவன் பெரியவர். அவர் மிகவும் பெரியவரும் மகா ஞானமுள்ளவருமாயிருப்பதால் அவரிடத்தில் உன் எல்லாப் பிரச்சினைகளுக்கும் பூரண நிவாரணமுண்டு.

ஜனவரி 9

எழுந்து நில்!

"***உன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொள்***" (I தீமோ. 5 : 22).

தன் கல்வியில் சிறந்து விளங்கியவளும் தன்னை ஆழமாகக் கர்த்தருக்கு அர்ப்பணித்திருந்தவளுமான ஒரு கிறிஸ்தவ மாணவி ஒரு பிரச்சினையைச் சந்தித்தாள். அவள் தன் பட்டப் படிப்பில் படிக்க வேண்டியதாயிருந்த அநேக புத்தகங்களுள் குறிப்பாக ஒரு புத்தகத்தில் தன் மனதைத் தீட்டுப்படுத்தக்கூடிய விஷயங்கள் அடங்கியிருப்பதை

அறிந்தாள். அவள் அது வரை தன் ஜீவியத்தைத் தூய்மையாகக் காத்து வந்திருந்தபடியால், இது அவளுக்கு ஒரு சவாலாக இருந்தது. ஒன்று, அவள் அப்புத்தகத்தை வாசிக்காமலிருந்து, தேர்வில் தோல்வியடைய வேண்டும்; அல்லது அதை வாசித்து, தேர்வில் தேர்ச்சிபெற வேண்டும் - இவற்றில் ஒன்றை அவள் தெரிந்துகொள்ள வேண்டியதாயிருந்தது. அவள் அதைக் குறித்து ஜெபித்து, தன் மனதைத் தீட்டுப்படுத்திக்கொள்வதைக் காட்டிலும், தேர்வில் தோல்வியடைவதே நலம் என்று தீர்மானித்தாள்.

தேர்வின்போது வினாத்தாளில், அப்புத்தகத்திலிருந்து கேட்கப்பட்ட வினாவுக்கு, அதிகமான மதிப்பெண்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் அப்புத்தகத்தைப் பற்றி இரண்டு பக்கங்களுக்கு விமரிசனம் எழுதும் படியாகக் கேட்கப்பட்டிருந்தது. அவள் ஜெபித்து, அப்புத்தகத்தில் அடங்கியுள்ள விஷயங்கள் எவ்விதம் ஒரு வாலிபனைத் தீட்டுப்படுத்தக் கூடும் என்பதையும், தீட்டுப்படுதலின் விளைவுகள் பற்றியும் இரு பக்கங்கள் எழுதினாள்; அவள் அப்புத்தகத்தை மிகக் கடுமையாகக் கண்டனம் பண்ணி எழுதியிருந்தாள். தேர்வு முடிவுகள் வெளிவந்தபோது, அந்தத் தேர்வில் அவள் அக்கல்லூரியில் தன்னுடன் பயின்ற மற்ற அனைவரிலும் மிக அதிகமான மதிப்பெண்களைப் பெற்றிருந்ததைக் கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தாள்.

அன்பான தேவபிள்ளையே, உன் ஜீவியத்தைத் தூய்மையாகக் காத்துக்கொள்வதற்கான விலைக்கிரயத்தைச் செலுத்த நீ ஆயத்தமா? நீ முதுகெலும்புள்ள ஒரு கிறிஸ்தவனாயிருக்க வேண்டும். 'ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக உறுதியாக நிற்கக் கூடாத ஒருவன், எப்படிப்பட்ட காரியத்திற்காக வேண்டுமானாலும் விழுந்துவிடக் கூடியவனாயிருப்பான்'. பரிசுத்தத்திற்காக நிமிர்ந்து நிற்பாயாக.

ஒருவன் தன் வாழ்க்கையில் சந்திக்கக்கூடிய மிகப் பெரிய தோல்வி, ஒழுக்கநெறி தவறுதலாகிய தோல்வியே (moral failure) ஆகும்.

ஜனவரி 10

கருத்தைக் கவரும் சுபாவங்கள்

"***தேவனாகிய கர்த்தர், பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே ஜீவவிருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணினார்***" (ஆதி. 2 : 9).

தேவனில் எவ்விதம் தீமை என்பது இல்லையோ, அவ்விதமே நன்மை தீமை அறியத்தக்க விருட்சமும் தன்னில் தானே தீமை என்ற ஒன்று அற்றதாகவே இருந்தது. மனுஷனுடைய கீழ்ப்படியாமையே தீய விளைவுகளைக் கொண்டுவந்தது. உண்மையான அறிவு என்பது, தேவனுக்குப் பயந்து, அவருக்குக் கீழ்ப்படிவதாகும். தேவனுக்குக் கீழ்ப்படியாதிருப்பதற்கான அறிவோ தீமையானதாகும்.

தேவன் தோட்டத்திலிருந்த ஒவ்வொரு விருட்சத்தையும் பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமானதாகவே உண்டாக்கினார். சபையிலுள்ள ஒவ்வொருவரும் தேவனுடைய பார்வையிலும் மனுஷருக்கு முன்பாகவும் பிரியமானவர்களாகவும், மற்றவர்களுக்கு நல்ல ஆவிக்குரிய ஆகாரத்தைக் கொடுக்கக்கூடிய ஏதுவாகவும் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். மேலும், தேவனுடைய சபையிலுள்ள ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பதற்கு ஏதுவான ஜீவ விருட்சமாக இருக்க வேண்டும்.

விருட்சங்களின் கனிகள் பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமானவையாக இருந்தன. "*ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்*" (கலா. 5 : 22, 23). இத்தெய்வீக சுபாவங்கள் தேவனுக்கும் மனுஷருக்கும் பிரியமானவையாயிருந்து, மற்றவர்களுடைய ஆவிக்குரிய பசியை ஆற்றும் நல்ல ஆகாரமாயிருக்கின்றன.

நித்திய ஜீவனையும், திவ்ய சுபாவத்தின் வளர்ச்சியையும் பெற்றுக் கொள்ளும்படியாக நமக்கு வைக்கப்பட்டுள்ள நிபந்தனை, கீழ்ப்படிதல் ஆகும். நாம் கீழ்ப்படியாமற்போனால் நித்திய ஜீவனை இழந்துபோவோம்; அத்துடன் தேவனுடைய சபையில் நமக்கு இடம் இராமற்போகும்.

ஜனவரி 11

ஒரு தெய்வீக நரம்பியல் நிபுணரின் கண்டுபிடிப்பு

"***மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்***" (நீதி. 18 : 21).

புகழ்பெற்ற நரம்பியல் மருத்துவ நிபுணர் ஒருவர், மனிதனின் மூளையிலுள்ள பேச்சு நரம்பு மண்டலம் உடலின் மற்றெல்லா நரம்புகளின் மீதும் முழு ஆதிக்கம் உள்ளதாயிருக்கிறது என்று சமீபத்தில் கண்டு

பிடித்திருக்கிறார். இவ்வுண்மை இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது.

தெய்வீக நரம்பியல் வல்லுநராகிய அப். யாக்கோபு, "*அப்படியே, நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்திவிடுகிறது! நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது!*" (யாக். 3 : 5, 6) என்று கூறுகிறார். அப். யாக்கோபின் இந்த ஆச்சரியமான கண்டுபிடிப்பு தேவனிடத்திலிருந்து அவருக்குக் கிடைத்த இயற்கைக்கப்பாற்பட்ட வெளிப்படுத்தலே அன்றி வேறல்ல.

ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது சரீரத்தில் நூறு மில்லியன் நரம்பணுக்கள் (நியூரோன்கள்) இருக்கின்றன என்றும், ஒவ்வொரு நரம்பணுவும் ஐயாயிரம் மில்லியன் செய்தித்துணுக்குகளைத் தனக்குள் கொண்டிருக்கக்கூடியது என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. நம்முடைய நாவானது உண்மையில் நம் சரீரத்திலிருக்கும் நூறு மில்லியன் நியூரோன்களின் மீதும் பூரண கட்டுப்பாடுள்ளதாயிருக்கிறது என்பதைக் கண்டுகொள்வது மிக ஆச்சரியமானதாய் (ஒருவேளை நம்மில் சிலருக்கு அது அதிர்ச்சியளிப்பதாய்) இருக்கிறதல்லவா?

'நான் அதிக பெலவீனமாயிருக்கிறேன்' என்று நீ கூறுவாயானால், உடனே பேச்சு மண்டலத்திலிருந்து 'நீ பெலவீனமாயிருக்க ஆயத்தமாயிரு' என்ற கட்டளையானது எல்லா நரம்புகளுக்கும் செல்கிறது. உடனே உன் முழுச் சரீரமும் இளைப்பாற வேண்டும், படுக்கைக்குச் செல்ல வேண்டும் என்பவை போன்ற உணர்வுள்ளதாகிவிடும்; அப்போது எந்த வேலையும் செய்வதற்குப் பெலனற்றவனாயிருப்பதாக நீ உணருவாய்.

அதுபோன்றே, குறிப்பிட்ட ஒரு நபர் மிகவும் மோசமானவர் என்று நீ கூறும்போது, உன் நரம்பணுக்கள் யாவும் அதை அப்படியே உண்மை என ஏற்றுக்கொண்டு, அதற்கு இசைந்துபோக முற்படுகின்றன. அதன் பின்னர் வேறொருவர் அதே நபரைக் குறித்து அவர் மிகவும் நல்லவர் என்று சொல்வாராயின், உன் நரம்புகள் எல்லாம் எரிச்சலடைந்து அக்கூற்றுக்கு எதிர்த்துநிற்கின்றன. அதே சமயத்தில் அந்நபரைக் குறித்து வேறொருவர் அவர் மிக மோசமான மனிதன் என்று கூறுவாராயின், அதைக் கேட்டவுடன் நீ அதிக சந்தோஷமடைந்து, அவரிடம், 'நீ கூறுவது சரி, நீ கூறுவதை நான் ஒத்துக்கொள்கிறேன்' என்று கூறுவாய். மற்றவர்கள் அந்த நபரில் ஆயிரம் நல்ல காரியங்களைக் கண்டாலும்,

உன்னால் அவரில் ஒரு சிறிய நல்ல காரியத்தையாகிலும் காணக்கூடாதிருக்கும் அளவுக்கு உன் நரம்பணுக்கள் யாவும் உன் நாவுக்கு அவ்வளவதிகமாய்க் கீழ்ப்படிகின்றன என்பதை நீ ஒருவேளை உணராதிருக்கக்கூடும். அதற்கான எளிய காரணம் யாதெனில், நீ உன் நூறு மில்லியன் நரம்புகளுக்கும் ஏற்கனவே அப்படியே கட்டளை கொடுத்திருக்கிறாய்! 'உலகிலேயே மிக அபாயகரமான கூர்முனை நாவின் நுனிப் பகுதியே!' என்பது மெய்யான கூற்றாகும். எனவே அருமையான தேவபிள்ளையே, நீ உன் நாவை எவ்விதம் உபயோகிக்கிறாய் என்பதைப் பற்றி கவனமாயிரு.

ஜனவரி 12

அதிசயமான புத்தகம்

"***கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள்; இவைகளில் ஒன்றும் குறையாது; இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது; அவருடைய வாய் இதைச் சொல்லிற்று; அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும்***"
(ஏசாயா 34 : 16).

இவ்வசனம் எவ்வளவாய் நம்மை அனல்மூட்டி எழுப்பக் கூடியதும், ஊக்குவிப்பதுமாய் இருக்கிறது! வேதவாக்கியங்கள், தேவனுடைய வசனம் அல்லது பரிசுத்த வேதாகமம் என்று நாம் அழைக்கிற நமது வேத புத்தகமானது 'தேவனுடைய ஆவி'யினால் (பரிசுத்த ஆவி) ஒன்றாகச் சேர்க்கப்பட்ட அல்லது தொகுத்தெழுதப்பட்ட ஒரு புத்தகமாகும். உண்மையில், ஆசீர்வதிக்கப்பட்ட திரித்துவ தேவன்தாமே இன்று நம் கரங்களிலுள்ள வேதாகமத்தின் ஆக்கியோனாயிருக்கிறார். மேற்கூறப்பட்டுள்ள வேதபகுதியில், 'கர்த்தருடைய புத்தகம்' என்பதிலுள்ள 'கர்த்தர்' என்பது யேகோவாவை அல்லது பிதாவாகிய தேவனையும், "அவருடைய வாய்" என்பது கர்த்தராகிய இயேசுவையும், "அவருடைய ஆவி" என்பது பரிசுத்த ஆவியானவரையும் குறிக்கின்றன.

நமது கையில் நாம் வைத்திருக்கிற வேதாகமம், திரித்துவ தேவனிடமிருந்து வந்ததாயிருக்கிறது என்பதையும், அது தன்னில் தானே நிறைவுள்ளதாய், பூரணமானதாய் இருக்கிறது என்பதையும் அறிந்துகொள்வது நம் யாவரையும் எவ்வளவாய் ஊக்குவிப்பதாயிருக்கிறது! சிலர் தள்ளுபடியாகமத்தை (Apocrypha) அதனுடன் சேர்க்க விரும்பினார்கள் என்பது எவ்வளவு துக்ககரமானது! வேதாகமத்தின் கடைசிப் புத்தகத்தின் கடைசி அதிகாரத்திலுள்ள எச்சரிப்பைக் கவனியுங்கள்: "*ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின்*

வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப்போடுவார்" (வெளி. 22 : 18, 19).

அதிசயமான திரித்துவ தேவன்தாமே, தாம் நமக்கு அருளிச் செய்துள்ள இந்த அதிசயமான புத்தகத்திலுள்ள அதிசயமான காரியங்களைக் கண்டுகொள்ள நமக்கு அனுதினமும் கிருபை அருள்வாராக.

"*உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்*" (சங். 119 : 18) என்பது நம் அன்றாடக ஜெபமாயிருப்பதாக.

ஜனவரி 13

உறைந்த மழையின் பண்டசாலை

"***உறைந்த மழையின் பண்டசாலைகளுக்குள்***
(Eng. ***- பொக்கிஷங்களுக்குள்) நீ பிரவேசித்தாயோ?***" (யோபு 38 : 22).

மேற்கூறப்பட்டுள்ள வேதவாக்கியத்தின் அடிப்படையில் உறைந்த மழைக்குள் பொக்கிஷங்கள் இருக்கிறது என்பது போல் தோன்றுகிறது. தேவனுடைய வசனத்தில், உறைந்த மழை என்பது தூய்மைக்கு ஒப்பிடப்பட்டுள்ளது: "*உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்*" (ஏசாயா 1 : 18); "*என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்*" (சங். 51 : 7) என்று நாம் வாசிக்கிறோம். இதிலிருந்து ஜீவியத்தின் தூய்மையானது விலையேறப்பெற்ற பண்டசாலையாக அதாவது விலையேறப்பெற்ற பொக்கிஷமாக இருக்கிறது என்று நாம் விளங்கிக்கொள்கிறோம்.

பனி எப்போதும் குளிர்ச்சியானது. பரிசுத்த ஜீவியம் செய்கிறவர்கள் கடுந்துயரார்ந்த சூழ்நிலைகளிலுங்கூட சாந்தமுள்ளவர்களாகவும், மற்றவர்களுக்கு ஆறுதலளிக்கிறவர்களாகவும் இருப்பார்கள். பனித்துளியானது ஒளி ஊடுருவிச்செல்லக் கூடியதாகத் துலாம்பரமானதாகவும், பளிங்கைப் போலத் தெளிவானதாகவும் இருக்கிறது. நாம் உண்மையாகவே ஜீவியத்தின் தூய்மையை நேசிப்போமாயின், புறம்பே ஒன்றை வெளிப்படுத்திக்கொண்டு, உள்ளேயோ வேறு விதமாக இருக்க மாட்டோம். பளிங்கைப் போன்ற ஒளிவுமறைவற்ற துலாம்பரமான சுபாவமுள்ளவர்களாயிருத்தல் என்பது, மறைவான பாவங்களோ, மறைத்துவைக்கப்பட்டிருக்கும்

அசுத்தமான நோக்கங்களோ அற்றவர்களாயிருத்தல் ஆகும். பனியானது சூரிய வெளிச்சத்தில் உருகுகிறது. அவ்விதமாகவே பரிசுத்தத்தை நேசிக்கிறவர்களின் இருதயங்கள் எப்போதும் தேவசமுகத்தில் உருகுகின்றன.

தேவஜனங்களில் அநேகர் பரிசுத்த ஜீவியத்திலுள்ள பொக்கிஷங்களை அனுபவியாதவர்களாயிருக்கின்றனர். 'பண்டசாலைகள் உனக்குள் பிரவேசித்திருக்கின்றனவோ?' என்பதல்ல, "பண்டசாலைகளுக்குள் நீ பிரவேசித்தாயோ?" என்பதே தேவன் யோபிடம் கேட்ட கேள்வியாகும். சமுத்திரம் உனக்குள் பிரவேசிப்பதும், நீ சமுத்திரத்திற்குள் குதிப்பதும் இரு வித்தியாசமான காரியங்களாகும். அது போன்றே, பரிசுத்தம் உனக்குள் பிரவேசிப்பதற்கும், நீ பரிசுத்தத்திற்குள் பிரவேசிப்பதற்கும் இடையே வித்தியாசம் இருக்கிறது. நீ தேவனுடைய பரிசுத்தத்திற்குள் பிரவேசிக்கும் போது, நீ தேவனுடைய பரிசுத்தத்தின் சமுத்திரத்திற்குள் அமிழ்ந்திருக்கிறாய்; அந்தச் சமுத்திரமானது உன்னைச் சூழ்ந்திருக்கிறது; உன்னை மூடிக்கொண்டிருக்கிறது; உன்னை முடிசூட்டிக்கொண்டிருக்கிறது. அது நீ தேவனை உனக்குச் சொந்தமாக்கிக்கொள்வதைப் பார்க்கிலும் மேலான ஒன்றாகும். அது தேவன்தாமே உன்னை முற்றிலுமாகத் தமக்குச் சொந்தமாக்கிக்கொள்வதாகும். நீ தேவனுடைய கிருபையை அனுபவித்துக் கொண்டிருக்கக் கூடும். ஆனால் சகல கிருபையும் பொருந்திய தேவனையே நீ அனுபவித்து மகிழ்வது என்பது அதைக் காட்டிலும் மேன்மையானது!

அன்பான தேவபிள்ளையே, நீ ஏன் உறைந்த மழையின் பண்டசாலைகளுக்குள் பிரவேசிக்கக் கூடாது? ஜீவியத்தின் தூய்மையாகிய இப்பொக்கிஷசாலைகளுக்குள் பிரவேசிப்பதற்காக நீ ஏன் இப்போதுதானே உன்னை அர்ப்பணிக்கக் கூடாது?

ஜனவரி 14

உன் ஐக்கியத்தை இழந்துவிடாதே!

"***தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி ...***" (ஆதி. 3 : 1).

ஸ்திரீயானவள் சர்ப்பத்திடம் பேசிக்கொண்டிருந்தபோதோ, அவள் விருட்சத்தின் கனியைப் பறித்தபோதோ, அவள் அதைப் புசித்தபோதோ நாம் அவளுடைய புருஷனை அவளுடன் இருக்கக் காண்பதில்லை. அவள் மனுஷனுக்கு ஏற்ற துணையாக இருக்க வேண்டும் என்பதே தேவன் அவளைச் சிருஷ்டித்ததின் நோக்கமாயிருந்தது. அவள்

அவனுடன் எப்போதும் ஐக்கியமாக இருக்கும்படியாகவே அவளை அவர் மனுஷனிடத்தில் கொண்டுவந்தார். ஸ்திரீயானவள் தன் புருஷனோடுள்ள ஐக்கியத்தை இழந்தபோது அவள் தேவனுடைய அன்புக்கும் சத்தியத்துக்கும் துரோகம் செய்கிறவளாக மாறிவிட்டாள். ஸ்திரீயானவள் மனுஷனோடு எப்போதும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது போலவே, சபையானது கிறிஸ்துவாகிய தன் மணவாளனோடு எப்போதும் நெருங்கிய ஐக்கியமுள்ளதாயிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அப்படியிராவிடில் அது பிசாசினால் வஞ்சிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்கு விரோதமாகப் பாவஞ்செய்ய நேரிடும்.

தன் விலையேறப்பெற்ற நேரத்தை ஆதாமோடு உரையாடுவதில் உபயோகிப்பதற்குப் பதிலாக, ஸ்திரீயானவள் சர்ப்பமாகிய பிசாசோடு சம்பாஷித்துக்கொண்டிருந்தாள். ஜெபிக்கவோ, தேவனோடு உரையாடவோ தங்களுக்கு நேரமில்லை என்று சொல்லிக்கொள்ளும் தேவபிள்ளைகள், பெரும்பாலும் பிசாசோடு உரையாட அதிகமான நேரம் உள்ளவர்களாயிருக்கிறார்கள். மேலும் கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியமுள்ளவர்களாயிருக்கும் பரிசுத்தவான்களோடும் நமக்கு ஐக்கியம் இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். '*நீங்கள் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாயிருங்கள். மெய்யாகவே எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது*' (I யோவான் 1 : 3 -Eng.) என அப். யோவான் எழுதுகிறார். முதலாம் நூற்றாண்டின் விசுவாசிகள், "*அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும் ... உறுதியாய்த் தரித்திருந்தார்கள்*". அவர்களுக்குப் பெரிதான கிருபையும் பெரிதான சந்தோஷமும் இருந்தது.

நாம் கர்த்தரோடும் அவருடைய பரிசுத்தவான்களோடும் உள்ள ஐக்கியத்தைப் பேணிக் காத்துக்கொள்வோமாக. இவர்களையன்றி வேறு யாரோடாகிலும் ஐக்கியங்கொள்ள நாம் நாடுவோமாயின், நாம் பிசாசின் கண்ணியில் விழ நேரிடும். "*உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா?*" (யாக். 4 : 4).

***ஜனவரி* 15**

அதைரியத்துக்கு எதிரான பட்டயம்

"***தேவன் சொன்னது உண்டோ***" (ஆதி. 3 : 1).

தேவனுடைய வாக்குத்தத்தங்களில் விசுவாசமில்லாதிருப்பதே அதைரியத்துக்குப் பின்னாக மறைந்திருக்கும் வேராயிருக்கிறது. பிசாசானவன் பேசிய வார்த்தைகளாக முதலாவது பதிவு செய்யப்பட்டுள்ள வார்த்தைகள் "*தேவன் சொன்னது உண்டோ*" என்பவையாகும். இது ஸ்திரீயானவள் தேவனுடைய வார்த்தையைச் சந்தேகிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அவன் கேட்ட கேள்வியாகும். கர்த்தராகிய இயேசு தம்மைச் சோதிக்கும் படி வந்த சாத்தானுக்கு விரோதமாக தேவனுடைய வார்த்தையையே எடுத்துப் பிரயோகித்தார். 'இவ்விதம் எழுதியிருக்கிறதே', 'இவ்விதம் எழுதியிருக்கிறதே', 'இவ்விதம் எழுதியிருக்கிறதே' என்று தேவனுடைய வார்த்தையையே அவர் உபயோகித்தார். தேவனுடைய வார்த்தை வரும் போது, அதைரியமாகிய பிசாசு கட்டாயமாக ஓடிப்போகத்தான் வேண்டும். தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும் இருக்கிறது. அது நமக்கு ஜீவனையும், புதிய ஜீவனையும் கொடுக்கக் கூடியதாயிருக்கிறது. முழு உலகமும் அவருடைய வார்த்தையினால் சிருஷ்டிக்கப் பட்டு, அவருடைய வசனத்தினால் தாங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தை எடுத்துக்கொள்ளுங்கள். நீங்கள் அதைரியத்தின் ஆதிக்கத்தில் ஜீவிக்க வேண்டிய அவசியமில்லை.

ஒருமுறை தாவீது தன்னால் ஒன்றுமே செய்யக்கூடாத ஒரு நிலைக்குள்ளாகித் திகைத்துக்கொண்டிருந்தான். அவன் யாதொரு போக்கிடமுமற்றவனாக, தான் செய்யவேண்டியது இன்னதென்று அறியாதவனாயிருந்தான். '*நானோ கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் மனந்தளர்ந்து போயிருப்பேன்*' (சங். 27 : 13 -Eng.) என்று அவன் கூறுகிறான். உண்மையாகவே தன்னால் கர்த்தருடைய நன்மையைக் காண முடியாதிருந்தும் அவன் விசுவாசித்தான். தேவனும் அவனுடைய விசுவாசத்தைக் கனப்படுத்தினார்; அவர் அவனுடைய யுத்தங்களையெல்லாம் நடப்பித்து, அவனுடைய பிரச்சினைகளையெல்லாம் தீர்த்தார். நாம் நம்முடைய இயற்கையான கண்களால் காண முடியாததை நம்முடைய ஆவிக்குரிய கண்களினால் கண்டு, விசுவாசத்தோடு தேவனை ஸ்தோத்திரித்து மகிமைப்படுத்த வேண்டும்.

"முடிந்தது" என்பதே கல்வாரிச் சிலுவையிலிருந்து புறப்பட்டு வரும் வெற்றி முழக்கமாகும். "முடிந்தது" என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நம்முடைய சோதனைகள், பிரச்சினைகளின் மேல் தேவன் ஏற்கனவே நமக்கு ஜெயமளித்துவிட்டார். தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் - நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? எந்தப் பிரச்சினை நமக்கு விரோதமாக நிற்க முடியும்? கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு

கூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே! அருமையானவர்களே, நீங்கள் சாதாரண ஜனங்களல்ல. நீங்கள் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். நீங்கள் ராஜாதி ராஜாவுக்கும், கர்த்தாதி கர்த்தருக்கும், தேவாதி தேவனுக்கும் சொந்தமானவர்கள். எந்தப் பிசாசும் உங்களுக்கு முன்பாக நிற்க முடியாது.

அழுகை ஓர் இரவு மாத்திரம் தங்கக் கூடும். ஆனால் விடியற் காலத்திலே களிப்புண்டாகும். இருளுக்குப் பின் ஒரு பிரகாசமான விடியற் காலம் உண்டு. ஒரு ஆழமான பள்ளத்தாக்கை அடுத்து மிகப் பெரிய மலை ஒன்றுண்டு. தேவனுடைய வார்த்தையை நம்புங்கள். அவர் உங்களுடைய கசப்பை மதுரமாக மாற்றித் தருவார். அவர் இருளை வெளிச்சமாக்குவார். அவர் கலக்கத்தைச் சமாதானமாகவும், உங்களுடைய வெறுமையைத் தம்முடைய நிறைவாகவும், உங்களுடைய வெட்கத்தை மகிமையாகவும், உங்களுடைய பெலவீனத்தைப் பெலனாகவும், உங்களுடைய அசுத்தத்தைப் பரிசுத்தமாகவும், உங்களுடைய மரணத்தை ஜீவனாகவும், உங்களுடைய நரகத்தைப் பரலோகமாகவும் மாற்றுவார். அவருடைய வார்த்தை அதைச் செய்யும். ஆகவே தான் அவருடைய வார்த்தை ஊக்கு விக்கும் வார்த்தை என்று அழைக்கப்படுகிறது. உங்களை அதைரியப் படுத்துகிற ஆவியைக் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் கடிந்து கொள்ளுங்கள்.

***ஜனவரி* 16**

என்னவோர் அருமையான நண்பர்!

"***அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்***" (எரே. 31 : 3).

நமக்கு அநேக நண்பர்கள் இருக்கக் கூடும்; எனினும் நாம் துயருற்றிருக்கும் நேரங்களிலும் கலங்கியிருக்கும் சமயங்களிலும் அவர்கள் நம் அருகில் இராமற்போகக் கூடும். ஆனால் ஆண்டவராகிய இயேசுவில் "*ஆபத்துக்காலத்தில் அதுகூலமான துணை*"யாயிருக்கும் (உதவிபுரியும் படி கூடவே இருக்கும்-Eng.) மிக நெருங்கியதொரு நண்பர் நமக்குண்டு (சங். 46 : 1). அவர் சமாதானப் பிரபுவாக இருப்பதால், நாம் நம்பிக்கை இழந்து, மனமுறிவடைந்திருக்கும் சந்தர்ப்பத்தில் அவர் நம்மைப் பரலோக சமாதானத்தினால் நிறைக்கிறார்; அவர் ஒளியாக இருப்பதால், நாம் இருளினூடே கடந்து செல்லுகையில் அவர் நமக்கு வெளிச்சம் கொடுக் கிறார்; அவரே வழியாக இருப்பதால் நாம் வழி தவறுவது போல் தோன்றும்

சமயங்களில், நமக்கு வழிகாட்டுகிறார். அவர் ஜீவ அப்பமாக இருப்பதால், நாம் பசியாயிருக்கையில் அவர் நம்மைப் போஷிக்கிறார்.

இவ்வுலகில் நமக்குச் சகலமும் சுமூகமாகவும், அநுகூலமாகவும் இருக்கும்போது நமக்கு அநேக சிநேகிதர் இருப்பார்கள். நம்முடைய பணத்தையும் பொருட்களையும் நாம் இழந்துபோகும்போது அவர்கள் நம்மை விட்டு விலகி, நம்மைக் கைவிட்டுவிடுவார்கள். ஆண்டவராகிய இயேசுவோ நம்மை விட்டு ஒருபோதும் விலகாத ஒருவராயிருக்கிறார் - நாம் வறுமையினூடாகச் சென்றாலும் செழித்தோங்கியிருந்தாலும் அவர் நம்மோடு கூடவே இருப்பார். நம்முடைய வறுமையில் அவர் நம்முடைய நித்திய ஐசுவரியங்களாயிருக்கிறார்; நம்முடைய செழிப்பில் அவர் நம்முடைய மிகுந்த மகிழ்ச்சியாயிருக்கிறார். அவர் *மரணபரியந்தம் நம் வழிகாட்டியாயிருப்பதால்,* நாம் வழிதவறிச் செல்ல அவர் ஒருபோதும் அனுமதிக்கவே மாட்டார். நம்முடைய வழிகளிலெல்லாம் அவர் நம்முடனே கூட வருகிறார். "*நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை*" என்று தேவன் வாக்குரைத்திருக்கிறார். இவ்வாக்குரைக்கப்பட்டு ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கடந்து சென்று விட்டன; ஆயினும் இவ்வுலகில் கோடிக்கணக்கானவர்கள் அவர் தாம் வாக்குத்தத்தம் பண்ணியதில் உண்மையுள்ளவராகவே இருப்பதை நிரூபித் தறிந்திருக்கின்றனர். உண்மையில் அவருடைய நாமமே '*உண்மையும் சத்தியமுமுள்ளவர்*' என்பதாகும் (வெளி. 19 : 11).

நமக்கு உதவி செய்ய முடியாத அளவுக்கு அதிக அலுவலுள்ள வர்களாயிருக்கும் நண்பர்களும் உண்டு. ஆனால் நம்முடைய பரலோக நண்பரோ நம்மைக் குறித்து எப்போதும் நினைவுள்ளவராகவே இருக்கிறார். நம்மை இரவும் பகலும் காக்கும்படி அவர் தம்முடைய பரிசுத்த தூதர்களை அனுப்புகிறார். அத்துடன் அவர் தாமே தூங்காமலும் உறங்காமலுமிருந்து நம்மைப் பாதுகாக்கிறார்.

நாம் சில நண்பர்களிடம் நம்முடைய இருதயத்திலுள்ளதை யெல்லாம் வெளிப்படையாகக் கூற இயலாது; அவர்கள் நம்முடைய வேதனையையும் துயரத்தையும் விளங்கிக்கொள்ளக் கூடாதிருப்பர்; நம்முடைய புண்பட்ட உணர்வுகள், துயரங்கள், நாம் சந்தித்துக்கொண் டிருக்கும் புறக்கணிப்புகள் ஆகியவற்றை அவர்களால் உணர்ந்துகொள்ள முடியாது. சில வேளைகளில் நம்முடைய இருதயத்திலுள்ளதையெல்லாம் நாம் பகிர்ந்துகொள்ளும்போது நம்முடைய மிக நெருங்கிய நண்பர்கள் கூட நம்மைத் தவறாக விளங்கிக்கொள்ளக் கூடும். ஆனால் நாம் எந்தப் பிரச்சினையினூடே கடந்து சென்றாலும், நாம் சந்திக்கும் சோதனை எதுவா யிருந்தாலும் நம்முடைய இருதயத்திலுள்ளதையெல்லாம் ***எப்போதுமே***

பகிர்ந்துகொள்ளக்கூடிய ஒரு நண்பர் கர்த்தராகிய இயேசுவில் நமக்குண்டு. '*வருத்தப்பட்டு, பாரமடைந்து, மிஞ்சின சுமையைச் சுமந்துகொண்டிருக்கிற வர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களை இளைப்பாறப்பண்ணுவேன் - நான் உங்கள் ஆத்துமாக்களை இலகு வடையப்பண்ணி, விடுதலையாக்கி, புத்துணர்வடையச் செய்வேன்*' (மத். 11 : 28 - Amp.) என்று அவர் கூறுகிறாரே!

ஆம், கர்த்தராகிய இயேசு நமக்கு எத்தகையதோர் உற்ற நண்பராய் இருக்கிறார்!

ஜனவரி 17

'நான் உன்னைத் தாங்குவேன்'

"*என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்*"
(ஏசாயா 41 : 10).

நாம் கர்த்தரைப் பற்றிப்பிடித்துக்கொண்டிருப்பது நல்லதுதான்; ஆயினும் கர்த்தர் நம்மைப் பற்றிப்பிடித்துக்கொண்டிருக்கிறார் என்பதை நாம் உணர்ந்துகொள்வதே அதைக் காட்டிலும் முக்கியமானதாகும். ஒரு பிள்ளை தன் தாயைப் பற்றிப்பிடித்துக்கொண்டிருக்கக் கூடும்; ஆனால் அதனுடைய தாய் அதனைப் பற்றிப்பிடித்துக்கொண்டிருப்பாளாயின், அதுவே, அப்பிள்ளைக்குத் தான் இன்னும் அதிக பாதுகாப்பாக இருக் கிறது என்ற உணர்வை உண்டாக்கும். அருமையான வாசகரே, நீர் உம் பரம பிதாவின் பிரியமான பிள்ளையாக இருக்கிறீர். அவர் உம் கரத்தைப் பிடித்திருக்கிறார். ஆகவே நீர் எதற்கும் பயப்பட வேண்டிய அவசிய மில்லை.

"*உன்னைத் தாங்குவேன்*" - *தாங்குதல் என்பது பற்றிப்பிடித்துக் கொள்ளுதலினின்று* வித்தியாசமான ஒன்றாகும். நீங்கள் ஒரு நோட்டுப் புத்தகத்தை அல்லது ஒரு பென்சிலைச் சாதாரணமாகப் பிடித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் பொதுவாகப் பெலனற்றதும், தன்னால் சுயமாக நிற்க முடியாததுமான ஒன்றையே நாம் நம்முடைய கரத்தினால் தாங்கிப்பிடித்துக்கொள்கிறோம். அருமையானவர்களே, நாம் பெலவீன மானவர்கள். தெய்வீக சகாயமின்றி நம்மால் நேராக நிற்க முடியாது. நாம் சுயமாக நிற்கப் பிரயாசப்படுவோமாயின் விழுந்துவிட நேரிடும். நம் முடைய கிருபையுள்ள ஆண்டவர் நம்முடைய பெலவீனங்களை அறிந்த வராக, தமது நீதியின் வலதுகரத்தினால் நம்மைத் தாங்குவதாக வாக்களித்திருக்கிறார்.

நம்முடைய கர்த்தர் நம்மைத் தாங்கிக்கொண்டிருப்பதால், நமக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. '*இப்பொழுது வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் அவர் வல்லமையுள்ளவர்*' (யூதா 24 -Eng.). நாம் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்! நம்மால் சுயமாக நிமிர்ந்து நிற்க முடியாதிருப்பினும், நாம் கீழே விழுந்துவிடாதவாறு நம்முடைய கர்த்தர் நம்மைத் தாங்கிக்கொண்டிருக்கிறாரே! அந்த மகிமையான நாளில் நாம் அவருடைய மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே நிறுத்தப்படும்படியாகவே அவர் நம்மைத் தாங்கிக்கொண்டிருக்கிறார்.

ஜனவரி 18

சுயநலமற்ற ஜீவியம்

"*ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்*" (கலா. 6 : 2).

சாது சுந்தர்சிங் ஒருமுறை இமயமலைப் பகுதியிலுள்ள ஒரு பள்ளத்தாக்கின் வழியாக ஒரு சந்நியாசியுடன் நடந்து சென்றுகொண்டி ருந்தார். பனி பெய்துகொண்டிருந்தமையாலும், அவர்கள் தாங்கள் சென்றடைய வேண்டிய இடத்திற்கு இருள் சூழுமுன் செல்ல வேண்டிய திருந்தமையாலும் அந்த சந்நியாசி சுந்தர்சிங்கை வேகமாக நடக்கும்படி கோரினார். அவர்கள் இருவரும் இவ்வாறு துரிதமாகச் சென்றுகொண் டிருக்கையில் ஒரு பரிதாபகரமான அபயக்குரலைக் கேட்டனர். அது, கீழே விழுந்து காயமடைந்திருந்த ஒரு ஏழை மனிதனிடமிருந்து வந்த அவலக் குரலாகும். சுந்தர்சிங் அங்கு சென்று அந்த மனிதனுக்கு உதவி செய்ய விரும்பினார். ஆனால் அவர்கள் அவனுக்கு உதவி செய்ய முனைந்தால், இருள் கவ்வுமுன் அவர்களால் பனி பெய்திருக்கும் பகுதியைக் கடந்து செல்ல இயலாது என்று அந்த சந்நியாசி கூறினார். அந்த மனிதன் அங்கேயே கிடந்து மரிக்கும்படியாக அவனை அப்படியே விட்டுச் செல்வதைச் சாதுவால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. 'ஒருவேளை அந்தச் சகோதரனுக்கு உதவி செய்யும்படியாகவே கர்த்தர் என்னை இவ்வழியாகக் கொண்டுவந்திருக்கக் கூடும்' என்று எண்ணிக்கொண்டு அவர் அந்த மனிதனின் அருகில் சென்றார். சந்நியாசி இவருக்காகக் காத்திருக்க வில்லை; அவர் தனியாக நடந்து சென்றுவிட்டார். குற்றுயிராய் விழுந்து கிடந்த மனிதன் நடக்க முடியாத நிலையிலிருந்ததைச் சாது கண்டார். ஆகவே அவர் தம்முடைய துப்பட்டியினால் ஓர் தொட்டிலை உண்டாக்கி, அதில் அந்த மனிதனை வைத்து, தன் முதுகில் சுமந்துகொண்டு சென்றார்.

நடக்க முடியாத ஒரு மனிதனையும் சுமந்துகொண்டு மலையின் மேல் ஏறிச் செல்வது அவருக்கு மிகவும் கடினமானதாக இருந்தது. இருப்பினும் அவர் தொடர்ந்து களைப்புடனும் கஷ்டத்துடனும் நடந்து சென்றுகொண் டிருந்தார். முடிவாக, சற்று தொலைவில் அவரால் ஒரு மடத்திலிருந்து வந்த வெளிச்சத்தைக் காண முடிந்தது. அந்த மனிதனைச் சுமந்துகொண்டே அவர் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கையில், வழியில் ஒரு பெரிய மூட்டை போன்ற ஒன்று பனியினால் முழுவதுமாக மூடப்பட்டுக் கிடப்பதை அவர் காண நேர்ந்தது. அதை அவர் பார்வையிட்டபோது, தன்னுடன் ஆரம் பத்தில் நடந்து வந்துகொண்டிருந்த சந்நியாசியின் சடலம் தான் அது என்பதைக் கண்ணுற்று அவர் திகிலடைந்தார்.

சாது சுமந்துவந்த அந்த ஏழை மனிதனின் சரீரத்திலிருந்த உஷ்ணம் அவருக்குச் சூடுண்டாக்கி, அந்தச் சந்நியாசியைப் போல அவர் கடுங் குளிரில் உறைந்துபோய் மரித்துவிடாதவாறு தடுத்திருந்தது. மறுபக்கத்தில் சாது தூக்கிச் சுமந்துகொண்டு வந்த அந்த உதவியற்ற மனிதனும் சாதுவின் சரீரத்திலிருந்து உஷ்ணத்தைப் பெற்றுக்கொண்டு உயிர் பிழைத்துக் கொண்டான்.

மற்றவர்களுடைய பாரங்களைப் பகிர்ந்துகொள்ளுதல் நமக்கும் அவர்களுக்கும் புதிய ஜீவனை அளிக்கிறது என்பது எவ்வளவு உண்மை யானது!

கிறிஸ்தவ ஜீவியத்தின் அடிப்படையே சுயநலமற்ற ஒரு ஜீவியம் ஆகும் - அது மற்றவர்களுடைய பாரங்களையும் கவலைகளையும் சுமப்பது மட்டுமல்லாமல், அவர்களுடைய பெலவீனங்களையும் அக்கிரமங்களையுங்கூட சுமக்கும் ஒரு ஜீவியம் ஆகும். நாம் நம்முடைய ஜீவியங்களை ஒரு கணம் ஆராய்ந்து பார்த்து, நம்மைக் குறித்த கர்த்தருடைய எதிர்பார்ப்பை நாம் எந்த அளவுக்கு நிறைவேற்றியிருக்கி றோம் என்பதைக் கண்டுணர்வோமாக.

ஜனவரி 19

ஆபத்தில் விடுதலை

"***ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்***" (சங். 91 : 15).

கர்த்தர் நம்மை இரு விதங்களில் விடுவிக்கிறார்: (i) அவர் நம்மை ஆபத்துக்கு நீங்கலாக்கித் தப்புவிக்கிறார் (ii) நாம் ஆபத்திலிருக்கும்போது

அவர் நம்மைத் தப்புவிக்கிறார். இவ்விரு அனுபவங்களையும் 91-ஆம் சங்கீதத்தில் நாம் காணலாம். '*நிச்சயமாகவே அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்குத் தப்புவிப்பார்*' (Eng.) என்று இச்சங்கீதத்தின் மூன்றாம் வசனம் கூறுகிறது. உண்மையில், கர்த்தர் நம்மை ***ஆபத்துக்கு*** நீங்கலாக்கித் தப்புவிப்பது அல்லது ஆபத்துக்கு விலக்கிப் பாதுகாப்பது குறித்தே அச்சங்கீதத்தின் முதலாம் வசனம் முதல் பதினான்காம் வசனம் வரையுள்ள அனைத்து வசனங்களும் கூறுகின்றன. ஆனால், நாம் ***ஆபத்திலி ருக்கும்போது*** கர்த்தர் நம்மைத் தப்புவிப்பது குறித்தே அதன் பதினைந்தாம் வசனம் கூறுகிறது. "*அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்*".

தேவன் நம்மை *ஆபத்துக்கு* நீங்கலாக்கித் தப்புவிப்பதற்கும் நாம் *ஆபத்தில்* அகப்பட்டிருக்கும்போது அவர் நம்மைத் தப்புவிப்பதற்கும் இடையே உள்ள வித்தியாசம் யாது? நம்முடைய ஜீவியத்தில் தேவன் ஒரு கஷ்டத்தை அல்லது சோதனையை அனுமதிக்கும்போது, அவர் நம்மை உயர்த்திக் கனப்படுத்த விரும்புகிறார் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும் - "*ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்*". விடுதலையோடு கூட ஓர் ஆவிக்குரிய பதவி உயர்வும் வருகிறது.

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகியோர் ***அக்கினிக்கு*** நீங்கலாகத் தப்புவிக்கப்படாமல், ***அக்கினிக்குள்ளிருந்து*** தப்புவிக்கப் பட்டனர். அவர்கள் அக்கினிக்குள் தூக்கி எறியப்பட்டனர்; அவர்கள் அக்கினிக்குள் தூக்கி எறியப்பட்ட பின்னரே, தேவன் அவர்களைத் தப்புவித்தார்; பின்பு, "*ராஜா சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர் களைப் பாபிலோன் தேசத்திலே உயர்த்தினான்*" (தானி. 3 : 30). தேவன் தானியேலைச் சிங்கங்களின் கெபிக்கு நீங்கலாக்கித் தப்புவித்திருக்கலாம். ஆனால் அவர் அவனை அதற்கு உள்ளே தூக்கியெறியப்படும்படி அனு மதித்துவிட்டு, அதன் பின்பு அந்த ஆபத்தில் அவனைப் பாதுகாத்துத் தப்புவித்தார். அவன் தப்புவிக்கப்பட்ட பின் ராஜா அவனை மிகவும் அதிகமாகக் கனம்பண்ணி, தானியேலின் தேவனே எல்லாரும் சேவித்துப் பணிய வேண்டிய மெய்யான தேவன் என்று பறைசாற்றுவித்தான். யோசேப்பு குழிக்குள்ளும் சிறைச்சாலைக்குள்ளும் தள்ளப்பட்டான். ஆனால் பின்பு அவன் கனப்படுத்தப்பட்டு, எகிப்து தேசம் முழுமைக்கும் அதிகாரியாக உயர்த்தப்பட்டான். மொர்தெகாய் கடுமையான கஷ்டத்துக் குள்ளாகியிருந்தான்; அவனுடைய ஜனங்களெல்லாரும் ராஜாவின் கட்டளையின்பேரில் கொல்லப்படவிருந்தனர். ஆயினும், தேவனோ

அந்தக் கடுமையான பிரச்சினையில் அவனை விடுதலையாக்கி, அந்தப் பேரரசின் ராஜாவுக்கு அடுத்தவனாக அவனை உயர்த்தினார்.

ஒருவேளை நீங்கள் இப்போது ஒரு கடுமையான பிரச்சினையில் இருக்கலாம். ஆனால் திடன்கொள்ளுங்கள். நீங்கள் சத்தியத்துக்கு உண்மையாயிருக்கிறீர்களென்பது நிரூபிக்கப்பட்ட பின், கர்த்தர் உங்களை விடுதலையாக்கிக் கனப்படுத்துவார்.

ஜனவரி 20

'***அவரை அமர்ந்திருக்கவிடாதிருங்கள்***'

"***பின்பு, அந்தத் தூதன் தூபகலசத்தை எடுத்து, அதைப் பலிபீடத்து நெருப்பினால் நிரப்பி, பூமியிலே கொட்டினான்; உடனே சத்தங்களும், இடிமுழக்கங்களும், மின்னல்களும், பூமியதிர்ச்சியும் உண்டாயின***"
(வெளி. 8 : 5).

பலிபீடத்திலிருந்து எழும் அக்கினியானது, ஜெபஜீவியத்திற்காக நாம் கொண்டிருக்க வேண்டிய பரிசுத்த வைராக்கியத்தைக் குறிக்கிறது எனலாம். பரிசுத்த அக்கினியிலிருந்து புறப்படும் ஜெபங்களுக்கு எப்பொழுதுமே அதிசயிக்கத்தக்க பலன்கள் உண்டாகின்றன. அவை நான்கு விதங்களில் வெளிப்படுத்தப்படுகின்றன.

(i) 'சத்தங்கள்' - இவை பூமிக்குரிய சத்தங்களல்ல; பரலோக சத்தங்கள் அல்லது பரலோக தூதுகளாகும். பிரசங்க மேடையிலிருக்கும் பிரசங்கிமார்கள் அனலற்ற, சாரமற்ற தூதுகள் அளிக்கிறார்களெனில், பரிசுத்த பூமியில் தங்கள் முழங்கால்களை முடக்கும் ஜெபவீரர்கள் இல்லாதிருப்பதே அதற்கான ஒரு காரணமாக இருக்கக் கூடும். உன்னதமான பரிசுத்தத்திற்கான வைராக்கியங்கொண்ட ஜெபவீரர்கள் எழும்பி யுத்தத்தை அதன் வாசல் மட்டும் திருப்புவார்களாக. '***பரிசுத்தத்தின் பிரசங்கிமார்கள்' கிடைக்கப்பெறும் பொருட்டாகத் தங்களுடைய வல்லமையான ஜெபங்களினால் கிருபாசனத்தைப் பலவந்தம் செய்யக்கூடிய பரிசுத்த புருஷர் நமக்குத் தேவை.***

(ii) 'இடிமுழக்கங்கள்' - இவை சத்துருக்களின் மேல் நமக்குக் கிடைக்கும் மாபெரும் ஜெயத்தைக் குறிக்கின்றன (I சாமு. 7 : 10). சாத்தான்தான் ஜெயம்பெற்றவன் என்பது போல தோன்றுமளவிற்கு இன்று கர்த்தருடைய சபை ஏன் ஓர் உணர்ச்சியற்ற, தோற்கடிக்கப்பட்ட நிலையில் காணப்படுகிறது? ***ஒரு பரிசுத்தமான, தீட்டுப்படாத ஜீவியத்துக்கென்று தங்களையே முற்றிலுமாக அர்ப்பணித்திருக்கும் ஜெப மாந்தர் போதுமான அளவு இல்லை*** என்பதே அதன் காரணமாகும். தேவனுடைய பரிசுத்தத்தைக் குறித்த தெளிவான தரிசனத்தையுடைய பரிசுத்தவான்கள் எழும்புவார்களாக. கிருபாசனத்துக்கு நேராக அவர்கள் அணிவகுத்து வெற்றிநடை போடுவார்களாக. அப்படியானால் தேவன் வெகு விரைவில் பரலோகத்திலிருந்து இடிமுழக்கமிட்டு, தம்முடைய சத்துருக்களையெல்லாம் தோற்கடிப்பார்.

(iii) 'மின்னல்கள்' - இவை சாத்தானின் சேனைகள் தோற்கடிக்கப்படுவதைக் குறிக்கின்றன (லூக்கா 10 : 18). தங்களுடைய தூய்மையான ஜீவியத்தினாலும் ஜெபஜீவியத்தினாலும் அந்தகார சக்திகளைக் கீழே விழத்தள்ளும் பரிசுத்தவான்களைத் தேவன் எவ்வளவாகத் தேடிக்கொண்டிருக்கிறார்! அருமையான பரிசுத்தவானே, தூசியை உதறிவிட்டு மரித்தோரை விட்டு எழும்பி ***ஜெபிப்பீராக - சாத்தான் மின்னலைப் போல் வானத்திலிருந்து விழுவதைக் காணும்வரை தொடர்ந்து ஜெபித்துக்கொண்டேயிருப்பீராக.***

(iv) 'பூமியதிர்ச்சி' - இது, பழுதற்ற ஜீவியம் செய்யும் ஜெப மாந்தர் மட்டுமே இவ்வுலகத்தைக் கிறிஸ்துவுக்காக அசைக்க முடியும் என்பதைக் காண்பிக்கிறது. அநேகர் ஜெபிக்கிறார்கள்; இருப்பினும் ஏன் ஒன்றும் சம்பவிப்பதில்லை? சிலர் ஜெபத்தில் பிசாசை அதட்டுகிறார்கள், ஆனால் அவர்களில் மலைபோலிருக்கும் ***இரகசிய பாவங்களைக்*** கண்டு, பிசாசானவன் நகைத்து, அவர்களைப் பதிலுக்கு மறுபடியுமாக அதட்டுகிறான். மெய்யாகவே நம்முடைய தேவன் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். அவர் இன்னமும் ஒரு பெரிய ஆவிக்குரிய பூமியதிர்ச்சியை அனுப்பி கிறிஸ்துவுக்காக உலகத்தை அசைக்க விரும்புகிறார். ஜான் வெஸ்லி ஒருவிசை இவ்வாறு கூறினார்: 'பாவம் செய்வதற்கு மட்டுமேயன்றி வேறெதற்கும் பயப்படாதவர்களும், தேவனைத் தவிர வேறொன்றையும் நேசியாதவர்களுமான நூறு பேரை எனக்குத் தாருங்கள். அவர்கள் எப்படிப்பட்ட பின்னணியிலிருந்து வந்தாலும், அவர்களால் கிறிஸ்துவுக்காக உலகத்தை அசைக்கவும் பரலோக ராஜ்யத்தை ஸ்தாபிக்கவும் கூடும்'.

நாம் ஒரு பழுதற்ற ஜீவியம் செய்வதற்குத் தேவன் தாமே நமக்கு உதவி செய்து, அதன் மூலம் நம் ஒவ்வொருவரையும் பசும்பொன்னாலான தூபகலசமாக்குவாராக. அதன் மூலம் நம்முடைய ஜெபங்கள், பரலோக தூபத்தைப் போல, '*சத்தங்களையும் இடிமுழக்கங்களையும் மின்னல்களையும் பூமியதிர்ச்சியையும் உண்டாக்குவதாயிருக்கும்*'.

ஜனவரி 21

'சிறியவையே' காரணமாகின்றன!

"செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமளதைலத்தை நாறிக் கெட்டுப்போகப்பண்ணும்" (பிர. 10 : 1).

நாம் அநேகமாகச் சிறிய தவறுகளை 'இவை சிறியவை தானே!' என்று கண்சாடையாக விட்டுவிடும் இயல்புள்ளவர்களாயிருக்கிறோம். ஆனால் நம் ஜீவியத்தில் இப்படிப்பட்ட 'சிறிய' காரியங்களே அடிக்கடி நாசத்தை உண்டுபண்ணிவிடுகின்றன. அப்படிப்பட்ட பல எடுத்துக் காட்டுகளை வேதாகமம் முழுவதிலும் நாம் காணலாம்.

"*ராஜாக்கள் யுத்தத்திற்குப் புறப்படுங்காலம் வந்தபோது*", தாவீது தன்னுடைய படுக்கையறையிலே சற்று சுகமாக இளைப்பாறினான். அவனுடைய அந்தச் சற்றுநேர இளைப்பாறுதல், அருவருக்கப்படத்தக்க விபசாரத்திலும், தன்னுடைய உத்தமமான போர்ச்சேவகனைக் கொடிய வஞ்சக முறையில் படுகொலை செய்வதிலும் முடிவுற்றது. கேயாசியின் கொஞ்சம் பேராசை அவனை அவனுடைய ஜீவியகாலமெல்லாம் ஒரு குஷ்டரோகியாக மாற்றிவிட்டது! வெறும் முப்பது வெள்ளிக்காசுகளின் பேரில் யூதாஸ்காரியோத்துக்கு இருந்த கொஞ்சம் ஆசை, அவனை நம்முடைய கர்த்தரையே காட்டிக்கொடுத்த துரோகியாக்கிவிட்டது! பண ஆசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். 'சிறிய' பாவங்களால் கொல்லப்பட்டிருக்கும் மிகப் பெரிய ஆவிக்குரிய பராக்கிரமசாலிகள் எத்தனைபேர்! ஒரு பெரிய கொம்பு அல்ல, ஒரு 'சின்ன கொம்பே', '*வானத்தின் சேனையாகிய நட்சத்திரங்களில் சிலவற்றைப் பூமியிலே விழப்பண்ணி, அவைகளை மிதித்தது*' (தானி. 7 : 8 ; 8 : 9, 10).

சிறியவையாகவும் தீங்கற்றவை போலவும் தோன்றும் காரியங் களை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடுவதற்கு நாம் அசதியாயிருக் கிறோமல்லவா? இது, நம்முடைய தூய ஜீவியத்தை அழிப்பதற்கும் அசுசிப்படுத்துவதற்கும் சாத்தான் உபயோகிக்கும் தந்திரங்களில் ஒன்றாகும்.

பேதுரு ஆண்டவரை மறுதலிக்கத் திட்டமிட்டிருக்கவில்லை. ஆனால் கர்த்தராகிய இயேசு காட்டிக்கொடுக்கப்பட்ட அந்தக் குளிரான இரவில், அவன் தன் அருகில் குளிர்காயும்படி மூட்டப்பட்டிருந்த நெருப் பில் தனக்குக் கொஞ்சம் அனல் உண்டாக்கிக்கொள்ளவே விரும்பினான். பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்கார்ந்து சற்று அனல்கொண்டது முடிவில் அவனுடைய ஜீவியத்தையே கசப்பாக்கிற்று; அவன் மனங்கசந்து அழுதான். பேதுரு மறுதலித்தது நம் ஒவ்வொருவருக்கும் ஓர் எச்சரிப்

பாகச் சரித்திரத்தில் இடம்பெற்றுவிட்டது. கர்த்தரை மறுதலிக்கும் கிரயத்தைச் செலுத்தி சரீரத்தில் சற்று அனலடைவதைப் பார்க்கிலும், குளிரினால் மரிப்பதே நலம்.

நமக்குக் கிடைக்கும் கொஞ்சம் நேரமோ அல்லது பணமோ அல்லது நம் வசமிருக்கும் வேறெந்தப் பொருளோ, எதுவாயிருப்பினும் - மிகச் சிறிய காரியங்களைக் குறித்துங்கூட நாம் மிகவும் கவனமாயிருக்க வேண்டுமென்று கர்த்தர் நம்மைக் குறித்து விரும்புகிறார். மிகக் கொஞ்சத்தில் நாம் உண்மையாயிராத பட்சத்தில், அநேகத்தில் நம்மால் உண்மையாயிருக்க முடியாது.

எட்டு மில்லியன் டாலர் செலவில் உண்டாக்கப்பட்ட ராக்கெட் ஒன்று, அதன் செயல்முறைத் திட்டம் (computer programme) அடங்கிய படிவத்தில் இரு வார்த்தைகளுக்கு இடையே வர வேண்டிய ஒரு இணைப்புக்குறி (a hyphen) தவறுதலாக வேறொரு இடத்தில் வைக்கப் பட்டதினிமித்தமாகப் பெருஞ்சேதத்திற்குள்ளாகி நாசமடைந்ததாகச் சில நாட்களுக்கு முன் ஓர் அறிக்கை வெளிவந்துள்ளது. ஒரு முறை ஒரு விமான இயந்திரப் பொறியாளர் திருகு ஆணி ஒன்றைப் பொருத்த மறந்ததால், ஒரு விமானம் விழுந்து நொறுங்கி, அதன் விமானி உட்பட அதில் பணிபுரிந்தவர்கள் அனைவரும், அதிலிருந்த அனைத்து பயணிகளும் மாண்டனர். ஒரு கோப்பை தேநீர் அருந்திவிட்டு பின்னர் அத்திருகாணியைப் பொருத்திவிடலாம் என்று நினைத்திருந்த அவர், பின்பு அதை அறவே மறந்துவிட்டார். புறத்தோற்றத்தின்படி அது ஒரு மிகச் சிறிய வேலையாயிருந்தபோதிலும் - அந்த ஆணியின் விலை ஒரு டாலருக்கும் குறைவானதாக இருந்தபோதிலும் - பல உயிர்களும், எத்தனையோ மில்லியன் டாலர்கள் மதிப்புள்ள விமானமும் நாசமடை வதற்கு அந்நபருடைய சிறிய கவலையீனம் போதுமானதாகிவிட்டது!

'*மிகச் சிறிய நாணயம் ஒன்று கண்ணுக்கு மிக அருகாமையில் வைக்கப்படுமாயின், அது சூரியனையே மறைத்துவிடும்*'.

ஜனவரி 22

கிறிஸ்துவண்டை வாருங்கள்

"நீ கொப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு; ... அதை உள்ளும் புறம்புமாகக் கீல்பூசு. ... பேழையின் கதவை அதின் பக்கத்தில் வை" (ஆதி. 6 : 14 - 16).

பேழை கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறது. அது மரத்தினால் (மனுஷீகம்) செய்யப்பட்டதாயிருந்தபோதிலும், அதனுள் தண்ணீர் புகாத வாறு கீலானது (தெய்வீகம்) அதை உள்ளும் புறம்புமாக மூடியிருந்தது. கர்த்தராகிய இயேசு தம்முடைய சுபாவத்தில் முற்றிலும் தெய்வீகமான வராயிருப்பினும், அவர் இப்பூமிக்கு வந்தபோது ஒரு மாம்ச சரீரத்திற்கு இருக்கக்கூடிய சகல பெலவீனங்களும் உள்ளவராய், மாம்ச சரீரத்தின் வரம்புகளுக்கு உட்பட்டவராய், மனுஷீகத் தன்மையுள்ளவராய் இருந்தார். அவர் மாம்சமும் இரத்தமும் உடையவராய் இவ்வுலகில் ஜீவித்து, ஒரு பாவமற்ற ஜீவியம், ஒரு ஜெய ஜீவியம் செய்வது சாத்தியமானது என்பதை நமக்குக் காண்பித்திருக்கிறார்; ஜீவியத்தில் வீசக்கூடிய புயற்காற்றுகளுக்கு அப்பாற்பட்ட மேலானதொரு ஜீவியத்தை நம்மால் செய்யக் கூடும் என்பதை அவர் நமக்குக் காண்பித்திருக்கிறார்.

ஜலப்பிரளயம் உண்டானபோது பேழைக்குள் இருந்தவர்கள் மட்டும் தண்ணீரில் அமிழ்ந்துபோகவில்லை. நாம் சுயமாக இந்த ஜீவியத்தைச் செய்ய முடியாது. நாம் கிறிஸ்துவிடம் செல்ல வேண்டும். நாம் அவரில் நிலைத்திருக்க வேண்டும். நாம் அவரால் பாதுகாக்கப்பட வேண்டும். "*என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது*" (யோவான் 15 : 5) என்று அவர் கூறுகிறார். ஆம், அவரின்றி நாம் கைவிடப்பட்டவர்களும் விழுந்துபோனவர்களுமாயிருப்போம். ஆனால் நாம் அவருக்குள் காணப்படுவோமாயின், 'கிறிஸ்துவுடனேகூட தேவனுக்குள் மறைந்திருப்போமாயின்', ஜீவியத்தில் நாம் சந்திக்கக்கூடிய கொந்தளிக்கும் தண்ணீர்கள் போன்ற சோதனைகளில் அமிழ்ந்துபோகாமல், அவற்றின் மேல் மிதக்கக்கூடியவர்களாய் இருப்போம்; அவர் வெளிப்படும் போது, நாமும் மகிமையிலே அவரோடுகூட வெளிப்படுவோம்.

பேழைக்கு ஒரே ஒரு கதவு மட்டுமே இருந்தது. நாம் கிறிஸ்துவிடம் செல்வதற்கு நமக்கு ஒரே ஒரு வழி மட்டுமே உண்டு. அது நெருக்கமான வழி - அது சிலரால் மட்டுமே தெரிந்துகொள்ளப்படுவதாகும் (மத். 7 : 14). நீங்கள் ஜனத்திரளோடு சேர்ந்துபோக விரும்பி, உலகத்தையும் உலகத்திலுள்ளவர்களையும் பிரியப்படுத்த வேண்டுமென்று எண்ணுவீர்களென்றால், உங்களால் கிறிஸ்துவிடம் வர முடியாது. கிறிஸ்துவிடம் நம்மை நடத்தக்கூடிய வழி, பெரும்பாதையான பரிசுத்த வழி என்று அழைக்கப்படுகிறது (ஏசாயா 35 : 8). கிறிஸ்துவிடம் நீங்கள் வர வேண்டுமாயின், பாவம், அசுத்தம் என்று தோன்றுகிற ஒவ்வொரு காரியத்தையும் விட்டு உங்களை நீங்கள் வேறுபிரித்துக்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

ஜனவரி 23

தேவனுடைய உள்ளத்திற்கு அருகில்

"***அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்***"
(ஏசாயா 55 : 6).

'அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுதல்' என்பது, அவர் நம்மோடு பேசும்போது அவருடைய வார்த்தைக்குச் செவிகொடுத்து, அவருடைய ஆலோசனைப்படியே நம்முடைய ஜீவியத்தைத் திருத்தி அமைத்துக்கொள்ளுதல் ஆகும். கலக்கங்களும் சோதனைகளும் நிறைந்த வேளைகளில் நாம் தேவனோடு நெருங்கி ஜீவிப்போமாயின், சங்கீதக்காரனோடு சேர்ந்து நாமும் '*தேவன் எனக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்*' என்று தைரியமாகச் சாட்சி கூற முடியும்.

"*நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிறபோதெல்லாம், அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல, தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது?*" (உபா. 4 : 7). இன்று நீங்கள் தேவனை விட்டு வெகுதூரத்தில் ஜீவிப்பீர்களென்றால், அவருடைய சமுகத்தினின்று தூரமாக இருப்பீர்களென்றால், அவருடைய அன்புக்குத் தூரமாக இருப்பீர்களென்றால், அவருடைய கிருபைக்குத் தூரமாக இருப்பீர்களென்றால், அவருடைய வல்லமைக்குத் தூரமாக இருப்பீர்களென்றால், அவருடைய நன்மைக்குத் தூரமாக இருப்பீர்களென்றால், நீங்கள் ஒரு சோதனையை அல்லது கஷ்டத்தைச் சந்திக்கும்போது தேவன் உங்களை விட்டுத் தூரமாக இருப்பதாக உணருவீர்கள்.

'*அமைதியான இளைப்பாறும் இடம் ஒன்றுண்டு;*
அது தேவனுடைய உள்ளத்துக்கு அருகில் இருக்கிறது.

பாவம் தொந்தரவு செய்யாத இடம் ஒன்றுண்டு;
அது தேவனுடைய உள்ளத்துக்கு அருகில் இருக்கிறது.

இனிமையான ஆறுதலளிக்கும் இடம் ஒன்றுண்டு;
அது தேவனுடைய உள்ளத்துக்கு அருகில் இருக்கிறது.

நாம் நம்முடைய இரட்சகரைச் சந்திக்கும் இடம் ஒன்றுண்டு;
அது தேவனுடைய உள்ளத்துக்கு அருகில் இருக்கிறது.

நாம் முற்றிலும் விடுதலை பெற்றவர்களாயிருக்கும் இடம் ஒன்றுண்டு;
அது தேவனுடைய உள்ளத்துக்கு அருகில் இருக்கிறது.

எங்கும் மகிழ்ச்சியும் சமாதானமும் நிறைந்திருக்கும் இடம் ஒன்றுண்டு;
அது தேவனுடைய உள்ளத்துக்கு அருகில் இருக்கிறது'.

உங்களுடைய இருதயம் தேவனை விட்டுத் தூரமாக இருக்கும் போது உங்களுக்குத் திருப்தியோ, இளைப்பாறுதலோ இராது; உங்க ளுடைய ஜீவியம் கசப்பாகவும், வெறுமையாகவும், இருளாகவும், அசுத்த மாகவும், வறண்டதாகவும் இருக்கும்.

நம்முடைய துன்ப வேளைகளில் நம் தேவனை நமக்கு மிக அருகாமையிலிருக்கும் ஏற்ற துணையாக அனுபவிக்கும் மகிழ்ச்சியை நாம் கொண்டிருக்கத்தக்கதாக, நாம் அவருக்கு மிக அருகில் ஜீவிக்கும்படி அவர் தாமே நமக்கு உதவிசெய்வாராக.

ஜனவரி 24

அன்பு என்னும் ஆயுதம்

"***உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்***" (ஏசாயா 54 : 17).

நமக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க் காமல் அல்லது நம்மை மேற்கொள்ளாமற்போக வேண்டுமென்றால், நமக்கு விரோதமாக உருவாக்கப்பட்ட ஆயுதங்களைக் காட்டிலும், நம்மிடம் பெரிதும் பலம் வாய்ந்ததுமான ஓர் ஆயுதம் இருக்க வேண்டும். அந்த ஆயுதம் தான் என்ன? தேவ அன்பே அந்த ஆயுதமாகும். மன்னிக்கிற அன்போடு கூட நாம் நம்முடைய சத்துருக்களை நேசிக்கக் கற்றுக்கொள்ளும்போது, நம்மிடம் உள்ள அந்தப் பரலோக அன்பானது நமக்கு விரோதமாக வரும் அந்தகார வல்லமைகள் அனைத்தையும் மேற்கொள்ளக்கூடியதாயிருக்கும்.

'அக்கினியாஸ்திரங்கள்' என்னும் ஆயுதம் உட்பட பல ஆயுதங்கள் நம் எதிராளியாகிய பிசாசானவனிடம் இருக்கக் கூடும் (எபே. 6 : 16). உன்னதப்பாட்டிலுள்ள சவால் விடுக்கும் வார்த்தைகளைப் பாருங்கள்: "*திரளான தண்ணீர்கள் நேசத்தை அவிக்கமாட்டாது, வெள்ளங்களும் அதைத் தணிக்கமாட்டாது*" (உன். 8 : 7). திரளான தண்ணீர்கள் என்பது, நாம் சந்திக்கும் புறக்கணிப்புகள், தாழ்த்தப்படுதல், பகைக்கப்படுதல், அநியாய மாகக் குற்றஞ்சாட்டப்படுதல், துன்பப்படுத்தப்படுதல் முதலியவற்றைக் குறிக்கிறது. நாம் அழியாததும் மாறாததுமான கல்வாரி அன்பினால் நிரப்பப்படும்போது, இந்த ஆயுதங்கள் அல்லது சோதனைகள் அக்கினிக்கு முன்பாக இருக்கும் வைக்கோலுக்கு ஒப்பானவையாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

"*நேசம் மரணத்தைப்போல் வலிது*" (உன். 8 : 6). ஓர் ஆழ்ந்த அர்த்தத்தில், தேவ அன்பு மரணத்தைக் காட்டிலும் வலிது. மரணமே நம்முடைய கடைசிச் சத்துரு ஆகும். நாம் தேவ அன்பினால் கடைசிச் சத்துருவாகிய மரணத்தை மேற்கொள்வது சாத்தியமென்றால், நிச்சய மாகவே மற்றெல்லாச் சத்துருக்களையும், ஆயுதங்களையும் தேவ அன்பினால் வெகு எளிதாக மேற்கொள்ளலாம்.

இன்று ஒருவேளை நீங்கள் சத்துருவின் ஆயுதங்கள் பலவற்றினால் தாக்கப்பட்டுக்கொண்டிருக்கக் கூடும். தூய்மையான கல்வாரி அன்பினால் நிரப்பப்படுவதே இந்தச் சோதனைகளை அல்லது கலக்கங்களை மேற் கொண்டு நாம் முற்றும் ஜெயங்கொண்டவர்களாக மாறுவதற்கான ஒரே வழியாகும். உங்களை அவமதிக்கிறவர்கள், தாழ்த்துகிறவர்கள், உபத்திரவப் படுத்துகிறவர்கள், புறக்கணிக்கிறவர்கள், அசட்டைபண்ணுகிறவர்கள், வஞ்சிக்கிறவர்கள் அல்லது உங்கள் பணம், பொருட்கள் ஆகியவற்றை உங்களிடமிருந்து பறித்துக்கொள்ளுகிறவர்கள் ஆகியோரை உங்களால் நேசிக்க முடிகிறதா? அவ்விதம் நேசிப்பீர்களெனில், நீங்கள் முற்றும் ஜெயங் கொண்டவர்களாயிருக்கிறீர்கள்.

ஜனவரி 25

இயற்கைக்கப்பாற்பட்ட அறிவு

"***விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்***" (எபி. 11 : 3).

'*விசுவாசத்தினாலே நாம் அறிந்திருக்கிறோம்*'. உங்களில் விசுவாசம் இல்லையெனில், உங்களுக்குச் சரியான அறிவு இல்லை என்பதே அதன் பொருளாகும். விசுவாசம் இல்லாத பட்சத்தில், ஆவிக்குரிய காரியங்களைக் குறித்து உங்களுக்கிருக்கும் அறிவெல்லாம் தவறான அறிவாகவே இருக்கும். ஒரு மனுஷன் தனக்கிருக்கும் இயற்கையான மூளையின் மூலம் இந்த இயற்கையான உலகத்திலுள்ள இயற்கையான காரியங்களை விளங்கிக்கொள்ளக் கூடியவனாயிருப்பான். ஆனால் இயற்கைக்கப்பாற் பட்ட மேலுலகிலுள்ளவைகளை விளங்கிக்கொள்வதற்கு, பரிசுத்த ஆவியி னால் செயல்படுத்தப்படும் 'விசுவாசம்' என்று அழைக்கப்படும் இயற்கைக் கப்பாற்பட்ட அறிவு ஒருவருக்கு அவசியம். மனித மூளை ஒரு

வரம்பிற்குட்பட்டதாதலால் மனித அறிவும் ஓர் எல்லைக்குட்பட்டதே. ஆனால் விசுவாசம் நம் உள்ளத்திற்குள் வரும்போது, நம்முடைய அறிவானது சமுத்திரத்தைப் போல அளவில்லாததாக மாறிவிடுகிறது (I கொரி. 2 : 11, 12). ஆயினும், விசுவாசம் நம்மை விட்டுப் போய்விடுமாயின், நம்முடைய ஆவிக்குரிய அறிவு மரித்துவிடும்.

உலகங்களை உண்டாக்கிய தேவனுடைய வார்த்தை நம்மையுங்கூட உருவாக்கிக்கொண்டிருக்கிறது. தேவனுடைய வார்த்தை விசுவாசத்தின் வார்த்தை என்று அழைக்கப்படுகிறது (ரோமர் 10 : 8) - அதற்குச் சிருஷ்டிக்கும் வல்லமை உண்டு. 'உண்டாக்குதல்' என்பதற்கான கிரேக்க வார்த்தை 'சரியாகப் பொருந்தும்படி செய்தல்' என்று பொருள்படும். வேறு வார்த்தைகளில் கூறின், தேவனுடைய வார்த்தையில் ஒரு மனுஷன் கொண்டிருக்கும் விசுவாசமானது அவனைச் சரீரப்பிரகாரமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும், எழுச்சிகள் சம்பந்தமாகவும் சரியாகப் பொருந்தக் கூடியவனாக அதாவது சரியான தகுதியுள்ளவனாக மாற்றுகிறது. '*அவருடைய நாமத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே இவனைப் பெலப்படுத்தினது; அவரால் உண்டாகிய விசுவாசமே இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது*' (அப். 3 : 16).

ஒரு மனிதன் தனக்குத் தேவையான ஆரோக்கியம், சுகம், பணம் போன்ற பூமிக்குரிய தேவைகளுக்காக தேவன் மேல் நம்பிக்கை வைக்கக் கூடாதவனாயிருப்பானென்றால், அவர் தன்னுடைய ஆவிக்குரிய தேவைகளைச் சந்திப்பார் என்பதை எவ்வாறு அவனால் விசுவாசிக்கக் கூடும்?

***ஜனவரி* 26**

'பரிசுத்த பூமி'

"***பேழை அரராத் என்னும் மலைகளின்மேல் தங்கிற்று***" (ஆதி. 8 : 4).

பேழையுடன் கூட நோவா இளைப்பாறும்படி தேவன் அவனுக்கு நியமித்த இடம் அரராத் மலையாகும். 'அரராத்' என்பதற்கு, 'பரிசுத்த பூமி' என்று பொருள். நோவாவைப் பொறுத்த வரை, அவனைப் 'பரிசுத்த பூமி'யாகிய அரராத் மலைக்குக் கொண்டுவருவதற்கென்றே பூமியின் மேல் ஜலப்பிரளயம் அனுப்பப்பட்டது. அது போலவே, பரிசுத்த பர்வதமாகிய சீயோனை நாம் சென்றடையும்படியாக நமக்கு உதவி செய்யும் நோக்குடனேயே உபத்திரவங்கள் நமக்கு அனுமதிக்கப்படுகின்றன.

பேழையைத் திசை திருப்ப சுக்கான் இருக்கவில்லை என்பது வெளிப்படை; எந்தவொரு மனித முயற்சியும் அதை அந்த மலைக்குக் கொண்டுவரவில்லை. பரிசுத்த ஜீவியம் செய்து பரிசுத்த பர்வதத்தை அடையும்படி நமக்கு உதவி செய்வது நம்முடைய மேன்மையோ அல்லது சாமர்த்தியமோ அல்ல; ஆனால் தேவகிருபையே அதற்கு நமக்கு உதவிசெய்கிறது. அதற்கான நிபந்தனை, நோவா பேழைக்குள் நிலைத்திருந்தது போல, நாமும் தேவனில் நிலைத்திருக்க வேண்டும் என்பதே.

'பரிசுத்த பூமி'யை அடைந்த பின்னர், நோவா முழு உலகத்தையும் ஆளுகிறவனாக்கப்பட்டான். மோசேயும் யோசுவாவும் பெரிய தலைவர்களாக மாற்றப்படுமுன், அவர்கள் தேவனுக்கென்று அரும்பெரும் காரியங்களைச் செய்வதற்கு முன், தேவன் அவர்கள் இருவரையும் 'பரிசுத்த பூமிக்குக்' கொண்டுவந்தார். ஆனால் தேவன் கூறும் வரை மோசேயும் யோசுவாவும் தாங்கள் நின்றுகொண்டிருந்த இடம் பரிசுத்த பூமி என்பதை அறியாதவர்களாயிருந்தனர் என்பது ஆச்சரியமான காரியமாகும் (யாத். 3 : 5 ; யோசுவா 5 : 15). இன்றைய ஆவிக்குரிய உலகில் தலைவர்கள் என்று அழைக்கப்படும் பலரும் தாங்கள் ஒரு பரிசுத்த ஜீவியம் செய்வதாகத் தங்களைக் குறித்து எண்ணிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் அந்தோ பரிதாபம்! அவர்களுடைய ஜீவியம் அவர்களைக் குறித்து அவ்விதம் சாட்சி கூறுவதில்லை!

பேழை பரிசுத்த பூமியில் தங்கியபோது, மலைச்சிகரங்கள் காணப்பட்டன (ஆதி. 8 : 5). மலைச் சிகரங்களைக் காண்பது என்பது, நாம் தேவனுடைய பரிசுத்தத்தில் இளைப்பாறக் கற்றுக்கொள்ளும்போது மட்டுமே நமக்குக் கிடைக்கக்கூடிய மிக உன்னதமான ஆவிக்குரிய வெளிப்படுத்தல்கள், அனுபவங்கள் ஆகியவற்றின் ஆழ்ந்த உள்ளான கண்ணோட்டத்தைக் குறிக்கிறது.

நியாயத்தீர்ப்பின் தண்ணீர்கள் கீழே இறங்கி வந்தபோது, நோவா மேலே ஏறிச் சென்றான்; அதன் பிறகு அவன் முழுப் பூமியையும் ஆளும்படியாகக் கீழே இறங்கி வந்தான். அதைப் போலவே, நியாயத்தீர்ப்பு உண்டாகும்போது பரிசுத்தவான்கள் மத்திய ஆகாயத்துக்கு, மேலே ஏறிச் செல்வார்கள். ஏழு வருட உபத்திரவத்துக்குப் பின் அவர்கள் கிறிஸ்துவுடன் ஆயிர வருட அரசாட்சி செய்யும்படியாகப் பூமிக்கு இறங்கி வருவார்கள்.

பரிசுத்தவான்கள் நியாயத்தீர்ப்புக்குத் தப்பி, தம்மோடு இவ்வுலகத்தை ஆளுகை செய்யும்படியாக, கர்த்தர் அவர்களைத் தம்மில் நிலைத்திருக்கும்படியாகவும் 'பரிசுத்த பூமி'யை வந்தடையும்படியாகவும் அழைக்கிறார்.

ஜனவரி 27

பொறாமை என்னும் பிசாசு

"என் கால்கள் தள்ளாடுதலுக்கும், என் அடிகள் சறுக்குதலுக்கும் சற்றே தப்பிற்று. துன்மார்க்கரின் வாழ்வை நான் காண்கையில், வீம்புக் காரராகிய அவர்கள்மேல் பொறாமைகொண்டேன்" (சங். 73 : 2, 3).

பொறாமையின் நிமித்தம் அநேகர் சறுக்கி, உண்மையில் பாதாளக் குழியைச் சென்றடைந்திருக்கிறார்கள். '*அவர்கள் மோசேயின்மேலும், ஆரோனின்மேலும் பொறாமை கொண்டார்கள். பூமி பிளந்து தாத்தானை விழுங்கி, அபிராமின் கூட்டத்தை மூடிப்போட்டது*'; '*அவர்கள் உயிரோடே பாதாளத்தில்* (Sheol) *இறங்கினார்கள்*' (சங். 106 : 16, 17 ; எண். 16 : 33). வேறு வார்த்தைகளில் கூறின், பொறாமையுள்ள ஜனங்கள் பரலோகத்துக்கு மட்டுமல்ல, இப்பூமிக்கும் உபயோகமற்றவர்கள் ஆவர்.

'*கோத்திரப்பிதாக்கள் பொறாமைகொண்டு யோசேப்பை விற்றுப் போட்டார்கள்*' (அப். 7 : 9). நம்மில் பொறாமை இருக்குமாயின், நடை முறையில் நாம் நம்முடைய யோசேப்பாகிய கர்த்தராகிய இயேசுவை விற்றுப்போடுகிறவர்களாயிருக்கிறோம்; நாம் அவரைச் சிலுவையிலறையப் படும்படி ஒப்புக்கொடுக்கிறோம். '*பொறாமையினாலே பிரதான ஆசாரி யர்கள் அவரை ஒப்புக்கொடுத்தார்கள்*' (மாற்கு 15 : 9).

'*விசுவாசியாத யூதர்கள் பொறாமைகொண்டு கூட்டங்கூடி, பட்டணத்தில் அமளியுண்டாக்கினார்கள்*' (அப். 17 : 5 -Eng.). நாம் பொறாமை கொள்ளுவோமாயின், நாம் தேவனுடைய கிரியையை அழித்து, கலகம் உண்டுபண்ணுகிறவர்களாக மாறிவிடுகிறோம்; நாம் நம்முடைய விசுவாசத்தை இழந்தவர்களாயிருப்பதுடன், மற்றவர்களுடைய விசு வாசத்தை அழிக்கவும் பிரயாசப்படுவோம். ஆனால் கர்த்தராகிய இயேசு பின்வைத்துச் சென்ற நல்ல மாதிரியைக் கவனித்துப் பாருங்கள் - "*என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்*" (யோவான் 14 : 12). கர்த்தராகிய இயேசு தம்முடைய சீஷர்கள் தம்மை விட அதிக மாகப் பிரயோஜனமுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்றும், தாம் செய்த கிரியைகளைக் காட்டிலும் பெரிய கிரியைகளைச் செய்ய வேண்டு மென்றும் விரும்பினார். சர்வவல்லமையுள்ள தேவனாகிய இயேசு, மண்ணான மனுஷனை அந்த அளவுக்கு உயர்த்த விரும்பினால், மற்றவர்கள், குறிப்பாக நம்மைக் காட்டிலும் அனுபவத்தில் குறைந்தவர் களும் இளையவர்களும் நம்மைக் காட்டிலும் அதிகமாக கனம்பண்ணப்

பட்டு, ஆசீர்வதிக்கப்படும்போது அதினிமித்தம் நாம் எவ்வளவதிகமாகத் தேவனுக்குள் களிகூர்ந்து அவரைத் துதிக்க வேண்டும்!

அப். பவுலில் இருந்த அருமையான ஆவியைப் பாருங்கள்: "*அவர் (கர்த்தராகிய இயேசுகிறிஸ்து) மூலமாய் உங்களுக்கு அளிக்கப்பட்ட தேவகிருபைக்காக, நான் உங்களைக் குறித்து எப்பொழுதும் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்*" (I கொரி. 1 : 6). நாம் பெற்றுக்கொண்ட கிருபைக்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்துவது எளிது. ஆனால் மற்றவர்களுக்கு அருளப்பட்ட கிருபைக்காக எப்பொழுதும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவதற்கு நமக்குப் பெரிதான கிருபையும் தாழ்மையும் அவசிய மாகும்.

அருமையான தேவபிள்ளையே, அருவருக்கப்படத்தக்க, பொல் லாத பொறாமையின் ஆவி உன்னுடைய ஆவியில் கிரியை செய்கிறதா என்று உன்னை நீயே ஆராய்ந்து பார்த்துக்கொள்வாயாக.

ஜனவரி 28

உன் தேவனோடு ஒரு உடன்படிக்கை செய்துகொள்

'அந்த வில் மேகத்தில் தோன்றும். அப்பொழுது எல்லா மாம்சஜீவன் களையும் அழிக்க இனி ஜலமானது பிரளயமாய்ப் பெருகாதபடிக்கு என் உடன்படிக்கையை நினைவுகூருவேன்' (ஆதி. 9 : 14, 15).

ஒருவரது கடந்த காலத்தின் எல்லாப் பாவங்களையும் தேவன் மன்னித்து மறந்துவிட்டார் என்பதற்கு வானவில் ஓர் அடையாளமா யிருக்கிறது. உங்களுடைய தோல்விகளுக்காகவும் பாவங்களுக்காகவும் நீங்கள் மெய்யாக மனஸ்தாபப்பட்ட பின்னர், நீங்கள் தேவனோடு ஒரு உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் - ஏனெனில், தேவன் உங்களை மன்னித்து, நீங்கள் அறிக்கை செய்த பாவங்களையெல்லாம் தம்முடைய முதுகுக்குப் பின்னாக எறிந்துவிட்டார் என்ற உறுதியான நிச்சயமுடைய வர்களாய் நீங்கள் இருக்கக் கூடும்; ஆயினும் நீங்கள் தேவனோடு ஒரு உடன்படிக்கை செய்துகொள்ளாவிடில், நீங்கள் மனந்திரும்பிய பின் அதிக தாமதமின்றியே அதே தோல்விகளை மறுபடியும் சந்திப்பீர்கள்.

அநேகர் தாங்கள் செய்த பாவங்களைக் குறித்து மனஸ்தாபப்படு கிறார்கள். எனினும் அவர்கள் கர்த்தர் அவற்றை மன்னித்துவிட்டார் என்றும், தங்களுக்கு முன்பாக ஜெயம் உள்ளது என்றும் விசுவாசிப்ப

தில்லை. எனவே அவர்கள் கர்த்தரோடு ஒரு உடன்படிக்கைக்குள் பிரவேசிப்பதில்லை. இன்று கர்த்தர் உங்களோடு பேசிக்கொண்டிருக்கிறார். கர்த்தரோடு ஒரு புதிய உடன்படிக்கைக்குள் பிரவேசியுங்கள். உங்களுடைய கடந்த காலத் தோல்விகள், தவறுகள் அனைத்தையும் பிசாசானவன் உங்களுக்கு முன்பாகத் திரும்பத் திரும்பக் கொண்டுவர அவனுக்கு இடங்கொடாதீர்கள். ஜெயம் உங்களுடையது என்பது மிகவும் நிச்சயமானது. தேவனோடு நீங்கள் செய்திருக்கும் உடன்படிக்கையை உங்களுக்கு முன்பாக வைத்துக்கொண்டு ஜெயத்திலிருந்து ஜெயத்துக்குக் கடந்து செல்லுங்கள்.

வானவில் ஒரு வளைவைப் (arch) போல காணப்படுகிறது. நீங்கள் இந்த வளைவின் கீழ் அதாவது உடன்படிக்கையின் கீழ் இருப்பீர்களென்றால், அதே உடன்படிக்கை அல்லது வளைவானது சாத்தானுடைய எல்லாத் தந்திரங்களுக்கும் நீங்கலாக உங்களை மறைத்துப் பாதுகாத்துக் கொள்ளும். ஆகவே அருமையான தேவபிள்ளையே, நாம் தேவனோடு செய்த உடன்படிக்கையை முறித்துப்போடும்போது பாதுகாப்பற்ற நிலையிலாகிறோம் என்பதையும், நாம் பிசாசின் தாக்குதல்களுக்கு நீங்கலாக மறைக்கப்படாமல், அவை அனைத்திற்கும் இரையாகக் கூடியவர்களாகிவிடுகிறோம் என்பதையும் நினைவிற்கொள்வாயாக. 'அவர்கள் என் உடன்படிக்கையை மீறினபடியினால், கர்த்தருடைய வீட்டின்மேல் சத்துரு கழுகைப்போல் பறந்துவருகிறான்' (ஓசியா 8 : 1).

ஜனவரி 29

சாவு ஓர் ஆதாயமே!

"*கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்*" (பிலி. 1 : 21).

இங்கு, பெரும்பாலும் எல்லா மனுஷரும் நஷ்டமென்று கருதும் ஒரு காரியத்தை அப். பவுல் இலாபமாகக் கருதுகிறார். பொதுவாக, ஒரு பரிசுத்தவானோ அல்லது ஒரு நல்ல மனிதனோ மரிக்கும்போது, ஜனங்கள் அதை ஒரு இழப்பாகக் கருதுகிறார்கள். ஆனால் அப். பவுல் தன்னுடைய ஆவிக்குரிய கண்களின் மூலமாக, சாவு என்பதைத் தனக்கும், பரலோகத்துக்கும், மகிமையடைந்த பரிசுத்தவான்கள் அனைவருக்கும் ஒரு ஆதாயமாகக் காண்கிறார். எனவே நமக்குங்கூட அது அவ்விதமே இருக்கிறது.

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" என்று அப். பவுல் கூறுகிறார். ஆனால் சிலருக்கு இது முற்றிலும் மாறானதாயிருக்கிறது: 'சுயம் எனக்கு ஜீவன், சாவு எனக்கு இழப்பு!' என்பதே அவர்களது அறிக்கை

யாயிருக்கிறது. அவர்களுடைய பூமிக்குரிய ஐசுவரியங்கள், உடைமைகள், இன்பமான கேளிக்கைகள், பேராவல்கள், பேர், புகழ் ஆகியவையெல்லாம் அவர்களது மரணத்துடன் என்றென்றைக்குமாக அழிந்துபோய்விடும். தங்களுடைய மரணத்துக்குப் பின் தங்களுக்கு ஏதேனும் நம்பிக்கை உள்ளதா அல்லது சந்தோஷப்படுவதற்கு ஏற்றது என்று கூறத்தக்க ஏதேனும் உண்டா என்று அவர்கள் அறியாதிருக்கிறார்கள்.

சாவு நமக்கு ஆதாயமாக மாற வேண்டுமாயின், அப். பவுல் செய்தது போல நாம் நஷ்டமென்று எண்ண வேண்டிய காரியங்கள் உள்ளன. '*எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளை நஷ்டமென்று எண்ணினேன்*' (பிலி. 3 : 7) என்று அப். பவுல் கூறுகிறார். இதற்கு முந்தின இரண்டு வசனங்கள், அதாவது ஐந்தாம், ஆறாம் வசனங்கள் அவர் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணின ஏழு காரியங்களைக் குறித்துக் கூறுகின்றன. ஒரு அர்த்தத்தில், இவ்வேழு காரியங்களும் மாம்சத்தில் நமக்கிருக்கும் மேன்மைபாராட்டல்களைக் குறிக்கின்றன. இவ்வுலகத்தின் காரியங்களை வேண்டாமென்று வெறுத்து விட்டுவிட்டு, கிறிஸ்துவுக்காக ஜீவிக்கும் பரிசுத்தவான்கள் மட்டுமே, '*மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது. மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?*' என்று ஜெயத்தொனி முழக்க முடியும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தைப் பற்றிய நம்முடைய மேன்மைபாராட்டல் உட்பட, நாம் மேன்மைபாராட்டும் காரியங்களனைத்தும் முடிவில் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்துக்கு ஒரு பேரிழப்பை அல்லது பேரழிவையே உண்டாக்கிவிடும்.

நீங்கள் உங்களுக்காகவே ஜீவிப்பீர்களென்றால் 'மரணம்' என்ற வார்த்தையைக் கேட்கும்போதே அது உங்களுக்குப் பயம், கவலை, துக்கம், வியாகுலம், வேதனை ஆகியவற்றைக் கொடுக்கும். அருமையான தேவபிள்ளையே, அப். பவுலுடன் கூட சேர்ந்து நீயும், "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" என்று உன்னுடைய இருதயத்திலிருந்து கூறக்கூடிய ஆவிக்குரிய நிலைவரத்தில் இருக்கிறாயா? அல்லது மரணத்தைக் கண்டு நீ பயப்படுகிறாயா?

ஜனவரி 30

பிரச்சினை உன்னுடைய இருதயமே!

'*அதின் ஜலங்கள் கொந்தளித்துக் கலங்கி*' (சங். 46 : 3-Eng.).

சிலர் ஏன் எப்பொழுதுமே கூக்குரலிட்டு, கோபப்பட்டு, ஆத்திர மடைகிறார்கள் என்று நாம் வியக்கக் கூடும். மேற்கூறப்பட்டுள்ள வசனத்

திலிருந்து, *கொந்தளிக்கிற* அல்லது கோபப்படுகிற ஜனங்கள் *கலக்க முள்ளவர்கள்* என்று நாம் விளங்கிக்கொள்கிறோம். உங்கள் இருதயம் கலங்கியிருக்கும்போது, நீங்கள் தேவையில்லாமல் கூக்குரலிட்டு, மிகச் சிறிய காரியங்களுக்காகவுங்கூட கலங்குகிறவர்களாயிருப்பீர்கள். "*துன்மார்க்கரோ கொந்தளிக்கும் கடலைப்போலிருக்கிறார்கள்; அது அமர்ந்திருக்கக் கூடாமல், அதின் ஜலங்கள் சேற்றையும் அழுக்கையும் கரையில் ஒதுக்குகிறது. துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று என் தேவன் சொல்லுகிறார்*" (ஏசாயா 57 : 20, 21). ஆகவே உங்களுடைய இருதயம் கொந்தளிக்கும் கடலைப் போலிருந்து, அதில் சமாதானம் இல்லாம லிருக்கும்போது, நீங்கள் கூக்குரலிடுவது மட்டுமல்லாமல், மற்றவர்கள் மேல் 'சேற்றையும் அழுக்கையும்' வாரியிறைத்துக்கொண்டும் இருப்பீர்கள். வேறு வார்த்தைகளில் கூறின், கலங்கியிருக்கும் ஒரு மனிதன் தன்னைச் சுற்றி நடப்பவையெல்லாவற்றிற்கும் மற்றவர்களையே குற்றஞ்சாட்டிக் கொண்டிருப்பான்.

தேவபிள்ளையே, உன்னுடைய பிரச்சினைகளுக்காக நீ மற்றவர் களைக் குற்றப்படுத்திக்கொண்டிருக்கிறாயா? அப்படியெனில், அதற்கான காரணம் உன்னுடைய இருதயம் கர்த்தராகிய இயேசுவில் இளைப்பாறா திருப்பதேயாகும். "*சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்து, மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிருப்பார்கள்*" (சங். 37 : 11). சாந்தகுண முள்ள ஒரு மனிதன், தான் எப்படிப்பட்ட பிரச்சினையை அல்லது சோதனையைச் சந்தித்தாலும், அமரிக்கையுள்ளவனாகவும் சமாதானமுள்ள வனாகவும் இளைப்பாறுதலுள்ளவனாகவும் இருப்பான்.

உன் ஜீவியத்தில் வரும் சோதனைகளையும் கலக்கங்களையும் நீ எவ்வாறு எதிர்கொள்ளுகிறாய்? நீ சந்திக்கும் பிரச்சினைகளுக்காக நீ அடிக்கடி பிறரைக் குறைகூறிக்கொண்டிருக்கிறாயா? சிறிய காரியங்களைக் குறித்துங்கூட நீ கலக்கமடைகிறாயா? இருதயத்தின் பிரச்சினையே நம் பிரச்சினைகளின் மையமாகும் என்பது உண்மையான கூற்றாகும். Jig saw puzzle என்று அழைக்கப்படுகிற சிறுவருக்கான விளையாட்டு ஒன்று உண்டு. அதில் பல கோணங்களில் வெட்டிப் போடப்பட்டிருக்கும் ஒரு படத்தின் துண்டுகள் அதினதின் இடத்தில் செவ்வனே பொருத்தப்பட்டு, முடிவில் அர்த்தமுள்ள ஒரு படமாக வடிவமைக்கப்படும். அதைப் போன்றே, நம்முடைய இருதயம் தேவனோடு செம்மையானதாயிருக்குமாயின், நம்முடைய ஜீவியத்தில் சம்பவிக்கும் காரியங்களனைத்தும் எவ்வித பிரச்சினையுமின்றி அதனதன் இடங்களில் சரியாகப் பொருந்தக் கூடியவையாயிருக்கும்.

ஜனவரி 31

பிசாசுக்கு இடங்கொடாதிருங்கள்

"எவனுக்கு நீங்கள் மன்னிக்கிறீர்களோ, அவனுக்கு நானும் மன்னிக் கிறேன்; மேலும் எதை நான் மன்னித்திருக்கிறேனோ, அதை உங்கள் நிமித்தம் கிறிஸ்துவினுடைய சந்நிதானத்திலே மன்னித்திருக்கிறேன். சாத்தானாலே நாம் மோசம்போகாதபடிக்கு அப்படிச் செய்தேன்; அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே" (II கொரி. 2 : 10, 11).

ஸாண்டி (Sandy) என்னும் பேர்கொண்ட ஒரு இளம்பெண், தான் சிறுமியாயிருந்தபோது, தன் தகப்பனார் தன் தாயாரை இரக்கமின்றி அடிக் கிறதைக் கண்ணுற்றிருந்ததினிமித்தம் அவர் மீது அதிகமான வெறுப் புணர்வுள்ளவளாயிருந்தாள். அவளுடைய இருதயத்தில் நாளுக்குநாள் இக்கசப்புணர்வு வளர்ந்துவரவே, அவள் தன்னுடைய வாலிப வயதை அடைந்தபோது வீட்டை விட்டு வெளியேறினாள். ஒரு நாள் அவள் தொலைபேசியில் தன்னுடைய சிநேகிதியோடு பேசிக்கொண்டிருக்கையில் தன்னுடைய தகப்பனைப் பற்றி குறிப்பிட வேண்டிய சந்தர்ப்பம் அவளுக்கு நேரிட்டபோது, 'நான் என் தகப்பனாரை வெறுக்கிறேன்!' என்று கடும் வெறுப்புடன் கூறினாள். அவ்வார்த்தைகளே தொலைபேசியின் மறுமுனையிலிருந்து அவளுடைய சிநேகிதி கேட்ட கடைசி வார்த்தை களாயிருந்தன. ஸாண்டிக்கு என்ன சம்பவித்தது என்று அறியும்படி பதட்டத்துடன் அத்தோழி விசாரித்துப்பார்த்தபோது, ஸாண்டி, 'நான் என் தகப்பனாரை வெறுக்கிறேன்' என்று கூறிய அந்தக்ஷணத்தில்தானே பிசாசுகள் அவளுக்குள் புகுந்ததினிமித்தம் அவள் தரையிலே விழுந்து வேதனையினால் புரண்டுகொண்டிருந்ததாக அறிந்து, அவள் அதிர்ச்சி யடைந்தாள். முடிவாக, தேவ ஆவியைப் பெற்ற தேவ ஊழியர்கள் ஸாண்டிக்காக ஜெபித்து உதவி செய்ததினிமித்தம், அவளிலிருந்த இருபத்தொன்பது பிசாசுகள் அவளை விட்டு வெளியேறின. பின்பு அவள் கிறிஸ்துவுக்குள் முற்றிலும் புதிய சிருஷ்டியாக மாற்றப்பட்டாள்.

தன் தகப்பன் மேல் தனக்கிருந்த சகல பகையுணர்வையுங்குறித்தும், அவருடைய உணவில் விஷம் வைத்து அவரைக் கொல்லும்படி தான் திட்டமிட்டிருந்ததைக் குறித்தும் தன்னுடைய தகப்பனாரிடம் ஸாண்டி உத்தம இருதயத்துடன் அறிக்கை செய்தாள். தன்னுடைய மகளின் மனப்பான்மையில் ஏற்பட்ட மாறுதல் அத்தகப்பனாரை உண்மையாகவே தொட்டது; அவர்கள் இருவருக்குமிடையே தேவ நாம மகிமைக்கென்று முன் ஒருபோதும் இல்லாத வகையில் நல்லுறவு மலர்ந்தது.

ஆம், தேவனுடைய வார்த்தை உண்மையானது. நாம் மற்றவர்களை நம்முடைய இருதயத்திலிருந்து மன்னியாவிடில், சாத்தான் அதைத் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு நமக்கு விரோதமாகக் கிரியை செய்வான். ஸாண்டி தன் தகப்பனாரை மன்னியாதிருந்ததினிமித்தம் தன்னுடைய இருதயத்தில் இருபத்தொன்பது பிசாசுகளுக்கு இடங்கொடுத்துக்கொண்டிருந்தது போல, உங்களுக்குத் தீங்கிழைப்பவர்களை நீங்கள் மன்னிக்காவிட்டால், நாளடைவில் நீங்கள் அநேக பிசாசுகளால் பீடிக்கப்பட நேரிடலாம். ஆகவே நீங்கள் பிசாசுக்கு இடங்கொடாதிருங்கள்; உங்கள் சத்துருக்களை மனப்பூர்வமாய் மன்னித்து நேசியுங்கள். கிறிஸ்துவைப் போல் மன்னிப்பதில் மாபெரும் ஆசீர்வாதம் அடங்கியுள்ளது.

பெப்ரவரி 1

முடிவான கிருபை

'இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபைக்காக முடிவுபரியந்தம் நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்'
(I பேதுரு 1 : 13 -Eng.).

கர்த்தராகிய இயேசு ஒரு நபருடைய ஜீவியத்துக்குள் வரும்போது, கிருபையும் அவரோடுகூடச் சேர்ந்து வருகிறது. எவ்வளவதிகமாகக் கர்த்தராகிய இயேசு நம்முடைய ஜீவியத்தில் இருக்கிறாரோ, அவ்வளவதிகமான கிருபையும் நம்மில் இருக்கும். கிறிஸ்துவைப் பற்றிய ஒவ்வொரு வெளிப்படுத்தலும் நமக்குக் கிருபையை அளிக்கிறது. 'கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்தல்' என்பது கிறிஸ்துவின் சுபாவத்தைப் பற்றிய வெளிப்படுத்தல் என்று பொருள்படும். புத்தகங்கள், வேதபாடங்கள், பிரசங்கங்கள் போன்றவற்றின் வாயிலாக நாம் கிறிஸ்துவைப் பற்றி அறியவரலாம்; ஆனால் தேவனோடு நாம் நெருங்கி நடக்கும்போது மட்டுமே நம்மால் கிறிஸ்துவை அறிந்துகொள்ள முடியும். அவருடைய சுபாவத்தைப் பற்றி நமக்கிருக்கும் வெளிப்படுத்தலைப் பொறுத்து நாம் பெற்றுக்கொள்ளும் விசேஷமான கிருபை ஒன்று உண்டு.

'*கிருபைக்காக முடிவுபரியந்தம் நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்*' - இங்கு நம்பிக்கை கிருபையோடு சம்பந்தப்படுத்திக் கூறப்பட்டுள்ளது. நாம் கர்த்தரைச் சந்திப்போம் என்ற ஆசீர்வதிக்கப்பட்ட நம்பிக்கை நமக்குக் கிருபையினால் உண்டாயிருக்கிறது. கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படுதலைப் பற்றிய நம்பிக்கை இல்லாத ஒரு நபரில் கிருபையுங்கூட இராது.

கர்த்தராகிய இயேசு தாம் மத்திய ஆகாயத்தில் வரும்போது கொண்டுவரும் கிருபை ஒன்று உண்டு. அந்தக் கிருபை நம்முடைய ஜீவியத்தில் செய்வது என்ன? அது நம்முடைய அற்பமான சரீரத்தை ஒரு மகிமையான சரீரமாக மறுரூபப்படுத்தும். இக்கிருபையை 'முடிவான கிருபை' என்று நாம் அழைக்கலாம். நாம் கிருபையில் வளருவோமாயின், முடிவில் தேவனுடைய கிருபையானது கிறிஸ்துவின் இரகசிய வருகையில் நம் சரீரத்தை அவருடைய மகிமையுள்ள சரீரத்துக்கொப்பாக மறுரூபப்படுத்தும்.

பெப்ரவரி 2

ஒரு தேநீர்க்கோப்பைக்குள் உண்டாகும் புயல்

'தண்ணீர்களைத் தமது கைப்பிடியால் அளந்தவர் (தேவன்) யார்?'
(ஏசாயா 40 : 12).

சோதனைகளின் வழியாகக் கடந்துசென்றுகொண்டிருக்கிறவர்களை இவ்வசனம் மிக அதிகமாக ஊக்குவிப்பதாயிருக்கிறது. ஏசாயா 43 : 2 -இல், "*நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை*" என்று கூறப்பட்டிருக்கிற வண்ணமாக, சோதனைகள், தேவனுடைய வசனத்தில் தண்ணீர்கள், புயல்கள், வெள்ளங்கள் போன்றவற்றுக்கு ஒப்பிடப்பட்டுள்ளன. உலகம் முழுவதிலுமுள்ள தண்ணீர்கள் எல்லாம் நம்முடைய சர்வவல்ல தேவனின் ஒரு கரத்தின் கைப்பிடிக்குள் அடங்குமாயின், சமுத்திரத்திலுள்ள தண்ணீரில் ஒரு சொட்டுத் தண்ணீரைப் போல மாத்திரம் இருக்கும் நம்முடைய சோதனைகள் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தை எவ்விதத்திலும் பாதிக்கவோ, அழிக்கவோ முடியாது. நம்முடைய சோதனைகளெல்லாம் ஒரு தேநீர்க்கோப்பைக்குள் உண்டாகும் புயல் போன்றவையே!

அருமையான தேவபிள்ளையே, உன்னை ஒரு பலத்த கரம் தாங்கிக்கொண்டிருக்கிறது என்பதை நீ ஒருபோதும் மறந்துவிடாதே - "*என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்*" (ஏசாயா 41 : 10). நம்முடைய அன்புள்ள கர்த்தரின் கரங்கள் மிகவும் விஸ்தாரமானவையாகவும் வல்லமையுள்ளவையாகவும் இருப்பதால், எந்தப் பிசாசும் நம்மை அவருடைய கரங்களினின்று பறித்துக்கொள்ள முடியாது. நாம் நம்முடைய தாழ்வான நிலையைப் பார்ப்பதை விட்டுவிட்டு, நம்முடைய தேவனுடைய மேன்மையை நோக்கிப் பார்ப்போமாக; நாம் நம்முடைய பெலவீனத்தைப் பார்ப்பதை விட்டுவிட்டு, நம்முடைய தேவனுடைய பெலத்தை நோக்கிப்

பார்ப்போமாக; நாம் நம்முடைய குறைபாடுகளையும் இயலாமையையும் பார்ப்பதை விட்டுவிட்டு, தேவன் நமக்காக வைத்திருக்கும் எல்லை யில்லாக் கிருபையை நோக்கிப்பார்ப்போமாக.

'*மகத்துவமுள்ளவரும் பெரியவரும் அதிசயமானவருமான ஒரு தேவன் நமக்கு உண்டு*' என்று ஒரு தேவமனிதன் கவி இயற்றியிருக்கிறார். அந்தத் தேவன் நம்முடைய ஜீவியத்தையும் அதிசயமானதாக மாற்றுகிறார்.

பெப்ரவரி 3

ஆசீர்வதிக்கப்பட்ட பெலவீனம்

"***அவர்: என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்***" (II கொரி. 12 : 9).

அப். பவுல், தான் பெலவீனத்தில் மேன்மைபாராட்டுவதாகக் கூறும் இந்தப் பெலவீனம்தான் என்ன? அது ஏதாகிலும் ஒரு வியாதியை அல்லது சரீர பெலவீனத்தைக் குறிக்கிறதா? அல்லது அது ஏதாகிலும் ஒரு ஆவிக் குரிய பெலவீனத்தைக் குறிக்கிறதா? இல்லை. அது இவ்விரண்டையுமே குறிப்பதாக இருக்க முடியாது. ஏனெனில், தேவ வல்லமையை யாதொரு வர் மேலும் அமரச் செய்ய இவற்றினால் முடியாது. அப்படியெனில், இந்தப் பெலவீனம்தான் என்ன? தேவசித்தம் மட்டுமே செய்யும்படி நாம் நம்மைப் பிரதிஷ்டை செய்யும்போது, நம்மை நம்முடைய சுயசித்தத்தைச் செய்யத் திராணியற்றவர்களாக்கும் ஒரு தனித்தன்மை வாய்ந்ததும் ஆசீர் வதிக்கப்பட்டதுமான 'பெலவீனத்தை' நாம் பெற்றுக்கொள்ளுகிறோம். அப்போது நம்முடைய சுயசித்தம் செய்ய நமக்குச் சற்றும் பெலன் இராது. இந்தப் பெலவீனம் நம்மை மகிமையிலிருந்து மகிமைக்கு எடுத்துச் செல்லுமாதலால், இதை 'மகிமையான பெலவீனம்' என்று நாம் அழைக்க லாம். '*அவர் பலவீனத்தால் சிலுவையில் அறையப்பட்டார்*' (II கொரி. 13 : 4). கிறிஸ்து தமது சொந்த சித்தம் செய்யப் பெலனற்றவராயிருந்தார் என்பதே இதன் பொருளாகும்.

கர்த்தராகிய இயேசு, '*நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்ய முடியாது*' (யோவான் 5 : 30 -Eng.) என்று கூறினார். சிலர் தங்கள் சுயசித்தம் செய்வதற்குப் பலவான்களாயிருக்கின்றனர். அந்த வல்லவர்களை அவர் அழைக்கவில்லை (I கொரி. 1 : 26). கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

நாம் நம்மைப் பிரதிஷ்டை செய்து, நம்முடைய சுய சித்தத்தைச் செய்யாமலிருக்கத் தீர்மானிக்கும்போது, நாம் பூரணமான தேவ சித்தம் செய்யத்தக்கதாக தேவகிருபையானது நம்முடைய 'பெலவீனமான' சரீரத்தின் மேல் ஒரு தெய்வீக பெலத்தோடு இறங்கிவரும்.

அருமையான வாசகரே, கர்த்தராகிய இயேசுவிலும், அப். பவுல், மற்றும் அநேக பரிசுத்தவான்களிலும் இருந்த இந்த ஆசீர்வதிக்கப்பட்ட பெலவீனம் உம்மில் இருக்கிறதா? இல்லையெனில், தேவ பெலன் உம்மில் பூரணமாய் விளங்கி, அதினிமித்தம் தேவசித்தம் செய்யத் தேவையான கிருபை உமக்கருளப்படும்படியாக, உம்முடைய ஜீவியத்தின் எஞ்சி யிருக்கும் நாட்களெல்லாம் தேவ சித்தத்தை மட்டுமே செய்ய நீர் ஏன் உம்மை இப்போதுதானே பிரதிஷ்டை செய்யக் கூடாது?

"*நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்*" (II கொரி. 12 : 10) - நாம் நம்முடைய சுயசித்தம் செய்யப் பலவீனமா யிருக்கும்போது தேவசித்தம் செய்யப் பலமுள்ளவர்களாயிருக்கிறோம் என்பதே இதன் பொருளாகும்.

பெப்ரவரி 4

முதலாவது 'வானத்தைச்' சிருஷ்டிப்பீர்!

'***ஆதியிலே தேவன் வானத்தைச் சிருஷ்டித்தார்***' (ஆதி. 1 : 1).

தேவனுக்கு முன்னரோ அல்லது தேவன் இன்றியோ யாதொன்றும் இருந்ததாக நாம் காண்பதில்லை. உண்மையில், தேவன் இன்றி ஒன்றுமே இருக்க முடியாது. மெய்யான ரீதியில், தேவனற்ற அல்லது தேவனிட மிருந்து வராத மகிழ்ச்சி, செல்வம், சுகம் அல்லது சந்தோஷம் போன்ற யாதொன்றும் ஒருபோதும் ஒரு மெய்ப்பொருளாக இருக்க முடியாது என்பது நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். தேவன் நித்தியமான வராயிருப்பதால், அவரிடத்திலிருந்து வருவது எதுவாயினும், அது நித்தியத்தின் சுவையுடையதாகவே இருக்கும்.

தேவனுடைய முதலாவது சிருஷ்டிப்பு 'வானமே' (பரலோகம்) அன்றி வேறொன்றும் அல்ல. அதற்குப் பின்புதான், எல்லா அம்சங் களிலும் இன்பமானவையும் பூரணமானவையுமான மற்ற சிருஷ்டிகள் அனைத்தும் உண்டாக்கப்பட்டதாக நாம் காண்கிறோம். இது, முதல்முத லாகப் பரலோகம் நம்முடைய மனதிலும் உள்ளத்திலும் இல்லத்திலும் - எல்லா இடங்களிலும் சிருஷ்டிக்கப்பட வேண்டும் என்னும் முக்கியமான

உண்மையை நமக்குப் போதிக்கிறது. அப்பொழுது நம்முடைய ஜீவியத்தில் சகலமும் செம்மையாகவும் பூரணமாகவும் இருக்கும்.

தேவன் முதலாவது செய்தது 'சிருஷ்டித்தலே' அன்றி, சீர்திருத்துதலோ அல்லது பழுதுபார்த்தலோ அல்ல. ஒரு பாவியின் ஜீவியத்திலுங்கூட தேவன் செய்யும் முதலாவது கிரியை, ஒரு புதிய இருதயத்தையும் ஒரு புதிய மனதையும் சிருஷ்டித்தலாயிருக்கிறது - "*இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்*".

முதலாவது வானம், பின்பு பூமி என்னும் தேவனுடைய திட்டம் இன்னமும் மாறாததாகவே இருக்கிறது. "*முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் (பரலோகத்துக்குரிய காரியங்கள்) தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் (பூமிக்குரிய காரியங்கள்) உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்*" (மத். 6 : 33).

பெப்ரவரி 5

விசுவாசத்தினாலே 'புறப்பட்டுப்போனான்'!

"***விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்***" (எபி. 11 : 8).

விசுவாசத்தினாலே ஆபேல் ஒரு இரத்தசாட்சியாக மரித்து, பூமியின் தாழ்விடங்களுக்கு ***இறங்கிச் சென்றான்***. விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்குப் பரலோகத்துக்கு, ***மேலே ஏறிப்போனான்***. விசுவாசத்தினாலே நோவா பேழைக்கு ***உள்ளே பிரவேசித்தான்***. விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல், தன் தேசத்தை விட்டு ***வெளியே புறப்பட்டுப் போனான்***.

'*விசுவாசத்தினாலே கீழ்ப்படிந்தான்*' - கீழ்ப்படிதலுக்கு மிகப் பெரிய தூண்டுகோலாயிருப்பது விசுவாசமாகும். கீழ்ப்படியாமையானது சந்தேகம், அவிசுவாசம் ஆகியவற்றின் தெளிவான அறிகுறி ஆகும். வயது சென்ற வர்களின் கருத்துக்களும் எண்ணங்களும் அவர்களுடைய கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைமுறையிலேயே ஸ்திரமாகப் பதிந்துவிடுவதால், கீழ்ப்படிதல் என்பது குறிப்பாக அப்படிப்பட்டவர்களுக்கு மிகவும் கடினமானதாக இருக்கும் என்பதைத்

தயவாகக் கவனத்திற்கொள்ளுங்கள். தங்கள் ஊழியத்தினின்று ஓய்வுபெற்று, சொந்தத் தேசத்தில் மரிக்கும்படி தங்கள் தாயகம் திரும்பும் நவீன காலத்தின் சில மிஷனரிமார்களைப் போலல்லாது, ஆபிரகாம் தன்னைத் தேவன் அனுப்பிய தேசத்துக்குச் சுவிசேஷத்துடன் புறப்பட்டுச் சென்று அங்கேயே மரித்த முதல் மிஷனரி ஆவான்.

'*விசுவாசத்தினாலே ஆபிரகாம் போகும்படி அழைக்கப்பட்டான்*' - தான் *எங்கு* செல்லுகிறான் என்பதை அவன் அறியாதிருந்தபோதிலும், தான் *யாரோடு* செல்லுகிறான் என்பதை அவன் அறிந்திருந்தான். விசுவாசத்தினாலே ஆபிரகாம் சத்தியத்தினிமித்தம் தன்னுடைய தேசம், ஜனம், வீடு போன்றவற்றினின்று வேறுபிரிக்கப்பட்டிருந்தான். சத்தியத்தினிமித்தமாக நமக்குங்கூட ஒரு வேறுபிரிதல் அவசியமாகும். தேவனுடைய பிள்ளைகளாயிருக்கும்படி அழைக்கப்பட்டிருக்கும் சிலர் மெய்யான விசுவாசம் அற்றவர்களாயிருப்பதினாலேயே சில சமயங்களில் உலக ஜனங்களோடு கலந்து, உலகத்துக்கு ஒத்த வேஷம் தரித்துக்கொள்ளுகிறார்கள்.

பெப்ரவரி 6

விதைக்கப்பட்ட வெளிச்சம்

"***நீதிமானுக்காக வெளிச்சமும், செம்மையான இருதயத்தாருக்காக மகிழ்ச்சியும் விதைக்கப்பட்டிருக்கிறது***" (சங். 97 : 11).

நீதிமானுக்காக வெளிச்சம் "விதைக்கப்பட்டிருக்கிறது". 'விதைக்கப்பட்ட வெளிச்சத்துக்கும்', 'பிரகாசிக்கிற வெளிச்சத்துக்கும்' இடையே உள்ள வித்தியாசம் யாது? விதைக்கப்பட்ட ஒன்று, ஒரு விதையைப் போல, தான் விதைக்கப்பட்ட அந்தச் சமயத்தில் புதைக்கப்பட்டதாகவும், மரித்தது போலவும் காணப்படுகிறது. வேறு வார்த்தைகளில் கூறின், அந்த நேரத்தில் யாதொரு வெளிச்சத்தையும் நீங்கள் காணக்கூடாமலிருக்கக் கூடும். அதைப் போலவே மகிழ்ச்சியுங்கூட விதைக்கப்பட்டு காணப்படாமலிருக்கிறது.

தேவபிள்ளையே, வெளிச்சத்துக்குப் பதிலாக இருளையும், மகிழ்ச்சிக்குப் பதிலாக துக்கத்தையும் பாடுகளையும் மட்டுமே காணக்கூடிய ஒரு பாதையிலூடாக நீ கடந்து செல்லும்படி ஒருவேளை தேவன் தற்போது உனக்கு அனுமதித்துக்கொண்டிருக்கக் கூடும். திடன்கொள்! "*உங்களில் எவன் கர்த்தருக்குப் பயந்து, அவருடைய தாசனின் சொல்லைக் கேட்டு, தனக்கு வெளிச்சமில்லாததினால் இருட்டிலே நடக்கிறானோ, அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி, தன் தேவனைச் சார்ந்துகொள்ளக்கடவன்*"

(ஏசாயா 50 : 10). ஆம், நீ, 'நான் தேவனுக்கும், என் மேல் உத்தரவாத முள்ளவர்களாக வைக்கப்பட்டிருக்கும் தேவ ஊழியருக்கும் கீழ்ப்படிந்து நடந்துகொண்டிருந்தும், ஏன் இந்த இருளினூடாகக் கடந்துசென்று கொண்டிருக்கிறேன்? எனக்கு ஏன் வெளிச்சமில்லை?' என்று நீ எண்ணிக் கொண்டிருக்கக் கூடும். அருமையான தேவபிள்ளையே, வெளிச்சம் உனக்காக விதைக்கப்பட்டிருக்கிறது; நீ செய்யவேண்டியது காத்திருப்பது ஒன்று மட்டுமே. "*சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்*" (சங். 30 : 5). "*இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் தேசயிலிருக்கிறவர்களுக்கு* ***வெளிச்சம் உதித்தது***" (மத். 4 : 15).

பொழுதுபுலர்ந்து நிழல்கள் சாய்ந்து மறையும்போது, உனக்காக விதைக்கப்பட்ட வெளிச்சம் முளைத்தெழும்பும் அல்லது உதிக்கும். இந்த இருளின் பள்ளத்தாக்கினூடாகக் கொஞ்சக்காலத்துக்கு மட்டுமே நீ நடக்க வேண்டியதாய் இருக்கும்.

பெப்ரவரி 7

வாழ்க்கையை மாற்றியமைக்கும் சத்தியம்

"***சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்***"
(யோவான் 8 : 32).

"*சத்தியம் உங்களை விடுதலையாக்கும்*" - எதிலிருந்து 'விடுதலை'? நம்மைப் பாவத்துக்கும் பிசாசுக்கும் அடிமைப்படுத்தும் அடிமைத்தனங் களினின்றும், சரீரப்பிரகாரமானதும், மனரீதியானதும், ஆவிக்குரிய பிரகாரமானதுமான அடிமைத்தனங்களினின்றும் நாம் விடுதலையாக்கப் படுகிறோம்.

ஏதேனும் ஒரு போதகமோ அல்லது உபதேசமோ சரியானதா என்று அறிவதற்கான பரீட்சை இதுவே - நீங்கள் விசுவாசிக்கும் அல்லது போதிக் கும் எந்தவொரு சத்தியமும் உங்களுடைய முரட்டாட்டமான, பெருமை யான, பிடிவாதமான சுபாவத்தை மாற்றாவிடில், அந்தப் போதனையிலோ, அல்லது நீங்கள் அதை விளங்கிக்கொண்டிருக்கும் விதத்திலோ ஏதோ தவறு இருக்க வேண்டும். "*தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவு*" (தீத்து 1 : 3) என்று நாம் வாசிக்கிறோம். இதையே, 'சத்தியத்துக்கு அதாவது ஜீவியத்தை மாற்றக்கூடிய விதத்திலுள்ள சத்தியத்துக்கு அவர்களை வழிநடத்தும்படி' என்று ஒரு ஆங்கில மொழிபெயர்ப்பு (Living Bible) கூறுகிறது. ஆம், சத்தியத்துக்கான பரீட்சை, அது தங்களை

அச்சத்தியத்திற்கு ஒப்புவித்திருப்பவர்களுடைய ஜீவியங்களை மாற்று கிறதா, இல்லையா என்பதேயாகும்.

ஏமி கார் மைக்கேல் அம்மையார் தன் வாலிப நாட்களில் பரிசுத்த ஜீவியம் செய்யப் போராடிக்கொண்டிருந்தார்கள். '*அவர் வழுவாதபடி உங்களைக் காக்க வல்லமையுள்ளவர்*' (யூதா 24) என்ற வசனத்தை அவர்கள் கேட்ட மாத்திரத்தில், குழம்பியிருந்த அவர்களுடைய மனம் உடனே தெளிவடைந்தது; அது முதற்கொண்டு நித்தியமான காரியங்களேயன்றி வேறொன்றும் ஒருபோதும் அவர்களுக்கு ஒரு பொருட்டாகவே தென்பட வில்லை. அவர்கள் தன்னுடைய வாழ்க்கை முழுவதையும் கர்த்தருடைய சேவைக்கென்று அர்ப்பணித்து, தன்னுடைய மரணம் வரை இந்தியாவில் ஒரு மிஷனரியாக ஊழியஞ்செய்தார்கள்.

ஒருவேளை நீங்கள் அநேக உபதேசங்களையும் ஆழமான சத்தியங்களையும் அறிந்திருக்கலாம். ஆனால் அவை உங்களுடைய சுபாவத்தில் ஒரு மாறுதலை உண்டாக்காத பட்சத்தில் அந்த அறிவெல்லாம் மாயையிலும் மாயையே!

பெப்ரவரி 8

"கொஞ்சக்காலம்"

'***ஒருவேளை நீர் அவனை என்றென்றைக்குமாகப் பெற்றுக்கொள்ளும் படிக்குக் கொஞ்சக்காலம் உம்மைவிட்டுப் பிரிந்துபோனானாக்கும்***'
(பிலே. 15 -Eng.).

இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பம் வித்தியாசமானதா யிருப்பினும், இந்தப் பூமிக்குரிய வாசஸ்தலத்தை விட்டுப் பிரிந்து, தங்களுடைய பரலோக மாளிகைகளுக்குச் சென்றிருக்கும் அருமை யானவர்களுக்கு இது பொருந்தும். ஒரு மெய்யான அர்த்தத்தில், அவர்கள் 'கொஞ்சக்காலம் பிரிந்துபோயிருக்கிறார்கள்'. கொஞ்சக்காலத்துக்கு மட்டுமே நாம் அவர்களது இழப்பை உணரப்போகிறோம். 'மரணம் என்பது ஒரு முற்றுப்புள்ளி அல்ல, அது வெறும் ஒரு காற்புள்ளி மாத்திரமே'. நம்முடைய எடுத்துக்கொள்ளப்படுதலோ அல்லது நாம் இந்த உலகத்தை விட்டுக் கடந்துபோகுதலோ எந்த கூஷணத்திலும் சம்பவிக்கலாம். அப்பொழுது, நம்மை விட்டுப் பிரிந்துபோயிருக்கும் அருமையானவர் களோடு இனி ஒருபோதும் பிரிக்கப்படா வண்ணம் நாம் சேர்ந்து கொள்வோம். இது நமக்கு எவ்வளவு ஆறுதலளிப்பதாயிருக்கிறது! கல்லறைக்கு அப்பாலுங்கூட நமக்கு எப்படிப்பட்டதோர் ஆசீர்வதிக்கப்

பட்ட நம்பிக்கை உள்ளது! ஆகவே நாம் மரணத்தின் மூலம் நம்மை விட்டுப் பிரிந்துபோயிருப்பவர்களைக் குறித்து *'நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போல துக்கிக்காமல்'* இருப்போமாக (I தெச. 4 : 13).

இப்பூமியில் நமது வாழ்க்கை 'கொஞ்சக்காலத்துக்கு' மட்டுமே. உண்மையில், நம்முடைய ஜீவியத்தின் ஒவ்வொரு பருவமும், ஒவ்வொரு பிரச்சினையும், ஒவ்வொரு சோதனையும், ஒவ்வொரு சந்தோஷமும் 'கொஞ்சக்காலத்துக்கு' மட்டுமே. இவ்வாறிருக்கிறபடியால் நமக்கிருக்கும் ஒவ்வொரு கூஷணப்பொழுதையும் நாம் மிகச் சிறந்த விதத்தில் உபயோகிப்போமா? நம்முடைய ஜீவியத்தின் ஒவ்வொரு நாளையும் நாம் முழுமையாகப் பிரயோஜனப்படுத்திக்கொள்வோமாக.

பெப்ரவரி 9

கனிதந்து பெருகுவீர்!

'தேவன் அவைகளை ஆசீர்வதித்து, நீங்கள் கனிதந்து பெருகுங்கள் என்று சொன்னார்' (ஆதி. 1 : 22 - Eng.).

கனி தந்து, பெருக வேண்டும் என்பதே தேவனுடைய வசனத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள முதல் ஆசீர்வாதமாகும். நாம் நம்முடைய சுபாவத்தில் கனிதருகிறவர்களாயிருப்பதுடன், ஆத்துமாக்களை ஆதாயப் படுத்துவதன் மூலம் எண்ணிக்கையிலும் பெருக வேண்டும். நம்முடைய ஜீவியத்தின் இவ்விரு அம்சங்களும் சமநிலையில் இருப்பதோடு ஒருங் கிணைந்தும் செல்லுகின்றன. "தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்" (ஆதி. 1 : 28) என்று இரண்டாம் முறை குறிப்பிடப்பட்டிருப்பதும் இதே சத்தியத் தையே வெளிப்படுத்துகிறது.

அழிந்துபோகிற ஆத்துமாக்களை இரட்சிப்புக்கு வழிநடத்துவதற் கும், தேவ ராஜ்யத்துக்கென்று ஆத்துமாக்களைப் பெருகச்செய்வதற்கும் உங்களில் ஒரு வாஞ்சை இல்லையெனில், 'நான் ஒரு மேன்மையான பரிசுத்தவான்' என்று நீங்கள் கூறிக்கொள்வதில் யாதொரு பயனுமில்லை. மறுபக்கத்தில், திவ்விய சுபாவத்தின் மூலம் கனிதராவிடில், நீங்கள் ஆத்து மாக்களை ஆதாயப்படுத்துவதினால் யாதொரு பிரயோஜனமுமில்லை.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் கனியற்ற அனுபவ முள்ளவர்களாயிருப்பதைக் கர்த்தர் விரும்புவதில்லை. அவர் நம்மை ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களாலும் ஆசீர்வதித்து, 'நீங்கள் கனிதந்து பெருகுங்கள்' என்று நம்மிடம் கூறுகிறார். நாம் ஆவியின் கனியாகிய

அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் போன்றவற்றினால் நிறைந்து, இந்தத் தெய்வீக சுபாவங்களில் மற்றவர்களுங்கூட வளர அவர்களுக்கு உதவியா யிருப்போமாக.

யோசேப்பு 'கனிதரும் செடி; அதின் கொடிகள் சுவரின்மேல் படரும்' என்று நாம் வாசிக்கிறோம். நம்மைச் சுற்றிலுமிருக்கும் பசி யுள்ளவர்களை, பசியினால் தவிப்பவர்களைப் போஷிக்கும்படி நம்முடைய கொடிகள் சுவரின் மேல் படர வேண்டும்.

"பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" (அப். 1 : 8).

பெப்ரவரி 10

எல்லாவற்றையும் இழத்தல்

"நீங்கள் ... பரலோகத்தில் அதிக மேன்மையும் நிலையுள்ளதுமான சுதந்தரம் உங்களுக்கு உண்டென்று அறிந்து, உங்கள் ஆஸ்திகளையும் சந்தோஷமாய்க் கொள்ளையிடக் கொடுத்தீர்கள்" (எபி. 10 : 34).

சீன தேசத்தைச் சேர்ந்த ஒரு மிஷனரி ஒருமுறை இரயிலில் பயணம் செய்துகொண்டிருக்கையில், தான் நீண்ட காலமாக உபயோகித்து வந்த தன் வேதாகமம், தான் பல வருடங்களாகச் சேகரித்து வைத்திருந்த தனக்கு மிகவும் விருப்பமான பாடல்கள் அடங்கிய புத்தகம், தன்னுடைய நண்பர்களின் விலாசங்களெல்லாம் அடங்கிய குறிப்பேடு, தன் பிரசங்கக் குறிப்புகளின் தொகுப்பு போன்ற தன்னுடைய ஜீவியத்தில் தனக்கிருந்த விலையேறப்பெற்ற பொருட்கள் அனைத்தையும் இழந்துவிட்டார். இதனால் அவர் மனந்தளர்ந்துபோனார். அப்போது கர்த்தர், 'என் மகனே, நீ உன்னுடைய வேதாகமத்தை இழந்துபோனாயே அன்றி, அவ்வேதாக மத்தை ஆக்கியோனை இழந்துவிடவில்லையே! நீ பாட்டுப் புத்தகத்தை இழந்துபோனாயேயன்றி, நான் உன்னுடைய இருதயத்தில் உனக்குத் தந்த பாடல்களை இழந்துபோகவில்லையே! நீ உன்னுடைய பிரசங்கக் குறிப்பு களை இழந்திருக்கிறாய் என்பது மெய்தான். ஆனால் உண்மையான தூதாகிய என்னை (கிறிஸ்து) நீ இழந்துவிடவில்லையே! உன்னுடைய நண்பர்களனைவருடைய விலாசங்களும் அடங்கிய உன்னுடைய குறிப்பேட்டை நீ இழந்துபோயிருப்பினும், உன்னுடைய நண்பர்களை இழந்துவிடவில்லையே!' என்று அவரோடு பேசினார். இதைக்

கேட்டவுடனே, அம்மிஷனரி அதிகமாக ஊக்குவிக்கப்பட்டு, கர்த்தரில் களிகூரத் துவங்கினார்.

அருமையான நண்பனே, நீ ஒருவேளை சமீபத்தில் உன்னுடைய பணம், வீடு, சொத்து, வேலை, அல்லது உனக்கு விலையேறப்பெற்ற தாயிருந்த ஏதோ ஒன்றை இழந்திருக்கக் கூடும். எனினும் ஆவிக்குரியதும், பொருள் சம்பந்தமானதுமான சகல ஆசீர்வாதங்களுக்கும் மூலகாரணரும் உரிமையாளருமாகிய தேவனை நீ இழந்துபோகவில்லை என்பதை நினைவிற்கொள்வாயாக. ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளியிருக்கிறது (II பேதுரு 1 : 3).

யோபு தனக்கிருந்த பொருள் சம்பந்தமான ஆசீர்வாதங்களனைத்தையும், தன்னுடைய சரீர சுகத்தையும், தன்னுடைய பிள்ளைகளையுங்கூட இழந்துபோனபோது - அவனுடைய மனைவியுங்கூட கர்த்தரை மறுதலித்துவிடும்படி அவனுக்கு ஆலோசனை கூறியும் - தன் தேவனைப் பற்றிப் பிடித்துக்கொண்டான். இறுதியாக அவன் தன்னுடைய தேவனை இன்னும் அதிக நெருங்கிய விதத்தில் அறிந்துகொண்டான். "*என் காதினால் உம்மைக்குறித்துக் கேள்விப்பட்டேன்; இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது*" (யோபு 42 : 5) என்று அவன் கூறுகிறான். அவன் இரட்டிப்பாக ஆசீர்வதிக்கப்பட்டதுடன், கர்த்தருக்காக ஒரு அற்புத சாட்சியாகவும் மாறினான்.

பூமிக்குரியவைகளை இழத்தல் நம்மைக் கலக்கமடையச் செய்யவோ, நம்முடைய தேவனின் தயவையும் உண்மையையும் சந்தேகிக்கச் செய்யவோ வேண்டாம்.

பெப்ரவரி 11

'*என்னைப் போகச் செய்யும்*'

'*என்னைப் போகச் செய்யும்*' (சங். 119 : 35 -Eng.).

கடைசி இராவிருந்தின்போது, கர்த்தராகிய இயேசு, '*உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்*' என்று கூறிய சந்தர்ப்பத்தில், அவரைக் காட்டிக்கொடுப்பது யார் என்பதை அறிய பேதுரு ஆவலாயிருந்தான் (யோவான் 13 : 21 - 24). தம்மைக் காட்டிக்கொடுக்கப்போகிறவனுடைய பெயரைக் கர்த்தராகிய இயேசு குறிப்பிட்டிருந்தால், பேதுரு என்ன செய்

திருந்திருப்பான் என்பதை யூகித்துப் பாருங்கள். அவன் யூதாஸுக்கு விரோதமாகத் தன்னுடைய பட்டயத்தை எடுத்திருந்திருப்பான் என்பதில் சந்தேகமில்லை. எத்தனைச் சந்தர்ப்பங்களில் கர்த்தராகிய இயேசு நம் முடைய பெலவீனங்களை அறிந்தவராக, நம்மைச் சோதனைக்குட்படப் பண்ணும் சந்தர்ப்பங்களினின்று நம்மைத் தப்புவித்திருக்கிறார்! நம்முடைய முற்றிலும் மதியீனமானதும் பிடிவாதமானதுமான வழிகளிலுங் கூட கர்த்தர் நம்மை விட்டு விலகாமலும் நம்மைக் கைவிடாமலும் இருப்பதுடன், அவர் நம்மைப் பாதுகாக்கவும் செய்கிறார். நாம் அவருக்கு எவ்வளவாக நன்றி செலுத்த வேண்டும்!

பேதுரு மிதமிஞ்சிய தன்னம்பிக்கை, முரட்டாட்டம் ஆகிய வற்றுக்கும் ஒரு அடையாளச் சின்னமாக இருந்தான். கர்த்தராகிய இயேசு தாம் கெத்செமனேக்குப் போவதற்குச் சற்று முன்பு, பிசாசானவன் பேதுருவின் விசுவாசத்தை அழிக்கத் திட்டமிட்டுக்கொண்டிருக்கிறான் என்று அவனை எச்சரித்தார். அவன் விசுவாசத்தில் மிகவும் பெலவீனமா யிருப்பதையும், அவனுக்கு ஒரு மெய்யான மனந்திரும்புதல் அவசியம் என்பதையும் அவர் அவனுக்குச் சுட்டிக் காண்பித்தார் - "*சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்*" (லூக்கா 22 : 31, 32). ஆனால் இந்த எச்சரிப்புகளையெல்லாம் கவனித்துக் கேட்பதற்குப் பேதுரு ஆயத்தமாயிருக்கவில்லை. அவன் உடனடியாகவே அவரை நோக்கி, '*நான் காவலிலும் சாவிலும் உம்மோடு செல்ல ஆயத்தமாயிருக்கிறேன்*' என்று கூறினான் (Eng.). பேதுருவுக்கும் சங்கீதக்காரனுக்கும் இருந்த மிகப் பெரிய வித்தியாசத்தைப் பாருங்கள். பேதுரு, தான் சற்றும் ஆயத்தமாயிராதிருந்தபோதிலும், 'நான் செல்ல ஆயத்தமாயிருக்கிறேன்' (Eng.) என்று கூறினான். சங்கீதக்காரனோ, 'என்னைப் போகச் செய்யும்' என்று ஜெபிக்கிறான் (சங். 119 : 35 -Eng.).

பேதுரு, கர்த்தராகிய இயேசுவைப் பின்பற்ற தனக்கிருந்த *விருப்பத்தை,* அவரைப் பின்பற்ற தனக்கிருக்கும் *பெலன்* என்று தவறாக எடுத்துக்கொண்டான். நம்மில் அநேகரும் இதே தவற்றையே இழைக்கிறோம். நாம் மிதமிஞ்சிய தன்னம்பிக்கையுள்ளவர்களாய்ச் செயல்படுகிறோம் என்பதை நாம் உணருவதில்லை. தான் கர்த்தருக்காக எதையாகிலும் செய்ய ஆயத்தமாயிருப்பதாக (அல்லது தனக்குத் திறமை இருப்பதாக) ஒருவன் உணருவானாகில், உண்மையில் அவன் அதற்குச் சற்றேனும் ஆயத்தமாயிருப்பதில்லை.

அருமையான தேவபிள்ளையே, உன்னுடைய சொந்த முயற்சியினாலோ பிரயாசத்தினாலோ உன்னால் ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே கர்த்தர் தாமே உனக்குப் போதித்து, உன்னை நடத்தி, உனக்கு ஆலோசனை சொல்லும்படியாக நீ உன்னைத் தாழ்த்தி அவரிடம் மன்றாடுவாயாக. ஆம். '*கர்த்தாவே, உமது கற்பனைகளின் பாதையில் என்னைப் போகச் செய்யும்*' என்று நீ அவரிடம் வேண்டிக்கொள்வாயாக.

பெப்ரவரி 12

கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்திலுள்ள சுத்திகரிக்கும் வல்லமை

"***கிறிஸ்துவினுடைய இரத்தம் ... உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!***" (எபி. 9 : 14).

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் அழிவற்றதாகும். அது தேவனுடைய அதாவது நித்தியமான தேவனுடைய இரத்தமாகும் (அப். 20 : 28). நம்முடைய தேவன் ஆவியாயிருக்கிறார் என்பது உண்மையே; ஒரு ஆவியில் மாம்சமும் இரத்தமும் இருப்பதில்லை; ஆனால் தேவனுக்கு ஸ்தோத்திரம், தேவன் மாம்சமாகி, நமக்குள்ளே வாசம்பண்ணினார் (யோவான் 1 : 14).

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஜனங்களின் பாவங்கள் மூடப்பட்டு மட்டுமே இருந்தனவேயன்றி அவைகளற அவர்கள் சுத்திகரிக்கப்படவில்லை (சங். 32 : 1). ஏனெனில் காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளின் அழிவுள்ள இரத்தமானது மனச்சாட்சியைச் சுத்திகரிக்கக் கூடாததாயிருந்தது என்று எபிரெயர் ஒன்பதாம் அதிகாரத்திலிருந்து நாம் விளங்கிக்கொள்ளுகிறோம். நம்முடைய மனச்சாட்சியானது கர்த்தராகிய இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் மட்டுமே கழுவப்பட முடியும். கர்த்தராகிய இயேசு நித்திய ஆவியின் மூலமாக அதாவது பரிசுத்த ஆவியின் மூலமாகத் தம்மைப் பலியாக ஒப்புக்கொடுத்து தம் விலையேறப்பெற்ற இரத்தத்தைச் சிந்தியபோது, பிதாவாகிய தேவன் அந்த இரத்தத்தை ஏற்றுக் கொண்டார்; ஆகவே கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தில் அற்புதமான வல்லமை இருக்கிறது. "*அதெப்படியெனில், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும், தீட்டுப்பட்டவர்கள்மேல் தெளிக்கப்பட்ட கடாரியின் சாம்பலும், சரீரசுத்தியுண்டாகும்படி பரிசுத்தப்படுத்துமானால், நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!*" (எபி. 9 : 13, 14).

நித்திய தேவனுடைய இரத்தமாகிய கிறிஸ்துவின் இரத்தம் நித்திய ஆவியினாலே ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஆகவே கிறிஸ்துவின் இரத்தம் நித்திய வல்லமையும் நித்திய ஆசீர்வாதங்களும் உள்ளதாயிருக்கிறது. அதன் வல்லமை நித்தியமானது. 'நித்தியம்' என்பது துவக்கமும் முடிவும் இல்லாத ஒன்றாகும். கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தில் - அதன் வல்லமையில், அதன் சுபாவத்தில், அல்லது அதன் பயனில் யாதொரு மாற்றமுமில்லை; அது கெட்டுப்போவதுமில்லை, அழிவதுமில்லை - அது ஒருபோதும் பழையதாய்ப் போவதுமில்லை; அது எப்போதும் புதிதாகவே இருக்கிறது.

அன்பான வாசகரே, கர்த்தராகிய இயேசுவின் அழிவற்ற இரத்தம் உம்முடைய மனச்சாட்சியை நித்தியமாகச் சுத்திகரிக்க வல்லமையுள்ளதாயிருக்கிறது.

பெப்ரவரி 13

அரியதோர் அழைப்பு!

'***யார் நமது காரியமாய்ப் போவான்?***' (ஏசாயா 6 : 8).

தேவனுக்கு ஊழியஞ்செய்ய நல்ல சந்தர்ப்பம் கிடைத்தும் அதைத் தவறவிட்ட ஒருவன் மிகவும் பரிதபிக்கப்படத்தக்கவனாயிருப்பான். கர்த்தர் உன்னைக் குறித்து, 'எனக்கு ஊழியஞ்செய்யும்படி நான் அவனை அழைத்தேன். நான் அவனுக்கு ஒரு மேன்மையான, உன்னதமான அழைப்பைக் கொடுத்தேன்; அவனோ தன் ஜீவியத்தையே குழப்பி, சீர்குலைத்துக்கொண்டான். எனக்கு ஊழியஞ்செய்ய அவனுக்கு விருப்பமில்லை' என்று கூறாதபடி நீ எச்சரிக்கையாய் இருப்பாயாக.

மிக மோசமான பயம் எது என்று உனக்குத் தெரியுமா? அது, தேவசித்தம் செய்ய ஒரு நபருக்கு இருக்கும் பயமேயாகும். அக்கினிக் கடலுக்குச் செல்லும் ஒரு கூட்டம் ஜனங்களைக் குறித்து நாம் வெளிப்படுத்தின விசேஷம் 21 : 8-இல் வாசிக்கிறோம். அவர்களில் முதலிடத்தை வகிப்பவர்கள் பயப்படுகிறவர்களே. அவர்களுக்கிருந்த பயம் தேவசித்தம் செய்வதற்கான பயமேயாகும். சிலர் தங்களுடைய இருதயத்தைக் கர்த்தராகிய இயேசுவுக்குக் கொடுக்க பயப்படுகிறார்கள். சிலர் தண்ணீர் ஞானஸ்நான சத்தியத்தைப் பற்றி அறிந்திருந்தாலும், அதற்குக் கீழ்ப்படிய பயப்படுகிறார்கள். சிலருக்குத் தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கான

தெளிவான அழைப்பு இருந்தாலும், தங்களிலிருக்கும் பயத்தினிமித்தம் அதற்குக் கீழ்ப்படியத் தயங்குகிறார்கள். 'என்னால் கடைசி வரை தொடர்ந்து நிலைத்திருக்க முடியுமா?' என்று அவர்கள் கேட்கிறார்கள்; 'அது தான் என்னைக் குறித்த தேவசித்தம் என்று நான் அறிந்திருக்கிறேன்; ஆயினும் அதில் உள்ளடங்கியிருக்கும் பாடுகளைக் குறித்து நான் பயப்படுகிறேன்' என்று அவர்கள் கூறுகிறார்கள்.

அருமையான தேவபிள்ளையே, உலகிலேயே மிகப் பெரிய கம்பெனி உன்னுடைய தகப்பனாருக்குச் சொந்தமாயிருக்கிறதென்று வைத்துக்கொள். நீ வந்து அதில் வேலை செய்ய வேண்டுமென்று அவர் உன்னை அழைத்தால், உன்னுடைய பழைய வேலையை ராஜினாமா செய்துவிட்டு அக்கம்பெனியில் சேர நீ தயங்குவாயோ? 'என்னுடைய நண்பர்களுடன் நான் கலந்தாலோசிக்க வேண்டும்' என்று நீ கூறுவாயோ? உன்னுடைய தகப்பனார் உன் மேல் திடீரென சினந்தெழுவார் என்று நீ பயப்படுவாயோ? கர்த்தராகிய இயேசுவைக் காட்டிலும் சிறந்ததோர் எஜமானனை உன்னால் கண்டுபிடிக்க முடியாது. அவர் கிருபையுள்ளவர், நல்லவர், தயை பெருத்தவர், மனதுருக்கமுள்ளவர்.

ஆகவே, தேவனுக்கு ஊழியஞ்செய்யும்படி அவர் உனக்கு ஒரு அழைப்பைக் கொடுத்திருப்பாராயின், அதை நழுவ விடாதே. கர்த்தர் உன்னிடம், 'ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோ' என்றோ, அல்லது, 'வனாந்தரமான ஓரிடத்தில் தனித்துப் போவோம் வா' என்றோ கூறுவாராயின், நீ தயங்காதே. அந்த உன்னதமான ஜீவியம் செய்ய அவர்தாமே உனக்குக் கிருபை தருவார். உன்னுடைய பரம பிதா உன்னைத் தம்முடைய கைப் பிடிக்குள் வைத்துக்கொண்டிருக்கிறார். சமுத்திரத்திலுள்ள தண்ணீரெல்லாம் அவருடைய கரத்திற்குள் அடங்கத்தக்கதாக அது மிகவும் பெரியதாய், பரந்ததாய் இருக்கிறது. அவ்வாறிருக்க, நீ எவ்விதம் கீழே விழ முடியும்? நீ களைப்புற்று மயங்கி விழ நேரிட்டாலும், நீ கர்த்தருடைய கரங்களுக்குள் தான் விழுவாய். நீ உண்மையில் விழுந்துபோவதற்கான ஒரே வழி, தேவனை விட்டு ஓடிவிடுவதின் மூலமாக மட்டுமே உண்டாகக் கூடும். ஆகவே அந்தப் பயத்தின் ஆவியைக் கடிந்துகொண்டு, தேவனுடைய சித்தத்தின் மத்தியில் வருவாயாக.

பெப்ரவரி 14

அயர்ந்த நித்திரை

"தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப் பண்ணினார், அவன் நித்திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, ... தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார்" (ஆதி. 2 : 21, 22).

ஒவ்வொரு ஜீவஜந்துக்கும் பேரிடும் பெரிய வேலையை ஆதாம் முடித்துத் தீர்ந்தபோது, தன் பிள்ளையைத் தூங்க வைக்கும் ஒரு தாயைப் போல தேவன் அவனுக்கு அயர்ந்த நித்திரையைக் கொடுத்தார். நம்முடைய ஜீவியத்தில் அவர் துவங்கியிருக்கும் பெரிய வேலை நம்மில் நிறைவுறும்போது, நாம் நம்முடைய தேவனில் இளைப்பாற அவர் நமக்குச் சகாயஞ்செய்ய வல்லவராயிருக்கிறார். ***தேவன் ஆழ்ந்த நித்திரையை வரப்பண்ணினார்.*** அது எத்தகையதோர் அருமையான ஆழ்ந்த நித்திரையாயிருந்திருக்க வேண்டும்! "*அவரே தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார்*" (சங். 127 : 3). மெய்யாகவே அவர் இன்னமும் 'யெல்ஷதாயாக', தாயைப் போன்ற தேவனாகவே இருக்கிறார்!

முதலாவது நித்திரை பரிசுத்தவானாயிருந்த ஆதாமுக்கு அளிக்கப் பட்டது. தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்கு, இப்பூமியில் அவர்கள் தங்கள் ஜீவியத்தை முடித்த பின்னர், அவர்கள் உயிர்த்தெழும் நாள் வரை அயர்ந்த நித்திரையைக் கொடுக்கிறார். "*நேர்மையாய் நடந்தவர்கள் சமாதானத்துக்குள் பிரவேசித்து, தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகிறார்கள்*" (ஏசாயா 57 : 2). இவ்விரு விஷயங்களிலும் பிரயாசங்களை விட்டொழியும் இளைப்பாறுதலைப் பற்றியே குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர், "*அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து*", '*மனுஷியாக உருவாக்கினார்*'. ஒரு மணவாட்டியை உருவாக்குகிற செயல்முறையில் இந்த விலா எலும்பு நீக்கப்பட்டது ஆதாமுக்குச் சற்றும் வேதனையளிப்பதாக இருக்கவில்லை; அவன் அயர்ந்த நித்திரையில் இளைப்பாறிக்கொண்டிருந்திராவிடில், அது அவனுக்குக் கடும் வேதனையளிப்பதாகவும் தொல்லை கொடுப்பதாகவும் இருந்திருக்கக் கூடும். கிறிஸ்துவுக்கென்று ஒரு மணவாட்டியை உருவாக்குதல் தேவனுடைய வேலையாயிருக்கிறது. நாம் தேவனில் இளைப்பாறக் கற்றுக்கொண்டிருப்போமாகில், அவர் அதை உண்மையாகவும் மிகச் சிறந்த விதத்திலும் செய்து முடிப்பார்.

"*வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்*" (மத். 11 : 28, 29).

நாம் தேவனில் இளைப்பாறக் கற்றுக்கொள்வோமாக. இன்றுங்கூட, நாம் தேவனுக்காகப் பிரயாசப்பட்டுக்கொண்டிருக்கையில்தானே, *நாம்* நம் முடைய இளைப்பாறுதலைக் (ஓய்வெடுத்தலை) குறித்து கரிசனையுள்ள வர்களாயிருப்பதைக் காட்டிலும் *நம்முடைய தேவன்* நமக்கு இளைப்பாறுதல் (ஓய்வு) அளிப்பதைக் குறித்து அதிக கரிசனையுள்ளவராயிருக்கிறார்.

பெப்ரவரி 15

உனக்காக ஒரு வானவில்

"***நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்; அது எனக்கும் பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும். ... அப்பொழுது ... என் உடன்படிக்கையை நினைவுகூருவேன்***" (ஆதி. 9 : 13, 15).

மனிதனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயது தொடங்கிப் பொல்லாததாயிருக்கிறது என்பதைத் தேவன் அறிந்திருந்தார். ஆனால் நோவா செலுத்திய பலியிலிருந்து எழுந்த சுகந்த வாசனையில் தேவன் பிரியங்கொண்டு, தாம் இனி பூமியைச் சபிப்பதில்லை என்று மனிதனோடு ஓர் உடன்படிக்கை செய்து, தம்முடைய உடன்படிக்கைக்கான ஓர் அடையாளத்தை அதாவது வானவில்லை அவனுக்குக் கொடுத்தார். நம்முடைய ஜீவியங்களில் சோதனைகளும் பரீட்சைகளுமாகிய கார்மேகங்கள் எழும்பும்போது, நாம் சிலுவையை நோக்கிப்பார்க்க வேண்டும். அங்குதான் நம்முடைய தேவன் நம்மோடு பாதுகாப்புக்கான ஓர் உடன்படிக்கை செய்திருக்கிறார். நீங்கள் உங்களுடைய சோதனையை நோக்கிப் பார்ப்பீர்களாயின், அதைரியமடைவீர்கள்; நீங்கள் சிலுவையை நோக்கிப் பார்த்தால், உங்களுடைய சோதனை எவ்வளவு அச்சுறுத்துவ தாயிருப்பினும், நீங்கள் சந்தோஷமாக முன்னேறிச் செல்லலாம்.

ஒரு உடன்படிக்கையானது எப்போதுமே இரு பக்கங்களை உடையதாயிருக்கிறது. அதில் உட்படும் நிபந்தனைகளைப் பின்பற்றுவதில் இரு சாராரும் சமமான பொறுப்புள்ளவர்களாயிருக்கின்றனர். அடிவானத் தில் மேகங்கள் எழும்பும்போது, தேவன் தம்முடைய உடன்படிக்கையை நினைவுகூருகிறார். நாமும் கூட மேகங்கள் எழும்பும்போது அதாவது நம்முடைய ஜீவியத்தில் பிரச்சினைகள் உண்டாகும்போது நாம் தேவ னோடு செய்த உடன்படிக்கைகளை நினைவுகூரும்படி எதிர்பார்க்கப் படுகிறோம். அநேகர் தங்களுடைய ஜீவியத்தில் எல்லாம் சுமூகமாக இருக்கும்போது மட்டுமே தாங்கள் தேவனோடு செய்த உடன்படிக்கையை நினைவுகூருகிறார்கள். எதிர்பாராத, குழப்பங்களை உண்டாக்கக்கூடிய கஷ்டங்களைச் சந்திக்கும்போது, அவர்கள் சிலுவையைப் பற்றிய

தரிசனத்தை இழந்துபோகிறார்கள் - தேவனோடு தாங்கள் செய்திருக்கும் உடன்படிக்கையை அவர்கள் மறந்துவிடுகிறார்கள்; தேவன் தங்களோடு செய்திருக்கும் உடன்படிக்கையையும் அவர்கள் மறந்துவிடுகிறார்கள்.

யோவான்ஸ்நானன் தேவனுக்காக நல்லதொரு ஊழியஞ் செய்துகொண்டிருந்த நாட்களில், கர்த்தராகிய இயேசுவைப் பற்றி, "*இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி*" என்று மிகவும் தைரியமாகப் பறைசாற்றினான். ஆனால் அவன் சிறையிலடைக்கப்பட்டு, நெருக்கத்தை அனுபவித்தபோது கர்த்தராகிய இயேசுவின் கர்த்தத் துவத்தையே சந்தேகித்தான் (மத். 11 : 2, 3). கர்த்தராகிய இயேசு மேசியா வாக அல்லது யூதருக்கு ராஜாவாக இருந்திருப்பாரென்றால், கிறிஸ்துவுக்கு முன்னோடியாகிய தான் ஏன் சிறையில் கஷ்டப்பட வேண்டும் என்று அவன் எண்ணியிருந்திருக்கக் கூடும். இன்றுங்கூட அநேக *யோவான் ஸ்நானன்கள்* இருக்கின்றனர். சகலமும் தங்களுக்குச் சாதகமாக இருக்கும் போது, அவர்கள் சபைக் கூட்டங்களில் கிறிஸ்துவைப் பற்றி தைரியமாகச் சாட்சி கூறுவதை நாம் காணலாம். ஆனால் பெலவீனம், தனிமைப் படுத்தப்படுதல் போன்ற சிறையிருப்புகளுக்குள்ளாக்கப்படும்போது, அவர்கள் கல்வாரியிலிருந்து பிரவாகித்து வருவதும், எல்லாச் சூழ்நிலை களுக்கும் போதுமானதும், எல்லாவற்றையும் மேற்கொள்ளக்கூடியதுமான கிருபையைச் சந்தேகிக்கின்றனர்.

தேவனுடைய பிள்ளையே, நீ கார்மேகங்களையா அல்லது வானவில்லையா - எதை நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறாய்?

பெப்ரவரி 16

நீர் பரலோகத்துக்கென்று அழைக்கப்பட்டிருக்கிறீர்

"***நித்தியஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம்***" (I யோவான் 2 : 25).

நித்திய ஜீவனைக் குறித்த வாக்குத்தத்தம் யாருக்குச் சொந்தம்? உலகம் உண்டாவதற்கு முன்பே ஆதிகால முதல் அது ஒவ்வொரு மனிதனுக்கும் வாக்குப்பண்ணப்பட்டுள்ளது; யாதொரு மனுஷனும் நரக அக்கினிக்கென்று முன்குறிக்கப்பட்டவனல்ல. பரலோகத்துக்கென்று தேவன் ஒருசிலரை மட்டும் முன்குறித்திருப்பாரெனில், அவர்களுக்காக மட்டுமே மரிக்கும்படியாக அவர் தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பி யிருந்திருப்பார். ஆனால், "*தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை*

விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3 : 16) என்று வேதாகமம் கூறுகிறது. "விசுவாசிக்கிறவன் எவனோ" என்னும் வார்த்தைகளைத் தயவாக கவனத்திற்கொள்ளுங்கள். எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார் (I தீமோ. 2 : 4).

"*வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்*" (மத். 11 : 28) என்று கர்த்தராகிய இயேசு கூறியிருக்கிறார். அவர், 'பரலோகத்துக்கென்று முன்குறிக்கப்பட்டவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்' என்று கூறவில்லை. மேலும் அவர், "*ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்*" (யோவான் 7 : 37) என்று யாவரையும் வருந்தி அழைப்பதை நாம் காண்கிறோம். "*என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை*" (யோவான் 6 : 37) என்றும் அவர் கூறுகிறார்.

அன்பான வாசகரே, நீர் நரக அக்கினிக்கென்று தேவனால் முன்குறிக்கப்பட்டிருக்கிறீர் என்று எப்போதாவது உம்மைக் குறித்து நீர் சிந்தித்ததுண்டானால், அது பிசாசினுடைய ஒரு கண்ணியேயாகும். கர்த்தராகிய இயேசு ஒவ்வொருவருடைய இரட்சிப்புக்காகவும் மரித்தார். நீர் பரலோகத்துக்கென்று அழைக்கப்பட்டிருக்கிறீர். ஆகவே தேவனுடைய வசனத்தை விசுவாசித்து, கர்த்தராகிய இயேசுவுக்கென்று ஜீவிக்கும்படி உம்மை அர்ப்பணம் செய்வீராக. அப்படிச் செய்வதற்கு நீர் துரிதப்படுவீராக; ஏனெனில் நீரே கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகையைத் தாமதிக்கச் செய்கிறவராயிருக்கக் கூடும். "*கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; **ஒருவரும்** கெட்டுப் போகாமல் **எல்லாரும்** மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்*" (II பேதுரு 3 : 9).

பெப்ரவரி 17

பிதாவின் தன்மையின் சொரூபம்

'இவர் (கிறிஸ்து) அவருடைய (பிதாவினுடைய) மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருக்கிறார்' (எபி. 1 : 3).

கிறிஸ்து பிதாவினுடைய தன்மையின் சொரூபமாயிருந்தார். இது, கிறிஸ்து தமது உருவத்தில் அல்லது சாயலில் பிதாவுக்கு ஒப்பாயிருந்தார் என்று அல்ல, தமது சுபாவத்தில் பிதாவுக்கு ஒப்பானவராயிருந்தார் என்றே பொருள்படும்.

கிறிஸ்து இப்பூமியில் இருந்தபோது பிதாவின் அதே பூரண சுபாவத்தை நமக்கு வெளிப்படுத்தினார். அதைப் போலவே, அவிசுவாசமும் கோணலும் மாறுபாடுமுள்ள இவ்வுலகிற்கு நாம் கிறிஸ்துவின் தன்மையின் சொரூபத்தை அதாவது அவருடைய அதே சுபாவத்தை வெளிப்படுத்த வேண்டுமென்று அவர் நம்மைக் குறித்துங்கூட விரும்புகிறார். ஒரு அர்த்தத்தில், கிறிஸ்துவின் அதே பணியைத் தான் நாமும் நிறைவேற்ற வேண்டியவர்களாயிருக்கிறோம். அவர் பிதாவின் பூரண சுபாவத்தை இந்த உலகத்திற்கு வெளிப்படுத்தும்படி வந்தார்; அவ்வாறே, கிறிஸ்துவின் அதே சுபாவத்தை நாம் இவ்வுலகிற்கு வெளிப்படுத்தும் படியாகவே, அவர் நம்மை இந்தப் பூமியில் வைத்திருக்கிறார். நாம் அவ்விதம் செய்வோமாயின், நாமுங்கூட 'அவருடைய மகிமையின் பிரகாசமாக மாறுவோம்'. கிறிஸ்துவின் அதே சுபாவத்தை வெளிப்படுத்துவதின் மூலமாக நாம் இந்த இருண்ட உலகினில் அவருடைய மகிமையினால் ஒளிவீசிப் பிரகாசித்துக்கொண்டிருப்போம்.

கர்த்தராகிய இயேசுவிடம் பிலிப்பு, "*ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும்*" என்று கேட்டது போல, இவ்வுலகிலுள்ள அநேகர் தேவனைப் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ள அங்குமிங்கும் அலைந்து பிரயாசப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். "*என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்*" என்று கர்த்தராகிய இயேசு பிலிப்புவிடம் கூறியதைப் போன்ற அதே பதிலையே நம்முடைய ஜீவியமானது அவர்களுக்கு அளித்துக் கொண்டிருக்கிறதா? நம்மைச் சுற்றிலுமிருப்பவர்களுக்கு நாம் அப்படிப் பட்ட கிறிஸ்துவின் சாயலை வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறோமா?

பெப்ரவரி 18

தேவனை நோக்கி அழுதல் ஒரு பெலவீனமல்ல

"அப்பொழுது தாவீதும் அவனோடிருந்த ஜனங்களும் அழுகிறதற்குத் தங்களில் பெலனில்லாமல் போகுமட்டும் சத்தமிட்டு அழுதார்கள்" (I சாமு. 30 : 4).

தாவீதும் அவனுடைய மனுஷரும் சிக்லாகுக்குத் திரும்பி வந்த போது, அமலேக்கியர் அதைக் கைப்பற்றி, அவர்களுடைய ஸ்திரீகளையும்

பிள்ளைகளையும் மிருகஜீவன்களையும் சிறைப்பிடித்து, எடுத்துச் செல்லக் கூடிய சிறந்த பொருட்கள் அனைத்தையும் கொண்டுபோய், அந்தப் பட்டணத்தை அக்கினியினால் சுட்டெரித்திருந்ததைக் கண்டார்கள் (I சாமு. 30 : 3). இந்தப் பூமியில் அவர்கள் தங்களுக்குண்டாயிருந்த சகலத்தையும் இழந்துவிட்டார்கள்; அந்தச் சூழ்நிலையில் அவர்கள் செய்யக்கூடிய தெல்லாம் *தங்களில் பெலனில்லாமல் போகுமட்டும் சத்தமிட்டு அழுவது* மட்டுமாயிருந்தது.

அழுகை என்பது மனுஷ பெலவீனம் என்று சிலர் எண்ணு கிறார்கள். இந்த உலக ஜனங்கள் அதற்கு என்னதான் வியாக்கியானம் கொடுத்தாலும், தேவசமுகத்தில் அழுதல் நம்முடைய மிகுந்த பலம் வாய்ந்த ஆயுதங்களில் ஒன்றாக இருக்கிறது.

தாவீது தேவசமுகத்தில் அழுதான், அதினிமித்தம் அவன் தன்னைத் தன் தேவனாகிய கர்த்தருக்குள் திடப்படுத்திக்கொள்ளக்கூடியவனானான். அப்பொழுது, "*அமலேக்கியர் பிடித்துக்கொண்டு போன எல்லாவற் றையும் ... தாவீது விடுவித்தான். அவர்கள் கொள்ளையாடிக்கொண்டு போன எல்லாவற்றிலும், சிறியதிலும் பெரியதிலும், குமாரரிலும், குமாரத்திகளிலும், ஒன்றும் குறைபடாமல் எல்லாவற்றையும் தாவீது திருப்பிக்கொண்டான்*" (I சாமு. 30 : 6, 18, 19). ஆம், நம்முடைய இருதயத்தைத் தேவனுக்கு முன் பாக ஊற்றி, எல்லா உள்ளார்ந்த உண்மையோடும் நாம் அழக் கற்றுக் கொள்ளும்போது சம்பவிப்பது இதுவே. நம்முடைய மாம்சீக சுபாவ மாகிய அமலேக்கியர் எடுத்துக்கொண்டு போய்விட்ட எல்லாவற்றையும் - ஏதோ ஓரளவிற்கு அல்ல, முழுமையாகவே நமக்குத் திருப்பித் தர நம்முடைய தேவன் வல்லவராயிருக்கிறார். தாவீது தான் இழந்துபோன எல்லாவற்றையும் திரும்பப் பெற்றுக்கொண்டதுடன், '*கர்த்தருடைய சத்துருக்களின் கொள்ளையையும்*' கூட பெற்று அவைகளில் தன் சிநேகி தருக்கு வெகுமதிகளையும் அனுப்பக்கூடியவனாயிருந்தது ஆச்சரியமா யிருக்கிறது! (வச. 26 - 31).

அருமையான தேவபிள்ளையே, ஒரு 'சிக்லாக்' அனுபவத்தினூடாக நீ இப்பொழுது கடந்துபோய்க்கொண்டிருக்கிறாயா? உன்னுடைய ஜெப ஜீவியம், உன்னுடைய பரிசுத்தம், தேவனோடு நெருங்கி சஞ்சரித்துக் கொண்டிருந்த அனுபவம், உன்னுடைய ஆதி அன்பு, தேவனோடு உனக்கிருந்த சமாதானம், தேவனுக்காக உனக்கிருந்த ஆதி வைராக்கியம் போன்றவற்றை நீ இழந்திருப்பதாக உணருகிறாயா? உன்னுடைய ஆவிக் குரிய ஜீவியத்தை உன்னுடைய மாம்சீக சுபாவம் பாழாக்கிவிட்டதாக நீ உணருகிறாயா? நீ அதைரியமடைய வேண்டிய அவசியமில்லை. நீ

செய்ய வேண்டியதெல்லாம், உன்னுடைய இருதயத்தைத் தேவனிடத்திற்கு உயர்த்தி, உன்னுடைய முழுப் பெலத்தோடும் அவரை நோக்கிக் கதறுவது மட்டுமே. அப்பொழுது, நீ இழந்துபோன எல்லாவற்றையும் கர்த்தர் திருப்பிக்கொடுப்பார் என்ற நிச்சயத்தோடு நீ இளைப்பாறலாம். அத்துடன், நீ மற்றவர்களுக்கும் ஆசீர்வாதமாயிருந்து, தேவனுடைய நன்மையை அவர்களுக்கும் பகிர்ந்தளிக்கும்படி நீ இதற்கு முன் அனுபவித்திராத ஆசீர்வாதங்களையும் 'கொள்ளைப்பொருளாக' உனக்குக் கொடுக்க அவர் வல்லவராயிருக்கிறார்.

பெப்ரவரி 19

ஆகையால் அருமையானவர்களே, ஜாக்கிரதையாயிருங்கள்

"***எனக்குப் பிரியமான சகோதரரே, ... நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக***" (I கொரி. 15 : 58).

தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில், அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார் (ஆதி . 2 : 15). இந்தப் பணியில், ஸ்திரீயானவள் ஆதாமுக்கு ஒரு 'ஏற்ற துணை'யாக இருந்திருக்க வேண்டும். ஆதாமின் பேரில் தனக்குண்டாயிருந்த உத்தரவாதத்தை அவள் அசட்டை செய்து, தன் கடமையில் அஜாக்கிரதையாயிருந்ததைப் பிசாசானவன் தக்க சமயத்தில் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, தன்னுடைய கேடான சுய திட்டங்களில் அவளை அலுவலாயிருக்கச் செய்துவிட்டான். தேவனுடைய காரியங்களில் நாம் அலுவலாயிராத பட்சத்தில் பிசாசினுடைய வேலையில் அலுவலுள்ளவர்களாக மாறிவிடு வோம். அப்போது நம் மனது (சரீரமுங்கூட) பிசாசின் தொழிற்சாலையாக மாறிவிடும். "*ராஜாக்கள் யுத்தத்திற்குப் புறப்படுங்காலம் வந்தபோது, ... தாவீதோ எருசலேமில் இருந்துவிட்டான்*" (II சாமு. 11 : 1). தாவீது தன்னுடைய வேலையில் முற்றிலும் அசதியாய் இருந்தது, விரைவிலேயே அவனை ஒரு விபசாரக்காரனாகவும் கொலைபாதகனாகவும் மாற்றிவிட்டது. அது அவனுடைய ஜீவியத்திற்கு என்றும் நீங்காத நிந்தையை வருவித்து விட்டது (II சாமுவேல் அதி. 11-ஐ வாசிக்கவும்).

சபையாகிய தேவனுடைய தோட்டத்தில் நாம் கர்த்தராகிய இயேசுவோடு கூட சேர்ந்து உழைப்போமாக. சபையில் பிரயாசப்படுவதில்

அல்லது பாடுபடுவதில் நாம் அசதியாயிருக்கும்போது மட்டுமே பிசாசானவன் நமக்குப் பின்னாக வருவான். "*தெளிந்த புத்தியுள்ள வர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்*" (I பேதுரு 5 : 8). "*இப்படியிருக்க, கிறிஸ்து நமக்காக மாம்சத்திலே பாடுபட்டபடியால், நீங்களும் அப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாகத் தரித்துக்கொள்ளுங்கள். ஏனென்றால் மாம்சத்தில் பாடுபடுகிறவன் ... பாவங்களை விட்டோய்ந்திருப்பான்*" (I பேதுரு 4 : 1, 2).

பெப்ரவரி 20

பொன்னைப் பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றது

"***அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்***" (I பேதுரு 1 : 7).

நம் விசுவாசத்தின் பரீட்சையானது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது நமக்குப் புகழ்ச்சியையும் கனத்தையும் மகிமையையும் கொண்டுவரும். நாம் ஒரு விசுவாசத்தின் பரீட்சையைச் சந்திக்கும் போது, 'அதை மிகுந்த சந்தோஷமாக எண்ண வேண்டும்' என்று அப்போஸ்தலனாகிய யாக்கோபு கூறுகிறார்: "*என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்*" (யாக். 1 : 2, 3). நம்முடைய விசுவாசம் பரீட்சிக்கப்படும்போது, நாம் சத்தியத்துக்காக நிற்பதினிமித்தம் நமக்கு உபத்திரவங்கள், சிறுமைப்படுத்தப்படுதல்கள் போன்றவை வரக் கூடும். ஆயினும், அச்சோதனைகள் முடிவாகக் கிறிஸ்துவின் நாளில் நமக்குப் புகழ்ச்சியையும் கனத்தையும் மகிமையையும் கொண்டுவருவதால், நாம் சோதனைகளினூடாகச் செல்லும்போதே அவற்றில் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் அக்கினிச் சூளையினுள் தூக்கியெறியப்பட்டனர். அது ஒரு விசுவாசப் பரீட்சையாக இருந்தது; அதன் முடிவில் அவர்கள் மகத்தான வெற்றியுடன் வெளியே வந்தபோது, அவர்களை அழிக்கும்படி பிரயாசப்பட்ட அதே ராஜாவினால்

தேவனுடைய நாமம் உண்மையாகவே புகழப்பட்டு, கனப்படுத்தப்பட்டு, மகிமைப்படுத்தப்பட்டது; அவர்களும் அச்சோதனையின் முடிவில் உயர்த்தப்பட்டு, கனப்படுத்தப்பட்டனர். தானியேலின் விஷயத்திலும், அவன் சிங்கங்களின் கெபியில் தூக்கியெறியப்பட்டபோது சம்பவித்ததும் இதுவே. நம்மைப் பொறுத்த விஷயத்திலும் இது உண்மையே. நம் முடைய விசுவாசத்தின் பரீட்சை நமக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையு மாக மாறுவது நம்மைப் பொறுத்ததே ஆகும். நம்முடைய விசுவாசம் நமக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்பட வேண்டு மாயின், நாம் சகலத்தையும் சகித்துக்கொள்வதோடு, நம்முடைய முகத்தைக் கற்பாறையைப் போலாக்கிக்கொள்ள வேண்டும். உங்களுடைய விசுவாசம் பொன்னைப் பார்க்கிலும் விலையேறப்பெற்றது; அப்படியே நீங்களுங்கூட விலையேறப்பெற்றவர்கள் என்பதை நினைவிற்கொள்ளுங்கள்.

பெப்ரவரி 21

மெய்யான ஆசீர்வாதம் யாது?

'***கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் ஆசீர்வதிக்கப்பட்டவன்***' (சங். 128 : 1 -Eng.).

Moffat வேதாகமம், "அவர் வழிகளில் நடக்கிறவன்" என்பதை 'அவருடைய ஜீவியத்தையே ஜீவிப்பவன்' என்று கூறுகிறது. கர்த்தருடைய ஜீவியத்தைப் போன்ற ஜீவியம் செய்பவர்கள் அல்லது தேவனோடு நெருங்கி ஜீவிப்பவர்களே மெய்யாக ஆசீர்வதிக்கப்பட்ட ஜனங்களாவர். தேவனோடு நெருங்கியிருத்தலே மெய்யான ஆசீர்வாதமாகும்.

தேவனுடைய பார்வையில் ஆசீர்வதிக்கப்பட்டதொரு மனிதன் என்பவன் ஒரு ஐசுவரியவானோ, புகழ்பெற்றவனோ, கற்றுத்தேர்ந்தவனோ, தாலந்துகள் பெற்றவனோ, நல்ல ஆரோக்கியமுள்ளவனோ, மற்றும் இப்படிப்பட்ட மேன்மைகளை உடையவனோ அல்ல; ஐசுவரியங்களோ, ஆஸ்தியோ ஒருவேளை இல்லாதவனாயிருப்பினும், ஒருவன் தேவனோடு நெருங்கி ஜீவிப்பானாயின், அவனே ஆசீர்வதிக்கப்பட்டவன் ஆவான்.

ஒரு தம்பதியினர் ஒரு பெரிய மாளிகை, செல்வம், ஆரோக்கியம் போன்றவற்றுடனும், சமுதாயத்தில் நல்ல அந்தஸ்துடனும் ஜீவிப்பார் களாயின் அவர்களுடைய விவாகம் ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட விவாகம் என்று பொருள்படாது. ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட குடும்ப வாழ்க்கை செய்ய வேண்டுமாயின், அவர்கள் தங்கள் ஜீவியத்தில் சந்திக்கும் பிரச்சினைகளின் மத்தியிலுங்கூட தேவனோடு நெருங்கி ஜீவிக்க வேண்டும்.

ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட ஜீவியம் (நீண்ட ஆயுசுள்ளதோ அல்லது குறைந்த ஆயுசுள்ளதோ) என்பது, தேவனோடு நெருங்கி ஜீவிக்கும் ஒரு ஜீவியமேயாகும். உங்களுடைய ஜீவியத்தின் பிரச்சினைகள் - ஒன்று உங்களைத் தேவனுக்கு அருகாமையிலோ அல்லது தூரமாகவோ எடுத்துச் செல்லலாம். அது பிரச்சினைகளை நீங்கள் எப்படிப்பட்ட மனப்பான்மை யுடன் எடுத்துக்கொள்கிறீர்கள் என்பதையே சார்ந்தது.

கிறிஸ்துவுடன் கூட இரு கள்ளர்கள் சிலுவையிலறையப்பட்டனர். அவர்கள் இருவரும் கள்ளர்களாயிருந்தனர்; இருவரும் ஒரே நாளில் தண்டிக்கப்பட்டனர். இருவரும் கர்த்தராகிய இயேசுவை ஒரே விதத்தில் - சிலுவையில் தங்களோடு கூட தொங்கிக்கொண்டிருக்கிறவராகக் கண்டனர். இருவருமே கர்த்தராகிய இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டனர். இருப்பினும், மனந்திரும்பிய கள்ளன் கர்த்தராகிய இயேசுவுடன் கூட என்றென்றைக்குமாக இருக்கும்படி பரதீசுக்குச் சென்றான். மற்றவனோ கர்த்தராகிய இயேசுவை விட்டு என்றென்றுமாகத் தூரமாக இருக்கும்படி கொடிய வேதனையுள்ள நரகத்துக்குச் சென்றான்.

அருமையான வாசகரே, இந்நாளும், ஒவ்வொரு நாளும் உம்முடைய ஜீவியத்தில் எது சம்பவித்தாலும், அது உம்மைத் தேவனோடு கிட்டிச் சேரப் பண்ணுமாயின் அந்த நாள் உமக்கு ஒரு ஆசீர்வதிக்கப் பட்ட நாளாயிருக்கும். அதைப் போலவே, உம்முடைய ஜீவியத்திலுள்ள ஒவ்வொரு பிரச்சினையையும் உம்மைத் தேவனோடு கிட்டிச் சேரப்பண்ணக்கூடிய ஒரு ஏதுவாக நீர் எடுத்துக்கொள்வீராயின், அந்தப் பிரச்சினைகளெல்லாம் உமக்கு ஆசீர்வாதமாயிருக்கும்.

'*அவர் தமக்குச் சமீபமான ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரராகிய தம்முடைய ஜனத்தின் கொம்பை உயர்த்துகிறார்*' (சங். 148 : 14 -Eng.).

பெப்ரவரி 22

நம்மை நாமே வெறுமையாக்கிக்கொள்வதின் ஆசீர்வாதம்

"***நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள்நிமித்தம் தரித்திரரானாரே***" (II கொரி. 8 : 9).

தங்களுக்கு அருமையானவையாகத் தாங்கள் பேணிக் காத்துவந்த தங்கள் உடைமைகளையும், தாங்கள் மிகவும் அதிகமாக நேசித்துவந்த

வர்களையும் கர்த்தருக்கென்று தத்தம்செய்து தங்களை வெறுமையாக்கிக் கொண்ட பரிசுத்தவான்கள் பலர் பழைய ஏற்பாட்டுக் காலத்திலுங்கூட இருந்தனர்.

ஆபிரகாம் தன்னுடைய வீட்டையும், தன்னுடைய தேசத்தையும், தன்னுடைய உறவினர்களையும், சிறிது காலத்திற்குப் பின்னர் தனக்கு மிகவும் பிரியமான குமாரனாகிய ஈசாக்கையுங்கூட பிரதிஷ்டை செய்யும்படி தேவனால் அழைக்கப்பட்டான். அவன் தேவனுக்குக் கீழ்ப் படிந்து, அதன் விளைவாக அநேகருக்கு ஆசீர்வாதமாக மாறினான். யோசேப்பு தன்னை மிகவும் அதிகமாக நேசித்துவந்த தன்னுடைய தகப்பனையும், தன்னுடைய வீட்டையும், தன்னுடைய தேசத்தையும், முடிவாக தன்னுடைய நற்பெயரையுங்கூட இழக்க வேண்டியதாயிற்று. கர்த்தர் தம்மையே முழுமையாக நமக்கு என்றென்றைக்குமாகக் கொடுக்க விருப்பமுள்ளவராயிருப்பதால், நாம் நமக்கு விருப்பமானவையென பேணி வைத்திருக்கும் பொருட்களையோ அல்லது நமக்கு அருமையான மனுஷரையோ சிறிது காலத்துக்காகிலும் நம்மை விட்டு எடுத்துக் கொள்வதின் மூலம் அவர் நம்மைச் சோதித்துப் பார்க்கக் கூடும். அவர் அவ்விதம் செய்யும்போது, அது நாம் அவரோடு நெருங்கிச் சஞ்சரிப் பதைப் பாதிக்குமா? அது நம்மை நம்பிக்கையற்ற நிலைக்குத் தள்ளி விடுமா? ஒரு கணம் சிந்தனை செய்யுங்கள்.

நாம் நம்மை வெறுமையாக்குதல் அல்லது பிரதிஷ்டை செய்தல் நமக்கு நன்மை பயப்பதோடல்லாமல், அநேகருக்கும் நம்மை ஆசீர் வாதமாக்குகிறது. பிரதிஷ்டையினால் நாம் தரித்திரராக மாறும்போது, நாம் மற்றவர்களை ஐசுவரியவான்களாக அதாவது விசுவாசத்திலும் கிருபை யிலும் மற்றும் பல ஆசீர்வாதங்களிலும் ஐசுவரியவான்களாக மாற்று கிறோம். அப்படியெனில், ஒருவன் தமக்கு ஊழியஞ்செய்ய விரும்பினால் அவன் தனக்குண்டான யாவற்றையும் வெறுத்து விட்டுவிட வேண்டும் என்று கர்த்தராகிய இயேசு கூறியதில் வியப்பொன்றுமில்லையே (லூக்கா 14 : 26, 27, 33).

இக்கடைசி நாட்களில், தங்களுக்குண்டான எல்லாவற்றையும் விட்டு தம்மைப் பின்பற்றும்படி கர்த்தர் அநேகரை அழைக்கிறார்; அவர்களைக் கொண்டு மற்றவர்களை ஐசுவரியமாக ஆசீர்வதிக்கும்படியாகவே அவர் அப்படிச் செய்கிறார். தேவபிள்ளையே, கர்த்தருடைய சத்தத்தை உன்னால் கேட்க முடிகிறதா? '*கர்த்தாவே, இதோ அடியேன் இருக்கிறேன்; என்னை உபயோகியும்*' என்று நீ சொல்லுவாயா?

பெப்ரவரி 23

பெருமை உங்களை நாசமாக்கிவிடும்!

"***அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை***" (நீதி. 16 : 18).

யோசியா தேவனுக்குப் பயந்த ஒரு ராஜாவாயிருந்தான். அவன் தன் ராஜ்யபாரத்தின் எட்டாம் வருஷத்தில், தான் இன்னும் இளைஞனாயிருக்கையில், தன் தகப்பனாகிய தாவீதின் தேவனைத் தேட ஆரம்பித்து, பன்னிரண்டாம் வருஷத்தில் மேடைகள், தோப்புகள், சுரூபங்கள், வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகங்கள் ஆகியவை அற்றுப்போகும்படி, யூதாவையும் எருசலேமையும் சுத்திகரிக்கத் தொடங்கினான் (II நாளா. 34 : 3). தேவனைப் பிரியப்படுத்தும்படி அவன் இன்னும் அநேக காரியங்களைச் செய்தான் - அவன் புறஜாதியாரின் பலிபீடங்களையும் விக்கிரகங்களையும் அகற்றி, அவைகளைத் தகர்த்துப்போட்டான்; அவன் தேவனுடைய ஆலயத்தைப் பழுதுபார்த்து, ஊழியரைத் தேவனுக்கடுத்த காரியங்களில் உற்சாகப்படுத்தினான். மேலும் அவன் ஆசரித்த பஸ்கா பண்டிகை இணையற்றதாயிருந்தது (II நாளா. 35 : 18). யோசியாவைக் குறித்து சொல்வதற்கு இன்னும் அநேக நல்ல காரியங்கள் உள்ளன. உண்மையில், யோசியா பிறப்பதற்கு வெகு காலத்துக்கு முன்னரே தேவ மகிமைக்கென்று அவன் செய்யப்போகும் பெரிய காரியங்களைக் குறித்து தேவனுடைய தீர்க்கதரிசி ஒருவன் தீர்க்கதரிசனம் உரைத்தான்.

இருப்பினும், அத்தகைய பரிசுத்தவானாகிய ராஜா பெருமையுள்ளவனானான்! எகிப்தின் ராஜாவாகிய நேகோ, கர்கேமிஸ் பட்டணத்தின் மேல் யுத்தம் பண்ணும்படி போனபோது யோசியா அவனுக்கு விரோதமாய் யுத்தஞ்செய்யப் புறப்பட்டான். நேகோ, "*நான் தீவிரிக்க வேண்டுமென்று தேவன் சொன்னார்; தேவன் என்னோடிருக்கிறார்; அவர் உம்மை அழிக்காதபடிக்கு அவருக்கு எதிரிடை செய்வதை விட்டுவிடும்*" என்று யோசியாவுக்குச் சொல்லி அனுப்பினான் (II நாளா. 35 : 21). நாம் யுத்தம்பண்ணி, சண்டையிடும்போது, நாம் மெய்யாகச் செய்துகொண்டிருக்கிற காரியம் என்னவெனில், நாம் தேவனோடு யுத்தம் பண்ணிக்கொண்டிருக்கிறோம். தேவனுடைய வழிநடத்துதலின்படியே தான் யுத்தத்திற்குச் செல்வதாக எகிப்தின் ராஜா தெளிவாகக் கூறியபோதிலும், யோசியாவின் பெருமையும் அகங்காரமுமான ஆவியை அது தடுத்து நிறுத்துவதாய் இருக்கவில்லை. அவன் தான் எவ்வளவு பெரியவன் என்பதை நேகோவுக்குக் காண்பிக்கப் போவதாகக் கற்பனைசெய்துகொண்டான். '*வில்வீரர் யோசியா ராஜாவின்*

மேல் அம்பெய்தார்கள்; அப்பொழுது அவன் ஊழியக்காரர் அவனை எருசலேமுக்குக் கொண்டுவந்தார்கள்; அவன் மரணமடைந்தான்' (வச. 23, 24).

நாம் நம்முடைய முழு இருதயத்தோடும் நம்முடைய தேவனிடமாகத் திரும்பி, பெருமையென்று அழைக்கப்படும் இந்த அசுத்த ஆவி நம்முடைய ஜீவியத்தில் மறைந்திருக்கிறதா என்று நம்மை நாமே ஆராய்ந்துபார்ப்போமாக. நம்மில் அநேக நற்பண்புகள் இருப்பினும், நம்முடைய ஜீவியத்தில் பெருமை பிரவேசிக்க நாம் இடமளிப்போமாயின், நம்மிடத்தில் எவ்வித திவ்விய சுபாவமும் இல்லாதவர்கள் போல, நாம் நம்முடைய ஜீவியத்தை அவமானத்தில் முடிக்கக் கூடும் என்பது நம்மை அச்சுறுத்துவதாயிருப்பினும் அதுவே உண்மை.

பெப்ரவரி 24

கர்த்தராகிய இயேசு வருகிறார்!

"***இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்: மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்***" (வெளி. 22 : 20).

வேதாகமத்தில் உள்ள இக்கடைசி சாட்சி, கடைசி வாக்குத்தத்தம், கடைசி ஜெபம் கர்த்தருடைய இரகசிய வருகையோடு சம்பந்தப்பட்டதாயிருக்கிறது. இருப்பினும், கர்த்தராகிய இயேசு என்றாவது ஒரு நாள் வரக் கூடும், அவர் 'சீக்கிரமாக' வரப்போகிறதில்லை என்றே கிறிஸ்தவர்களில் பெரும்பாலானவர்களும் எண்ணுகின்றனர். வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், கர்த்தருடைய வார்த்தை நிறைவேறாமல் ஒருபோதும் ஒழிந்துபோகாது. "நான் சீக்கிரமாய் வருகிறேன்" என்ற இந்த மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட வாக்குத்தத்தத்தை அநேகர் சந்தேகிப்பார்கள், அசட்டைபண்ணுவார்கள் என்பதை நம்முடைய கர்த்தர் முன்னமே அறிந்திருந்தார். ஆகவே, அப்படிப்பட்ட சந்தேகக்காரர்களுக்காகவே அவர், "***மெய்யாகவே*** நான் சீக்கிரமாய் வருகிறேன்" என்று கவனமாகக் கூறியிருக்கிறார். தேவனுடைய வார்த்தை மிகவும் நிச்சயமுள்ளதாயிருப்பினும் "*மெய்யாகவே*" என்ற பதம் இங்கு சேர்க்கப்பட்டுள்ளது.

இருப்பினும் ஜனங்கள் தங்களுக்குத் தாங்களே கேடுண்டாக்கத்தக்க விதத்தில் இன்னமும் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தைச் சந்தேகிப்பது எவ்வளவு துக்ககரமான காரியம்! அப்படிப்பட்ட சந்தேகக்காரருக்குக் கர்த்தர் கொடுக்கும் எச்சரிப்பைப் பாருங்கள்: "*அந்த ஊழியக்காரனோ*

பொல்லாதவனாயிருந்து: என் ஆண்டவன் வர நாள் செல்லும் என்று தன் உள்ளத்திலே சொல்லிக்கொண்டு, தன் உடன்வேலைக்காரரை அடிக்கத் தொடங்கி, வெறியரோடே புசிக்கவும் குடிக்கவும் தலைப்பட்டால், அந்த ஊழியக்காரன் நினையாத நாளிலும், அறியாத நாழிகையிலும், அவனுடைய எஜமான் வந்து, அவனைக் கடினமாய்த் தண்டித்து, மாயக் காரரோடே அவனுக்குப் பங்கை நியமிப்பான்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்" (மத். 24 : 48 - 51). ஆண்டவர் வர நாள்செல்லும் என்று *தன் இருதயத்தில் நினைப்பவனே* பொல்லாத ஊழியக்காரன் என்று அழைக்கப்பட்டு, கடினமாய்த் தண்டிக்கப்பட்டு (துண்டு துண்டாக வெட்டப்பட்டு -Eng.), நித்தியமாக அலறியழும்படி மாயக்காரருக்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் இடத்தில் தூக்கியெறியப்படுவானாயின், ஆண்டவர் வர நாள் செல்லும் என்று *சொல்லுகிறவன்* மேல் எவ்வளவு அதிகமான தண்டனை வரும்!

அருமையான வாசகரே, "*மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்*" என்ற ஆண்டவருடைய வாக்குத்தத்தத்தை விசுவாசிப்பீராக. ஒருவேளை இன்று, இந்த க்ஷணப்பொழுதில் கூட கர்த்தர் வருவார்.

கர்த்தருடைய இரகசிய வருகைக்காக 'ஆவலோடு' காத்துக் கொண்டிருப்பவர்களும், அவருடைய வருகையை நேசிப்பவர்களும், அவருடைய வருகையின் நம்பிக்கையினால் நிறைந்திருப்பவர்களும் மட்டுமே அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல தங்களையும் சுத்தி கரித்துக்கொண்டு, அவருடைய வருகைக்கான ஆயத்தத்தோடு ஜீவிப் பார்கள். "*இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது ... அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிற வனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்தி கரித்துக்கொள்ளுகிறான்*" (I யோவான் 3 : 2, 3).

பெப்ரவரி 25

வெளிப்படுத்தலுள்ள ஒரு மனிதன்

"***ஆபேல் ஆடுகளை மேய்க்கிறவனானான், காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனானான்***" (ஆதி. 4 : 2).

"*ஆபேல் ஆடுகளை மேய்க்கிறவனானான்*" - மனிதன் தெரிந்து கொண்ட முதல் வேலை - ஆடுகளை மேய்த்தல் ஆகும். அது

ஆத்துமாக்களைப் பராமரிப்பதைக் குறிக்கிறது. அதுவே மிகச் சிறந்த வேலையாகும். நமக்கு ஒரு மேய்ப்பனின் இருதயம் அவசியம்; மற்றவர் களைக் குறித்தும், அழிந்துபோகிற ஆத்துமாக்களைக் குறித்தும், பற்பல தேவைகளோடிருப்பவர்களைக் குறித்தும் நமக்கு ஒரு பாரமும் கரிசனை யும் கவலையும் இருக்க வேண்டும். குறிப்பாக, ஒரு தேவ ஊழியன் தன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் ஆத்துமாக்களை ஜாக்கிரதை யோடு விழித்திருந்து காக்க வேண்டும். தேவன் ஆபேலையும் அவனது ஊழியத்தையும் அதாவது அவனுடைய காணிக்கையையும் அங்கீகரித்துக் கனம்பண்ணினதாக நாம் பின்னர் காண்கிறோம். அவ்வாறே, கர்த்தராகிய இயேசுவை மனப்பூர்வமாகச் சேவிப்பவர்கள் பிதாவானவரால் கனப் படுத்தப்படுவார்கள்.

"*காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனானான்*" - ஆபேலின் வேலை தேவனுக்கு மிகவும் பிரியமானதாயிருந்ததினிமித்தம் அவன் தெரிந்து கொண்ட உத்தியோகம் முதலாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆபேல் ஆடுகளுக்கு ஊழியஞ்செய்துகொண்டிருந்தபோது, காயீன் தேவனால் சபிக்கப்பட்ட பூமிக்குச் சேவை செய்துகொண்டிருந்தான். தேவன் நாடித் தேடுகிறதான - மற்றவர்கள் மேல் கரிசனையுள்ள இருதயம் காயீனுக்கு இருக்கவில்லை என்பது தெளிவு. பின்னர், தேவன் அவனிடம், "உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே" என்று கேட்டபோது, "என் சகோதரனுக்கு நான் காவலாளியோ" என்று அவன் அவருக்குப் பதிலளித்ததிலிருந்து இதனை நாம் விளங்கிக்கொள்ளலாம்.

ஆபேல் வெளிப்படுத்தலுள்ள ஒரு மனிதனாயிருந்தான். அவன் தெரிந்துகொண்ட வேலை தேவனுடைய ஏவுதலினால் உண்டான ஒன்றா யிருந்தது என்பதில் சந்தேகமில்லை; அவனுடைய காணிக்கையும் அப்படியே. ஆபேல் "*தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான்*" (ஆதி. 4 : 4). 'மந்தையின் தலையீற்றுகள்' மந்தையிலுள்ளவைகளில் மிகச் சிறந்தவை யாகும். 'மந்தையின் கொழுமையானவைகள்' என்பதிலுள்ள 'கொழுமை' என்பதற்கு எபிரெய மொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள பதம் மிகச் சிறந்த பகுதி என்று பொருள்படும். இவ்வாறு ஆபேல் மிகச் சிறந்தவைகளிலும் மிகச் சிறந்ததைக் காணிக்கையாகக் கொண்டுவந்ததினிமித்தம் அவ னுடைய காணிக்கை 'அதிக மேன்மையான பலியாகத்' தேவனால் கனப் படுத்தப்பட்டது. "*விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்*" என்று எபிரெய நிருபக்காரன் கூறுகிறார். விசுவாசம் புதிய வெளிப்படுத்தல்களை அளிக் கிறது; மேன்மையான விசுவாசமோ மேன்மையான வெளிப்படுத்தல்களை அளிக்கிறது.

பெப்ரவரி 26

தேவனைத் தேடுங்கள்

'விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைக் கருத்தாய்த் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்' (எபி. 11 : 6 -Eng.).

விசுவாசம் தேவனைப் பிரியப்படுத்துகிறது. பெரிய விசுவாசம் தேவனை அதிகமாகப் பிரியப்படுத்துகிறது. தேவனை நம்பி அவருடைய வார்த்தையின் அடிப்படையில் கிரியை செய்வதே விசுவாசமாகும். நமக்கு விசுவாசம் இல்லையெனில், பயமானது நம்முடைய எல்லா ஆசீர் வாதங்களையும் அழித்துவிடும்.

'*அவர் தம்மைக் கருத்தாய்த் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவர்*' (Eng.). - அவர் *தம்முடைய ஆசீர்வாதங்களைக் கருத்தாய்த்* தேடுகிறவர் களுக்கல்ல, *தம்மைக் கருத்தாய்த்* தேடுகிறவர்களுக்கே பலன் அளிக்கிற வராயிருக்கிறார் என்பதைத் தயவாகக் கவனிக்கவும். இங்குதான் தேவ ஜனங்கள் பலரும் தவறிழைக்கிறார்கள். அவர்கள் ஆசீர்வாதங்களனைத் தையும் அளிப்பவரைத் தேடுவதற்குப் பதிலாக, ஆசீர்வாதங்களையே தேடுகின்றனர். நீங்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களை மட்டும் தேடு வீர்களாயின், ஒரு நாள் அவருடைய ஆசீர்வாதங்களெல்லாம் - உங் களுடைய சுகம், செல்வம் போன்ற அனைத்தும், மற்றும் உங்களுக்கு அருமையானவர்களும், நண்பர்களும் உங்களை விட்டு நீக்கப்படக் கூடும்; அப்பொழுது உங்களிலுள்ள பெலவீனமான விசுவாசம் உங்களைக் கைவிடும் என்பதை நினைவிற்கொள்ளுங்கள். யோபைப் பாருங்கள்! அவன் தன்னுடைய ஆஸ்தியையும் பிள்ளைகளையும் தன்னுடைய சுகத்தையுங்கூட இழந்துபோனபோதிலும் அவனுடைய விசுவாசம் இன்னு மதிகமாகப் பெருகிற்று. அவனுடைய விசுவாசம் மிகவும் பெலமுள்ளதாக மாறியதினிமித்தம் அவன் ஜெயத்தொனி முழக்கக்கூடியவனாயிருந்தான் - "*என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல் முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்; இந்த வாஞ்சையால் என் உள்ளிந்திரியங்கள் எனக்குள் சோர்ந்துபோகிறது*" (யோபு 19 : 25 - 27).

'தேவனைக் கருத்தாய்த் தேடுதல்' என்பது யாது? அது, தேவனுடைய அதே சுபாவத்தை ஜாக்கிரதையோடு நாடித்தேடுதல் ஆகும். தேவபிள்ளையே, கர்த்தருடைய சுபாவத்தை அடைந்துகொள்ளும்படி யாகவே அவரைத் தேடுவாயாக; அப்போது அவருடைய ஆசீர்வாதங்கள் உனக்குக் 'கூடக் கொடுக்கப்படும்'.

பெப்ரவரி 27

ஜீவனுள்ள நம்பிக்கையா? அல்லது மரித்த நம்பிக்கையா?

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, ... ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி ... நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்" (I பேதுரு 1 : 3, 4).

இங்கு, அப். பேதுரு ஒரு ஜீவனுள்ள அல்லது ஜீவிக்கிற நம்பிக்கையைக் குறித்துப் பேசுகிறார். இரண்டு வகையான நம்பிக்கைகள் உள்ளன - அவை ஜீவிக்கிற நம்பிக்கையும், மரித்த நம்பிக்கையும் ஆகும்.

நீங்கள் இந்த உலகத்தில் ஐசுவரியவான்களாகவோ, பெரியவர்க ளாகவோ அல்லது புகழ்பெற்றவர்களாகவோ மாற விரும்பினால் உங்களுக்கிருக்கும் நம்பிக்கை செத்த நம்பிக்கையாகும்; பெரியவர்களாக வேண்டுமென்று நீங்கள் கட்டியெழுப்புகிற நம்பிக்கைகளெல்லாம் உங்கள் மரணத்தோடு ஒரு முடிவுக்கு வந்துவிடும்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் மூலம் நமக்குக் கிடைக்கும் ஜீவனுள்ள நம்பிக்கை யாது? 'நான் உயிரோடிருக்கையில் கர்த்தராகிய இயேசு வருவாராயின், தேவகிருபையினால் நான் மறுரூப மடைவேன்!' என்பதே அந்த நம்பிக்கை ஆகும். கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படுகிற விஷயத்திலுங்கூட சிலருக்கு ஒரு மரித்த நம்பிக்கை இருக்கிறது. கர்த்தராகிய இயேசு தாங்கள் உயிரோடி ருக்குங்காலத்தில் வருவாராயின் தாங்கள் ஒருபோதும் ஆயத்தமாயிருக்க முடியாது என்று அவர்கள் நினைக்கிறார்கள். கர்த்தராகிய இயேசு வரும் போது எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்றால், தாங்கள் வியாதிப் படுக்கையில் கிடந்து பரிசுத்தமாக்கப்பட்டு மரிக்க வேண்டுமென்பதே அவர்களுக்கிருக்கும் பரிதபிக்கப்படத்தக்க நம்பிக்கையாகும். இது நிச்சய

மாகவே ஒரு மரித்த நம்பிக்கையாகும். அப். பவுல் கூறுவதைப் பாருங்கள்: '*கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் கர்த்தருக்கு எதிர் கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவோம்*' (I தெச. 4 : 15, 17). வேறு வார்த்தைகளில் கூறின், கிறிஸ்து வரும்போது நம்மில் இப்பூமியில் உயிரோடிருப்பவர்கள் அதாவது நம்மில் எடுத்துக்கொள்ளப்படுதலின் நம்பிக்கை அல்லது மறுரூபத்தின் நம்பிக்கை உள்ளவர்களாய் இப்பூமியில் ஜீவிப்பவர்கள் ஆகாயத்தில் அவரைச் சந்திப்பார்கள்.

அருமையான தேவபிள்ளையே, உனக்கு எந்த வகையான நம்பிக்கை இருக்கிறது? அது ஒரு ஜீவனுள்ள நம்பிக்கையா அல்லது மரித்த நம்பிக்கையா?

"*எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபை யானது பிரசன்னமாகி, நாம் அபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத் துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது*" (தீத்து 2 : 11 - 13). தேவகிருபையானது நம்முடைய ஜீவியத்தை நிறைத்திருக்குமாயின், நமக்கு ஒரு ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாயிருக்கும். மேலும் ஜீவனுள்ள நம்பிக்கை உள்ளவர்கள் மட்டுமே ஜீவனுள்ள கிறிஸ்தவர்களாயிருக்கக் கூடும்.

பெப்ரவரி 28

ஆளுகை செய்யும் தூய்மை

"***கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்***" (ஏசாயா 9 : 6).

தேவனுடைய பரிசுத்தம் என்பது தேவன் ராஜரீகம்பண்ணுதலுடன் அல்லது அவரது ஆளுகையுடன் சம்பந்தமுள்ளதாயிருக்கிறது. "*கர்த்தர் ராஜரீகம்பண்ணுகிறார்*" என்று துவங்கும் பல சங்கீதங்கள் '*பரிசுத்தம்*' என்னும் வார்த்தை அடங்கியுள்ள ஒரு வசனத்தோடு முடிவடைகின்றன என்பது நமக்கு மிகவும் ஆர்வமூட்டுவதாயிருக்கிறது. எடுத்துக்காட்டாக, 93 -ஆம் சங்கீதத்தின் முதல் வசனம், "*கர்த்தர் ராஜரீகம்பண்ணுகிறார்*" என்று துவங்கி, அதன் கடைசி வசனம், '*பரிசுத்தமானது உமது ஆலயத்தின்*

அலங்காரமாயிருக்கிறது' என்று முடிவுறுகிறது. அதைப் போலவே, 97 -ஆம் சங்கீதம், "*கர்த்தர் ராஜரீகம்பண்ணுகிறார்*" என்று துவங்கி, 12 -ஆம் வசனம், '*அவருடைய பரிசுத்தத்தின் நினைவுகூருதல்*' என்று முடிவுறுகிறது. 99 -ஆம் சங்கீதம், "*கர்த்தர் ராஜரீகம்பண்ணுகிறார்*" என்று துவங்கி, '*நம்முடைய தேவன் பரிசுத்தமுள்ளவர்*' என்று முடிவுறுகிறது (வச. 9). இதிலிருந்து தேவன் நம் மேல் ராஜரீகம்பண்ணும்படியாக அதாவது அவர் நம்மை ஆளுகை செய்யும்படியாக, பரிசுத்தம் நம்முடைய ஜீவியத்தை ஆளுகை செய்ய வேண்டுமென்று அவர் விரும்புகிறார் என்பதை நாம் கற்றுக்கொள்கிறோம். பரிசுத்த தேவன் தமது பரிசுத்தத்தை நேசியாதவர்களை ஆளுகை செய்யக்கூடாதவராயிருப்பார்.

அதிபதிகள் அல்லது தலைவர்கள் என்பவர்கள் கர்த்தர் தங்களுக்குள் பரிசுத்தத்தில் ஆளுகை செய்கிற அனுபவம் உள்ளவர்களாயிருக்க வேண்டும். சபையிலும் பரிசுத்தத்தை நேசியாத நடத்திப்புக்காரர்களுக்கு மற்றவர்கள் மேல் ஆளுகை செய்ய எழுத்தின்படியோ அல்லது ஆவிக்குரிய பிரகாரமாகவோ எவ்வித உரிமையும் இராது. தன் ஆவியை ஆளுகை செய்யாத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம் போலிருக்கிறான் (நீதி. 25 : 28 -Eng.). மதிலிடிந்த பட்டணம் பாதுகாப்பற்றதாக, எப்பொழுதும் சத்துருவின் தாக்குதல்களுக்கு ஏதுவானதாயிருக்கும்.

அருமையான தேவபிள்ளையே, நீ மதிலில்லாத ஒரு பட்டணம் போலிருக்கிறாயா? அப்படியெனில், பிசாசு தன் பிரதிநிதிகளுடன் உன்னுடைய ஜீவியத்தைப் பாழாக்கிக்கொண்டிருக்கிறான். ஒருவேளை கர்த்தரோ அல்லது அவருடைய பரிசுத்தமோ உன்னை ஆளுகை செய்ய நீ அனுமதிக்காமலிருப்பதே நீ சந்திக்கும் மிகப் பெரிய பிரச்சினைகளுள் சிலவற்றுக்கான காரணமாக இருக்கக் கூடும்.

உன்னுடைய ஜீவியத்தின் கர்த்தத்துவம் '*அவர் தோளின்மேல்*' இருக்கட்டும். அப்பொழுது, '*அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும் அதின் சமாதானத்துக்கும் முடிவிராது*'. வேறு வார்த்தைகளில் கூறின், தேவன் தம்முடைய பரிசுத்தத்தைக் கொண்டு உன்னுடைய ஜீவியத்தில் ஆளுகை செய்கையில், உன்னுடைய ஜீவியத்திற்கு விரோதமாக வரும் அந்தகார வல்லமைகள் எல்லாவற்றின் மேலும் அவர் ஆளுகை செய்து, உன்னுடைய சோதனைகளிலெல்லாம் உனக்கு ஜெயத்தைக் கட்டளையிடுவார். ஆகவே பரிசுத்தமானது உன்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்தை முடிசூட்டுவதாக.

பெப்ரவரி 29

பாவத்தை விட்டு விலகியிரு

"***உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்துபிடிக்கும் என்று நிச்சயமாய் அறியுங்கள்***" (எண். 32 : 23).

ஒவ்வொரு பாவமும் ஒரு காந்தத்தைப் போன்று ஈர்க்கும் சக்தியுடையதாய் இருக்கிறது; நீங்கள் அதனருகே செல்லுகையில் அதினால் ஈர்க்கப்படுகிறீர்கள்.

கரை புரண்டோடிக்கொண்டிருந்த ஓர் ஆற்றில் மிதந்து வந்து கொண்டிருந்த பிளாஸ்டிக் சாமான்களையும், எடையற்ற இலேசான பொருட்களையும் சேகரிப்பதைத் தங்கள் பொழுதுபோக்காகக் கொண்டிருந்த இரு வாலிபர்களைப் பற்றி கூறப்படும் கதை ஒன்றுண்டு. திடீரென சற்று தொலைவில் ஒரு கறுப்புக் கம்பளியைப் போல் தோற்றமளித்த ஏதோ ஒன்று ஆற்றில் மிதந்து வருவதை அவர்கள் கண்ணுற்றனர். அவர்களில் ஒருவன் அதன் பக்கமாக நீந்திச் சென்று, கறுப்புக் கம்பளியைப் போல் காட்சியளித்த அப்பொருளைப் பிடித்துக்கொண்டான். ஆனால் அந்தக் கம்பளியைப் பிடித்துக்கொண்ட மாத்திரத்திலேயே அவன் அமிழ்ந்துபோகத்தொடங்கினான். கரையிலிருந்த மற்ற வாலிபன் அவனை நோக்கி, 'கம்பளியை விட்டுவிட்டு வந்துவிடு' என்று சத்தமிட்டான். அமிழ்ந்துகொண்டிருந்த பையனோ, 'நான் அதை விட்டுவிட்டேன். ஆனால் அது என்னை விடுகிறதில்லையே!' என்று அலறினான். அந்த வார்த்தைகளோடு அந்த வாலிபன் கண்களுக்குப் புலப்படாமல் மறைந்து விட்டான். அப்பொழுது, கறுப்புக் கம்பளியினாலான துப்பட்டியைப் போல் காட்சியளித்த அந்த வஸ்து தண்ணீரில் நீந்திக்கொண்டுபோவதைக் கண்டு, கரையிலிருந்த மற்ற பையன் அதிர்ச்சியும் பீதியும் அடைந்தான். ஏனெனில் அது ஒரு பெரிய கறுப்புக் கரடியாக இருந்தது!

ஒவ்வொரு பாவமும் ஒரு கறுப்புக் கரடியைப் போன்றதே. முதலாவதாக நீங்கள் அதன்பால் கவர்ந்திழுக்கப்படுகிறீர்கள். புகை பிடித்தல், மதுபானம் அருந்துதல், தொலைக்காட்சி, இணையதளம் (internet) போன்றவை ஆரம்பத்தில் தீங்கற்றவை போலவும், விரும்பத்தக்கவை போலவும் காட்சியளிக்கக் கூடும். ஆனால் அவை முடிவில் உங்கள் ஆவி ஆத்துமா சரீரத்தைக் கொன்றுபோடும். 'பாவம் வாக்குப்பண்ணுபவை எல்லாம் அருமையானவை போல் தோன்றினும், அதற்காகச் செலுத்த வேண்டிய கிரயமோ கொடூரமானது' என்று ஆல்பர்ட் நீல்சன் (Albert Nielson) என்பவர் கூறியிருக்கிறார். "*பாவத்தின் சம்பளம் மரணம்*" (ரோமர் 6 : 23).

கூடுமான வரை பாவமுள்ள இடங்களிலிருந்தும் ஜனங்களிலிருந்தும் எவ்வளவதிகமாய் விலகியிருக்கக் கூடுமோ அவ்வளவதிகமாய் விலகியிருங்கள். "*துன்மார்க்கருடைய பாதையில் பிரவேசியாதே; தீயோருடைய வழியில் நடவாதே. அதை வெறுத்துவிடு, அதின் வழியாய்ப் போகாதே; அதை விட்டு விலகிக் கடந்துபோ*" (நீதி. 4 : 14, 15).

மார்ச் 1

தேவனே, நீர் எவ்வளவு பெரியவர்!

"***உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது, மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்***" (சங். 8 : 3, 4).

வானத்திற்கும் பூமிக்கும் இடையேயுள்ள வித்தியாசமானது, எந்த ஓர் உதாரணத்தைக் கொண்டும் விவரிக்க முடியாத அளவுக்கு அவ்வளவு பெரியதாயிருக்கிறது. நமது நட்சத்திர மண்டலமானது 'பால் வெளி மண்டலம்' (Milky way) என அழைக்கப்படுகிறது. விஞ்ஞானிகளின் கூற்றுப்படி சூரியமண்டலத்தைத் தன்னுடைய ஒரு பகுதியாகக் கொண்ட நம்முடைய நட்சத்திர மண்டலத்தில் (galaxy), 30 மில்லியனுக்கும் அதிகமான சூரியன்கள் இருக்கின்றன. 1½ மில்லியன் பூமிகளை ஒரு சூரியனுக்குள் அடக்கிவிடலாம். மொத்தத்தில் 1, 00, 000 நட்சத்திர மண்டலங்கள் இருக்கின்றன. இந்த 1, 00, 000 மண்டலங்களையும் ஒன்றாக இணைத்தே தேவன் வானத்தைச் சிருஷ்டித்திருக்கிறார். இது, வானங்கள் அல்லது ஆகாயமண்டலம் என்பது எவ்வளவு விஸ்தாரமானது என்பதைப் பற்றிய ஓரளவு அறிவை நமக்கு அளிக்கிறது. "*வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது*" (சங். 19 : 1) என சங்கீதக்காரன் வியந்து கூறுகிறான். இப்பரந்த அகிலாண்டத்தையும் சிருஷ்டித்த தேவன் அதனோடு கூட இச்சிறிய பூமியையும் படைத்தார், அதிலே நாம் சின்னஞ்சிறு புள்ளிகளைப் போல் காணப்படுகிறோம்.

அகிலாண்டத்தின் தனிப்பெருஞ்சிறப்போடு ஒப்பிட்டு நோக்கும் போது, மனிதன் எவ்வளவு அற்பமானவன்! எனினும் இத்தகைய மகிமையான சிருஷ்டிகளைப் படைக்கக்கூடியவரும், படைத்தவருமாகிய தேவன் மனிதனைத் தமது சாயலாகவே சிருஷ்டித்தார். அகிலாண்டத்தையும் சிருஷ்டித்த தேவன்தாமே இச்சிறிய மனுஷனையும் சிருஷ்டித்தார். இது

தேவனுடைய மகத்துவத்தையும், அவர் மனிதன்பால் கொண்டிருக்கும் பெரிதான அன்பையும் நமக்கு வெளிப்படுத்துகிறது. "*உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது, மனுஷனை நீர் நினைக்கிற தற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்*" (சங். 8 : 3, 4).

நம்முடைய தேவன் எவ்வளவு அதிசயமானவர்! அன்பான வாசகரே, நாம் மேன்மைபாராட்டுவதற்கு நமக்கு என்ன இருக்கிறது? தாம் நம் மீது எவ்வளவு கரிசனையுள்ளவராயிருக்கிறார் என்பதை அவர் நமக்குக் காண்பித்திருக்கிறார். உங்களுக்கு இந்த வெளிப்படுத்தல் இருக்கு மாயின் பூமிக்குரிய காரியங்களுக்காக நீங்கள் ஒருபோதும் கவலைப் பட்டுக் கலங்க மாட்டீர்கள்.

மார்ச் 2

உங்கள் உடன்படிக்கையில் உறுதியாய் நில்லுங்கள்

"***பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்***" (சங். 50 : 5).

வெளிப்படுத்தின விசேஷம் 12 : 1 -இல் சந்திரன் மீது நிற்கிற ஒரு ஸ்திரீயைக் குறித்து நாம் வாசிக்கிறோம். இந்த 'ஸ்திரீ', தேவனுடைய சபையை அல்லது தனிப்பட்ட ஒவ்வொரு விசுவாசியையும் குறிக் கிறது; 'சந்திரன்' தேவகிருபையைக் குறிக்கிறது; 'நிற்பது' என்பது நமது உடன்படிக்கைகளிலும், அர்ப்பணிப்புகளிலும் நாம் உறுதியாய் நிற்பதைக் காண்பிக்கிறது. எனவே, 'சந்திரன் மீது நிற்பது' என்பது, நமது உடன்படிக்கைகளில் நாம் உறுதியாயிருக்கும்போது நமது வாழ்க்கையில் நாம் கிருபையுள்ளவர்களாயிருப்போம் என்பதை வெளிப்படுத்துகிறது. நமது உடன்படிக்கைகளில் நாம் உறுதியாய் இராமற்போகும்போது, உண்மையில் நாம் நமது கால்களைத் தேவகிருபையினின்று விலக்கிக் கொள்கிறோம். எனவே தேவனுடைய பிள்ளையே, நீ பூரணமாக்கப்பட்டு கர்த்தருடைய மணவாட்டியாகக் காணப்படுவதற்கான கிருபையை உடைய வனாக இருக்கும்படியாக, உன் தீர்மானங்களையும் பிரதிஷ்டைகளையும் உறுதியாகப் பற்றிக்கொள்ளுவாயாக.

உன்னுடைய அழைப்புக்கேற்ப நீ தேவனோடு உடன்படிக்கை களைச் செய்ய வேண்டும். உனக்குக் கிடைக்கும் கிருபையின் அளவு,

தேவனோடு நீ செய்திருக்கும் உடன்படிக்கைகளின் தரத்துக்குத் தக்க தாகவே இருக்கும். நீ ஒரு தேவ ஊழியனாயிருந்தால், அல்லது நீ தேவ ஊழியனாய் இருக்கும்படி அழைக்கப்பட்டிருந்தால், தேவனோடுள்ள உன் உடன்படிக்கை அதற்கேற்ப ஆழமானதாயிருக்க வேண்டும். அப்போது அவ்வாழ்க்கை வாழத் தேவையான கிருபை உன் மேல் பொழிந்தருளப் படும். சீயோன் மலையைக் குறித்து, அது "*என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும்*" (சங். 125 : 1) என்று கூறப்பட்டுள்ளது.

எனவே, தேவபிள்ளையே, அக்கினிமயமான சோதனைகளிலெல் லாம் உன்னால் முடிவுபரியந்தம் உறுதியாய் நிலைநிற்கக் கூடுமா என்று சந்தேகிக்காமல், கர்த்தருக்கு ஊழியஞ்செய்யும்படியாக தைரியமாக அடியெடுத்து வைப்பாயாக. எல்லையற்ற அவரது கிருபையின் மீது நம்பிக்கை வைப்பதன் மூலம், நாம் சீயோன் பர்வதத்தைப் போன்றதான என்றென்றும் அசையாத ஒரு ஜீவியம் செய்யலாம். மலைகள் விலகி னாலும் அவரது கிருபை நம்மை விட்டு விலகாமலும், அவரது சமாதானத் தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என கர்த்தர் கூறுகிறார். நாம் கர்த்தரோடுள்ள நம் உடன்படிக்கையை விட்டு விலகாதிருக்கும் பட்சத்தில், அவரது கிருபையும் நம்மை விட்டு விலகுவதில்லை. வெற்றியுள்ளதொரு கிறிஸ்தவ வாழ்க்கையின் இரகசியம் இதுவே; சீயோன் வாழ்க்கையின் இரகசியமும் இதுவே!

சீயோனின் பரிசுத்தவான்களைக் குறித்து சங்கீதக்காரன், 'அவர்கள் பெலத்தின் மேல் பெலனடைவார்கள்' என்று கூறுகிறான் (சங். 84 : 7). அவர் களுடைய உடன்படிக்கையின் பெலத்தினாலும், இவ்வுடன்படிக்கைக்குட் பட்ட வாழ்க்கையின் மூலம் அவர்களில் பிரவாகித்துவரும் கிருபையின் திரட்சியினாலும் அவர்களுக்குச் சீயோனுக்குச் செல்லும் பாதை இடுக்க மானதாக அல்ல, விசாலமானதாக இருக்கும். இப்பாதை இடுக்கமான தாகவும், கடினமானதாகவும் இருப்பதாக நீங்கள் உணருவீர்களாயின், அதன் காரணம், நீங்கள் உங்கள் தேவனோடு செய்துள்ள உங்கள் உடன்படிக்கையைக் காத்துக்கொள்ளாதிருப்பதே ஆகும்.

மார்ச் 3

ஜெபங்கள் தடைபடுவது ஏன்?

'***அந்தப்படி புருஷர்களே, உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு உங்கள் மனைவிகளுடனே வாழ்ந்து அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள். மேலும்,***

நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதர சிநேகமுள்ளவர்களும், மனஉருக்கமுள்ளவர்களும், இணக்க முள்ளவர்களுமாய் இருங்கள்' (I பேதுரு 3 : 7, 8).

தங்கள் ஜெபங்களுக்குச் சில வேளைகளில் பதில் கிடைக்காமற் போவதின் காரணத்தைப் பல தம்பதியினரும் உணராதிருக்கின்றனர். தம்பதியினர் ஒருமனமுள்ளவர்களாயிராவிடில், அல்லது அவர்கள் ஒற்றுமையாக, ஐக்கியமாக ஒன்றுபட்டு ஜீவிக்காவிடில் அவர்களது ஜெபங்களுக்குத் தடைவரும் என மேற்கூறப்பட்டுள்ள வசனத்திலிருந்து நாம் கற்றுக்கொள்கிறோம். பெரும்பாலும் சண்டை சச்சரவு செய்து வாக்கு வாதம் பண்ணும் தம்பதியரின் ஆவியானது அவர்கள் ஒன்று சேர்ந்து ஜெபிக்க ஆயத்தமற்ற நிலையிலிருப்பதால், அவ்வீடுகளில் குடும்ப ஜெபமே இல்லாமற்போகிறது. ஐக்கியத்தை நாடாமலிருந்துகொண்டு, 'நான் தனியாக ஜெபிக்கிறேன்' என நீங்கள் ஒருவேளை கூறலாம். ஆனால் அந்த ஜெபம் தேவசமுகத்தைச் சென்றடையாமற்போகக் கூடும்.

எவ்வாறு தம்பதியினர் ஒருமனமுள்ளவர்களாயிருக்கக் கூடும்? '*நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களாயும் ஒருவர்மேலொருவர் மனதுருக்க முள்ளவர்களாயும்*' இருக்க வேண்டும் என மேற்காணும் வசனம் கூறுகிறது. ஆம், அதுவே அந்த இரகசியம். தன் மனைவியோ அல்லது கணவரோ சுபாவத்தில் பூரணராய் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கும் ஒரு தம்பதியினர் ஒருபோதும் ஐக்கியமாக ஜீவிக்க முடியாது. மனைவி தன் கணவனின் ஜீவியத்தில் பல்வேறு தோல்விகளையும் தவறுகளையும் காணக் கூடும்; கணவனும் தன் மனைவியில் பல தவறுகளைக் காணக் கூடும். எனவே ஒருவர் மேலொருவர் மனதுருக்கமுள்ளவர்களாயிருந்தால் மாத்திரமே அவர்கள் ஒருமனமுள்ளவர்களாய்க் காணப்பட முடியும். மனதுருக்கம் என்றால் என்ன? ஒருவர் மற்றொரு நபரின் சுபாவத்தில் காணப்படும் பலவீனமான அம்சங்கள், அவருடைய பிரச்சினைகள், தோல்விகள், குறைபாடுகள் போன்றவற்றைக் குறித்து அனுதாபங் கொள்வதே மனதுருக்கம் ஆகும். அந்நபர் மேல் அனுதாபங் கொள்வதற்குப் பதிலாக, அவரது தோல்விகளைக் குறித்து அவர்களைக் குற்றப்படுத்தும் மனப்பான்மை உங்களில் இருக்குமாயின், நீங்கள் ஒருபோதும் அந்நபருடன் ஒருமனமுள்ளவர்களாயிருக்க முடியாது. நீங்கள் ஒருமனமற்றவர்களாயிருக்கும் வரை உங்கள் ஜெபம் தடைபடும்.

இக்கொள்கையானது திருமணமான தம்பதியினருக்கு மாத்திரமல்ல, மற்றவர்களுக்கும் பொருந்தும். அன்பான வாசகரே, ஒருவேளை நீர் மற்றவர்களோடு ஒருமனமற்றவராயிருப்பதினாலேயே உம் ஜெபங்கள்

சிலவற்றிற்குப் பதில் கிடைக்காமலிருக்கக் கூடும். சுவிசேஷ ஊழியத் திலோ, குடும்ப வாழ்க்கையிலோ அல்லது வேறெந்தச் சூழ்நிலையிலா யினும் பிறரைக் குற்றப்படுத்தும் மனப்பான்மையுடன் அவர்களைப் பாராமல், அவர்கள் மேல் மனதுருக்கமுள்ளவர்களாயிருந்து, அவர்களோடு ஐக்கியப்பட்டிருந்தால் மட்டுமே தேவன் நம் ஜெபங்களுக்குப் பதிலளிப்பதை நம்மால் காண முடியும்.

மார்ச் 4

தேவனோடிருக்க ஏற்படுத்தப்பட்டவர்கள்

'தேவனாகிய கர்த்தர் மனுஷனை எடுத்து ஏதேன் தோட்டத்தில் வைத்தார்' (ஆதி. 2 : 15 -Eng.).

'*தேவனாகிய கர்த்தர் மனுஷனை எடுத்தார்*' - தேவன் எண்ணிலடங் காத சிருஷ்டிகளை வானத்திலும் பூமியிலும் சிருஷ்டித்தபோதிலும், அவர் தமது மகனாகவும் தமது மிகுந்த பாசத்தைச் செலுத்தக்கூடிய ஏதுவாகவும் இருக்கும்படி மனிதனை மாத்திரமே தமக்காக எடுத்தார்.

'*அவனை ஏதேன் தோட்டத்தில் வைத்தார்*' - 'வைத்தார்' என்ற வார்த்தை 'இளைப்பாறுதல்' என்றும் பொருள்படும். ஏதேன் தோட்டமே மனிதன் இளைப்பாறுவதற்கு ஏற்ற மிகச் சிறந்த இடமாயிருந்தது. 'ஏதேன்' என்றால் 'மகிழ்ச்சி' என்று பொருள். மெய்யான ஏதேன் தோட்டமாகிய தேவனுடைய சபையானது கிருபையால் இரட்சிக்கப்பட்டிருக்கும் ஒரு பாவிக்கு இளைப்பாறுதலும் புத்துணர்வும் அளிக்கும் இடமாயிருக்கிறது. 'இளைப்பாறுதல்' என்பது, சோம்பலாக, செயலற்றிருப்பது என்று பொருள் படாது. ஏதேன் தோட்டத்தைப் "பண்படுத்தவும் காக்கவும்" தேவன் மனிதனை அங்கு வைத்தார்.

மனிதனைத் 'தோட்டத்திற்குள்' அல்லது தமது சேவைக்குள் வைக்குமுன் தேவனாகிய கர்த்தர் அவனை '*எடுத்தார்*'. அதே முறைமையையே தேவன் இப்போதும் கையாளுகிறார். அவர் தமது ஊழியத்திற்காக நம்மை அழைக்குமுன், ***நாம் அவரோடிருப்பதற்காக அவர் நம்மைத் தமக்கென்று எடுத்துக்கொள்கிறார்***. "*அவர் பன்னிரண்டு பேரைத் தெரிந்துகொண்டு, அவர்கள் தம்மோடுகூட இருக்கவும், பிரசங்கம்பண்ணும் படியாகத் தாம் அவர்களை அனுப்பவும் ... ஏற்படுத்தினார்*" (மாற்கு 3 : 14, 15). நாம் அவரோடு ஜீவிக்கக் கற்றுக்கொண்ட பின்னர் அவரால் நம்மை எங்கும் அனுப்பக் கூடும். இப்போது அநேகருக்கு நேரிட்டுள்ள அபாயம்

யாதெனில், அவர்கள் அவரோடு ஜீவிப்பதை நாடுவதில்லை; அவர் இல்லாமலேயே பிரசங்கிக்கவும் போதிக்கவும் நாடுகின்றனர். அவர் தமக்கு ஊழியம் செய்யும்படி நம்மை அனுப்பத்தக்கதாக, முதலாவதாக நாம் அவரோடிருக்கக் கற்றுக்கொள்வோமாக.

அன்பான வாசகரே, தேவனுடைய தோட்டத்தை நாம் பாதுகாக்க முற்படுமுன், நம்மை நாமே பாதுகாத்துக்கொள்ளக்கூடியவர்களாயிருக்க வேண்டும். தேவனுடைய அன்பில் உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்; அப்போது தேவ அன்பு உங்களைக் காத்துக்கொள்ளும். தேவசமுகத்தில் உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்; அப்போது தேவசமுகம் உங்களைக் காத்துக்கொள்ளும்.

மார்ச் 5

மெய்யான சந்தோஷம்

"***இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்***" (மத். 5 : 8).

'பாக்கியம்' என்பது 'சந்தோஷம்' என்றும் பொருள்படும். பரிசுத்தமே உண்மையான சந்தோஷம் ஆகும். மற்ற சந்தோஷங்களனைத்தும் கற்பனையானவையும் மாய்ந்துபோகக் கூடியவையுமாய் இருக்கின்றன.

வெப்ப மண்டல நாடுகளிலுள்ள மணல் நிறைந்த கடற்கரைகளில் மணலின் மீது சிறிது நேரம் படுத்திருப்பது ஜனங்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாயிருக்கிறது. அது அவர்களுக்கு ஒரு இன்பமாகத் தோன்றக் கூடும். ஆனால் ஒருவன் அவ்விதம் மணலின்மேல் படுத்திருந்துவிட்டு கடற்கரையிலிருந்து வந்த பின், குளித்து சுத்தமான உடையணிந்து, ஒரு மென்மையான படுக்கையில் படுக்கும்போது, அதில் ஒரு சிட்டிகையளவு மணல் இருந்தாலும் அது அவனை உறுத்திக்கொண்டிருக்கும். அதை உதறித் தள்ளும் வரையிலும் அவனுக்கு இளைப்பாறுதலே இராது. அவனைப் பார்த்து ஒருவன், 'இதற்கு முன் நீ மணலின் மீதுதானே படுத்திருந்தாய்! அதை நீ எவ்வளவு சந்தோஷமாய் அனுபவித்தாய்! ஆனால் இப்போதோ ஒரு சிட்டிகையளவு மணல் தானே உன் படுக்கையில் இருக்கிறது; அதை ஏன் நீ சந்தோஷமாய் அனுபவிக்கக் கூடாது?' என்று வினவினால், அவனது பதில் என்னவாயிருக்கும்? 'இப்போது நான் குளித்து, சுத்தமாயிருக்கிறேன், சுத்தமான உடையை அணிந்திருக்கிறேன், இந்த மிருதுவான படுக்கையில் இருக்கும் கொஞ்சம் மணல் துகள்கள் கூட உண்மையில் என்னை உறுத்துகின்றன' என்பதாயிருக்குமல்லவா?

இவ்வாறே ஒரு பாவியைப் பொறுத்த வரையில் இவ்வுலக சந்தோஷங்களை அனுபவித்தல் என்பது கடற்கரை மணலில் இன்பமாய்ப் படுத்திருப்பதைப் போன்றதாகும். ஆனால், கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வின் இரத்தத்தால் கழுவப்பட்டு, அவரது சுபாவத்தைத் தரித்திருக்கும் ஒருவருக்கு, சிறுசிறு பாவங்களும், முந்தின வாழ்க்கையின் சிற்றின்பங் களும் அவரை உறுத்துபவையாகவும் அவருக்கு வெறுப்பூட்டுபவையாக வும் இருக்கும்.

அன்பான தேவபிள்ளையே, ஜீவியத்தின் தூய்மையை நீ நேசிப் பாயாக; தீமையின் யாதொரு அம்சத்தையும், ஆம், பொல்லாங்காய்த் தோன்றுகிறவைகளையுங்கூட நீ வெறுத்துவிடு; அப்படியானால் நிச்சய மாகவே நீ மகிழ்ச்சியுள்ள ஒரு மனிதனாயிருப்பாய்.

மார்ச் 6

பலுகிப் பெருகுதல்

"***தேவன்: பூமியானது ஜாதி ஜாதியான ஜீவஜந்துக்களாகிய நாட்டு மிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், காட்டுமிருகங்களையும், ஜாதிஜாதியாகப் பிறப்பிக்கக்கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று***" (ஆதி. 1 : 24).

'பூமி' என்பது பூமிக்குரிய மனிதரையும், 'புதிய பூமியின்' பரிசுத்த வான்களையுங்கூட காட்டுகிறது. இதன் எழுத்திற்குரிய அர்த்தத்தின்படி, பூமியானது மிருக ஜீவன்கள், ஊர்வன போன்ற பூமிக்குரிய ஜீவராசி களையே பிறப்பிக்கக் கூடும். ஆவிக்குரிய கருத்தின்படி, பூமிக்குரிய மனிதர் அதாவது உலகப்பொருட்களையே பற்றிக்கொள்ளும் சுபாவம் உள்ளவர்கள் ஆதாயப்படுத்தும் ஆத்துமாக்களும் அப்படிப்பட்ட பூமிக்கடுத்த ஆசைகளுள்ளவர்களாகவே இருப்பர். அவ்வாறே, புதிய பூமிக்குச் செல்லும் பரிசுத்தவான்கள், புதிய பூமிக்குரிய பரிசுத்தவான் களையே பிறப்பிக்கக் கூடும். பூமியினால், பூமிக்கு மேல் பறக்கும் பறவை களைப் பிறப்பிக்க இயலவில்லை (ஆதி. 1 : 20). இப்பூமிக்குரிய சுபாவம் உள்ளவர்களால், புதிய எருசலேமுக்கும், சீயோனுக்குமுரியவர்களை அல்லது தெய்வீக சுபாவமுள்ளவர்களைப் பிறப்பிக்க முடியாது. மேலும் புதிய பூமிக்குச் செல்லும் பரிசுத்தவான்களால், உன்னத ஜீவியம் செய்து கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு ஆத்து மாக்களை ஆதாயப்படுத்த முடியாது. நீங்கள் சென்றடைந்திருக்கும் தூரத்திற்கு அப்பால் மற்றவர்களை உங்களால் வழிநடத்த முடியாது.

ஆவிக்குரிய ரீதியில் உன்னத நிலையில் இருக்கும் பரிசுத்தவான்களால் மட்டுமே ஆவிக்குரிய ரீதியில் உன்னத நிலையிலுள்ள பரிசுத்தவான் களைப் பிறப்பிக்க முடியும்.

"*மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்*" (யோவான் 3 : 6). எல்லா மாம்சீக சுபாவங்களையும் நாம் களைந்துபோடுவோமாக; ஏனெனில் அவை நமக்குள்ளும் மற்றவர் களுக்குள்ளும் மரணத்தை விளைவிக்கும். நாம் ஆவியில் நடந்து, ஆவி யின் கனிகளைத் தேவனுக்குக் கொடுத்து, அதே ஆவிக்குரிய அனுபவத் திற்கு நேராய் அநேகரை வழிநடத்துவோமாக.

மார்ச் 7

ஆச்சரியப்படத்தக்க ஒரு வேண்டுகோள்

'அவன் இயேசுவை நோக்கி : ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி : இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்' (லூக்கா 23 : 42, 43).

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஊழியம் உச்சகட்டத்திலிருந்த போது அநேகர் அவரை விசுவாசித்தனர். அப்பத்தையும் மீனையும் பெருகச் செய்தல், பலவிதமான வியாதிகளோடும் நோய்களோடும் வந்தவர் களைச் சுகமாக்குதல், மரித்தோரை உயிரோடெழுப்புதல் போன்ற அவருடைய அநேக அற்புதங்களை அவர்கள் பார்த்தார்கள். இருப்பினும் இங்கே நம் கர்த்தர் சரீரப்பிரகாரமாக மிகவும் பெலவீனமானவராக, தம்மைக் கூட இரட்சித்துக்கொள்ள முடியாதவராகத் தோன்றிய நிலையில் ஒரு மனிதன் அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்கிறான். அவர் இரத்த வெள்ளத்தில், கொடிய வேதனை அனுபவித்துக்கொண்டிருக்கிறவராய், தம் சொந்த சீஷர்களாலேயே கைவிடப்பட்டவராய், ஆக்கினைத்தீர்ப்புக் குட்படுத்தப்பட்டவராய், ஜனங்களாலும் தலைவர்களாலும் நிந்திக்கப்பட்டு பரியாசம்பண்ணப்பட்டவராய்க் காணப்படுகிறார். இந்தக் குற்றவாளி ஒரு பிரசங்கத்தைக் கேட்டதினாலேயோ அல்லது ஓர் அற்புதத்தைப் பார்த்ததினாலேயோ மனந்திரும்பவில்லை. கர்த்தராகிய இயேசு செய்த அற்புதங்களைப் பார்த்த பலரும் (லாசரு உயிரோடு எழுப்பப்பட்டதைக் கண்டவர்களுங்கூட) அவரை விசுவாசிக்கவில்லை! ஆனால் இங்கே மிகக் கடினகுணமுள்ள ஒரு குற்றவாளி, கிறிஸ்து மிக பலவீனமான மனிதனாகத் தொங்கிக்கொண்டிருந்த வேளையில் அவரில் நம்பிக்கை வைக்கிறான்.

பலரும் பொருளாதாரத் தேவைகளுக்காக - ஆகாரத்திற்காகவும், சுகத்திற்காகவும், பொல்லாத ஆவிகளிலிருந்து விடுதலை பெற்றுக்கொள் வதற்காகவும், மற்றும் பற்பல பிரச்சினைகளிலிருந்து விடுதலை பெற்றுக் கொள்ளும்படியாகவும் கர்த்தராகிய இயேசுவிடம் வந்தார்கள். சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த அந்தக் கள்ளனுக்கு வேறெந்த நபரையும் பார்க்கிலும் சரீரப்பிரகாரமாகப் பெரிய தேவைகள் இருந்திருக்கக் கூடும். கிழிக்கப்பட்டு இரத்தம் வடிந்துகொண்டிருந்த அவனது சரீரத்துக்கு நிச்சயமாகவே சுகம் தேவையாயிருந்தது. கொடும் வேதனையிலிருந்தும், உடனடியாக அவனைச் சந்திக்கவிருந்த நிர்ப்பந்தமான மரணத்தினின்றும் அவனுக்கு விடுதலை தேவையாயிருந்தது. இருப்பினும் அவன் ஆண்ட வராகிய இயேசுவிடம் இவையொன்றையும் கேட்கவில்லை. அவன் கேட்டதெல்லாம் ஆவிக்குரிய இரட்சிப்பு மட்டுமே. அவன் கேட்ட தெல்லாம் கர்த்தராகிய இயேசு தன்னை நினைத்துக்கொள்ள வேண்டும் என்பதும், நியாயத்தீர்ப்பு நாளன்று தன்மேல் இரக்கமாயிருக்க வேண்டும் என்பதுமே. ஆகிலும் கர்த்தராகிய இயேசுவோ அவன் *வேண்டிக்கொண்ட தற்கும் நினைத்ததற்கும் அதிகமாக* அவனுக்குச் செய்தார். அவன் தான் முற்றிலும் அறியாதிருந்த தன் எதிர்காலத்திற்காக இரக்கத்தைக் கேட்டான். கர்த்தராகிய இயேசுவோ *இன்றைக்கே என்ற அளவில் உடனடியான* இரட்சிப்பை அவனுக்கு அருளினார். கிறிஸ்து தன்னை 'நினைத்துக் கொள்ள வேண்டும்' என்று மாத்திரமே அவன் வேண்டிக்கொண்டான். ஆனால் அவரோ, "*இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய்*" என்று அவனுக்குப் பதிலளித்தார்.

அன்பார்ந்த வாசகரே, தனது தவறுகளுக்காக மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பிய அந்தக் கள்ளனைப் போல நீர் நித்தியமான விலைமதிப் புள்ளவைகளுக்காக ஜெபித்து, அவற்றையே நாடித் தேடுவீராகில், நீர் 'வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் அதிகமாக' நம் கர்த்தர் உமக்குச் செய்தருளுவார்.

மார்ச் 8

விசுவாசத்திற்கு ஓர் உந்துவிசை உண்டு

'விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்துத் தேவ எச்சரிப்பைப் பெற்று, பயபக்தியினால் உந்தித் தள்ளப்பட்டு, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை ஆயத்தப்

படுத்தினான்; அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளான தென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தர வாளியானான்' (எபி. 11 : 7 -Eng.).

'*விசுவாசத்தினாலே நோவா உந்தித்தள்ளப்பட்டான்*' - விசுவாசத் திற்கு ஓர் உந்துவிசை உண்டு. விசுவாசம் நம்மை உந்தித்தள்ளிக் கொண்டிருக்குமாயின், இவ்வுலகிலுள்ள யாதொன்றும் நம்மை அசைக்க முடியாது. 'உலகை அசைத்த மனிதர் உலகத்தால் அசைக்கப் படவில்லை'.

நோவாவுக்குள்ளும் நோவாவின் மூலமாகவும் விசுவாசம் ஒரு மாபெரும் வேலையைச் செய்தது. அவன் ஒரு பேழையை ஆயத்தப் படுத்தினான். 'பேழை', சபைக்கு அடையாளமாயிருக்கிறது. விசுவாச மில்லாதவர்களால் தேவனுடைய சபையைக் கட்டி எழுப்ப முடியாது. பேழை உண்டாக்கப்பட்டதின் நோக்கம் என்ன? அதற்குள் பிரவேசித்த அனைவரையும் பாதுகாப்பதே அது உண்டாக்கப்பட்டதின் நோக்கமாகும். அதினுள் பிரவேசித்தவர்கள் பெருவெள்ளம் வந்தபோது மேல்நோக்கி உயர்ந்து சென்றனர். அது போன்றே கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அவயவங்களாயிருப்பவர்கள் (மணவாட்டியாக ஆயத்தமாக்கப்பட்ட வர்கள்) பூமியின் மேல் வரும் உபத்திரவ காலமாகிய நியாயத்தீர்ப்புக்கு முன்னர் அவரது இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.

விசுவாசத்தால் நோவா தேவ எச்சரிப்பை முக்கியமானதாகக் கருதி ஏற்றுக்கொண்டு, அதற்கிணங்கச் செயலாற்றினான். கர்த்தராகிய இயேசு சீக்கிரமாய் வருகிறார் என்னும் எச்சரிப்பை நீங்கள் கருத்துடன் ஏற்றுக் கொள்கிறீர்களா? அப்படியில்லையெனில் உங்களுக்கு விசுவாசமில்லை என்பதே அதன் பொருளாகும்.

'*விசுவாசத்தினாலே ஆயத்தப்படுத்தினான்*' - கர்த்தராகிய இயேசு சீக்கிரமாய் வருகிறார். ஜனங்கள் ஏன் இன்னும் ஆயத்தப்படவில்லை? அவர்களுக்கு விசுவாசமில்லாததினாலேயே! மிகப் பெரியதொரு பேழையைக் கட்டுவதற்குத் தேவையான வேலையாட்களை எங்கிருந்து பெற்றுக்கொள்வதென நோவா கவலைப்படவில்லை. தொழிலாளர், மனித சக்தி, நேரம், வடிவமைக்கும் பொறியாளர்கள், தேவையான ஏராளமான பணம் போன்றவை அவனுக்கு ஒரு பொருட்டாயிருக்கவில்லை. விசுவாச மானது தேவனுக்காகப் பெரிய காரியங்களைச் செய்ய நம்மை உந்தித் தள்ளுகிறது.

மார்ச் 9

விநோதமானதொரு திருப்பியளித்தல்

"***நான் எடுத்துக்கொள்ளாததை நான் கொடுக்க வேண்டியதாயிற்று***" (சங். 69 : 4).

ஒருவர் தான் எடுத்துக்கொள்ளாததைத் திருப்பிக் கொடுப்பதே மெய்யான கிறிஸ்தவ ஆவியாகும். இது கேட்பதற்கே விநோதமானதாகத் தோன்றுகிறதல்லவா? இது என்ன? பிசாசானவன் நமது ஆரோக்கியம், சந்தோஷம், அன்பு, சமாதானம் முதலியவற்றை நம்மிடமிருந்து எடுத்துக் கொண்டான். கர்த்தராகிய இயேசுவோ அவற்றை நமக்குத் திரும்பப் பெற்றுத்தந்தார். நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதும் இவ்வழியமே ஆகும்.

உங்களை யாராவது பகைத்தால், பிசாசானவன் அந்நபரிலிருந்து அன்பை எடுத்துப்போட்டுவிட்டான் என்பதே அதன் காரணம் ஆகும். அந்நபர் உண்மையாகவே நிர்ப்பந்தமானவராயிருப்பார். அப்போது நீங்கள் செய்யவேண்டியதென்ன? நீங்கள் மெய்யான ஒரு தேவபிள்ளை யாயிருந்தால் அவரை மிக விசேஷித்த விதத்தில் நேசிப்பதின் மூலம், நீங்கள் அவர் இழந்துபோன அன்பை அவர் திரும்பப் பெற்றுக்கொள்ளும் படி செய்வீர்கள். உங்களால் அவரில் அன்புகூரவோ, அவருக்கு எந்த நன்மையும் செய்யவோ இயலாமல் இருந்தால், உங்களிடமிருந்து மிக மேன்மையானதும் மிக முக்கியமானதுமான தெய்வீகக் குணசீலமாகிய அன்பைப் பிசாசானவன் எடுத்துப்போட்டுவிட்டான் என்பதே அதன் பொருளாகும். "*இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது*" (I கொரி. 13 : 13).

இலட்சக்கணக்கான ஆத்துமாக்களிலிருந்து பிசாசானவன் அன்பை எடுத்துப்போட்டிருக்கிறான். அவர்கள் உண்மையான அன்புக்காக ஏங்கித் தவிக்கிறார்கள். அவர்களிலிருந்து பிசாசானவன் எடுத்துப்போட்டதும், உலகத்தால் கொடுக்க இயலாததுமான இந்தத் தெய்வீக அன்பை, மன்னிக்கும் அன்பை நாம் அவர்களுக்குத் திரும்பக் கொடுப்போமாக. மேலும் ஜனங்களிலிருந்தும், குடும்பங்களிலிருந்தும், வீடுகளிலிருந்தும் சமாதானத்தை எடுத்துப்போடும்படி பிசாசானவன் மும்முரமாகச் செயல் பட்டுக்கொண்டிருக்கிறான். எனவே நாம் செல்லும் இடமெங்கும் இச் சமாதானத்தைத் திரும்பக் கொடுக்கிறவர்களாயிருப்போமா? கர்த்தராகிய இயேசு தம் சிலுவை மரணத்தினால் சமாதானத்தை 'உண்டுபண்ணினார்';

நாமுங்கூட நம் சுய விருப்பங்கள், தன்னலம் முதலியவற்றைத் தியாகம் செய்வதின் மூலம் சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக்க வேண்டுமென அவர் விரும்புகிறார்.

நம்மில் எத்தனை பேர் கர்த்தராகிய இயேசுவுடன் சேர்ந்து, '*நான் எடுத்துக்கொள்ளாததை நான் திரும்பக்கொடுத்தேன்*' என்று கூற முடியும்?

மார்ச் 10

கொழுமையும் உஷ்ணமும்

'கர்த்தர் மம்ரேயின் சமபூமியிலே அவனுக்குத் தரிசனமானார். அவன் பகலின் உஷ்ணவேளையில் கூடாரவாசலிலே உட்கார்ந்திருந்தான்'
(ஆதி. 18 : 1).

இங்கு ஆபிரகாமுக்குக் கர்த்தர் தரிசனமானது, நாம் நம்முடைய பரம வீட்டுக்கு அழைக்கப்படுவதுடன் ஒப்பிடப்படலாம். இந்தச் சிந்தை நம் ஜீவியத்தின் முடிவு எவ்வாறு இருக்க வேண்டும் என்னும் விஷயத்தில் நம் மனதைப் பிரகாசிப்பிக்கிறது.

கர்த்தர் தரிசனமானபோது, ஆபிரகாம் மம்ரேயின் சமபூமியில் இருந்தான். 'மம்ரே' என்பது 'கொழுமை' என பொருள்படும். நம் ஜீவியத்தின் முடிவில் நாம் கர்த்தரைச் சந்திக்கும்போது ஆவிக்குரிய பிரகாரமாக நாம் மெலிந்து அல்ல, கொழுமையும் செழிப்புமுள்ளவர் களாகவே காணப்பட வேண்டும். தேவனுடைய வீடாகிய சபையில் இருப்பவர்களைக் குறித்து, அவர்கள் முதிர்வயதிலும் கனி தருவார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது (சங். 92 : 13, 15). நம்முடைய ஜீவியமானது முடிவுபரியந்தம் கனிதருவதாக, மற்றவர்களுக்குப் பிரயோஜனமானதாகவும் ஆசீர்வாதமானதாகவும் இருக்க வேண்டும்.

கர்த்தர் ஆபிரகாமைச் சந்தித்தபோது அவன் தன் கூடாரத்தின் வாசலில் உட்கார்ந்திருந்தான். 'கூடாரம்' என்பது விசுவாச ஜீவியத்தைக் குறிக்கிறது. ஒரு காலத்தில் விசுவாசத்தினால் ஜீவித்து தங்கள் ஆரோக்கி யத்திற்காகவும், ஆஸ்திக்காகவும், வியாதி குணமடைவதற்காகவும் தேவனையே நம்பியிருந்த சில தேவபிள்ளைகள் தற்போது மருந்து களையும், மருத்துவர்களையும் மனுஷீகமான பரிகாரங்களையும் தேடிச் செல்லுகின்றனர் என்பது உண்மையாகவே வருந்தத்தக்கதாகும். இன்று தேவன் உன்னை அழைப்பாராயின், அவர் உன்னைக் 'கூடார வாசலில்' உட்கார்ந்திருப்பவனாகக் காண்பாரா?

"பகலின் உஷ்ணவேளையில்"தான் ஆபிரகாம் கர்த்தரை வரவேற் றான். கர்த்தர் நம்மை அழைக்கும்போது நாம் ஆவிக்குரிய பிரகாரமாக உஷ்ணமாக - தேவனுக்காக வைராக்கியமுள்ளவர்களாகவும், நம் ஜீவியத் தில் நீதியின் சூரியன் நம் தலைக்கு மேல் நடுவானத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்குமாப்போன்ற, ஆவிக்குரிய ஜீவியத்தின் மிக உன்னத நிலையிலும் இருக்க தேவன்தாமே நமக்குக் கிருபை அருளுவாராக.

மார்ச் 11

மன்னிக்கப்படுவதற்கரிய அக்கிரமம்

'சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் அக்காலத்திலே அழவும், புலம்பவும், மொட்டையிடவும், இரட்டுடுத்தவும் கட்டளையிட்டார். நீங்களோ, சந்தோஷித்துக் களித்து, ஆடுமாடுகளை அடித்து, இறைச் சியைச் சாப்பிட்டு, திராட்சரசத்தைக் குடிக்கிறீர்கள். மெய்யாகவே நீங்கள் சாகுமட்டும் இந்த அக்கிரமம் உங்களுக்கு நிவிர்த்தியாவ தில்லை என்று சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்'
(ஏசாயா 22 : 12 - 14).

நிவிர்த்தியாக்கப்பட முடியாத இந்த அக்கிரமம் என்ன? தேவன், (உங்கள் மேல் மனதுருக்கம் காண்பிக்கும்படியாக) உங்களை மனந்திரும் பவும், புலம்பவும், உபவாசிக்கவும், அவரை நோக்கி அழவும் அழைக்கும் போது, நீங்கள் விருந்துண்டு, மகிழ்ந்து, அவருடைய ஆலோசனைக்கு விரோதமாகக் கலகம் செய்தால், இவ்விதமான எதிர்த்துநிற்கிற ஆவியை அவர் அக்கிரமமாகக் கணிக்கிறார். அதை அவர் ஒருபோதும் மன்னியா மற்போகக் கூடும்.

'கர்வமும், ஆகாரத்திரட்சியும், நிர்விசாரமான சாங்கோபாங்கமுமே (மிகுந்த சோம்பல் -Eng.)' சோதோமின் அக்கிரமமாயிருந்தது (எசே. 16 : 49). இதனாலேயே தேவனின் நியாயத்தீர்ப்பு அப்பட்டணத்தின் மேல் வந்தது. தற்காலத் தலைமுறை சோதோம் கொமோராவை விட மிக நிர்ப்பந்தமான நிலையிலுள்ளது. '*கர்த்தாவே, எங்கள் மேல் இரக்கமாயிரும்; நிவிர்த்தி யாக்கப்பட முடியாத இந்த அக்கிரமம் எங்கள் மேல் வராதிருப்பதாக*'.

மாறுபாடுள்ள இந்தச் சந்ததியின் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வருமுன் உண்மையான தேவபிள்ளைகள் உபவாசித்து, ஜெபித்து, அழும்படி நேரமெடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் அந்தோ பரிதாபம்! முன் ஒருபோதும் இல்லாத அளவுக்குப் பெரும்பான்மையான கிறிஸ்த வர்கள் ஜெபத்தையும் உபவாசத்தையும் அசட்டை செய்திருக்கின்றனர். நம்

மீதும், பாவம் நிறைந்த இத்தலைமுறையின் மீதும் தேவன் இரக்கமா யிருக்கும்படியாக நாம் விழித்தெழுந்து தேவ சமுகத்தில் உபவாசிக்கவும், அழவும், புலம்பவும் நேரம் ஒதுக்க வேண்டிய வேளை இதுவே!

"*ஆதலால் நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் ... நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள்; அவர் இரக்கமும், மனஉருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார்*" (யோவேல் 2 : 12, 13).

மார்ச் 12

தன்னைத்தான் தாழ்த்துவதின் ஆசீர்வாதம்

"***தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம்***" (நீதி. 22 : 4).

கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாங்கானதைச் செய்ய தன்னை விற்றுப்போட்ட ஆகாப் ராஜாவை விட மனாசே என்னும் ராஜா மிகப் பொல்லாதவனாக இருந்தான். அத்துடன் அவன் புறஜாதியாரைக் காட்டிலும் பொல்லாதவனாக இருந்தான் (II நாளா. 33 : 9). "*அவன் ... நாளும் நிமித்தமும் பார்த்து, பில்லிசூனியங்களை அநுசரித்து, அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிசொல்லுகிறவர்களையும் வைத்து, கர்த்தருக்குக் கோபமுண்டாக அவர் பார்வைக்கு மிகுதியும் பொல்லாப்பானதைச் செய்தான்*" (வச. 6). கர்த்தருக்குக் கோபமுண்டாக அவன் செய்த இன்னும் பல பொல்லாப்புகளும் உண்டு. அவன் தன் பன்னிரண்டாவது வயதில் தான் ராஜாவானது முதற்கொண்டே தன் பொல்லாங்கான செயல்களைத் துவங்கிவிட்டான். ஐம்பத்தைந்து ஆண்டுகள் நீடித்த அவனது நீண்ட கால அரசாட்சியில் அவன் தேவனைப் பிரியப்படுத்தும் வகையில் ஒன்றுமே செய்யவில்லை.

ஆனால் மனாசே விலங்குகளால் கட்டப்பட்டு பாபிலோனுக்குக் கொண்டுசெல்லப்பட்டபோது, "*தன் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கெஞ்சி, தன் பிதாக்களின் தேவனுக்கு முன்பாக மிகவும் தன்னைத் தாழ்த்தினான்*" என்று தேவனுடைய வசனம் கூறுகிறது (வச. 12). அவன் தேவனுக்கு அதிக கோபமுண்டாகும்படி நடந்துகொண்ட மிகவும் பொல்லாத ராஜாவாக இருந்தபோதிலும், அவன் தன் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தியதால் அவர் அவனுக்கு இரங்கி,

எருசலேமுக்கும் அவனுடைய ராஜ்யபாரத்திற்கும் அவனைத் திரும்பி வரச் செய்தார். இதற்குப் பின்னர் அவன் தேவனுக்காக அநேக காரியங்களைச் செய்ததாக நாம் பார்க்கிறோம் (வச. 14 - 16). மேலும் பரிசுத்தமாக வாழ்ந்த மற்ற சில ராஜாக்களைப் போலவே மனாசேயின் முடிவு சமாதானமும் ஆசீர்வாதமுமாயிருந்தது.

அன்பான வாசகரே, ஒரு மனிதன் தன்னைத் தாழ்த்தத் தீர்மானிக்கும்போது தேவன் அவனது கடந்த காலப் பொல்லாப்புகள் அனைத்தையும் மறந்துவிடுகிறார் என்பது ஆச்சரியமானதாயிருக்கிற தல்லவா? அவனுக்கு அவர் அதிகமான இரக்கத்தைக் காண்பித்து, அவனை ஆசீர்வதிக்கிறார்.

மார்ச் 13

நரமாமிசப் பட்சிணியைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்!

"***பொல்லாங்கன் அவனைத் தொடான்***" (I யோவான் 5 : 18).

சில காட்டு மிருகங்கள் நரமாமிசப் பட்சிணிகளாயிருக்கின்றன. அவை மனித மாம்சம் புசிக்க ஆர்வம் மிக்கவையாயிருக்கின்றன. சாத்தான் ஒரு நரமாமிசப் பட்சிணி ஆவான். மனித மாம்சம் அவனுக்கு விருப்பமான ஒன்றாயிருக்கிறது! ஆனால் அவன் ஆவலோடு நாடித்தேடும் இம்மனித மாம்சம், தசைகளாலும் இரத்தத்தாலுமான ஒன்றல்ல. அது சுயம், பெருமை, மாயை, மாம்சீகம் போன்றவைகளாலானதொரு கூட்டுப்பொருள் ஆகும்.

நரமாமிசப் பட்சிணிகளான சிங்கங்களின் கெபிக்குள் தானியேல் போடப்பட்டான். ஆனால் சிங்கங்களால் அவனைப் பட்சிக்க முடிய வில்லை; ஏனெனில் சரியாகக் கூறுவோமாயின், தானியேலுக்குள் 'மாம்சம்' இருக்கவில்லை. அவன் '*மாம்சத்தோடே வாசம்பண்ணாத ஆவி மனிதரின்*' வகுப்புக்குட்பட்டவனாயிருந்தான் (தானி. 2 : 11). கெர்ச்சிக்கும் சிங்கமாகிய சாத்தான் மாம்சீகத்தைத் தேடி அலைகிறான். ஆனால் உன்னில் 'மாம்சம்' இல்லாத வரையிலும் அவனால் உன்னைத் தொடவே முடியாது.

ஒரு பன்றிப்பண்ணையில் பன்றிகள் மாம்சத்திற்காக அல்லது இறைச்சிக்காக வளர்க்கப்படுவது போல, சாத்தான் தன் கெபியாகிய இவ் வுலகை, மாம்சத்திற்காக மனிதரை வளர்க்கும் மாம்சப் பண்ணையாக்கி யிருக்கிறான். இப்பண்ணையிலுள்ள அவனுடைய பிரதிநிதிகளாகிய

பொல்லாத ஆவிகள் மாம்சத்தை வளர்க்கக்கூடிய பொருட்களை விநியோகம் செய்கின்றன. மேலும், ஏற்கனவே உலகத்தாரான 'மாம்ச மனுஷர்' அவன் வசம் இருப்பினும், தன் மாம்ச விநியோகத்தை அதிக மாக்கும்படி அவன் ஆவிக்குரிய பிரகாரமாக மெலிந்துபோயிருக்கும் 'எலும்பும் தோலுமாய்க்' காணப்படும் 'ஆவிமனிதரை' ஏமாற்றும் வழி களைக் கண்டுபிடித்து, அவர்கள் தங்கள் மாம்சீகத்தை விருத்தி செய்து கொள்ளும்படி தனது பண்ணைக்கு அவர்களைத் தந்திரமாய் வழிநடத்து கிறான்.

கர்த்தராகிய இயேசு தமது சிலுவையைச் சுமந்துகொண்டு 'கபாலஸ்தலம்' என்று பொருள்படும் கொல்கொதாவுக்குச் சென்றார். கபாலத்தில் அதாவது மண்டையோட்டில் மாம்சம் இல்லை - மாம்சத் தாலான மூளை இல்லை. எனவே கர்த்தராகிய இயேசு முறுமுறுக்கவில்லை. நாம் ஒருவேளை நமது சிலுவையைச் சுமந்துகொண்டிருக்கக் கூடும்; ஆனாலும் மூளையுள்ள மண்டையோடு உள்ள இடத்தில் நாம் காணப்படக் கூடும். மூளையானது 'நான் ஏன் மனிதராலும் உலகாலும் குட்டப்பட்டு, இப்படிப்பட்ட நிந்தைகளும் சோதனைகளும் பலவித பாரங்களும் நிறைந்த பாதையிலூடாகச் செல்ல வேண்டும்?' என்று கூறும் இயல்புடையது.

'மாம்சத்தையும் இயற்கையாக அதை வளர்க்கும்படியான மூளை யறிவையும்' களைந்துவிட்டு நாம் தானியேலைப் போன்ற 'விசேஷித்த ஆவியை' - தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியைத் தரித்துக்கொள்வோமாக (I பேதுரு 4 : 14). தானியேல் உயர்த்தப்பட்டான்; நாம் மகிமைப்படுத்தப்படுவோம்!

மார்ச் 14

எனக்குப் போதுமானது உண்டு

"***என் சகோதரனே, எனக்குப் போதுமானது உண்டு***" (ஆதி. 33 : 9).

அதிருப்தியும் பேராசையும் படைத்த மனிதர் நிறைந்த உலகில் நாம் வசிக்கிறோம். நாம் அவர்களில் ஒருவராக மாறிவிடாதிருப்போமாக. "என் சகோதரனே, எனக்குப் போதுமானது உண்டு" என வேதாகமத்தில் முதலாவது கூறின மனிதன் ஒரு பரிசுத்தவானாகப் பாராட்டப்பட்டவனல்ல என்பது உண்மையாகவே ஆச்சரியமாயுள்ளது. அவன் தான் ஏசா (ஆதி. 33 : 9).

யாக்கோபு தன் சகோதரனாகிய ஏசாவையும் தன் தகப்பனையும் ஏமாற்றி, சேஷ்டபுத்திரபாகத்தையும் தன் தகப்பனுடைய ஆசீர்வாதங் களையும் பெற்றுக்கொண்டான். அவ்வேளையில் ஏசா கடுங்கோபங் கொண்டு, யாக்கோபைக் கொல்லத் தீர்மானித்தான். ஆனால் எவ்வாறோ பின்னாட்களில் ஏசா, "போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்" என்பதைக் கற்றறிந்துகொண்டவனைப் போல முற்றிலும் மாற்றமடைந்த ஒரு மனிதனாகிவிட்டான். யாக்கோபை அவன், "என் சகோதரனே" என பாசத்துடன் அழைக்கிறான். 'பணமும் பொருளுமே தெய்வம்' என்னும் கொள்கை நிலவும் இக்காலத்தில் பேராசையும் அதிருப்தியும் ஒருவனைத் தன் உறவினரையே கொலை செய்வதற்கும் வழிநடத்திவிடக் கூடும்.

உங்களுக்கு உள்ளவைகளில் நீங்கள் திருப்தியாய் இருப்பீர்களா னால், தேவனோடும் பிறரோடுமுள்ள உங்கள் உறவு சீரானதாயிருக்கும்; இலவசமாக உங்களுக்குக் கொடுக்கப்பட்டாலுங்கூட, ஆஸ்தியைச் சேர்த்துக் குவித்துவைக்க வேண்டுமென்ற விருப்பமோ, பொருட்களைச் சேகரிக்க வேண்டுமென்ற எண்ணமோ உங்களில் இராது. அவ்வாறாயின், பிறருடைய உடைமைகளை நீங்கள் இச்சிப்பது எப்படி?

"*நான் உம்முடைய முகத்தைக் கண்டது தேவனுடைய முகத்தைக் கண்டதுபோல இருக்கிறது*" (ஆதி. 33 : 10) என்று யாக்கோபு கூறினான். "எனக்குப் போதுமானது உண்டு" என்று கூறிய மனிதனின் முகம் தேவனின் முகத்தைப் போல காணப்பட்டது என்பதைக் கவனிப்பது ஆச்சரியமளிப்பதாயிருக்கிறது. அதுவும், தான் ஒரு கொலைபாதகனுடைய முகத்தைக் காணப்போவதாக எதிர்பார்த்திருந்தவனுக்கு அது அவ்விதம் தென்பட்டது என்பது மிகுந்த ஆச்சரியமானதே! ஏசாவின் திருப்தியே இப்பெரிய மாற்றத்துக்குக் காரணம் என யாக்கோபு உணர்ந்திருந்திருக்கக் கூடும். 'எத்தன்' அல்லது 'பறித்துக்கொள்கிறவன்' என்ற பொருளுடைய பெயர்கொண்ட யாக்கோபுங்கூட மாறுதல் அடைந்தவனைப் போல் இருக் கிறான். 11 -ஆம் வசனத்தில், "*வேண்டியதெல்லாம் எனக்கு உண்டு*" என அவன் கூறுவதிலிருந்து இதை நாம் அறிந்துகொள்ளலாம். இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் உள்ளங்கை நெல்லிக்கனி போல் மிகத் தெளிவாயுள்ளது. அது, 'திருப்தியானது உங்களை மாற்றுகிறது; உங்கள் மூலமாகப் பிறரையும் மாற்றுகிறது' என்பதே.

"*எனக்குப் போதுமானது உண்டு*" என்று கூறிய மனிதனின் முகம் தேவனின் முகம் போலிருந்திருக்குமாயின், 'எனக்குப் போதுமானது இல்லை' என்று கூறும் மனிதனின் முகம் எவ்வளவு பயங்கரமாயிருக்கு மென எண்ணிப் பாருங்கள்.

மார்ச் 15

உன்னை மறைத்துக்கொள்

"***நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும் போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்***"
(கொலோ. 3 : 3, 4).

ஓர் மெய்யான கிறிஸ்தவனுடைய இரண்டு அனுபவங்கள் இங்கே கூறப்பட்டுள்ளன: 1. அவனுடைய ஜீவன் கிறிஸ்துவுடன் மறைந்திருக்கிறது; 2. கிறிஸ்து வெளிப்படும்போது அவனும் அவரோடேகூட மகிமையில் வெளிப்படுவான். நாம் இப்போது கிறிஸ்துவுடன் மறைந்திருக்காவிடில், அவர் வெளிப்படுகையில் அவரோடு நாம் மகிமையில் வெளிப்பட முடியாது. யாவராலும் அறியப்பட்டவர்களாகப் புகழ்பெற்று விளங்க வேண்டுமென்று முயற்சிக்கும் தேவஜனங்கள், கிறிஸ்து மகிமையில் வெளிப்படும்போது வெட்கி, தங்களைத் தாங்களே மறைத்துக்கொள்ள நேரிடும்.

எலியா தன்னை வெளியரங்கமாகக் காண்பிக்க வேண்டுமென்று அவனுக்குச் சொல்லப்படுவதற்கு முன்பு, அவன் தன்னை மறைத்துக் கொள்ள வேண்டுமென்று அவனுக்குக் கூறப்பட்டது. "*நீ ... கீழ்த்திசையை நோக்கிப் போய், ... ஒளித்துக்கொண்டிரு*" (I இராஜா. 17 : 3). கீழ்த்திசை அதாவது 'கிழக்கு' என்பது சூரியன் உதிக்கும் திசையாகும். மெய்யான ஒரு தேவபிள்ளை தேவசமுகமாகிய சூரியப் பிரகாசத்தில் மறைந்து கொள்ளக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்படியானால் "*நீ போய் ... உன்னைக் காண்பி*" என்று கர்த்தர் எலியாவிடம் கூறியது போல, பின்னொரு நாளில் உன்னிடமும் கூறுவார் (I இராஜா. 18 : 1). தன்னைக் காண்பிக்கும்படி எலியாவுக்குச் சொல்லப்பட்ட பின்னர் அவன் தன்னைக் காண்பித்தபோது, இஸ்ரவேல் ராஜ்யத்தில் அவன் மூலமாகப் பெரிய காரியங்கள் செய்யப்பட்டன.

வேதாகமத்தில் நாம் வேறெங்கும் வாசிக்காத ஒரு நபரின் பெயரே தாவீதின் பராக்கிரமசாலிகளின் பட்டியலில் முதலிடம் வகித்திருப்பது நமக்கு ஆச்சரியமளிப்பதாயிருக்கிறது. "*தக்கெமோனியின் குமாரனாகிய யோசேப்பாசெபெத் என்பவன் சேர்வைக்காரரின் தலைவன்; இவன் ... அதீனோஏஸ்னி ஊரானானவன்*" (II சாமு. 23 : 8). அவன் ஒரு 'மறைந் திருக்கும் பரிசுத்தவானாக' இருந்துவந்திருக்க வேண்டும்.

அன்பான தேவபிள்ளையே, நீ பெயரையும், புகழையும், உலகின் பாராட்டுதலையும் பெற்றுக்கொள்ளும்படி ஆவல் கொண்டிருப்பாயாகில், ஒரு நாள் வரும், அன்று உன் மகிமை வெட்கமாக மாறும். ஆனால் நீ தாழ்மையுடன் தேவனுக்குள் மறைந்திருக்கக் கற்றுக்கொண்டால், நீ கிறிஸ்துவுடன் மகிமையில் வெளிப்படும் மகிமையான ஒரு நாள் நிச்சயமாய் வரும்.

மார்ச் 16

பக்திவிருத்தி உண்டாக்கும் நாவு

"***அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டு மென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக***"
(கொலோ. 4 : 6).

ஒரு நபர் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்போது, தேவன் முதலாவதாக அவனுடைய நாவைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகிறார். "*அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ... வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்*" (அப். 2 : 4). "*அந்நிய பாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்*" (I கொரி. 14 : 4). அந்நியபாஷைகளில் பேசுதலானது மனித உடலமைப்பி லுள்ள பேச்சு மையமானது அனைத்து நரம்புகளுக்கும் கட்டளை கொடுத்து, அவற்றைச் சரியான நிலையில் இயங்கச் செய்யும்படி அதைத் தூண்டுகிறது என்னும் உண்மையை நாம் அறிந்துகொள்ளும்படி நம் மனதைப் பிரகாசிப்பிக்கிறது.

நம் நாவானது நமது இருதயத்தின் மேல் ஆதிக்கம் செலுத்தக் கூடியதாயிருக்கிறது. "***இருதயத்தின்*** *நிறைவினால் அவனவன்* ***வாய்*** *பேசும்*" (லூக்கா 6 : 45). "*உங்களில் ஒருவன் தன்* ***நாவை*** *அடக்காமல், தன்* ***இருதயத்தை*** *வஞ்சித்து, தன்னைத் தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும்*" (யாக். 1 : 26). "***என் வாயின் வார்த்தைகளும்,*** *என்* ***இருதயத்தின்*** *தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக*" (சங். 19 : 14).

நாவும் செவியும் ஒன்றோடொன்று சம்பந்தமுள்ளவையாயிருக் கின்றன. "*கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் கல்விமானின்* ***நாவைத்*** *தந்தருளினார்; ... கர்த்தராகிய ஆண்டவர் என்* ***செவியைத்*** *திறந்தார்*" (ஏசாயா 50 : 4, 5). மேலும் ஏசாயா 6 : 5 - 8 வசனங்களில் **தீர்க்கதரிசியின்**

நாவு சுத்திகரிக்கப்பட்ட உடன்தானே, அவனால் தேவனுடைய சத்தத்தைக் கேட்க முடிந்தது; அத்துடன் அவனது ஜீவியமும் தேவனின் அழைப்புக்குக் கீழ்ப்படிய ஆயத்தமாயிருந்தது என்று நாம் காண்கிறோம். வேறு வார்த்தைகளில் கூறின், நீ தேவனுடைய சத்தத்தைக் கேட்கக் கூடாதவனாயிருப்பாயாகில், உன் நாவுக்குச் சுத்திகரிப்பு தேவையாயிருக்கிறது என்பதையே அது புலப்படுத்தும்.

"*கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்*" (எபே. 4 : 29).

மார்ச் 17

நீ பரலோகத்துக்குச் செல்லும் உன் வழியைச் சரிபார்த்துக்கொள்

"***என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக் கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்***" (மத். 18 : 6).

நாம் பிறருக்கு இடறல் உண்டுபண்ணினாலோ அல்லது பிறர் மனதைப் புண்படுத்தினாலோ, மிகக் கொடூரமான விளைவுகளை எதிர் நோக்க வேண்டியது வரும் என இவ்வசனத்தின் வாயிலாகக் கர்த்தராகிய இயேசு நமக்கு ஓர் எச்சரிப்பை அளிக்கிறார்.

அநேக வருடங்கள் கர்த்தருக்கு ஊழியஞ்செய்துவந்த மேரி என்னும் கிறிஸ்துவுக்குள் அருமையான ஒரு சகோதரி வியாதிப்பட்டு மரித்தார்கள். அவர்களுக்கு அருமையானவர்கள் சூழ்ந்து நிற்க, அவர்களது சடலத்தை அடக்கம் செய்வதற்குரிய ஆயத்தங்கள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கையில் திடீரென அச்சகோதரி தன் கண்களைத் திறந்தார்கள். யாவரும் அதிர்ச்சியடைந்தனர்.

சகோதரி மேரி அழுதுகொண்டே இவ்வாறு கூறினார்கள்: "என் ஆத்துமா மேலே பறந்துயர்ந்து சென்று, சீயோனின் வாசலை அடைந்தது; ஆனால் ஒரு தேவதூதன் எனக்கு உள்ளே செல்வதற்கு அனுமதியில்லை என்று கூறிவிட்டான்; அதற்கான காரணம் யாது என நான் வினவியபோது,

நான் வியாதிப்பட்டிருந்தபோது எனக்கு உதவிசெய்த ஒரு சகோதரியின் மனது என் வார்த்தைகளின் மூலம் புண்படுத்தப்பட்டிருக்கிறது என்று கூறினான். அப்போது நான் அழுதுகொண்டே அந்தத் தூதனிடம், 'அந்த ஒரே ஒரு தவறுதானே, தயவாய் என்னை உள்ளே அனுமதித்துவிடும்' என்று கெஞ்சினேன்; ஆனால் என்னை உள்ளே அனுமதிக்கக் கூடாது என்று கர்த்தர் கண்டிப்பான உத்தரவிட்டிருப்பதாக அத்தூதன் மறுமொழி கூறினான். அப்போது நான் ஆண்டவராகிய இயேசுவைப் பார்க்க வேண்டுமென கேட்டுக்கொண்டேன்; அவர் என் முன் வெளிப்படவே, நான் அவருக்கு முன்பாக மனங்கசந்து அழுது, 'எனது முதுகெலும்பு முற்றிலும் நொறுங்கிப்போயிருக்கிறது; இந்நிலையில் நான் பூமிக்குச் சென்று படுக்கையிலிருப்பதால் என்ன பிரயோஜனம்?' என்று கேட்டேன். அவர் என்னை நோக்கி, 'நீ பூமிக்குத் திரும்பிச் சென்று, நீ துக்கப் படுத்தியிருக்கும் அந்தச் சகோதரியிடம் மன்னிப்பு கேள்; அப்போது நீ பூரண சுகமடைவாய்' என்றார்".

மேரி என்னும் அந்தச் சகோதரி இப்போதும் உயிரோடிருந்து, ஆண்டவராகிய இயேசு தனக்கருளிய புதிய ஜீவனைக் குறித்து எங்கும் சாட்சி பகர்ந்துவருகிறார்கள்.

அன்பான தேவபிள்ளையே, பிறரைப் புண்படுத்துதல் அல்லது பிறருக்கு இடறல் உண்டாக்குதல் நாம் பரலோகத்திற்குச் செல்வதைத் தடைசெய்யக்கூடிய ஒரு பெரிய பாவமாகும்; இப்போது தானே முழங்காற்படியிட்டு, நீ யாருக்காவது இடறல் உண்டாக்கியிருக்கிறாயா அல்லது யாருடைய மனதையாவது புண்படுத்தியிருக்கிறாயா என ஆராய்ந்து பார்ப்பாயாக. அப்படியிருக்குமாயின், பரலோகத்தின் வாசல் உனக்காகத் திறந்திருக்கும்படியாக தயவுசெய்து அவர்களிடம் மன்னிப்புக் கேட்டு அவர்களோடு ஒப்புரவாகிக்கொள்வாயாக.

மார்ச் 18

வயிற்றுக்கு உணவு

"***அவர்களுடைய தேவன் வயிறு***" (பிலி. 3 : 19).

உலகில் முதல் பாவத்தைக் கொண்டுவந்த முதல் கேள்வியாகச் சர்ப்பம் கேட்ட கேள்வி ஆகாரத்தைக் குறித்ததாகும். உலகப் பொருட்களின் மீதுள்ள நம் கவலையும் அக்கறையும் அநேக சந்தர்ப்பங்களில் நமது ஆவிக்குரிய நலனைத் தடுத்துவிடுகிறது.

தேவன் தங்களுக்குத் திரட்சியான ஆகாரத்தைக் கொடுத்திருந்ததால், ஆகாரத்தைக் குறித்த ஒரு விஷயத்தைச் சாத்தான் பேசத் துவங்குவதற்கு ஏவாள் அனுமதித்திருந்திருக்க யாதொரு அவசியமும் இருக்கவில்லை. தேவன் ஏற்கனவே தங்களுக்காகத் திட்டமிட்டு ஆயத்தப்படுத்திவைத் திருக்கும் காரியங்களைக் குறித்து அநேகர் கவலைப்பட்டுக் கலங்கு கிறார்கள். '*ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவை கள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்*' (மத். 6 : 31, 32). லாசருவும் ஐசுவரியவானும் பற்றிய சரித்திரத்தில், ஐசுவரியவான் தினமும் சம்பிரம மாய் வாழ்ந்து, முடிவில் நரகத்துக்குச் சென்றான். அங்கே அருந்துவதற்கு ஒரு துளி தண்ணீர்கூட கிடைக்காமல் தாகத்தினால் நா வறண்டு, அவன் பட்டினியாய் இருந்தான்.

நாற்பது நாட்களின் உபவாசத்திற்குப் பின்னர் கர்த்தராகிய இயேசுவுக்கு வந்த முதல் சோதனையும் ஆகாரத்தைக் குறித்ததாகவே இருந்தது. "*நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங் களாகும்படிச் சொல்லும்*" (மத். 4 : 3) என பிசாசானவன் அவரிடம் கூறினான். அவர், "*மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே*" என்று கூறி, தேவ வசனத்தால் அச்சோதனையை மேற்கொண்டார்.

தேவனுடைய பிள்ளையே, எந்த ஆகாரத்தையும் இச்சியாதே. உன் வயிறு உனது தேவனாக மாறிவிடாதிருப்பதாக.

மார்ச் 19

ஒரு விசேஷமான கிருபை

"***மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்***" (வெளி. 22 : 20, 21).

வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள இந்தக் கடைசி ஆசீர்வாதமானது அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் உரியது அல்ல. ஆனால் அது, "*மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்*" என்ற வார்த்தையை விசுவாசித்து, "*ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்*" என்று கூறுகிற

வர்களுக்கே உரியது. கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகையைக் குறித்த வாக்குத்தத்தத்தை விசுவாசித்து, அதற்கு, "ஆமென்" என்று சொல்லுகிறவர்கள், மிக அற்புதமான ஆசீர்வாதங்களில் ஒன்றாகிய நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையைப் பெற்றுக்கொள் கிறார்கள். வேதாகமத்தின் கடைசி வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கிருபை யானது, அவருடைய இரகசிய வருகையை விசுவாசித்து அதற்காகக் காத்திருப்பவர்களுக்கு மட்டுமே உரியது. இரட்சிக்கப்படுவதற்கேதுவான கிருபை (எபே. 2 : 6 - 8), நம்மை நிலைநிறுத்தும் கிருபை (I பேதுரு 5 : 12), உதாரத்துவமாய்க் கொடுக்கச் செய்யும் கிருபை (II கொரி. 9 : 13, 14), பெலப் படுத்தும் கிருபை (II கொரி. 12 : 9) போன்ற அநேக கிருபைகள் தேவ னுடைய வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் இங்கு குறிப்பிடப் பட்டுள்ள 'கிருபை' என்பது '*இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது அளிக்கப் படும் கிருபை*' ஆகும் (I பேதுரு 1 : 13). இது கர்த்தருடைய இரகசிய வருகைக்கு நம்மை ஆயத்தப்படுத்துகிற கிருபை என அழைக்கப்படலாம்.

இக்கிருபையானது நம் ஜீவியத்தில் அதிசயிக்கத்தக்க ஒரு கிரியையைச் செய்கிறது. இது I யோவான் 3 : 2, 3 -இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆனந்தபாக்கியமான நம்பிக்கையை நமக்கு அருளிச் செய்கிறது: "*பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்த முள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்*".

அன்பான தேவபிள்ளையே, உன்னைக் கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகைக்கு ஆயத்தப்படுத்துகிற இந்தக் கிருபை உனக்கு வேண்டுமா? ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு வினாடியும் அவருடைய இரகசிய வருகைக்கான ஆயத்தத்துடன் நீ ஜீவிக்கலாம். உன்னை இரட்சித்தது அவருடைய கிருபையே! பரிசுத்த ஆவியினால் உன்னை நிறைத்து, இது வரை உன்னைப் பாதுகாத்ததும் அவருடைய கிருபையே! அவருடைய இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு உன்னை ஆயத்தமாகக் காத்துக்கொள்வதும் அவருடைய கிருபையே!

"*ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; ... மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்*" (வெளி. 22 : 17, 20). கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்கள் அனை வரோடும் இருப்பதாக. ஆமென்.

மார்ச் 20

நீங்கள் ஏன் 'பிடிக்கப்பட்டீர்கள்'?

'உடனே இயேசு கையை நீட்டி பேதுருவைப் பிடித்து'
(மத். 14 : 31).

'தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர். ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கினாலும் நாம் பயப்படோம்' (சங். 46 : 1 - 3) என்று சங்கீதக்காரனோடு சேர்ந்து பேதுருவும் இப்போது பாடக் கூடும்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அற்புதமான அன்பு இங்கே வெளிப்படுத்தப்படுகிறது - பேதுரு அல்ல, கர்த்தராகிய இயேசுவே தமது கரத்தை நீட்டினார். பேதுரு கர்த்தராகிய இயேசுவைப் பிடித்துக்கொள்ள வில்லை, கர்த்தராகிய இயேசுவே பேதுருவைப் பிடித்தார். அன்பான தேவபிள்ளையே, கர்த்தராகிய இயேசு நமக்குச் செய்திருப்பதும் இதுவே! பாவம், வியாதி, துன்பங்கள் ஆகிய சமுத்திரத்தில் நாம் அமிழ்ந்து போய்க்கொண்டிருந்த வேளையில், கர்த்தராகிய இயேசு நம்மை அணுகி வந்து, தமது கரத்தை நீட்டி நம்மைப் பிடித்தார்.

கர்த்தராகிய இயேசு பேதுருவைப் பிடித்த பின்னர், அவர்கள் இரு வரும் தண்ணீரின் மேல் நடக்கத் தொடங்கினர். இனி அமிழ்ந்துபோகக் கூடிய ஆபத்தோ, பயமோ இல்லை! முதலாவதாக, பேதுரு தண்ணீரின் மேல் தனியாக நடக்கப் பிரயாசப்பட்டபோது அதில் தோல்வியுற்றார் - கர்த்தராகிய இயேசுவின் சகாயஞ்செய்யும் கரம் நம்மைப் பிடித் திருந்தாலொழிய, நாம் நமது சோதனைகளுக்கும் துன்பங்களுக்கும் மேலாக, அவற்றை நம் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தியவர்களாக நம்மால் வாழ இயலாது. இப்போது கர்த்தராகிய இயேசு தன் கரத்தைப் பிடித்திருக்க, பேதுருவால் தண்ணீரின் மேல் வெற்றிநடைபோட முடிகிறது. பேதுரு தண்ணீரினுள் அமிழ்ந்துவிடாமல் அவனைத் தண்ணீரின் மேற்பரப் பிலேயே நிறுத்தித் தாங்கிக்கொண்டது எது? *'அநாதி தேவனே உனக்கு அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் உனக்குக் கீழாக இருந்து உன்னைத் தாங்கிக்கொண்டிருக்கும்'* (உபா. 33 : 27 -Eng.) என்ற வாக்குத் தத்தமே அந்த இரகசியமாகும். தனது பாதங்களின் கீழ் தேவனின் நித்திய புயங்கள் இருப்பதை உணர்ந்து பேதுரு பரவசமடைந்திருப்பாரல்லவா? நமது கரத்தைக் கர்த்தராகிய இயேசு பற்றிப் பிடித்திருக்கிறாரென்ற விசுவாசம் நமக்கிருக்கும்போது, நமது சோதனைகளை நாம் நமது

பாதங்களுக்குக் கீழ்ப்படுத்திக்கொண்டு, அவற்றின் மேல் தைரியமாய் நடக்கக் கூடியவர்களாயிருப்போம்; நாம் அமிழ்ந்துபோவோம் என்ற பயம் நம்மில் ஒருபோதும் இராது.

தான் எதற்காகப் பிடிக்கப்பட்டாரோ அதைப் பிடித்துக்கொள்ளும் படியாக - பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக - இலக்கை நோக்கித்தொடருவதாக அப். பவுல் கூறுகிறார். *"நான் அடைந்தாயிற்று ... என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப் பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடரு கிறேன்"* (பிலி. 3 : 12). அன்பான வாசகரே, கர்த்தர் உம்மை **ஏன்** பிடித் திருக்கிறார் என்பதை நீர் அறிவீரா?

மார்ச் 21

ஆதாயம் மிக்க 'கட்டுகள்'

"கட்டப்பட்டிருக்கையில் நான் பெற்ற என் மகனாகிய ஒநேசிமுக்காக உம்மை மன்றாடுகிறேன். முன்னே அவன் உமக்குப் பிரயோஜனமில் லாதவன், இப்பொழுதோ உமக்கும் எனக்கும் பிரயோஜனமுள்ளவன்"
(பிலே. 10, 11).

அப். பவுல் ரோமாபுரியில் ஒரு சிறைக்கைதியாக இருந்தார். பிலேமோன் என்பவரின் அடிமையாயிருந்த ஒநேசிமு தனது எஜமானனைக் கொள்ளையாடிவிட்டு, தப்பிக்கொள்ளும்படி ரோமாபுரிக்கு ஓடிப்போனபோது அங்கே பிடிக்கப்பட்டு, அப். பவுல் அடைக்கப் பட்டிருந்த அதே சிறையில் அடைக்கப்பட்டான் என்று நம்பப்படுகிறது. அச்சிறைவாசத்தின்போது அப். பவுலின் ஊழியத்தால் ஒநேசிமு இரட்சிக்கப்பட்டான்; கல்வியறிவில்லாதவனும் திருடனுமாயிருந்த அவனை அப். பவுல் தனக்கு மகனாகத் தத்தெடுத்துக்கொண்டார். *"பலவீனரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப் போலானேன்; எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்"* (I கொரி. 9 : 22).

அப். பவுல் கட்டப்பட்டவராயிருந்தபோதிலும் கட்டுண்டவர்களா யிருந்த மற்றவர்களை அவர் விடுதலையாக்கினார். ஒருவேளை எழுத்தின் படி நீங்கள் கட்டுகளிலோ அல்லது சிறையிலோ இல்லாவிடினும், உங்கள் வீட்டில், உங்கள் குடும்பத்தில், நீங்கள் பணிபுரியுமிடத்தில் உள்ள சூழ்நிலை உங்களைக் கட்டுகளுக்குள் வைத்திருப்பது போல தோன்றக் கூடும். அப். பவுலுக்கு அனுமதிக்கப்பட்டிருந்தது போல, நீங்கள் பலருக்கும்

மெய்யான விடுதலையைக் கொண்டுவரும்படியாக உங்கள் 'கட்டுகளையும்' தேவன் அனுமதித்திருக்கலாம். பிலிப்பியச் சிறையில் அப். பவுல் அடைக்கப்பட்டபோது சம்பவித்தது யாது என்பது உங்கள் நினைவில் இருக்கிறதா? (அப். 16 : 22 - 33). உங்கள் 'சிறை அதிகாரி'யுங்கூட இரட்சிக்கப்படக் கூடும்.

'ஒநேசிமு' என்பதின் அர்த்தம் 'பிரயோஜனமானது' என்பதாகும். ஒரு காலத்தில் அவன் பிரயோஜனமற்ற வேலைக்காரனாயிருந்தான்; ஆனால் இப்போது அவன் இரட்சிக்கப்பட்டுவிட்டதால் அப். பவுலுக்கும் அவனது எஜமானுக்கும் பிரயோஜனமானவனாய் மாறியுள்ளான். இரட்சிக்கப்பட்ட ஒரு நபர் ஆவிக்குரிய உலகுக்கும் லௌகீக உலகுக்கும் ஆசீர்வாதமாயிருக்க வேண்டும்.

மார்ச் 22

விருத்திக்கு வழி

"***கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். ... அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்***" (சங். 1 : 2, 3).

யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீம் அரண்மனையின் அதிகாரிகளுக்கு முன்பாகத் தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய புஸ்தகச் சுருளை அவமதித்து, அதைச் சுட்டெரித்துப்போட்டான் (எரே. 36 : 22 - 27). இதன் விளைவாக, அவனைக் குறித்துக் கூறப்பட்ட கர்த்தருடைய வார்த்தை யாதெனில், "*தாவீதின் சிங்காசனத்தின்மேல் உட்காரும்படி அவன் வம்சத்தில் ஒருவனும் இரான்; அவனுடைய பிரேதமோவென்றால், பகலின் உஷ்ணத்துக்கும் இரவின் குளிருக்கும் எறிந்து விடப்பட்டுக் கிடக்கும்*" (வச. 30); "*ஒரு கழுதை புதைக்கப்படுகிற வண்ணமாய் அவன் எருசலேமின் வாசல்களுக்கு வெளியே இழுத்தெறிந்து புதைக்கப்படுவான்*" என்பதாகும் (எரே. 22 : 19).

அன்பான வாசகரே, யோயாக்கீமைப் போல் நீங்கள் வேதாகமத்தைத் தீயில் வீசி எறியாமலிருந்திருக்கலாம். ஆனால் அதை வாசிப்பதையும், தியானிப்பதையும் உதாசீனப்படுத்துவதின் மூலம் நீங்கள் அதை அவமதித்திருக்கலாம். நாம் தேவனில் மனமகிழ்ச்சியாயிருந்தால், தாவீதைப் போல அவருடைய வார்த்தையிலும் மனமகிழ்ச்சியாயிருப்போம் (சங். 119 : 162).

தமக்கென்று கனிகொடுக்கும்படி தேவன் யோயாக்கீமுக்கு மூன்று ஆண்டுகாலம் அளித்திருந்தது போல் தோன்றுகிறது. யோயாக்கீமின் அரசாட்சியின் மூன்றாவது ஆண்டில் பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேமை முற்றிகை போட்டதாகச் சரித்திரம் கூறுகிறது (தானி. 1 : 1, 2). ஆனால் அதற்குப் பின்னரே உண்மையில் கர்த்தர் யோயாக்கீமை அவனுடைய சத்துருக்களிடத்தில் ஒப்புக்கொடுத்தார். தேவன் அவனிடம் எதிர்பார்த்தவாறு அவன் கனி கொடுக்கவில்லை. நாம் தேவனின் கரத்தில் தங்கியிராவிட்டால், நமது சத்துருக்களின் கையில் விழுவோம். நாம் தேவனுடைய வார்த்தையை அவமதிக்கவோ, அலட்சியம்பண்ணவோ துணியாமல், அதைத் தியானிக்கவும் அதன்படி ஜீவிக்கவும் தேவன் தாமே நமக்குக் கிருபை அளிப்பாராக.

யோயாக்கீமுக்கு எதிர்மாறாக, யோசுவா என்ற தேவதாசன் தேவனுடைய வார்த்தையைத் தியானித்து, அதில் எழுதியிருப்பதின் படியெல்லாம் செய்யக் கவனமாயிருந்தபடியால், தேவன் அவனை ஆசீர்வதித்தார் (யோசுவா 1 : 8). ஆம், யோசுவா எவ்வாறு விருத்தியுள்ளவனாயிருந்தான் என நாம் அறிவோம். "*கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். ... அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்*" (சங். 1 : 2, 3) என்ற வேதவசனத்திற்கு அவன் சிறந்ததோர் எடுத்துக்காட்டாவான்.

அன்பான வாசகரே, நீர் ஒரு யோசுவாவாக இருக்க விரும்புகிறீரா? அல்லது ஒரு யோயாக்கீமாக இருக்க விரும்புகிறீரா?

மார்ச் 23

நன்மைசெய்து அங்கீகரிக்கப்படுங்கள்

'***காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கீகரிக்கவில்லை. அப்பொழுது காயீனுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி, அவன் முகநாடி வேறுபட்டது. அப்பொழுது கர்த்தர் காயீனை நோக்கி: உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முகநாடி ஏன் வேறுபட்டது? நீ நன்மைசெய்தால் அங்கீகரிக்கப்படமாட்டாயோ? என்றார்***'
(ஆதி. 4 : 5 - 7 -Eng.).

காயீனின் கொடூரமான முகம், அவன் தனது பலியைச் சரியான ஆவியுடன் செலுத்தவில்லை என்பதை வெளிப்படுத்திற்று. அங்கீகரிக்கப்படத்தக்க ஒரு பலியைச் செலுத்தாததற்காக தேவன் காயீனிடம் கோபமடையவில்லை; மாறாக, காயீனே தேவனிடம் கோபமடைந்தான். நம்முடைய விஷயமும் இதுவே. அநேக சந்தர்ப்பங்களில், தேவன் நமது

ஜெபங்களுக்குப் பதிலளிக்காமலிருப்பதால் அல்லது பதில்கள் தாமதித்துக் கிடைப்பதால், நாம் அவர் பேரில் கோபமடைகிறோம். ஆனால் நமது ஜெபம் சரியான காரியத்திற்காக, சரியான ஆவியுடன் ஏறெடுக்கப்பட்டதா என நம்மை நாமே ஆராய்ந்துபார்ப்பதில்லை.

'*நீ நன்மை செய்தால் அங்கீகரிக்கப்படமாட்டாயோ?*' என்று தேவன் காயீனிடம் கேட்டதிலிருந்து, அவன் நன்மை செய்யவில்லையாதலால் அவன் அங்கீகரிக்கப்படவில்லை என நாம் அறிகிறோம். காயீன் அங்கீகரிக்கப்பட முடியாத ஒரு பலியைச் செலுத்தி, தேவனிடமும் தன் சகோதரனிடமும் கோபமடைந்தபோதிலும், தேவன் ஒரு தகப்பனைப் போல அவனிடம் அன்பும் பாசமும் பாராட்டி, அவன் மனந்திரும்பிச் சரியானதைச் செய்தால் அவனை மன்னித்து ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருந்தார்.

எப்படிப்பட்டதொரு மனதுருக்கமுள்ள தேவன் நமக்கிருக்கிறார்! '*கர்த்தர் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர்*' என சங்கீதக்காரன் கூறுகிறான். நாம் நமது குறைகளை உணர்ந்து, மனஸ்தாபத்துடன் அவரிடம் திரும்ப வேண்டும் என்று அவர் எவ்வளவாய் ஆவலாக இருக்கிறார்! நம்மை ஏற்றுக்கொள்ளவும் அங்கீகரிக்கவும் அவர் எவ்வளவாய் ஆர்வமுள்ளவராயிருக்கிறார்!

மார்ச் 24

கிறிஸ்துவை வெளிக்காட்டுவோம்

'விசுவாசத்தினாலே சாராளும், வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி, சந்ததியைக் கர்ப்பந்தரிக்கப் பெலனைப்பெற்று, வயதுசென்றவளாயிருந்தும் பிள்ளை பெற்றாள்' (எபி. 11 : 11 -Eng.).

'*விசுவாசத்தினாலே சாரான் பெலனைப் பெற்றாள்*' - ஆவிக்குரிய பிரகாரமாகவும், சரீரப்பிரகாரமாகவும் பெலனடைய விசுவாசம் நமக்கு உதவி செய்கிறது. நாம் எங்கிருந்து பெலனைப் பெற்றுக்கொள்ள வேண்டும்? தேவனிடமிருந்தே! "*என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்து வினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு*" என அப். பவுல் கூறுகிறார். தேவனுடைய சித்தத்தைச் செய்ய கெத்செமனே தோட்டத்தில் கர்த்தராகிய இயேசு தம்மை அர்ப்பணித்தபோது ஒரு தேவதூதன் தோன்றி அவரைப் பெலப்படுத்தினான்.

சாராள் '*ஒரு சந்ததியைக் கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்தாள்*' - ஆவிக்குரிய ஜீவியத்தில் கனியுள்ளவர்களாயிருக்க தேவன் நம்மைப் பெலப்படுத்துகிறார். எவ்வளவதிகமாக நாம் விசுவாசத்தைப் பெறுகிறோமோ,

அவ்வளவதிகமாக நாம் தேவனுக்கென்று கனிகொடுக்கிறவர்களாயிருப்போம். சாராளின் இந்தச் சந்ததி கிறிஸ்துவையும் குறிக்கிறது. விசுவாசத்தினாலே கிறிஸ்து அல்லது கிறிஸ்துவின் சுபாவம் நமது வாழ்க்கையில் உருவாக்கப்படக் கூடும். அது போதாது. சாராள் *கர்ப்பந்தரித்து* ஒரு *பிள்ளையைப் பெற்றாள்*. கிறிஸ்து அல்லது கிறிஸ்துவின் சுபாவம் நமக்குள் உருவாக்கப்படுவது மாத்திரமன்றி, மற்றவர்களும் கிறிஸ்துவிடம் கவர்ந்திழுக்கப்படும்படியாக அது வெளியுலகுக்கு வெளிப்படுத்தப்படவும் வேண்டும்.

'*வயதுசென்றவளாயிருந்தும் பிள்ளை பெற்றாள்*' - 'நான் மனஸ்தாபத்துடன் தேவனிடம் திரும்புவதற்கு அதிக தாமதமாகிவிட்டது' என்றோ, 'தேவன் தமது கிருபையை எனக்களிப்பதற்கு அதிக தாமதமாகிவிட்டது' என்றோ நீங்கள் எண்ணலாம். அப்படியல்ல, அது தவறானது. கிறிஸ்துவின் சுபாவம் உங்களில் உருவாகவும், தேவ நாம மகிமைக்காக அது உலகுக்கு வெளிப்படவும் முடியாதபடி காலம் இன்னும் அதிக தாமதமாகிவிடவில்லை.

'*வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரென்று அவள் எண்ணினாள்*' - சாராள் தன் சரீரத்தின் நிலைவரத்தையும் தன் புருஷனின் சரீரத்தின் நிலைவரத்தையும் பார்த்தபோது ஒரு சந்ததியைப் பெறுவது சாத்தியமற்றது போல அவளுக்குத் தோன்றியபோதிலும், தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற உண்மையுள்ளவர் என அவள் எண்ணினாள் - அவ்வண்ணமாகவே அவரும் நிச்சயமாகவே உண்மையுள்ளவராக இருந்தார்!

மார்ச் 25

கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தின் மூலம் கிருபையின் ஐசுவரியம்

"அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" (எபே. 1 : 7).

ஒரு நபர் மற்றொருவரை மன்னிக்கக் கூடும்; ஆனால் அவர் அதோடுகூட தேவனுடைய கிருபையின் ஐசுவரியங்களை அவருக்கு அளிக்க முடியாது. ஆனால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் பாவ மன்னிப்பை மாத்திரமல்ல, கிருபையின் ஐசுவரியங்களையும் நாம் பெறுகிறோம். பாவமன்னிப்போடு கூட ஏன் கிருபையின் ஐசுவரியமும்

கொடுக்கப்படுகிறது? மன்னிக்கப்பட்ட அக்குறிப்பிட்ட பாவத்தையும் அதன் விளைவுகளையும் மேற்கொள்ள, ஒருவருக்குக் கிருபையின் ஐசுவரியம் இன்றியமையாததாய் இருக்கிறது.

எடுத்துக்காட்டாக, ஒருவனிலுள்ள பிரச்சினை கோபமாயிருக்கலாம். இதற்காக அவன் உண்மையான இருதயத்தோடு கர்த்தரிடம் மன்னிப்பு கேட்கும்போது, கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் அவன் மன்னிப்பைப் பெற்றுக்கொள்வது மாத்திரமல்ல, அக்கோபத்தை மேற்கொள்வதற்கான கிருபையின் ஐசுவரியத்தையும் பெற்றுக்கொள்ளுகிறான். *பல்லாயிரக்கணக்கான நல்நோக்குடைய கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் இரத்தத்திலுள்ள இவ்வல்லமையை அறியாதவர்களாயிருக்கிறார்கள்.*

ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலுள்ள மகிமையான வல்லமையை விளங்கிக்கொள்ளும்படியாக உங்களுடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டிருக்குமாயின், நீங்கள் உங்கள் எல்லாப் பாவங்களுக்காகவும் உண்மையாகவே மனஸ்தாபப்பட்டு மன்னிப்புக்காகக் கெஞ்சுவீர்கள். அப்பொழுது அவ்வெல்லாப் பாவங்களும் உங்களுக்கு மன்னிக்கப்படுவதுடன், அப்பாவங்களுடன் சம்பந்தப்பட்ட பாவசுபாவங்களை (அதாவது பெருமை, கோபம், பொறாமை, இச்சை, பேராசை, கசப்பு, மன்னிக்கமுடியாத ஆவி போன்ற எவையாயிருப்பினும் அவற்றை) மேற்கொள்வதற்கான கிருபையின் ஐசுவரியத்தையும் நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள். கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தின் மூலமாகக் கிடைக்கும் கிருபையின் ஐசுவரியங்கள், தாழ்மை, சாந்தம், அன்பு, தூய்மை, தயாளகுணம், மன்னிக்கும் சுபாவம் போன்றவற்றை நமக்களிக்கின்றன. உதாரணமாக, நீங்கள் ஒருவேளை புகைபிடித்தலுக்கு அடிமையாயிருந்து, உண்மையான மனஸ்தாபத்துடன் மனந்திரும்பினால், கிறிஸ்துவின் இரத்தம் உங்களுடைய அப்பாவத்தை நீக்கி உங்களைக் கழுவிச் சுத்திகரிப்பது மாத்திரமல்ல, அப்பாவத்தை மேற்கொள்வதற்கான கிருபையின் ஐசுவரியத்தையும் அது உங்களுக்கு அளிக்கும். தேவனுடைய கிருபையால் அதன் வாசனையையே நீங்கள் வெறுப்பீர்கள்.

மார்ச் 26

'உலகம் என் பின்னே'

"***தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப் போவதற்கு அவர்களுக்குச் சமயங் கிடைத்திருக்குமே***" (எபி. 11 : 15).

கர்த்தராகிய இயேசு தமது சீஷர்களைத் தங்களுக்குரிய அனைத்தையும் விட்டு தம்மைப் பின்பற்றும்படி அழைத்தாரென புதிய ஏற்பாட்டில்

நாம் பார்க்கிறோம். அவ்வாறே அவர்கள் கர்த்தரைப் பின்பற்றி அவரைச் சேவிக்கும்படி தங்கள் படகுகளையும், வலைகளையும், மற்றும் தங்களுக்கு அருமையானவர்களையும் விட்டுவிட்டார்கள். ஆனால் இதற்கும் வெகு காலத்திற்கு முன்னரே, வேதாகமமோ, சபையோ, தேவ ஊழியரோ, பரிசுத்த ஆவியானவர் தங்களுக்குள் வாசமாயிருக்கும் அனுபவமோ இல்லாத ஒரு காலத்திலேயே ஆபிரகாம் மகிமையின் தேவனுடைய அழைப்பிற்கிணங்கி, அவரைப் பின்பற்றும்படி தனக்கு இலாபமாயிருந்தவைகளை விட்டுவிட்டான்.

தேவன் ஆபிரகாமைப் புறப்பட்டுப் போகும்படி அழைத்தபோது, அவன் திரும்பிவருவதற்கான யாதொரு வாக்குத்தத்தமும், திட்டமும் இருக்கவில்லை. அவன் தனது தேசத்தை விட்டுச் செல்லும்போது, தான் மீண்டும் அங்கு திரும்பிச் செல்லக் கூடாதவாறு 'படகையும், பாலத்தையும் சுட்டெரித்துவிட்டு' சென்றான். "*தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப்போவதற்கு அவர்களுக்குச் சமயங் கிடைத்திருக்குமே*" (எபி. 11 : 15).

"*புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்*" (ஆதி. 12 : 1, 2). 'நீ புறப்பட்டுப் போ'; அப்போது (i) நான் உனக்குக் காண்பிப்பேன்; (ii) நான் உன்னை ... ஆக்குவேன்; (iii) நான் உன்னை ஆசீர்வதிப்பேன்; (iv) நான் உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; (v) நீ ஆசீர்வாதமாயிருப்பாய். உலகத்தோடு இணங்கிப்போய், அதனுடன் சமரசம் செய்துகொள்வதின் மூலம் தேவபிள்ளைகள் பலரும் பலவிதமான நித்திய ஆசீர்வாதங்களை இழந்துபோவது எவ்வளவு துக்ககரமானது!

ஆபிரகாம் கீழ்ப்படிந்து புறப்பட்டுச் சென்றான். தன் ஜீவியகாலம் முழுவதும் அவன் வாழ்ந்துவந்த கூடார வாழ்க்கையானது, கர்த்தர் எந்தச் சமயத்தில் சொன்னாலும் இடம் பெயர்ந்து செல்வதற்கு அவன் மனமுவந்திருந்தான் என்பதை வெளிப்படுத்திற்று. கர்த்தரை இன்னும் அதிகமாக நெருங்கிப் பின்பற்றும்படி, அவருக்குக் கீழ்ப்படிந்து இவ்வுலகப் பொருட்களை விட்டுவிடும்படி நாம் எந்த அளவுக்கு மனமுவந்திருக்கிறோம்?

இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்
பின்நோக்கேன் நான் பின்நோக்கேன் நான்.
உலகம் என் பின்னே, சிலுவை என் முன்னே
பின்நோக்கேன் நான் பின்நோக்கேன் நான்.

மார்ச் 27

உன் சுபாவத்தின் பிரதிபலிப்பு

"*நான் எகிப்தியரைக் கடினமான அதிபதியின் கையில் ஒப்பிப்பேன்; கடூரமான ராஜா அவர்களை ஆளுவான் என்று சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்*" (ஏசாயா 19 : 4).

இது மிகவும் அச்சுறுத்தும் ஒரு வசனமாயிருப்பினும் இது மிக உண்மையானது. 'எகிப்தியன்' என்பதன் ஒரு விளக்கம், 'பின்வாங்கு கிறவன்' என்பதாகும். நீ இருதயத்தில் பின்மாற்றமடைந்த ஒரு நபராயிருந் தால், கர்த்தர் உன்னை ஒரு 'கடினமான அதிபதியின்' கையில் ஒப்புக் கொடுத்துவிடுவார். அந்தக் கொடிய அதிபதி ஒருவேளை அந்திக்கிறிஸ்துவா யிருக்கலாம். பின்வாங்கிப்போகிறவன், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையில் கைவிடப்படுவான். கொடிய அதிபதியாகிய அந்திக் கிறிஸ்து அவனை ஆளுகை செய்வான். அத்துடன், நீ இருதயத்தில் பின்வாங்கிப்போயிருக்கும் ஒரு நபராயிருந்தால் உனக்கு மேலிருப்பவர் களும், உன் மேலதிகாரியும், உன் பெற்றோரும், தேவ ஊழியரும் கூட எப்போதும் கடினமான அதிபதிகளாக இருப்பது போல அல்லது உன்னைக் கடினமாய் ஆளுகைசெய்கிற கடூரமான ராஜாக்களாக இருப்பது போல உனக்குத் தோன்றும்.

இதற்கான பரிகாரம்தான் யாது? நீ மனஸ்தாபத்துடன் மனந்திரும்பி, உன்னில் இருக்கக்கூடிய பின்மாற்றத்தின் ஆவியை வெறுத்துத்தள்ளு வாயாக. நீ மனக்கடினமுள்ள ஒரு நபராயிருந்தால், உனக்கு மேல் வைக்கப்பட்டிருப்பவர்கள் உன்னைப் போலவே கடினமானவர்களாக அல்லது உன்னைக் காட்டிலும் அதிக கடினமானவர்களாக இருப்பதாக உனக்குத் தோன்றும். நீ இரக்கமற்ற ஒரு நபராயிருந்தால், உன்னைச் சூழ்ந்திருப்பவர்களும் அல்லது உனக்கு மேலே இருப்பவர்களும் உன்னோடு கடூரமாகச் செயல்படுவதாக நீ உணருவாய். நீ மற்றவர்களை மன்னியாத ஒரு நபராயிருந்தால், உன் தேவனும் அப்படிப்பட்ட வராகவே உனக்குத் தென்படுவார். வேறு வார்த்தைகளில் கூறினால், நீ உன்னைச் சுற்றிலும் உள்ள ஜனங்களில் காண்பதெல்லாம் உன் சுபாவத்தின் பிரதிபலிப்பே ஆகும். நீ மென்மையான இருதயமுள்ளவனாக, மன்னிக் கிறவனாக, அன்புகூருகிறவனாக, பிறரைக் குறித்த கரிசனையுள்ளவனாக இருந்தால், உன்னைச் சுற்றிலும் இருக்கும் யாவரும் இக்குணநலன்களைக் கொண்டவர்களாயிருப்பதாக நீ உணருவாய்.

மார்ச் 28

தேவதரிசனம்

"*நான் அவரைக் கண்டபோது செத்தவனைப்போல அவருடைய பாதத்தில் விழுந்தேன்*" (வெளி. 1 : 17).

அப். யோவானுக்குக் கர்த்தர் அநேக நித்திய வாசஸ்தலங்களையும் வருங்காலப் பேரின்பத்தையும் பற்றிய வெளிப்படுத்தலைக் கொடுக்கும் முன்னர், தம்மைக் குறித்த தெளிவான ஒரு தரிசனத்தை அளித்தார் (வெளி. 1 : 13 - 16).

'*அவருடைய சிரசு வெண்பஞ்சைப்போலவும் உறைந்த மழையைப் போலவும் வெண்மையாயிருந்தது*' - 'சிரசு' என்பது நமது சிந்தனை மண்டலம், மனது அல்லது ஆவியைக் குறிக்கிறது. ஏசாயா 1 : 18 -இல் 'உறைந்தமழை', 'பஞ்சு' ஆகியவை தூய்மையின் உச்ச கட்டத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளன. ஆம்! உண்மையாகவே தேவன் தமது மனதில் மிக அதிகத் தூய்மையானவர்; நாமும் நம் மனதில் அதே தூய்மையை உடையவர்களாயிருக்க வேண்டும் என அவர் விரும்புகிறார்.

"*அவருடைய கண்கள் அக்கினிஜ்வாலையைப் போலிருந்தது*" - "கண்கள்" என்பது 'ஆவிக்குரிய தரிசனத்தைக்' குறிக்கிறது. தேவனைப் பொறுத்த வரையிலும் சகலமும் அவருக்குத் தெளிவாயிருக்கின்றன. ஆனால் நம்மைப் பொறுத்த வரையிலும் நமது தரிசனம் அக்கினி ஜ்வாலையைப் போல் பிரகாசமாயிருக்க வேண்டுமானால், நமது எண்ணங்கள் தூய்மை யானவையாயும் கறையற்றவையாயும் இருக்க வேண்டும்.

"*அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போலிருந்தது*" - "பாதங்கள்" நமது ஜீவியத்தின் நடக்கையைக் குறிக்கிறது. நமது 'தலை'யைக் (சிந்தை) குறித்து நாம் கவனமாயிருப்போ மானால், நமது 'பாதங்களும்' (நடைகளும்) செம்மையானவையாக, ஒழுங்குக்குட்பட்டவையாக நடத்தப்பட்டு இயங்கும். "உலைக்களத்தில் காய்ந்த" என்பது அக்கினியிலூடாகக் கடந்துவந்திருப்பதைக் குறிக்கிறது. சிலர் தங்கள் வாழ்க்கையைச் சுத்தமாய்க் காத்துக்கொள்ளத் தவறியதால் தங்கள் சோதனைகளில் அழிந்துபோகிறார்கள். ஆனால் தங்கள் வாழ்க் கையைப் பரிசுத்தமாய்க் காத்துக்கொள்ளக் கவனமாயிருப்பவர்களை அக்கினி சோதனைகள் அழிப்பதில்லை. மாறாக, அச்சோதனைகள் அவர்களுடைய பாதங்களை மிகப் பிரகாசமாய் ஜொலிக்கச் செய்வதற்கான ஏதுக்களாய் மட்டுமே அமைகின்றன.

"*நான் அவரைக் கண்டபோது செத்தவனைப்போல அவருடைய பாதத்தில் விழுந்தேன்*" - தேவனை முகமுகமாய்க் கண்டு ஒருவரும் உயிருடனிருக்க முடியாது. தேவனைக் குறித்த ஒரு வெளிப்படுத்தலை நாம் பெறும்போது, சுயம், பெருமை போன்றவைகளாலான நம்முடைய 'பழைய மனிதனுக்கு' நாம் மரிக்கிறோம்.

'*அப்பொழுது அவர் தம்முடைய வலது கரத்தை என் மேல் வைத்தார்*' - தேவனின் வலதுகரம் என்பது அநேக காரியங்களைக் குறிக்கிறது. ஆனால் இங்கு அது குறிப்பாக தேவனின் திட்டத்தைக் குறிக்கிறது. நாம் நம்முடைய சுயத்திற்கு மரிக்கும்போது, நமது வாழ்க்கையைக் குறித்த தேவனுடைய திட்டம் பற்றிய வெளிப்படுத்தல் நமக்கு அருளப்படுகிறது.

நாம் அதரிசனமான தேவனைக் குறித்தும், அவரது அளவிட முடியாத பரிசுத்தத்தைக் குறித்தும் தெளிவான தரிசனத்தைப் பெற்றுக் கொள்ளும்படி நாடுவோமாக. அப்படியாயின் நாம் அவருடைய பாதத்தில் விழுந்து மரிக்கக்கூடியவர்களாயிருப்போம். ஆம். நாம் மரிப்பதற்கேற்ற மிகச் சிறந்த இடம் அவரது பாதமே!

மார்ச் 29

உள்ளும் புறம்பும்

'***நீ கொப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு; அதை உள்ளும் புறம்புமாகக் கீல்பூசு***' (ஆதி. 6 : 14).

ஆதியாகமம் 6 : 14 -இல் 'கீல்' என மொழிபெயர்க்கப்பட்டுள்ள 'Kaphar' என்ற எபிரெய வார்த்தைக்கு அநேக அர்த்தங்கள் உள்ளன; அவை அனைத்துமே கிறிஸ்துவைக் குறித்த ஆச்சரியமான உண்மை களைக் குறிப்பதாயிருக்கின்றன.

கேஃபர் என்ற சொல், 'மன்னிப்பு' என வேதாகமத்தில் சில இடங் களில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆம். நம்முடைய கர்த்தர், "உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது" என ஜனங்களிடம் கூறியபோது, அவர் தம்முடைய இருதயத்திலும் அவர்களை மன்னித்துவிட்டார். தேவனுடைய பிள்ளைகள் சிலர், 'நான் உன்னை மன்னித்துவிட்டேன்' என்று கூறினாலும், அவர்களது இருதயமோ அக்கூற்றுக்கு எதிராகவே சாட்சி கூறிக்கொண்டிருக்கும். நாம் உள்ளும் புறம்பும் கீல் பூசுவோமாக. நம்முடைய சகோதரனின் தப்பிதங்களை நாம் நம்முடைய இருதயத்திலி ருந்து 'மனப்பூர்வமாக மன்னிக்காவிட்டால்' நமது பரமபிதா நம் மீது கோபமடைந்து நம்மை 'உபாதிக்கிறவர்களிடத்தில்' ஒப்புக்கொடுப்பாரென

கர்த்தராகிய இயேசு கூறினார் (மத். 18 : 34, 35). "*கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்*" என அப். பவுல் அறிவுறுத்துகிறார் (கொலோ. 3 : 13). தேவபிள்ளையே, உனக்குத் **தீ**ங்கிழைத் திருக்கிறவர்களை நீ தாராளமாக அன்புகூர உன்னால் முடிகிறதா? அல்லது, அவர்கள் மூலம் நீ அனுபவித்துள்ள **தீ**மைகளை நீ சிற்சில வேளைகளில் நினைவுகூருகிறாயா?

'கேஃபர்' என்பது 'கழுவப்பட்ட' என்றும், 'இரக்கமுள்ள' என்றுங்கூட பொருள்படும். கர்த்தராகிய இயேசு உள்ளும் புறம்பும் தூய்மையானவரா கவும் இரக்கமுள்ளவராகவும் இருக்கிறார். நமது செயல்கள் அனைத்தும் தூய்மையானவையாகவும் இரக்கம் நிறைந்தவையாகவும் இருப்பது மாத் திரம் போதாது; நமது உள்ளான இருதயத்திலும் நாம் பூரண பரிசுத்த முள்ளவர்களாகவும், இரக்கமும், மனஉருக்கமும், தயவும் நிறைந்தவர் களாகவும் இருக்கிறோமா என்பதை நாம் நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும். '*ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத் தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும் தரித்துக் கொண்டு*' (கொலோ. 3 : 12).

கிறிஸ்துவின் மணவாட்டி, 'உள்ளாகப் பூரண மகிமையுள்ளவளா யிருக்கிறாள்' (சங். 45 : 13). நமது இரகசிய வாழ்வைப் பரிசுத்த ஆவியான வருக்கு முன்பாகத் திறந்துவைத்து, அவர் கர்த்தராகிய இயேசுவின் குண சீலங்களை அதில் பதியச்செய்யும்படி நாம் அவரை அனுமதிப்போமா?

மார்ச் 30

நீர் மனதில் காயமடைந்திருக்கிறீரா?

"***என் சிநேகிதரின் வீட்டிலே காயப்பட்டதினால் உண்டானவைகள்***"
(சக. 13 : 6).

பரிசுத்தமாக்கப்படாத ஒரு ஜீவியம் செய்துகொண்டு, கர்த்தருடைய நாமத்தை உச்சரிக்கிறவர்களாக அவருக்கு ஊழியம் செய்யும் அனை வருக்கும் ஒரு பயங்கரமான எச்சரிப்பு கொடுக்கப்படுகிறது.

பிரதான ஆசாரியன் ஒருவனின் குமாரர்களாகிய தேசாந்திரிகளாய்த் திரிந்த மந்திரவாதிகளாகிய யூதர்களில் சிலர், அப். பவுலின் ஊழியத்தில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் பொல்லாத ஆவிகள் துரத்தப் பட்டதைக் கண்டபோது அவரது ஊழியத்தினால் அதிகமாகக் கவர்ந்து கொள்ளப்பட்டனர். தாங்களும் அவ்வாறே செய்யலாம் என்று அவர்கள் எண்ணினர். ஆனால் அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைக்

கூறியபோது, பொல்லாத ஆவி அவர்களை நோக்கி, "இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார் என்று சொல்லி, பொல்லாத ஆவியையுடைய மனுஷன் அவர்கள்மேல் பாய்ந்து, பலாத்காரம் பண்ணி, அவர்களை மேற்கொள்ள, அவர்கள் நிருவாணிகளும் காயப்பட்டவர்களு மாகி அந்த வீட்டை விட்டு ஓடிப்போனார்கள்" (அப். 19 : 15, 16).

அன்பான வாசகரே, நீர் இருதயத்திலே விருத்தசேதனமடைந்து, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றிருக்கிற ஒரு யூதராயிருந்தும் (ரோமர் 2 : 28, 29 ; பிலி. 3 : 3) அடிக்கடி மனதில் புண்பட்டவராக அல்லது இடறல் அடையும் ஒருவராக இருக்கிறீரா? உம்முடைய மனதில் நீர் புண் பட்டிருப்பதற்கு எந்த மனிதரையும் குறைகூற வேண்டாம். ஒருவேளை உம்முடைய பரிசுத்தமாக்கப்படாத சுபாவத்தினால் பொல்லாத ஆவிகள் உம் மீது ஆதிக்கம் செலுத்த நீர் இடமளித்திருக்கக் கூடும். நீர் மனதில் காயப்படுத்தப்பட்ட நிலையில் இருப்பீராயின், நீர் ஆவிக்குரிய பிரகார மாக நிர்வாணியாகவும் மாறக்கூடும். நீர் மனிதனைக் (யார் மூலம் இடற லடைந்திருக்கிறீரோ அந்த நபரை) குற்றஞ்சாட்டினால் பிசாசானவன் மிகவும் சந்தோஷப்படுவான். ஏனெனில் அதன் மூலம் நீர் நடைமுறையில் பிசாசானவனைக் குற்றமற்றவனென நிரூபிக்கிறீர். உம் மீது ஆதிக்கம் செலுத்தி, உம்மைக் காயப்படுத்தி, நிர்வாணியாக்கினவன் பிசாசானவனே என்பதை உணர்ந்து அவனை அடையாளங்கண்டுகொள்ளாவிட்டால், உம்மால் அவனை ஒருபோதும் எதிர்த்துநிற்க முடியாது. இதன் விளைவாக, நீர் வெட்கமடைந்து ஓடும் வரை அதே பொல்லாத ஆவி உம்மைத் தொடர்ந்து காயப்படுத்தி, வாதித்துக்கொண்டிருக்கக் கூடும்.

மார்ச் 31

தேவன் நம்பத் தகுந்தவர்

"*விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப்போவா னானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது*" (எபி. 10 : 38).

இங்கிலாந்திலுள்ள பிரிஸ்டல் என்னும் இடத்தில் தேவமனிதராகிய ஜார்ஜ் முல்லருக்கு அநாதைகளின் இல்லம் ஒன்று இருந்தது. அதில் அவர் 1,500 பிள்ளைகளைப் போஷித்துப் பராமரித்துவந்தார். அவ்வில்லம் விசுவாசத்தால் மாத்திரமே நடத்தப்பட வேண்டுமென்பது முல்லரின் மிகக் கண்டிப்பான கட்டளையாயிருந்தது. யாரிடமும் பண உதவியைக் கேட்கக் கூடாது என்றும், மறைமுகமாகக்கூட தங்களது பண சம்பந்தமான தேவைகளை ஒருவருக்கும் வெளிப்படுத்தக் கூடாது என்றும் அவர் தன்னிடம் அங்கு பணிபுரிவோருக்குக் கற்பித்திருந்தார்.

ஒரு நாள் காலையில் அநாதைகளின் இல்லத்தில் ஆகாரம் அறவே இல்லை எனவும், ஏதாவது பணம் அப்போது கிடைத்தாலுங்கூட, சந்தைக்குச் சென்று பொருட்களை வாங்கிவந்து உணவு சமைத்து முடிப்ப தற்குள்ளாகக் குழந்தைகள் மயக்கமடையக் கூடும் எனவும் ஜார்ஜ் முல்லருக்கு அறிவிக்கப்பட்டது. அவர் ஜெபித்துவிட்டு, குழந்தைகளை வழக்கம் போல் ஆகாரத்திற்கென வரிசையில் அமரச்செய்யும்படியாகவும், சாப்பிடும் தட்டுகளை அவர்களுக்கு விநியோகிக்கும்படியாகவும் தனது பணியாட்களிடம் கூறினார். பின்பு தேவன் அளித்த உணவுக்காக அவரை ஸ்தோத்திரிக்கும்படி பிள்ளைகளுக்குக் கூறப்பட்டது. விடுதியில் ஆகாரம் இல்லாத நெருக்கடியான சூழ்நிலையை அறிந்திராத அப்பிள்ளைகள் உற்சாகமாகத் தேவனை ஸ்தோத்திரிக்கலாயினர். அந்த க்ஷணப்பொழுது தானே அநாதைகளின் இல்லத்தின் கதவை ஒருவர் தட்டி, அது ஜார்ஜ் முல்லர் அவர்களின் அநாதைகளின் இல்லந்தானா என வினவினார். உணவுப் பதார்த்தங்களால் நிறைந்த பாத்திரங்களைச் சுமந்துவந்த குதிரை வண்டி ஒன்று வாசலில் நின்றுகொண்டிருந்தது; அவ்வுணவுப் பதார்த்தங் களை எங்கே இறக்கிவைப்பது என அம்மனிதன் கேட்டார். அவற்றை எங்கும் இறக்கிவைக்க வேண்டாம் என்றும், நேரடியாகவே அவற்றைப் பிள்ளைகளுக்குப் பரிமாற வேண்டுமென்றும் ஜார்ஜ் முல்லர் தன் பணி யாட்களிடம் கூறினார். அன்று அது அவர்களுக்கு மிக அருமையான அருஞ்சுவையான விருந்தாக அமைந்தது. நடந்தது என்னவென்றால், அருகாமையிலிருந்த ஊரில் திருமண வரவேற்பு விழா ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது; தம்பதியரில் ஒருவருடைய உறவினரொருவர் திடீரென மரணமடைந்ததால் அந்த வரவேற்பு விழாவை அவர்களால் நடத்தக் கூடாமற்போயிற்று. சமைத்த உணவை என்ன செய்வதென எண்ணி அவர்கள் திகைத்துக்கொண்டிருந்தபோது, ஜார்ஜ் முல்லரின் அநாதைகளின் இல்லத்தைக் குறித்து அறிந்திருந்த ஒருவர் அவ்வுணவை அங்கு அனுப்பிவைக்குமாறு ஆலோசனை கூறினார்.

தேவன் நம்பத் தகுந்தவர் என்பதை உலகிற்கு நிரூபிக்கவே, விசுவாசத்தால் குழந்தைகளைப் போஷித்துப் பராமரிப்பதற்கான சகல பிரயாசங்களையும் தான் மேற்கொண்டிருப்பதாக ஜார்ஜ் முல்லர் ஒருமுறை கூறினார்.

அன்பான நண்பரே, உமது அனைத்துத் தேவைகளுக்காகவும் கர்த்தரில் நம்பிக்கை வைப்பதற்கு நீர் கற்றுக்கொண்டிருக்கிறீரா? "*மனுஷனை நம்புவதைப்பார்க்கிலும், கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்*" (சங். 118 : 8) என்பதே வேதாகமத்தின் மையப் பகுதியிலுள்ள வசனமாகும். நீர் தேவனுடைய சித்தத்தின் மையத்தில் இருக்க விரும்பி னால், தேவனுடைய வார்த்தையின் மையத்திற்குச் செல்லுவீராக.

ஏப்ரல் 1

நம் மனதைச் சுற்றி மதில்

"*சீயோனுக்கு உமது பிரியத்தின்படி நன்மைசெய்யும்; எருசலேமின் மதில்களைக் கட்டுவீராக*" (சங். 51 : 18).

புதிய எருசலேமின் மதில் வச்சிரக்கல்லால் கட்டப்பட்டிருந்ததென நாம் வாசிக்கிறோம். அதன் கனம் 144 முழமாயிருப்பதாகத் (சுமார் 216 அடி) தெரிகிறது (வெளி. 21 : 17, 18). ஆவிக்குரிய பிரகாரமாக, நாமே தேவனுடைய நகரமாகிய புதிய எருசலேமும் சீயோனுமாயிருக்கிறோம்.

புதிய எருசலேமின் மதில்கள் என்பது பல அர்த்தங்களையுடைய தாகும். அதன் ஒரு பொருள், நமது மனதைச் சுற்றிலும், எல்லாப் பக்கங்களிலும் பலம் வாய்ந்த ஒரு மதில் இருக்க வேண்டும் என்பதாகும். இந்த தேவநகரத்தினுள்ளே, **தீ**ட்டையும் அருவருப்பையும் நடப்பிக்கிற யாதொன்றும் பிரவேசிப்பதில்லை என நாம் வாசிக்கிறோம். நமது மனதைச் சுற்றிலும் எல்லாப் பக்கங்களிலும், ஒன்றினாலும் வெல்ல முடியாத 'வச்சிரக்கல்லாலான மதில்' கட்டப்படுவதன் மூலமாக அது தூய்மையாகக் காக்கப்பட வேண்டுமென தேவன் விரும்புகிறார்.

எருசலேமின் அலங்கம் இடிக்கப்பட்டுக் கிடப்பதாக நெகேமியா கேள்விப்பட்டபோது, அவன் '*உட்கார்ந்து அழுது, சிலநாளாய்த் துக்கித்து, உபவாசித்து, பரலோகத்தின் தேவனை நோக்கி மன்றாடினான்*' (நெகே. 1 : 3, 4). கர்த்தர் தனக்குத் துணைசெய்தபடியால் அவன், எருசலேமின் அலங்கத்தைத் திரும்பக் கட்டி, அதன் இடிக்கப்பட்டிருந்த பகுதிகளைச் செப்பனிட்டான்.

இச்செயலுக்கு நேரான சத்துருக்களின் பிரதிக்கிரியை சுவாரஸ்ய மானது: "*எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிற வேலை வளர்ந்தேறுகிறது என்றும், இடிக்கப்பட்ட இடங்கள் அடைபட்டுவருகிறது என்றும் சன்பல்லாத்தும், தொபியாவும், அரபியரும், அம்மோனியரும், அஸ்தோத்தி யரும் கேட்டபோது, அவர்கள் மிகவும் எரிச்சலாகி, எருசலேமின்மேல் யுத்தம் பண்ண எல்லாரும் ஏகமாய் வரவும், வேலையைத் தடுக்கவும் கட்டுப்பாடு பண்ணினார்கள்*" (நெகே. 4 : 7, 8). நாம் நமது மனதின் அலங்கத்திலுள்ள இடிக்கப்பட்ட பகுதிகளை அடைத்து, அதைச் செப்பனிடுவோமாயின் பிசாசானவன் மிகுந்த கோபமடைவான்.

நாம் கட்டுகிற இந்த 'மதில்' யாது? ஒரு அர்த்தத்தில் அது, என்னதான் நேரிடினும் நமது மனது, எண்ணங்கள், கற்பனைகள் முதலி

யவைகளை எவ்விதத்திலும் **தீ**ட்டுப்படுத்துவதில்லை என நாம் தேவனுக்கு முன்பாகச் செய்யும் முறித்துப்போடமுடியாத பிரதிஷ்டை ஆகும். நமது மனதைக் கிறிஸ்துவின் மனதைப் போல நாம் பூரணமாகத் தூய்மையாக வைத்திருந்தால், நமக்கெதிரான பிசாசின் திட்டங்கள் அனைத்தையும் நாம் முற்றிலுமாகக் கவிழ்த்துபோடக்கூடியவர்களாயிருப்போம் என்பதை அவன் அறிவான்.

அன்பான தேவபிள்ளையே, உன் மனதைச் சுற்றியுள்ள மதில் எந்நிலையில் உள்ளது? சத்துருக்களும் காட்டு மிருகங்களும் அதைத் தகர்த்துப்போட்டு, உனது மனதிற்குள் புகுந்து, உன் சிந்தனை மண்ட லத்தைத் **தீ**ட்டுப்படுத்தத் தக்கதாக அது அவ்வளவு பெலனற்ற நிலையில் உள்ளதா?

ஏப்ரல் 2

ஒன்றுமில்லாமையிலிருந்து ...

'*இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவருமா யிருக்கிற தேவன்*' (ரோமர் 4 : 17).

தேவன் ஒன்றுமில்லாமையிலிருந்து எல்லாவற்றையும் சிருஷ்டித் தார். நமக்கு ஏதாகிலும் கொஞ்சம் தெரியும் என எண்ணுவதே மிகவும் அபாயகரமானதாகும். நமக்கிருக்கும் சொற்ப அறிவைக் குறித்து மேன்மை பாராட்டுவது உண்மையில் மிக ஆபத்தானதாகும். 'தேவன் ஒன்று மில்லாமையிலிருந்து உருவாக்குகிறார். எனவே ஒரு மனிதன், தான் ஒன்று மில்லை என்ற நிலைக்கு வரும் வரையிலும் அவனிலிருந்து தேவனால் ஒன்றுமே உருவாக்க முடியாது' என மார்ட்டின் லுத்தர் கூறியிருக்கிறார்.

தேவன் உருவாக்குவது எதுவாயினும் அது பலம் வாய்ந்ததாகவே இருக்கும். ஒன்றுமே இல்லாத நிலைவரத்தில் அதாவது நமது புத்திக் கூர்மையோ, பிரசங்கிக்கும் அல்லது பாடும் தாலந்தோ அல்லது யாதொரு மனிதத் திறமையோ ஒன்றுமே இல்லை, தேவ கிருபை ஒன்று மட்டுமே இருக்கிறது என்ற நிலையிலேயே பெரும்பாலும் எழுப்புதல் தொடங்கு கிறது. தேவபிள்ளைகளாகிய நாம் நம்மை வெறுமையாக்கி ஒன்றுமில்லாத ஒரு நிலைக்கு வரக்கூடாதவர்களாயிருக்கும்போது பெரும்பாலும் எழுப்புதல் தடைபடுகிறது என்பதும் உண்மையே. நாம் தேவனுக்கு அர்ப்பணிக்காத ஒன்று அல்லது நம்முடைய தேவனைவிட நாம் அதிகமாக நேசிக்கும் ஒன்று எழுப்புதலுக்குத் தடையாக அமைகிறது.

எலியாவின் வேலைக்காரன் சமுத்திரமுகமாய்ப் பார்த்து, "ஒன்றும் இல்லை" என்று சொன்னது ஒரு அம்சத்தில் சரியானதே. மனுஷீகக் கண்களுக்கு ஒரு பெருமழைக்கு அதாவது ஒரு எழுப்புதலுக்குச் சாதக மான ஒன்றும் புலப்படவில்லை. எல்லாம் அந்தகாரமாகவும், வறட்சி யாகவும், அதைரியப்படுத்துவதாகவும் இருந்தது. ஆனால் இதோ, "பெருமழை உண்டாயிற்று" (I இராஜா. 18 : 43, 45)!

தேவன் ஒன்றுமில்லாமையிலிருந்து வானத்தைச் சிருஷ்டித்தார் என்று நாம் வாசிக்கிறோம். நம்முடைய ஒன்றுமில்லாமையை நாம் உணரும்போது, நாம் எவ்வளவு தகுதியற்றவர்களும் வெறுமையான வர்களுமாயிருக்கிறோம் என்பதை நாம் உணரும்போது, அப்போது, அப்போது மாத்திரமே தேவனால் நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் பரலோகத்தைச் சிருஷ்டிக்க இயலும். உண்மையில், நாம் பற்றிப்பிடித்துக் கொண்டிருக்கிற அல்லது தேவனுக்கு அர்ப்பணிக்காத 'ஏதாயினும் ஒன்று' தேவன் மேலுள்ள அன்புக்கும் பயபக்தியுடன் கூடிய அர்ப்பணிப்பிற்கும் தடையாகக் குறுக்கே நிற்குமாயின், அது நம் ஜீவியத்தில் பரலோகத்தை அல்ல, நரகத்தையே சிருஷ்டிக்கக் கூடியதாயிருக்கும்.

ஏப்ரல் 3

ஆரம்பத்தைப் பார்க்கிலும் நல்ல முடிவு

"*ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதின் முடிவு நல்லது; பெருமையுள்ளவனைப் பார்க்கிலும் பொறுமையுள்ளவன் உத்தமன்*"
(பிர. 7 : 8).

ஆவியில் பொறுமையுள்ளவர்கள் மற்றவர்களைவிட மேலான நல்ல முடிவை அடைவார்கள். யோபு எவ்வளவாகப் பொறுமையுள்ளவனா யிருந்தானெனவும் அவனது முடிவு எவ்வாறு இருந்ததெனவும் நாம் வாசிக்கிறோம். "*இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான் களென்கிறோமே! யோபின் பொறுமையைக்குறித்துக் கேள்விப்பட்டிருக் கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்; கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுள்ளவராயிருக்கிறாரே*" (யாக். 5 : 11). யோபின் பொறுமையினிமித்தம் அவனது முடிவு இரண்டத்தனையான ஆசீர் வாதமுள்ளதாயிருந்தது; அவனது முன்னிலைமையைப் பார்க்கிலும் பின் நிலைமையைக் கர்த்தர் அதிகமாய் ஆசீர்வதித்தார். குறிப்பாக அவனது ஜீவியத்தின் முடிவில் அவர் அவன்பேரில் மிகுந்த உருக்கமும் இரக்கமு முள்ளவராக இருந்தார்.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பொறுமை, ஒரு விசேஷமான பொறுமையாகும். "*இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள்*" (யாக். 5 : 7). இந்தப் பொறுமை, ஒருவர் கர்த்தரின் இரகசிய வருகைக்காகப் பொறுமையாய்க் காத்திருப்பதைக் குறிக்கிறது. இத்தகைய பரிசுத்தவான்களின் முடிவு (அவர்களின் மரணமோ அல்லது அவர்கள் கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படுதலோ, எதுவாயினும்) அவர்களது துவக்கத்தைப் பார்க்கிலும் மேலானதாயிருக் கும். கர்த்தர் தாமே அவருடைய இரகசிய வருகைக்காக நாம் விழிப் புடனும் பொறுமையுடனும் காத்திருக்க நமக்குக் கிருபை அருளுவாராக.

ஏப்ரல் 4

வருத்தத்தின் பலன்

"*அவர் தமது ஆத்துமa வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்*"
(ஏசாயா 53 : 11).

பரிந்துரை செய்வதில் நமக்குச் சிறந்ததோர் முன்மாதிரியாக நம்முடைய கர்த்தராகிய இயேசுவை நாம் இங்கு காண்கிறோம். நாம் எவ்வாறு வேண்டுதல் செய்ய வேண்டும் அல்லது ஜெபத்தில் பிரசவ வேதனைப்பட வேண்டுமென்ற விஷயத்தில் இது நம் மனதைப் பிரகாசிப்பிப்பதாயிருக்கிறது.

மேற்கூறப்பட்டுள்ள வசனம், '*அவர் தமது ஆத்துமப் பிரசவ வேதனை யின் பலனைக் கண்டு திருப்தியடைவார்*' என்று விரிவாக்கப்பட்ட ஆங்கில வேதாகமத்தில் (Amp. Bible) கூறப்பட்டுள்ளது. தனது பிரசவ வேதனையின் பலனைக் (தன் குழந்தையைக்) கண்டு மகிழும் ஒரு தாயைப் போல, நாம் பிரசவ வேதனையோடு ஜெபித்தால், அந்த ஜெபத்தின் பலனைக் கண்டு (சில வேளைகளில் அது காலதாமதமானாலும்) நாம் 'திருப்தியடைவோம்'.

நாம் ஜெபிக்கிறோம்; ஆனால் அதன் பலனை நாம் காண்கிறோமா? நமது ஜெபஜீவியத்தில் நாம் திருப்தியைக் காண்கிறோமா? இல்லையெனில் நாம் ஜெபிக்கிற விதத்தை மாற்றிக்கொள்ள வேண்டிய ஏற்ற வேளை இதுவே. கர்த்தராகிய இயேசு எவ்வாறு ஜெபித்தார் என்று பாருங்கள்: '*அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணினார்*' (எபி. 5 : 7). ஆம். பிரசவ வேதனையுறும் ஒரு தாய் அதன் பலனைக் கண்டு திருப்தியடையும் முன்னர் அவளுக்குப் பலத்த சத்தத்தோடுகூடிய அழுகையும் கண்ணீரும் உண்டாயிருக்கு மன்றோ?

ஜெபத்தில் பிரசவ வேதனைப்படுதல் ஆதி அப்போஸ்தலரின் அனுபவமாகவும் இருந்தது. சபைக்காக எப்பாப்பிரா 'எப்பொழுதும் ஊக்கத்தோடு ஜெபத்தில் போராடினார்' (கொலோ. 4 : 12 -Eng.). அப். பவுல் தன்னோடு சேர்ந்து, தனக்காக ஜெபத்தில் போராடும்படியாக ரோமச் சபையாரிடம் கேட்டுக்கொள்கிறார் (ரோமர் 15 : 32).

நாம் நமது ஜெபத்தின் பலனைக் கண்டு திருப்தியடையும் வரையிலும் ஜெபத்தில் பிரசவ வேதனை அடைவோமாக.

ஏப்ரல் 5

ஊற்றிவிடு!

"எலிசா அவளை நோக்கி: நான் உனக்கு என்னசெய்யவேண்டும்? வீட்டில் உன்னிடத்தில் என்ன இருக்கிறது சொல் என்றான். அதற்கு அவள்: ஒரு குடம் எண்ணெய் அல்லாமல் உமது அடியாளுடைய வீட்டில் வேறொன்றும் இல்லை என்றாள்" (II இராஜா. 4 : 2).

இந்த விதவை ஆழ்ந்த துயரத்திலும் கடனிலும் இருந்தாள். தன்னுடைய வீட்டில் தன்னிடத்தில் இருந்தது தனது பிரச்சினைகள் அனைத்தையும் பரிகரிப்பதற்குப் போதுமானது என்பதை அவள் அறியாதவளாயிருந்தாள். அவளைப் பொறுத்த வரையில், 'ஒரு குடம் எண்ணெய்' என்பது அவ்வளவு விலைமதிப்புள்ளதாயிருக்கவில்லை. இன்று அநேக தேவஜனங்களின் நிலை இதுவே. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றிருக்கிற நம் அனைவரிடமும் 'ஒரு குடம் எண்ணெய்' (பரிசுத்த ஆவியின் அபிஷேகம்) இருக்கிறது. ஆனால் அதன் விலைமதிப்பை நாம் அறியாதவர்களாக இருக்கிறோம்.

நாம் உண்மையாகவே மண் பாத்திரங்களே. ஆனால் 'எல்லாவற்றையும் கடந்துநிற்கும் ஒரு வல்லமையை' (II கொரி. 4 : 7 -NIV) - 'ஒரு பொக்கிஷத்தைக்' கர்த்தர் நமக்குள்ளே வைத்திருக்கிறார். '*ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது (பரிசுத்த ஆவியின் அபிஷேகம்) நமக்குத் தந்தருளியிருக்கிறது*' (II பேதுரு 1 : 3).

தேவமனிதன் அந்த விதவைக்கு அளித்த பரிகாரமே இன்று நமது வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கும் ஏற்ற பரிகாரமாயிருக்கிறது. அது, 'ஊற்றிவிடு' என்பதே. நீ பரிசுத்த ஆவியாகிய எண்ணெயால் நிறைந்த பாத்திரமாயிருக்கிறாய். பரிசுத்த ஆவியின் பலத்தால் எல்லா வித நற்கிரியைகளிலும் சேவையிலும் உன்னை நீயே ஊற்றிவிடுவாயாகில், உன்னைச் சுற்றியுள்ள எல்லா வெறுமையான பாத்திரங்களும் (வாழ்க்கைகளும்) நிரம்பி, அவை திருப்தியடைவதை நீ காண்பாய்; அத்துடன் உன்னுடைய எல்லாத் தேவைகளுங்கூட சந்திக்கப்படும்.

தேவபிள்ளையே, உன்னிலுள்ள ஊற்றுத் தண்ணீரை இறைத்து, உன்னைச் சுற்றிலுமுள்ள தேவையுள்ளோருக்குப் பகிர்ந்தளிப்பாயாக. "செலவுபண்ணவும் செலவுபண்ணப்படவும்" நீ ஆயத்தமாயிரு; அப்போது உன் எதிர்பார்ப்புக்கும் அப்பாற்பட்ட விதத்தில் உன் சொந்த ஜீவியம் நிறைவாக ஆசீர்வதிக்கப்படுவதை நீ காண்பாய்.

ஏப்ரல் 6

இறுமாப்பாய் அதிகாரம் செலுத்தாதீர்!

"பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்" (ஆதி. 1 : 26).

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய திரியேக தேவன், தங்களுக்குள் கலந்தாலோசித்த பின்னரே மனிதனைச் சிருஷ்டித்தார். நாமுங்கூட சர்வாதிகாரப்போங்குடன் பிறருக்குக் கட்டளையிடுவதற்கு அல்லது பிறர் மேல் அதிகாரம் செலுத்துவதற்குப் பதிலாக, ஒருவரோடொருவர் கலந்தாலோசிக்கும் நற்பழக்கத்தை நம்மில் பேணி வளர்க்க வேண்டும். தேவன் கட்டளை பிறப்பிக்கக்கூடிய வல்லமையும் அதிகாரமும் உள்ளவராய் இருந்தபோதிலும், மனிதனைச் சிருஷ்டிக்கும் விஷயத்தில் அவர் அவ்வாறு செய்யவில்லை. எனவே நாமும் நம்முடைய உடன் சகோதரரோடு செயல்படும்போது, அவர்கள் மேல் அதிகாரஞ்செலுத்துகிற மனப்பான்மையுள்ளவர்களாயிராதிருப்போமாக.

மற்றெல்லாச் சிருஷ்டிகளையும் குறித்து, தேவன் "*உண்டாகக் கடவது*", "*பிறப்பிக்கக்கடவது*" *என்று சொன்னார்* என எழுதப்பட்டுள்ளது (ஆதி. 1 : 6, 7, 24, 25). ஆனால் மனிதனின் சிருஷ்டிப்பைக் குறித்தோ, '*தேவன் சிருஷ்டித்தார்*' என்று கூறப்பட்டுள்ளது. அதாவது மற்றெல்லாச் சிருஷ்டிகளுடனும் ஒப்பிடுகையில் மனிதனின் சிருஷ்டிப்பு மிக நுட்பமானதாகவும் பூரணமானதாகவும் காணப்படுகிறது.

மனிதனைச் சிருஷ்டித்ததில் தேவனின் முதலாவது நோக்கம், அவன் 'ஆளுகை' உடையவனாக இருக்க வேண்டும் என்பதாயிருந்தது. முதலாவ

தாக நம் மீது நமக்கு ஆளுகை இருக்க வேண்டும். மனிதன் தன் மீது ஆளுகையுள்ளவனாயிருந்த வரையிலும் அவன் சமுத்திரத்தின் மேலும், ஆகாயத்தின் மேலும், பூமியின் மேலும் ஆளுகையுள்ளவனாயிருந்தான்.

மற்றவர்களோடு கலந்தாலோசிக்காமல் நாம் எந்த முக்கியமான காரியத்தையும் துவங்க முற்படாதிருப்போமாக. பிறரை மதித்துக் கனப் படுத்துவதன் வாயிலாக நாம் ஜீவனில் ஆளுகை செய்து, தெய்வீக சுபாவத்தில் வளருகிறோம்.

ஏப்ரல் 7

நீ சுகமாக்கப்பட்டாய்!

"***நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார்***" (யாத். 15 : 26).

சுகமாக்கப்படுவதற்குத் தேவன் இங்கே கொடுத்துள்ள முதலாவது நிபந்தனையானது, 'நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேள்' என்பதாகும். ஒருவேளை உங்களுடைய வியாதி வேளையில் கர்த்தர் உங்களோடு பேசிக்கொண்டிருக்கக் கூடும்; நீங்களோ அவர் உங்களிடம் பேசுபவைகளுக்குச் செவிசாய்க்காதிருந்துகொண்டிருக்கக் கூடும்.

"*அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார்*" (சங். 107 : 20). தேவனுடைய வார்த்தையில் சுகமாகுதல் இருக்கிறது. நூற்றுக்கதிபதி கர்த்தராகிய இயேசுவை நோக்கி, "*ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்*" என்று கூறினான் (மத். 8 : 8). ஒரு நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன், கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பேசும் ஒரு வார்த்தையால் சுகமாக்கப்படக் கூடுமேயாயின், தேவனுடைய பிள்ளைகள் அல்லது அவருடைய ஊழியர்களாகிய நாம் அவரது வார்த்தைகளால் சுகமடைவது எவ்வளவு அதிக நிச்சயம்!

"*அவர் அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார்*" (மத். 8 : 16). "*என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது*" (யோவான் 10 : 27). எனவே நீ தேவனுடைய பிள்ளையாயிருந்து, வியாதிப்பட்டிருப்பாயாகில், தேவன் நிச்சயமாகவே உன்னோடு பேசி உன்னைச் சுகமாக்க விரும்புகிறார். அவர் நம்மோடு பேசும்போது, அவரது வார்த்தை கலக்கமடைந்திருக்கும் நமது உள்ளத்திற்குச் சமாதானத்தையுங்கூட கொண்டுவருகிறது. '*அவர் தம்முடைய ஜனத்திற்குச் சமாதானம் கூறுவார்*' (சங். 85 : 8). இங்கு கூறப்படும் 'சமாதானம்' (*ஷாலோம்*) என்பது, சமாதானம், செழிப்பு, ஆரோக்கியம், குணமடைதல் என்று பொருள்படும். எனவே தேவன் நம்மோடு பேசுவதை நாம் கேட்கும்போது அது நமது கலங்கிய ஆவிக்குச் சமாதானத்தையும், நமது சரீரத்திற்குச் சுகத்தையும், நமது ஆத்துமாவிற்குச் செழிப்பையும் கொண்டுவருகிறது.

ஒரு தேவபிள்ளை ஒருமுறை கடும் மாரடைப்பால் அவதிப் பட்டாள். அவள் கர்த்தருக்காகக் காத்திருந்தபோது, '*என் மாம்சமும் என் இருதயமும் மாண்டுபோகிறது; தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் பெலனாயிருக்கிறார்*' (சங். 73 : 26 -Eng.) என்ற வசனத்தின் மூலமாக அவர் அவளோடு பேசினார். அந்த வார்த்தையை அவள் விசுவாசித்தாள்; அது அவளுக்கு அற்புதமான சுகத்தை அளித்தது. இனி மற்றொரு முறை மாரடைப்பினால் அவள் தாக்கப்படுவதில்லை என்று கர்த்தர் அவளுக்கு வாக்களிக்க வேண்டுமென அவள் கர்த்தரிடம் கேட்டாள். '*வாதை மறுபடியும் இரண்டாம் முறை உண்டாகாது*' (நாகூம் 1 : 9 -Eng.) என்ற வேதவாக்கியத்தின் மூலமாகக் கர்த்தர் அவளிடம் மிகத் தெளிவாகப் பேசினார். அவள் மாடியில் இருந்த தன் அறைக்கு மீண்டும் செல்ல விரும்பி, அதைக் குறித்து கர்த்தரிடம் ஜெபித்தாள். அப்போது கர்த்தர் அவளுக்கு இவ்வசனத்தை அளித்தார்: '*நான் அவர்களைக் கர்த்தருக்குள் பெலப்படுத்துவேன். அவர்கள் அவருடைய நாமத்திலே மேலும் கீழும் நடப்பார்கள்*' (சக. 10 : 12 -Eng.). அவ்வண்ணமாகவே, கர்த்தரின் நாமத்தில் அவள் மேலும் கீழும் நடக்கப் பெலப்படுத்தப்பட்டாள்!

"*இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்*" (யோவான் 5 : 28) என நாம் வாசிக்கிறோம். அன்பான தேவ பிள்ளையே, தேவனுடைய சத்தம் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரையும் எழுப்பி வெளியே கொண்டுவரக் கூடியதாயிருக்குமாயின், தேவனுக்கு அருமையான பிள்ளையாயிருக்கிற நீ அவருடைய சத்தத்தைக் கேட்டு உன் வியாதியினின்று வெளியே வருவது எவ்வளவு நிச்சயமாயிருக்கிறது! "*அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்*" என்னும் தேவ வார்த்தை உன்னிடம் வந்திருக்கிறது. ஆகவே விசுவாசத்துடன் உன் படுக்கையினின்று நீ எழும்புவாயாக.

ஏப்ரல் 8

நீ அதைரியமடைந்திருக்கிறாயா?

"*பலங்கொண்டு திடமனதாயிரு*" (யோசுவா 1 : 6).

அதைரியம் என்பது நாம் இருதயத்தில் சோர்வடைந்து, எல்லா நம்பிக்கையையும் இழந்துபோகும் ஒரு நிலையாகும். நாம் அதைரிய மடைந்திருக்கும்போது தேவன் மேலுள்ள நம்பிக்கையை இழந்து - 'தேவன் என் ஜெபத்திற்குப் பதிலளிக்கவில்லை; அநேக நாட்களாய் நான் ஜெபித்துக்கொண்டேயிருக்கிறேன்; ஒரு பயனுமில்லை, ஒருவேளை அவர் என்னை நேசிப்பதில்லை போலும்!' என எண்ணுகிறோம். நாம் நம் மீதுள்ள நம்பிக்கையையும் இழந்து - 'நான் தோல்வியடைந்தவனா யிருக்கிறேன்; நான் செய்ய முயற்சிப்பதெல்லாம் தோல்வியாகவே இருக் கிறது; எனது வேலையில் எனக்கு வெற்றி இல்லை; எனது வருங்காலத் திலும் எனக்குச் சகலமும் தவறாகவே நடக்கப்போகிறது' என எண்ணு கிறோம். நாம் மற்றவர்கள் மீதுள்ள நம்பிக்கையையும் இழந்து - 'எனக்கு யாராவது உதவி செய்ய முடியுமென நான் எண்ணுகிறதில்லை; என்னை ஒருவரும் புரிந்துகொள்வதில்லை' என நாம் கூறுகிறோம். அதைரியம் உங்களை வாழ்க்கையின் அடிமட்டத்திற்கே கொண்டுசென்றுவிடுகிறது. அதினிமித்தம் ஆவிக்குரிய ரீதியிலும், சில சமயங்களில் சரீரப்பிரகாரமாக வுங்கூட நீங்கள் பெலவீனமடைகிறீர்கள். நீங்கள் மற்றவர்களுக்கு ஒரு பாரமாக மாறுகிறீர்கள். அதினிமித்தம் பிசாசானவன் உங்களை இன்னும் அதிகமாக அதைரியமடையச் செய்கிறான்.

தேவபிள்ளையே, தேவ வார்த்தை இன்று உனக்கு நேராக வருகிறது. தேவன் உனக்குத் தோல்வியை அல்ல, மகத்தான வெற்றியையே திட்ட மிட்டுள்ளார். '*நான் உங்களுக்காகக் கொண்டிருக்கும் திட்டங்களை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவை உங்களைச் செழித்தோங்கச் செய்வதற்கான திட்டங்களேயன்றி, உங்களுக்குத் தீமைசெய்வதற்கான திட்டங்கள் அல்ல. அவை உங்களுக்கு நம்பிக்கையையும் ஒரு நல்ல வருங் காலத்தையும் கொடுக்கும்படியான திட்டங்களாகும்*' (எரே. 29 : 11 -NIV).

அதைரியம் என்பது பிசாசின் மிக மோசமான ஆயுதங்களில் ஒன்றாகும். அவன் ஆதியில் ஏதேன் தோட்டத்தில் கையாண்டது இந்த யுக்தியே ஆகும். 'தேவன் நல்லவரல்ல; உண்மையாகவே அவர் உங்களிடம் அன்பும் கரிசனையுமுள்ளவராயிருந்தால், அந்தப் பழத்தை நீங்கள் புசிக்கும்படி ஏன் அவர் அனுமதித்திருக்கக் கூடாது?' என அவன் ஏவாளிடம் கூற முனைந்தான். இதுவே அதைரியத்திற்கான வாசலாகும்.

வேதாகமத்தில் அகித்தோப்பேல் என்ற ஒரு மனிதன் அதைரிய மடைந்து நான்றுகொண்டு செத்ததாக நாம் வாசிக்கிறோம். தேவனுக்காக அக்கினியாக எரிந்து பிரகாசித்துக்கொண்டிருந்த எலியாவுங்கூட ஒரு சந்தர்ப்பத்தில் அதைரியமடைந்தபோது தேவசமுகத்திலிருந்து ஓடிப்போய், "போதும் கர்த்தாவே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்" என்று ஜெபித்தான். யோனாவும் அவ்விதமே! ஒருவேளை நீங்களும் அப்படி ஜெபித்திருக்கலாம். அன்பானவர்களே, அது மிக ஆபத்தான ஒரு ஜெப மாகும். நீதிமொழிகள் 8 : 36-இல் தேவனுடைய வசனம் இவ்விதம் கூறு கிறது: "*என்னை வெறுக்கிறவர்கள் யாவரும் மரணத்தை விரும்புகிறவர்கள்*". நீங்கள் மரணத்தை விரும்பும்போது கர்த்தராகிய இயேசுவை வெறுக்கி றீர்கள். 'நான் இயேசுவை நேசிக்கிறேன்' என நீங்கள் ஒருவேளை கூறலாம்; ஆனால் நீங்கள் மரணத்தை விரும்பி, 'தேவனே என்னை எடுத்துக் கொள்ளும்' என ஜெபிக்கும்போது, உங்கள் அறிவில்லாமலே, உங்கள் அறியாமையினாலே நீங்கள் கர்த்தராகிய இயேசுவை வெறுக்கிறீர்கள்.

தேவபிள்ளையே, சோதனைகள் உன்னை அழிப்பதற்காக அல்ல, உனக்கு ஆவிக்குரிய உயர்வை அளிப்பதற்காகவே அனுப்பப்படுகின்றன. எனவே சோதனைகளைச் சரியான மனப்பான்மையுடன் எடுத்துக்கொள்ளு வாயாக. சோதனைகளிலேயே பரிசுத்தவான்கள் உருவாக்கப்படுகின்றனர். ஆகவே உனக்கு நேரிடுகிற தொந்தரவுகள் உன்னைத் தொந்தரவு செய்யும்படி நீ இடங்கொடுக்க வேண்டாம். சுய அனுதாபத்திற்கும், அதைரியத்திற்கும் நீ இடமளிக்காதிருப்பாயாக. அப்படிச் செய்தால் நீ தேவனுக்கும் மற்றவர்களுக்கும் ஒரு பாரமாக மாறிவிடுவாய்!

ஏப்ரல் 9

வியக்கத்தக்க மனந்திரும்புதல்

"***நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப் படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம்***" (லூக்கா 23 : 40, 41).

இவை கர்த்தராகிய இயேசுவோடுகூட சிலுவையிலறையப்பட்டிருந்த இரு கள்ளர்களில், மனந்திரும்பின கள்ளனின் வார்த்தைகளாகும். மத்தேயு வும் மாற்கும் தங்களுடைய சுவிசேஷங்களில் கொடுக்கும் விவரத்தின்படி கர்த்தராகிய இயேசுவோடு சிலுவையிலறையப்பட்டிருந்த கள்ளர்கள் இருவரும் முதலாவதாக அவரை நிந்தித்தனர். ஆயினும் அதற்குப் பின்னர் அவர்களில் ஒருவனான மனந்திரும்பின கள்ளனின் இருதயத்தில் இவ்வளவு குறிப்பிடத்தக்க மாற்றத்தை உண்டுபண்ணியது யாது என்பதை

நாம் திட்டமாக அறியோம். ஒருவேளை அக்கள்ளர்களும் அங்கு நின்று கொண்டிருந்தவர்களும் இரட்சகரை நிந்தித்தபோது, அவரது முகத்தில் தென்பட்ட இரக்கமும், மன்னிப்பும், பரிவும் அம்மாற்றத்தை உண்டு பண்ணியிருந்திருக்கலாம். ஒருவேளை அது நமது இரட்சகர் தமது இருதயத்தின் ஆழத்திலிருந்து, "*பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே*" என சத்தமிட்டு உரைத்தபோது உண்டானதாயிருக்கலாம். அது எதுவாயிருப்பினும், அந்தக் கள்ளனுடைய இருதயத்தில் பூரணமான மாற்றம் உண்டாயிற்று என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மற்ற கள்ளன் தேவனுக்குப் பயப்படாதிருந்ததைக் குறித்து அவனைக் கடிந்துகொள்ளும் அளவுக்கு இக்கள்ளன் உண்மையாகவே மனந்திரும்பி, தனது பாவங்களை அறிக்கையிட்டான். தான் மரண ஆக்கினைக்குட்படுத்தப்பட்டது ஒரு நியாயமான தண்டனை எனவும் அவன் ஒத்துக்கொண்டான். பின்னர் ஆச்சரியப்படத்தக்க விதத்தில், கிறிஸ்துவின் பாவமற்ற தன்மையையும், நித்திய ஜீவனில் தனக்கிருந்த விசுவாசத்தையும், தேவனுடைய ராஜ்யம் வரப்போவதையும் அவன் அறிக்கையிட்டான். தேவன் தன்னில் ஓர் ஆச்சரியமான கிரியையை நடப்பிக்கும் அளவிற்கு, ஒரு சில நொடிப்பொழுதுகளில் அக்கள்ளன் தன் இருதயத்தை அவ்வளவதிகமாய்த் தாழ்த்தினான். அநேகர் தங்கள் வாழ் நாளெல்லாம் கர்த்தராகிய இயேசுவை அறிந்தவர்களாயிருந்தாலும் இத்தகைய இருதயம் மாற்றப்பட்ட நிலையை அடைவதில்லை.

இரட்சிப்பு என்பது நமது பாவங்களை உண்மையாய் அறிக்கையிடுவதினாலும், கர்த்தராகிய இயேசுவே நம்மை இரட்சிக்க வல்லமையுள்ளவர் என்று அங்கீகரிப்பதாலும் உண்டாகும் பலனாகும். தேவனுக்குப் பயந்து, மெய் மனஸ்தாபத்துடன் தங்கள் பாவங்களை உண்மையாய், ஆழமாய் அறிக்கை செய்கிறவர்கள், அந்நாளில்தானே 'பரதீசைத்' தங்கள் ஆத்துமாவில் அனுபவிப்பார்கள்.

அன்பான வாசகரே, உம்முடைய இருதயத்தில் 'பரதீசு' ஆளுகை செய்யுமட்டும் நீர் உமது சகல பாவங்களுக்காகவும் மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்புவீராக!

ஏப்ரல் 10

வளருங்கள்!

"தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும்

நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம் ... என்று கட்டளையிட்டார்" (ஆதி. 2 : 16, 17).

நன்மை தீமை அறியத்தக்க விருட்சமுங்கூட மனிதனின் உப யோகத்திற்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருந்தது. ஏனெனில் மனிதனுக்கு நல மல்லாத ஒன்றையும் தேவன் சிருஷ்டிக்கவில்லை. ஆனால், மனிதன் ஒரு குறிப்பிட்ட (ஆவிக்குரிய) வளர்ச்சியை அடைந்த பின்னரே புசிக்க வேண்டிய ஒரு 'பலமான ஆகாரமாக' அது இருந்ததாகத் தோன்றுகிறது. "***பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று*** *பயிற்சியினால்* ***பகுத்தறியத்தக்கதாக*** *முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடையவர் களாகிய பூரண* ***வயதுள்ளவர்களுக்கே*** (ஆதாம் இந்நிலையை அப்போது அடைந்திருக்கவில்லை.) *தகும்*" (எபி. 5 : 14). சிறு குழந்தைகள் ஒரு குறிப்பிட்ட வயதை வந்தெட்டும் வரை அவர்களுக்குப் பால் போன்ற திரவ ஆகாரத்தையே நாம் கொடுக்கிறோம். பலமான ஆகாரத்தை அவர்களுக்கு அளித்தால் அவர்களால் அதை ஜீரணிக்க முடியாது; சில வேளைகளில் அது மரணத்தை உண்டாக்கவும் கூடும். இவ்விதமாகவே, தேவன் நியமித்த வளர்ச்சியின் அளவை வந்தெட்டும் முன்னரே ஆதாம் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசித்ததால், அவன் தன் ஆத்துமாவில் மரணத்தை அனுபவித்தான். மனிதன் முதலாவதாக ஜீவ விருட்சத்தின் கனியைப் புசித்து ஜீவனில் வளர்ந்த பின்னர், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டுமென்பதே தேவனின் திட்டமாயிருந்தது.

எனவே, தேவபிள்ளைகளே, '*நீங்கள் வளரும்படி, திருவசனமாகிய கலங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்*' (I பேதுரு 2 : 3). தேவவார்த்தையைத் தியானிப்பதின் மூலம் உங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையைக் கட்டியெழுப்புங்கள். தேவன் விரும்பும் வளர்ச்சியின் நிலையை நாம் வந்தெட்டும்போது, அவர் இன்னும் ஆழமான சத்தியங் களை நமக்கு வெளிப்படுத்தி, தம்மைக் குறித்த இன்னும் பூரணமான அறிவுக்குள் நம்மை நடத்திச் செல்வார்.

ஏப்ரல் 11

மனதில் புண்படுத்தப்பட்ட உணர்வு உண்டாவது எதினால்?

'சிங்கங்கள் என்னைக் காயப்படுத்தாதபடிக்கு, தேவன் தம்முடைய தூதனை அனுப்பி அவைகளின் வாயைக் கட்டிப்போட்டார்.

அதேனென்றால், அவருக்கு முன்பாக என்னில் களங்கமின்மை காணப்பட்டது. உமக்கு முன்பாகவும், ராஜாவே நான் உம்மையும் புண்படுத்தியதில்லை' (தானி. 6 : 22 -Eng.).

சிங்கங்களின் கெபிக்குள் போடப்பட்ட தானியேல் எவ்விதத்திலும் காயமடையவில்லை என வேத வசனம் கூறுகிறது. 'காயப்படுத்தப்படுதல்' என்ற வார்த்தை இவ்வசனத்தில் சரீர ரீதியாக உபயோகிக்கப்பட்டிருந்தாலும், நாம் இதை ஆவிக்குரிய ரீதியாகவும் எடுத்துக்கொள்ளலாம். ஜனங்களுக்குப் புண்படுத்தப்பட்ட உணர்வு உண்டாவது எதினால்?

முதலாவதாக, 'என்னில் களங்கமின்மை காணப்பட்டது' என்று தானியேல் கூறுகிறான். தானியேல் தேவனுக்கும் மனிதருக்கும் முன்பாகக் களங்கமற்றவனாகக் காணப்பட்டபடியால் அவன் சேதப்படுத்தப்பட அல்லது காயப்படுத்தப்பட முடியவில்லை. நாம் மனதில் புண்பட்ட உணர்வுள்ளவர்களாயிருந்தால், நாம் களங்கமற்றவர்களல்ல, நாம் குற்ற முள்ளவர்கள் என்பதையே அது நிரூபிக்கிறது. ஆவிக்குரிய ரீதியாக நோக்கும்போது, ஒரு தேவபிள்ளை கபடற்றவனாக, பளிங்கு போல் துலாம்பரமான சுபாவம் உள்ளவனாக இருந்தால் அவன் புண்பட்ட உணர்வுள்ளவனாய் இருக்கவே முடியாது.

இரண்டாவதாக, '*உமக்கு முன்பாகவும், ராஜாவே உம்மையும் நான் புண்படுத்தியதில்லை*' என தானியேல் கூறுகிறான். ராஜாவை மனம்நோகச் செய்யாததால் அவன் தானும் தன் மனதில் காயப்படவில்லை. நமது சத்துருக்களைக்கூடப் புண்படுத்தாமல், அவர்களைச் சிநேகிக்க வேண்டுமென்றும், அவர்களை ஆசீர்வதிக்க வேண்டுமென்றும், அவர்களுக்காக ஜெபிக்க வேண்டுமென்றும் கர்த்தராகிய இயேசு நமக்குப் போதித்திருக்கிறார் (மத். 5 : 44). மேலும் அவரில் விசுவாசமாயிருக்கும் 'சிறியவரில்' ஒருவனுக்குங்கூட இடறல் உண்டாக்கக் கூடாது என்றும் அவர் நம்மை எச்சரித்திருக்கிறார் (மத். 18 : 6); ஏனெனில், அவ்விதம் செய்வதின் மூலம் நாம் தேவனையும் அவரது தூதர்களையும் துக்கப்படுத்தும் குற்றத்துக்கு ஆளாகிறோம்.

மூன்றாவதாக, '*அவன் தன் தேவன்பேரில் விசுவாசித்திருந்தபடியால், அவனில் ஒரு காயமும் காணப்படவில்லை*' (தானி. 6 : 23 -Eng.) - '*தேவனில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது*' என நாம் விசுவாசித்தால், ஜனங்கள் நமக்கு விரோதமாக என்ன பேசினாலும், என்ன செய்தாலும் அது நம்மைப் பாதிக்காது; நாம் புண்பட்ட உணர்வுள்ளவர்களாயிருப்பதற்குப் பதிலாகத் தேவனைத் துதித்து மகிழ்வோம்.

ஏப்ரல் 12

ஆவியில் எளிமையுள்ளவர்கள்

"***ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது***" (மத். 5 : 3).

நம்முடைய கர்த்தரால் கூறப்பட்ட பாக்கியவான்களின் பட்டியலில் இது முதன்மையானதாகும். ஆவியில் எளிமையுள்ளவர்களைப் பாக்கிய வான்கள் என்று அழைப்பது எவ்வளவு விநோதமான முரண்பாடாக இருக்கிறது! உலகில் ஐசுவரியவான்களே பாக்கியசாலிகள், ஆசீர்வதிக்கப் பட்டவர்கள், அதிர்ஷ்டசாலிகள் என்று அழைக்கப்படுகின்றனர்.

ஆவியில் எளிமையாயிருத்தலுக்குக் கர்த்தராகிய இயேசுவே மிகச் சிறந்த மாதிரியாயிருக்கிறார் (II கொரி. 8 : 9). அவர் பரலோகத்தில் தமக் கிருந்த அனைத்து மகிமையையும் துறந்து, தம்மைத்தாமே வெறுமை யாக்கி இவ்வுலகுக்கு வந்தார். ஆவியில் எளிமையாயிருத்தலின் ஆசீர் வதிக்கப்பட்ட இரகசியம், கிறிஸ்துவின் நிமித்தமாக ஒருவன் தன்னைத் தானே வெறுமையாக்குவதேயாகும். அப். பவுல் இவ்வுண்மையைக் கண்ட றிந்தபோது, அவர் தன்னைத் தானே கிறிஸ்துவுக்காக வெறுமையாக்கி, தன் மேன்மைகள் எல்லாவற்றையும் குப்பையாக எண்ணினார் (பிலி. 3 : 7, 8, 11).

நாம் நம்மை வெறுமையாக்கி, நம்மை நாமே பிரதிஷ்டை செய்திருப்போமாயின், நமக்கு மிக அருமையான ஏதோ ஒன்று திடீரென்று நம்மை விட்டு எடுக்கப்பட்டுப்போனாலும், தேவனோடுள்ள நமது நெருங்கிய நடக்கை எவ்விதத்திலும் தடைபடாது; நாம் நமது சமாதானத்தை இழக்கவோ, கலக்கமடையவோ மாட்டோம். நமக்குண்டான எல்லாவற்றையும் நாம் வெறுமையாக்கிவிட்டோம் அல்லது பிரதிஷ்டை செய்துவிட்டோம் என்பதற்கு இதுவே போதுமான நிரூபணமாயிருக்கும்!

இப்பொழுது உங்களுக்குள்ள அனைத்தையும் நீங்கள் வெறுமை யாக்கியிராவிடில், ஒரு நாள் இவ்வுலகைவிட்டு நீங்கள் பிரியவேண்டிய வேளை வரும்போது, உங்களை வெறுமையாக்கிக்கொண்டு இவ்வுலகை விட்டுச் செல்வது உங்களுக்கு மிகக் கடினமாயிருக்கும்.

ஏப்ரல் 13

நீங்கள் சிக்குண்டு தவிக்கிறீர்களா?

"***பார்வோன் சமீபித்து வருகிறபோது, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கண்களை ஏறெடுத்துப்பார்த்து, எகிப்தியர் தங்களுக்குப் பின்னே***

வருகிறதைக் கண்டு, மிகவும் பயந்தார்கள்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்" (யாத். 14 : 10).

உண்மையிலேயே இஸ்ரவேல் புத்திரர் இச்சந்தர்ப்பத்தில் 'பிசாசுக்கும் ஆழ்ந்த சமுத்திரத்திற்கும் நடுவேதான்' இருந்தனர். முன்னோக்கி வெற்றிநடை போடுவதைத் தடுக்கும் வகையில் கொந்தளிக்கும் சிவந்த சமுத்திரம் அவர்களுக்கு முன்னாக இருந்தது. அவர்களுக்குப் பின்னாக இதோ, பார்வோனும் இருப்பு ரதங்களுடனும் நன்கு பழக்குவிக்கப்பட்ட குதிரைகளுடனும் கூடிய அவனுடைய சேனையும் அவர்களை மூர்க்க மாய்த் துரத்திக்கொண்டு வந்தனர். மற்ற இரு திசைகளிலும் மிக உயரமான மலைகளே தென்பட்டன. இவ்வாறு அவர்கள் எத்திசையிலும் செல்லக் கூடாதவாறு நாற்புறமும் நெருக்கப்பட்டனர்.

இவ்விதமான இக்கட்டான சூழ்நிலையில் அவர்களுக்கிருந்த ஒரே ஆறுதல் யாதெனில், அவர்களுக்கு முன்னே தேவதூதனானவரும் மேகஸ்தம்பமும் உண்டு என்ற அறிவேயாகும். ஆனால் இப்போதோ அந்த ஒரே அடைக்கலமும் கூட நீங்கிப்போயிற்று! தேவதூதனானவர் அவர்களுக்குப் பின்னே சென்றுவிட்டார். அப்படியே தேவன் தங்களோடு கூட இருக்கிறார் என்பதற்கு அடையாளமாயிருந்த மேகஸ்தம்பமும் அவர்களுக்குப் பின்னாகச் சென்றுவிட்டது. தங்கள் துன்ப வேளையில் தேவன் தங்களைக் கைவிட்டுவிட்டது போல அவர்களுக்குத் தென் பட்டது. இவ்விதமான நம்பிக்கையற்ற வேளையில் மோசே, "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று கதறியிருந்திருப்பானோ, அல்லவோ நாம் அறியோம். அவன் அப்படி கதறியிருந்தாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. பரமகானானை நோக்கிய நமது பயணத்தில் நாமும் இவ்விதமான சூழ்நிலையை எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்கள் உண்டு. அவ்வேளைகளில், எல்லா வாசல்களும் நமக்கு அடைக்கப்பட்டது போன்றும், நம்முடைய தேவன் நமது ஜெபங்களுக்குப் பதிலளிக்காதது போன்றும், அவர் நம் மீது இரக்கமற்றவராயிருப்பது போன்றும் நமக்குத் தோன்றும்; எல்லாராலும் கைவிடப்பட்டு, மறக்கப் பட்டுப்போனது போல நாம் உணருவோம்!

எனினும் அருமையான வாசகரே, தேவஜனங்களைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு நேரிடும் மிகப் பெரிய சோதனை, மிகப் பெரிய விடுதலைக்கும் மிகப் பெரிய வெற்றிக்கும் ஏதுவான சந்தர்ப்பமாகவே மாறிவிடுகிறது. தன் ஜீவியத்தில் சம்பவித்துக்கொண்டிருந்தவைகளைக் குறித்து, 'எல்லாம் எனக்கு விரோதமாய் நேரிடுகிறது' (ஆதி. 42 : 36) என்று யாக்கோபு ஒரு சந்தர்ப்பத்தில் தன் அறியாமையினால் முறையிட்டது போல, எல்லாக் காரியங்களும் உமக்கு எதிராயிருப்பது போலத்

தோன்றினாலும், அவைகள் உண்மையில் உமக்குச் சாதகமாகவே இருக்கின்றன. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! தேவனில் அன்புகூருகிற தேவ பிள்ளையே, உன் வாழ்க்கையில் சம்பவிக்கும் அனைத்தும் தேவனின் அளவிட முடியாத அன்பாலும் இரக்கத்தாலும் அவரால் திட்டமிடப் பட்டுள்ளன. ஒவ்வொரு மிகச் சிறிய காரியத்திலும் தேவனுடைய வல்லமையான கரத்தையும், யாதொன்றினாலும் மேற்கொள்ள முடியாத அவரது வல்லமையையும் வெளிப்படுத்துவதே தேவனின் நோக்கமாகும்.

ஏப்ரல் 14

தேவவார்த்தையைத் திரித்துப்பேசுதலின் அபாயம்

"***நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்***" (உபா. 4 : 2).

'ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் நிச்சயமாகவே சாவாய்' (ஆதி. 2 : 17 -Eng.) என்று தேவன் ஆதாமுக்குக் கட்டளையிட்டிருந்தார். ஆனால் ஸ்திரீயானவள் சர்ப்பத்திடம் பேசியபோது, தேவன் கூறியிருந்த வற்றில் சில முக்கியமான வார்த்தைகளைக் கூறாமல் விட்டுவிட்டாள். அவள், "*தேவன்: நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார்*" என்றாள் (ஆதி. 3 : 3). இங்கு 'புசிக்கும் நாளில்', 'நிச்சயமாகவே' (Eng.) போன்ற வார்த்தைகளை ஏவாள் விட்டு விட்டதை நாம் காண்கிறோம். தேவன் நீ 'நிச்சயமாகவே சாவாய்' என வலியுறுத்தி எச்சரித்திருந்தபோதிலும் அவள் 'நிச்சயமாகவே' என்பதை விட்டுவிட்டதின் மூலம் அந்த வலியுறுத்துதலை நீக்கிவிட்டாள். மேலும், 'அதைத் தொடவும் வேண்டாம்' என்ற வார்த்தைகளை அவள் சேர்த்துக் கொண்டாள்.

தேவனுடைய வார்த்தையானது ஒரு அக்கினியாயிருக்கிறது; அது ஒரு சம்மட்டியாயிருக்கிறது; அது இருபுறமும் கருக்குள்ள பட்டய மாயிருக்கிறது. அதைக் கையாளும்போது கவனமாயிருங்கள். அதை விளங்கிக்கொள்ள தேவனிடம் ஞானத்தைத் தேடுங்கள். "*நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிற வனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு*" (II தீமோ. 2 : 15). தேவனுடைய வார்த்தையை நாம்

படிக்கும்போது, நம் அணுகுமுறையானது, 'கர்த்தாவே, எனக்கு ஒன்றும் தெரியாது; உம்முடைய வார்த்தையை நான் விளங்கிக்கொள்ள எனக்கு உதவிசெய்யும்' என்பதாக இருக்க வேண்டும். எவ்வளவதிகமான வேத வசனங்களை நாம் வாசிக்கிறோம் என்பதல்ல, நாம் வாசிப்பது ஒருசில வசனங்களேயாயினும், அவற்றை எப்படி வாசிக்கிறோம் என்பதே முக்கிய மானதாகும். ஒவ்வொரு வசனத்திலும் ஏராளமான சத்தியங்கள் அடங்கி யுள்ளன. எனவே, நீங்கள் வாசிப்பதை நன்றாகப் புரிந்துகொள்ளுகிறீர்களா என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளுங்கள்.

தேவவசனத்தை அசட்டை செய்வதும், தேவவார்த்தையைக் குறித்த அறிவின்மையும், தேவ வசனத்தைத் திரித்துப் பேசுதலும் நமது வாழ்க் கைக்கு அழிவைக் கொண்டுவரும். "*நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத் தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்*" (உபா. 4 : 2). "*சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப்பார்ப்பேன்*" (ஏசாயா 66 : 2) என்று கர்த்தர் உரைத்திருக்கிறார்.

ஏப்ரல் 15

தேவனின் நன்மைகளை அனுபவித்து மகிழ்தல்

"***அவருடைய பரிசுத்தத்தின் நினைவுகூருதலைக் கொண்டாடுங்கள்***"
(சங். 97 : 12).

தயவுசெய்து இதைக் கவனியுங்கள், 'அவருடைய நன்மைகளின் நினைவுகூருதலைக் கொண்டாடுங்கள்' என்றோ, 'அவருடைய ஆசீர் வாதங்களின் நினைவுகூருதலைக் கொண்டாடுங்கள்' என்றோ கூறப் படாமல், "அவருடைய பரிசுத்தத்தின் நினைவுகூருதலைக் கொண் டாடுங்கள்" என்றே மேற்காணும் வேதபகுதியில் கூறப்பட்டுள்ளது. எனவே நன்றியுள்ள இருதயத்துடன் நீங்கள் தேவனுக்கு நன்றி செலுத்த இயலாதவர்களாயிருப்பீர்களாயின், அதன் காரணம், தேவன் உங்களுக்கு நன்மை ஒன்றும் செய்யவில்லை என்பதல்ல, நீங்கள் பரிசுத்தத்தை நேசிப்ப தில்லை என்பதே ஆகும். பரிசுத்தம் தேவனின் நன்மையாயிருக்கிறது. தேவனின் பரிசுத்தத்தை நீங்கள் இப்போது அனுபவித்து மகிழக் கூடுமானால், தேவனின் நன்மையை இப்போதும் நித்தியம் முழுவதிலும் அனுபவித்து மகிழக் கூடியவர்களாயிருப்பீர்கள்.

"*நானோ, ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப்போயிருப்பேன்*" என

சங்கீதக்காரன் கூறுகிறான் (சங். 27 : 13). அவன் கர்த்தருடைய நன்மையைத் தான் காணப்போகிறதை விசுவாசியாதிருந்தால், அதைரியமடைந்திருப் பான். தேவனின் நன்மைகளில் ஒன்று, அவருடைய பரிசுத்தம் ஆகும். சங்கீதக்காரன் கர்த்தரின் பரிசுத்தத்தை முழுமையாக அனுபவிக்கவில்லை என்பது நிச்சயமே. ஆனால் ஒரு பரிசுத்தமான வாழ்க்கை சாத்தியமே என்பதை அவன் விசுவாசித்தான். எனவேதான் சங்கீதம் 51-இல் நாம் காண்கிறபடி அவன் ஒரு நொறுங்குண்ட இருதயத்துடன் கர்த்தரிடம் திரும்பி, தன் பாவங்களை அறிக்கை செய்ததுடன், ஒரு சுத்தமான இருதயத்திற்காகவும் மன்றாடுகிறான் (வச. 7, 10).

நாம் நம்முடைய வாழ்க்கையில் கர்த்தருடைய நன்மையை அல்லது அவருடைய பரிசுத்தத்தைக் காண்போம் என்பதை விசுவாசிக்கா விட்டால் கெட்டுப்போவோம் அல்லது அதைரியமடைவோம் என்பது யாவரும் ஒத்துக்கொள்ளக்கூடிய உண்மையே. பரிசுத்தத்தை நேசிப்ப வர்கள், ஜீவனுள்ளோருடைய தேசத்திலே கர்த்தரின் நன்மையின் நிறைவை அனுபவித்து மகிழ்வதால் அவர்கள் ஒருபோதும் அதைரியமடைவ தில்லை. 'பரிசுத்த ஜீவியம் என்பது, பாலும் தேனும் ஓடும் கானான் ஆகும்' என்னும் கூற்று மெய்யானதே!

ஏப்ரல் 16

உங்கள் ஆவியைச் சோதித்துப்பாருங்கள்

"***கேட்டின் மகனாகிய பாவமனுஷன் ... எதிர்த்துநிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவை யெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவ னுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்***" (II தெச. 2 : 3, 4).

கர்த்தருடைய இரகசிய வருகையில் சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னரே அந்திக்கிறிஸ்து சரீர ரூபத்தில் வெளிப்படுவான் என்பது உண்மையாயிருப்பினும், அந்திக்கிறிஸ்துவின் ஆவி ஏற்கனவே இவ் வுலகில் இருக்கிறது. அது இப்பொழுதே கிரியை செய்துகொண்டிருக்கிறது (I யோவான் 4 : 3).

இந்தக் 'கேட்டின் மகன்' அல்லது அந்திக்கிறிஸ்து ஆலயத்தில் உட்கார்ந்துகொண்டு, தன்னை ஆராதிக்க வேண்டுமென உரிமை கோரு கிறான். நாம் தேவனுடைய ஆலயமாயிருக்கிறோம் (I கொரி. 3 : 16). இக் கடைசிக் காலத்தில் அந்திக்கிறிஸ்துவின் ஆவி நமக்குள் பிரவேசிக்காதபடி

நாம் அதிக ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். ஆலயத்தில் அந்திக்கிறிஸ்து பிரவேசித்திருக்கிறான் என்பதை எவ்வாறு நாம் அறிந்துகொள்ள முடியும்? அவன் ஆலயத்தினுள் நுழைந்த மாத்திரத்தில், தன்னை ஆராதிக்க வேண்டும் என்றும், தன்னைக் கனம்பண்ண வேண்டும் என்றும் உரிமை கோருவான். நீங்கள் மற்றவர்களிடத்திலிருந்து மரியாதையையும், கனத்தையும், மகிமையையும் உரிமைகோரவோ, எதிர்பார்க்கவோ செய்தால், மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்; ***அந்திக்கிறிஸ்து ஏற்கனவே உங்கள் ஆலயத்தில் இருக்கிறான்!*** நீங்கள் உடனடியாகவே மனஸ்தாபப்பட்டு தேவனிடம் திரும்பாவிட்டால், இந்தப் பெருமையின் ஆவி உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு நாசம் விளைவித்துவிடக் கூடும்.

தேவன் பாவிகளுக்கோ அல்லது பின்மாற்றக்காரருக்கோ எதிர்த்து நிற்பதாக வேதாகமம் கூறுவதில்லை. ஆனால் அவர் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்துநிற்கிறார் என்றே திருவசனம் கூறுகிறது - '*தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்*' (யாக். 4 : 6). தேவன்தாமே ஒருவனுக்கு எதிர்த்துநின்றால் அவனுடைய முடிவு என்னவாகும்! பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்துநிற்கிறார் என்று கூறப்பட்டதன் பின்னர், "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்" என்று கூறப்பட்டிருப்பது, பெருமையுள்ளவர்கள் பிசாசுகளைப் போன்றவர்கள் என்று கூறுவது போல் தொனிக்கிறதன்றோ? உண்மையாகவே பெருமையுள்ளவர்கள் ஒரு அம்சத்தில் பிசாசின் அவதாரங்களே.

அநேக நவீனகாலப் பிரசங்கிமாரிலும், பாடகர்களிலும், விசுவாச சுகமளிப்போரிலும் இந்த அந்திக்கிறிஸ்துவின் ஆவி கிரியை செய்கிறதை நாம் காணக் கூடும். தங்களுக்குப் போதிய அளவு மரியாதையும் கனமும் அளிக்கப்படவில்லையென தேவபிள்ளைகள் சிலர் கசப்படைந்து, சபையை விட்டுச் செல்வதை அவ்வப்போது நாம் பார்க்கிறோமே! அதன் மூலம் அவர்கள் தங்களுக்குள் இருக்கும் அந்திக்கிறிஸ்துவின் ஆவிக்கு இன்னும் அதிகமாகத் தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள். முடிவாக அவர்கள் தங்களைத் தாங்களே கெடுத்துக்கொள்வதுமல்லாமல், இந்தத் தீய ஆவியை மற்ற அநேகருக்குள்ளும் புகுத்தி, அவர்களையும் கெடுக்கின்றனர். "*எதிர்த்து நிற்கிறவனாயும் ... தன்னை உயர்த்துகிறவனாயும்*" - இவ்விதமாய் 'அந்திக்கிறிஸ்துவால் பீடிக்கப்பட்டவர்கள்' தங்களை உயர்த்தும் நோக்குடன் எதிர்ப்புகளிலும், தர்க்கங்களிலும் முக்கிய ஸ்தானம் வகிப்பார்கள் என்பது ஆச்சரியமல்லவே!

அந்திக்கிறிஸ்துவின் ஆவி, தன்னைத்தான் மேன்மைப்படுத்தும் ஆவியாயிருக்கிறது. ஆனால் கிறிஸ்துவின் ஆவியோ தன்னைத் தான்

தாழ்த்தும் ஆவியாயிருக்கிறது - 'நான் குறையவேண்டும்; அவர் (மற்றவர்கள்) பெருக வேண்டும் (என்னைவிட அதிகம் பிரகாசிக்க வேண்டும் அல்லது கர்த்தரால் உபயோகிக்கப்பட வேண்டும்)'. அன்பான வாசகரே, உங்கள் வாழ்க்கையில் எந்த ஆவி ஆளுகை செய்கிறது?

ஏப்ரல் 17

எப்படியாகிலும் சிலரை இரட்சியுங்கள்!

"*எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு*" (I கொரி. 9 : 22).

எப்படியாகிலும் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த வேண்டுமென்று அப். பவுல் கொண்டிருந்த குறிக்கோள் அவரை அதிகமான தியாகம் செய்யச் செய்தது. அதன் பலனாக எண்ணிலடங்கா ஜனங்கள் இரட்சிக்கப்பட்டனர். 2000 ஆண்டுகளுக்குப் பின்னருங்கூட, அவரது நிருபங்கள் தொடர்ந்து ஜனங்களில் பக்திவிநயத்துடன் கூடிய பயத்தை உண்டாக்குவதுடன், உலகம் முழுவதிலும் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவதற்கும் மறுரூபமடைவதற்கும் ஏதுவாயிருக்கின்றன. நரக அக்கினியிலிருந்து ஒரு ஆத்துமாவையாயினும் மீட்க நாம் செய்யும் எப்படிப்பட்ட தியாகமும் தகுதியானதே.

ஒரு தேவபிள்ளை சுவிசேஷக் கைப்பிரதிகளை விநியோகம் செய்து கொண்டு சாலைகளில் சென்றுகொண்டிருந்தபோது, ஒரு வீட்டின் கதவைத் தட்டினார். சிறிது நேரத்திற்குப் பின்னர் ஒரு மனிதன் கதவைத் திறந்தான். அந்தக் கிறிஸ்தவர் அம்மனிதனிடம் ஒரு கைப்பிரதியைக் கொடுத்தார். அம்மனிதனோ மிகுந்த கோபத்துடன் அவர் கையினின்று அப்பிரதியைப் பறித்துக்கொண்டு, அவருடைய முகத்துக்கு நேராகக் கதவை ஆத்திரமாக அடைத்துவிட்டான். அம்மனிதன் ஏன் அவ்வாறு கோபத்துடனும் சலிப்புடனும் நடந்துகொண்டானென அறிய ஆவல்கொண்ட அக்கிறிஸ்தவர் சில நாட்களுக்குப் பின்னர் அவனுடைய வீட்டிற்குச் சென்றார். ஆனால் இம்முறை அம்மனிதன் கதவைத் திறந்தபோது அவனது முகத்தில் புன்முறுவல் காணப்பட்டது. அவன் மலர்ந்த முகத்துடன் அந்தக் கிறிஸ்தவரைத் தன் வீட்டிற்குள் வரவேற்று, சில நாட்களுக்கு முன்னர் தான் நான்றுகொண்டு மரிக்கும்படி ஒரு கயிற்றைக் கட்டியிருந்த மின் விசிறியைச் சுட்டிக்காண்பித்து பின்வருமாறு கூறினான். "அந்த நாளில் வாசல் மணி ஒலித்த அந்நேரத்தில், நான் அக்கயிற்றிலிருந்த சுருக்கில் என் தலையை நுழைத்துக்கொண்டிருந்தேன்; 'எப்படியும் நான் சாகத்தானே

போகிறேன்! அதற்கு முன் வெளியே நிற்பது யாரென்று பார்த்துவிட்டு, பின்னர் என் தற்கொலை திட்டத்தைத் தொடரலாம்' என எண்ணி, நான் வாசற் கதவைத் திறந்தேன்; வெளியே கைப்பிரதியுடன் நிற்கும் ஒரு மனிதனைக் கண்டபோது எனக்குக் கோபம் மூண்டது. நான் மிகுந்த ஆத்திரத்துடன் அந்தப் பிரதியைக் கசக்கிக் குப்பைக்கூடைக்குள் போடவிருந்தபோது, அதிலிருந்த '*நீ விசேஷமான ஒரு நபர்*' என்ற வார்த்தைகள் என் கண்களில் பட்டன. அந்தப் பிரதியில் என்னதான் இருக்கிறது என்று நான் அதை மேலோட்டமாகப் பார்த்தேன். பின்னர் அதை நான் நிதானமாக வாசித்தபோது ஒரு ஒளி என் உள்ளத்தில் உதித்தது. என் வாழ்க்கையை நான் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்து, என் மதியீனமான திட்டங்கள் அனைத்தையும் விட்டுவிட்டேன்".

அன்பான தேவபிள்ளையே, நித்திய அழிவிலிருந்து ஆத்துமாக்களை இரட்சிக்கும்படி எவ்விதத்திலும், எக்கிரயமாயினும் செலுத்தி, உன்னால் இயன்ற எல்லாவற்றையும் நீ செய்வாயாக. நீ வெறுங்கையுடன் பரலோகத்திற்குச் செல்ல வேண்டாம். ஆண்டவராகிய இயேசுவும் உன் மூலம் கிறிஸ்துவண்டை வழிநடத்தப்பட்டு அங்கிருக்கும் ஆத்துமாக்களும் பரலோகத்தின் முத்துவாசல்களில் உன்னை வரவேற்பது உனக்கு எத்தகைய ஆனந்தப்பரவசமளிப்பதாயிருக்கும்! நித்தியம் முழுவதும் அது உன் ஆவிக்கு எவ்வளவு குதூகலம் அளிக்கும்!

ஆத்மா ஒன்றும் இரட்சிக்காமல்
வெட்கத்தோடே ஆண்டவா
வெறுங்கையனாக உம்மைக்
கண்டுகொள்ளல் ஆகுமா?

ஏப்ரல் 18

உங்கள் இரத்தம் எதற்காகக் கூப்பிடுகிறது?

"***என்ன செய்தாய்? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது***" (ஆதி. 4 : 10).

இரத்தத்திற்குச் சக்திவாய்ந்த ஒரு சத்தமுண்டு. இங்கு ஆபேலின் இரத்தம் பழிவாங்கும்படி மன்றாடுகிறது: 'தேவனே, என் சகோதரன் என்ன செய்திருக்கிறான் என்று பாரும்! நான் அவனுக்கு யாதொரு தீமையும் செய்யவில்லை; ஆனால் அவன் என்னைக் கொன்றுபோட்டான். கர்த்தாவே!

நீர் இதற்கு ஏதாவது பதில் செய்யும், அவனைத் தப்பவிடாதேயும்'. ஆபேலின் இரத்தம் பழிவாங்கும்படி மன்றாடும்போது, கர்த்தராகிய இயேசுவின் இரத்தமோ மன்னிக்கும்படி வேண்டுதல் செய்கிறது: "*பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே*". இதில் அற்புதமான வல்லமை இருக்கிறது. ஆபேலின் இரத்தம் பூமியிலிருந்து கூப்பிட்டது; கர்த்தராகிய இயேசுவின் இரத்தமோ பரலோகத்திலிருந்து பேசுகிறது (எபி. 12 : 25).

பொதுவான இரத்தசாட்சிகளின் ஆத்துமாக்கள், "*பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, ... எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர்*" (வெளி. 6 : 10) என்று கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவதாக நாம் வாசிக்கிறோம். ஆனால் புதிய ஏற்பாட்டின் முதல் இரத்தசாட்சியாகிய ஸ்தேவான், "*ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்*" (அப். 7 : 60) என மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டு நித்திரையடைந்ததாக நாம் வாசிக்கிறோம். ஆம்! புதிய ஏற்பாட்டில், கர்த்தராகிய இயேசுவின் மூலமாக அவர் மன்னித்தது போல் மன்னிக்க நாம் கிருபையைப் பெற்றுக்கொள்கிறோம்.

"*நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ... புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்*" (எபி. 12 : 22, 24). இந்தக் கிருபையின் காலத்தில் பழிவாங்க வேண்டும் என்று யாராயினும் விரும்பினால் அந்நபர் கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தையல்ல, ஆபேலின் இரத்தத்தையே உடையவனாயிருக்கிறான்.

தேவபிள்ளையே, உன் இரத்தம் எதற்காகக் கூப்பிடுகிறதென சோதித்தறிவாயாக. பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களைப் போல் உனக்கெதிராக இழைக்கப்பட்ட தீமைக்குக் கர்த்தர் பழிவாங்குவாரென நீ எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறாயா? அல்லது கர்த்தராகிய இயேசுவைப் போல், உன்னைப் புண்படுத்தியிருப்பவர்களுக்கு மன்னிப்பையும் அன்பையும் நீ வழங்குகிறாயா?

"*ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து ... ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்*" ; "*ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்*" (எபே. 4 : 32 ; கொலோ. 3 : 13).

ஏப்ரல் 19

உடன்படிக்கையைக் காக்கும் உன் தேவனைக் காண்பி

"*நான் பூமிக்கு மேலாய் மேகத்தை வருவிக்கும்போது, அந்த வில் மேகத்தில் தோன்றும்*" (ஆதி. 9 : 14).

பயங்கரமான கார்மேகங்கள் வானில் எழும் காட்சிக்கு ஏழு நிறங் களையுடைய வானவில் எழில் மிகு கவர்ச்சியுடன் வானில் தோன்றும் காட்சி ஈடு செய்கிறது. ஆகாயத்தில் கார்மேகங்கள் ஒன்று சேருகையில்தான் எழில்மிக்க வானவில்லை நாம் காணலாம். இதில் ஒரு பெரிய ஆவிக் குரிய உண்மை அடங்கியுள்ளது. கார்மேகங்கள் போன்ற சோதனை களையும் கஷ்டங்களையும் நாம் சந்திக்கும்போது மட்டுமே நமது ஜீவிய மானது உலகிற்குத் தெய்வீக அழகை வெளிப்படுத்தக் கூடும். தேவனோடு நீ செய்துள்ள உடன்படிக்கைகளில் நீ எந்த அளவுக்கு உண்மையுள்ள வனாக இருக்கிறாய் என்பதை உன் சோதனை வேளைகளிலேயே நீயும் மற்றவர்களும் கண்டுகொள்ள முடியும். உன் சோதனைகளிலேயே, நீ எந்த உலோகத்தாலானவன் என்பதும், உன் தேவன் யார் என்பதும் நிரூபிக்கப் படக் கூடும்; அப்போது மட்டுமே உடன்படிக்கையைக் காக்கும் உன் தேவனின் தன்மையை நீ உலகுக்குக் காண்பிக்கக் கூடும்.

ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரால் எரிகிற அக்கினிச் சூளையிலி டப்பட்ட சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களைப் பாருங்கள்! அது வரையிலும் நேபுகாத்நேச்சாரால் அவர்களுடைய தேவனை அறிந்து கொள்ளவோ, காணவோ முடியவில்லை. ஆனால் அவர்கள் அக்கினிச் சூளைக்குள் போடப்பட்டபோதோ, தேவபுத்திரனுக்கு ஒப்பானவர் அவர் களோடு உலாவுவதை அவனால் பார்க்க முடிந்தது. ஆம், தங்களுடைய அக்கினிச் சோதனையில்தான் தங்களோடு உலாவும் ஜீவனுள்ள தேவனை அவர்களால் தேவனை அறியாத புறஜாதி ராஜாவுக்கும் தேசத்துக்கும் விளங்கப்பண்ண முடிந்தது. அவர்கள் தங்களுடைய தேவனோடு செய்திருந்த உடன்படிக்கையை எல்லாராலும் காண முடிந்தது. அவர்கள் தங்கள் உறுதியான தீர்மானத்தைத் தளரவிட்டிருந்தால் தங்கள் தேவனுக்கு நம்பிக்கைத்துரோகம் செய்தவர்களாகியிருப்பார்கள்.

அன்பான தேவபிள்ளையே, உன்னுடைய அக்கினி சோதனை களில் உன் தேவனை நீ உலகுக்குக் காண்பிக்கிறாயா? உனக்கும் உன் தேவனுக்குமிடையே உள்ள உடன்படிக்கையை மற்றவர்களுக்கு நீ காண் பிக்கிறாயா? தமது உடன்படிக்கையைக் காப்பதில் தேவன் உண்மையுள்ளவர் என்பதை உன் ஜீவியத்தில் அவர்கள் காணக்கூடியவர்களாயிருக்கிறார்களா?

ஏப்ரல் 20

கர்த்தராகிய இயேசுவைச் சந்தோஷமாக ஏற்றுக்கொள்வதெப்படி?

"*அவன் சீக்கிரமாய் இறங்கி, சந்தோஷத்தோடே அவரை அழைத்துக் கொண்டுபோனான்*" (லூக்கா 19 : 6).

சகேயு காட்டத்தி மரத்தைப் பற்றிக்கொண்டு அதன் மேல் அமர்ந் திருக்கையில் கர்த்தராகிய இயேசு திரள் கூட்டம் தம்மைச் சூழ்ந்தவராக அவ்வழியே நடந்து வந்துகொண்டிருந்தார். சகேயு இருந்த இடத்தினருகில் கர்த்தராகிய இயேசு வந்தபோது அண்ணாந்து பார்த்து சகேயுவைக் கண்டு, "*சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும்*" (லூக்கா 19 : 5) என்றார். என்னவோர் அன்பை வெளிப்படுத்தும் செய்கையிது!

இதில் நாம் காணும் அழகான காரியம் யாதெனில், சகேயு முதலாவது கர்த்தராகிய இயேசுவுக்குச் சமீபமாய்ச் செல்லவில்லை; கர்த்த ராகிய இயேசுவே சகேயுவினருகில் சென்றார். சகேயு முதலாவது கர்த்த ராகிய இயேசுவைப் பார்க்கவில்லை; கர்த்தராகிய இயேசுவே சகேயுவை முதலாவது பார்த்தார். சகேயு கர்த்தராகிய இயேசுவிடம் முதலாவது பேசவில்லை; கர்த்தராகிய இயேசுவே சகேயுவிடம் முதலாவது பேசினார். அன்பான தேவபிள்ளையே, நமது ஆவிக்குரிய வாழ்க்கையைப் பற்றிய விஷயத்திலும் இது உண்மையல்லவா? நாம் கர்த்தராகிய இயேசுவிடம் போகுமுன் அவர் நமது அருகில் வந்தார்; நாம் அவரைப் பார்க்குமுன் அவர் நம்மைப் பார்த்து, "*உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன்*" என எழுதப்பட்டிருப்பது போல் நம்மைப் பெயர் சொல்லி அழைத்தார்.

சகேயு மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான். அவன் கர்த்தராகிய இயேசுவைப் 'பார்க்க' மாத்திரமே விரும்பினான். ஆனால் கர்த்தராகிய இயேசு சகேயுவைப் பார்த்தார், அவனைப் பெயர் சொல்லி அழைத்தார், அவனுடைய வீட்டில் அவரை விருந்தினராய்க் கொள்ளும் பெரும்பாக்கி யத்தையும் அவனுக்கு அருளினார். உண்மையாகவே நமது தேவன், '*நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய்க்* கிரியைசெய்ய வல்லவர்' (எபே. 3 : 20).

சகேயுவைப் பார்த்து கர்த்தராகிய இயேசு முதலாவது கூறியது, "சீக்கிரமாய் இறங்கிவா" என்பதாகும். சகேயு ஓர் ஐசுவரியவானாகவும், முக்கியமான மனிதனாகவும் இருந்தான். அவன் ஆயக்காரரின் தலை வனாகவும் இருந்தான். ஆயக்காரரின் தலைவன் என்பது அவன் ஓர் உயர்

பதவி வகித்துக்கொண்டிருந்தான் என்பதைக் குறிக்கிறது. அவன் தன் பதவி, ஆஸ்தி ஆகியவற்றின் பெருமையிலிருந்து இறங்கி வர வேண்டுமென கர்த்தராகிய இயேசு விரும்பினார். கர்த்தர் ஒரு பாவியைச் சந்திக்கும்போது அவன் செய்ய வேண்டிய முதல் வேலை இதுவே.

"*அவன் சீக்கிரமாய் இறங்கி, சந்தோஷத்தோடே அவரை அழைத்துக் கொண்டுபோனான்*" (லூக்கா 19 : 6) - அன்பான தேவபிள்ளையே, நீ இன்னும் கர்த்தராகிய இயேசுவைச் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொள்ள வில்லையெனில், நீ இன்னும் உன் பெருமையிலிருந்து கீழே இறங்கிவரா திருப்பதே அதன் காரணமாகும். நீ சீக்கிரமாக இன்றே 'கீழே இறங்கிவந்து' அவரைச் சந்தோஷமாக ஏற்றுக்கொள்வாயா?

ஏப்ரல் 21

கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்திலுள்ள பாதுகாக்கும் வல்லமை

"***அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோ டொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்***" (I யோவான் 1 : 7).

தேவனுடைய வசனத்தின் சத்தியத்தின் ஒளியில் நாம் நடக்கும் போது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தமானது நம்மை எப்போதும் கழுவப்பட்டவர்களாகவும், கறையற்றவர்களாகவும், தூய்மையானவர்களாக வும் காத்துக்கொள்ள அரும்பெரும் வல்லமையுள்ளதாயிருக்கிறது.

நிலக்கரிச் சுரங்கம் ஒன்று இருக்கும் பகுதியில் மலரும் வெண்மை நிறமுள்ள ஒரு மலரைக் குறித்து இவ்வாறு கூறப்படுகிறது: சுரங்கத்தில் வேலை செய்கிற அனைவரும் உண்மையில் கறுப்பான கரிப்பொடியால் மூடப்பட்டிருந்தனர். அங்கு வளரும் எல்லாச் செடிகளுங்கூட அப்படியே. ஆனால் அங்கிருந்த ஒரு சிறிய செடியில், தூய்மையான, கறையற்ற, வெண்மையான மலர்கள் இருந்தன. சுரங்கத்தைப் பார்வையிடச் சென்ற ஒருவர் இதைப் பார்த்து வியப்படைந்தார். அவர் தன் கையில் ஒரு சிட்டிகை கரிப்பொடியை எடுத்து அம்மலரின் மீது தூவினார். என்ன ஆச்சரியம்! அக்கரிப்பொடி அதன் மேல் ஒட்டாமல் உடன்தானே உருண்டு கீழே விழுந்துவிட்டது. அம்மலரோ கறையற்ற வெண்மையாகவே நிலைத்திருந்தது. அம்மலர் அவ்விதம் தூய்மையாயிருப்பதன் காரணத்தை அறிய ஆவல் கொண்டவராய், அவர் அதன் இதழ்களைத் தொட்டுப்

பார்த்தபோது அதன் இரகசியத்தைக் கண்டுகொண்டார். ஒரு வகையான கண்ணாடி முலாம் போன்ற திரவம் ஒன்று அந்த இதழ்கள் மீது இயற்கை யாகவே அமைந்திருந்தது. அதுவே அவ்விதழ்களின்மீது விழும் தூசியாயினும் பொடியாயினும் உடனுக்குடன் அவற்றினின்று நழுவி விழும்படிச் செய்தது.

அன்பான வாசகரே, தேவன் இப்படிப்பட்ட தூய வெண்மையான பூக்களைச் சிருஷ்டித்து, மிகவும் அழுக்கடைந்த இடத்திலும் மாசுகள் பற்றிக்கொள்ளாதவாறு அவற்றைக் காப்பாராயின், எல்லாச் சிருஷ்டிப்பு களுக்கும் மேலான, சிருஷ்டிகளின் கிரீடமாகிய நம்முடைய விஷயத் திலும் அவ்விதம் செய்வாரல்லவா? அப்பூவிதழ்களின் மேல் இருந்த கண்ணாடி முலாம் போன்ற திரவத்தைப் போல, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தமானது, அவருடைய இரகசிய வருகையில் நாம் கறையற்றவர்களாய், தூய்மையானவர்களாய் அவரைச் சந்திக்க நம்மை மூடி மறைத்துப் பாதுகாக்கக்கூடியதாயிருக்கிறது. கிறிஸ்து வின் இரத்தத்தின் வல்லமையைக் குறித்து அநேக தேவபிள்ளைகள் பாடு கிறார்கள்; ஆனால் துரதிர்ஷ்டவசமாக அந்த இரத்தத்திலுள்ள மகிமையான, மகத்தான வல்லமையை வெகு சிலரே உணர்ந்தவர்களாயிருக்கின்றனர்.

ஏப்ரல் 22

குளிர்ந்துபோன பழைய விசுவாசி

"***இத்தனை வருஷகாலமாய் நான் உமக்கு ஊழியஞ்செய்து, ஒருக் காலும் உம்முடைய கற்பனையை மீறாதிருந்தும், என் சிநேகிதரோடே நான் சந்தோஷமாயிருக்கும்படி நீர் ஒருக்காலும் எனக்கு ஒரு ஆட்டுக் குட்டியையாவது கொடுக்கவில்லை***" (லூக்கா 15 : 29).

இந்த மூத்த மகனை இந்நவீன காலத்தின் 'குளிர்ந்துபோன நிலையிலிருக்கும் பழைய விசுவாசிக்கு' நாம் ஒப்பிடலாம். '*இத்தனை வருஷ காலமாக நான் உமக்கு ஊழியஞ் செய்தேன்*' என்று அவனுக்குத் தன் பல வருட அனுபவத்தைக் குறித்து மேன்மைபாராட்ட ஏதுவிருக்கிறது.

அவன், முழுவதும் தன்னாலே தான் நிரப்பப்பட்டவனாக - தன்னைக் கொண்டே தன்னைப் பொதிந்திருக்கிறான். உள்ளே வந்து, மகிழ்ச்சியான ஐக்கியத்தில் பங்குபெறும்படி அவனது அன்பின் தகப்பனார் அவனை வருந்தியழைத்த போதிலும், அவனோ அவரிடம் தர்க்கிக்கிறான்.

'*நான் ஒருக்காலும் உமது கற்பனையை மீறாதிருந்தேன்*' என தன் தகப்பனாரிடம் அவன் கூறுகிறான். அவன் தன் மேல் கரிசனையுள்ள

தகப்பனின் வருந்தியழைக்கும் வேண்டுதலுக்குங்கூட கீழ்ப்படியாதிருப் பதைக் காண்கையில், இந்த மூத்த மகனின் ஆணவம் மிக்க வார்த்தை களை யார்தான் நம்பக் கூடும்? பெரும்பாலும் தங்களைக் குறித்து மேன்மையாகப் பேசும் எவருமே, இப்'*பரிசேயனை*'ப் போல் வெறுமை யாகவே காணப்படுவர்.

அவன் தன் தகப்பனாரிடம் கூறும் புகாரைப் பாருங்கள் (குளிர்ந்து போன நிலையிலுள்ள விசுவாசிகள் குற்றஞ்சாட்டுபவர்களாகவும் குறை கூறுகிறவர்களாகவும் இருப்பார்கள்!) - "*என் சிநேகிதரோடே நான் சந்தோஷ மாயிருக்கும்படி நீர் ஒருக்காலும் எனக்கு ஒரு ஆட்டுக்குட்டியையாவது கொடுக்கவில்லை*". அன்பான வாசகரே, பரிசுத்தவான்களின் ஐக்கியத்தை உங்களால் மகிழ்ச்சியாய் அனுபவிக்க முடியவில்லையெனில், உங்களுக்கு வேறு எங்கேயோ நட்பும் மகிழ்ச்சியான கொண்டாட்டமும் இருக்கிறது என்பதே அதன் பொருளாகும். நீங்கள் ஓர் ஆட்டுக்குட்டிக்காக (உலக சிற்றின்பங்களுக்காக) ஆசைப்பட்டால், தகப்பன் வீட்டிலுள்ள (சபை யிலுள்ள) கொழுத்த கன்று (கொழுமையும் புஷ்டியுமான ஆவிக்குரிய ஆகாரம்), இன்னிசை, நடனம் முதலியவற்றை (மேன்மையான ஆவிக் குரிய ஆசீர்வாதங்கள்) உங்களால் ஒருக்காலும் இன்பமாய் அனுபவிக்க முடியாது.

இன்னிசையும் நடனமும் முடிவுறும் வேளையில், கொழுத்த கன்றின் விருந்தும் ஏறக்குறைய முடிந்து ஏதோ கொஞ்சம் மீதியாய் இருக்கும் போது ஒருவேளை அந்த மூத்தமகன் கடைசியாக உள்ளே போயிருந்த திருக்கலாம். இது (ஆராதனையின் பாடல் பகுதி முடிவுறும் சமயத்தில்) ஆலயத்தில் முடிவாகக் கடைசி இருக்கையைத் தேடிச் செல்லும் 'ஞாயிற்றுக் கிழமை கிறிஸ்தவனாய்' இருக்கும் ஒருவனின் நிலையைச் சித்திரிக்கிறதன்றோ?

ஏப்ரல் 23

எவருக்கும் இடமுண்டு

"***சகலவித மாம்சமான ஜீவன்களிலும் ஆணும் பெண்ணுமாக வகை ஒன்றுக்கு ஒவ்வொரு ஜோடு உன்னுடன் உயிரோடே காக்கப் படுவதற்கு, பேழைக்குள்ளே சேர்த்துக்கொள்***" (ஆதி. 6 : 19).

பேழைக்குள்ளே எல்லாருக்கும் இடமிருந்தது. ஆனால் தேவகுமார னாகிய இயேசு உலகத்திற்கு இறங்கி வந்தபோது சத்திரத்தில் அவருக்கு இடமில்லாதிருந்தது என்பது மிகவும் விநோதமானதாயிருக்கிறது. ஆயினும்

பேழையாகிய அவருக்குள் - சர்ப்பத்தைப் போன்றவர்களுக்கும், சிங்கத்தைப் போன்ற கொடூரமானவர்களுக்குங்கூட இடம் இருப்பதை நாம் காண்கிறோம்.

நீர் யாராயிருந்தாலும், நீர் (சரீரப்பிரகாரமாக, மனநிலை சம்பந்தமாக, உணர்ச்சியின் அடிப்படையில், ஆவிக்குரிய ரீதியில், சமூகநிலையில்) எந்த நிலைவரத்திலிருந்தாலும், நீர் கிறிஸ்துவிடம் வரலாம். "*என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை*" (யோவான் 6 : 37) என்று அவர் கூறுகிறார். "*ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்*" (யோவான் 7 : 37) என்று அவர் யாவரையும் வரவேற்கிறார். ஒவ்வொருவருக்காகவும் அவரது இருதயம் விசாலமாய்த் திறந்திருக்கிறது. அன்பான வாசகரே, உம்மைக் குறித்து என்ன? உமது இருதயம் எவ்வளவு பெரிதாக இருக்கிறது? யாருக்காயினும் நீர் உமது இருதயத்தை விசாலமாகத் திறவாதவராயிருக்கிறீரா?

பேழையில் இடம் மாத்திரமல்ல, பல அறைகளும் இருந்தன. "*அந்தப் பேழையிலே அறைகளை உண்டுபண்ணி*" (ஆதி. 6 : 14). தேவ பிள்ளையே, கிறிஸ்துவில் உனக்கே உரிய தனிச்சிறப்பான இடத்தை நீ கண்டுபிடித்திருக்கிறாயா? அவருக்குள் உன்னுடைய ஸ்தானம் யாது என நீ அறிந்திருக்கிறாயா? கிறிஸ்துவில் உனக்குள்ள உரிமைகளையும் சிலாக் கியங்களையும் குறித்த அறிவு உனக்கு உண்டா? கிறிஸ்து இயேசுவுக்குள் உனக்கென்று வைக்கப்பட்டுள்ள சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங் களையும் நீ அனுபவித்துக்கொண்டிருக்கிறாயா?

ஏப்ரல் 24

உன் வாழ்வில் கர்த்தராகிய இயேசு இல்லையேல் ...

'***சமுத்திரத்தின் வலுமையான அலைகளைப்பார்க்கிலும், கர்த்தர் வல்லமையுள்ளவர்***' (சங். 93 : 4).

ஒரு மாலைவேளையில், கர்த்தராகிய இயேசு ஐயாயிரம் புருஷரை யும், ஏராளமான ஸ்திரீகளையும் பிள்ளைகளையும் போஷித்தலாகிய அற்புதத்தைச் செய்த பின்னர், தனியாக ஜெபிப்பதற்காக ஒரு மலைக்குச் சென்றார். சீஷர்கள் ஒரு படவில் ஏறி கலிலேயாக் கடலின் அக்கரைக்குச் செல்லப் புறப்பட்டனர். அவர்கள் வெகுவாகக் கஷ்டப்பட்டு, மாலை முதல் கடினமாகப் பிரயாசப்பட்டுத் தண்டுவலித்துக்கொண்டிருந்தபோதிலும், நாலாம் ஜாமத்தில் படவு இன்னும் நடுக்கடலிலேயே அலைகளால் அலைவுபட்டுக்கொண்டிருந்தது. கர்த்தராகிய இயேசு நம்மோடுகூட

இல்லாதிருப்பதே பெரும்பாலும் நம்முடைய தொல்லைகளின் காரணமாக அமைகிறது. சீஷர்கள் அக்கரைக்குச் செல்ல விரும்பினர்; ஆனால் கர்த்தராகிய இயேசு அவர்களோடு படவில் இராததால் அவர்களது அனைத்துப் பிரயாசங்களும் வீணாயின. அது போலவே நாமும் பரலோகக் கரைக்குச் செல்ல வேண்டுமாயின், கிறிஸ்து மாலுமியாக நமது வாழ்க்கைப் படவில் இருக்க வேண்டும். நமது வாழ்க்கையின் மையத்தில் கர்த்த ராகிய இயேசு இல்லையெனில், நமது பிரயாசங்கள் அனைத்தும், அவை எவ்வளவு தான் நல்லவையாயிருந்தாலும் பயனற்றவையாகவே இருக்கும்.

சீஷர்கள் படவில் பயணம்செய்துகொண்டிருந்தபோது கொந்தளிக் கும் கடலையும் எதிர்க்காற்றையும் சந்தித்தனர். கர்த்தராகிய இயேசு நமது வாழ்வில் இல்லாவிட்டால், நமது எதிர்பார்ப்புகளுக்கும் திட்டங்களுக்கும் எதிரானவைகளையே நாம் சந்திக்க வேண்டியதாயிருக்கும். கடும் சோதனை சூழ்ந்த நம்பிக்கையற்ற அந்த வேளையில், கர்த்தராகிய இயேசு '*சமுத்திரத்தின் வலுமையான அலைகளைப்பார்க்கிலும், கர்த்தர் வல்லமை யுள்ளவர்*' (சங். 93 : 4) என்பதைச் செயல்முறையில் நிரூபித்துக் காட்டுகிற வராகக் கொந்தளிக்கும் கடலின் மீது நடந்து அவர்களிடம் சென்றார்.

அன்பான வாசகரே, நீர் உம்முடைய வாழ்க்கையைக் கர்த்தராகிய இயேசுவுக்குக் கையளித்தால், அவர் உமதருகில் வந்து, உம் வாழ்க்கையில் தமது மகத்தான வல்லமையை நடைமுறையில் நிரூபித்துக்காட்ட மனமுவந்திருக்கிறார். உம் வாழ்க்கையில் கர்த்தராகிய இயேசு இல்லாமல் உம்மால் ஒருபோதும் பரலோகக் கரையைச் சென்றடைய முடியாது. ***அவர் உம் வாழ்க்கையின் மையப்பகுதியில்*** இருக்கிறாரா, ***அவரே உம் ஜீவியத் தின் மையமாய்*** இருக்கிறாரா என்பதை நீர் உறுதிப்படுத்திக்கொள்ளுவீராக.

ஏப்ரல் 25

உங்கள் இருதயத்தில் இருப்பது என்ன?

"தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்" (சங். 51 : 17).

நாம் நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்று தேவன் ஏன் விரும்புகிறார்? ஒருவன் தன் இருதயத்தில் இருப்பது யாது என்பதை அறியாதவனாயிருக்கச் சாத்தியமுண்டு. எடுத்துக்காட்டாக, ஒரு ஆப்பிள் பழமானது பளபளப்பாகவும் பொன் நிறமானதாகவும் கண் களுக்கு மிகவும் கவர்ச்சியானதாகவும் இருக்கக் கூடும்; ஆனால் அதை

வெட்டித் துண்டுகளாக்கினால், அதனுள் ஒரு பகுதி அழுகிய நிலையிலும், உள்ளே புழுக்களும் இருக்கக் கண்டு நாம் அதிர்ச்சியடையலாம். இதைப் போன்றே நமது இருதயம் நொறுக்கப்பட்டாலொழிய, அதனுள் இருப்பது யாது என்பதை நாம் ஒருபோதும் அறியாதவர்களாகவே இருப்போம் - ஆயினும் அதிலுள்ள யாவற்றையும் தேவன் அறிவார்.

தங்கள் இருதயங்களில் இருந்தது யாது என்பதை இஸ்ரவேலரை அறிந்துகொள்ளச் செய்யும்படியாக தேவன் அவர்களை நாற்பது நீண்ட வருட காலம் வனாந்தர வழியாக நடத்தினார் (உபா. 8 : 2). ஆனால் துக்ககரமான காரியம் யாதெனில், தங்கள் இருதயத்தில் இருந்தது யாது என்பதை அறிந்துகொள்ளத் தவறி, அவர்கள் சோதனைகளில் விழுந்து போனார்கள். எனவே, அவர்களில் அநேகர் வனாந்தரத்தில் அழிந்து போனார்கள். நாம் முற்றுமுடிய நம் தேவனைப் பின்பற்ற வேண்டுமாயின், நமது இருதயத்தில் இருப்பது யாது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். இதற்கு நொறுங்குண்டதும், நருங்குண்டதுமான இருதயம் நமக்கு மிகவும் இன்றியமையாததாகும்.

பேதுரு கர்த்தரை மறுதலிக்கும் வரையிலும் தனது இருதயத்தில் இருந்தது யாது என்பதை அறியாதிருந்தான். அவன் தன்னம்பிக்கை மிகுந்தவனாய், "*ஆண்டவரே, காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர, ஆயத்தமாயிருக்கிறேன்*" என்று கூறினான் (லூக்கா 22 : 33). ஆனால் அதன் பின்னர் வெகுசீக்கிரத்திலேயே அவன் கர்த்தரை மறுதலித்துவிட்டான். நமது இருதயத்தில் இருப்பது யாது என்பதை அறிந்துகொள்ள நாடா விட்டால், நாமும் பேதுருவைப் போல நம் சோதனையில் விழுந்துவிடுவோம்.

கர்த்தர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தில் வீற்றிருப்பதை ஏசாயா பார்த்தபோது, "*ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன்*" (ஏசாயா 6 : 1, 5) என்று கூறினான். உயர்த்தப்பட்டிருக்கும் உன்னதமான தேவனை நாம் பார்க்கும்போது, தேவசமுகத்தில் நாம் எவ்வளவு தாழ்வானவர்கள் அல்லது சிறியவர்கள் என்பதை உணர்ந்து கொள்வோம்.

யோபு நிச்சயமாகவே ஒரு தேவமனிதனாயிருந்தான். உண்மையில் தேவனே யோபைக் குறித்து சாத்தானிடம் சாட்சி கொடுத்தார் (யோபு 1 : 8). அப்படிப்பட்ட மனிதனாகிய யோபுக்குங்கூட நொறுக்கப்படுதல் தேவை யாயிருந்தது (யோபு 16 : 14). '*தேவன் என் இருதயத்தை மிருதுவாக்குகிறார்*' என்று முடிவாக அவனைக் கூறச் செய்யும்படியாகவே அவர் அவனை நொறுக்கினார் (யோபு 23 : 16 - Eng.).

நமது இருதயத்தில் இருப்பது யாது என்பதை நாம் அறிந்து கொள்ளும்படி ஒரு நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நாம் உடையவர்களாயிருக்கக் கர்த்தர் தாமே நமக்கு உதவி செய்வாராக.

ஏப்ரல் 26

தேவனுக்கு ஒரு சிறுவன் வேண்டும்

"***இங்கே ஒரு பையன் இருக்கிறான்***" (யோவான் 6 : 9).

கர்த்தராகிய இயேசுவைச் சுற்றிலும் திரள்கூட்டமான ஜனங்கள் கூடியிருந்தபோதிலும், அத்திரள் கூட்டத்தினரைப் போஷிக்க வேண்டிய தேவை எழுந்தபோது, அவர்களுக்குக் கொடுப்பதற்கு ஒருவரிடமும் ஒன்றும் இருக்கவில்லை. சீஷர்களுங்கூட அச்சூழ்நிலையைச் சந்திக்க ஆயத்தமில்லாதவர்களாயிருந்ததாகத் தெரிகிறது. ஆனால் அங்கு ஒரு சிறுவன் தன்னிடமிருந்த அனைத்தையும் தியாகம் செய்ய ஆயத்தமா யிருந்தான். அவன் ஐந்து அப்பமும் இரண்டு மீனும் கொண்டுவந்திருந் தான். அவன் அவற்றைக் கர்த்தராகிய இயேசுவிடம் கொடுத்தான். கர்த்தர் தன்னைப் பயன்படுத்திக்கொள்ளத்தக்க வகையில் இந்தத் தனிச்சிறப்பு வாய்ந்த தியாகம் செய்தவன் ஒரு சிறுவனே. உலகில் இலட்சக்கணக்கான மக்கள் ஆவிக்குரிய பசியால் வாடி வருந்துகின்றனர். தங்களுக்குள்ள அனைத்தையும் ஒரு தியாகமாக, பலியாகக் கர்த்தருக்கு அர்ப்பணிக்கும் 'சிறுவர்களையே' கர்த்தர் தேடுகிறார். சிருஷ்டியின் கரத்திலிருந்து சிருஷ்டி கரின் கரத்திற்கு மாற்றப்படும் வாழ்க்கை பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு ஓர் ஆசீர்வாதமாக மாறும்.

'ஐந்து அப்பங்கள்' என்பது ஒரு மனிதனின் ஐம்புலன்களைக் கொண்ட சரீரத்தையும், 'இரண்டு மீன்கள்' என்பது அவனது ஆவியையும் ஆத்துமாவையும் குறிக்கும். அன்பான வாசகரே, உமது ஆவி, ஆத்துமா, சரீரத்தை யாதொரு நிபந்தனையுமின்றி கர்த்தரின் கரங்களில் அர்ப்பணிக்க நீர் மனமுவந்திருக்கிறீரா?

அந்தப் பையன் சுயநலமுள்ளவனாயிருந்து தன்னிடமிருந்த ஆகாரம் முழுவதையும் தானே புசித்திருந்தால், அவனுடைய பசியைக்கூட அது ஆற்றியிருந்திராது. ஆனால் அவை எல்லாவற்றையும் கர்த்தராகிய இயேசுவிடம் அவன் கொடுத்தபோது, அவனுக்குப் பலவிதங்களில் திருப்தி ஏற்பட்டது. மற்றவர்கள் பின்பற்றத்தக்க மாதிரியாக விளங்கிய அவனது கொடுக்கும் சுபாவத்தின் மூலம் கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது என்ற மிகப் பெரிய திருப்தி அவனது தியாகமுள்ள சேவையின் பிரதிபலனாக அமைந்தது.

கர்த்தராகிய இயேசு அந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் பெற்றுக்கொண்டபோது, அவர் அவைகளை ஆசீர்வதித்து, பிட்டு, தமக்கென்று எதையும் எடுத்துக்கொள்ளாமல் சீஷர்களிடம் கொடுத்தார். சீஷர்களும் தங்களுக்கென்று ஒரு சிறு துணிக்கையையாகிலும் வைத்துக்கொள்ளாமல், அவற்றைக் கூடியிருந்த திரளான ஜனங்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார்கள். எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்த பின்னர் பன்னிரண்டு கூடைகள் நிறைய மீதியிருந்ததாக நாம் பார்க்கிறோம். அன்பான வாசகரே, கர்த்தராகிய இயேசுவிலும் அவருடைய சீஷரிலும் இருந்த ஆவி நமக்குத் தேவை. இத்தியாகத்தின் ஆவியானது அனை வரும் - திரள்கூட்டத்தாரும், சிறுவனும், சீஷர்களும், ஏன் கர்த்தராகிய இயேசுவுங்கூட திருப்தியாய்ப் போஷிப்பிக்கப்பட உதவியாயிருந்தது.

'*வாழ்க்கையின் பெரும் சாதனைகள் பெரும் தியாகத்தின் பலனே*'.

ஏப்ரல் 27

ஒரு புதிய வாழ்க்கைமுறைமை

"***இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடை யாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கை யிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள்***" (எபி. 11 : 13).

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வாக்குத்தத்தங்கள், கிறிஸ்துவைப் பற்றிய வாக்குத்தத்தமும், கல்வாரியின் ஆசீர்வாதங்கள் அல்லது புண்ணியங்களும் ஆகும். பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களால் இவற்றை விசுவாசத்தால் தூரத்திலேதான் பார்க்க முடிந்தது. ஆனால் அவ்வாக்குத்தத்தங்கள் அவர்கள் மேல் எவ்வளவு அதிகமான ஆதிக்கம் செலுத்தக் கூடியவையாயிருந்தன! அவர்கள் யாவரும் தாங்கள் இப்பூமியில் அந்நியரும் பரதேசிகளுமென அறிக்கையிட்டுக்கொண்டு விசுவாசத்தில் மரித்தார்கள். அப்படியானால், வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொண்டவர் களாகிய நாம் இப்பூமியில் அந்நியரும் பரதேசிகளுமாக ஜீவிக்க எவ்வளவு அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாயிருக்க வேண்டும்!

ஆபிரகாம் மிகப் பெரியதோர் ஐசுவரியவானாயிருந்தபோதிலும், அவன் கூடாரங்களிலே குடியிருந்து, அந்தக் கூடாரவாழ்க்கையைத் (விசுவாச வாழ்க்கையை) தனது பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக் கும் கற்றுக்கொடுத்தான். ஏன்? தேவன் தாமே கட்டி உண்டாக்குகிற அஸ்திபாரங்களுள்ள ஒரு நகரத்தைக் குறித்து அவனுக்கு ஒரு வெளிப்

படுத்தல் இருந்தது (எபி. 11 : 10). அந்த நகரம், வச்சிரக்கல்லாலான புதிய எருசலேமாகும் என்பது வெளிப்படை. ஆபிரகாம் நித்தியத்தில் புதிய எருசலேமாகிய நகரத்தில் வாசம்பண்ண அழைக்கப்பட்டவனல்ல; ஆனால் அந்நகரத்தைக் குறித்த ஒரு வெளிப்படுத்தல் அவனுக்குக் கிடைத்தபோது, அவன் தன் முதிர்வயதில் தன் தேசத்தையும் இனத்தாரையும் விட்டுப் புறப்பட்டு, கூடாரங்களில் குடியிருக்கக் கூடியவனானான்.

நாம் விசுவாசமுள்ளவர்களாயிருந்தால் அநுதினமும் சாகிறவர்களா யிருப்போம்; மரிப்பது லாபமே என அப். பவுல் கூறுகிறார்.

உயிர்த்தெழுதலின் சரீரம், புதிய எருசலேம், சீயோன் இவற்றைக் குறித்த மகிமையான வாக்குத்தத்தங்களை நாம் விசுவாசத்தால் காணக் கூடியவர்களாயிருப்போமாயின் - நமது வாழ்க்கைமுறைமைக்கு அது எத்தகையதொரு பெரும் மாற்றத்தை உண்டுபண்ணுவதாயிருக்கும்! நமது வாழ்க்கையின் அமைதியைக் குலைக்கும் தேவையற்ற காரியங்களை எவ்வளவு எளிதாக நாம் விட்டுவிடுவோம்! எத்தனை காரியங்களை நாம் ஆதாயமென காண்பதற்குப் பதிலாக, அவற்றை நஷ்டமென எண்ணு வோம்! எத்தனை காரியங்களை நாம் குப்பையென்று வீசி எறிந்து விடுவோம்! 'அருமையானது', 'விலையேறப்பெற்றது' என நாம் இப்போது கருதும் சிலவற்றை எவ்வளவு வித்தியாசமாக மதிப்பிடுவோம்!

கர்த்தரின் இரகசிய வருகை தாமதிக்குமாயின், நாம் விசுவாசத்தில் ஜீவித்து, விசுவாசத்தில் மரிக்க கர்த்தர் தாமே நமக்கு உதவி செய்வாராக.

ஏப்ரல் 28

சமாதானத்தில் மரித்தல்

"***தானியம் ஏற்றகாலத்திலே அம்பாரத்தில் சேருகிறதுபோல, முதிர்வயதிலே கல்லறையில் சேருவீர்***" (யோபு 5 : 26).

இது, தேவனோடு நடக்கும் தேவபிள்ளைகளுக்குரிய மேன்மை யானதொரு வாக்குத்தத்தமாகும். தானியமானது நன்றாய் விளைந்து பக்குவமடைந்ததாயும், உபயோகிக்கத்தக்கதாயும் இருக்கும்போதுதான் அம்பாரத்தில் கொண்டுவரப்படுகிறது. நாம் உபயோகமற்றவர்களாகவும் மற்றவர்களுக்குப் பாரமாகவும் இருக்கும் காலத்தில் அல்ல, அனை வருக்கும் (நம் சத்துருக்களுக்குங்கூட) மிக உபயோகமாகவும், பெரும் ஆசீர்வாதமாகவும் இருக்கும்போதுதான் நாம் மரிக்க வேண்டும்.

ஆபிரகாமுக்குத் தேவன் அளித்த வாக்குத்தத்தத்தைக் கவனியுங் கள்: "*நீ சமாதானத்தோடே (Shalom) உன் பிதாக்களிடத்தில் சேருவாய்; நல்ல முதிர்வயதிலே அடக்கம்பண்ணப்படுவாய்*" (ஆதி. 15 : 15). 'ஷாலோம்' என்ற வார்த்தைக்கு நல்ல ஆரோக்கியம், செழிப்பு, பாதுகாப்பு, இளைப்பாறுதல், சமாதானம், முழுமை முதலிய பல அர்த்தங்கள் உள்ளன. "*நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு; அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம்*" (சங். 37 : 37). இவ்விடத்திலும் 'சமாதானம்' என்பதற்கு 'Shalom' என்ற எபிரெய வார்த்தையே உபயோகிக்கப்பட்டுள்ளது. எனவே தம்முடைய பரிசுத்தவான்கள் சமாதானத்தில் - நல்ல ஆரோக்கியத்தில், இளைப்பாறுதலில், செழிப்பில் - தங்கள் வாழ்க்கையை முடிக்க வேண்டு மென்பதே தேவனுடைய தயவுள்ள சித்தமாகும். செழிப்பு என்பது நம் ஆவிக்குரிய வாழ்க்கை செழித்தோங்குவதும், நாம் ஆரோக்கியமாய் வாழ்ந்திருப்பதும், நம்மில் தேவகிருபை விருத்தியடைவதும், தேவ மகிமைக்காக நம் வாழ்க்கை சுகித்திருப்பதுமாகும்.

தேவனுடைய வாக்குத்தத்தத்தின்படியே, "*ஆபிரகாம் நல்ல நரைவயதிலும், முதிர்ந்த பூரண ஆயுசிலும் பிராணன் போய் மரித்து, தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்டான்*" (ஆதி. 25 : 8) என நாம் வாசிக்கிறோம். இங்கே 'மோசமான நரைவயதில்' என்று கூறப்படாமல், *நல்ல* நரைவயதில் என்று கூறப்பட்டுள்ளது. 'நல்ல நரைவயது' என்னும் அனுபவம், வேதாக மத்தில் அநேக பரிசுத்தவான்களுக்கு அவர்களுடைய வயோதிபத்தைக் குறித்த வாக்குத்தத்தமாய்க் கூறப்பட்டுள்ளது. ஆங்கில வேதாகமத்தில் 'முதிர்ந்த பூரண ஆயுள்' என்பது சாய்வு எழுத்துக்களில் தனிப்படுத்தப் பட்டுள்ளது. எனவே இவ்வசனம், 'ஆபிரகாம் நல்ல நரைவயதில் முதிர்ந்த வனாகப் பூரணமானவனாக மரித்தான்' என மொழிபெயர்க்கப்படலாம். பூரண ஆசீர்வாதங்களுடனும், பூரண கிருபையுடனும், தேவனுடைய பூரண தயவுடனும், பூரண ஆரோக்கியத்துடனும், பூரண ஆவிக்குரிய ஐசுவரியத்துடனும் ஆபிரகாம் மரித்தான்.

அன்பான தேவபிள்ளையே, நீ வியாதிப்பட்டு, பலவீனமடைந்து, மற்றவர்களுக்குப் பாரமாய் மாறிவிடக் கூடும் என்று உன் வருங் காலத்தைக் குறித்து எண்ணிப் பயப்படுகிறாயா? ஆபிரகாம் விசுவாசித் தான். தேவன் அதை அவனுக்கு நீதியாக எண்ணி, தாம் வாக்குத்தத்தம் செய்ததை அவனுக்கு நிறைவேற்றினார். மரியாள் விசுவாசித்தது போல நாமும் விசுவாசிப்போமாக. "*விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும்*" (லூக்கா 1 : 45). உன் விசுவாசத்தின்படியே உனக்கு ஆகக்கடவது. நாம் நம்முடைய வாழ்க் கையைச் சமாதானத்தில் (*ஷாலோமில்*) முடிக்க வேண்டும் என்ற நம் வாஞ்சையைக் கர்த்தர்தாமே நிறைவேற்றுவாராக.

ஏப்ரல் 29

சிறிய பாவங்கள்தானே என்று கவலையீனமாயிராதே!

"**உன் குழந்தைகளைப் பிடித்து, கல்லின்மேல் மோதியடிக்கிறவன் பாக்கியவான்**" (சங். 137 : 9).

ஒரு கல்நெஞ்சன்கூட குழந்தைகளைக் கல்லின் மேல் மோதியடிப்பதை மிகக் கடினமானதாக உணருவான். ஆனால் மிகுந்த கிருபையும் இரக்கமுமுள்ளவரான தேவன் இவ்வாறு செய்பவன் பாக்கியவான், அவன் சந்தோஷமுள்ளவனாயிருப்பான் (Eng.) என்று கூறுவது நமக்கு ஆச்சரியமளிப்பதாக இருக்கிறது.

இவ்வார்த்தைகள் பாபிலோன் குமாரத்திக்கு விரோதமாக உரைக்கப்பட்டவையாகும் (சங். 137 : 8). மகா பாபிலோனானது, "*வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய்*" என அழைக்கப்படுகிறது (வெளி. 17 : 5). பாபிலோன் என்பது, ஒழுக்கநெறிகெட்டவையும் அருவருப்பானவையுமான சகல பாவங்களையும் குறிக்குமானால், பாபிலோன் குமாரத்தி என்பது, **தீ**ட்டுள்ளதும் அசுசியானதுமான சிறிய பாவங்களைக் குறிக்கிறது.

தன் ஜீவியத்திலுள்ள மிகச் சிறியவைப் போல் தோன்றும் பாவங்களையும் ஆராய்ந்தறிந்து, அவற்றைக் கிறிஸ்துவாகிய கற்பாறையின் மீது மோதியடிக்கும் ஒருவன் மகிழ்ச்சியுள்ளவனும், நிச்சயமாகவே பாக்கியவானும் ஆவான். அதாவது இப்பாவங்களைக் (அந்தகாரங்களை) கிறிஸ்துவிடம் (ஒளியினிடம்) கொண்டுவருவதின் மூலம் அவற்றை அழிக்கிறவன் பாக்கியவான்.

"*திராட்சத்தோட்டங்களைக் கெடுக்கிற குழிநரிகளையும் சிறுநரிகளையும் (சிறு பாவங்கள்) நமக்குப் பிடியுங்கள்; நம்முடைய திராட்சத் தோட்டங்கள் பூவும் பிஞ்சுமாயிருக்கிறதே*" (உன். 2 : 15). இந்தச் சிறு நரிகள் வேலியிலுள்ள சிறு துவாரங்களின் வழியாகத் தோட்டத்தினுள் நுழைந்து, பூவும் பிஞ்சுமாயிருக்கிறவைகளைப் புசித்து, திராட்சத்தோட்டத்தைக் கெடுக்கின்றன. வேறு வார்த்தைகளில் கூறின், இந்தச் சிறுநரிகள் அல்லது சிறு பாவங்கள் நமது திராட்சச்செடியை (நமது நற்சாட்சியையும், நமது சந்தோஷத்தையும், சமாதானத்தையும், கிருபையையும்) அழித்துவிடுகின்றன. திராட்சைப் பிஞ்சுகள் அழிக்கப்படும்போது அக்கொடி கனியற்றுப் போகிறது. இந்தச் சிறுநரிகள் தோட்டத்தில் நுழைந்த பின்னர் அவை

சிறியவையாகவே இராமல், சீக்கிரத்திலேயே கொழுத்த நரிகளாய் மாறுவதால், முன்பு தாங்கள் தோட்டத்தினுள் நுழைந்த சிறு துவாரங்கள் வழியாக அவற்றால் வெளியேற முடிவதில்லை. 'எந்தப் பாவமும் சிறியதல்ல. ஒரு கைக்கடிகாரத்தின் இயந்திரத்திற்குள் உட்புகும் எந்தவொரு மண் துகளும் சிறியதல்ல' என ஜெரெமி டெய்லர் என்னும் தேவமனிதர் கூறுகிறார்.

நீ உன் வாழ்க்கையிலுள்ள 'மிகச் சிறிய' பாவங்களிடமும் 'மிகக் கொடூரமாய்' இருந்து, அவற்றைக் 'கிறிஸ்துவாகிய கல்லின் மேல் மோதியடிப்பாயாக'.

ஏப்ரல் 30

கோபம் கொல்லுகிறது

"**கோபம் நிர்மூடனைக் கொல்லும்**" (யோபு 5 : 2).

இது எவ்வளவு உண்மையானது! '*ஆமான் மூர்க்கம் நிறைந்த வனானான்*'; முடிவில் '*தூக்கு மரத்தில் ஆமானைத் தூக்கிப்போட்டார்கள்*' (எஸ்தர் 3 : 5 ; 7 : 10). நீங்கள் மதியீனனான ஒரு ஆமானாயிருக்க வேண்டாம். உங்கள் கோபத்தின் சுருக்கானது உங்கள் கழுத்தைச் சுற்றி விழுந்து அதை இறுக்குமுன் அதை என்றென்றுமாய் அறுத்துவிடுங்கள்.

"*மூர்க்கமானது பட்டயத்தினால் உண்டாகும் ஆக்கினையை வரப்பண்ணும்*" (யோபு 19 : 29). உங்களது கோபத்திற்கான தண்டனையை இப்போது நீங்கள் சந்திப்பீர்கள்; முடிவில் தேவனுடைய நியாயத்**தீ**ர்ப்பு உங்கள் மேல் வரும் (நீதி. 19 : 19).

கோபத்திற்குச் சாக்குப்போக்கே இல்லை என வேதவாக்கியங்கள் கூறுகின்றன. ஏனெனில், "*மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே*" (யாக். 1 : 20). 'நான் கோபங்கொள்ளும்படி மற்றவர்களால் தூண்டப்பட்டேன்', அல்லது 'நான் மிக அதிகமான பாரத்தினால் அழுத்தப்பட்டிருந்தேன்' என்று சிலர் சாக்குப்போக்குகள் சொல்லலாம். பூமியிலேயே மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்த மோசேயைப் பாருங்கள். "*அவர்கள் அவன் ஆவியை விசனப்படுத்தினதினாலே, தன் உதடுகளினால் பதறிப்பேசினான்*" (சங். 106 : 33). தேவன் அவனிடம் மிகக் கண்டிப்பாகச் செயல்பட்டுவிட்டார் - நாற்பது ஆண்டுகளாக இஸ்ரவேலரை வழிநடத்திவந்த அந்த தேவமனிதனுக்கு அந்த நல்ல நாட்டை ஒருவிசை விஜயம் செய்யவும் கூட இயலாமற்போயிற்று!

ஒரு சந்தர்ப்பத்தில் மோசே கோபமடைந்தபோது தேவன் அவனுக்கு அதற்கான ஒரு பரிகாரம் போன்ற ஒன்றைக் கூறினார் - *'கற்பாறையிடம் பேசு'* என்பதே. நீயும் பொறுமையிழக்கும்போது அதற்கான பரிகாரம் அதுவே! நீ கோபத்தினின்று விடுதலை பெறும்படி கர்த்தராகிய இயேசு வாகிய கன்மலையிடம் பேசு (I கொரி. 10 : 4). அந்தோ பரிதாபம்! கற்பாறை யிடம் பேசுவதற்குப் பதிலாக மோசே ஜனங்களிடம் பதறிப்பேசினான். ஒரு தவறான ஆவி உன் மேல் ஆதிக்கம் செலுத்தும்போது நீ தெளிந்த மனதுடன் நிதானமாகப் பேசுவதை எதிர்பார்க்க முடியாது.

கோபமானது வியாதியோடும் துக்கத்தோடும் சம்பந்தமுள்ளதா யிருக்கிறது (பிர. 5 : 17 -Eng.). சமீபத்தில், ஒருவன் மேல் கடுங்கோபங் கொண்டு அவனைப் பிடிக்கும்படி துரத்திச்சென்ற ஒருவன் மாரடைப்பால் மரணமடைந்தான். *"கோபத்தை நெகிழ்ந்து, உக்கிரத்தை விட்டுவிடு; பொல் லாப்புச் செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம்"* (சங். 37 : 8).

சகலமும் தாங்கும் சகலமும் சகிக்கும்
அன்பு ஒழிந்திடாதே.

மே 1

கர்த்தர் மேல் நம்பிக்கையாயிருத்தலின் பாக்கியம்

"ராஜா கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருக்கிறார்" (சங். 21 : 7).

கர்த்தர் மேல் நம்பிக்கையாயிருப்பதன் மூலம் நாம் பெற்றுக் கொள்ளும் ஆசீர்வாதங்களை எடுத்துக்கூறும் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட தொரு வேதபகுதி சங்கீதம் 21 : 6, 7 என நாம் கூறலாம்: *'**அவரை நித்திய மாய் மிக அதிகமாய் ஆசீர்வதிக்கப்பட்டவராக்கியிருக்கிறீர்;** அவரை உம்முடைய **முகத்தின் மகிழ்ச்சியினால் பூரிப்பாக்குகிறீர். ஏனெனில் ராஜா கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருக்கிறார்**'* (Eng.). *'நித்தியமாய்'*, *'மிக அதிகமாய்'* என்னும் பதங்களைக் கவனிக்கவும். கர்த்தரை நம்புகிறவர்கள் - இப்பொழு தும் நித்தியத்திலும் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாவர். இதைக் காட்டி லும் மேலான ஆசீர்வாத பாக்கியத்தை - இதைக் காட்டிலும் நீண்ட காலம் நீடிக்கும் ஆசீர்வாதத்தை ஒருவரும் எதிர்பார்க்க முடியாது. கர்த்தரை நம்புகிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக்கப்படுகிறார்கள். ஆம், அவர் கள் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே! அவர்கள் மகிழ்ச்சியுள்ளவர் களாக்கப்படுகிறார்கள்; ஆம்! அவரது முகத்தின் மகிழ்ச்சியினால் அவர்கள்

மிகவும் பூரிப்பாக்கப்படுகிறார்கள். ஆகையால் *கர்த்தரை நம்புகிறவர்கள் சந்திக்கும் பிரச்சினை எதுவாயிருப்பினும், சுமக்கும் பாரம் எதுவாயிருப் பினும் அவர்கள் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களும், மிகுந்த மகிழ்ச்சியுள்ள வர்களுமாயிருக்கின்றனர்.* மாறாக, கர்த்தர் மேல் நம்பிக்கையாயிராதவர்கள் (ஆனால் மாம்ச புயத்தின் மேல் நம்பிக்கை வைப்பவர்கள்) மிகவும் பரிதபிக்கப்படத்தக்கவர்களும் மிகுந்த துக்கமுள்ளவர்களுமாயிருக்கின்றனர். *"**ராஜா** கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருக்கிறார்"* - உண்மையிலேயே, கர்த்தரை நம்புகிறவர்கள் சாதாரண ஜனங்களல்ல, அவர்கள் ராஜாக்களே!

'யாருடைய மனது உம்மீது தங்கியிருக்கிறதோ, அவனை நீர் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்; ஏனெனில் அவன் உம்மேல் நம்பிக்கையாயிருக்கிறான்' (ஏசாயா 26 : 3 -Eng.). இவ்வசனத்தில் 'கர்த்தரை நம்புவது' என்பதன் ஓர் எளிய விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. கர்த்தரை நம்புவது என்பது, நமது மனது அவர் மேல் தங்கியிருத்தலே ஆகும்.

நோவா கர்த்தரின் கண்களை நோக்கிப் பார்த்ததால் அவன் அவரது இரக்கத்தை அல்லது கிருபையைப் பெற்று, தனது தலைமுறையிலிருந்த அனைவரிலும் மேலானதொரு உத்தமமான ஜீவியம் செய்யக்கூடியவனா யிருந்தான். சிலருக்கு நீதியும், உத்தமமுமான ஒரு ஜீவியம் செய்வது கடினமானதாயிருக்கிறது. அவர்கள் கர்த்தரின் கண்களை நோக்காம லிருப்பதால் அல்லது அவர்கள் அவர் மேல் நம்பிக்கையாயிராததினால் கிருபையில் குறைவுபடுகின்றனர். நமது மனது கர்த்தரிலேயே தங்கி யிருக்கும்போது நாம் நமது வெறுமையையும், தேவனுடைய நிறைவையும் உணரக்கூடிய கிருபையைப் பெற்றுக்கொள்கிறோம். *'தேவன் பெருமையுள்ள வர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்'* (யாக். 4 : 6).

கர்த்தர் மேல் நம்பிக்கையாயிருத்தல், இரக்கத்திற்காகக் கர்த்தரின் கண்களையே நோக்கிக்கொண்டிருத்தல், நமது மனது கர்த்தரின் மேல் தங்கியிருத்தல், நாம் நம்மைத் தாழ்த்துதல் - இவை யாவும் ஏறக்குறைய ஒரே அர்த்தமுள்ளவைகளே.

கர்த்தர் மேல் நம்பிக்கையாயிருப்பதன் மூலம் நாம் பெற்றுக் கொள்ளும் மற்றொரு ஆசீர்வாதம் பூரண சமாதானமாகும். மூல பாஷை யில் 'பூரண சமாதானம்' என்பது *'ஷாலோம் ஷாலோம்'* என்று கூறப் பட்டுள்ளது. ஷாலோம் என்பதன் பொருள், சமாதானம், சுகம், நிறைவு, நல்ல ஆரோக்கியம் முதலியவை ஆகும். நாம் கர்த்தரையே நம்பியிருந் தால் நாம் இரட்டிப்பான (பூரணமான) சமாதானம், நல்ல ஆரோக்கியம் முதலியவற்றை உடையவர்களாயிருப்போம் என்பதே இதன் உண்மை யான பொருளாகும்.

மே 2

பரிசுத்த ஆவியானவரின் முதல் அசைவாடுதல்

"*பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின் மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்*" (ஆதி. 1 : 2).

ஆதியாகமம் 1 : 1 -இல், "ஆதியிலே தேவன்" என்று குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம். ஆகவே 'வானம்' (பரலோகம் -Eng.) என்பதும் கூட அவ்வசனத்தில் காணப்படுகிறது. ஆனால் ஆதியாகமம் 1 : 2, 'தேவன்' என்று அல்ல, 'பூமி' என்று துவங்குகிறது; ஆகவே நாம் அங்கு பரலோகத்தைக் காண்பதில்லை; மாறாக, ஒழுங்கின்மையையும் குழப்பத்தையும், வெறுமையையும், 'ஆழத்தையும்', இருளையுமே நாம் அங்கு காண்கிறோம். ஆகவே பூமிக்குரிய காரியங்களுக்கு முதலிடம் கொடுப்பவர்கள், ஒழுங்கின்மையிலும் இருளிலும் குழப்பத்திலும் வெறுமையிலுமே (இவையெல்லாம் நரகத்தையே சித்திரிக்கின்றன) முடிவடைகிறார்கள் என்பதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை. அன்பான தேவபிள்ளையே, உன் வாழ்க்கையில் தேவன் முதன்மையானவராகவே இருப்பாராக; உன்னுடைய ஜீவியத்தின் ஒவ்வொரு அம்சத்துக்கும் அவரே துவக்கமாக இருப்பாராக. அப்போது நீ பூமியிலேயே பரலோகத்தை அனுபவிக்கலாம்.

முதல் அசைவாடுதல் தேவ ஆவியானவரின் அசைவாடுதலாக இருந்தது என்பதற்காகத் தேவனுக்கு ஸ்தோத்திரம் - முதலாவதாகவும், பிரதானமாகவும் அசைவாடுகிறவராயிருந்தவர் பரிசுத்த ஆவியானவரே. நாம் எதிர்பார்க்கிறபடி எல்லாக் காரியங்களும் ஒழுங்காக இருந்தபோது அல்ல, சகலமும் குழப்பமான நிலையிலிருந்தபோதுதான் பரிசுத்த ஆவியானவர் அசைவாடினார்; வெளிச்சம் இருந்தபோது அல்ல, இருள் இருந்தபோதுதான் அவர் அசைவாடினார்; சகலமும் அனல்கொண்டிருந்தபோது அல்ல, எங்கும் வெறும் குளிர்ந்த தண்ணீர் மட்டுமே இருந்தபோதுதான் அவர் அசைவாடினார்! ஒரு வல்லமையான எழுப்புதலுக்காகக் காத்திருந்து, அதற்காக மன்றாடிக்கொண்டிருக்கிறவர்களுக்கு இது எத்தகையதோர் ஊக்கமளிக்கும் சிந்தனையாயிருக்கிறது!

இதற்கொத்ததொரு வெளிப்படுத்தலைச் சங்கீதக்காரன் நம்மோடு பகிர்ந்துகொள்ளுகிறான் : "*நானோ, ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப் போயிருப்பேன்*" (சங். 27 : 13). அவன் கர்த்தருடைய நன்மையைக் காணவில்லை. எனினும் அதைத் தான் காணப்போவதாக அவன் விசுவாசித்தான். அப்படியில்லாவிடில் அவன் சோர்வுற்று அதைரியமடைந்திருப்பான். அன்பான வாசகரே, நீர் ஒரு எழுப்புதலைக் காணாததினிமித்தம் சோர்வுற்று, அதைரியமடைந்திருக்கிறீரா? திடன்கொள்ளுவீராக, விசுவாசிப்பீராக. நீர் அதைக் கண்டடைவது நிச்சயம்!

மே 3

உங்கள் தரிசனத்தைப் புதுப்பியுங்கள்

"*உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்*" (II பேதுரு 1 : 10).

தானியேலின் புஸ்தகத்தின் இரண்டாம் அதிகாரம் நேபுகாத்நேச்சார் கண்ட விநோதமான ஒரு சொப்பனத்தைச் சித்திரிக்கிறது. தான் கண்ட சொப்பனத்தை அவன் மறந்துபோனான்; அது அவனை அதிகமாகக் கலக்கத்துக்குள்ளாக்கிற்று. அவனுடைய நித்திரை கலைந்தது. தன் சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் தனக்கு அறிவிக்கும்படி அவன் தன்னுடைய ஞானிகளுக்கும் சாஸ்திரிகளுக்கும் கட்டளையிட்டு, அவர்கள் அவ்விதம் செய்யத் தவறினால், துண்டித்துப்போடப்படுவார்கள் என்றும், அவர்களுடைய வீடுகள் எருக்களங்களாக்கப்படும் என்றும் அவர்களை அச்சுறுத்தினான். அவர்களைத் துண்டித்துப்போடுவதாக அவன் மிரட்டினது அவனுடைய பகுதியில் எவ்வளவு விநோதமானதாக இருக்கிறது! அவனுடைய மறதிக்காகக் குற்றஞ்சாட்டப்பட வேண்டியது அவர்களா?

கர்த்தரால் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சொப்பனத்தை அல்லது பரம தரிசனத்தை மறந்துபோகும் அநேக *நேபுகாத்நேச்சார்கள்* இன்றுங்கூட இருக்கின்றனர். பரலோகத்தின் தேவன் அந்த ராஜாவுக்கு ராஜரீகத்தையும் பராக்கிரமத்தையும் வல்லமையையும் மகிமையையும் அருளினார் (தானி. 2 : 37, 38). நம்முடைய தேவன் நமக்கு அதை விட மேன்மையானதொரு ராஜ்யத்தையும் பராக்கிரமத்தையும் வல்லமையையும் மகிமையையும் மகத்துவத்தையும் வாக்குப்பண்ணியிருக்கிறார். பாபிலோனின் ராஜாவினுடைய சொப்பனத்தைக் காட்டிலும் நம்முடைய பரம அழைப்பு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

நாம் நம்முடைய பரம தரிசனத்தை மறந்துபோவோமாயின் நேபுகாத்நேச்சாரைப் போல களங்கமற்றவர்களைத் 'துண்டித்துப்போட' முயற்சிப்போம். அந்த ராஜா உண்மையாகவே தன்னுடைய சொப்பனத்தை

மறந்துபோனான். ஆனால் நவீன *நேபுகாத்நேச்சார்கள்*, தங்களுடைய சொந்தத் திட்டங்களையும் விருப்பங்களையும் நிறைவேற்றும்படியாக, தங்களுடைய தரிசனம் அல்லது அழைப்பைத் தங்களுக்குச் சாதகமான விதத்தில் மறந்துவிடப் பிரயாசப்படுகிறார்கள். நாம் நம்முடைய தரிசனத்தைப் புதுப்பித்து, அதிக தாமதமாகுமுன் நம் பரம அழைப்புக்குச் செவிசாய்த்து அதன்படியே ஜீவிப்போமாக.

அந்த இக்கட்டான சூழ்நிலையில் அத்தேசத்தில் ஒரு தானியேல் இருந்தான்! தேவனுக்கு ஸ்தோத்திரம்! சொப்பனமும் அதின் அர்த்தமும் வெளிப்படுத்தப்படும் வரை அவன் கர்த்தரைக் கருத்தாய்த் தேடினான். அவன் ராஜாவுக்கு அவனுடைய சொப்பனத்தை நினைவுபடுத்தி, அதின் அர்த்தத்தையும் அவனுக்கு அறிவித்து, அதினிமித்தமாக, படுகொலை செய்யப்படுவதினின்று அநேகரைத் தப்புவித்தான். மாம்சத்தோடே வாசம்பண்ணாத (தானி. 2 : 11 -Eng.) - மாம்சத்தை அழித்துப்போட்டிருப்பவர்களான *தானியேல்கள்* நமக்குத் தேவை. அப்படிப்பட்ட பரிசுத்தவான்கள் மட்டுமே தேவஜனங்கள் தாங்கள் இழந்துபோன தரிசனத்தை மறுபடியுமாகப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்கு உதவிசெய்ய முடியும். அவர்கள் மட்டுமே ஆவிக்குரிய உலகினை ஏற்கனவே பயமுறுத்திக் கொண்டிருக்கும் ஆவிக்குரிய அழிவைத் தவிர்க்க முடியும்.

மே 4

ஜெயக்கொடி ஏற்றுவாயாக!

"***வெள்ளம்போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார்***" (ஏசாயா 59 : 19).

மகிமையான பரிசுத்த ஆவியானவரின் ஓர் அதிசயமான ஊழியம் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. சத்துரு தாக்கும்படி வரும்போது, அதுவும் வெள்ளம் போல் திரள் கூட்டமாக அவன் வரும்போது, எதிராளியின் இராணுவத்தை எதிர்க்கும்படி ஒருவன் தன்னுடைய சொந்த இராணுவத்தைப் பலப்படுத்துவது இயல்பு. அப்பொழுது கொடியேற்றுவது பரியாசத்துக்கிடமானதாயிருக்கும். பொதுவாக, சத்துருவின் மேல் ஜெயம் கிடைத்த பின்னரே கொடி ஏற்றப்படும். ஆனால் ஆவிக்குரிய பிரகாரமாக, பரிசுத்த ஆவியானவர் நம்முடைய ஜீவியத்தை ஆண்டு நடத்திக் கொண்டிருப்பாராயின், பிசாசின் வல்லமைகள் நமக்கு விரோதமாக வரும்போது *நாம்* யுத்தஞ்செய்ய வேண்டியதில்லை. ஏனெனில் யுத்த

மானது நம்முடைய இருதயங்களில் சிங்காசனமிட்டு வீற்றிருக்கும் கர்த்தருக்கே உரியதாயிருக்கும். விசுவாசத்தில் உறுதியாக நிற்பதின் மூலமாகச் சத்துருவுக்கு விரோதமாகக் கொடியேற்றுவதில் நாம் கர்த்தரோடு சேர்ந்துகொள்ளுவோமாக. கர்த்தர் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? எரிகோவின் அலங்கம் தகர்ந்து விழுவதற்கு முன் இஸ்ரவேல் ஜனங்கள் ஆரவாரத்தோடே ஜெயத்தின் துதிகளை முழக்கினது போல, நாமும் ஜெயத்தைக் காணும் முன்பே விசுவாசத்தின் மூலம் துதிகளை முழக்கலாம். "*அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும், அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும்*" (சங். 149 : 8).

பிசாசு சர்வவல்லமையுள்ளவன் அல்ல; ஆனால் தேவனோ சர்வவல்லமையுள்ளவர். உலகத்திலிருக்கிறவனிலும் நம்மில் இருக்கிறவர் பெரியவர் (I யோவான் 4 : 4).

சத்துரு வெள்ளம் போல் வரும்போது ஜெயக்கொடி ஏற்றப்படும்படி பரிசுத்த ஆவியானவரின் வல்லமைக்குள்ளேயே நாம் ஜீவிப்போமாக.

மே 5

"விசுவாசத்தினாலே ... சேதமாகாதிருந்தாள்"

"***விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படியாதவர்களோடேகூடச் சேதமாகாதிருந்தாள்***" (எபி. 11 : 31).

என்னவோர் விசுவாசம்! நாம் நம்மை ராகாபின் இடத்தில் வைத்துப் பார்ப்போம். தேசத்தின் சத்துருக்கள் (அந்நிய தேசத்திலிருந்து வந்த இரண்டு வேவுகாரர்) பட்டணத்தை வேவுபார்க்க வருகிறார்கள். அப்படிப்பட்ட வேவுகாரரை நாம் எவ்விதம் சமாதானத்தோடு ஏற்றுக்கொள்ள முடியும்? மேலும், ராகாபின் வீடு அலங்கத்தின் மேல் இருந்தது. எரிகோவின் அலங்கம் இடிந்து விழுமேயாயின், முதலாவது விழுந்து நாசமடைவது ராகாபின் வீடாகவே இருந்திருக்கும். அவள் அவ்வளவு ஆபத்தான சூழ்நிலையில் இருந்தாள். எப்படிப்பட்ட பயங்கரமான சோதனை!

இயற்கையான ரீதியில் பார்க்கும்போது நம்முடைய சோதனைகளில் சில இந்த வேவுகாரர்களைப் போல் மிகவும் ஆபத்தானவையாக உள்ளன; ஆனால் விசுவாசம் அவைகளைச் சமாதானத்தோடே வரவேற்கிறது.

அதன் முடிவான பலன் என்ன? கர்த்தராகிய இயேசு இந்த ராகாபின் வம்சத்தில் பிறந்தார். நம்முடைய மிகப் பெரிய சோதனைகளை நாம் விசுவாசத்தினால் வரவேற்போமாயின், கர்த்தர் அவைகளை மிகப் பெரிய ஆசீர்வாதங்களாக மாற்றுவார்.

"*விசுவாசத்தினாலே ... சேதமாகாதிருந்தாள்* (அழிந்துபோகாதிருந்தாள் -Eng.)" - விசுவாசம் இல்லாமையால் ஜனங்கள் அழிந்துபோகிறார்கள். இங்கே, விசுவாசமானது, பலம் வாய்ந்த பாழாக்குகிறவர்களை மெய்யான பாதுகாவலர்களாக மாற்றிற்று.

ராகாபின் ஆச்சரியமான விசுவாசத்தைக் குறித்துப் பேசுமிடத்து வேதவசனம், அவளை 'ராகாப் என்னும் வேசி' என்று குறிப்பிடுவது கவனிப்பதற்குச் சுவாரஸ்யமாக உள்ளது. அவளுடைய பெயருக்குக் கொடுக்கப்பட்டுள்ள அடைமொழியிலிருந்து, அவள் பட்டணத்திலிருந்த முதன்மையான அவிசுவாசிகளில் ஒருத்தி என்றும், மிக மோசமான பாவிகளில் ஒருத்தி என்றும் நாம் காணலாம். ஆகவே அவிசுவாசி களுடன் சேர்ந்து அழிக்கப்படுபவர்களுள் அவளே முதன்மையானவளாக இருந்திருக்க வேண்டும். ஆயினும், அவளுடைய பாவங்கள் மன்னிக்கப் படக் கூடும் என்றும், தேவன் அவள் மேல் இரக்கம் பாராட்டக் கூடும் என்றும் அவளுக்கிருந்த விசுவாசம், அழிவிலிருந்து இரட்சிக்கப்பட அவளுக்கு உதவிசெய்தது. "*கர்த்தர் உங்களுக்கு தேசத்தை ஒப்புக்கொடுத் தாரென்றும், உங்களைப்பற்றி எங்களுக்குத் திகில்பிடித்திருக்கிறதென்றும், உங்களைக்குறித்து தேசத்துக் குடிகள் எல்லாரும் சோர்ந்துபோனார்க ளென்றும் அறிவேன்*" (யோசுவா 2 : 9, 10) என்று அவள் கூறுகிறாள். ராகாபினுடைய இந்த அறிக்கையின் வார்த்தைகள் அவளிலிருந்த விசுவாசத்தைக் காட்டுகின்றன.

அன்பான வாசகரே, நீர் மிக மோசமான பாவியாக அல்லது பின்மாற்றக்காரராக இருந்தாலுங்கூட, கர்த்தரை விசுவாசித்து உம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு, அவருடைய இரக்கத்துக்காக அவரிடம் திரும்புவீராயின், உமக்கு நம்பிக்கை உண்டு.

மே 6

கீழ்ப்படுத்துவதிலுள்ள இரகசியம்

"***தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி ... ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்***" (ஆதி. 1 : 28).

குழந்தை பிறப்பதற்கு முன்னதாகவே பெற்றோர் அதற்குத் தேவையான எல்லாவற்றையும் ஆயத்தப்படுத்திவைப்பது போல, மனித னுக்குத் தேவையான எல்லாவற்றையும் அவனைச் சிருஷ்டிப்பதற்கு முன்னதாகவே தேவன் சிருஷ்டித்துவிட்டார். தேவனுடைய மகிமைக் காகவும் மனிதனுடைய உபயோகத்துக்காகவும் சகலமும் சிருஷ்டிக்கப் பட்டன. ஆனால் தேவ மகிமை மனிதனை விட்டு விலகியபோது, தேவன் சிருஷ்டித்தவைகளை அவன் தவறாக உபயோகிக்கவும் துர்ப்பிரயோகம் செய்யவும் ஆரம்பித்தான். (உதாரணமாக, திராட்சப் பழச்சாறு புளிக்க வைக்கப்பட்டு மதுபானமாக மாற்றப்படுகிறது). ஆகவே முள்ளும் குருக்கும் முளைத்தெழும்ப ஆரம்பித்தன. மோசமானதும் கசப்பானது மான காரியங்கள் மனிதனில் பிரவேசித்தபோது, மற்ற சிருஷ்டிகளிலும் கூட மோசமான, கசப்பான காரியங்கள் பிரவேசித்தன. நாம் நல்லவர் களாகவோ அல்லது மோசமானவர்களாகவோ மாறும்போது, நம்மைச் சுற்றியுள்ள யாவரும் அதற்கேற்றவாறு மாறுவதாக நாம் காண்போம்.

மேற்காணும் வசனத்தில் 'நிரப்புதல்' என்பதற்கு உபயோகிக்கப் பட்டுள்ள ஆங்கிலப் பதம் (replenish), 'மறுபடியும் நிரப்புதல்' (refill) என்று பொருள்படும். பூமியானது குடியேற்றப்பட்டிருந்த ஒரு சமயம் இருந்தது என்பதை இது குறிக்கிறது. [தூதர்கள் முதலாவது பூமியில் இருந்தனர் - அவர்கள் ஏதேனில் இருந்தனர் (எசே. 28 : 13).] சில தூதர்கள் பெருமை யினிமித்தமாக விழுந்துபோயினர்; அதினிமித்தம் முழுப் பூமியும் ஒழுங் கின்மையும் வெறுமையுமாய் மாறிற்று. ஆனால் தேவன் பூமியை மறுபடியுமாக நிரப்ப விரும்பினார். 'கீழ்ப்படுத்தி' என்பது பொல்லாத வல்லமைகள் (விழுந்துபோன தூதர்களின் வல்லமைகள் என்பது தெளிவு) ஏற்கனவே பூமியில் இருந்தன என்பதையும் அவைகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் குறிக்கிறது. '*பூமியை நிரப்பி அதைக் கீழ்ப் படுத்துங்கள்*' - கீழ்ப்படுத்துவதிலுள்ள இரகசியம் மீண்டும் நிரப்புவதிலேயே தங்கியுள்ளது.

நம்முடைய இருதயங்கள் எப்பொழுதுமே தேவ அன்பினாலும் கிருபையினாலும் நிரப்பப்பட்டதாக, மீண்டும் மீண்டும் நிரப்பப்பட்டதாக இருக்க வேண்டும். இல்லையெனில், அது பகையினாலும் கசப்பினாலும் நிரப்பப்பட்டுவிடும். நம்முடைய இருதயங்கள் பரவசமடைந்து, பரலோக சுபாவத்தினால் நிரப்பப்படும்போது, நாம் பாவம், சாத்தான், உலகம் ஆகிய வற்றைக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றின் மீதும் ஆளுகை உள்ளவர்களா யிருக்கலாம்.

மே 7

"உன் வாயை விரிவாய்த் திற"

"உன்னை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே; உன் வாயை விரிவாய்த் திற, நான் அதை நிரப்புவேன்" (சங். 81 : 10).

தேவன் நம்மை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதை நினைவு கூர்ந்து நாம் அவரைத் தொழுதுகொள்ளும்படியாகவும் ஜெபம்பண்ணும் படியாகவும் நமது வாயை விரிவாகத் திறப்பதிலுள்ள ஆசீர்வாதங்களை இங்கே சங்கீதக்காரன் மிகவும் தெளிவாகக் கூறுகிறான். வேறு வார்த்தை களில் கூறின், நமது வாய் கட்டப்பட்டிருந்தால், நாம் இன்னும் எகிப்து தேசத்திலேயே கட்டப்பட்டிருக்கிறோம் என்பதை அது புலப்படுத்தும். ஜெபிக்கும்படியாகவும் தேவனைத் துதித்துப் புகழும்படியாகவும் தங்கள் இருதயத்தையும் வாயையும் திறக்கிறவர்கள், எகிப்தின் அடிமைத்தனத் தினிலிருந்து (பாவத்திலிருந்து) விடுதலையாக்கப்படுவார்கள்.

"*என் ஜனமோ என் சத்தத்துக்குச் செவிகொடுக்கவில்லை; இஸ்ரவேல் என்னை விரும்பவில்லை. ஆகையால் அவர்களை அவர்கள் இருதயத்தின் கடினத்திற்கு விட்டுவிட்டேன்; தங்கள் யோசனைகளின்படியே நடந்தார்கள்*" (சங். 81 : 11, 12) - இவ்விதம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் சம்பவித்ததைப் போலவே இன்றும் இவ்விஷயத்தில் - அதாவது ஜெபிப் பதற்காகவும், தேவனைத் தொழுதுகொள்ளுவதற்காகவும் தங்களுடைய இருதயத்தையும் வாயையும் விரிவாகத் திறக்கிற விஷயத்தில் - சிலர் தேவனுடைய சத்தத்திற்குச் செவிகொடுப்பதில்லை. தங்கள் வாயைத் திறவாமலிருந்த ஜனங்களுக்குச் சம்பவித்தது என்ன? அவர்கள் தங்கள் யோசனைகளின்படியே நடக்கும்படி தேவன் அவர்களை அவர்களது இருதயத்தின் கடினத்திற்கு ஒப்புக்கொடுத்துவிட்டார். நாம் நம்மைத் தேவனுக்கென்று மனப்பூர்வமாய் ஒப்புக்கொடுக்காதவர்களாய், ஜெபிப்பதற் காகவும், தேவனைத் தொழுதுகொள்ளுவதற்காகவும் நம் வாயைத் தாராளமாகத் திறக்க விருப்பமற்றிருந்தால், நாம் தேவசித்தம் செய்யக் கூடாதவர்களாயிருப்போம்.

"*ஆ, என் ஜனம் எனக்குச் செவிகொடுத்து, இஸ்ரவேல் என் வழிகளில் நடந்தால் நலமாயிருக்கும்! நான் சீக்கிரத்தில் அவர்கள் எதிராளிகளைத் தாழ்த்தி, என் கையை அவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாகத் திருப்புவேன்*" (சங். 81 : 13, 14) - தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நாம் நமது வாயைத் திறந்து ஜெபித்து தேவனைத் துதிப்பதின் மூலம் உண்டாகிற

மற்றொரு ஆசீர்வாதம், நமது சத்துருக்கள் தேவனால் தாழ்த்தப்படுவதை நாம் காண்பதாகும். மேலும், ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரிய மாயிருந்தால், அவனுடைய சத்துருக்களும் அவனுடைய சிநேகிதராக மாறுவார்கள் (நீதி. 16 : 7).

"*உச்சிதமான கோதுமையினால் அவர்களைப் போஷிப்பார்; கன்மலையின் தேனினால் உன்னைத் திருப்தியாக்குவேன்*" (சங். 81 : 16) - வாயையும், இருதயத்தையும் திறந்து தேவனைத் துதித்து மகிமைப்படுத்து வதினால் உண்டாகும் ஆசீர்வாதங்கள்தான் எத்தனை! அதினிமித்தம் ஆவிக்குரிய சிறந்த ஆகாரமாகிய ***உச்சிதமான கோதுமையையும்*** *கன் மலையின் தேனையும்* நாம் பெற்றுக்கொள்கிறோம். கன்மலை இப்பூமியில் உள்ள கடினமான பொருட்களுள் ஒன்றாகும்; தேனானது இப்பூமியில் உள்ள மிக இனிமையான பொருட்களுள் ஒன்றாகும். நாம் மிகக் கடின மான - மிகவும் கஷ்டமான பாதைகளின்ஊடாகக் (கன்மலை) கடந்து போகும்போது தேவன் அதை மிகவும் இனிமையான அனுபவமாக (தேன்) மாற்றிவிடுவார்.

எனவே தேவன் தமது மிகச் சிறந்தவைகளால் நம்மை நிறைக்கும் படியாக, நாம் நமது இருதயத்தையும் வாயையும் விரிவாகத் திறந்து அவரைத் தொழுதுகொள்ளவும், ஸ்தோத்திரிக்கவும், அவரை நோக்கி ஜெபிக்கவும் வேண்டாமோ?

மே 8

உங்கள் உடன்படிக்கைகளுக்கு எதிரான பயமுறுத்தல்கள்

"உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்" (I யோவான் 2 : 17).

உங்கள் தேவனோடு நீங்கள் செய்த உடன்படிக்கைகளில் நீங்கள் உறுதியாக இருக்கும்போது, நீங்கள் தேவனுக்காகவும் தேவனுடைய ஜனங் களுக்காகவும் வல்லமையான காரியங்களைச் செய்த சிம்சோனைப் போல இருக்கிறீர்கள். தேவன் சிம்சோனோடு செய்திருந்த உடன்படிக்கையின்படி, சவரகன் கத்தி அவன் தலையின் மேல் படலாகாது. சிம்சோன் அந்த உடன்படிக்கையில் உறுதியாக இருந்த வரை, அவன் ஒரு வல்லமையுள்ள தேவமனிதனாக இருந்தான். ஆனால், அந்தோ பரிதாபம்! அவன்

தெலீலாள் தன் மேல் ஆதிக்கம்செலுத்த இடங்கொடுத்ததினிமித்தமாக அந்த உடன்படிக்கையை முறித்து, அதன் விளைவாக மிகப் பரிதாப கரமான விதத்தில் மரிக்க வேண்டியதாயிற்று.

'சிம்சோன்' என்பதற்கு, 'சூரியனைப் போன்றவன்' என்று பொருள். சூரியன் என்பது நீதியின் சூரியனாகிய நம்முடைய கர்த்தராகிய இயேசுவைக் குறிக்கும். சிம்சோனைப் போல நாமும் சூரியனைப் போன்ற வர்களாக அதாவது நமது ஆண்டவராகிய இயேசுவைப் போன்றவர்களாக இருக்கும்படியாகவே அழைக்கப்பட்டிருக்கிறோம். தெலீலாள், உலகத்திற்கு அல்லது உலக சிற்றின்பங்களுக்கு நிழலாட்டமாயிருக்கிறாள். 'தெலீலாள்' என்ற பதத்தின் பொருள், 'பெலனற்றது' (delicate) என்பதாகும். நிலையற்று மாய்ந்துபோகும் உலக சிற்றின்பங்கள், தேவனோடு நாம் செய்திருக்கும் உடன்படிக்கையின் அஸ்திபாரத்தினையே இரகசியமாக அழித்துவிடு கின்றன. அப்படிப்பட்டவர்களின் முடிவு, சிம்சோனின் முடிவைப் போலவே மிகவும் பரிதபிக்கப்படத்தக்கதாயிருக்கும். எனவே ஒரு சிறிய உலக சிற்றின்பமாகிலும் நமது வாழ்க்கையில் பிரவேசியாமலிருக்க நாம் எல்லாச் சிரத்தையும் எடுத்துக்கொள்வோமாக!

சில வேளைகளில் நாம் உடை அணியும் விதம், நம் நடக்கை, நாம் மற்றவர்களோடு பழகுகிற விதம் இவற்றின் மூலமாக வஞ்சக மான ஏதோ ஒரு 'தெலீலாள்' நமக்குள் நுழைவதற்கு நாம் இடங்கொடுத்து, நமது ஆவிக்குரிய வாழ்க்கையைப் பாழாக்கிப்போடக் கூடும். உனது தனிப்பட்ட வாழ்க்கையில் உன் தேவனோடு நீ செய்திருக்கிற உடன் படிக்கைகளை உடைக்க முற்படுகிற 'தெலீலாள்' எது அல்லது யார் என்பதை நீ இன்றே கண்டுபிடிப்பாயாக. அந்தத் 'தெலீலாளை' நீ முற்றிலும் அழித்து, அதை ஒரேயடியாக என்றைக்குமாய் ஒழித்துவிடுவாயாக!

'லோக மேன்மை ஒன் றும் வேண்டாம்
என் றும் இயேசு போதும்
இச்சையும் லோகமும் ஒழிந்துபோம்
உம்மைச் சேர்வேன் என் றும் நிற்பேன்'.

மே 9

தூய இருதயத்தினின்று பிறக்கும் ஜெபங்கள்

"வேறொரு தூதனும் வந்து, தூபங்காட்டும் பொற்கலசத்தைப் பிடித்துப் பலிபீடத்தின் படியிலே நின்றான்; சிங்காசனத்திற்கு

முன்பாக இருந்த பொற்பீடத்தின்மேல் சகல பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தும்படி மிகுந்த தூபவர்க்கம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது" (வெளி. 8 : 3).

இங்கு கூறப்பட்டுள்ள பலிபீடம், தூபபீடம் இவை யாவும் பூமிக்குரிய ஆசரிப்புக்கூடாரத்திற்குரியவையாயிருப்பினும், இது ஒரு பரலோகக் காட்சியே ஆகும். தூதன் நின்றுகொண்டிருந்ததாகக் குறிப் பிடப்பட்டிருக்கும் பொற்பீடமானது பரலோகத்தின் பரிசுத்த ஸ்தலத்திலி ருந்த தூபபீடமாக இருக்கலாம். இந்தத் தூபபீடத்தோடு சம்பந்தப்பட்டவை அனைத்தும் பசும்பொன்னினால் செய்யப்பட்டவையாயிருக்கின்றன என்பது கவனிக்கத்தக்கது. இந்தத் தூபபீடம் பசும்பொன்னினால் செய்யப் பட்டிருந்தது; தூபவர்க்கமும் பொற்கலசத்திலேயே வைக்கப்பட்டிருந்தது.

மேற்கூறப்பட்டிருக்கும் தூபபீடம் பசும்பொன்னினால் செய்யப் பட்டிருத்தல், தூய்மையான (பொன்னான) இருதயத்திலிருந்து வெளிப்படும் ஜெபம், ஸ்தோத்திரம் இவற்றைக் குறிக்கிறது. உண்மையான தூய இருதயத்தி லிருந்து ஜெபிக்கிற ஒவ்வொரு தேவனுடைய பரிசுத்தவானும் தேவ னுடைய பார்வையில் ஒரு பொற்கலசமாய்த் திகழ்கிறான். (கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்ட ஒவ்வொரு தேவபிள்ளையும் ஒரு பரிசுத்த வான் என்றே அழைக்கப்படுகிறான் - I கொரிந்தியர் 1 : 2 காண்க).

"அப்படியே பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தப்பட்ட தூபவர்க்கத்தின் புகையானது ... தேவனுக்குமுன்பாக எழும்பிற்று" (வெளி. 8 : 4). ***சுத்த இருதயத்திலிருந்து எழும்பும் ஜெபங்களைத் தேவன் விசேஷித்த மதிப்பிற்குரியவையாகக் கருதுகிறார் - உண்மையாகவே அவை மிகவும் வல்லமை வாய்ந்தவை - மிகவும் சக்திவாய்ந்த பூமிக்குரிய எந்த ஆயுதத் தையும் காட்டிலும் அவை மிகவும் அதிக பலம் வாய்ந்தவை.*** தூய வாழ்க்கை இல்லாத ஒரு ஜெப ஜீவியம், கர்த்தராகிய இயேசுவினால் சபிக்கப்பட்ட கனியற்ற அத்திமரம் போன்றதே - அதிகமான இலைகள் (ஜெபங்கள்), ஆனால் கனியோ (பலன்) இல்லை - இது உண்மையில் ஒரு மாயமாலமா யிருக்கிறது. எனவே நம் ஜெபங்கள் தூய்மையான இருதயத்திலிருந்து எழும்புகின்றனவா என்பதை நாம் நிச்சயப்படுத்திக்கொள்வோமாக!

மே 10

அன்பினால் கீழ்ப்படிவதற்கான சோதனை

"ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" (ஆதி. 2 : 17).

மனிதனுடைய அன்புடன் கூடிய கீழ்ப்படிதலைச் சோதிக்கும்படி தேவன் தோட்டத்தில் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தை வைத்து விட்டு, அவன் அதைப் புசிக்கக் கூடாது என்று கட்டளையிட்டார். மற்றெல்லாச் சிருஷ்டிகளையும் போலல்லாது, மனிதன் பொறுப்புணர் வுள்ள ஒரு சிருஷ்டியாகச் சிருஷ்டிக்கப்பட்டான். தேவன் அவனுக்குச் சுயாதீன சித்தத்தை அல்லது தனக்கென்று தானாகவே எதையும் தெரிந்து கொள்ளும் ஞானத்தைக் கொடுத்து, அவன் மனப்பூர்வமாகத் தனது முழு இருதயத்தோடும் தம்மைச் சேவிக்க வேண்டும் என்று விரும்பினார். தேவன் அவனை ஒரு கணிப்பொறியைப் (Computer) போல உண்டாக்கி யிருந்திருக்கலாம். அதாவது, மனிதனுக்குள் ஏற்கனவே கீழ்ப்படிதலை ஏற்படுத்தி வைத்திருந்திருக்கலாம். ஆனால் மனிதன் ஒரு இயந்திர மனிதனாயிருப்பதை (robot) அவர் விரும்பவில்லை; எல்லா விதங்களிலும் அவன் சுயாதீனமுள்ளவனாகக் காணப்பட வேண்டுமென அவர் விரும்பி னார். இவ்வாறு அவன் சிருஷ்டிப்பின் கிரீடமாயிருக்கிறான்.

"*அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்*" - பிரியமானவர்களே, இந்த மரணம் ஆவிக்குரிய பிரகாரமாகவும் சரீரப்பிரகாரமாகவும் பொருந்தும். மனிதன் விருட்சத்தின் கனியைப் புசித்த நாளில்தானே அவனுடைய ஆத்துமா மரித்துப்போனது - அதாவது தேவன் அவனுக்குத் தந்திருந்த நித்திய ஜீவனை அவன் இழந்துவிட்டான். தேவனுடைய வசனத்தின்படி, அவன் பாவஞ்செய்த அந்நாளிலேயே அவன் சரீரப்பிரகாரமாகவும் மரித்துவிட்டான். ஏனெனில் தேவனுடைய பார்வையில் ஆயிரம் வருஷம் ஒரு நாளைப் போலவும், ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும் இருக்கிறது (II பேதுரு 3 : 8). மொத்தத்தில், ஆதாம் *ஒரு நாள்* (அதாவது ஆயிரம் வருஷம்) கூட ஜீவிக்கவில்லை.

அருமையான வாசகரே, நாம் மனப்பூர்வமாக நம் தேவனைச் சேவித்து, அன்புடன் கீழ்ப்படிதலுக்கான சோதனையில் ஜெயம்பெற்றவர் களாவோமாக! நாம் தோற்றுப்போவோமாகில், நாம் சந்திக்க வேண்டியது நிச்சயமாக மரணமே!

மே 11

உயிர்த்தெழுவதற்கென்று புறக்கணிக்கப்படுதல்

"வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று" (சங். 118 : 22).

நம்முடைய கர்த்தராகிய இயேசு இவ்வுலகில் ஜீவித்தபோது, புறக்கணிக்கப்படுதலின் பாதையானது, அவருடைய பிறப்பிலேயே

துவங்கி அவருடைய மரணம் வரை நீடித்தது. "*அவர் தமக்குச் சொந்த மானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை*" (யோவான் 1 : 11); '*அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவருமாயிருந்தார்*' (ஏசாயா 53 : 3). அருமை யான தேவபிள்ளையே, உன்னுடைய ஆண்டவரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றக்கூடிய 'சிலாக்கியத்தை' நீயுங்கூட கிடைக்கப் பெறலாம்.

ஒன்று, நீ புறக்கணிக்கப்படுதலைச் சரியான ஆவியில் (கிறிஸ்துவின் ஆவியில், பாடலுடனும், களிகூருதலுடனும்) எடுத்துக்கொள்ளலாம்; அல்லது நீ தேவனைச் சபித்து, முறுமுறுத்து, உன்னைப் புறக்கணித்த வர்களைக் குறித்து முறையிட்டுக்கொண்டிருக்கலாம்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில், தேவனுடைய பிள்ளைகள் தாங்கள் புறக்கணிக்கப்படுவதாக உணரும்போது, புலம்பி, முறையிட்டு, சுய அனுதாபத்துக்கு இடங்கொடுத்து, தங்களுடைய துயரத்துக்கு மற்றவர் களைக் குறைகூறுகின்றனர். அப்படிப்பட்டவர்கள் கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகையில் கடைசியான புறக்கணிப்பில் முடிவடைவார்கள். ஆனால் நாம் மனுஷரால் புறக்கணிக்கப்படும்போது களிகூரக் கற்றுக் கொள்வோமாகில், உயிர்த்தெழுதலின் மகிமைக்கு நேராக அது நம்மை வழிநடத்தும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது நாம் உயிர்த் தெழுவோம் அல்லது எடுத்துக்கொள்ளப்படுவோம். புறக்கணிக்கப்படுதல் மகிமையான உயிர்த்தெழுதலுக்கு நேராக நம்மை வழிநடத்துகிறது. புறக்கணிக்கப்பட்ட கல்லே (கர்த்தராகிய இயேசு) மூலைக்கல்லா யிற்று. இந்த மூலைக்கல்லுடன் இணைந்துகொள்ளும் கற்களுங்கூட அக் கல்லிற்கு இருக்கும் அதே தன்மைகளை உடையவையாக இருக்க வேண்டும்.

அன்பான தேவபிள்ளையே, இப்பொழுது நீ ஒரு புறக்கணிப்பின் பாதையினூடாகச் சென்றுகொண்டிருக்கக் கூடும். அது மிகவும் வேதனை யளிப்பதாகவும், அச்சூழ்நிலை தொடர்ந்து நீடித்துக்கொண்டிருப்பதாகவும் உனக்குத் தோன்றக் கூடும். ஆனால் உன்னுடைய புறக்கணிக்கப்படு தலின் பாதை உயிர்த்தெழுதலுக்கு நேராக உன்னை வழிநடத்துகிறது என்பதை நீ உணருகிறாயா? கிறிஸ்துவினிமித்தம் நீ எவ்வளவதிகமாகப் புறக்கணிக்கப்படுகிறாயோ, அவ்வளவதிகமாகப் '*பிரியமானவருக்குள் அங்கீகரிக்கப்படுவாய்*' (எபே. 1 : 6-Eng.). நீ மகிமைக்கு உயர்த்தப்படும் நாள் நிச்சயமாகவே வெகுதூரத்தில் இல்லை.

மே 12

இன்றே அந்த நாள்!

"***இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய்***" (லூக்கா 23 : 43).

கிறிஸ்து "***இன்றைக்கு***" என்று குறிப்பிட்டு இரட்சிப்பின் வார்த்தையைப் பேசினார். ஆம், இரட்சிப்பு என்பது எப்பொழுதுமே 'இன்றைய தினத்துக்கு' உரியதாக இருக்கிறது. "*அநுக்கிரக காலத்திலே நான் உனக்குச் செவிகொடுத்து, இரட்சணியநாளிலே உனக்கு உதவிசெய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே; இதோ, இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணிய நாள்*" (II கொரி. 6 : 2). "*ஆகையால், பரிசுத்தஆவியானவர் சொல்லுகிறபடியே: **இன்று** அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், ... உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள். ... சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள். உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, **இன்று** என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்*" (எபி. 3 : 7 - 13).

தேவபிள்ளையே, கர்த்தர் உன்னோடு கூட பேசும்போது உடனே நீ அதற்குச் செவிகொடுத்துச் செயலாற்றுவாயாக. கர்த்தராகிய இயேசு சகேயுவிடம், "இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும்" என்று கூறினார்; அவன் ***சீக்கிரமாய்*** இறங்கிவந்து, சந்தோஷத்தோடே அவரை ஏற்றுக்கொண்டான்! (லூக்கா 19 : 5, 6). கர்த்தராகிய இயேசு அவனை நோக்கி, "இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது" என்று கூறினார். கர்த்தராகிய இயேசு ***இன்று*** உன்னுடைய ஜீவியத்துக்குள் வர விரும்புகிறார். நீ இன்றே துரிதமாக அவரையும் அவருடைய ஆசீர்வாதங்களையும் ஏற்றுக்கொள்வாயாக.

சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த, மனந்திரும்பிய கள்ளனுக்கு மனந்திரும்புவதற்கென்று அதையல்லாமல் வேறு சந்தர்ப்பங்கள் இருக்கவில்லை. ஆனால், 'இன்று' என்னப்படுமளவும் உனக்கும் எனக்கும் அப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அபிஷேகம் பெற்ற தேவ ஊழியர் ஒருவரின் கைகளில் நீ முழுக்கு ஞானஸ்நானம் பெற்று, காத்திருந்து அந்நிய பாஷைகளில் பேசும் அடையாளத்துடன் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்வாயாக. அப்போஸ்தலப் பிரதிஷ்டையுள்ள தேவ ஊழியர்களால் நடத்தப்படும் பரிசுத்த ஆவியைப்

பெற்ற ஒரு சபையில் சேர்ந்து, தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்த ஜீவியம் செய்வது எப்படி என்பதை நீ கற்றுக்கொள்வாயாக. அப்பொழுது மீட்கப்பட்ட திரள் கூட்டமான ஜனங்களோடு சேர்ந்து நீயும் நம்முடைய மகிமையான மீட்பரை உயர்த்தும் துதிகளைப் பாடிக்கொண்டிருப்பாய்.

மே 13

தேவசித்தத்தின் மையம்

'ஒருவன் ஒரு உத்திரத்தை வெட்டி விழுத்துகையில் கோடரி தண்ணீரில் விழுந்தது; அவன்: ஐயோ என் ஆண்டவனே, அது இரவலாக வாங்கப்பட்டதே என்று கூவினான். தேவனுடைய மனுஷன் அது எங்கே விழுந்தது என்று கேட்டான்; அவன் அந்த இடத்தைக் காண்பித்தபோது, ஒரு கொம்பை வெட்டி, அதை அங்கே எறிந்து, அந்த இரும்பை மிதக்கப்பண்ணினான்' (II இராஜா. 6 : 5, 6).

கோடரியானது கைப்பிடியிலிருந்து கழன்றுவிடுமாயின், அதினால் அதின் உரிமையாளனுக்கு யாதொரு பயனுமிராது. தேவபிள்ளையே, நீயே அந்தக் கோடரி. நீ கைப்பிடியோடு சேர்ந்து அதைப் பற்றியிருக்கும் வரை மட்டுமே - நீ தேவசித்தத்தின் மத்தியில் தங்கியிருக்கும் வரை மட்டுமே - எஜமான் உபயோகிக்கத் தகுதியான கருவியாக இருப்பாய். எந்தவொரு ஊழியத்துக்கும் ஒரு நபரைத் தெரிந்தெடுக்கும்போது, கர்த்தர் எப்பொழுதுமே தம்முடைய சித்தத்தைச் செய்யக்கூடிய ஒருவனையே தேடினார். ஒரு முறை அவர், '*நான் என் உள்ளத்துக்கும் என் சித்தத்துக்கும் ஏற்றபடி செய்யத்தக்க உண்மையான ஒரு ஆசாரியனை எழும்பப்பண்ணுவேன்*' (I சாமு. 2 : 35) என்று கூறினார். அவர் தாவீதைக் கண்டுபிடித்தபோது, "*ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்; எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான்*" (அப். 13 : 22) என்று கூறினார்.

கைப்பிடியிலிருந்து உடைந்துபோன கோடரி உபயோகமற்றதாயிருப்பது மட்டுமல்ல, அது அபாயகரமானதுமாகும்; அது எளிதாக ஒருவரை வெட்டவோ அல்லது கொல்லவோ கூடும். அன்பான வாசகரே, இது எந்த விதத்திலாவது உம்மோடு பேசுகிறதா? முரட்டாட்டம்பண்ணி தேவசித்தத்துக்கு விரோதமாகச் செல்லுதல் அபாயகரமானது.

இங்கு, கோடரியானது தண்ணீருக்குள் விழுந்தது. தேவபிள்ளையே, நீ கலங்கின தண்ணீருக்குள் விழுந்திருக்கிறாயா? நீ இரட்சிப்பின்

சந்தோஷம், உன்னுடைய மனச் சமாதானம், கர்த்தர் பேரில் உனக்கிருந்த ஆதி அன்பு ஆகியவற்றை இழந்திருக்கக் கூடும். கோடரியை இழந்தவன், அதைத் தான் ஒருபோதும் திரும்ப பெற்றுக்கொள்ள முடியாது என்றே எண்ணியிருந்திருப்பான் என்பது வெளிப்படை. நீயுங்கூட அதைப் போன்ற ஒரு நிலையிலிருக்கக் கூடும். நீ இழந்துபோன ஆவிக்குரிய அனுபவங்களை ஒருபோதும் உன்னால் திரும்பப் பெற்றுக்கொள்ள முடியாது என்று நீ எண்ணிக்கொண்டிருக்கக் கூடும். அதைரியப்படாதே. உன் தேவனால் கூடாத காரியம் ஒன்றுமே இல்லை. நீ எழுந்து தேவ சித்தத்தின் மையத்துக்குத் திரும்ப வருவாயாக.

மே 14

உன்னுடைய மனதை ஆளுகை செய்

"***பட்டணத்தைப் பிடிக்கிறவனைப்பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்***" (நீதி. 16 : 32).

நம்முடைய எண்ணங்கள் அல்லது சிந்தையை நாம் எவ்விதம் தூய்மையாகவும் சுத்தமாகவும் காத்துக்கொள்ளலாம்? முதலாவதாக, ஒரு அர்த்தத்தில், நம்முடைய **தீய** கிரியைகளைக் காட்டிலும் நம்முடைய **தீய** எண்ணங்களே அதிக பாவமுள்ளவையாகவும், அபாயகரமானவை யாகவும் இருக்கின்றன என்பதை நாம் உணர வேண்டும். அப். பேதுரு மாயவித்தைக்காரனாயிருந்த சீமோனிடம், "*ஆகையால் நீ உன் துர்க் குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம்*" (அப். 8 : 22) என்று கூறுகிறார். சீமோன் பரிசுத்த ஆவியின் அபிஷே கத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று வாஞ்சித்தான். ஆனால் அதன் மூலம் தான் ஜீவனம்பண்ணும்படியான ஆதாயத்தைப் பெற்றுக்கொள்வதே அவனுடைய உள்நோக்கமாயிருந்தது. இந்தத் தவறான எண்ணத்தையே 'துர்க்குணம்' என்று அப். பேதுரு குறிப்பிடுகிறார்.

நம்முடைய தவறான எண்ணங்களைக் குறித்து நாம் ஆழ்ந்த சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புவது ஏன்? சகல எண்ணங்களும் தேவனால் நியாயந்தீர்க்கப்படுவதினாலேயே! (பிர. 3 : 17). நம்முடைய ஒவ்வொரு எண்ணத்தைக் குறித்தும் நாம் தேவனுக்குக் கணக்கொப்புவிக்க வேண்டும். நம்முடைய தேவன் ஒரு 'இரகசியமான இடத்தில்' வசிக்கிறார்; அந்த இரகசிய இடத்தில் நாமும் அவரோடு கூட

ஜீவிக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார் (சங். 91 : 1-Eng.). அதற்காக நம்மிடத்தில் யாதொரு இரகசிய பாவமும் இருக்கலாகாது.

பரிசுத்தமாக்கப்படாத எண்ணங்கள் உங்கள் மனதில் உட்பிர வேசிக்க முயற்சிக்கும்போது, தேவகிருபையினால் அவைகளைத் தள்ளி விடுங்கள். வெகுவிரைவிலோ அல்லது தாமதமாகவோ நீங்கள் அதே பிரச்சினையை அல்லது அதைப் போன்ற ஒரு சோதனையை மீண்டும் சந்திக்கக் கூடும். மறுபடியும், தேவகிருபையினால் அதற்கு விரோதமாகப் போராடுங்கள். இவ்வாறு நல்ல போராட்டத்தைப் போராடி வெற்றி பெறுகிற ஜீவியமே ஜெயஜீவியம் என்று அழைக்கப்படுகிறது; ஒரு ஜெய ஜீவியம் செய்யும்படியாகவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். நாம் பாவ சிந்தனைகளுக்கு இடங்கொடாமலிருப்போமாக.

நம் சிந்தை எந்த அளவுக்குப் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறதோ, அதைப் பொறுத்தே நம்முடைய வளர்ச்சியும் இருக்கும். "*அவன் இருதயத் தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்*" (நீதி. 23 : 7). நீங்கள் பிசாசைப் போல் சிந்திப்பீர்களாயின், நீங்கள் உண்மையில் பிசாசைப் போல இருப்பீர்கள். நீங்கள் கிறிஸ்துவைப் போன்று சிந்திப்பீர் களென்றால் கிறிஸ்துவைப் போன்று இருப்பீர்கள்.

மே 15

கொலைபாதகத்தின் ஆவியாகிய கோபம்

"***காயீனுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி, அவன் முகநாடி வேறு பட்டது***"; "***காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி, அவனைக் கொலைசெய்தான்***" (ஆதி. 4 : 5, 8).

உங்களுடைய முகம் (முகநாடி) வேறுபடும்போது, எச்சரிக்கை யாயிருங்கள் - ஒரு கொலைபாதகத்தின் ஆவி உங்களுக்குள் பிரவேசித்து, நீங்கள் உங்கள் சொந்த சகோதரனையோ அல்லது சகோதரியையோ கொல்லும்படி உங்களை வழிநடத்தக் கூடும்!

அன்பான தேவபிள்ளையே, நீ கோபங்கொண்டு, கலக்கமடைந்து, உன்னுடைய முகம் மாறுபடும்போது, '*தேவனுடைய நாமம் புறஜாதி களுக்குள்ளே உன் மூலமாகத் தூஷிக்கப்படுகிறது*' என்பதை நீ உணரு கிறாயா? மூர்க்கம் என்பது கொலைபாதகத்தின் ஆவியாயிருக்கிறது

என்பதை தேவபிள்ளைகள் பலரும் உணர்ந்துகொள்ளாமலிருக்கிறார்கள். இந்தப் பொல்லாத ஆவி சவுலுக்குள் பிரவேசித்தபோது அவன் களங்க மற்றவனாயிருந்த தாவீதைக் கொல்ல விரும்பினான் (I சாமு. 18 : 8, 11). ஏரோது தன்னுடைய மிகுந்த கோபத்தில், இரண்டு வயதுக்குட்பட்ட ஆயிரக்கணக்கான குழந்தைகளைக் கொலை செய்தான் (மத். 2 : 16). பார்வோன் இஸ்ரவேலர் பேரில் எரிச்சலடைந்து, கடுங்கோபங்கொண்டு, அவர்களுக்குப் பிறந்த ஆண்பிள்ளைகளையெல்லாம் கொலை செய்தான் (யாத். 1 : 22).

யாக்கோபின் குமாரராகிய சிமியோனும் லேவியும் சீகேமியரோடு கடுங்கோபங்கொண்டபோது, அவர்கள் தங்கள் கோபத்தைத் தங்கள் இருதயங்களில் மறைத்துவைத்து, புறம்பே அவர்களோடு சிநேகமுள்ள வர்கள் போல தங்களைக் காட்டிக்கொண்டார்கள்; அவர்கள் தங்களோடு விவாக உறவு கொள்வதற்கான ஆலோசனையை அவர்களுக்குக் கூறு மளவிற்கு அவர்களிடம் நட்புறவு கொண்டவர்களைப் போல அவ்விரு வரும் தங்களைக் காண்பித்துக்கொண்டனர். ஆயினும், சில நாட்கள் கழித்து, அவர்களுக்கு ஒரு தக்க தருணம் கிடைத்தபோது, அந்த தேசத்திலுள்ள ஆண்களையெல்லாம் அவர்கள் படுகொலை செய்தனர். [இருதயத்தில் ஆத்திரத்தையும் கசப்பையும் வைத்துக்கொண்டு, புறம்பே தேவபக்தியுள்ளவர்கள் போலவும் சிநேகமுள்ளவர்கள் போலவும் பாவனை செய்தலே கோபத்தின் மிக மோசமான வடிவம் என நாம் கூறலாம்]. அவர்களுடைய மூர்க்கம் அவ்வளவு வெறுக்கத்தக்கதாயிருந்ததினிமித்தம் அவர்களுடைய சொந்த தகப்பனே தன் மரணப்படுக்கையில் அவர்களை ஆசீர்வதிப்பதற்குப் பதிலாக, "*அவர்களுடைய பட்டயங்கள் கொடுமையின் கருவிகள். ... அவர்கள் தங்கள் கோபத்தினாலே ஒரு புருஷனைக் கொன்று, தங்கள் அகங்காரத்தினாலே அரண்களை நிர்மூலமாக்கினார்களே. உக்கிர மான அவர்கள் கோபமும் கொடுமையான அவர்கள் மூர்க்கமும் சபிக்கப் படக்கடவது; யாக்கோபிலே அவர்களைப் பிரியவும், இஸ்ரவேலிலே அவர் களைச் சிதறவும்பண்ணுவேன்*" (ஆதி. 49 : 5 - 7) என்று கூறினான்.

அன்பான வாசகரே, பிசாசின் ஆவியாகிய கோபம் உம்மையும் உம் மூலமாக மற்றவர்களையும் அழிக்கும் வரை நீர் காத்துக்கொண்டிருக்க வேண்டாம். நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்துடன் தேவ னிடம் விரைந்து செல்லுவீராக. தேவன் தம்முடைய இரக்கத்தினால் ஒரு நிலைவரமான (சரியான -Eng.) ஆவியை உம் உள்ளத்திலே புதுப்பிக்க வல்லவராயிருக்கிறார் (சங். 51 : 10). கோபத்தினால் உம்முடைய முகம் கறுத்துப்போவதற்குப் பதிலாக, அது கிருபையோடு கூட மகிமையாக மாற்றப்படுவதாக.

மே 16

கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தின் கவர்ந்திழுக்கும் வல்லமை

"***முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்***" (எபே. 2 : 13).

ஒரு அர்த்தத்தில், கிறிஸ்துவின் இரத்தத்துக்கு இவ்வுலகிலேயே மிகப் பெரிய காந்த சக்தி இருக்கிறது என நாம் கூறலாம். ஒரு காந்தம் ஒரு இரும்புத் துண்டைத் தன்பால் இழுத்துக்கொள்வது போல, கர்த்தராகிய இயேசுவின் இரத்தம் ஒரு பாவியை அவரிடம் இழுத்துக்கொள்ளுகிறது. [ஒரு காந்தமானது, ஒரு இரும்புத் துண்டைத் தன்பால் இழுத்துக்கொள்ளக் கூடும்; ஆனால் அக்காந்தமானது அந்த இரும்புத் துண்டை ஒரு காந்தமாக மாற்றுவதில்லை. கிறிஸ்துவின் இரத்தமோ, ஒரு பாவியை அவரிடமாக இழுத்துக்கொள்ளக் கூடியதாயிருப்பது மட்டுமல்லாமல், அந்தப் பாவியை ஒரு பரிசுத்தவானாக மறுரூபப்படுத்தவும் வல்லமை யுள்ளதாயிருக்கிறது].

நீங்கள் மெய்யாகவே உங்கள் பாவங்களெல்லாவற்றையும் குறித்து மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பி கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்படும் போது, உங்களைக் கர்த்தருக்கு மிகவும் அருகாமையில் கொண்டுவரக் கூடிய வல்லமை அந்த இரத்தத்துக்கு உண்டு - "*கிறிஸ்துவின் இரத்தத்தி னாலே சமீபமானீர்கள்*".

தேவசமுகத்தில் ஜீவித்தல் என்பது, தேவன் எப்பக்கமும் உங்களைச் சூழ்ந்திருப்பதாக நீங்கள் உணருதலே ஆகும் - நீங்கள் ஏதாவது தவறாகப் பேச விரும்பினால், தேவன் உங்கள் வாயை மூடுவதை நீங்கள் உண்மையாகவே உணருகிறீர்கள். நீங்கள் உங்கள் கையை நீட்டி தேவனைத் தொடக்கூடிய அளவுக்கு அவர் உங்களுக்கு அவ்வளவு அருகில் இருப்பதாக நீங்கள் உணருகிறீர்கள். அவர் அவ்வளவு உண்மைப்பொருளாகவும் உங்களுக்கு மிகவும் அருகிலிருப்பவராகவும் மாறிவிடுகிறார். வெளிப்படையான தேவ சமுகம் அல்லது உங்களோடு மிகவும் நெருங்கியிருக்கும் தேவசமுகத்தைக் குறித்து 139 -ஆம் சங்கீதம் மிகவும் அழகாகக் கூறுகிறது. தாவீது, "*என் நாவில் சொல் பிறவாததற்கு முன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர். முற்புறத்திலும் பிற்புறத்திலும் நீர் என்னை நெருக்கி, உமது கரத்தை என்மேல் வைக்கிறீர். இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு*

எட்டாத உயரமுமாயிருக்கிறது" (வச. 4 - 6) என்று கூறுகிறான். வெளிப் படையான தேவசமுகத்தில் ஜீவித்தல் அப்படிப்பட்ட ஒப்புயர்வற்ற அனுபவமாகும். எண்ணங்களுங்கூட, அவை இன்னும் தூரத்திலிருக்கை யிலேயே பரிசோதிக்கப்படுகின்றன. இந்தத் தேவசமுகத்தில் பரிபூரண ஆனந்தமும் நித்திய பேரின்பமும் உண்டு.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம், நாம் இந்த நேர்த்தியான அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கும் அளவுக்கு நம்மைத் தேவனிடம் அவ்வளவு நெருங்கிச் சேரப்பண்ணும் வல்லமையுள்ளதாயிருக்கிறது. வேறு வார்த்தைகளில் கூறின், கர்த்தராகிய இயேசுவின் இரத்தம் நம்முடைய வார்த்தைகள், கிரியைகள், எண்ணங்கள், கற்பனைகள் முதலியவை உட்பட நம் ஜீவியத்தின் ஒவ்வொரு நரம்பிழையும் ஒவ்வொரு க்ஷணப்பொழுதும் தேவசமுகத்தினால் வழிநடத்தப்படவும் ஆளுகை செய்யப்படவும் உதவிசெய்யும். கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தில் எப்படிப்பட்டதோர் ஆச்சரியமான வல்லமை அடங்கியிருக் கிறது! பரிசுத்த தூதர்களாலுங்கூட இதை விளங்கிக்கொள்ள இயலாது.

கர்த்தராகிய இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் மூலம் கிடைக்கக்கூடிய இந்த மகிமையான அனுபவத்தை நாம் உரிமைகோரு வோமாக. அதன் வல்லமை ஒருபோதும் அற்றுப்போவதில்லை; அதன் வல்லமை ஒரு போதும் வீணாகப்போவதில்லை. கிறிஸ்துவின் இரத்தத்தி லுள்ள வல்லமைக்காக நாம் நித்தியம் முழுவதும் துதித்துக்கொண்டிருப் போம்!

இரத்தத்தின் பலனால் வாழுவேன் சொர்க்கத்தில்
கோடிகோடி யுகங்களாக!

மே 17

உன்னை நீயே ஏமாற்றிக்கொள்ளாதே!

'***மதுபானம் இரத்தவருணமாயிருக்கும்போது நீ அதைப் பாராதே***'
(நீதி. 23 : 31).

மது அருந்தும் சிலர், அப். பவுல் I தீமோத்தேயு 5 : 23 - இல் குறிப் பிட்டுள்ள வார்த்தைகளைத் தங்களுக்குச் சாதகமாக எடுத்துக்கொண்டு, கொஞ்சம் மதுபானம் (wine - Eng.) வயிற்றுக்கு நல்லது என்று கூறுகின்றனர். ஆனால் அதற்கு முந்தின வசனத்தைக் கவனியுங்கள் (வச. 22). அதில், "*உன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொள்*" என்று எழுதப்பட்டுள்ளது.

இங்கு உபயோகப்படுத்தப்பட்டுள்ள 'wine' என்னும் பதத்துக்கு மூலபாஷை யில் கொடுக்கப்பட்டுள்ள வார்த்தையின் பொருள் 'சுத்தமான திராட்சப் பழச்சாறு' என்பதாகும். (தயவு செய்து யங் என்பவரின் ஆங்கில வேதாகம அகராதியில் (Young's Concordance) சரிபார்த்துக்கொள்ளவும்). மதுபானத்தை (விருப்பத்தோடு) பார்த்தலே பாவமென்று வேதவாக்கியம் மிகத் தெளி வாகக் கூறும்போது, அதில் ஒரு துளியேனும் அருந்துவது எவ்வளவு அதிக பாவமாயிருக்கும்!

தன் ஜீவியத்தில் ஒவ்வொரு காரியத்திலும் தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமென்று உண்மையாக வாஞ்சித்த தேவபிள்ளை ஒருவர் இருந்தார். அவருடைய பிறந்த தினத்தன்று அவருடைய மகள் ஒரு கேக்கை அவருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தாள். அவர் அதைக் கொஞ்சம் சுவைத்துப்பார்த்தபோது, ஒரு குறிப்பிட்ட சதவீதத்துக்கு அதில் மது சேர்க்கப்பட்டிருந்ததை உணர்ந்தார். ஆயினும், தன்னுடைய மகளைத் துக்கப்படுத்த மனமற்றவராக, அவர் அதில் கொஞ்சம் சாப்பிட்டு, அதன் மீதிப் பகுதியைக் குளிர்சாதனப் பெட்டியில் வைத்தார். அன்றிரவு அவர் ஒரு சொப்பனம் கண்டார். அந்தச் சொப்பனத்தில் அவர் பரலோகத்துக்குச் சென்றார். பரலோகத்தின் நுழைவாயிலில் அவர் சுங்க இலாகா பரிசோதனையைக் கடந்து செல்ல வேண்டியதாயிருந்தது. சுங்க இலாகா அதிகாரி அவருடைய பெட்டியைத் திறந்து, அதில் ஒரு பெரிய மதுபானப் புட்டி இருக்கக் கண்டு, ஒரு சிறைச்சாலையைச் சுட்டிக் காண்பித்து, 'அதுதான் உன்னுடைய இடம்' என்று கூறினார். அதோடு அத்தேவ பிள்ளை விழித்துக்கொண்டார். அந்தக் கேக்கில் மது சம்பந்தப்பட்ட பொருள் கலந்திருந்ததை அறிந்திருந்தும் அதை உட்கொண்டதினால் அவர் குற்றம் புரிந்திருப்பதாகக் கர்த்தர் அப்பொழுது அவருக்கு உணர்த்தி னார். உடனே அவர் மனஸ்தாபப்பட்டு, கர்த்தர் தன்னை மன்னிக்கும்படி மன்றாடி, அந்தக் கேக்கை வீசியெறிந்துவிட்டார். பிற்காலங்களில் அவர் ஒரு மேன்மையான தேவ மனிதனாக விளங்கினார்.

அன்பான தேவபிள்ளையே, உன்னை நீயே ஏமாற்றிக்கொள்ளாதே. ஒருவேளை, உன்னுடைய வீட்டில் மது கலந்து செய்யப்பட்ட ஒரு கேக் இல்லாமலிருக்கலாம்; ஆனால் ஒரு மதுபானப் புட்டியோ, ஒரு தொலைக்காட்சிப் பெட்டியோ, சில நாவல் புத்தகங்களோ அல்லது உலகப்பிரகாரமான சில பத்திரிகைகளோ இருக்கக் கூடும். அப்படிப்பட்ட பரிசுத்தமில்லாத பொருள் ஏதாகிலும் உன்னுடைய வீட்டில் இருந்தால், நீ பரலோகத்தைச் சென்றடைவதை அது தடைசெய்து விடாதவாறு இப்பொழுதே மனந்திரும்பி, உண்மையான மனஸ்தாபத்துடன் அதை உன் வீட்டை விட்டு அகற்றிவிடுவாயாக.

மே 18

பாவத்தின் சாபம்

'இப்பொழுது இந்தப் பூமியிலிருந்து நீ சபிக்கப்பட்டிருப்பாய். நீ நிலத்தைப் பயிரிடும்போது, அது தன் பெலனை இனி உனக்குக் கொடாது; நீ பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பாய்'
(ஆதி. 4 : 11, 12 -Eng.).

தேவன் காயீனின் ஆள்தத்துவத்தைச் சபிக்காமல், அவன் நிலத்தைப் பயிரிடும்போது பூமியானது தன்னுடைய விளைச்சலைக் கொடுக்காதவண்ணம், 'நீ பூமியிலிருந்து சபிக்கப்பட்டிருப்பாய்' (Eng.) என்று அவனுக்குத் **தீ**ர்ப்பு கூறினார். ஒரு பாவியின் கைகளில் இருக்கிற பொருள் சம்பந்தமான செழிப்பு மிகவும் அபாயகரமானது. ஆகவே தேவன் தம்முடைய இரக்கத்தில் அதை ஒரு எல்லைக்குட்படுத்துகிறார். மதுபானத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் ஒருவனது கைகளில் ஐசுவரியம் இருக்குமாயின், அது அவனுடைய சொந்த ஆரோக்கியத்தையும் மற்றவர் களுடைய நலனையும் அழித்துவிடக்கூடும்.

பூமிக்கு ஒரு 'பெலன்' உண்டு. அது மனிதனுக்குச் செழிப்பு, ஆரோக்கியம் போன்ற பெலனைக் கொடுக்கிறது. 'பெலன்' என்னும் பதம் மூலபாஷையில் 'வல்லமை' என்றும் அர்த்தமுள்ளதாயிருக்கிறது. (பாவி களுக்குச் சிலவேளைகளில் ஐசுவரியங்கள் இருந்தாலும், பயம், சுகவீனம் போன்றவற்றினிமித்தம் அவர்களால் அவற்றை உண்மையாக அனுபவிக்க முடியாது) பாவமானது, ஒரு பாவியிடமிருந்து ஆரோக்கியம், ஐசுவரியங் கள் ஆகியவற்றின் வல்லமையைப் பிடுங்கிக்கொள்ளுகையில், ஒரு பரிசுத்தவானோ, தேவனுடைய ராஜ்யத்துக்கென்றும் தேவமகிமைக் கென்றும் இந்த எல்லா ஆசீர்வாதங்களையும் உரிமைபாராட்டக்கூடிய வனாயிருக்கிறான். அல்லேலூயா!

"*நீ பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பாய்*" - இப்பொழுது காயீன் ஒரு கொலைபாதகனாக, பொய் சொல்லுகிறவனாக, தேவனுக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறவனாக மாறிவிட்டதால், மனந்திரும்புவதற் கென்று அவனுக்கு ஒரு வாய்ப்பு தேவைப்பட்டது. அவன் ஓரிடத்தில் சமாதானமாகத் தங்கியிருக்கத்தக்கதாக நிலைவரப்பட்டிருந்தால், பரலோகத் தைப் பற்றிய சிந்தை சற்றும் இல்லாதவனாக ஜீவித்திருப்பான். ஆனால் இப்பொழுது அவனுடைய ஜீவியம் நிலைவரப்படுத்தப்படாததாக இருப்ப தால், அவன் முடிவாக நிலைவரப்பட்டு, சமாதானமாக இருக்கக்

கூடிய ஓர் இடத்தை அதாவது பரலோகத்தைத் தேட வேண்டிய தாயிருக்கிறது. மூலபாஷையில் 'நிலையற்று அலைகிறவன்' என்பது 'அலைந்து திரிந்து அழுது புலம்புகிறவன்' என்ற அர்த்தமுள்ளதாய் இருக்கிறது. நாம் எவ்வளவதிகமாகப் பாவஞ்செய்து நம்முடைய இருதயங் களைக் கடினப்படுத்துகிறோமோ, அவ்வளவதிகமாகப் பாடுகளும் தண்டனையும் நமக்குக் கிடைக்கும்; தேவன் பக்கமாகத் திரும்புவது நமக்கு இன்னும் அதிகக் கஷ்டமாகவும் இருக்கும்.

மே 19

நீங்கள் வீட்டைப் பற்றிய ஏக்கங்கொண்டிருக்கிறீர்களா?

"தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப் போவதற்கு அவர்களுக்குச் சமயங்கிடைத்திருக்குமே" (எபி. 11 : 15).

ஆபிரகாம் தன்னுடைய தேசத்தை விட்டுவிட்டபோது, அவன் அதைத் தனது மனதிலும் விட்டுவிட்டான். ஆனால், லோத்தின் மனைவி சோதோமை விட்டபோது, அவள் அதைத் தன் இருதயத்திலிருந்து விட்டு விடவில்லை. ஆகவே அவள் திரும்பிப்பார்த்து உப்புத்தூண் ஆனாள்.

'தேசம்' என்கிற வார்த்தை ஆங்கில வேதாகமத்தில் சாய்வு எழுத்துக் களில் குறிப்பிடப்பட்டுள்ளதைக் கவனிக்கவும். ஆகவே நாம் இந்த வேத பகுதியை, '*தாங்கள் விட்டுவந்ததை நினைத்தார்களானால்*' என்று வாசிக்க லாம். நாம் நம்முடைய தேசத்தை மட்டுமல்லாது, நம்முடைய கர்த்தர் விட்டுவிடச் சொல்லும் எதையும் விட்டுவிட வேண்டும் என்பதே இதன் பொருளாகும். நாம் எழுத்தின்படியாக அதை விட்டுவிட்டாலுங்கூட அது நம்முடைய இருதயத்தில் இருக்கக் கூடும். சிலர் தாங்கள் விட்டுவிட்ட குடிப்பழக்கம், புகைபிடித்தல் போன்ற **தீ**யபழக்கங்களுக்குச் சில காலம் கழித்து மறுபடியுமாகச் சென்றுவிடுகின்றனர். அவர்கள் அவற்றைத் தங்கள் இருதயத்தில் பேணி வைத்துக்கொண்டிருந்திருக்கக் கூடும்; அதினிமித்த மாகவே அவர்கள் ஒரு சோதனையைச் சந்தித்தபோது, அதற்கு இணங்கி ஒப்புக்கொடுத்துவிட்டார்கள். ஆகவே, கர்த்தர் நம்மை விட்டுவிடும்படி கூறுவது எதுவாயிருப்பினும், விசுவாச வீரர்கள் செய்தது போல நாம் அதை நம்முடைய இருதயத்திலிருந்தும் மனதிலிருந்தும் விட்டுவிட வேண்டும்.

"*அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பி னார்கள்*" (வச. 16) - அவர்கள் ஒரு மேன்மையான தேசத்தை விரும்பின

படியால், தங்கள் சொந்த தேசத்துக்குத் திரும்பிப் போக வேண்டுமென்ற விருப்பம் அவர்களுக்கிருக்கவில்லை. 'அவர்கள் பரலோகத்துக்கென்றே ஜீவித்துக்கொண்டிருந்தார்கள்' என்று Living Bible கூறுகிறது. நாம் பரலோகத் துக்கென்றே ஜீவித்தால், நம்முடைய இருதயம் பரலோகமாயிருக்கும். பரலோகத் துக்குச் செல்லும் வழியெல்லாம் நமக்குப் பரலோகமாகவே இருக்கும்.

உனக்குப் பரலோகம் ஒரு 'மேன்மையான தேசமாக' இருந்தால், நீ பூமியிலிருக்கும்போது அந்த 'வீட்டை நினைத்து ஏக்கங்கொள்ள வேண் டும்'. தேவபிள்ளையே, உன்னுடைய பரலோக வீட்டை அடைய நீ ஏக்கங் கொண்டிருக்கிறாயா? கர்த்தர் நமக்காக '*அழியாததும் மாசற்றதும் வாடாதது மாகிய சுதந்தரத்தை*' ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறார் (I பேதுரு 1 : 4). ஆகவே பூமிக்குரியவைகளையல்ல, மேலானவைகளையே நாடுவாயாக.

மே 20

கர்த்தராகிய இயேசுவிடம் செல்லத் துணிவுகொள்வாயாக

"***ஆண்டவரே! நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும்***" (மத். 14 : 28).

படவில் பன்னிரண்டு சீஷர்கள் இருந்தபோதிலுங்கூட அப். பேதுரு வுக்கு மட்டுமே கடுமையான காற்றையும் தண்ணீரையும் தைரியமாக எதிர்த்து கர்த்தராகிய இயேசுவிடம் செல்ல வேண்டுமென்ற ஆவல் இருந்தது. அவ்வாறே, அநேகர் கர்த்தராகிய இயேசுவால் சந்திக்கப்பட்டு அவருடைய அன்பான கிருபையையும் அதிசயமான வல்லமையையும் அறிந்திருந்தாலுங்கூட, வெகு சிலரே அப். பேதுருவைப் போல அவரிடம் செல்வதற்குத் துணிவுள்ளவர்களாயிருக்கின்றனர். தாங்கள் கர்த்தராகிய இயேசுவிடம் செல்வதைத் தவிர்க்க சமுத்திரத்தின் கொந்தளிப்பையோ, அலைகளின் மூர்க்கத்தையோ மற்றவர்கள் சாக்குப்போக்காகச் சொல்லக் கூடும்.

மெய்யான கிறிஸ்தவ ஜீவியம் என்பது 'தண்ணீரின் மேல் நடக்கும்' ஜீவியமே அன்றி, அது ஒரு படவில் சொகுசாக யாத்திரை செய்வதோ அல்லது கடற்கரையில் இன்பமாகச் சற்று இளைப்பாறுகிற ஜீவியமோ அல்ல. ஆம், காற்றும் அலைகளும் மூர்க்கமாயிருந்தாலும், அவை யெல்லாவற்றையும் எதிர்த்து நாம் கர்த்தராகிய இயேசுவிடம் செல்ல வேண்டும் என்று அவர் நம்மைக் குறித்து விரும்புகிறார். பேதுரு கர்த்தராகிய இயேசுவிடம், "*நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும்*" என்று கூறியபோது, ஆண்டவருக்கு அது எவ்வளவு சந்தோஷமாக இருந்திருக்கும். அதற்குக் கர்த்தராகிய இயேசு கொடுத்த பதில் இனிமையாகவும், சுருக்கமாகவும் இருந்தது. அது, "வா" என்பதே. படவை விட்டு இறங்க அப். பேதுரு தாமதிக்கவில்லை; அவர் கர்த்தராகிய இயேசுவிடம் செல்லும்படி 'ஜலத்தின்மேல் நடந்தார்'.

சில தேவபிள்ளைகள் ஜலத்தின் மேல் நடக்காமலேயே கர்த்தராகிய இயேசுவிடம் செல்ல விரும்புகின்றனர். 'ஜலங்கள்' என்பது, சோதனைகள், கஷ்டங்கள், பாவம் செய்வதற்கான தூண்டுதல்கள் ஆகியவற்றைக் குறிக்கின்றன. இவற்றை மேற்கொள்ளாமல் நாம் ஒருபோதும் கர்த்தராகிய இயேசுவிடம் செல்ல முடியாது.

அப். பேதுரு ஜலத்தில் நடக்கவில்லை; அவர் ஜலத்தின் மேல் நடந்தார். அன்பான தேவபிள்ளையே, நீ பாவத்தில் நடப்பாயானால் உன்னால் ஒருபோதும் கர்த்தராகிய இயேசுவிடம் செல்ல முடியாது. கர்த்தராகிய இயேசு ஜலத்தின் மேல் நடந்து, நாமுங்கூட பாவங்களிலும், சோதனைகளிலும், பரீட்சைகளிலும் அமிழ்ந்துபோகாமல் அவற்றின் மேல் நடக்கக் கூடும் என்பதற்கு ஒரு மாதிரியைக் காண்பித்தார். சாவுக் கேதுவான இந்தச் சரீரத்தில் ஜீவிக்கையில், பாவத்தை நம் பாதங்களுக்குக் கீழாக்கிக்கொண்டு அதன் மேல் நடத்தல் அல்லது பாவத்தை மேற்கொண்டு ஜீவித்தல் என்பது மெய்யாகவே தேவகிருபையினால் சாத்தியமே. கர்த்த ராகிய இயேசு ஜலத்தின் மேல் நடந்தது இந்தச் சத்தியத்துக்கு நிழலாட்ட மாயிருந்தது. அப். பேதுருவைப் போல கர்த்தராகிய இயேசுவிடம் செல்ல நாமுங்கூட துணிவுகொள்வோமாக!

மே 21

பரிசுத்த வழி

"***அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்; தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை. அங்கே சிங்கம் இருப்பதில்லை; துஷ்டமிருகம் அங்கே போவதுமில்லை, ... கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக் களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும்***" (ஏசாயா 35 : 8 - 10).

பரிசுத்த வழியின் ஆசீர்வாதத்தைக் குறித்து இங்கே அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

(i) அது ***பெரும்பாதையான*** வழி - "*அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்*". இந்த வழி நம்முடைய இருதயங்களில் இருக்கிறது. உன்னுடைய இருதயம் குறுகினதாயிருந்தால் பரலோகத்துக்குச் செல்லும் வழியுங்கூட உனக்கு இடுக்கமானதாயிருக்கும்; பரிசுத்தமாக ஜீவித்தல் என்பது உனக்கு இடுக்கமானதாகவும் கஷ்டமானதாகவும் இருக்கும்.

(ii) அது ***மிகவும் சுத்தமான*** வழியாயிருக்கும். ஏனெனில், "*தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை*".

(iii) அது மிகவும் ***சுலபமான*** வழி. ஏனெனில் , "*அந்த வழியில் நடக்கிற வர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை*". பேதையர் இவ்வழியில் தவறுகள் இழைக்காதிருப்பார்களென்றால், அது மெய்யாகவே மிகவும் சுலபமான ஒரு வழியாகத்தான் இருக்க வேண்டும். இருப்பினும், உலகப்பிரகாரமாக ஞானவான்களாயிருப்பவர்கள் இவ்வழியில் நடக்கப் பிரயாசப்படுவார்களாயின், அவர்கள் வழிதவறிச் செல்லக் கூடும். நீ கிறிஸ்துவுக்காக ஒரு பேதையாயிராத பட்சத்தில், நீ ஒருபோதும் பரிசுத்த வழியை அறிந்துகொள்ளவும் மாட்டாய்; அதை விலைமதிப்புள்ள ஒன்றாகக் கருதவும் மாட்டாய்.

(iv) அது மிகவும் ***பாதுகாப்பான*** வழி. ஏனெனில், "*அங்கே சிங்கம் இருப்பதில்லை; துஷ்டமிருகம் அங்கே போவதுமில்லை*". யாதொரு காட்டு மிருகமும், பயத்தை உண்டாக்கக்கூடிய யாதொன்றும் அங்கு காணப்பட முடியாது. இப்படியிருந்தும், மிகவும் பாதுகாப்பான வழியாகிய பரிசுத்த வழியைச் சில தேவபிள்ளைகள் தெரிந்துகொள்வதில்லை.

(v) அது ***மிகவும் புனிதமான*** வழி. ஏனெனில் மீட்கப்பட்டவர்களுக்கு மட்டுமே இந்தப் பாதையில் நடக்க உரிமை உண்டு.

(vi) அது ***மிகவும் மகிழ்ச்சிகரமான*** வழி. ஏனெனில் இந்த வழியில் நடக்கும் ஜனங்கள் ஆனந்தக்களிப்புடன் *பாடுவார்கள். நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேலிருக்கும்.* பாதை முழுவதும் நாம் பாடிக்கொண்டும், மற்ற வர்கள் பாடுவதைக் கேட்டுக்கொண்டுமிருப்போம். நம் மேல் இருப்பது சாதாரண மகிழ்ச்சி அல்ல, அது நித்திய மகிழ்ச்சியாகும். மெய்யான சந்தோஷம் மெய்யான பரிசுத்தத்தின் மூலமாகவே வருகிறது.

(vii) அது ***மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட*** வழி. ஏனெனில் அது பரலோகத் திலுள்ள மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட இடமாகிய சீயோனுக்கு நம்மை வழிநடத்துகிறது.

தேவனுடைய பரிசுத்தத்தை நீ நேசிக்கிறாயா? நீ அதை நேசித்தால், பரிசுத்த வழியைச் சீயோனுக்குச் செல்லும் பெரும்பாதையான

வழியாகவும், மிகவும் சுத்தமான வழியாகவும், மிகவும் இலகுவான வழி யாகவும், மிகவும் பாதுகாப்பான வழியாகவும், மிகவும் புனிதமான வழியாகவும், மிகவும் மகிழ்ச்சிகரமான வழியாகவும், மிகவும் ஆசீர் வதிக்கப்பட்ட வழியாகவும் நீ காண்பாய். ஆகவே, நீ "*உன்னைச் சுத்த வானாகக் காத்துக்கொள்*" (**I தீ**மோ. 5 : 22).

மே 22

நட்சத்திரங்களைப் போலவும் மணலைப் போலவும்

"***ஆனபடியால், சரீரஞ்செத்தவனென்று எண்ணத்தகும் ஒருவனாலே, வானத்திலுள்ள பெருக்கமான நட்சத்திரங்களைப்போலவும் கடற் கரையிலுள்ள எண்ணிறந்த மணலைப்போலவும், மிகுந்த ஜனங்கள் பிறந்தார்கள்***" (எபி. 11 : 12).

ஆபிரகாமுடைய சந்ததி வானத்திலுள்ள நட்சத்திரங்களைப் போல வும் கடற்கரையிலுள்ள மணலைப் போலவும் இருந்தது. இந்த இரண்டு அனுபவங்களும் நமக்கு அவசியம்.

இருள் சூழ்ந்த இரவு நேரத்தில் நட்சத்திரங்கள் பிரகாசித்து, வழிப்போக்கர்களுக்கு வழிகாட்டி, அவர்களுடைய பாதையில் அவர்களை வழிநடத்துகின்றன. ஜனங்களை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங் களைப் போல் இருக்கிறார்கள் (தானி. 12 : 3). நம்முடைய ஜீவியத்தின் வாயிலாகவும் வார்த்தைகளின் மூலமாகவும் ஜனங்கள் கர்த்தரைச் சென்றடையத்தக்க வழியை நாம் அவர்களுக்குக் காண்பித்து உதவிசெய் கிறோமா? சமாதானம், சந்தோஷம், இளைப்பாறுதல், பரிசுத்தம், ஜெயம் ஆகியவற்றை அடைவதற்குரிய வழியை அவர்கள் கண்டடைய நாம் அவர்களுக்கு உதவி செய்கிறோமா? நம்முடைய நடக்கைகளெல்லா வற்றிலும் வெளிப்படும் நம்முடைய பரிசுத்தம், இருளில் ஜீவிக்கிறவர் களுக்கு சரியானவற்றிற்கும் தவறானவற்றிற்கும் இடையே உள்ள வித்தியாசத்தையும், பரிசுத்தத்துக்கும் மகா பரிசுத்தத்துக்கும் இடையே உள்ள வித்தியாசத்தையும் எடுத்துக்காட்டுகிறதா?

நாம் ஆகாயத்தில் உன்னதமான இடத்திலிருந்துகொண்டு பிரகாச மாக மின்னித்துலங்கிக்கொண்டிருக்கும் நட்சத்திரங்களைப் போலிருக்கக் கூடும். எனினும் நாம் கடற்கரை மணலைப்போலவும் இருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. கடற்கரையிலுள்ள மணல், புரண்டு வரும்

அலைகளினால் இரவும் பகலும் பலமுறை பலமாக அடிபட்டு, நாளுக்கு நாள் அதிகமதிகமாகச் சிறியதாகவும் உருட்சியாகவும் வெண்மையாகவும் மாறிவிடுகிறது. அவ்வாறே, நாம் நம்முடைய ஜீவியத்தில் சந்திக்கும் கஷ்டங்களும் பிரச்சினைகளும் நாம் அதிக தாழ்மையுள்ளவர்களாக, மிக மென்மையானவர்களாக, அதிக தூய்மையானவர்களாக மாற நமக்கு உதவிசெய்ய வேண்டும். அவை நம்மைக் கீழே விழத்தள்ளிவிடக் கூடாது. அவைகளைக் குறித்த நம்முடைய மனப்பான்மையே இந்த எல்லா மாறுதல்களையும் உண்டுபண்ணுகிறது. நம்முடைய அனுதின ஜீவியத்தில் நாம் கடினமான சூழ்நிலைகளையும் கடின குணமுள்ள மனிதர்களையும் சந்திக்கும்போது நம் பிரதிக்கிரியை எவ்வாறிருக்கிறது?

இன்றைய தினத்தை நீ எவ்விதம் சந்திக்கப்போகிறாய்? நீ ஒரு நட்சத்திரமாகவும், கடற்கரையிலுள்ள ஒரு மண்துகளாகவும் இருப்பாயா?

மே 23

மனம் புண்படுதலின் விளைவுகள்

"***என்னை இராணுவத்துக்கப்பால் கொண்டுபோ; எனக்குக் காயம்பட்டது***" (I இராஜா. 22 : 34).

ஜனங்கள் அடிக்கடி, அதுவும் மிகவும் எளிதாக மனதில் புண்படுகிற, காயப்படுகிற அல்லது இடறலடைகிற ஒரு காலத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். ஒரு பரிசுத்தவான், 'நாம் புண்படுத்தப்படுவோமாகில், உண்மையில் நம்முடைய பெருமையே புண்படுத்தப்படுகிறது' என்று கூறினார். இக்கூற்று மிகவும் சரியானதே. ஆமான் பெர்சியா தேசத்தில் ஓர் உயர்ந்த ஸ்தானத்தில் இருந்தான்; ஆனால் ஒரே ஒரு மனிதன் மட்டும் தனக்கு முன்பாகப் பணிந்துகொள்ளாதபோது அவனுடைய பெருமை எவ்வளவாகப் புண்படுத்தப்பட்டது, பாருங்கள்! (எஸ்தர் 5 : 11 - 13).

I இராஜாக்கள் 22 -ஆம் அதிகாரம், தோல்வியைத் தழுவிய ஒரு ராஜாவின் சரித்திரத்தைக் குறித்துக் கூறுகிறது. அவன், "*என்னை இராணுவத்துக்கப்பால் கொண்டுபோ; எனக்குக் காயம்பட்டது*" என்று கெஞ்சுகிறான். ஆம், ஒரு காயப்பட்ட மனுஷனால் கர்த்தருடைய யுத்தங்களைத் தொடர்ந்து செய்ய முடியாது. அவன் யுத்தக்களத்தை விட்டு அவமானத்தோடு வெளியே கொண்டுவரப்பட வேண்டும்.

இடறலடைகிறவர்களுக்கு ஆவிக்குரிய பிரகாரமான ஆழம் இல்லை என்னும் சத்தியத்தைக் கர்த்தராகிய இயேசு வெளிப்படுத்தினார்

(மாற்கு 4 : 5, 6, 17). அது நம்மோடு பேசுகிறதா? நமக்கு ஆவிக்குரிய ஆழம் இருக்கிறதா அல்லது நாம் நம்முடைய மனதில் புண்பட்ட உணர்வுகளுக்கு இடங்கொடுத்து, நம்மைக் காயப்படுத்துகிற, புண்படுத்துகிற அல்லது இடறப்பண்ணுகிறவர்களாகத் தென்படுபவர்களிடம் குற்றங் கண்டுபிடித்துக்கொண்டிருக்கிறோமா? கிறிஸ்துவின் நல்ல போர்ச்சேவகர்களாக இருக்கும்படி நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் (II தீமோ. 2 : 3). நாம் நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி - பாவம், துரைத்தனங்கள், அதிகாரங்கள், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகள், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகள் ஆகியவற்றோடு போராட வேண்டிய ஒரு 'நல்ல போராட்டம்' நமக்குண்டு. ஆகவே போர்க்களத்தில் 'புண்பட்டு'விடாதவாறு நாம் கவனமாயிருப்போமாக.

மே 24

இடையறாத கவனம்

"***மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷனுடைய குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்?***" (எபி. 2 : 6).

எப்படிப்பட்டதோர் அன்புள்ளவரும், நமக்காகக் கவலைப்படுகிறவருமான தேவன் நமக்கு இருக்கிறார்! '*மனுஷனை நீர் மேன்மைப்படுத்துகிறதற்கும், அவன்மேல் உம் இருதயத்தை நீர் பதிப்பதற்கும், காலைதோறும் அவனை விசாரிக்கிறதற்கும், நிமிஷந்தோறும் அவனைச் சோதிக்கிறதற்கும், அவன் எம்மாத்திரம்?*' (யோபு 7 : 17, 18 -Eng.).

தேவன் தம்முடைய இருதயத்தை நம் மேல் பதித்திருத்தலும், தம்முடைய ஆசீர்வாதங்களோடு வந்து நம்மைக் காலைதோறும் விசாரித்தலும் நம்மைக் குறித்து நம்முடைய தேவன் எவ்வளவு நினைவுள்ள வராயிருக்கிறார் என்பதைக் காட்டுகின்றன. '*அனுதினமும் நன்மைகளை நம்மேல் நிறைபாரமாக ஏற்றுகிற ஆண்டவருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக*' (சங். 68 : 19 -Eng.). அவருடைய இரக்கங்களும் மனதுருக்கங்களும் காலைதோறும் புதியவைகள் (புலம். 3 : 22, 23 -Eng.).

நம்முடைய தேவன் நம்மைக் காலையில் விசாரிக்க வரும்போது, நாம் சோம்பலுள்ளவர்களாகவோ அல்லது காலையில் அவரைத் தியானிக்க வேண்டிய நேரங்களில் அவரோடு நேரம் செலவழிக்கக் கூடாதவாறு அதிக அலுவலுள்ளவர்களாகவோ இருந்தால் அவர் நம் மேல் எவ்வளவாய்த் துக்கப்படுவார்! நாம் அவரை வரவேற்று ஏற்றுக்கொள்ளக்கூடாதபடி நாம்

மிஞ்சிய அலுவலுள்ளவர்களாக இருந்ததினிமித்தம், தம்முடைய ஆசீர் வாதங்களை நம்மேல் நிறைபாரமாகச் சுமத்தும்படி அவர் வந்தபோது நாம் எத்தனையோ காலைவேளைகளில் அவரோடு நேரம் செலவழிக் காமல் அவரைத் திருப்பி அனுப்பியிருக்கிறோம் அன்றோ?

ஒவ்வொரு கூஷணப்பொழுதும் கர்த்தர் நம்மைச் சோதிக்கிறார் அல்லது நம்முடைய ஜீவியத்தைச் சீர்தூக்கிப் பார்க்கிறார். நம்முடைய எண்ணங்கள், வாஞ்சைகள், கற்பனைகள், வார்த்தைகள், கிரியைகள், உணர்ச்சி கள் ஆகியவை அவருக்கு முன்பாகக் குற்றமற்றவையாக உள்ளனவா என்பதைக் காணும்படி அவற்றை அவர் பரிசோதித்துப் பார்க்கிறார்.

அவர் நம்மை ஒவ்வொரு கூஷணப்பொழுதும் காவல் செய்து, ஒவ்வொரு கூஷணப்பொழுதும் நமக்குத் தண்ணீர் பாய்ச்சுகிறார் அல்லது ஒவ்வொரு கூஷணப்பொழுதும் நம் மேல் கிருபையைப் பொழிந்தருளு கிறார். "*கர்த்தராகிய நான் அதைக் காப்பாற்றி, ஒவ்வொரு கூஷணப்பொழு துதும் அதற்குத் தண்ணீர்ப் பாய்ச்சி, ஒருவரும் அதைச் சேதப்படுத்தாதபடிக்கு அதை இரவும்பகலும் காத்துக்கொள்வேன்*" (ஏசாயா 27 : 3 -Eng.).

நம்முடைய தேவன் இவையெல்லாவற்றையும் நமக்காக ஏன் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கூஷணப்பொழுதும் செய்கிறார்? "*கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல் லாரும் மறுரூபமாக்கப்படுவோம்*" (I கொரி. 15 : 51) என்னும் இந்த ஒரே ஆசீர் வதிக்கப்பட்ட நம்பிக்கையினிமித்தமாகவே அவர் அவ்வாறு செய்கிறார்.

மே 25

புத்தம்புதியதொரு சரீரம்

"***தேவபக்திக்குரிய இரகசியமானது ... மகா மேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ... மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப் பட்டார்***" (I தீமோ. 3 : 16).

"*தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்*" - இது ஆச்சரியமாக இருக்கிறது. கர்த்தராகிய இயேசு இந்த மனுஷ சரீரத்தில் இருக்கையில் தேவனுடைய (தெய்வீக) சுபாவம் அவரில் வெளிப்பட்டது. நாம் இவ்வுலக வாழ்க்கை யில் திவ்ய சுபாவத்தை வெளிப்படுத்துவதே தேவபக்திக்குரிய இரகசியத் தின் முதல் அடையாளமாகும்; இது கர்த்தராகிய இயேசுவைப் பொறுத்த வரை மிகவும் உண்மையாயிருந்தது. அவர், "*மாம்சமாகி, கிருபையி னாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்;*

அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவான் 1 : 14). நாம் மாம்சத் திலிருக்கும்போது (இந்தப் பூமிக்குரிய சரீரத்தில் இருக்கையில்) தேவ னுடைய மகிமையை வெளிப்படுத்த வேண்டும். மகிமை என்றால் என்ன? மகிமை என்பது, 'கிருபை, சத்தியம் ஆகியவற்றின் நிறைவு' ஆகும்.

சிலர், தேவசித்தத்தைத் தங்கள் சரீரத்தில் நிறைவேற்றாமலிருந்து கொண்டு, "*ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது*" என்று சாக்குப்போக்கு சொல்லுகிறார்கள். பாவம் மனிதனுக்குள் பிரவேசித்தபோது ஆவி உற்சாகமுள்ளதாயிருந்தாலும் சரீரம் பெலவீனப்பட்டது என்பது உண்மையே. தண்ணீர் ஞானஸ்நானத்தில் இந்தப் பெலவீனமான (கீழ்ப் படியாமையுள்ள) சரீரம் அகற்றப்படுகிறது (அடக்கம்பண்ணப்படுகிறது). நாம் இப்பொழுது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையாக இருக்கிறோம். ***தேவன் நம்முடைய பெலவீனமானதும் கீழ்ப்படியாததுமான பழைய சரீரத்தை அகற்றி, நமக்கு ஒரு புதிய சரீரத்தைக் கொடுத்திருக்கிறபடியால் தேவகிருபையினால் அவரது பெலத்தைப் பெற்று நாம் இந்தச் சரீரத்தில் தேவ சித்தம் செய்ய முடியும். அல்லேலூயா!***

தேவபக்திக்குரிய இரகசியத்தின் கடைசி அம்சம், "*மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்*" என்பதாகும். முதலாவது "மாம்சத்திலே வெளிப்பட்டார்", முடிவில் "மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்". மெய்யாகவே, தேவன் நம்முடைய சரீரத்தில் இப்பொழுது வெளிப்படு வாரென்றால், முடிவில், நம்முடைய சரீரம் மறுரூபமாக்கப்பட்டு நாம் மகிமையிலே ஏற்றுக்கொள்ளப்படுவோம்.

அன்பான வாசகரே, உங்கள் சரீரத்தினால் நீங்கள் கர்த்தரை மகிமைப் படுத்தாதவர்களாயிருந்துகொண்டு, "*ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது*" என்று சாக்குப்போக்கு சொல்வதை விட்டுவிடுங்கள். அது பிசாசின் வஞ்சனையாயிருக்கிறது. நீங்கள் ஏன் உங்களுடைய ***புத்தம் புதிய சரீரத்துக்காகத்*** தேவனுக்கு நன்றி செலுத்தி, '*உங்கள் சரீரத்தினால் அவரை மகிமைப்படுத்தக்*' கூடாது?

மே 26

தேவனுடைய வீட்டில் பஞ்சம் இல்லை!

"***உமது ஆலயத்திலுள்ள சம்பூரணத்தினால் திருப்தியடைவார்கள்; உமது பேரின்ப நதியினால் அவர்கள் தாகத்தைத் தீர்க்கிறீர்***" (சங். 36 : 8).

விசுவாசத்தின் தகப்பன், கீழ்ப்படிதலும் தியாகமுமுள்ள மனிதன் என்றெல்லாம் நாம் ஆபிரகாமுடைய மேன்மையைக் குறித்து அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் அவனுடைய ஜீவியத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு பின்மாற்றத்தின் காட்சி காணப்பட்டது. அவனுடைய விசுவாசத்திலிருந்தும் கீழ்ப்படிதலிலிருந்தும் நாம் அநேக காரியங்களைக் கற்றுக்கொள்வது போல, அவனது பிரயாணத்தின் இடையில் அவனுக்கு நேரிட்டிருந்த சிறிது காலப் பின்மாற்றத்திலிருந்தும் நாம் பல காரியங்களைக் கற்றுக்கொள்கிறோம்.

"*ஆபிராம் புறப்பட்டு, தெற்கே பிரயாணம்பண்ணிக்கொண்டு போனான். அத்தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று; ... ஆபிராம் எகிப்து தேசத்திலே தங்கும்படி அவ்விடத்துக்குப் போனான்*" (ஆதி. 12 : 9, 10). பெத்தேலை விட்டு ஆபிரகாம் தெற்கே சென்று அங்கு பஞ்சத்தைச் சந்தித்தான். 'பெத்தேல்' என்பதற்கு 'தேவனுடைய வீடு' என்று பொருள். ஆபிரகாம் பெத்தேலை விட்டுச் சென்றிருக்கக் கூடாது; பெத்தேலில் யாதொரு பஞ்சமும் இல்லை. கெட்ட குமாரனுடைய தகப்பனின் வீட்டில் இருந்தவர்களுக்குப் பூர்த்தியான சாப்பாடு இருந்தபோது, கெட்ட குமாரனுக்கோ, அவன் தன்னுடைய பசியை ஆற்றிக்கொள்ளும்படி பன்றிகள் தின்கிற தவிடு கூட கிடைக்கவில்லை.

தேவபிள்ளையே, தேவனுடைய வீட்டை விட்டு நீ ஒருபோதும் வெளியே சென்றுவிடாதே; கர்த்தருடைய வீட்டில் உனக்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள எல்லாக் கூட்டங்களிலும் கலந்துகொள்வதில் அசதியாயிராதே. உனக்குத் தேவையான எல்லாவற்றையும் கர்த்தர் அங்குதான் வைத்திருக்கிறார். "*உமது ஆலயத்திலுள்ள சம்பூரணத்தினால் திருப்தியடைவார்கள்; உமது பேரின்ப நதியினால் அவர்கள் தாகத்தைத் தீர்க்கிறீர்*" (சங். 36 : 8).

ஆவிக்குரிய ஆகாரம் உனக்குக் குறைவுபடுவதாக நீ காண்பாயென்றால், தேவ வசனத்துக்கான வாஞ்சை உன்னில் இல்லாதிருக்குமாயின், நீ தவறான திசையில் சென்றுகொண்டிருப்பதே அதன் காரணமாய் இருக்க வேண்டும்! போதுமான அளவு ஆவிக்குரிய ஆகாரத்தை நீ உட்கொள்ளாவிடில், எகிப்தின் ஆகாரத்துக்காக நீ ஏங்க ஆரம்பித்துவிடுவாய் என்பதைக் கவனத்தில் வைத்துக்கொள். எகிப்தின் ஆகாரமானது உனக்குச் செய்யக்கூடிய நன்மையெல்லாம், அது உன் ஆத்துமாவை எப்போதும் திருப்தியடையாத நிலையில் வைத்திருப்பதே ஆகும். ஏனெனில் அது பன்றிகளுக்காக வைக்கப்பட்டிருக்கும் 'தவிடு' தானே!

மே 27

மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட சிலாக்கியம்

"***அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்***"
(யோவான் 1 : 12).

மேலே கூறப்பட்டுள்ள வசனத்தில் 'அதிகாரம்' (வல்லமை -Eng.) என்னும் வார்த்தை சிலாக்கியம் என்றுங்கூட பொருள்படும். தேவனுடைய பிள்ளையாகுதல் மெய்யாகவே பூமியில் ஒருவருக்குக் கிடைக்கக்கூடிய மிக ஆச்சரியமான சிலாக்கியமாக இருக்கிறது.

அன்பான நண்பனே, நீ கர்த்தராகிய இயேசுவை உன் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளாதிருப்பாயென்றால், ***இப்பொழுதே*** அவரை ஏற்றுக்கொள். அவருடைய இரக்கங்கள், கரிசனை, உருக்கமான அன்பு போன்றவையெல்லாம் நீ பெற்றனுபவிக்கக் கூடியவையாயிருக்கின்றன. உன் இருதயத்துக்குள் பிரவேசித்து, உன்னை அரவணைத்து, உன்னோடு வாசம்பண்ணும்படி அவர் உன் இருதயத்துக்கு வெளியே காத்துக்கொண்டிருக்கிறார். நீ உன்னுடைய பாவங்களை அவரிடம் அறிக்கை செய்தால், அவருடைய இரத்தமானது உன்னுடைய எல்லாப் பாவங்களுமற உன்னைக் கழுவிச் சுத்திகரித்து, உன்னைப் பரலோகத்தின் பிள்ளையாக மாற்றக்கூடியதாயிருக்கிறது.

கிறிஸ்துவைத் தன்னுடைய இருதயத்துக்குள் ஏற்றுக்கொள்ளும் ஒரு நபரை எண்ணிறந்த சிலாக்கியங்கள் பின்தொடருகின்றன. தேவனுடைய பிள்ளையாக இருக்கிற சிலாக்கியம் அவனுக்குண்டு. கர்த்தராகிய இயேசு அப்பொழுது அவனுடைய மூத்த சகோதரராக மாறுகிறார். எனவே தான் அவர், 'அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவர்' (ரோமர் 8 : 29) என்று அறியப்படுகிறார். சில வேளைகளில் நம்முடைய உடன்பிறந்த சகோதரனே நம்மைக் கைவிட்டுவிடக் கூடும். ஆனால் கர்த்தராகிய இயேசுவோ நமக்கு '*சகோதரனிலும் அதிக சொந்தமாய்ச் சிநேகிப்பவராக*' (நீதி. 18 : 24) இருப்பார். மேலும், நாம் தேவ புத்திரராக மாறும்போது, நாம் நம்முடைய தேவனை ***யெல்ஷதாயாக*** (El-shaddai), தாயைப் போன்ற தேவனாக அனுபவிக்கிறோம். சில வேளைகளில், நம்முடைய இருதயத்திலிருக்கும் பாரத்தையும் துக்கத்தையும் நம்முடைய சொந்தத் தாயாரே விளங்கிக்கொள்ளாமலிருக்கக் கூடும். நம்முடைய தேவனோ நமக்குத் தாயினும் சிறந்தவராயிருக்கிறார். நம்முடைய பூமிக்குரிய தாய்மார்களால் நம்முடைய வியாதிகளையும் வேதனைகளையும் சுமக்க முடியாது. ஆனால் நம்முடைய ***யெல்ஷதாயால்***

அது கூடும். நாம் குழந்தைகளாக இருந்தபோது மட்டுமே நம்முடைய தாயாரால் நம்மைச் சுமக்க முடிந்தது. ஆனால் நம்முடைய தேவனோ நம்முடைய முதிர்வயது வரை நம்மைத் தாங்குவதாக நமக்கு வாக்குப் பண்ணியிருக்கிறார்: "*உங்கள் முதிர்வயதுவரைக்கும் நான் அப்படிச் செய் வேன்; நரைவயதுமட்டும் நான் உங்களைத் தாங்குவேன்*" (ஏசாயா 46 : 4).

இலட்சக்கணக்கான ஜனங்கள் இந்த ஆசீர்வதிக்கப்பட்ட சிலாக்கி யத்தைக் கண்டுபிடிக்காதவர்களாயிருக்கின்றனர் அல்லது தங்களுடைய சொந்த அழிவுக்கே வழிவகுக்கும் வகையில் இதைப் புறக்கணித்திருக் கின்றனர் என்பது எவ்வளவு துக்ககரமானது!

மே 28

'*அவர்கள் உன்னை ஏந்திக்கொண்டுபோவார்கள்*'

"***கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்***" (சங். 34 : 7).

ஒரு தாயார் ஒரு ஜெபக்கூட்டத்தில் பங்குபெற்றுக்கொண்டிருக் கையில் சின்னஞ்சிறுமியான அவர்களுடைய மகள் ஆராதனைக்கூடத் தினின்று மெதுவாக நழுவி, ஆலயத்தின் வளாகத்தைக் கடந்து, சாலைக்குச் சென்றுவிட்டாள். கூட்டம் நடந்துகொண்டிருக்கையில், திடீரென்று வண்டிச்சக்கரங்களின் பயங்கரமான கிரீச்சிடும் சத்தம் கேட்டது; சரியாக ஆலயத்தின் வாசலுக்கு முன்னாக ஒரு கார் சடுதியாக நின்றது. அப்போது தன்னுடைய மகள் தனதருகில் இல்லாதிருப்பதைக் கண்ட தாயார் திகிலடைந்தார்கள். அவர்கள் சாலைக்கு விரைந்தபோது, தன்னுடைய மகள் அமைதியாக நடைபாதையில் உட்கார்ந்திருப்பதையும், கார் ஓட்டுநர் அதிர்ச்சியுற்ற நிலையில் இருப்பதையும் கண்டார்கள். பரபரப்படைந்த தாயார், 'எலிசபெத், என்ன நடந்தது?' என்று அலறினார்கள். 'நான் கார் வருவதைக் கவனியாமல், சாலையின் நடுப்பகுதிக்கு ஓடினேன். கார் என்மேல் மோதியது; ஆனால் ஒரு தேவதூதன் என்னைத் தன்னுடைய கரங்களில் தூக்கி இங்கு உட்கார வைத்தார்' என்று எலிசபெத் அமைதியாகப் பதிலளித்தாள். தாயார் தன் மகளை மேலிருந்து கீழ் வரை உற்று நோக்கினார்கள். அவள் மீது ஒரு சிராய்ப்பு கூட இருக்கவில்லை. அந்த ஓட்டுநர் திகைத்துப்போய் காணப்பட்டபோதிலும், எலிசபெத் மிகவும் அமைதியாக, ஒரு அழகிய தூதனைப் போல் காட்சியளித்தாள்.

தீங்கிலிருந்தும் ஆபத்திலிருந்தும் கர்த்தருடைய தூதனானவர் நம்மை எத்தனைமுறை விடுவித்திருக்கிறார்! அவையெல்லாவற்றிற்காகவும்

நாம் தேவனுக்கு நன்றி செலுத்தாமலிருக்கக் கூடும்; நாம் எவ்விதம் பாதுகாக்கப்படுகிறோம், பொறுப்பெடுத்துக்கொள்ளப்படுகிறோம் என்பதை நாம் உணராதவர்களாகவும் இருக்கக் கூடும். நாம் எவ்வளவு ஆசீர் வதிக்கப்பட்ட ஜனங்கள் என்பதை உணர்ந்து தேவனுக்கு நன்றியுள்ளவர் களாயிருப்போமாக.

"*ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது. உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக் கொண்டுபோவார்கள்*" (சங். 91 : 10 - 12).

மே 29

விசுவாசத்தோடே மரிப்பாயாக!

'***இவர்களெல்லாரும் விசுவாசத்தோடே மரித்தார்கள்***' (எபி. 11 : 13).

விசுவாச வீரர்கள் அனைவரும் விசுவாசத்தோடே மரித்தார்கள். தேவனுக்குப் பிரியமான ஒரு ஜீவியம் செய்வதற்காக மட்டுமல்ல, தேவ னுக்குப் பிரியமானவர்களாக மரிப்பதற்குங்கூட நமக்கு விசுவாசம் தேவை யாயிருக்கிறது. பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் வாக்குத்தத்தங்களை அடைந்துகொள்ளாமற்போனபோதிலும், விசுவாசத்தோடே மரித்தார்கள்.

'விசுவாசத்தோடே மரித்தல்' என்பதின் அர்த்தம் யாது? தெய்வீக சுகத்தில் விசுவாசம் வைத்தவர்களாய் மரிப்பது, ஒரு விதத்தில் விசுவாசத் தோடே மரித்தல் ஆகும். ஆயினும் மருத்துவ உதவியை நாடாமல் மரிக்கும் அனைவரும் விசுவாசத்தோடே மரிக்கிறவர்களாயிராமலிருக்க லாம். அநேகர் பயத்தினால் நிரப்பப்பட்டவர்களாக - மரண பயம், நரகத்தைப் பற்றிய பயம், பிசாசைப் பற்றிய பயம் போன்றவற்றால் வாதிக்கப்பட்டு மரிக்கிறார்கள். விசுவாசத்தோடே மரித்தல் என்பது, யாதொரு பயமும் அறவே அற்றவர்களாய், முற்றிலும் தேவன் மேல் நம்பிக்கை வைத்து மரித்தல் ஆகும். சிலருக்கு ஆச்சரியமானதொரு விசுவாசத்தின் வரம் இருக்கக் கூடும். வியாதியஸ்தரைக் குணமாக்கவும், மரித்தோரை எழுப்பவும், மற்றும் பல பலத்த கிரியைகளைச் செய்யவும் அவர்கள் விசுவாசமுள்ளவர்களாயிருப்பர். ஆனால் அந்த விசுவாசமானது அவர்களுடைய மரண நேரத்தில் அவர்களுக்கு உதவி செய்யாது. சுபாவமாக உருவாக்கப்பட்ட விசுவாசம், அதாவது ஆவியின் கனியாகிய விசுவாசம் நமக்குத் தேவையாயிருக்கிறது.

நம் சபையின் ஸ்தாபகராகிய பாஸ்டர் பால் அவர்கள் மரணத்தருவாயிலிருந்தபோது அவர் முன்பு அங்கம் வகித்திருந்த சபையின் போதகர் அவரைக் காணும்படி வந்தார். பாஸ்டர் அவர்களின் சரீரத்திலிருந்த கட்டிகளைச் சுட்டிக்காண்பித்து அவர், 'நீங்கள் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிற வேதனைகளைப் பாருங்கள்!' என்று கூறினார். அப்போது பாஸ்டர் அவர்கள் புன்முறுவலுடன், 'நீங்கள் அங்கேதான் பார்க்கிறீர்கள்; இங்கே (தன் இருதயத்தைச் சுட்டிக்காட்டி) பார்க்கவில்லை. ஒரு சிங்கம் உள்ளே கொர்ச்சித்துக்கொண்டிருக்கிறது!' என்று கூறினார். முழு நரகமும் நமக்கு விரோதமாக எழும்பினாலும், நாம் பயப்படக் கூடாது. நீதிமான்கள் சிங்கத்தைப் போல தைரியமாயிருக்கிறார்கள். மிக ஆழ்ந்த துயரத்திலும், நம் மரண வேளையிலுங்கூட நாம் ஒரு சிங்கத்தைப் போலிருக்க வேண்டும்.

நமது முன்னாள் தலைமைப் பாஸ்டராயிருந்த பாஸ்டர் லாசரஸ் அவர்கள் தன் மரண நேரத்தில் மிகவும் பெலவீனமாயிருந்தார். ஆனால் அவருடைய ஆவியோ ஒரு சிங்கத்தைப் போல கொர்ச்சித்துக்கொண்டிருந்தது. அந்நேரத்தில் அவர் தனது கரத்தை உயர்த்தி, 'ஜெயங் கொள்ளுகிற தேவசபையைப் பாதாளத்தின் வாசல்கள் ஒருக்காலும் மேற்கொள்ள முடியாது!' என்று சொல்லிக்கொண்டிருந்தார்.

சிலர் தைரியமுள்ளவர்கள் போலவும், பெரிய விசுவாசமுள்ளவர்கள் போலவும் தென்படுவார்கள். ஆனால் அவர்களுடைய மரண நேரம் வரும்போது அவர்கள் அசைந்துவிடுகின்றனர். விசுவாச வீரர்களோ விசுவாசத்திற்காக நின்றனர்; விசுவாசத்திற்காக ஜீவித்தனர்; விசுவாசத்திற் காகப் போராடினர்; விசுவாசத்திற்காக மரித்தனர்!

மே 30

மாய்ந்துபோகும் கனம்

'*நான் பாவஞ்செய்தேன்; இப்போது நீர் என்னைக் கனம்பண்ணும்*'
(I சாமு. 15 : 30).

பெருமையுள்ள ஜனங்களைப் பற்றிய அஞ்சத்தக்க ஓர் உண்மை யாதெனில், அவர்களுடைய ஜீவியமானது பரிதபிக்கப்படத்தக்கதா யிருப்பது மட்டுமன்றி, அவர்களது மரணமும் நித்தியமுங்கூட மிகவும் பரிதபிக்கப்படத்தக்கதாயிருக்கும்.

சாதாரணமாக, பாவம் செய்கிறவர்கள், தங்கள் பாவங்களைக் குறித்து உணரும்போது தேவனிடம் மன்னிப்பு கேட்கின்றனர். ஆனால்

தன் பாவம் சுட்டிக்காண்பிக்கப்பட்டபோது இஸ்ரவேலின் முதல் ராஜா வாகிய சவுல் சொன்னதைப் பாருங்கள் - '*நான் பாவஞ்செய்தேன்; இப்போது நீர் என்னைக் கனம்பண்ணும்*' (I சாமு. 15 : 30). தான் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்ததை அறிந்திருந்தும், மன்னிப்பைத் தேடு வதற்குப் பதிலாக அவன் கனத்தைத் தேடிக்கொண்டிருந்தான் என்பது எவ்வளவு துக்ககரமானது! ஒருவன் கனத்தைத் தேடுவானாகில், அது அவனது ஜீவியத்திலுள்ள மறைந்திருக்கும் (கழுவிச் சுத்திகரிக்கப்படாத) பாவங்களின் நிச்சயமான அறிகுறியாகும்.

சவுல் 'வில்வீரரால் மிகவும் காயப்பட்டபோது', அவன் தான் மரிக்கப்போவதை அறிந்திருந்தான். எனினும் அக்கடைசி சில நொடிப் பொழுதுகளை அல்லது நிமிடங்களைத் தான் மனஸ்தாபப்பட்டு மனந் திரும்பி நித்தியத்திற்காகத் தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்வதற்காகப் பிரயோஜனப்படுத்திக்கொள்வதற்குப் பதிலாக, அவன் இன்னும் கௌரவத் தையும் கனத்தையும் நாடினான்! சவுல் "*தன் ஆயுததாரியை நோக்கி: அந்த விருத்தசேதனம் இல்லாதவர்கள் வந்து, என்னைக் குத்திப்போட்டு, என்னை அவமானப்படுத்தாதபடிக்கு, நீ உன் பட்டயத்தை உருவி, என்னைக் குத்திப்போடு*" (I சாமு. 31 : 4) என்றான். தன் மரணத்திற்குப் பின்னர், தான் விருத்தசேதனமில்லாத ஒரு நபரால் கொல்லப்பட்டதாக ஒருவரும் தன்னைக் குறித்துச் சொல்லக் கூடாது என்று அவன் விரும்பினான் என்பது வெளிப்படை. அவன் யார் மூலமாகக் கொல்லப்பட்டாலும், நரகத்திற்கே போகப்போகிறான். ஆனால் அது அவனுக்குக் கொஞ்சங்கூட ஒரு பொருட்டாக இருக்கவில்லை.

அவனுடைய ஆயுததாரி அவனைக் கொல்ல மறுத்துவிட்டான். எனவே சவுல் தன் பட்டயத்தை நட்டு அதின் மேல் விழுந்தான். ஆனால் அவனுடைய தற்கொலை முயற்சி தோல்வியுற்றது. மரணமுங்கூட தன்னைப் பகைக்கிறது என்பதை அவன் உணர்ந்தான். பின்பு அவன் ஒரு அமலேக்கியனிடம் தன்னைக் கொன்றுபோடும்படி கேட்டுக்கொண்டான். அமலேக்கியன் அவன் மேல் ஏறி நின்று, அவனுடைய தலையை வெட்டிப்போட்டான் (II சாமு. 1 : 9, 10 -Eng.). எப்படிப்பட்ட பரிதபிக்கப்படத் தக்க பின்மாற்ற நிலையில் அவன் தன் ஜீவியத்தை முடித்தான்!

சவுலின் முடிவு நம் ஒவ்வொருவருக்கும் ஓர் எச்சரிப்பாக இருக் கிறது. எவ்விதம் பெருமையானது நம் ஜீவியத்தையும் மரணத்தையும் நித்தியத்தையும் மிகவும் பரிதபிக்கப்படத்தக்கதாக்கிவிடக் கூடும் என்பதை அது நிரூபிக்கிறது. விருத்தசேதனம்பண்ணப்படாத ஒரு பெலிஸ்தன் தன்னைக் கொல்வதைச் சவுல் விரும்பவில்லை. ஆனால் அவன் ஒரு அமலேக்கியனிடம் தன்னைக் கொல்லும்படி கேட்பது எவ்வளவு

அவமானமானது! (அமலேக்கியர் பெலிஸ்தியரைக் காட்டிலும் மோச மானவர்களும் அருவருப்பானவர்களுமாயிருந்தனர்.) இவ்வுலகத்தின் கனம் ஒரு நிழலைப் போன்றது - எவ்வளவு அதிகமாக நாம் அதை நாடிச் செல்லுகிறோமோ அவ்வளவு அதிகமாக அது நம்மை விட்டு ஓடிப் போகும்.

மே 31

ஒரு நன்மையையும் விலக்கிவைக்கமாட்டார்

'தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன்: அதைப் புசிக்க வேண்டாம் என்று சொன்னார் என்றாள்' (ஆதி. 3 : 3).

ஸ்திரீயானவள் அந்த விருட்சத்தைப் பற்றி விவரிக்கையில், தேவன் அதைக் குறித்துச் சொன்னது போல, 'நன்மை தீமை அறியத்தக்க விருட்சம்' என்று கூறுவதற்குப் பதிலாக, 'தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சம்' என்று கூறினாள். அந்த விருட்சம் அவளுடைய இருதயத்தின் இச்சையின் நடுவில் இருந்தபடியினாலேயே அவள் அதைக் குறித்து 'தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சம்' என்று கூறுகிறாள் என்பது வெளிப்படை. தேவனுடைய மிகச் சிறந்தது தோட்டத்தின் நடுவில் இருந்தது என்பதை யும், அதை அனுபவிப்பது அவளுக்குத் தடை செய்யப்பட்டிருந்தது என்பதையும் எடுத்துக்காட்ட வேண்டும் என்ற நோக்குடையவளாக அவள் அப்படிச் சொல்லியிருக்கக் கூடும். அதன் மூலம் அவள் தேவ னுடைய அன்பையும் இரக்கத்தையும் கேள்வி கேட்கிறவளாயிருந்தாள்.

பூமியில் சிருஷ்டிக்கப்பட்ட யாவும் (நன்மை தீமை அறியத்தக்க விருட்சம் உட்பட) மனிதனுடைய பிரயோஜனத்துக்காகவே சிருஷ்டிக்கப் பட்டிருந்தன என தேவனுடைய வசனத்திலிருந்து நாம் அறிகிறோம். ஆனால் மனிதன் மற்றெல்லா விருட்சங்களின் கனிகளையும் முதலில் புசித்து, போதிய பக்குவமடைந்த பின்னர் இந்தக் கனியையும் புசிக்க வேண்டியவனாயிருந்தான். "*பலமான ஆகாரமானது நன்மை தீமையின்ன தென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந் திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்*" (எபி. 5 : 14). ஆகவே நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனி "பூரண வயதுள்ளவர்களுக்கே" உரியதாயிருந்தது என்பது மிகத் தெளிவாயிருக் கிறது. நம்முடைய ஆதிப் பெற்றோரான ஆதாமும் ஏவாளும் அதை ருசிபார்த்தபோது அப்பூரண வயதை அவர்கள் அடைந்திருக்கவில்லை.

தேவனுடைய வழிகளை நாம் பிழையாக விளங்கிக்கொள்ளா திருப்போமாக; அல்லது நம் ஜீவியத்தைக் குறித்த அவரது திட்டத்தை நாம் சந்தேகிக்காதிருப்போமாக. நாம் தேவ அன்பினால் நிரப்பப்பட்டு, நம் நம்பிக்கையைத் தேவன் மேல் வைப்போமாக. உத்தமமாய் நடக்கிற வர்களுக்கு அவர் யாதொரு நன்மையையும் விலக்கிவைக்கமாட்டார் (சங். 84 : 11).

ஜூன் 1

கர்த்தர் உன்னைப் பற்றி நம்பிக்கையிழந்துவிடவில்லை

"நீங்கள் அவருடைய சீஷரிடத்திற்கும் பேதுருவினிடத்திற்கும் போய்: உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார், ... அங்கே அவரைக் காண்பீர்கள் என்று, அவர்களுக்குச் சொல்லுங்கள்" (மாற்கு 16 : 7).

கர்த்தராகிய இயேசு உயிர்த்தெழுந்த அன்று காலையில் கல்லறைத் தோட்டத்தில் குழுமிய ஸ்திரீகளிடம் தேவதூதன் கூறிய வார்த்தைகளே இவை. நம் கர்த்தர் தம்முடைய சீஷர்களைச் சந்திக்கும்படியாகக் கலிலேயாவுக்குச் சென்றுகொண்டிருந்தார். '*நீங்கள் அவருடைய சீஷரிடத் திற்குப் போய் உங்களுக்கு முன்னே அவர் கலிலேயாவுக்குப் போகிறார் என்று சொல்லுங்கள்*' என்று மட்டும் அத்தூதன் கூறியிருந்தால் போதாதா? பேதுரு பன்னிருவருள் ஒருவராயிருந்தபடியினால், 'அவருடைய சீஷர் கள்' என்பதில் அவரும் நிச்சயமாகவே உட்படுகிறாரன்றோ? இவ்வாறி ருக்க, பேதுருவின் பெயர் பிரத்தியேகமாகக் குறிப்பிடப்பட்டது ஏன்? பேதுரு, தான் இழைத்திருந்த பயங்கரமான தவறுகளினிமித்தமும், கர்த்தர் சிலுவையிலறையப்பட்ட அன்று அவரைத் தான் மறுதலித்த விதத்தினி மித்தமும் அவர் தன்னைக் கைவிட்டுவிட்டாரென்றும், 'அவருடைய சீஷர்கள்' என்பதில் தன்னை இனி அவர் உட்படுத்தமாட்டார் என்றும் சிந்தித்திருக்கச் சாத்தியம் உண்டு. பேதுருவின் இந்த இக்கட்டான நிலைவரத்தை அறிந்தவராகவே கர்த்தராகிய இயேசு அவரது பெயரை விசேஷமாகக் குறிப்பிடும்படி சொன்னார்.

நீயும் பேதுருவைப் போல் கர்த்தரை மிக ஆழமாகத் துக்கப் படுத்தியிருப்பதால் அவர் உன்னைக் கைவிட்டுவிட்டார் என எண்ணு கிறாயோ? இல்லை, தேவபிள்ளையே, அப்படியல்ல; இன்னும் உனக்கு

நம்பிக்கை உண்டு. "*அவர் நெரிந்தநாணலை முறியாமலும், மங்கியெரிகிற திரியை அணையாமலும்*" இருக்கிறார் (ஏசாயா 42 : 3). இங்கு 'நாணல்' என்பது 'பியானோ' என்னும் இசைக்கருவியிலுள்ள உடைந்த ஒரு சுருதிக் கட்டையைப் போன்றது; அதினால் நல்லதோர் இசையைப் பிறப்பிக்க முடியாது. இன்று உன் ஜீவியமானது சுருதி இழந்த இசைக்கருவியைப் போல, ஒரு நெரிந்த நாணலைப் போல இருக்கக் கூடும். இருப்பினும், இந்த 'நெரிந்த நாணலைப்' பற்றி தேவனுக்கு ஒரு திட்டம் உண்டு. மங்கியெரிகிற திரி வெளிச்சத்தைக் கொடுப்பதற்குப் பதிலாக, புகையை உண்டாக்கி, சுற்றுச்சூழலை அந்தகாரப்படுத்தி, மாசுபடுத்துகிறது; ஆனால் நம் தேவன் மங்கியெரிகிற திரியை அணைப்பதில்லை. அவர் உன்னைப் பற்றி நம்பிக்கையிழந்துவிடவில்லை.

இந்த வேதபகுதி உனக்கே உரியது: '*நீங்கள் அவருடைய சீஷரிடத்திற்கும், பேதுருவினிடத்திற்கும்* (இங்கு பேதுரு என்னும் பெயருக்குப் பதிலாக உன்னுடைய பெயரைச் சேர்த்து வாசி) *போய், அவர் உங்களுக்கு முன்னே போகிறார் என்று சொல்லுங்கள்*'. உன்னிடத்தில் சொல்வதற்குத் தேவனுக்கு ஏதோ ஒன்று உண்டு. மறுபடியுமாக அவர் உன்னைத் தம்மிடம் இழுத்துக்கொள்ள விரும்புகிறார். அவர் தம் மகிமையுள்ள வல்லமை யினால் உன்னை நிறைத்து, உன்னை மாற்ற விரும்புகிறார். உனக்காக ஒரு மகிமையான ஊழியத்தை அவர் வைத்திருக்கிறார்.

ஜூன் 2

மிகத் தாழ்மையானவர்களே மிகத் தூய்மையானவர்கள்

"***பின்பு, அவன் (யோசேப்பு) தன் வீட்டு விசாரணைக்காரனை நோக்கி: ... இளையவனுடைய சாக்கின் வாயிலே வெள்ளிப்பாத்திர மாகிய என் பானபாத்திரத்தையும் தானியத்துக்கு அவன் கொடுத்த பணத்தையும் போடு என்று கட்டளையிட்டான்; யோசேப்பு சொன்னபடியே அவன் செய்தான்***" (ஆதி. 44 : 1, 2).

இந்த வெள்ளிப்பாத்திரம் மிக அதிகத் தூய்மையான ஒரு இருதயத்தைக் குறிக்கிறது. ஏதாயினும் ஒரு வெள்ளிப்பாத்திரம் அல்ல, தன்னுடைய சொந்த வெள்ளிப்பாத்திரமே பென்யமீனுடைய சாக்கில் போடப்பட வேண்டும் என்பதில் யோசேப்பு மிகவும் கவனமாக இருந்தான். யோசேப்பு கர்த்தராகிய இயேசுவுக்கு நிழலாட்டமாயிருக்கிறான். எல்லாருக் கும் இளையவனான பென்யமீன் என்பது, மிகச் சிறியவனும் மிகுந்த

தாழ்மையுள்ளவனுமான ஒருவனைக் குறிக்கிறது. கர்த்தராகிய இயேசு வாகிய நமது யோசேப்பு, தம்முடைய சொந்த வெள்ளிப்பாத்திரத்தை (தமது சொந்தப் பரிசுத்தத்தை) எல்லாரிலும் சிறியவனின் சாக்கில் (வாழ்க்கை யில்) போட விரும்புகிறார். அப். பவுல் தன்னைக் குறித்து, '*பரிசுத்தவான்க ளெல்லாரிலும் மிகச் சிறியவனிலும் சிறியவன்*' என்று கூறுகிறார் (எபே. 3 : 8 -Eng.). அவர், "இந்நாள் வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நல்மனச்சாட்சியோடே தேவனுக்குமுன்பாக நடந்துவந்தேன்" (அப். 23 : 1) என்று அறிக்கையிடுவதிலிருந்து, அவரது சாக்கிலும் தேவன் அந்த 'வெள்ளிப் பாத்திரத்தைப்' போட்டிருந்தார் என்று நாம் நிதானிக்கலாம். பென்யமீன், தன்னுடைய சாக்கில் யோசேப்பின் வெள்ளிப் பாத்திரம் (கர்த்தருடைய பரிசுத்தம்) இருந்ததற்கான எந்த ஒரு மேன்மையையும் தனக்கென்று எடுத்துக்கொள்ள முடியாது; ஏனென்றால் அந்தப் பாத்திரம் யோசேப்பின் (கர்த்தராகிய இயேசுவின்) வெளிப்படையான கட்டளைப் படி, அவனது வீட்டு விசாரணைக்காரனால் (பரிசுத்த ஆவியானவர்) அந்தச் சாக்கினுள் போடப்பட்டது.

பரிசுத்தமும் தாழ்மையும் ஒருங்கிணைந்தே செல்லுகின்றன. மிகுந்த தாழ்மையுள்ளவர்களே மிகுந்த தூய்மையானவர்கள். வெள்ளிப்பாத்திரம் (அதாவது கர்த்தராகிய இயேசுவின் இருதயத்தைப் போன்ற தூய இருதயம்) மிகுந்த தாழ்மையுள்ளவர்களிடத்திலேயே (எல்லாருக்கும் இளையவர் களிடத்திலேயே) காணப்படும்.

"*முத்தவன் சாக்குமுதல் இளையவன் சாக்குமட்டும் அவன் சோதிக்கும் போது, அந்தப் பாத்திரம் பென்யமீனுடைய சாக்கிலே கண்டுபிடிக்கப்பட்டது*" (ஆதி. 44 : 12). அருமை நண்பனே, இன்று பரிசுத்த ஆவியானவர் உன் னுடைய சாக்கைச் (ஜீவியத்தை) சோதித்துப் பார்ப்பாரானால், அந்த வெள்ளிப் பாத்திரத்தை அவர் உன்னில் காண்பாரா? ***உன் இருதயம் கர்த்தராகிய இயேசுவின் இருதயத்தைப் போன்ற அதே தூய்மையுள்ளதாக இருக்கிறதா?***

ஜூன் 3

அதரிசனமான தேவனைத் தரிசித்தல்

'***விசுவாசத்தினாலே அவன் (மோசே) அதரிசனமானவரைத் தரிசிக்கிறது போல சகிக்கிறவனாயிருந்து, ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தைவிட்டுப்போனான்***' (எபி. 11 : 27-Eng.).

எகிப்து என்பது பாவத்தையும், இவ்வுலகத்தின் பாவ சிற்றின்பங் களையும் குறிக்கிறது. தேவனுடைய பிள்ளைகள் என அழைக்கப்படும்

அநேகர் ஏன் 'எகிப்தை' விட்டுவிட முடியாதவர்களாயிருக்கின்றனர்? அதன் காரணம் அவர்களுக்கு அதரிசனமான தேவனைத் தரிசிக்கக்கூடிய விசுவாசக் கண்கள் இல்லாதிருப்பதே ஆகும். மோசே எகிப்தை விட்டு விடாதிருந்திருப்பானாகில் தேவன் அவனை இஸ்ரவேலருக்குத் தலை வனாகத் தெரிந்தெடுத்திருக்கவோ, அவனைக் கொண்டு தமது மகத்தான திட்டத்தை நிறைவேற்றியிருந்திருக்கவோ முடியாது.

மனுஷகுமாரன் வரும்போது பூமியில் (எகிப்தை விட்டுவிடும் படியான) விசுவாசம் காணப்படுமோ? ஒரு காலத்தில் எகிப்தை விட்டு விட்ட பலரும் தற்போது அதை அணைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஏன்? அவர்கள் தங்கள் விசுவாசக் கண்களை இழந்துவிட்டார்கள்!

'*அவன் அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல சகிக்கிறவனாயிருந்து*' - மோசே தேவசித்தத்தின்படி பாடுகளைச் சகித்துக்கொண்டிருந்தபோது, அவன் அதரிசனமான தேவனைத் தரிசித்துக்கொண்டிருந்தான் என்பது இதன் மூலமாகத் தெரியவருகிறது. சபையின் முதல் இரத்தசாட்சியான ஸ்தேவான், தான் கல்லெறியப்படுவதற்குச் சற்று முன்பு, "*தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும்*" கண்டான் (அப். 7 : 55). சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகியோர் அக்கினிச் சூளையைச் சகித்துக்கொண்டிருந்தபோது, அக்கினியின் நடுவே அவர்கள் அதரிசனமான தேவனைக் கண்டனர். அம்மூன்று தேவதாசர்களும் எரிகிற அக்கினிச் சூளைக்குள் இருந்தபோது, ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அதரிசனமான தேவனைக் கண்டது போல, நீயும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நல்ல போர்ச்சேவகனாகத் **தீ**ங்கனுபவிக்கும் வேளையில் உன்னிலுங்கூட மற்றவர்கள் அதரிசனமான தேவனைக் காண்பார்கள்.

எனவே நாமும் தேவனுடைய சித்தத்தின்படி சந்தோஷமாகப் பாட னுபவிப்போமாக - ஏனெனில் அப்பாடுகள் அதரிசனமான தேவனைத் தரிசிக்கும்படி இவ்வுலகில் நமக்குக் கிடைக்கக்கூடிய அரிய வாய்ப்புகளாகும்.

ஜூன் 4

ஆவியானவர் அசைவாடுவதற்கேற்ற சமயம்

"***பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்***" (ஆதி. 1 : 2).

தேவ ஆவியானவரைப் பற்றி வேதாகமத்தில் முதன்முதலாகக் குறிப்பிடப்பட்டிருப்பது, தண்ணீரோடு நெருங்கிய சம்பந்தமுள்ளதா

யிருக்கிறது - தண்ணீர்கள் துன்பங்களைக் காட்டுகின்றன (சங். 69 : 1, 2). பெரும்பாலும் எழுப்புதல் என்பது நாம் துன்பங்களின் மத்தியில் இருக்கையில், நம் விசுவாசம் சோதிக்கப்படும் நேரத்திலேயே உண்டாகிறதே யன்றி, நாம் வசதியாக இருக்கும்போது அல்ல.

"பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது" - "*ஒழுங் கின்மையும் வெறுமையுமாய்*" என்பது மூலபாஷையில் 'குழப்பமும் வெறுமையும்' என்றும் பொருள்படுகின்றன (ஏசாயா 34 : 11 காண்க). ஆம்! எல்லாம் குழப்பமும் வெறுமையுமாய் இருப்பதை நாம் காணும் சமயத் திலும் இடத்திலும் தான் 'ஆவியானவரின் அசைவாடுதல்' துவங்குகிறது. ஆதியாகமம் 1 : 2 தற்காலத்தைச் சரியாகச் சித்திரிக்கிறது - எங்கு பார்த் தாலும் குழப்பமும் வெறுமையும் அந்தகாரமுமே நிலவுகிறது. எனவே பரிசுத்த ஆவியானவர் அசைவாட வேண்டிய சரியான நேரம் இதுவே; தேவ ஆவியானவர் வல்லமையாய்க் கிரியை செய்ய வேண்டிய சரியான, ஏற்ற வேளையும் இதுவே - நாம் விசுவாசத்துடன் இதற்காக ஜெபிப்போமாக.

பாவியான ஒரு மனுஷன் மீது தேவன் பொழிந்தருளக்கூடிய சகல ஆசீர்வாதங்களிலும் மிகப் பெரிய ஆசீர்வாதம் அவனுக்காக மரிக்கும்படி தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த தேவ குமாரனாகிய கிறிஸ்துவின் தியாக மரணமே ஆகும். இருப்பினும், அவரது மரணத்திற்கு முன்னதாக, சூரியன் தன்னை மறைத்துக்கொண்டதால் மூன்று மணி நேரம் பூமியெங்கும் பயங் கரமான அந்தகாரம் உண்டாயிற்று. அருமையான வாசகரே, *இது போலவே* ***நாம் தேவனுடைய மேன்மையான ஆசீர்வாதங்களைப் பெறும் முன்*** நமது நீதியின் சூரியனாகிய இயேசு நமது ஜெபங்களுக்குப் பதிலளிக்காமலிருப் பதின் மூலமாகவோ அல்லது நம் ஜெபங்களுக்குத் தாமதமாகப் பதில் அளிப்பதின் மூலமாகவோ நம்மை விட்டுத் தம்மை மறைத்துக்கொள்வ தாகப் பல சந்தர்ப்பங்களில் நாம் உணரக் கூடும். அன்று சகலமும் ஒழுங் கின்மையும் வெறுமையுமாய், இருளாகவும் குழப்பமாகவும் இருந்த வேளை யில் ஜலத்தின் மேல் அசைவாடின பரிசுத்த ஆவியானவர் அசைவாடக் கூடிய ஏற்ற தருணம் அதுவே; ஆகவே நாம் தைரியம் கொள்ளுவோமாக.

ஜூன் 5

நம்ப முடியவில்லையா?

"***நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்***" (மத். 6 : 34).

நம் மனது கர்த்தரில் தங்கித் தரித்திராதவாறு பிசாசானவன் எப்போதும் அதைத் திசைதிருப்ப முயலுகிறான். '*ஏவாள் சர்ப்பத்தின்*

தந்திரத்தினாலே வஞ்சிக்கப்பட்டது போல உங்கள் மனதும் ஏதேனும் ஒரு விதத்தில் கிறிஸ்துவின்பால் உங்களுக்குள்ள உள்ளார்ந்த உண்மையானதும் தூய்மையானதுமான அர்ப்பணிப்பினின்று விலக்கப்படுமோவென்று நான் பயந்திருக்கிறேன்' (II கொரி. 11 : 3) என்று வேறொரு ஆங்கில மொழி பெயர்ப்பு கூறுகிறது. ***கர்த்தரில் நம்பிக்கையாயிருத்தல் என்பது, நம் மனது கர்த்தரிலேயே எல்லா உள்ளார்ந்த உண்மையோடும் தூய்மையோடும் தங்கியிருப்பதாகும்.*** ஏவாளின் மனது கெடுக்கப்பட்டபோது அதற்கு மேல் அவளால் தேவனை நம்ப முடியவில்லை. அதற்குப் பதிலாக, சர்ப்பத்தின் வார்த்தைகளையே அவள் நம்பினாள். நம் மனதைத் துய்மையானதாகக் காத்துக்கொள்ள வேண்டியது எவ்வளவு இன்றியமையாததாயிருக்கிறது! நமது மனதின் எண்ணங்கள் கெடுக்கப்பட்டுவிடுமாயின், அதற்குப் பின் நம்மால் தேவனில் நம்பிக்கை வைக்க முடியாது. எனவே நம் மனதைத் தூய்மையாகக் காத்துக்கொள்ள நாம் எச்சரிக்கையாய் இருப்போமாக! நம் மனது கர்த்தரில் தங்கியிருப்பதற்கு இது ஒரு அடிப்படையான தேவையாயிருக்கிறது.

பிரச்சினைகள் எழும் வேளைகளில் பொதுவாக நம் கண்களை நாம் கர்த்தரிடத்திலிருந்து எடுத்து பிரச்சினைகளின் மீது வைத்துவிடுகிறோம்; இது நமக்குக் 'கவலைகளைக்' கொண்டுவருகிறது. 'கவலைப்படுதல்' என்பது கர்த்தரை நம்புவதற்கு எதிரான ஒன்றாகும். "*நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்*" (மத் . 6 : 34). பிசாசானவன் எப்போதும் நாளையைக் குறித்த கவலையான எண்ணங்களையே நம்மில் கொண்டுவர முற்படுகிறான். "*ஐசுவரியமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது*" (லூக்கா 12 : 16) என நாம் வாசிக்கிறோம். எனினும் அவன் நித்திரை செய்ய முடியாத அளவுக்கு மறுநாளைப் பற்றி அவ்வளவு கவலையுள்ளவனாயிருந்தான்: "*நான் என்னசெய்வேன்? என் தானியங்களைச் சேர்த்து வைக்கிறதற்கு இடமில்லையே*". பணத்தை எவ்வாறு சேகரிப்பது அல்லது சேகரித்ததை எவ்விதம் பாதுகாப்பது என்பது குறித்த கவலையைப் பிசாசானவன் நம்மில் போட முயற்சிப்பான்.

தேவபிள்ளையே! இப்படிப்பட்ட பிசாசின் தந்திரங்களுக்கு நீ இரையாகாதே. கர்த்தரிடத்தில் உன்னை ஒப்புவித்து, அவர் மேல் நம்பிக்கையாயிரு. விரிவாக்கப்பட்ட ஆங்கில மொழிபெயர்ப்பில் (Amp. Version) ஏசாயா 26 : 3 இவ்வாறு கூறப்பட்டுள்ளது: '*யாருடைய மனது (தன் விருப்பத்திலும், தன் சுபாவத்திலும்) உம்மீது தங்கியிருக்கிறதோ, அவன் தன்னை உமக்கு ஒப்புக்கொடுத்தும், உம்மீது சார்ந்துகொண்டும், உம்மில் உறுதியான நம்பிக்கைவைத்தும் இருப்பதால் அவனை நீர் பூரண சமாதானத்துடனும், நிரந்தரமான சமாதானத்துடனும் பராமரித்துக் காத்துக் கொள்வீர்*'. இது நம் மனதைப் பிரகாசிப்பிப்பதாயிருக்கிறது.

ஜூன் 6

மரணத்திற்கேதுவான கண்ணீர்

"தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது; லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது" (II கொரி. 7 : 10).

லௌகீக துக்கம் மரணத்தை உண்டாக்குகிறது. இதன் பொருள் யாது? இங்கே 'மரணம்' என்பதற்கு இரண்டு அர்த்தங்கள் உள்ளன. ஒன்று, சரீரப் பிரகாரமான மரணம். உலகத்திற்குரிய காரியங்களுக்காக நீ துக்கித்தாலோ அல்லது கண்ணீர் சிந்தினாலோ தேவன் குறித்திருக்கும் காலத்திற்கு முன்னதாகவே நீ ஒருவேளை மரிக்க நேரிடலாம். ஆவிக்குரிய காரியங்களுக்காக தேவனுக்கு முன்பாக அழுது ஜெபிப்பவர்கள் பெலத்தின் மேல் பெலனடைவார்கள் (சங். 84 : 6, 7). ஆனால் சுய அனுதாபத்தினால் அழுபவர்கள் பெலவீனத்தின் மேல் பெலவீனம் அடைவார்கள். மரணம் என்பதின் மற்றொரு பொருள், 'தேவனை விட்டுப் பிரிதல்' என்பதாகும். பணம், ஒரு உத்தியோகம், ஒரு வாகனம், அல்லது ஒரு வீடு போன்றவற்றிற்காகவே நீ எப்பொழுதும் தேவனுக்கு முன்பாக அழுது கொண்டு இருப்பாயானால், எவ்வளவதிகமாக நீ அழுகிறாயோ, அவ்வளவதிகமாய் நீ தேவனை விட்டுப் பிரிக்கப்படுவாய்; உன் கண்ணீர் நீ பின்மாற்றம் அடைவதற்கு மட்டுமே ஏதுவாயிருக்கும்; சரீரப்பிரகாரமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் நீ நாளுக்கு நாள் அதிகமதிகமாகத் தாழ்ந்த நிலைக்குச் சென்று கொண்டேயிருப்பாய். ஆனால் தேவனுக்கேற்ற துக்கம் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது.

மற்றவர்கள் உன்னைப் புறக்கணிக்கும்போது, நிந்திக்கும்போது, உன்னைக் குறித்து **தீ**மையாகப் பேசும்போது அல்லது உன்னைச் சிறுமைப்படுத்தும்போது நீ அழுவது 'பாதாளத் துக்கங்கள்' என்றும் அழைக்கப்படுகிறது (சங். 18 : 5 -Eng.). நரகத்தில் ஜனங்கள் ஏன் அழுகிறார்கள்? மனந்திரும்புதலுக்கேதுவான மனஸ்தாபம் அடைந்ததினால் அல்ல; சுய அனுதாபத்தினிமித்தமே அங்கு அவர்கள் அழுகிறார்கள். உலகில் நீ வாழும்போது சுய அனுதாபத்தினால் அழுதுகொண்டிருப்பாயானால், நீ மரிக்கும்போதும் சுயஅனுதாபத்துடனேயே மரிப்பாய். எனவே மற்றவர்கள் உன்னை வெறுத்து, நிந்தித்து, உன் மீது பொய்யாய்க் குற்றஞ் சாட்டும்போது பரலோகத்தில் உன் பலன் மிகப் பெரிதாயிருக்கிறது என்பதை உணர்ந்து, நீ மகிழ்ந்து களிகூர வேண்டும் (மத். 5 : 11, 12).

அருமையான தேவபிள்ளையே, பாதாளத்தின் துக்கங்கள் உன்னைச் சூழ்ந்துகொள்ள நீ அனுமதியாதே. உனக்கு அருமையான வர்கள் மரிக்கும்போது, உன் துக்கம் ஒரு அளவுக்குட்பட்டதாக இருக்க வேண்டும் - நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போல, நீ துக்கத்தில் மூழ்கிவிடாதே! கவனமாயிரு. உலகின் மாயையானவைகளுக்காக நீ கண்ணீர் சிந்தாதே. உலகப் பதவிகள், சொத்து, கனம், மகிமை ஆகிய வற்றை நீ இழந்துபோக நேர்ந்தால், அதினிமித்தமாக நீ அழாதே. உண்மையில், அப்போதுதான் நாம் கர்த்தரில் மகிழ்ந்து களிகூர வேண்டும். இது தேவன்பேரில் நீ கொண்டிருக்கும் அன்பிற்கான சோதனை ஆகும். அந்தச் சோதனைக்குப் பின்பு உனக்குத் தேவன் இன்னும் மேலான ஆசீர்வாதத்தை அருளப்போகிறார்!

ஜூன் 7

ஈர்ப்பு விசை

"அவர் உத்தரமண்டலத்தை வெட்டவெளியிலே விரித்து, பூமியை அந்தரத்திலே தொங்கவைக்கிறார்" (யோபு 26 : 7).

'*அவர் பூமியை அந்தரத்திலே தொங்கவைக்கிறார்*' - பூமியும் மற்ற கிரகங்களும் ஈர்க்கும் சக்தியுள்ளவையாய் இருப்பதினாலேயே அவை அந்தரத்தில் தொங்குகிறவைகளாக வான மண்டலத்தில் தங்கள் பாதையில் சீராகச் சுற்றிவந்து கொண்டிருக்கின்றன என்ற உண்மையை விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கும் வரை, இந்த மர்மமான வேதபகுதியின் இரகசியத்தை ஒருவராலும் அறியக்கூடாமல் இருந்தது. இருப்பினும் இன்று வரையிலும் உண்மையில் இந்த ஈர்ப்பு விசை என்பது என்ன என்றும், அதன் தோற்றம் எவ்விதம், அது ஏன் உண்டாயிருக்கிறது என்றும் எவரும் அறியார்கள். வேதாகமம் இதற்கான பதிலை உடையதாயிருப்பதால் தேவனுக்கு ஸ்தோத்திரம். '*தேவன் சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறார்*' (எபி. 1 : 3). தேவனே இந்தப் பூமியைத் தாங்கு கிறவராய் இருக்கிறார்.

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம் யாது? பூமியானது அந்தரத்தில் தொங்குமானால், பூமியிலுள்ள தேவஜனங்களும் அவ்வாறே 'அந்தரத்தில்' இருக்க வேண்டும் - தேவனையே அன்றி வேறொன்றையும் அவர்கள் தங்கள் ஆதாரமாகக் கொள்ளக் கூடாது. நமது விசுவாசம் கர்த்தரையும், அவரது வார்த்தையையும், அவரது வல்லமையையுமே அன்றி, வேறொன்றையும் சார்ந்ததாய் இருக்கக் கூடாது.

ஆவிக்குரிய ஈர்ப்பு விசை ஒன்று உண்டு. அதன் மூலமாகவே நாம் தாங்கப்பட்டுக்கொண்டிருக்கிறோம் - '*நாம் நிலைகொண்டு நிற்கிற கிருபை*' (ரோமர் 5 : 2 -Eng.). ஆம்! நம்மைத் தாங்கிப் பாதுகாக்கும் தேவனுடைய கிருபையே அந்த ஈர்ப்பு விசையாகும். நமது முழு நம்பிக்கையையும் நாம் தேவன் மீது வைத்து, அவரது வல்லமையுள்ள கிருபை நம்மைத் தாங்கும்படி நம்மை நாம் தாழ்த்தி அவருக்கு ஒப்புக்கொடுப்போமாக.

ஜூன் 8

மிகச் சிறிய தண்டனை!

"அப்பொழுது காயீன் கர்த்தரை நோக்கி: எனக்கு இட்ட தண்டனை என்னால் சகிக்கமுடியாது ... என்றான்" (ஆதி. 4 : 13, 14).

உண்மையில், காயீன் குற்றமற்ற தன் சகோதரனைக் கொலை செய்தது, தேவனிடத்தில் கோபம் கொண்டது, அவரிடம் பொய் உரைத்தது, அவரையே கேள்வி கேட்டது போன்ற மிகக் கொடிய பாவங்களைச் செய்திருந்தபோதிலும், அவன் தண்டிக்கப்பட வேண்டிய விதத்தில் தேவன் அவனைத் தண்டிக்கவில்லை. உண்மையில், அவர் விதித்த தண்டனைகள் அவனுக்கு மறைவான ஆசீர்வாதங்களாகவே இருந்தன.

ஆனால் காயீனோ, 'என்னால் சகிக்க முடியாத அளவுக்கு என் *பாவங்கள்* பெரிதானவை' என்று கூறுவதற்குப் பதிலாக, 'நீர் எனக்கு இட்ட *தண்டனை* என்னால் சகிக்க முடியாத அளவுக்கு அதிகமாயிருக்கிறது' என்கிறான். இது அவன் தன் மீது தேவன் காண்பித்த இணையற்ற அன்பைப் பகிரங்கமாக அவமதிப்பதாக இருந்தது. அவனது சொந்தப் பாவங்களே அவனை அத்தேசத்திலிருந்து துரத்திவிட்டனவேயன்றி, தேவன் அவனைத் துரத்திவிடவில்லை. ஆனால் அவனோ, "இன்று என்னை இந்தத் தேசத்திலிருந்து துரத்திவிடுகிறீர்" (வச. 14) என்று தேவனே தன்னைத் துரத்திவிட்டதாக அவரையே குற்றஞ்சாட்டுகிறான். இன்றும் கூட அநேக பாவிகள் காயீன் பேசியது போலவே பேசுகிறார்கள்.

மாறாக, தாவீது ராஜா கடிந்துகொள்ளுதலை எவ்வாறு ஏற்றுக் கொண்டான் என்று பாருங்கள். தீர்க்கதரிசியானவன் தாவீதின் பாவத்தி னிமித்தம் அவன் மேல் வரவிருந்த தேவனுடைய நியாயத்தீர்ப்பை அவனுக்குத் தெரிவித்தபோது, அவன் தேவனுக்கு முன்பாகத் தன்னை மிகவும் தாழ்த்தி, அவரது தண்டனையை ஏற்றுக்கொண்டான். நாம் அவனது சங்கீதங்களில் இதைக் குறித்து வாசிக்கிறோம்: "*என் பாவம்*

எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது. தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்" (சங். 51 : 3, 4) என்று அவன் கதறி அழுகிறான். மற்றொரு சந்தர்ப்பத்தில் அவன் கர்த்தரை நோக்கி, "*இதோ, நான்தான் பாவஞ் செய்தேன்; நான்தான் அக்கிரமம்பண்ணினேன்; ... உம்முடைய கை எனக்கும் என் தகப்பன் வீட்டுக்கும் விரோதமாயிருப்பதாக*" (II சாமு. 24 : 17) என்று கூறுகிறான்.

தேவனுடைய பிள்ளையே! நாமுங்கூட தாவீதின் இருதயத்தைப் போன்ற இருதயம் உள்ளவர்களாய் இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். நாம் தவறு செய்யும்போது நம்மைத் தாழ்த்தி எஸ்றாவைப் போல், '*தேவரீர் எங்கள் அக்கிரமத்துக்குத் தக்க ஆக்கினையை எங்களுக்கு இடாமல் தப்பவிட்டீர்*' என்று சொல்லுவோமாக (எஸ்றா 9 : 13).

"*அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார்*" (சங். 103 : 10).

ஜூன் 9

இயேசுவே, நான் உம்மை நேசிக்கிறேன்!

"***கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?***"
(ரோமர் 8 : 36).

போதகர் ஒருவர் ஒரு தரிசனம் கண்டார். அதில் மூன்று சகோதரிகள் முழங்காற்படியிட்டு ஜெபித்துக்கொண்டிருக்கையில் கர்த்தராகிய இயேசு அங்கு வந்தார். அவர் முதல் சகோதரிக்குச் சமீபமாகக் கூட செல்லாமல், அவளைக் காணாதவர் போல இருந்தார். இரண்டாம் சகோதரியை நோக்கி அவர் ஒரு புன்முறுவல் செய்துவிட்டு, மூன்றாம் சகோதரியிடம் சென்று அவளுடைய தலையின் மேல் தமது கரத்தை வைத்தார். இதைக் கண்ட போதகர், முதல் சகோதரி கர்த்தரில் அன்புகூருவ தில்லை போலும் என நினைத்தார். கர்த்தர் புன்முறுவலோடு நோக்கிய அந்த இரண்டாம் சகோதரி அவரைச் சிறிதளவு நேசிக்கிறவளாய் இருக்க வேண்டும் என்றும், மூன்றாம் சகோதரி அவரை நிச்சயமாகவே மிகவும் அதிகமாக நேசிக்கிறவளாய் இருக்க வேண்டும் என்றும் அந்தப் போதகர் நினைத்தார். அவர் இவ்வாறு சிந்தித்துக்கொண்டிருக்கையில், கர்த்தர் தாமே அவருடன் இவ்வாறு பேசினார்: 'என் மகனே, உண்மையோ நீ நினைத்த

தற்கு நேர்மாறானது. முதலாம் சகோதரி என்னை மிகவும் அதிகமாக நேசித்து, என் அன்பை மிக அதிகமாக நம்பியிருக்கிறாள்; ஆகவே நான் அவளுடைய ஜெபங்களுக்கு உடனடியாகப் பதில் அளிக்காவிட்டாலும், நான் அவளுடன் பேசாவிட்டாலும் அவள் அசைக்கப்படுவதில்லை என்றும், அவள் என்னை விட்டுப் போகமாட்டாள் என்றும் நான் அறிவேன்; ஆகையினாலேயே நான் அவள் அருகில் செல்லவில்லை. இரண்டாம் சகோதரி சற்று நிலையற்றவள். எனவே அவ்வப்போதாகிலும் நான் அவள்பால் எனக்குள்ள அன்பையும் கரிசனையையும் அவளுக்கு வெளிப்படுத்தாவிடில் அவள் சோர்ந்துபோய்விடுவாள். மூன்றாம் சகோதரி ஆவிக்குரிய பிரகாரமாக மிகவும் பெலவீனமானவள். அவளுக்கு என் மீது ஆழமற்றதோர் அன்பு மாத்திரமே உள்ளது. அவள் கேட்பதை நான் உடனே அவளுக்குக் கொடுக்காவிட்டால், அவள் முறுமுறுத்து, முறை யிட்டு, என் மீதுள்ள தனது அன்பில் குளிர்ந்து, ஒருவேளை என்னை விட்டுவிடவும் கூடும்'.

அருமையான தேவபிள்ளையே, நீ அந்த மூன்றாம் சகோதரியைப் போல் இருக்கிறாயா? உன் ஜெபத்திற்குக் கர்த்தர் பதில் கொடுக்காதபோது, அல்லது உன் திட்டங்களும் வாஞ்சைகளும் நிறைவேறாமற்போகும்போது அவர் மீதுள்ள உன் அன்பு அசைக்கப்படுகிறதா? நாமும், அப். பவுலைப் போல, "*கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திர வமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே*" என்று சொல்ல கர்த்தர் தாமே நமக்கு உதவி செய்வாராக. அவருடைய அன்பை விட்டு ஒன்றும் நம்மைப் பிரிக்க முடியாத அளவுக்குப் பலமான அன்பினால் கர்த்தர் தாமே நம் இருதயங்களை நிரப்புவாராக!

ஜூன் 10

அழிவுண்டாக்கும் ஓர் ஆயுதம்

"***உன் மாம்சத்தைப் பாவத்துக்குள்ளாக்க உன் வாய்க்கு இடங் கொடாதே; ... தேவன் உன் வார்த்தைகளினாலே கோபங்கொண்டு, உன் கைகளின் கிரியையை அழிப்பானேன்?***" (பிர. 5 : 6).

நம் வாயினால் நாம் பாவம் செய்வோமாயின், நாம் கர்த்தருக்காக எவ்வளவு பெரிய காரியங்களைச் செய்திருந்தாலும், நம் வேலை அல்லது

ஊழியம் அழிக்கப்பட்டுவிடும். இது மோசேயின் ஜீவியத்தில் எவ்வளவு உண்மையாயிருந்தது! கானானுக்கு ஜனங்களை வழிநடத்த வேண்டிய அவனே தன் உதடுகளினால் பதறிப் (புத்தியீனமாய் - Eng.) பேசினபடியால் அவனால் அதனுள் பிரவேசிக்க முடியாமற்போயிற்று. "*உன் வாய்மொழிகளால் சிக்குண்டாய்*" (நீதி. 6 : 2). வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தைத் தாங்கள் அடைய முடியாது என்று கூறி, தேவனுக்கு விரோதமாக முறுமுறுத்த இஸ்ரவேலரை நோக்கி தேவன், "*நீங்கள் என் செவிகள் கேட்கச் சொன்னபிரகாரம் உங்களுக்குச் செய்வேன்*" என்று கூறினார் (எண். 14 : 28).

ஒரு மனிதனுடைய ஆத்துமாவும் அவனுடைய நாவும் ஒன்றோடொன்று சம்பந்தமுள்ளவையாயிருக்கின்றன - "*கர்த்தாவே, பொய் **உதடுகளுக்கும்** கபட**நாவுக்கும்** என் **ஆத்துமாவைத்** தப்புவியும்*" (சங். 120 : 2). நீ **தீ**ட்டுப்பட்ட நாவையுடைய ஒரு மனிதனாயிருப்பாயாகில், உன் ஆத்துமா முழுவதும் **தீ**ட்டுப்பட்டதாயிருக்கிறது.

சீயோனிலுள்ள பரிசுத்தவான்களின் வாய் அல்லது நாவைப் பற்றி குறிப்பாகச் சொல்லப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம்: "*இவர்களுடைய வாயிலே கபடம் காணப்படவில்லை; இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்குமுன்பாக மாசில்லாதவர்களாயிருக்கிறார்கள்*" (வெளி. 14 : 5). எனவே ஒருவரது வாயின் வார்த்தையில் மாசில்லையெனில் அவரது ஜீவியத்தில் மாசில்லை என்பதே வெளிப்படையான உண்மையாகும்.

ஜூன் 11

இயற்கை விதி மாற்றப்பட்டது!

"விசுவாசத்தினாலே அவர்கள் சிவந்த சமுத்திரத்தை உலர்ந்த தரையைக் கடந்துபோவதுபோலக் கடந்துபோனார்கள்; எகிப்தியர் அப்படிச் செய்யத் துணிந்து அமிழ்ந்துபோனார்கள்" (எபி. 11 : 29).

விசுவாசமுள்ளவர்களுக்கென திறக்கப்பட்டிருக்கும் வழி அவிசுவாச முள்ளவர்களால் பயன்படுத்தப்பட முடியாது. விசுவாசத்தினாலே இஸ்ரவேலர் உலர்ந்த தரையைக் கடந்து போவது போல சிவந்த சமுத்திரத்தைக் கடந்துபோனார்கள்; எனினும் அதே பாதையைப் பயன்படுத்த முயற்சித்த எகிப்தியருக்கோ அது அழிவையே கொண்டுவந்தது. இஸ்ரவேலருக்கு விசுவாசம் இருந்ததினிமித்தம் அவர்கள் சிவந்த சமுத்திரத்தைக்

கடந்து சென்றனர் என்பதை இது வெளிப்படுத்துகிறது. அவர்கள் சமுத்திரத்தினூடாக வெட்டாந்தரையில் நடந்துசென்றபோது, போகப்போக அந்தத் தரை மென்மேலும் ஆழமானதாகவே அவர்களுக்குத் தோன்றியிருக்கக் கூடும். மேலும் எழுத்தின்படியான யாதொரு தடுப்புச்சுவருமின்றி இருபுறமும் பெரிய மதிலைப் போல் எழும்பி நின்ற சமுத்திரத்தின் தண்ணீர் எந்த க்ஷணப்பொழுதும் மறுபடியும் திரும்பிவரக்கூடிய நிலையில் அவர்களை அச்சுறுத்துவதாய் அவர்களுக்குத் தோன்றியிருக்கக் கூடும். மேலும் அவர்கள் நடந்து சென்றபோது இரு புறமும் மதில் போல் நின்ற தண்ணீரில் அவர்கள் கண்ட நீர்வாழ் ஜந்துக்களான திமிங்கலம், முதலை போன்றவை தண்ணீரிலிருந்து குதித்து வெளியே வந்து அவர்களைத் தாக்கப்போவது போல அவர்களைப் பயமுறுத்துவதாயும் இருந்திருக்கக் கூடும். இச்சந்தர்ப்பத்தில் விசுவாசம் இல்லாதவர்கள் பின்னிட்டுத் திரும்பிவிட நினைத்திருக்கவும் கூடும்.

பார்வோனும் அவனது சேனையும் இஸ்ரவேலரைத் தொடர்ந்து சிவந்த சமுத்திரத்தினுள் சென்றபோது, சடுதியாகத் தண்ணீர் பின்வாங்கியிருந்த காரணத்தினால், அதிக சேறும் சகதியுமான தரையில் அவர்களது இரதங்கள் சேற்றில் சிக்கிக்கொண்டதைக் கண்டனர். இருப்பினும் இஸ்ரவேலருக்கோ கர்த்தரின் வாக்குத்தத்தத்தில் விசுவாசம் இருந்தது: "ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் கொடுப்பேன் என்று நான் ஆணையிட்ட தேசத்தில் உங்களைக் கொண்டுபோய், அதை உங்களுக்குச் சுதந்தரமாகக் கொடுப்பேன்; நான் கர்த்தர்" (யாத். 6 : 8).

உலர்ந்த தரை, விசுவாசத்தினால் நடப்பவர்களுக்கு மாத்திரமே உரியது. இயற்கைக்கு அப்பாற்பட்டவரை நம்புகிறவர்களுக்கே இயற்கை விதியானது இயற்கைக்கு அப்பாற்பட்டதாயிற்று. எலியாவுக்கென்று மட்டுமே காகங்கள் தங்கள் இயற்கையான தன்மையை மாற்றிக்கொண்டன. விசுவாசியாதவர்களின் முன்னிலையில் சமுத்திரத்தின் தண்ணீரானது தன் இயற்கை விதியைப் பின்பற்றி, மறுபடியும் எளிதாகத் திரும்பிவிட்டது.

அன்பான வாசகரே, தேவன் யோசுவாவின் விசுவாசத்தைக் கனப்படுத்தி, சூரியன், சந்திரன் ஆகியவற்றின் இயற்கை விதியை மாற்றி, ஏறக்குறைய ஒரு பகல் முழுவதும் வானத்தில் தாங்கள் இருந்த இடங்களில் அவற்றைத் தரித்து நிற்கச் செய்தது போல், நீரும் விசுவாசித்து நடந்தால் உமக்காகவும் இயற்கை விதிகளை மாற்றும்படி அவர் காத்திருக்கிறார். "*நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை*" (ஏசாயா 43 : 2) என்று வாக்குரைத்தவர் உம்மோடிருக்கிறார்!

ஜூன் 12

உனக்குப் பரிசுத்தவான்களின் ஐக்கியம் தேவை

"பின்பு, தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்" (ஆதி. 2 : 18).

தேவனாகிய கர்த்தர் முதன்முதலாக ***நல்லதல்ல*** என உரைத்த விஷயம், மனுஷன் தனிமையாயிருப்பது பற்றியதே: இன்றும் தேவன் அளிக்கும் தூது இதுவே - பரிசுத்தவான்களின் ஐக்கியமின்றி ஜீவிப்பது ***நல்லதல்ல***. ஆம், மறுபடியும் பிறந்த தேவபிள்ளைகள் அநேகரும் இந்த மேன்மையான சத்தியத்தை அறியாதவர்களாய், ஆராதனையையும், பரிசுத்தவான்களின் ஐக்கியத்தையும் தவிர்க்கின்றனர். '*சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிற வழக்கமுள்ளவர்களாயிருப்பது போல நாமும் விட்டு விடாமல்*' (எபி. 10 : 25 -Eng.) என்று கூறப்பட்டிருக்கிறபடி, சபை கூடிவருதலை விட்டுவிடுவது முதல் நூற்றாண்டில் *சிலருடைய* பழக்கமாக மாத்திரமே இருந்தது. அதற்காகக் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஆனால் இக்கடைசி நூற்றாண்டில் இது *பலருடைய* பழக்கமாயிருக்கிறது!

"*ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன்*" - தேவன் உன்னைச் சிருஷ்டித்து, உனக்கு மறுபடியும் பிறந்த அனுபவத்தைத் தந்திருப் பாராயின், அவர் உனக்கு ஏற்ற துணையையும் வைத்திருப்பார் - அதாவது உனக்குத் தகுந்ததொரு பரிசுத்தவான்களின் ஐக்கியத்தையும் அவர் ஏற்படுத்தியிருக்கிறார். நீ ஐக்கியங்கொள்ள வேண்டிய சபையை உன் விருப்பம் போல் தெரிந்துகொள்ளக் கூடாது. '*கர்த்தரிடத்திலிருந்து எனக்குத் துணை வரும்*' (சங். 121 : 2 -Eng.).

'ஆதாம்' கிறிஸ்துவுக்கும், 'ஏற்ற துணை' கிறிஸ்துவின் மண வாட்டிக்கும் நிழலாட்டமாக இருக்கின்றனர். நம்முடைய கர்த்தர் தாமே தமக்குப் பூரணமாகப் பொருத்தமான ஒரு மணவாட்டியை உருவாக்குவார் என்பதை அறிவது நமக்கு எத்தகைய ஊக்கமளிப்பதாயிருக்கிறது! இந்தக் கிரியை கர்த்தருடைய தோட்டத்தில் (சபையில்) நடைபெறுகிறது.

நாம் எப்போதும் பரிசுத்தவான்களின் ஐக்கியத்தில் ஜீவிப்போமாக! ஏனெனில் அங்கேதான் நாம் கிறிஸ்துவின் மணவாட்டியாக உருவாக்கப் படக் கூடும்.

ஜூன் 13

கர்த்தர் உன்னோடே இருக்கிறார்

"கர்த்தருடைய தூதனானவர் அவனுக்குத் தரிசனமாகி: பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார். ... கர்த்தர் அவனை நோக்கிப்பார்த்து: உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ; நீ இஸ்ரவேலை ... ரட்சிப்பாய் ... என்றார். அதற்கு அவன்: ஆ என் ஆண்டவரே, நான் இஸ்ரவேலை எதினாலே ரட்சிப்பேன்; இதோ, மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது; என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றான்" (நியா. 6 : 12 - 15).

இங்கு தேவன் தம் மகத்தான வேலைக்காகக் கிதியோனைத் தெரிந்துகொள்ளுகிறதையும், அதற்காக அவனை வேறுபிரிக்கிறதையும் நாம் காண்கிறோம். அப்பணியை மேற்கொள்ள கிதியோன் எவ்வளவு தகுதியற்றவனாகவும் பெலவீனனாகவும் தோன்றுகிறான் என்பதை 15-ஆம் வசனம் காண்பிக்கிறது. தேவன் ஞானிகளை வெட்கப்படுத்தும்படி உலகத் தில் பைத்தியமானவைகளையும், பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி உலகத்தில் பலவீனமானவைகளையும், உள்ளவைகளை அவமாக்கும்படி உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவை களையும், இல்லாதவைகளையும் தெரிந்துகொண்டார் என்பது எவ்வளவு உண்மையானதாயிருக்கிறது (I கொரி. 1 : 27, 28).

கர்த்தருடைய தூதனானவர், "*பராக்கிரமசாலியே கர்த்தர் உன் னோடே இருக்கிறார்*" என்று கிதியோனை நோக்கிக் கூறுகிறார். 'பராக்கிரம சாலி' என அவர் அவனை அழைப்பது விநோதமானதாயிருக்கிறது. ஏனெனில் பராக்கிரமசாலி என்றோ அல்லது மிகப் பெரியவன் என்றோ அழைக்கப்படத்தக்க யாதொரு பண்பையும் இவனில் நாம் காண்பதில்லை. மேலும், "*ஆ என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவை யெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? ... எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச்சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே?*" என்று அவன் கேட்ட கேள்விகள் அவன் நிராசையடைந்த நிலையில் இருந்தான் என்பதை நிரூபிக்கின்றன (நியா. 6 : 13).

இருப்பினும், கிதியோனுடைய சோர்வுற்ற நிலை தேவன் அவனுக் குள்ளும் அவன் மூலமாகவும் கிரியை செய்வதற்கு ஒரு தடையாயிருக்க வில்லை. தேவனின் உயரிய கிருபை கிதியோனைத் தேவ ஊழியனாகத் தெரிந்துகொண்டது மட்டுமின்றி, அவனை இஸ்ரவேல் ஜனங்களின்

தலைவனாகவும் தெரிந்துகொண்டது. இந்தக் கோழையான, சந்தேகிக்கிற, சோர்வுற்ற மனிதனைக்கொண்டு தேவன் அக்காலத்தின் மிகப் பெரியதோர் அற்புதத்தை நடப்பித்தார். கடற்கரை மணலத்தனையாயிருந்த மீதியானியரின் சேனையைக் கிதியோன் முந்நூறு பேரைக் கொண்டு நொறுக்கிப் போட்டான்.

'நீ உன்னைக் குறித்து நம்பிக்கையிழந்து போகாதபடி ஜாக்கிரதையாயிரு; நீ உன் மேல் அல்ல, உன் தேவன் மேலேயே நம்பிக்கை வைக்கும்படி கட்டளையிடப்பட்டிருக்கிறாய்' என்று புனித அகஸ்டின் கூறியிருக்கிறார். அருமையான தேவபிள்ளையே, ஒருவேளை நீ ஒரு கிதியோனாயிருக்கக் கூடும். நீ கவலையும் சந்தேகமும் நிறைந்தவனாயிருக்கக் கூடும். ஆனால் கிதியோனைத் தெரிந்துகொண்ட தேவன் உன்னுடன் இருக்கிறார். தேவனாகிய கர்த்தர் உனக்காகப் பெரிய திட்டங்களை வகுத்திருக்கிறார்; உன் மூலம் அவர் பெரிய காரியங்களைச் செய்யவும் போகிறார். தேவன் உன்னுடனேகூட இருப்பதால் உண்மையாகவே நீ ஒரு பராக்கிரமசாலியாயிருக்கிறாய். "*உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ*". 'இந்த பலம்' தான் என்ன? அது, தேவன் உன்னோடே இருப்பதும், மகிமையின் தேவன் உன்னோடே இருப்பதும், ஜெயத்தின் தேவன் உன்னோடே இருப்பதும் தானே!

ஜூன் 14

உனக்கு ஒரு மகிமையான எதிர்காலம் உண்டு

"***விசுவாசத்தினாலே ஈசாக்கு வருங்காரியங்களைக்குறித்து யாக்கோபையும் ஏசாவையும் ஆசீர்வதித்தான்***" (எபி. 11 : 20).

விசுவாசமானது நாம் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு மட்டுமன்றி, நாம் பிறருக்கு ஆசீர்வாதமாக இருக்கவும் உதவிசெய்கிறது. '*விசுவாசத்தினாலே ஈசாக்கு யாக்கோபையும் ஏசாவையும் ஆசீர்வதித்தான்*'. இங்கு 'யாக்கோபு' பரிசுத்தவான்களையும், 'ஏசா' பாவிகளையும் குறிக்கிறது. விசுவாசமானது பரிசுத்தவான்களுக்கும் பாவிகளுக்கும் நாம் ஆசீர்வாதமாக மாற நமக்கு உதவிசெய்கிறது. இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளும் கெட்டுப்போகிறவர்களுக்குள்ளும் நாம் தேவனுக்கென்று நற்கந்தமாக (ஆசீர்வாதமாக) இருக்கிறோமென அப். பவுல் கூறுகிறார். நாம் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு மட்டுமல்லாமல், மற்றவர்களுக்கு ஆசீர்வாதங்களைக் கொடுக்கவும் நமக்கு விசுவாசம் உதவிசெய்கிறது.

"*வருங்காரியங்களைக்குறித்து*" - எதிர்காலத்தை முன்னமே பார்க்கக் கூடிய ஒரு தெளிவான பார்வை விசுவாசத்திற்கு உண்டு. விசுவாசத்தின் மூலமாக வருங்காலத்தை நோக்குபவர்கள், வருங்காலத்தின் ஆசீர்வாதங்களையுங்கூட காண்கிறார்கள்; அவர்கள் தங்கள் எதிர்காலத்தைக் குறித்த பயத்தையல்ல - எதிர்காலத்தின் ஆசீர்வாதங்களையே உடையவர்களாக இருக்கிறார்கள். நாம் நமக்காக வைக்கப்பட்டுள்ள வருங்கால ஆசீர்வாதங்களைக் காணாவிடில், மற்றவர்களுக்காக வைக்கப்பட்டுள்ள எதிர்கால ஆசீர்வாதங்களையும் காண மாட்டோம்.

சிலர் வருங்காலத்துப் பிரச்சினைகளைக் குறித்தே எப்பொழுதும் கவலையுள்ளவர்களாயிருக்கிறார்கள்; அவர்களுக்கு வருங்காலத்தைக் குறித்த ஒரு பயம் இருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் எவ்வித ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொள்ளவோ, மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக மாறவோ இயலாது. கிறிஸ்துவின் மணவாட்டியைக் குறித்து, அவள் "*வருங்காலத்தைப்பற்றியும் மகிழுகிறாள்*" (நீதி. 31 : 25) என்று எழுதப்பட்டுள்ளது. விசுவாசமுள்ள ஒரு தேவபிள்ளைக்கு எதிர்காலத்தைப் பற்றிய பயம் இராது; மாறாக, அவனுக்கு எதிர்காலத்தைப் பற்றிய மகிழ்ச்சி மட்டுமே இருக்கும்.

உன்னுடைய கவலைகளையெல்லாம் கர்த்தருடைய பாதத்தில் வைத்துவிட்டு, உனக்காக வைக்கப்பட்டுள்ள மகிமையான எதிர்காலத்தைக் குறித்து மகிழ்ந்து பூரிப்பாயாக!

"*நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும் படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக் கேதுவான நினைவுகளே*" (எரே. 29 : 11).

ஜூன் 15

குளிர்ந்த மனமுள்ளவனாயிரு!

"***விவேகி குளிர்ந்த மனமுள்ளவன்***" (நீதி. 17 : 27).

'அப்பொழுது ராஜா கடுங்கோபமடைந்தான், அவனுடைய கோபம் அவனுக்குள் பற்றியெரிந்தது' (எஸ்தர் 1 : 12 -Eng.). '*கோபம் அவனுக்குள் பற்றியெரிந்தது*' - கோபம் நரக அக்கினியாகப் பற்றியெரிகிறது. இங்கு ராஜாவின் உக்கிரம் ஆழ்ந்த துயரிலும், விவாகரத்திலும் முடிவுற்றது. நீ கோபமுள்ள ஒரு மனுஷனாக இருந்தால் உன்னிலுள்ள கோபத்தின் ஆவியால் உனக்கென்று நீயே நரகக் குழியை வெட்டிக்கொள்கிறாய்.

கர்த்தராகிய இயேசு 'ஆட்டுக்குட்டியானவர்' என அழைக்கப் படுகிறார். நாம் அறிந்திருக்கிறபடி ஆட்டுக்குட்டியானது சாந்தமானதும் சாதுவானதுமான ஒரு பிராணியாகும். பரிசுத்த ஆவியானவர் புறா என அழைக்கப்படுகிறார். புறாவும் கூட சாந்தமும் மென்மையுமான சுபாவ முள்ளது. பிதாவுங்கூட சாந்தமும், தயவுமுள்ளவரே (யாத். 34 : 6).

ஒருமுறை ஒரு தேவபிள்ளை தன் மனதைப் புண்படுத்திய ஒரு நபரைப் பற்றி சிந்தித்துக்கொண்டே ஒரு சாலையில் சென்றுகொண் டிருந்தான். அவன் இவ்வாறு சிந்தித்துக்கொண்டிருக்கையில் அவனுடைய கோபம் மென்மேலும் அதிகரித்துக்கொண்டே இருந்தது. அந்த விஷயத்தைப் பற்றிய நினைவே அவன் இரத்தத்தைக் கொதிக்கச் செய்தது. திடீரென தன்னைக் கடந்து சென்ற ஒரு வாகனத்தை அவன் கவனித்தான். அது ஒரு வெண்ணிற வாகனமாய் (van) இருந்தது. அதன் மேல் பெரிய சிவப்பு எழுத்துக்களில் 'உன்னைக் குளிர்ச்சியாக வைத்துக்கொள்' (KEEP COOL) என எழுதப்பட்டிருந்தது. ஆனால் இங்கு அவனோ உள்ளாகக் கொதிக்கிறவனாக, இன்னும் அதிகமதிகமாகச் சூடாகிக்கொண்டிருந்தான். கடந்து சென்ற அந்த வாகனம் வானத்திலிருந்து வந்த ஒரு தூதுவனைப் போல அவனை நோக்கி, 'உன் மனக்கொதிப்பைவிட்டு நீ அமைதியாக இரு' என்று கூறுவது போல் அவனுக்கு இருந்தது. அந்த வாகனம் ஒரு சாதாரண ஐஸ் கிரீம் வண்டியாக இருந்தபோதிலும் அந்தத் தூதானது அவ னுக்குத் தெளிவானதாயிருந்தது. இவ்வார்த்தைகள் அவன் தன் கோபத்தைக் குறித்து மனஸ்தாபப்பட்டு மனந்திரும்ப அவனுக்குப் பேருதவியா யிருந்தது. தன்னை அழித்து நாசமாக்கக்கூடிய அந்தக் கோபத்தின் ஆவி யிலிருந்து தேவ கிருபையால் அவன் முற்றிலுமாக விடுவிக்கப்பட்டான்.

'*உமது சாந்தகுணம் என்னைப் பெரியவனாக்கிற்று*' (சங். 18 : 35 -Eng.) - நீ கோப சுபாவமுள்ள ஒருவனாயிருப்பாயானால், மனஸ்தாபத்துடன் மனந்திரும்பி கர்த்தரிடம் வா - அப்போது கர்த்தர் உன்னைச் சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியையுடைய ஒரு பரிசுத்தவானாக மாற்றுவார்.

ஜூன் 16

நீ காரியங்களை எவ்வாறு காண்கிறாய்?

'***அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், ஒருவனை ஞானமுள்ளவனாக மாற்றுவதற்கேற்ற விரும்பப்படத்தக்க விருட்சமுமாயிருக்கக் கண்டாள்***' (ஆதி. 3 : 6 -Eng.).

புசிப்பதற்கென்று தேவனால் கொடுக்கப்பட்டிருந்த மற்றெல்லா விருட்சங்களின் கனிகளும் புசிப்புக்கு நலமல்லாதவை போலவும், புசிக்க லாகாது என்று அவர் விலக்கிவைத்த விருட்சத்தின் கனி ஒன்று மட்டுமே புசிப்புக்கு ஏற்றது என்பது போலவும் ஸ்திரீயானவள் அந்த விருட்சம் 'புசிப்புக்கு நல்லது' என்று கண்டாள். உண்மையில் தேவன் சிருஷ்டித்த சகலவித விருட்சங்களும் புசிப்புக்கு நலமானவையாகவே இருந்தன (ஆதி. 2 : 9). ஆனால் ஒரு மனிதன் தனது ஆவிக்குரிய தரிசனத்தையும், தேவன் மீதுள்ள அன்பையும் இழந்துபோகும்போது தேவன் விலக்கி வைத்திருக்கும் யாவும் அவன் பார்வையில் நலமானவையாகத் தென்படு கின்றன. உண்மையில் மன்னாவானது தேனைக் காட்டிலும் அதிக இனிமை யான ருசியுள்ளதாயிருந்தபோதிலும், இஸ்ரவேல் ஜனங்கள் அதை ருசியற்ற தாகக் கண்டு, அதை வெறுத்தனர். எகிப்தின் வெள்ளரிக் காய்களும், வெண் காயங்களுமே அவர்களுக்கு அதிக ருசியுள்ளவையாகக் காணப்பட்டன!

அந்த விருட்சம் 'பார்வைக்கு இன்பமானதாக'வும் இருந்தது. தேவனாகிய கர்த்தர் சிருஷ்டித்த எல்லா விருட்சங்களுமே பார்வைக்கு இன்பமானவையாக இருந்தன. ஆனால் ஸ்திரீயானவள் இந்த விருட்சம் ஒன்று மட்டுமே பார்வைக்கு இன்பமானதென கற்பனை செய்கிறாள். இன்றுங்கூட தேவன் தங்களுக்கு அளித்திருப்பவைகளில் திருப்தியடை யாமல் இருப்பதே மனுக்குலத்தின் இயல்பாக இருக்கிறது. அவர்களுடைய அதிருப்தியே அவர்களை இச்சைக்கும் பாவத்துக்கும் வழிநடத்துகிறது.

ஸ்திரீயானவள் அந்த விருட்சத்தை 'ஒருவனை ஞானமுள்ளவனாக மாற்றுவதற்கேற்ற, விரும்பத்தக்க விருட்சமாகக்' கண்டாள் - இது, தேவன் அவளை மதியீனமானவளாகச் சிருஷ்டித்திருப்பது போலவும், அவள் தன் சொந்தத் திறமையைப் பயன்படுத்தி தன்னை ஞானமுள்ளவளாக்க முற்படுவது போலவும் தோன்றுகிறது. மெய்யாகச் சொல்லப்போனால், உண்மை இதற்கு எதிர்மாறானது. மற்ற எல்லா மரங்களும் அவளை ஞானமுள்ளவளாக மாற்றத்தக்கவையாயிருக்க, விலக்கப்பட்ட இந்த விருட்சம் மட்டுமே காலத்திற்கு முன் அதன் கனியைப் புசிப்பதி னால் அவளை மதியீனமுள்ளவளாக்கக் கூடியதாயிருந்தது. தேவன் அவளுக்குத் தந்திருந்த ஞானத்தில் அவள் திருப்தியடையவில்லை. தன் சொந்த வழியில் தானாக ஞானமடைய அவள் எடுத்துக்கொண்ட முயற்சியினால் உலகிலேயே மதிகெட்டவளான முதல் நபரானதுமன்றி, முதல் தரமான மதிகெட்டவளாகவும் மாறினாள்.

தேவபிள்ளையே, "*போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்*" (I தீமோ. 6 : 6). தேவன் நம் வாழ்க்கையைக் குறித்துக்

கொண்டுள்ள மகத்தான நோக்கத்தைக் குறித்த நல்ல ஆவிக்குரிய தரிசனம் உள்ளவர்களாய், அப். பவுலைப் போல் நாம் எல்லாச் சூழ்நிலைகளிலும் மனதிருப்தியுடன் இருக்கும் இரகசியத்தைக் கற்றுக்கொள்ளும்போது, ஆவிக்குரியவற்றைத் தவிர வேறெதையும் நாம் நல்லதாகவோ, இன்ப மானதாகவோ, விரும்பப்படத்தக்கதாகவோ காண மாட்டோம்.

ஜூன் 17

அநுகூலமான துணை

'தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூல மான துணையுமானவர். ஆகையால் பூமி நிலைமாறினாலும் நாம் பயப்படோம்' (சங். 46 : 1 - 3).

நாம் தேவனுடைய சமுகத்தில் ஜீவிக்கும்போது மூன்று மேன்மை யான ஆசீர்வாதங்களை உடையவர்களாகிறோம்:

1. கர்த்தர் நமக்கு ***அடைக்கலமாகிறார்***. "கர்த்தரின் நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்" (நீதி. 18 : 10). பழைய ஏற்பாட்டுக் காலத்தில் அடைக்கலப் பட்டணங்கள் என்று அழைக்கப்பட்ட சில பட்டணங்கள் இருந்தன. இவ்வடைக்கலப் பட்டணங்கள் கிறிஸ்துவைக் குறிக்கின்றன. ஏனெனில் நாம் ஆபத்தில் இருக்கும்போதெல்லாம் அவரிடம் ஓடிச் செல்லலாம்.

2. கர்த்தர் நமது ***பெலனாயிருக்கிறார்***. நமது சோதனைகளிலும் கஷ்டங்களிலும் நாம் ஆவிக்குரிய பிரகாரமாகவும் சரீரப்பிரகாரமாகவும் மிகவும் பெலவீனராகக் கூடும். ஆனால் நாம் தேவசமுகத்தில் ஜீவிப் போமாகில், தேவன் தாமே நமக்குப் பெலன் தந்து நம்மை அவற்றி லிருந்து வெற்றியுடன் வெளியே வரச் செய்வார்.

3. ஆபத்துக் காலத்தில் நம் தேவன் நமக்கு ***அநுகூலமான துணையாய்*** இருப்பார். ஒருவேளை உடனடியாக நாம் ஆபத்தைவிட்டு வெளியே வராவிட்டாலும், அந்த ஆபத்தில் இருக்கையிலேயே சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகியோரைப் போல நாம் அவரது பரிசுத்த மான பிரசன்னத்தை உணருவோம். அவர்கள் எரிகிற அக்கினிச் சூளை யிலே எறியப்பட்டிருந்தபோதிலும் நான்காவதாக ஒரு நபர் (ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையானவர்) அவர்களுடனே கூட இருந்தார்.

இந்த நான்காவது நபர் (அதாவது தேவபுத்திரனுக்கு ஒப்பானவர்) நிமித்தமாக அவர்களுக்கு அறவே எவ்வித சேதமும் உண்டாகவில்லை. அந்தச் சூளை ஏழுமடங்கு சூடாக்கப்பட்டிருந்தபோதிலும், அவர்களது தலைமயிரில் ஒன்றாயினும் கருகவில்லை.

எனவே நாம் தேவ பிரசன்னத்தில் ஜீவிப்போமாயின், பூமி நிலை பெயர்ந்தாலுங்கூட நாம் எதைக் குறித்தும் சற்றும் பயப்பட வேண்டிய திராது. பூமி நிலைபெயர்தல் என்பது நமது பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் நீக்கப்படுதலைக் குறிக்கிறது. நாம் ஒருவேளை நமது செல்வம், ஆரோக் கியம், பெயர், புகழ், ஏன் நமது குடும்பத்தின் அங்கத்தினர்களையுங்கூட இழக்க நேரிடலாம். (யோபு தன் பத்து பிள்ளைகளையும் தனக்குண்டான யாவற்றையும் ஒரே நாளில் இழந்துபோகவில்லையா?) ஆனால் இவை ஒன்றும் நம் மன அமைதியைக் குலைக்க முடியாது. ஏனெனில் ஆபத்துக் காலத்தில் தேவன் நமக்கு அடைக்கலமும், பெலனும், அநுகூலமான துணையுமாயிருப்பார்.

ஜூன் 18

பரலோகத்தைப் பூமியிலேயே அனுபவி

"***வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்***" (அப். 20 : 35).

மேற்காணும் வசனம் உலகிலேயே மிகப் பெரிய எண்ணெய் நிறுவனத்தின் உரிமையாளராயிருந்த ஜான் ராக்ஃபெல்லர் என்பவரின் வாழ்க்கையை முற்றிலுமாக மாற்றிவிட்டது. அவர் தனது 35-வது வயதி லேயே கோடீஸ்வரரானார். ஆனால் தனது 50-வது வயதில் அவர் புற்று நோயால் மரிக்கும் தருவாயிலிருந்தார். அவர் இன்னும் ஆறு வாரங்களே உயிரோடிருப்பார் என மருத்துவர்கள் கூறிவிட்டனர். அவர் ஆஸ்திகளைச் சேர்த்துக் குவித்துக்கொண்டிருக்கையில், தனக்குச் சத்துருக்களையும் சேர்த்துக் குவித்துக்கொண்டார். அதினிமித்தம் அவர் மரணத்தை நெருங்கிக்கொண்டிருக்கும் வேளையிலுங்கூட அவரைப் பாதுகாக்க மெய்க்காப்பாளர்களை வைத்துக்கொள்ள வேண்டியதாயிருந்தது. நிர்ப்பந்த மான நிலையில், நம்பிக்கையற்று, நிராசையடைந்தவராய் மரித்துக் கொண்டிருந்த ராக்ஃபெல்லர் மேற்கண்ட வசனத்தை அறியலானார். அது உண்மையிலேயே அவரது அகக்கண்களைத் திறப்பதாயிருந்தது. அது வரை அவர் தன் வாழ்நாள் முழுவதும் செய்துகொண்டிருந்ததெல்லாம் மற்றவர்களிடமிருந்து வாங்கிக்கொண்டே இருப்பதாகத்தான் இருந்தது.

எவ்வளவதிகமாக அவர் வாங்கிக்கொண்டேயிருந்தாரோ, அவ்வளவதி கமாக அவர் பேராசையுள்ளவரும் சந்தோஷமற்றவருமானார். இப்போது முடிவாக, உலகில் இருந்த மிகப் பெரிய ஐசுவரியவான்களுள் ஒருவராகத் தான் இருப்பினும், உலகில் மிக நிர்ப்பந்தமான நிலையில் இருந்தவர்களுள் ஒருவராகவும் தான் இருப்பதை அவர் உணர்ந்தார்.

உடனடியாக அவர் ஏழைகளுக்குத் தன் பணத்தை வாரி வழங்க ஆரம்பித்தார். உண்மையில் அவர் நியூயார்க் நகர வீதிகளில் டாலர் நோட்டுகளை விநியோகித்தார். பல அறநிலையங்கள், மருத்துவமனைகள் போன்றவற்றிற்கு அவர் பணத்தை வாரி வழங்கினார். "*வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்*" என்ற இந்தத் திருவசனம் எவ்வளவு உண்மையானது என்பதைக் கண்டுணர்ந்தபோது அது அவரை மிகுந்த ஆச்சரியத்திலும் மனமகிழ்ச்சியிலும் ஆழ்த்தியது. எவ்வளவதிகமாக அவர் கொடுத்தாரோ, அவ்வளவதிகமாக அவர் சந்தோஷமுள்ளவரானார்.

முடிவாக, இனி ஆறு வாரங்கள் மட்டுமே அவர் உயிர்வாழ்வதற்கு உண்டு என்று அவரது 50-வது வயதில் மருத்துவர்களால் அவருக்குச் சொல்லப்பட்டிருந்தபோதிலும், அவர் அதிக சந்தோஷத்தையும் நல்ல ஆரோக்கியத்தையும் அனுபவித்தவராய் 90 -க்கும் மேற்பட்ட ஆண்டுகள் உயிர்வாழ்ந்தார். இறுதியில் அவர் மரிக்கும்போது அவருக்குச் சத்துருக் களே இல்லையென்று சொல்லத்தக்கதாக, உலகெங்கும் நண்பர்களையே உடையவராக, மகிழ்ச்சியுடன் அவர் மரித்தார்.

பரலோகம் என்பது 'கொடுக்கும்' ஓர் இடமாகும். "*அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் **ஐசுவரியத்தையும்** ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக் கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்*" (வெளி. 5 : 12). உண்மையில், தேவனுக்குக் கொடுப்பது பரலோகமும், எல்லாவற்றையும் சுயநலத்துடன் தனக்கென்று வைத்துக்கொள்வது நரகமுமாகும். இந்த உலகில் ஆட்டுக்குட்டியான வருக்குத் (கர்த்தராகிய இயேசுவுக்கு) தங்கள் ஐசுவரியங்களைக் கொடுக்கக் கற்றுக்கொள்ளாதவர்கள் பரலோகில் அவருக்குக் கொடுப்பது எப்படி?

'நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உன் எஜமானின் சந்தோஷத்திற்குள் பிரவேசி' என்று கர்த்தரால் வாழ்த்தி வரவேற்கப்படும்படி நாம் கர்த்தரைப் பரலோகத்தின் முத்து வாசல்களில் சந்திக்கும் வரை, நாம் நமது சரீரம், நம் நேரம், நம் தாலந்துகள், நம் பணம், மற்றும் நம் வசமிருக்கும் யாவற்றையும் - தேவனுக்குச் செலுத்த இனி நம்மிடம் ஒன்றுமில்லை என்னும் நிலை வரும் வரை - கொடுத்துக் கொண்டேயிருக்க தேவன் தாமே நமக்கு உதவி செய்வாராக.

ஜூன் 19

உண்மையான சேவை

"*வெகு மனத்தாழ்மையோடும் ... நான் கர்த்தரைச் சேவித்தேன்*"
(அப். 20 : 19).

தங்கள் பாதங்களின் மேல் நிற்பதைக் காட்டிலும் அதிகமாகத் தங்கள் முழங்கால்களின் மேல் நிற்கும் பரிசுத்தவான்கள் சிலர் எக்காலத் திலும் தேவனுக்கு உண்டு. மரியாள் கர்த்தராகிய இயேசுவின் பாதத் தண்டை இருந்து மிகத் தாழ்மையானதொரு சேவை செய்வதை யோவான் 12 : 3 -இல் நாம் காண்கிறோம். அவள் தனது சரீரத்தின் மிக உயர்வான பகுதியைக் (தலை மயிரை) கர்த்தராகிய இயேசுவினுடைய சரீரத்தின் மிகத் தாழ்வான பகுதிக்குச் (பாதங்களுக்கு) சேவை செய்வதற்கென்று பயன் படுத்தினாள். அநேகர் கர்த்தராகிய இயேசுவுக்கு ஊழியம் செய்ய விரும்பு கிறார்கள்; ஆனால் அவருக்கு ஊழியம் செய்வது எப்படி என்பதை அவர்கள் அறியாதிருக்கின்றனர். தேவனைச் சேவிப்பதற்கு ஒருவனுக்குத் தேவையானது மனத்தாழ்மையே. கர்த்தராகிய இயேசு மிகுந்த தாழ்மை யுள்ளவர். தாழ்மையுள்ள இயேசுவுக்கு ஊழியம் செய்யத் தாழ்மையுள்ளவர் களால் மட்டுமே கூடும்.

மரியாள் மிகவும் விலையேறப்பெற்ற நளதம் என்னும் தைலத்தைக் கொண்டுவந்து, அதைக் கர்த்தராகிய இயேசுவின் பாதத்தில் ஊற்றினாள். நாம் யாராயிருப்பினும், நாம் தேவனுக்குச் செய்யக்கூடிய உண்மையான ஊழியம் இதுவே ஆகும். நாம் நம்மைத் தாழ்த்தி, நம் சரீரம், இருதயம், ஜீவியம் ஆகியவற்றைக் கர்த்தராகிய இயேசுவின் பாதத்தில் சமர்ப்பிக்க வேண்டும். நம் இருதயம் விலையேறப்பெற்ற தெய்வீக அன்பினால் நிறைந்திருக்க வேண்டும். நம் அன்பு நற்கந்தத்தினால் நிறைந்திருக்க வேண்டும். மரியாள் அந்தத் தைலத்தை எந்த மனிதனுக்கும் கொடுக்க வில்லை; அதை விற்கவும் அவள் விரும்பவில்லை. முற்றிலுமாக அதை அவள் ஆண்டவராகிய இயேசுவுக்கென்றே முழுமையாக ஊற்றிவிட விரும்பினாள்.

இன்று நீ ஒரு மரியாளாக இருப்பாயா? எல்லா மனத்தாழ்மை யுடனும், கர்த்தராகிய இயேசுவின் பாதத்திற்கு உன் தைலத்தைக் கொண்டு வருவாயாக. உன்னுடைய ஜீவன், உன் அன்பு, மற்றும் உனக்குள்ள யாவற்றையும் நீ அவருக்கே அர்ப்பணித்துவிடுவாயாக.

ஜூன் 20

நீ புறக்கணிக்கப்படுதலைச் சந்திக்கிறாயா?

"*மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப் பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்*"
(I பேதுரு 2 : 4).

மனுஷீகமான உணர்ச்சிகள் யாவற்றிலும், பிறரால் புறக்கணித்துத் தள்ளப்படுவதே மிகவும் தாங்கவொண்ணாததும், இருதயத்தைக் கிழிக்கக் கூடியதுமான ஒரு உணர்ச்சி எனலாம். தேவமனிதர்கள் முதலில் புறக்கணிக்கப்பட்டுப் பின்னரே உயர்த்தப்பட்டிருப்பதை நாம் வேதாகமம் முழுவதிலும் காண்கிறோம்.

யாக்கோபின் குமாரனான யோசேப்பு இதற்கு விதிவிலக்கானவனல்ல. ஆரம்பத்தில் அவன் தன் தகப்பனின் அன்பை அனுபவித்துக்கொண்டிருந்தது போல் தோன்றியது. ஆனால் விரைவிலேயே அவன் புறக்கணிக்கப்படும் வேளை வந்தது - முதலாவது அவனுடைய சகோதரர் அவனைப் புறக்கணித்தனர். அதன் பின்னர் தேவன் அவனுக்குத் தந்த சொப்பனம், அவனுடைய தகப்பனால் அவன் கடிந்து கொள்ளப்படக் காரணமாயிற்று. விரைவிலேயே அவன் தன் குடும்பத்திலிருந்து துண்டிக்கப்பட்டான். மீண்டும் போத்திபாரின் வீட்டில் அவன் உயர்த்தப்பட்டது போல் தோன்றியது. ஆனால் புறக்கணிக்கப்படுதல் அவனைப் பின்தொடர்ந்தது. ஆனால் முடிவில் தேவன் அவனைப் பார்வோனுக்கு அடுத்தவனாகச் சிங்காசனத்துக்கு உயர்த்தும் வேளை வந்தது!

தாவீதுங்கூட இச்சத்தியத்திற்கான மற்றொரு பொருத்தமான மாதிரியாவான். அவன் தன் வாழ்க்கையில் எதிர்கொண்ட புறக்கணிப்புகளையெல்லாம் சந்தித்த விதம் உண்மையில் மிகுந்த வியப்புக்குரியது. தாவீது சவுலுக்காகத் தன் கையில் ஒரு சுரமண்டலத்தை வைத்திருந்தபோது, சவுலோ அவனுக்காகத் தன் கையில் ஒரு ஈட்டியை வைத்திருந்தான். ஆனால் தேவன் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை இவ்வித மாகத்தான் நடத்துகிறார்! முடிவில் தாவீது இஸ்ரவேலருக்கு ராஜாவாக உயர்த்தப்பட்டான்.

ஒருவேளை நீங்கள் உங்கள் சிநேகிதராலும், உங்கள் சொந்த மனைவி அல்லது கணவன், சகோதர சகோதரிகள் ஆகியோராலுங்கூட புறக்கணித்துத் தள்ளப்பட்டிருக்கலாம். சில சந்தர்ப்பங்களில் தேவன்தாமே

உங்களைப் புறக்கணித்துவிட்டது போல் உங்களுக்குத் தோன்றக் கூடும். அன்னாளைக் கவனித்துப் பாருங்கள். கர்த்தரே அவளது கர்ப்பத்தை அடைத்திருந்ததாக நாம் வாசிக்கிறோம் (I சாமு. 1 : 5). அன்பான தேவபிள்ளையே, நாம் கர்த்தருக்கு முழுவதுமாகச் சொந்தமானவர்கள் என்ற நிலைக்கு வரும் வரை இவ்வாறு தொடர்ச்சியாக நாம் மற்றவர்களால் புறக்கணிக்கப்படலாம். தேவன் நம்மை மேன்மையான ஆவிக்குரிய உயர்தலங்களுக்கு உயர்த்த விரும்பும்போது, முதலாவது பிறரால் புறக்கணிக்கப்படும் பாதைகளில் நாம் நடந்து செல்லும்படி அவர் அனுமதிக்கிறார். இவ்வாறு நாம் பிறரால் புறக்கணிக்கப்படும் நேரங்களில் கர்த்தருடைய கிருபையினால் உள்ளான மனுஷனில் மகிழ்ந்து களிகூரப் பெலனைப் பெற்றுக்கொள்வோமானால், ஆவிக்குரிய பிரகாரமாகவும், பூமிக்குரிய பிரகாரமாகவும் நாம் ஆசீர்வதிக்கப்படுவோம்.

ஜூன் 21

நீ வெற்றிசிறக்க விரும்புகிறாயா?

"***நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்***" (மத். 7 : 2).

பிறரைப் பழிவாங்குகிறவர்கள், நெருக்குகிறவர்கள் அல்லது துன்புறுத்துகிறவர்களின் மனக்கண்களை இவ்வசனம் மிக அதிகமாகப் பிரகாசிப்பிக்கிறது. நீங்கள் எவ்வளவதிகமாக மற்றவர்களைத் துன்புறுத்துகிறீர்களோ, அவ்வளவதிகமாக உங்கள் உள்ளான மனுஷனில் வேதனையை உணருவீர்கள். ஒரு தேனீ ஒரு நபரைக் கொட்டி அவருக்கு வேதனையைக் கொடுக்கலாம். ஆனால் அது கொட்டியதினிமித்தம் அதற்குச் சம்பவிப்பது யாது? அந்நபரைக் கொட்டிய உடன் தானே அது கீழே விழுந்து மடிந்துவிடுகிறது. தன்னால் கொட்டப்பட்டு பாதிக்கப்பட்ட நபரைக் காட்டிலும், அதுவே அதிக வேதனைக்குள்ளாகிறது. மற்றவர்களைத் துன்புறுத்துகிறவர்கள் அதினிமித்தம் தாங்கள் எவ்வளவாகக் கலக்கம் அடையவேண்டியதாயிருக்கும் என்பதை உணர்ந்துகொள்வதில்லை.

'உன்னை என்னால் ஒருபோதும் மன்னிக்கவே முடியாது' என சில சமயங்களில் நாம் கூறுகிறோம். ஆனால் இத்தகைய மதியீனமான பிரதிக்கிரியைக்காக நாம் செலுத்த வேண்டிய விலைக்கிரயத்தை உணருகிறோமா? உன் மனதைப் புண்படுத்திய நபரை நீ மன்னிக்க மறுக்கும்போது நீ பதட்டமடைவதால் - ஒருவேளை உன் இரத்த அழுத்தம் அதிகரிக்கலாம்; எதிலுமே கவனம் செலுத்த முடியாத நிலை உனக்கு ஏற்பட்டு, உன்னால்

தூங்கவுங்கூட இயலாமற்போகலாம். உன் பேச்செல்லாம் நீ எந்த நபர் மூலம் இடறலடைந்திருக்கிறாயோ அவரையே மையமாகக் கொண்ட தாயிருக்கும். கடைசியில், சூழ்நிலைகளின் மேல் வெற்றிசிறப்பதற்குப் பதிலாக, நீ சூழ்நிலைகளுக்கு இரையாகிவிடுகிறாய்.

மாறாக, மற்றவர்களை நீ மன்னிக்கும்போது, நீயும் மன்னிக்கப் படுகிறாய். மற்றவர்களை நீ ஆறுதல்படுத்தும்போது நீயும் ஆறுதலடை கிறாய்; மற்றவர்களை நீ நேசிக்கும்போது நீயும் நேசிக்கப்படுகிறாய்; மற்றவர்களை நீ கரிசனையுடன் விசாரிக்கும்போது நீயும் அவ்வண்ணமே விசாரிக்கப்படுகிறாய்; மற்றவர்களுக்கு நீ இரக்கம் பாராட்டும்போது, நீயும் இரக்கம் பெறுகிறாய். "மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்பு கிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (மத். 7 : 12) என்று கர்த்தராகிய இயேசுதாமே கூறியிருக்கிறார். உன் வாழ்க்கையை நீ வெற்றியுள்ளதும் மகிழ்ச்சிகரமானதுமாக்குவதற்கான பொன்னான கட்டளை இதுவே!

ஜூன் 22

அது உன் பெருமையே!

"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்"
(ரோமர் 5 : 8).

நாம் எத்தகைய பயங்கரமான பாவிகளாயிருந்தோம் என்பதையும், நம்மை நரகக் குழியிலிருந்து தப்புவிக்கும்படி தேவன் நம் பேரில் எவ்வளவு பெரிதான அன்பையும் இரக்கத்தையும் காண்பித்தார் என்பதை யும் நாம் பெரும்பாலும் உணருவதில்லை.

ஒரு சமயம் ஒரு தேவ ஊழியர் ஒரு தரிசனம் கண்டார். அதில் கர்த்தராகிய இயேசு சிலுவையிலறையப்பட்டுக்கொண்டிருந்தார். ஒரு மனிதன் ஒரு பெரிய சுத்தியலைக் கொண்டு அவரது மென்மையான கரங்களில் தாங்கொண்ணா வேதனையுண்டாகும்படி ஆணிகளை அறைந்துகொண்டிருந்தான். அந்தச் சுத்தியலின் மீது "***பெருமை***" என்னும் வார்த்தை எழுதப்பட்டிருந்தது. அந்தப் பொல்லாத மனிதன் தன் சுத்தி யலைக் கொண்டு பலமாக அவரது கையில் ஆணியடித்துக்கொண் டிருந்தபோது, கர்த்தராகிய இயேசு மென்மையான குரலில் அவனிடம், 'என் பிள்ளையே, இன்னும் நான் உன்னை நேசிக்கிறேன்' என்று கூறினார்.

அந்த மனிதனோ அதைக் கேட்கக்கூடாத செவிடனைப் போல, தொடர்ந்து தன் சுத்தியலைக்கொண்டு அறைந்துகொண்டேயிருந்தான். ஒவ்வொரு முறை அவன் அறையும்போதும் அச்சிலுவை அதிர்ந்து, ஆண்ட வருடைய வேதனையை மென்மேலும் அதிகரிக்கச் செய்தது. ஆனால் கர்த்தராகிய இயேசுவோ தொடர்ந்து, 'என் மகனே, நான் இன்னும் உன்னை நேசிக்கிறேன்' என்று தயவான குரலில் கூறிக்கொண்டேயிருந்தார். இதைக் கண்ட அத்தேவ ஊழியர், 'இந்த மனிதன் எத்தகைய பயங்கரமான பொல்லாத பாவியாயிருக்க வேண்டும்!' என்று தனக்குள் சிந்தித்தார். அவர் கர்த்தராகிய இயேசுவண்டை சற்று நெருங்கிவந்து உற்றுக் கவனித்தபோது, தானே அந்தப் பொல்லாத மனிதன் என்பதையும், ஆண்டவராகிய இயேசுவைச் சிலுவையிலறைந்த அந்தப் பெருமையின் சுத்தியல் தன்னுடைய ஆவியே என்பதையும் கண்டு மிகவும் அதிர்ச்சியடைந்தார். இத்தரிசனம் அவர் தன் பாவத்தையும், பெருமையையும் குறித்து அவரை உணர்வடையச் செய்து, ஒரு பெரிய மனந்திரும்புதலுக்கும் வாழ்வின் மாற்றத்திற்கும் வழிநடத்திற்று.

அன்பான தேவபிள்ளையே! நீயும் கூட ஒருவேளை கர்த்தராகிய இயேசுவைப் பெருமை என்னும் சுத்தியலால் அறைந்துகொண்டிருப் பினும், நீ உன்னைக் குறித்து அவரை நேசித்து அவரை ஆராதிக்கும் அருமையான தேவபிள்ளை என்று எண்ணிக்கொண்டிருக்கக் கூடும். தேவன் தாமே உன் இருதயத்தின் ஆழத்தில் புதைந்திருக்கும் பெருமை யைக் காணும்படி உன் ஆவிக்குரிய கண்களைத் திறப்பாராக!

ஜூன் 23

பலத்த சேனையில் சேர்ந்துகொள்வீராக!

'கர்த்தர் பார்த்து ஒருவரும் இல்லையென்று கண்டு, விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லையென்று ஆச்சரியப்பட்டார்' (ஏசாயா 59 : 15, 16).

பாதாளத்தின் வாசல்களைக் குலுக்கி, பரலோக ராஜ்யத்தைப் பூமிக்கு இறக்கிக் கொண்டுவரக்கூடிய வல்லமையுள்ள பரிந்துரையாளர்கள் தேவ னுக்குத் தேவை! மெய்யான எழுப்புதலுக்காக, தேவனுடைய பரிசுத்தத்தின் எழுப்புதலுக்காக ஜெபத்தில் பிரசவ வேதனைப்படுகிற, பரிசுத்த தேவ வைராக்கியம் நிறைந்த ஆண்களும் பெண்களும் அவருக்குத் தேவை.

'கர்த்தர் பார்த்து ஒருவரும் இல்லையென்று கண்டு, விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லையென்று ஆச்சரியப்பட்டார்' (ஏசாயா 59 : 15, 16) -

தேவன் தாமே ஆச்சரியப்பட்டாரென்றால் இது நிச்சயமாகவே கவனிக்கப்படத்தக்கதே! பிரசங்கிப்பவரோ, போதிப்பவரோ, விசுவாச சுகமளிப்பவரோ, அல்லது பாடகரோ ஒருவரும் இல்லையென்று தேவன் ஆச்சரியப்படவில்லை; ***விண்ணப்பம் பண்ணுகிறவன் ஒருவனும் இல்லை யென்றே அவர் ஆச்சரியப்பட்டார்***. ஒரு அம்சத்தில், பிரசங்கித்தல், போதித்தல், அற்புதங்களை நடப்பித்தல் போன்றவற்றைக் காட்டிலும் ஜெபத்தில் பரிந்துபேசும் ஊழியமே பெரியதாகும். தங்கள் ஜீவியம் தேவனோடு செம்மையானதாக இராதிருக்கும்போதுங்கூட ஜனங்கள் பிரசங்கிக்கவும், போதிக்கவும், பாடவும் கூடும். ஆனால் ஒரு நபர் தேவ னுடன் செம்மையானவனாயிருந்தாலொழிய, அவருடைய வெளிச்சத்தில் நடந்துகொண்டிருந்தாலொழிய, அந்நபரால் மற்றவர்களுக்காக ஜெபத்தில் போராடவும், பரிந்துபேசவும் முடியாது.

இன்றுங்கூட தேவன் பரிந்துபேச ஒருவரும் இல்லையே என ஆச்சரியப் படுகிறார். பிரசங்கிப்பவர்கள், போதிப்பவர்கள், பாடுபவர்கள், கர்த்தரைக் குறித்து சாட்சி கொடுப்பவர்கள் போன்றோர் மற்றவர்களால் காணப்படக் கூடியவர்களாயிருக்கின்றனர். ஆனால் தங்கள் அறைக்குள்ளிருந்து ஜெபத் தில் போராடும் வல்லமையான பரிந்துரையாளர்கள் மற்றவர்கள் கண்களுக் குப் புலப்படுவதுமில்லை; பிறரால் பாராட்டப்படுவதுமில்லை. இருப்பினும், "*காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்*" (II கொரி. 4 : 18). இந்த அர்த்தத்தில், ஜெபத்தில் பரிந்து பேசுகிறவர்களே போதகர்கள், பாடகர்கள், அற்புதங்கள் செய்கிறவர்கள் போன்றவர்களைக் காட்டிலும் அதிகமாக முக்கியமானவர்களாவர்.

அருமையான வாசகரே! மனமுவந்து ஜெபத்தில் பிரசவவேதனைப் படும் வல்லமையான பரிந்துரையாளராக மாறுவதின் மூலம் நீர் ஜீவனுள்ள தேவனுடைய பலத்த சேனையில் சேர்ந்துகொள்வீராக!

ஜூன் 24

இன்னும் உயர உயர ...

"***ஜலப்பிரளயம் நாற்பது நாள் பூமியின்மேல் உண்டானபோது, ஜலம் பெருகி, பேழையைக் கிளம்பப்பண்ணிற்று; அது பூமிக்குமேல் மிதந்தது***" (ஆதி 7 : 17).

தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நோவா பேழைக்குள் பிரவேசித்தபோது, அது அவனைப் படிப்படியாகப் பூமியிலிருந்து

உயர்த்தியது. ஆச்சரியமான பிரகாரமாக நமது ஆவிக்குரிய ஜீவியத்திலும் இது உண்மையே! கிறிஸ்துவே நமது பேழையாயிருக்கிறார். சுவிசேஷத் தின் அழைப்புக்கு நாம் இணங்கி ஒப்புக்கொடுத்து, கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கும்போது அல்லது கிறிஸ்து நமது ஜீவியத்திற்குள் பிரவேசிக்கும் போது, அவர் நம்மைப் பூமிக்குரிய மண்டலத்திலிருந்து உன்னதங்களுக்கு உயர்த்துகிறார். நாம் எந்த அளவுக்கு உயரச் செல்லுகிறோமோ, அந்த அளவுக்கு இந்த உலகப்பொருட்கள் நமக்குச் சிறியவையாகத் தென்படும்; அதற்குப் பின் இவ்வுலகத்தின் பொருட்கள் மேன்மையானவையாகவோ, கவர்ச்சிகரமானவையாகவோ ஒருபோதும் தோன்றுவதில்லை; ஒரு காலத் தில் நம்மைக் கவர்ந்திழுத்த பொருட்கள் நமக்கு ஒரு பொருட்டாகவே இருப்பதில்லை. 'எவ்வளவதிகமாக நாம் பரலோகத்தை அணைத்துக்கொள் கிறோமோ, அவ்வளவு குறைவாகவே இவ்வுலகத்தின் மேல் நாம் விருப்பமுள்ளவர்களாகிறோம்'.

பேழை எவ்வளவதிகமாக மேலே உயர்த்தப்பட்டதோ, அவ்வளவதி கமாக நோவா உயரச் சென்றான். அது போலவே நம் ஜீவியத்தில் கிறிஸ்து எவ்வளவதிகமாக உயர்த்தப்படுகிறாரோ, அவ்வளவதிகமாக அவரது மகிமைக்காக நாம் உயர்த்தப்படுகிறோம்; நாம் 'மலையின்மேல் இருக்கிற பட்டணமாக, உலகத்துக்கு வெளிச்சமாக' மாறுகிறோம்; நமது வெளிச்சத் தைக் கண்டு மனுஷர் பரலோகத்திலிருக்கிற பிதாவை மகிமைப்படுத்து வார்கள் (மத். 5 : 14, 16).

"*உயர்ந்த மலைகளெல்லாம் மூடப்பட்டன*" - நமது ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் உயர்ந்து செல்லச் செல்ல, நமக்கு முன்பாக மலை போல் பெரிதாகத் தோற்றமளித்த பிரச்சினைகள் யாவும் நம் கண்களை விட்டு மறைந்துவிடுகின்றன. இப்பொழுது நமது வாழ்க்கையே ஒரு மகிழ்ச்சி கரமான பாடலாக - அதாவது தேவனை ஆராதிக்கிற, துதிக்கிற, புகழுகிற பாடலாக இருக்கிறது.

ஜூன் 25

கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தின் குணமாக்கும் வல்லமை

"***நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்காக அடையாளமாய் இருக்கும்; அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக்***

கடந்துபோவேன்; நான் எகிப்து தேசத்தை அழிக்கும்போது, அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும்" (யாத். 12 : 13).

"கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ? இரணவைத்தியனும் அங்கே இல்லையோ? பின்னை ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற்போனாள்?" (எரே. 8 : 22). கீலேயாத்தின் பிசின் தைலம் கிறிஸ்துவின் இரத்தத்திற்கு அடையாளமாக இருக்கிறது. ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் நமக்குச் சுகமுண்டு.

பாவமன்னிப்பும், வியாதி குணமாகுதலும் ஒருங்கிணைந்தே செல்லுகின்றன - "*அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி*" (சங். 103 : 3). கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தினால் நம் பாவங்களற நம்மைக் கழுவிச் சுத்திகரிக்கக் கூடுமானால், அது நம் சரீரத்தைச் சுகமாக்கவும் வல்லமையுள்ளதாயிருக்கிறது. உண்மையில், அவரது இரத்தம் அதை விட அதிகமாகவே செய்ய வல்லமையுள்ளது - கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்ட ஒரு பரிசுத்தவானின் ஜீவியம் கொள்ளைநோய்களுக்கும் வாதைகளுக்கும் விலக்கிப் பாதுகாக்கப்படும். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் தெளிக்கப்பட்ட வீடுகள் வாதைக்கு நீங்கலாகக் காக்கப்பட்டன: "*அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன்; ... அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும்*" (யாத். 12 : 13). புதிய ஏற்பாட்டில் கர்த்தராகிய இயேசுவே நமக்காக அடிக்கப்பட்ட பஸ்கா ஆட்டுக்குட்டியாயிருக்கிறார். "*நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்*" (ஏசாயா 53 : 5).

அருமையான வாசகரே! பாவமே வியாதிக்கு ஒரு முக்கிய காரணமாகும். கர்த்தராகிய இயேசு ஒருவரது வியாதியைக் குணமாக்கும் முன்பாக, அந்நபரின் பாவத்தை மன்னித்ததாக நாம் வேதாகமத்தில் பல இடங்களில் வாசிக்கிறோம். பாவமானது ஒருவனது ஜீவியத்தில் பிசாசானவன் நுழைவதற்கு இடமுண்டாக்கி, பின்னர் வியாதியின் மூலமாக அவனைச் சிறைப்படுத்திக்கொள்கிறது. ஒருவன் கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தினால் தன் பாவங்களனைத்தும் நீங்கக் கழுவப்பட்டால், அதற்குப் பின் பிசாசானவனால் அவனில் கிரியை செய்ய முடியாது; அவனது சரீரத்தில் வியாதியைக் கொண்டுவரவும் பிசாசானவனால் கூடாது.

ஜூன் 26

மிக மேன்மையான வீரச்செயல்

"***அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப் பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்***" (ரோமர் 8 : 3).

பிதாவாகிய தேவன், சிலுவையில் மரிப்பதற்காகத் தம்முடைய குமாரனாகிய இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பியதின் மிக உயரிய நோக்கம், பாவத்தை மாம்சத்தில் ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பதே ஆகும். நியாயப்பிரமாண காலப் பரிசுத்தவான்கள், சிவந்த சமுத்திரத்தைப் பிளத்தல், மரித்தவர்களை உயிரோடெழுப்புதல் போன்ற அருஞ்செயல்களைச் செய்யக்கூடியவர்களாயிருந்த போதிலும், அவர்களால் செய்யக்கூடாதிருந்த காரியம், பூரண பரிசுத்த ஜீவியம் செய்தல் ஆகும். எனவே அற்புதங்களைச் செய்தல், மரித்தோரை எழுப்புதல் போன்றவற்றைக் காட்டிலும் ஜெய ஜீவியம் செய்தலே மேன்மை வாய்ந்ததும் சிறப்பு மிக்கதுமாகும் என்பதை இது நிரூபிக்கிறது.

மிகப் பெரிய வீரச்செயல், மாம்சத்தை ஜெயிப்பதாகும். மிகப் பெரிய தோல்வி மாம்சீகத்திற்கு அடிபணிந்துவிடுவதே ஆகும்.

கர்த்தராகிய இயேசு தமது சிலுவை மரணத்தினால் பாவத்தை "ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்". எனவே புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இருக்கும் நாம் பரிசுத்த ஜீவியம் செய்யச் சுயாதீனம் உள்ளவர்களாய் இருக்கிறோம். "*கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே*" (ரோமர் 8 : 2). எனவே நாம் *பரிசுத்த ஜீவியம் செய்யாதிருப்போமாயின்*, அதற்கு நாம் கூறத்தக்க சாக்குப்போக்கு ஏதேனும் உண்டோ?

'மாம்சமான யாவற்றையும்' அழிக்கும்படியாக தேவன் பெருவெள்ளமாகிய நியாயத்தீர்ப்பை அனுப்பினார் (ஆதி. 6 : 13; 7 : 21). இதுவே வரப்போகும் நியாயத்தீர்ப்பின் நோக்கமாகவும் இருக்கும் - '*அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால் ஒரு* ***மாம்சமாகிலும்*** *தப்பிப்போவதில்லை*' (மத். 24 : 22 -Eng.).

ஆகவே நாம் துர்இச்சைக்கு இடமாக '*மாம்சத்தைப் பேணாமலிருந்து*' தேவனுடைய ஆவியினாலே மாம்சத்தை ஜெயிப்போமாக.

ஏனெனில் "*மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்*" என திருவசனம் கூறுகிறது (ரோமர் 8 : 13).

ஜூன் 27

நீ தப்ப முடியாது!

'*மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற ஒரு வழியுண்டு; அதின் முடிவோ மரண வழிகள்*' (நீதி. 16 : 25 -Eng.).

சில வேளைகளில் தேவனுடைய திட்டங்களைவிட நம்முடைய சொந்தத் திட்டங்கள் மேலானவையாகவும், அதிக ஞானமுள்ளவை யாகவும், அதிக வசதியானவையாகவும் இருப்பது போல நமக்குத் தோன்றக் கூடும். ஆயினும் "*அதின் முடிவோ மரண வழிகள்*". மேற்கூறப் பட்டுள்ள வசனத்தில் 'ஒரு வழி' என ஒருமையில் துவங்கி, 'வழிகள்' என பன்மையில் முடிவுறுவதைக் கவனிக்கவும். அதாவது நமது சொந்த 'வழி'யானது முடிவில் 'வழிகளாக' மாறிவிடும். '*பின்வாங்கும் இருதய முள்ளவன் தன் வழிகளிலே திருப்தியடைவான்*' (நீதி. 14 : 14). நமது சுயசித்தம் நம்மைப் பல திசைகளில் நடத்தி, முடிவில் மரணத்திற்கு வழிநடத்திவிடும்; அப்போது நாம் தேவனுடைய பிரசன்னத்திற்கு அந்நியராகிவிடுவோம்.

தேவன் யோனாவை நினிவேக்குப் போகச் சொன்னார். அவனோ நினிவேக்குச் செல்வதற்குப் பதிலாக, தர்ஷீசுக்குப் போகத் திட்டமிட்டான். அந்த இடத்திற்குப் போக ஒரு கப்பல் ஆயத்தமாயிருப்பதை அவன் கண்டான். அதில் அவனுக்கு ஒரு இருக்கையும் கிடைத்தது; அந்தப் பயணச்சீட்டிற்கான கட்டணமுங்கூட அவனிடம் இருந்தது. சிறிது நேரத்திற்கு அவனது சொந்தத் திட்டம் அவனுக்கு அநுகூலமாக இருந்தது போல தோன்றிற்று. இருப்பினும் அதிக தாமதமின்றியே ஒரு பெருங்காற்று அக்கப்பலின் மேல் மோதியடித்தது; அவன் மரணத்தைச் சமீபிக்குமளவிற்குப் பிரச்சினைகளை எதிர்கொள்ள நேர்ந்தது.

அருமையான தேவபிள்ளையே! நீ உன் சொந்தத் திட்டங்களை உடையவனாயிருந்து, தேவனுடைய திட்டத்தை விட்டு ஓடும் ஒரு யோனா வாயிருக்கிறாயோ? சீக்கிரத்திலோ அல்லது தாமதமாகவோ ஒரு புயற்காற்று உன் மீது வீசும் என்பதை நினைவிற்கொள்வாயாக! உன்னுடைய சொந்தத் திட்டங்கள் உன்னை ஊக்குவிப்பவையாய் உன் மாம்சீகமான மனதுக்குத் தோன்றினும், நீ அவைகளை விட்டுவிடுவதே

உனக்கு நலமாயிருக்கும். உன்னுடைய வாழ்க்கையையும் எதிர்காலத்தை யும் பாழாக்கிப்போடுவதை நீ விரும்பாவிடில், பிசாசின் வழிகளையும் உன் சொந்த வழிகளையும் உன் ஜீவியத்திலிருந்து நீக்கிப்போடுவாயாக.

ஜூன் 28

காலம் கடந்துபோயிற்றே!

"*அநுக்கிரக காலத்திலே நான் உனக்குச் செவிகொடுத்து, இரட்சணிய நாளிலே உனக்கு உதவிசெய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே; இதோ, இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணிய நாள்*" (II கொரி. 6 : 2).

ராஜாவாகிய தாவீது அமாசாவிடம் ஜனங்களை மூன்று நாட் களுக்குள் கூட்டிச் சேர்க்கும்படி கட்டளையிட்டான். ஆனால் '*ராஜா தனக்குக் குறித்த காலத்திலே வராமல் அமாசா தாமதித்தான்*'. அதினிமித்தம் முடிவாக '*அவன் நடுவழியிலே இரத்தத்திலே புரண்டுகிடந்தான்*' (II சாமு. 20 : 4, 5, 12). வேதாகமம் 'தாமதித்தலின் ஆவியைக்' குறித்த எச்சரிப்பு களால் நிறைந்திருக்கிறது. ஒரு சரியான வேலை சரியான வழியிலும், குறிப்பாக ***சரியான நேரத்திலும்*** செய்யப்பட வேண்டும்.

தேவனுடைய மனிதர் ஒருவர் ஒரு சுவிசேஷக் கூட்டம் நடத்திக் கொண்டிருக்கையில், கூடியிருந்த யாவரையும் தங்கள் வாழ்க்கையைக் கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்கும்படி அறிவுறுத்திக்கொண்டிருந்தார். அக் கூட்டத்திலிருந்த ஒரு நபர் தன் இருதயத்தில் உணர்த்தப்பட்ட போதிலும், அப்பிரசங்கியார் இன்னும் சில நாட்கள் அந்த இடத்தில் கூட்டங்கள் நடத்தப்போவதால், தன் ஜீவியத்தை மறுநாள் கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுக்கலாமென்று நினைத்திருந்தான். ஆனால் அந்த 'மறுநாள்' அவ னுக்கு வரவே இல்லை. ஏனெனில் அந்த இரவே அவன் வீடு திரும்பும் வழியில் அவனை ஒரு பாம்பு தீண்டியதால் அவன் மரித்துப்போனான்.

தங்கள் ஜீவியத்தைக் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தல், தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுதல், தேவனுக்கு ஊழியஞ்செய்தல் போன்ற பல நல்ல நோக்கங்கள் உடையவர்களாய் அநேகர் இருக்கின்றனர். இருப்பினும் இவ்வெல்லா நல்லெண்ணங்களையும் 'தாமதித்தலின் ஆவி' அழித்துப்போடுகிறது. 'நாங்கள் எங்களுக்கு வசதியான வேளை வரும்போது அதைச் செய்வோம்' என்று அவர்கள் கூறுகிறார்கள். தேசாதிபதியாகிய பேலிக்ஸ் அப். பவுலின் பிரசங்கத்தைக் கேட்டபோது அவனுக்கு நடுக்கமுண்டாகி, தன் பாவங்களைக் குறித்து உணர்த்தப்பட்ட

போதிலும், *'எனக்கு வசதியான சமயம் கிடைக்கும்போது உன்னை அழைப்பிப்பேன்'* என்று அவரிடம் கூறினான் (அப். 24 : 25 -Eng.). அந்த 'வசதியான சமயம்' ஒருபோதும் வரவே இல்லை. தன்னுடைய நித்தியத்தைப் பாழாக்கின அந்தத் தாமதத்தின் ஆவிக்காக பேலிக்ஸ் மறுமையில் நரகத்திலே சதாகாலமும் மனஸ்தாபப்பட்டுக்கொண்டு இருப்பான்!

'நான் மனந்திரும்புவதற்குக் காலங்கடந்துபோயிற்றே! நான் கிறிஸ்துவிடம் வருவதற்குக் காலங்கடந்துபோயிற்றே! - இவை போன்ற மன வருத்தங்களால் நிறைந்ததுதான் நரகம்! சிலர் தாங்கள் செய்த காலதாமதத் தினிமித்தம் தங்கள் நித்தியம் முழுவதையுமே அழுகையில் செலவழிக்கப் போகிறார்கள். அன்பார்ந்த வாசகரே! உமது நித்தியத்தை உமது 'சோம்பலின் ஆவி' பாழாக்கிவிடாதிருப்பதாக! நீர் இன்றைய தினம் ஏதாகிலும் செய்ய வேண்டும் என தேவன் விரும்புவாராயின், அதை நாளைக்கென்று தள்ளிப் போட வேண்டாம். தமக்கு ஊழியம் செய்யும்படி உம்மை அவர் அழைப்பாரானால், அவரது அழைப்புக்கு ***இப்போதே*** கீழ்ப்படிவீராக!

ஜூன் 29

உண்மையான மனந்திரும்புதல்

"***இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது***" (லூக்கா 19 : 9).

கர்த்தராகிய இயேசு சகேயுவின் வீட்டிற்குள் பிரவேசித்தபோது அவரைப் பின்பற்றிய ஜனங்கள் சந்தோஷப்படுவதற்குப் பதிலாக முறுமுறுக்க ஆரம்பித்தார்கள். இருப்பினும் சகேயு அவர்களது முன்மாதிரியற்ற நடக்கையினால் சிறிதும் பின்னடையாமல், தன் முதலாவது சாட்சியைக் கொடுக்க எழுந்து நின்றான். அவனது முதலாவது சாட்சி அவனது குற்றங்களை அறிக்கையிடுதலும், தேவனுடைய வார்த்தைக்குத் தன்னை அர்ப்பணித்தலுமாயிருந்தது. சகேயு நின்று கர்த்தரை நோக்கி, "*ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கின துண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான்*". பழைய ஏற்பாட்டில் தேவனுடைய கட்டளை ஒருவன் நாலத்தனையாகத் திருப்பிச் செலுத்துவதை வலியுறுத்திற்று (யாத். 22 : 1 காண்க). தேவ வார்த்தையை உள்ளபடியே கண்டிப்பாகச் செயல்படுத்தும் வண்ணமாக, தான் தேவனிடத்திலிருந்தோ, மனிதனிடத்திலிருந்தோ திருடிய எல்லாவற்றையும் நாலத்தனையாகத் திருப்பிக் கொடுக்க இப்போது சகேயு மனமுவந்திருக்கிறான்.

ஒருவன் உண்மையாக மனந்திரும்பி, கர்த்தராகிய இயேசு அவனுடைய ஜீவியத்திற்குள் வந்திருப்பாரேயானால், சகேயுவின் வாழ்க்கையில் சம்பவித்தது போல, அவனது வாழ்க்கை முற்றிலும் மாற்றப்படும். மேலும், தேவனுடைய வார்த்தையின் ஒவ்வொரு அம்சத்துக்கும் ஒத்ததாகத் தன் ஜீவியத்தை மாற்றிக்கொள்ளும்படியாக எத்தகைய கிரயம் செலுத்த வேண்டியது வந்தாலும் அவன் அதற்கு மனமுவந்திருப்பான். கர்த்தராகிய இயேசு ஒருவனது ஜீவியத்திற்குள் வரும்போது அவன் செய்யும் முதன்மையான காரியங்களில் ஒன்று, பண விஷயங்களில் உண்மையாயிருப்பதாகும்.

அப். பவுலுடன் சேர்ந்து சகேயுவும், "*எனக்கு லாபமாயிருந்தவை களெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். ... அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்*" (பிலி. 3 : 7, 8, 11) என்று தைரியமாகக் கூறக்கூடியவனாயிருந்தான்.

சகேயுவின் சுருக்கமான, இனிமையான சாட்சிக்குப் பின் உடன் தானே கர்த்தராகிய இயேசுவும் அவனைக் குறித்து ஒரு சாட்சி கொடுக்கிறார்: "*இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே*" (லூக்கா 19 : 9). அநேக தேவனுடைய பிள்ளைகள் தங்களைப் பற்றி சாட்சி கூறுகிறார்கள். ஆனால் கர்த்தராகிய இயேசுவுக்கோ அவர்களைக் குறித்து கூறுவதற்கு எந்தச் சாட்சியும் இல்லாதிருக்கக் கூடும்.

ஜூன் 30

கிறிஸ்து வெளிப்படுத்தப்படுதல்

"***அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள்; அவரிடத்தில் பாவமில்லை***" (I யோவான் 3 : 5).

நமது ஜீவியத்தில் கிறிஸ்து வெளிப்படுத்தப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் அல்லது நமக்கு உண்டாகிற கிறிஸ்துவை அறிகிற அறிவைப் பற்றிய வெளிப்படுத்தல் ஒவ்வொன்றும் பாவத்தை நம்மை விட்டு அகற்றி விடுகிறது. எந்த அளவுக்குக் கிறிஸ்து நம்மில் வெளிப்படுத்தப்படுகிறாரோ, அந்த அளவுக்கு நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம். வேறு வார்த்தைகளில் கூறின், கிறிஸ்துவை அறிகிற அறிவைப் பற்றிய வெளிப்படுத்தலானது நம்மை ஆழமாகப் பரிசுத்தமாக்குகிறது. எவ்வளவதிகமாக வெளிச்சம் பிரகாசிக்கிறதோ, அவ்வளவதிகமாக இருள் நீங்கிப்போவது போல,

கிறிஸ்து நம்மிலும் நம் மூலமாகவும் ***வெளிப்படுத்தப்படும்*** ஒவ்வொரு சந்தர்ப்பமும் நாம் பாவத்தைவிட்டு வேறுபிரியவும், கிறிஸ்துவோடு நெருங்கிச் சேரவும் நமக்கு உதவி செய்கிறது.

"*அவரிடத்தில் பாவமில்லை*". ஆகவே பாவமில்லாத தேவ குமாரனுக்குள் நாம் நம்மை மறைத்துக்கொள்ளும்போது, பாவமில்லாத ஒரு பூரணத்துக்கு நாம் வளர முடியும். மாறாக நாம் நம்மை அவருக்குள் மறைத்துக்கொள்வதற்குப் பதிலாக, நம்மை நாமே வெளிப்படுத்திக் காண்பித்தால், பாவத்திற்கு நாம் திறந்துவைக்கப்படுகிறோம்; அதினிமித்தம் நமது பரிசுத்தமாகுதலையும், இரட்சிப்பையுங்கூட நாம் இழக்க நேரிடும். எந்த அளவுக்கு நாம் அவருக்குள் நம்மை மறைத்துக் கொள்கிறோமோ, அந்த அளவுக்கு நாம் சுத்திகரிக்கப்படுகிறோம்; பாதுகாப்புக்குள் இருக்கிறோம்.

"*அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை; பாவஞ் செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை, அவரை அறியவுமில்லை*" (I யோவான் 3 : 6) - கிறிஸ்துவில் நிலைத்திருப்பது என்பது உண்மையில் அவரில் மறைந்துகொள்வது என பொருள்படும். அவருக்குள் மறைந்திருப்பதன் மூலமாக நாம் எவ்வாறு பாவம் செய்வதைத் தவிர்க்க முடியும்? ஒரு கட்டடத்திற்குள் மறைந்திருக்கும் ஒருவன் வெளியே காணப்படாதிருப்பது போல, *நாம் கர்த்தராகிய இயேசுவுக்குள் மறைந்திருக்கும்போது சத்துருவானவன் நம்மைக் காண முடியாது*. "*பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை, அவரை அறியவுமில்லை*" - நாம் எவ்வளவதிகமாய்ப் பரிசுத்தமாக்கப்படுகிறோமோ, அவ்வளவதிகமாக அவரை அல்லது அவரது மகிமையை நாம் காண்கிறோம் என்பதை இது நிரூபிக்கிறது. அது மட்டுமின்றி, எவ்வளவதிகமாக நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோமோ, அவ்வளவதிகமாக நாம் அவரை அறிந்துகொள்கிறோம். சுருங்கக்கூறின், நாம் முழு மனதுடனும் ஒரு கறையற்ற தூய ஜீவியத்தை நேசிப்போமானால், முன் ஒருபோதும் இல்லாத அளவுக்கு நாம் கிறிஸ்துவைக் காண்போம்; அவரை அறிவோம்.

"*பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்*" (I யோவான் 3 : 8). கிறிஸ்து தம்மை வெளிப்படுத்தும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் அல்லது நமக்கு உண்டாகிற கிறிஸ்துவை அறிகிற அறிவைப் பற்றிய வெளிப்படுத்தல் ஒவ்வொன்றும் பிசாசின் கிரியைகளை அழிக்கிறது. பிசாசின் கிரியைகள் (பாவம், வியாதி முதலானவை) அதிகமதிகமாக வெளிப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கிற ஓர் உலகில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். ஆகவே முன் ஒருபோதுமில்லாத அளவிற்கு நமது ஜீவியம் கிறிஸ்துவை வெளிப்படுத்துவது இன்றியமையாததாயிருக்கிறது.

ஜூலை 1

உன்னுடைய தரிசனத்தை விசாலமாக்கு

"***தீர்க்கதரிசிகளின் புத்திரர் எலிசாவை நோக்கி: இதோ, நாங்கள் உம்முடன் குடியிருக்கிற இந்த இடம் எங்களுக்கு நெருக்கமாய் இருக்கிறது ... என்றார்கள்***" (II இராஜா. 6 : 1, 2).

இங்கு எலிசா கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு நிழலாட்டமாயிருக்கிறான். தீர்க்கதரிசிகளின் புத்திரர் எலிசாவுடன் சேர்ந்து ஜீவித்தது போல, நாமும் கர்த்தராகிய இயேசுவோடு ஐக்கியமுள்ளவர்களாய் ஜீவித்துக் கொண்டிருக்கக் கூடும்; எனினும் நாம் குடியிருக்கிற இடம் நமக்கு நெருக்கமாக அல்லது மிகச் சிறியதாக இருக்கிறது என்ற உணர்வற்றவர்களாய் நாம் இருக்கக் கூடும். நாம் எவ்வளவு குறுகிய மனப்பான்மை உள்ளவர்கள் என்றும், நம்முடைய ஆவிக்குரிய தரிசனமும் குறிக்கோளும் எவ்வளவு குறுகிய வரம்பிற்குட்பட்டவையாய் இருக்கின்றன என்றும் நாம் உணராத பட்சத்தில், ஒரு விசாலமான ஆவிக்குரிய ஜீவியத்தை நாம் ஒருபோதும் வாஞ்சிக்காதவர்களாகவே இருப்போம். நாம் கர்த்தருக்குப் பிரயோஜனமுள்ளவர்களாயிருக்க வேண்டுமெனில், நாம் ஒரு விசாலமான தரிசனமும் ஒரு பரந்த இருதயமும் உள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

கடந்த காலத்தில் ஜீவித்த பரிசுத்தவான்களனைவரும் பரிசுத்தவான்களாகவே பிறந்தவர்களல்ல; ஆனால் அவர்கள், தேவன் தங்களைக் குறித்துக் கொண்டிருந்த பெரிய திட்டத்தைக் குறித்த தரிசனமுடையவர்களாயிருந்தனர். கர்த்தர் தன்னை ஆசீர்வதித்து, தன்னுடைய எல்லையைப் பெரிதாக்க வேண்டுமென்று யாபேஸ் கர்த்தரிடத்தில் ஜெபித்தான். அவன் வேண்டிக்கொண்டதைக் கர்த்தர் அவனுக்கு அருளினார்; அவன் தன் சகோதரரைப் பார்க்கிலும் கனம் பெற்றவனானான் (I நாளா. 4 : 9, 10). தேவன் இந்நாட்களில் யாபேஸின் குமாரரையும் குமாரத்திகளையும் - அதாவது தம்முடைய பார்வையிலும் மனிதருடைய பார்வையிலும் கனம்பெற்ற, ஆசீர்வதிக்கப்பட்ட ஜனங்களை எழுப்ப வேண்டும்.

'*இஸ்ரவேலின் பரிசுத்தரை மட்டுப்படுத்தினதே*' இஸ்ரவேல் ஜனங்களின் பாவமாயிருந்தது (சங். 78: 41). குறுகிய எல்லைக்குட்பட்ட நம் கருத்துக்களும் அறிவும் தேவனுடைய கரங்கள் கிரியை செய்யக்கூடாத படி அவைகளைத் தடுத்து நிறுத்தி, நம்மிலும் நமக்காகவும் நம் மூலமாகவும் அவர் பெரிய காரியங்களைச் செய்யக் கூடாதபடி அவரைத் தடைசெய்யக் கூடும்; '*தேவனுக்காகப் பெரிய காரியங்களைச் செய்ய*

முற்படு; தேவனிடத்திலிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்' என்று தேவமனிதன் ஒருவர் கூறியிருக்கிறார்.

தரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் அழிந்துபோவார்கள். நம் முடைய தரிசனம் தேவனுடைய அதே தரிசனமாயிருக்க வேண்டும். நம்முடைய குறிக்கோள் தேவனுடைய அதே குறிக்கோளாகவே இருக்க வேண்டும். அப்பொழுது நம்முடைய எண்ணங்கள் தேவனுடைய எண்ணங்களாகவே இருக்கும். அதன் முடிவான பலனாக, நமக்குக் கிறிஸ்துவின் அதே ஜீவியம் உண்டாயிருக்கும்.

ஜூலை 2

நீ ஒரு காவற்காரன்

"***தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார்***"
(ஆதி. 2 : 15).

மனிதனுக்கு முதன்முதலாகக் கிடைத்த வேலை மிகச் சிறந்த ஒன்றாயிருந்தது; அது மிகச் சிறந்த இடத்தில் அமைந்திருந்தது; அது மிகச் சிறந்ததோர் எஜமானரிடமிருந்து அவன் பெற்றுக்கொண்ட வேலை யாகவும் இருந்தது! அப்பணியானது அவனுக்கு மகிழ்ச்சியை மட்டுமே கொடுத்ததேயன்றி, அது அவனுக்கு யாதொரு சிரமத்தையும் ஒருபோதும் அளிக்கவில்லை. தோட்டத்துக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்கென்று ஒரு கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்க வேண்டிய அவசியம் அவனுக்கு இருக்கவில்லை. அதற்காக நான்கு கிளைகளுள்ள ஒரு நதி தோட்டத் தினூடாக ஓடினதுமன்றி, தேவன்தாமே மூடுபனியினால் அதை அடிக்கடி நனைத்தார் (ஆதி. 2 : 6). மனிதனைக் குத்துவதற்கோ, காயப்படுத்துவதற்கோ, அங்கே முட்களோ நெரிஞ்சில்களோ இருக்கவில்லை. அவனைப் போஷிக்கும்படியாக நற்கனிகளால் நிறைந்த அருமையான மரங்கள் அத்தோட்டமெங்கும் காணப்பட்டன. மனிதன், தான் மேற்கொண்ட முதல் வேலையை எந்தவொரு பிரதிபலனையும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு செய்யவில்லை; தன்னுடைய சிருஷ்டி கர்த்தரும் பிதாவு மாகிய தேவனை அவன் நேசித்தபடியினாலேயே அதைச் செய்தான்.

மூலபாஷையில் உபயோகிக்கப்பட்டுள்ள வார்த்தையின் கருத்தின் படி, மனிதன் தோட்டத்தைக் காவல் செய்ய வேண்டியதாயிருந்தது - அதாவது அவன் விழித்திருந்து அதைப் பாதுகாக்க வேண்டியதா

யிருந்தது. தேவனுக்குச் சொந்தமான சொத்தைக் காவல் செய்தலாகிய வேலை ஒருவனிடம் ஒப்புவிக்கப்படுவது அவனுக்கு எவ்வளவு பெரிய சிலாக்கியமாயிருக்கிறது! அச்சமயத்தில் தோட்டத்தைக் காவல்செய்ய தேவன் எந்தவொரு கேருபீனையும் நியமித்திருக்கவில்லை. மெய்யாகவே, மனிதனுக்கு அவ்வேலை ஒரு முடிசூட்டுகிற மகிழ்ச்சியாயிருந்தது! ஆனால், அந்தோ பரிதாபம்! நாளடைவில் மனிதன் தன்னுடைய கடமை யைச் செய்வதற்குக் கவனமாயிராமற்போனான்! அதினிமித்தம் அவ னுடைய கிரீடம் (அவனுக்கு அளிக்கப்பட்டிருந்த உத்தரவாதம்) வேறொரு வருக்குச் சென்றுவிட்டது. காவற்காரனாயிருந்த அவன் தோட்டத்துக்குள் சர்ப்பம் உட்புகுவதற்கு அனுமதியளித்திருந்திருக்கவே கூடாது.

நாம் நம்முடைய ஜீவியத்தைக் காத்துக்கொள்ளும்படியாகத் தேவன் நம்மை அதற்குக் காவற்காரராக நியமித்திருக்கிறார். நாம் ஜாக்கிரதையாக இராவிடில் சர்ப்பம் வந்து நம்மை வஞ்சித்துவிடும். ஆதாம் தன்னுடைய பணிகளை நிறைவேற்றும் அம்சத்திலுங்கூட அவனுக்கு உதவியாயிருக் கும்படி இப்பொழுது அவனுக்கு ஒரு ஏற்ற துணை கொடுக்கப்பட்டி ருந்ததால், அவன் தன்னுடைய கடமையைச் செய்வதில் முன்னிலும் அதிக ஜாக்கிரதையாயிருந்திருக்க வேண்டும். அவனோ, தனக்கு ஒரு மனைவி கிடைத்தவுடன் அக்கடமையில் தனக்கிருந்த ஆர்வத்தை இழந்துவிட்டான் போலும்!

"*ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக் குள்ளதைப் பற்றிக்கொண்டிரு*" (வெளி. 3 : 11).

ஜூலை 3

இணங்கிவிடாதே!

'***தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; விசுவாசத்தில் உறுதியாயிருந்து, பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்***' (I பேதுரு 5 : 8, 9).

நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தை நாம் துவங்குகையில், நம் ஜீவியம் சமாதானமுள்ளதாகவும் யாதொரு பிரச்சினையும் அற்றதாகவும் இருப்பதாக நாம் உணரக் கூடும். ஆனால் நாம் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ந்துவரும்போதோ, பரீட்சைகளையும் சோதனைகளையும் நாம் சந்திப்பதாக உணர்ந்து, அவைகளுக்கு எதிர்த்துநிற்க முற்படுகிறோம். தான் சந்திக்கும் யுத்தங்கள் சிலவற்றில் ஒரு நபர் தோல்வியைக் கண்டால், அவர்

நம்பிக்கையிழந்து, இனி அவற்றுக்கு எதிராகப் போராடுவதைத் தொட ராமல் விட்டுவிடலாம் என்ற முடிவுக்கும் வந்துவிடக் கூடும். இந்நிலையில் அவருடைய மனதை மாம்சீகமான சிந்தைகளும், பாவ எண்ணங்களும் மேற்கொள்ளுவதால் சாத்தான் அவரை மேற்கொள்ளு கிறான். அப்படிப்பட்டவர்கள், தாங்கள் ஒரு நிர்ப்பந்தமான ஜீவியம் செய்வதுடன், மற்றவர்களையும் அந்நிலைக்குள்ளாக்குகிறார்கள்.

பிசாசானவன் ஒரு திருடனாயிருக்கிறான்; திருடுவதும் கொல்லு வதும் அழிப்பதுமே அவனுடைய திட்டமாயிருக்கிறது (யோவான் 10 : 10). அவன் மனிதனுடைய சமாதானத்தையும் சந்தோஷத்தையும் திருட விரும்புகிறான்; அவன் மனிதனுடைய சரீரத்தைக் கொன்று, அவனுடைய ஜீவியத்தை, அவனுடைய ஆவிக்குரிய ஜீவியத்தையே அழிக்க விரும்பு கிறான். தேவன் மனிதனுக்கென்று திட்டமிட்டிருக்கும் அனைத்தையும் அவனிடமிருந்து பறித்துக்கொள்ள அவன் விரும்புகிறான்.

ஒரு காலத்தில் சவுலாயிருந்த அப். பவுலைக் குறித்து பிசாசான வனுக்கு ஒரு திட்டம் இருந்தது; அவரை அழித்துப்போட வேண்டுமென் பதே அத்திட்டமாகும். அத்திட்டத்தின்படியே அவரும் கிறிஸ்தவர்களை அழிக்கும்படி தமஸ்குவுக்குச் சென்றுகொண்டிருந்தார். ஆனால் கர்த்தர் அவர் சென்றுகொண்டிருந்த வழியிலேயே அவரைத் தமக்குச் சிறையாக்கி, அவரைக் குறித்து தாம் கொண்டிருந்த திட்டங்களை அவருக்கு வெளிப் படுத்தினார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அதற்குப் பின்னர் அப். பவுல், தர்க்கங்களையும் தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாக எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்து வுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்தத் தொடங்கினார் (II கொரி. 10 : 5). இதினிமித்தமே அவரைக் குறித்த தேவனுடைய மகிமையான திட்டம் அவரில் வெற்றிகரமாக நிறைவேறிற்று என்பதில் ஆச்சரியமொன்றுமில்லை.

அருமையான வாசகரே, தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட சிம்சோன், ராஜாவாகிய சவுல் போன்ற மேன்மை வாய்ந்த மனிதர்களையும், மற்றும் சிலரையும் கவனித்துப் பார்த்தால், பிசாசானவன் அவர்களுடைய ஜீவியத்தையும் ஊழியத்தையும் எவ்விதம் அழிக்க முற்பட்டு, அதில் வெற்றி கண்டான் என்று நாம் காணலாம். ஆகவே அவனது திட்டத்துக்கு இணங்கிவிடாதபடி நாம் கவனமாயிருப்போமாக.

'போராடுவோம், போராடுவோம்
பாவத்தை எதிர்த்தென்றும் போராடுவோம்;
குருதி சிந்த நேரிடினும்
ஜெயமடையும் வரை போராடுவோம்'.

ஜூலை 4

கலக்கங்களின் மத்தியில் பரலோகம்

'பின்பு தேவன்: ஜலத்தின் மத்தியில் ஆகாயவிரிவு உண்டாகக்கடவது என்று சொன்னார். தேவன் ஆகாயவிரிவுக்கு வானம் என்று பேரிட்டார்' (ஆதி. 1 : 6, 8).

'ஆதியிலே' தேவன் வானத்தைச் சிருஷ்டித்தது மட்டுமல்லாமல் (ஆதி. 1 : 1), இரண்டாம் நாளிலும் (ஆனால் முதல் முறையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இப்போது முற்றிலும் வேறுபட்ட மூலப்பொருட்களைக் கொண்டு) வானத்தைச் சிருஷ்டித்தார் என்பது கவனிப்பதற்கு சுவாரஸ்ய மான ஒன்றாயிருக்கிறது.

தம்முடைய ஆறு நாள் சிருஷ்டிப்பின் இரண்டாம் நாளில், தேவ னுடைய செயல் அதிக பட்சம் தண்ணீரோடு சம்பந்தப்பட்டதாகவே இருந் தது. 'ஜலம்' என்ற பதம், ஆதியாகமம் 1 : 6, 7 ஆகிய இரண்டு வசனங் களில் ஐந்து முறை உபயோகிக்கப்பட்டுள்ளது. தேவன் ஏன் இரண்டாம் நாளில் தண்ணீர்களைப் பற்றிய விஷயத்திலேயே தம் கருத்தார்வத்தை முற்றிலும் செலுத்தினார் என்று ஒருவர் வியக்கக் கூடும். சங்கீதம் 69 : 1, 2, 14, 15 ஆகிய வசனங்களிலிருந்து, தண்ணீர்கள் நெருக்கங்கள், சோதனைகள், உபத்திரவங்கள் ஆகியவற்றைக் குறிக்கின்றன என்று நாம் அறிந்துகொள்கிறோம். ஜலத்தின் மத்தியில் வானம் என்று அழைக்கப் படும் ஆகாயவிரிவைத் தேவன் வைத்தார். 'வானம்' என்பதற்கு ஆங்கில வேதாகமத்தில் 'பரலோகம்' (heaven) என்ற பதம் உபயோகிக்கப்பட்டுள்ளது. ஆகவே தேவபிள்ளையே, ஜலங்கள் அல்லது கலக்கங்களின் மத்தியில் தேவன் நமக்காக ஒரு நரகத்தை அல்ல, ஒரு ***பரலோகத்தையே*** வைத் திருக்கிறார் என்பதை உணர்ந்துகொள்வது நமக்கு எவ்வளவு ஊக்கமளிப்ப தாகவும் நம்மைப் பக்திவிருத்தியடையச் செய்வதாகவும் இருக்கிறது!

இந்த 'வானம்' ஒரு மூலையிலோ அல்லது ஜலத்தின் பக்க வாட்டிலோ அல்லது ஜலத்தின் கீழோ, மேலோ இராமல், ***ஜலத்தின் மத்தி யில்*** இருக்கிறது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அது போலவே, நம்மைச் சூழ இருக்கும் தண்ணீர்கள் அல்லது கலக்கங்கள் மத்தியில் நாம் பரலோகத்தை அனுபவிக்கும்படியாகவே நம்முடைய அன்புள்ள தேவன் அவைகளை அவ்வப்போது நம் ஜீவியத்தில் அனுமதிக்கிறார். ஆகவே *'நான் ஆழமான நிலையாத ஜலத்திற்குள் வந்திருக்கிறேன்; வெள்ளங்கள் என்மேல் புரண்டுபோகிறது'* (சங். 69 : 2 -Eng.) என்று கூக்குரலிடுவதற்குப் பதிலாக, 'நான் பரலோகத்துக்குள் வந்திருக்கிறேன்! இங்கு மகிழ்ச்சி என் மேல் புரண்டுபோகிறது' என்று நாம் ஆர்ப்பரிக்கலாம்.

ஜூலை 5

உன் கண்ணீரை வீணாக்காதே!

"*என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்*" (சங். 56 : 8).

நம்முடைய கண்ணீரெல்லாம் சேகரிக்கப்பட்டு காக்கப்படுகிற துருத்தி ஒன்று தேவனிடத்தில் இருக்கிறது. தேவனுடைய பிள்ளையே, உன்னுடைய கண்ணீர் ஒருபோதும் வீண்போவதில்லை.

ஒரு தாயாருக்கு ஒரு 'கெட்ட குமாரன்' இருந்தான். அப்பைய னுடைய இரட்சிப்புக்காக அவர்கள் தேவசமுகத்தில் எப்போதும் அழுது ஜெபித்துக்கொண்டே இருந்தார்கள். ஒரு நாள் கர்த்தர், 'மகளே, உன்னுடைய ஜெபங்களெல்லாம் என்னுடைய சமுகத்தில் இருக்கிறது. இனி நீ அழ வேண் டாம்' என்று அவர்களிடம் கூறினார். பின்னர் ஒரு நாள், மின் தூக்கி (lift) ஒன்றில் அப்பையன் மேலே சென்றுகொண்டிருந்தபோது, அவனுக்கு அறிமுகமில்லாத ஒரு நபர் இரண்டு வாளிகள் நிறைய தண்ணீருடன் அதற்குள் பிரவேசித்தான். 'இந்தத் தண்ணீர் வாளிகளுடன் நீர் ஏன் மேலே செல்லுகிறீர்?' என்று அவன் அவரை வினவினான். அப்பொழுது அந்நபர், 'நான் ஒரு தேவதூதன்; இது தண்ணீரல்ல; உன்னுடைய தாயாரின் கண்ணீரை நான் தேவசமுகத்துக்கு எடுத்துச்சென்றுகொண்டிருக்கிறேன்' என்று விடைகூறி மறைந்துவிட்டான். அப்பையன் அதிர்ச்சியுற்றான். தன் னுடைய தாயார் தனக்காக எவ்வளவதிகமான கண்ணீர் சிந்தியிருக்கிறார் கள்! என்றுணர்ந்து, அவன் உடனடியாகத் தன் தாயாரிடம் சென்று, அவர் களிடம் மன்னிப்பு கேட்டு, தன் ஜீவியத்தில் கர்த்தரை ஏற்றுக்கொண்டான்.

தம்முடைய 'கண்ணீர்த் துருத்தியில்' தேவன் எவ்வகையான கண்ணீரைச் சேகரித்துக்கொண்டிருக்கிறார்? ஒருவேளை நீங்கள் சிந்துகிற கண்ணீர் எல்லாம் அந்தத் துருத்தியில் சேகரிக்கப்படாமற்போகக் கூடும். உலக ஜனங்கள் தங்களுடைய பணம், வேலை, பதவி, பட்டம், கனம் போன்றவற்றை இழக்கும்போது கண்ணீர் சிந்துகிறார்கள். தேவ மகிமைக் கென்றல்லாமல் சுய அனுதாபத்தினால் அழுகிறவர்களைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் துக்கப்படுகிறார். 'என்னை ஒருவரும் விசாரிப்பதில்லை; யாரும் எனக்காகக் கவலைப்படுவதில்லை; எல்லாரும் என்னைப் புறக்கணித்து அசட்டைபண்ணுகிறார்கள்; என்னை விளங்கிக்கொள்ள ஒருவருமே இல்லை' என்று சுய அனுதாபத்தினிமித்தம் நாம் சிந்தும் கண்ணீர்கள் தேவசமுகத்தைச் சென்றெட்டுவதில்லை.

'கர்த்தாவே, எனக்குப் போதுமான பணம் இல்லை; நான் இப்பொழுது செய்துகொண்டிருக்கிறதைக் காட்டிலும் நல்லதொரு வேலை

எனக்கு வேண்டும்' என்பது அநேகருடைய அங்கலாய்ப்பாயிருக்கிறது. அப்படி ஜெபிப்பதில் தவறொன்றுமில்லை. ஆனால், பூமிக்குரிய தேவை களுக்காக நீங்கள் உங்கள் கண்ணீரை வீணாக்காதீர்கள். நம்முடைய உடலமைப்பில் ஒரு குறிப்பிட்ட அளவு கண்ணீர் மட்டுமே உள்ளது என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். இவ்வுலகப் பிரகாரமான காரியங்களுக் காக நீங்கள் உங்கள் கண்ணீரை வீணாகச் செலவழித்துவிடுவீர்களென்றால், ஆவிக்குரிய காரியங்களுக்காகச் சிந்துவதற்கு உங்களுக்குக் கண்ணீரே இராது. நீங்கள் பொருள் சம்பந்தமான ஆசீர்வாதங்களுக்காகக் கண்ணீர் சிந்தி அவைகளைப் பெற்றுக்கொண்டாலும், நீங்கள் மரிக்கும்போது வெறுமையாகத்தானே செல்ல வேண்டியதாகும்! நீங்கள் பரலோகத்துக்குச் செல்லும்போது அங்கு உங்களுடைய கண்ணீர்த்துருத்தி வெறுமையா யிருக்கக் காண்பீர்களாயின், பரலோகத்தில் உங்களுக்குக் கிடைக்கவிருந்த தேவாசீர்வாதங்களில் பெரும்பாலானவைகளை நீங்கள் அடைந்து கொள்ளத் தவறியிருக்கிறீர்கள் என்பதையே அது புலப்படுத்தும்.

நம்முடைய குற்றங்களுக்காகவும், அழிந்துபோகிற ஆத்துமாக் களுக்காகவும், மற்றும் இவை போன்ற ஆவிக்குரிய காரியங்களுக்காகவும் நாம் எவ்வளவதிகமாகத் தேவசமுகத்தில் கண்ணீர் சிந்துகிறோமோ அவ் வளவதிகமாக நாம் தேவனில் கட்டியெழுப்பப்படுவோம். அப்படிப்பட்ட கண்ணீரெல்லாம் தேவனுடைய துருத்தியில் சேகரித்து வைக்கப்படும். அந்தக் கண்ணீருக்கெல்லாம் தக்க பிரதிபலனை அவர் நமக்கு அருளுவார்.

ஜூலை 6

அவருடைய பரிபூரண சித்தத்தைத் தெரிந்தெடுத்துக்கொள்

"*தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன்*"
(எபி. 10 : 7).

நாம் எந்த அளவுக்கு நம்மைத் தேவனுக்கு அர்ப்பணிக்கிறோமோ, அந்த அளவிற்கே அவரிடத்திலிருந்து வழிநடத்துதலைப் பெற்றுக் கொள்வோம். தேவனுடைய பரிபூரண சித்தத்தைச் செய்ய வாஞ்சித்து, அதற்கென்று நாம் நம்மை அர்ப்பணிப்போமென்றால், அவர் தம்முடைய பரிபூரண சித்தத்தை நமக்கு வெளிப்படுத்துவார். இஸ்ரவேலர் தேவ னுடைய கட்டளைகளை அசட்டை செய்ததினிமித்தம் அவர்களுக்கு

அவர், "நன்மைக்கேதுவல்லாத கட்டளைகளையும் ஜீவனுக்கேதுவல்லாத நியாயங்களையும்" கொடுத்தார் என்று நாம் வாசிக்கிறோம் (எசேக். 20 : 23, 25). ஆகவே உங்கள் மேல் உத்தரவாதமுள்ளவர்களாயிருக்கும் தேவ ஊழியரின் நடத்திப்பையும் ஆலோசனையையும் நீங்கள் அசட்டை பண்ணுவீர்களாயின், உங்கள் ஜீவியத்தையே அழித்துப்போட வழி வகுக்கும் ஆலோசனைதான் உங்களுக்குக் கிடைக்கும். எனவே தேவன் தம்முடைய ஆலோசனையை நமக்கு வெளிப்படுத்த வேண்டுமாயின், பூரணமான தேவசித்தம் செய்யும்படியாக நம்மை நாமே அவருக்கு அர்ப்பணித்தலும், அதற்கான வாஞ்சையும் நமக்கு இருக்க வேண்டும்.

பிலேயாம் தன்னை அழைக்க வந்த மனிதரோடு கூடச் செல்வதைத் தேவன் விரும்பவில்லை. ஆயினும் அவர் அவனிடம், 'நீ அவர்களோடே கூடப்போ' (எண். 22 : 20) என்று கூறியது ஏன்? அவன் சென்றபோது அவனைக் கொல்லும்படி தூதனானவர் பட்டயத்தோடு வழியிலே நின்று கொண்டிருந்தார் என நாம் வாசிக்கிறோமே! பிலேயாமின் இருதயத்தைத் தேவன் அறிந்திருந்தார். தன் சுய சித்தம் செய்யும்படியாக அவன் ஏற்கனவே தன்னுடைய இருதயத்தின் ஆழத்தில் தீர்மானித்திருந்தான். மெய்யாகவே பிலேயாமைப் போல நாம் தேவசித்தம் செய்ய விருப்ப மற்றவர்களாயிருந்துகொண்டு, அதே சமயத்தில் அவருடைய சித்தத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்று ஜெபிக்கிறவர்களாக இருக்கக் கூடும். கர்த்தர் பிலேயாமிடம் 'போ' என்று கூறியபோது, 'உன் விருப்பத்தின்படி செய்யும்படி நீ தொடர்ந்துபோ' என்னும் பொருள்படவே அவ்விதம் கூறினார்.

உங்கள் ஜீவியத்தின் ஏதேனும் ஒரு பகுதியில் நீங்கள் தேவ ஆலோசனையைப் புறக்கணித்துத் தள்ளியிருப்பீர்களாயின், உங்கள் ஜீவியத்தின் மற்ற பகுதிகளுக்கான தமது ஆலோசனையை அவர் உங்களுக்குத் தரப்போவதில்லை. நேற்றைய தினம் ஒருவேளை ஒரு ஆலோசனையின் வார்த்தையையும் நடத்திப்பையும் தேவன் உங்களுக்குக் கொடுத்திருந்தும், நீங்கள் அவற்றுக்குக் கீழ்ப்படியாமல் இருந்திருக்கக் கூடும். இந்நிலையில், அதைக் குறித்து மனஸ்தாபப்பட்டு மனந்திரும் பாதவர்களாக இன்றையதினத்துக்கான அவருடைய வழிநடத்துதலை நீங்கள் நாடினால் அது உங்களுக்குக் கிடைக்காது. 'நேற்று அவ்விஷயத் தில் நீர் கூறிய ஆலோசனையின்படி செய்ய எனக்கு விருப்பமிருக்க வில்லை; ஆனால் இன்று இவ்விஷயத்தில் நான் கீழ்ப்படிய ஆயத்த மாயிருக்கிறேன்' என்று உங்களால் சொல்ல முடியாது. தேவனுடைய சித்தத்தை நீங்கள் முழுமையாகச் செய்ய ஆயத்தமாயிராத பட்சத்தில், அவர் தம்முடைய ஆலோசனையை உங்களுக்கு வெளிப்படுத்த மாட்டார்.

ஜூலை 7

உங்கள் முடிவு நல்லதாயிருக்கட்டும்

'பின்பு கர்த்தர் மம்ரேயின் சமபூமியில் ஆபிரகாமுக்குத் தரிசனமானார்'; "அந்த இரண்டு தூதரும் சாயங்காலத்திலே சோதோமுக்கு வந்தார்கள்; லோத்து சோதோமின் வாசலிலே உட்கார்ந்திருந்தான்" (ஆதி. 18 : 1 ; 19 : 1).

மேற்காணும் வசனங்கள் ஒன்றுக்கொன்று எவ்வளவு வேறுபட்டவை யாயிருக்கின்றன! ஆபிரகாமைச் சந்திக்கக் கர்த்தர்தாமே வந்தார்; அவன் பகலின் உஷ்ணவேளையில் கூடாரவாசலிலே உட்கார்ந்திருந்தான். லோத்தைச் சந்திப்பதற்கோ இரு தூதர்கள் மட்டுமே வருகின்றனர்; அவன் சாயங்காலத்திலே பட்டணத்து வாசலில் உட்கார்ந்திருக்கிறான். இச்சந்தர்ப் பங்கள் ஒருவருடைய மரண நேரத்திற்கு ஒப்பிடப்படலாம். பூரணமாக்கப் பட்ட ஒரு பரிசுத்தவான் மரிக்கும்போது, வெறும் தேவதூதர்கள் அல்ல, கர்த்தர்தாமே அந்நபரை அவரது நித்திய வீட்டுக்கு வரவேற்பதற்காக வருகிறார்.

ஆபிரகாமுடைய விஷயத்தில், 'பகலின் உஷ்ண வேளை' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் லோத்தின் விஷயத்திலோ அதற்கு மாறாக, 'சாயங்காலம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சாயங்காலம் என்பது, உஷ்ணம் தணிந்து குளிர்ந்துபோன வேளையாகும் - கர்த்தருக்காக இருந்த வைராக்கிய மெல்லாம் தணிந்துபோயிருக்கிறது; நீதியின் சூரியன் மறைந்து, இருள் கவ்வும் நேரம் வந்துகொண்டிருக்கிறது. 'குளிர்ந்துபோயிருக்கும்' நிலையி லுள்ள விசுவாசிகள் பலரும் தாங்கள் தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத் தில் எவ்விதம் ஒரு வருந்தத்தக்க நிலைவரத்தில் உள்ளனர் என்பதை உணருவ தில்லை - அதற்கு மாறாக, அவர்கள், ஒரு காலத்தில் தங்களுக்கிருந்த வைராக்கியத்தைக் குறித்தும், தாங்கள் கர்த்தருக்காக ஆதாயம்பண்ணின ஆத்துமாக்களைக் குறித்தும், ஒரு காலத்தில் தாங்கள் எவ்வளவாகப் பாடு பட்டார்கள் என்பதைக் குறித்தும், தாங்கள் ஜெபத்தில் எவ்விதம் போராடி னார்கள் என்பதைக் குறித்தும் பேசுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றனர்.

"*லோத்து சோதோமின் வாசலிலே உட்கார்ந்திருந்தான்*". ஒரு காலத்தில், உண்மையான பரிசுத்தவானாகிய ஆபிரகாமோடு அவன் ஐக்கியங்கொண்டிருந்தபோது, அவனுங்கூட விசுவாச ஜீவியம் செய்கிற ஒரு கூடாரவாசியாகவே இருந்தான்; ஆனால் இப்பொழுது அவன் அந்தத் தரிசனத்தையும் வெளிப்படுத்தலையும் இழந்துவிட்டான். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் 'பட்டணத்து வாசலில் உட்காருதல்' என்பது, ஒரு நியாயாதிபதியாகப் பதவி வகித்தலைக் குறிப்பதாயிருந்தது. லோத்து

கூடாரங்களில் வசிப்பதற்குப் பதிலாகச் சோதோமின் வாசலில் உட்கார்ந் திருந்தது, ஒருவேளை அவன் தன்னுடைய சிறிய தகப்பனாரைக் காட்டிலும் உயர்ந்த நிலையில் இருந்ததாகக் கொஞ்சக்காலத்துக்கு மற்றவர் களுக்குத் தோன்றியிருக்கக் கூடும். அநேகர் தாங்கள் உலக வழிகளைப் பின்பற்றிய தங்கள் புத்தியீனமான செயலைக் குறித்து முடிவில்தான் உணருவர்; அப்போது, அது மிகவும் காலங்கடந்துவிட்ட ஒன்றாகிவிடும் என்பது எவ்வளவு வருந்தத் தக்கதாயிருக்கிறது!

அருமையான தேவபிள்ளையே, "*நீ எங்கே இருக்கிறாய்*" என்ற கர்த்தருடைய சத்தம் இன்னும் தொனித்துக்கொண்டேயிருக்கிறது. நீ ஆபிரகாமைப் போல பகலின் உஷ்ணவேளையில் கூடாரவாசலில் உட்கார்ந்துகொண்டிருக்கிறாயா? அல்லது சாயங்காலத்தில் சோதோமின் வாசலிலே உட்கார்ந்துகொண்டிருக்கிறாயா?

ஜூலை 8

தெரிந்தெடுத்தல்

"***தேவனாகிய கர்த்தர் வெளியின் சகலவித மிருகங்களையும், ஆகாயத் தின் சகலவிதப் பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி, ஆதாம் அவைகளுக்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டுவந்தார்; அந்தந்த ஜீவஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப் பேரிட்டானோ அதுவே அதற்குப் பேராயிற்று***" (ஆதி. 2 : 19).

தேவன் மனிதனுக்கு அற்புதமான ஞானத்தையும் அறிவையும் கொடுத்துவிட்டு, அவைகளைப் பயிற்சிக்கும்படி இப்பொழுது அவனுக்கு ஒரு தருணத்தைக் கொடுக்கிறார். சகலவித மிருகங்களுக்கும் பறவை களுக்கும் பேரிடுதல் மனிதனுக்கு அளிக்கப்பட்ட கனமும் சிலாக்கியமு மாக இருந்தது. அல்லாமலும், அவன் அவைகளில் ஒன்றைத் தனக்கு ஏற்ற துணையாகத் தேர்ந்தெடுப்பானோ என்பதைக் கண்டறிவதற்கான பரீட்சை யாகவும் அது இருந்தது. ஏனெனில், அழகாகப் பாடும் தாலந்து பெற்ற குயில்களும், வியக்கத்தக்க அழகைக் கொண்ட மயில்களும், சாந்தமும் வசீகரமுமான தோற்றங்கொண்ட விலங்குகளும் அங்கு இருந்தன.

தனக்கென்று ஒரு துணையை மனிதன் தேர்ந்தெடுத்திருப்பானா யின், அவன் ஒரு விலங்கையே தனக்குத் துணையாகத் தெரிந்தெடுத் திருக்க வேண்டும். சில தேவபிள்ளைகள் தேவநடத்திப்பை நாடித் தேடாமல் தங்களுக்கென்று ஒரு வாழ்க்கைத் துணையைச் சுயமாகத் தேர்ந்தெடுக்கின் றனர். அவர்களுடைய தெரிந்தெடுப்பு, சுபாவத்திலும் நடக்கையிலும் ஒரு

மிருகத்தைப் பார்க்கிலும் எவ்விதத்திலும் குறைவானதாய் இருக்கிறதில்லை. மனிதன், 'அவைகளை என்னிடம் கொண்டுவந்தது தேவனே! நான் அவை களைத் தேடிச் செல்லவில்லை' என்று ஒருவேளை தன்னுடைய தெரிந் தெடுப்பைக் குறித்து சாக்குப்போக்குகளைக் கூறியிருக்கலாம். ஆம், ஆதாம் அவைகளில் ஒன்றை விவாகம் செய்துகொள்ளும்படியாக அல்ல, அவன் அவைகளுக்கு என்ன பேரிடுவான் என்பதைக் காண்பதற்காகவே தேவன் "அவைகளை அவனிடத்தில் கொண்டுவந்தார்". அதாவது அவன் ஒரு விலங் கிலிருந்து மற்றொரு விலங்கையும், ஒரு பறவையிலிருந்து மற்றொரு பறவையையும் வித்தியாசப்படுத்திக் காண்பிக்கும்படியாக மட்டுமேயன்றி, அவைகளில் ஒன்றையும் அவன் தனக்கேற்ற துணையாகத் தெரிந்தெடுத்துக் கொள்ளும்படியாக அவற்றை அவனிடத்தில் அவர் கொண்டுவரவில்லை.

தேவபிள்ளையே, நீ சுயமாகத் தெரிந்தெடுக்க வேண்டாம். இப்பரீட்சை யில் ஆதாம் வெற்றிகண்டதாக நாம் காண்கிறோம். அவைகள் ஒவ்வொன் றுக்கும் அவன் பொருத்தமான பெயர்களை இட்டானேயன்றி, அவைகளுக் கிடையே தனக்கு 'ஏற்ற துணையை' அவன் காணவில்லை (ஆதி. 2 : 20).

ஜூலை 9

உபயோகமுள்ளவர்கள், ஆனால் உண்மையற்றவர்கள்!

"***என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற் படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன்***" (I தீமோ. 1 : 12).

புதிய ஏற்பாட்டில் எபிரெயர் 11-ஆம் அதிகாரத்தில் விசுவாச வீரர் களின் பட்டியலை நாம் காண்பது போல, பழைய ஏற்பாட்டில் II சாமுவேல் 23-ஆம் அதிகாரத்தில் (வச. 8 - 39) தாவீதுக்கிருந்த பராக்கிரம சாலிகளான வீரர்களின் பட்டியலை நாம் காண்கிறோம். தாவீதின் பராக் கிரமசாலிகளின் பட்டியலில் நாம் முப்பத்தேழு வீரர்களைக் காண்கிறோம். இருப்பினும் இப்பட்டியலில் தாவீதின் படைத் தளபதியாகிய யோவாபின் பெயர் விடுபட்டுப்போயிருக்கிறது. அவனுக்குச் சம்பவித்தது என்ன?

யோவாப், ராஜாவுக்குப் பிரயோஜனமாயிருந்த யாவரிலும் மிகவும் பிரயோஜனமான ஒருவன் என்று நாம் கூறலாம். அவன் ராஜாவுக்காக வீரமாகப் போர்புரிந்து, அநேக வெற்றிகளை வாங்கித் தந்தவன். ஆனால் ஒரு காரியத்தில், அதாவது உண்மை என்னும் நற்பண்பில் அவன் மிக

நிர்ப்பந்தமான விதத்தில் குறைவுபட்டிருந்தான். அவன் தன்னைப் பார்க்கிலும் நீதியும் நற்குணமுமுள்ள இஸ்ரவேலின் இரண்டு சேனாபதிகளாகிய அப்னேரையும் அமாசாவையும் தாவீதின் உத்தரவின்றி கொன்றுபோட்டான் (I இராஜா. 2 : 5). மேலும், தாவீது யோவாபுக்கும் மற்ற சேனாபதிகளுக்கும் பிறர் செவிகள் கேட்கத்தக்கதாக, பிள்ளையாண்டானாகிய அப்சலோமைத் தன்னிமித்தம் மெதுவாய் நடப்பிக்குமாறு கட்டளையிட்டிருந்தான். ராஜாவின் கட்டளை யோவாபுக்கு நினைவூட்டப்பட்ட போதிலும் அவன் ராஜாவின் கட்டளையை முற்றிலும் அவமதித்து, அப்சலோமைக் கொன்றுபோட்டான்.

நாம் தேவனால் வல்லமையாக உபயோகப்படுத்தப்படுகிறவர்களாயிருக்கலாம். அந்தகார சக்திகளுக்கு விரோதமாக நடந்த அதிசயமான யுத்தங்கள் பலவற்றிலுங்கூட நாம் ஜெயத்தைப் பெற்றிருக்கக் கூடும். மெய்யாகவே இவையெல்லாம் பாராட்டப்படத்தக்கவையே. ஆனால் நாம் நம்முடைய தாவீதாகிய கர்த்தராகிய இயேசுவுக்கு உண்மையுள்ளவர்களாயிராவிட்டால், நம்முடைய பெயர் அவருடைய புஸ்தகத்தில் காணப்படாமற்போய்விடக் கூடும். "*அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமஞ் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்*" (மத். 7 : 22, 23) என்று கர்த்தர் தாமே உரைத்திருக்கிறாரே!

அருமையான வாசகரே! நீர் பிரயோஜனமுள்ளவராயிருப்பதைக் காட்டிலும் நீர் உண்மையுள்ளவராயிருப்பதைக் குறித்தே கர்த்தர் அதிக கருத்துள்ளவராயிருக்கிறார். 'காரியங்களை வெற்றியுடன் சாதிப்பதற்காக அல்ல, உண்மையுள்ளவர்களாயிருப்பதற்கே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்' என்ற கூற்று எவ்வளவு உண்மையானது!

ஜூலை 10

கவலையற்ற ஜீவியம்

"***தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள்***" (லூக்கா 10 : 42).

நம்மெல்லாருக்கும் ஒன்று தேவையானதாயிருக்கிறது. தேவையான அந்த ஒரு காரியத்தை நாம் செய்யத் தவறும்போது, தேவையற்ற

காரியங்களை நாம் செய்ய முயற்சித்து, நமக்குக் கவலைகளையும் பாரங்களையும் உண்டாக்கிக்கொள்கிறோம்.

மரியாள் நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள்; அது அவளை விட்டெடுபட்டுப்போக முடியாத ஒன்றாக இருந்தது. உங்களுடைய ஆரோக்கியம், ஆஸ்தி, குடும்பம், நண்பர்கள், பேர் பிரஸ்தாபம், பாடுவதற்கு அல்லது பிரசங்கிப்பதற்கு உங்களுக்கிருக்கும் தாலந்து போன்ற அனைத்தும் ஒரு நாள் உங்களை விட்டு எடுபட்டுப்போம்; ஆனால் ஒன்று மட்டும் உங்களை விட்டு எடுபடாது. கர்த்தராகிய இயேசுவின் பாதத்தில் அமர்ந்து, அவருடைய சத்தத்தைக் கேட்க நாம் கற்றுக்கொள்வோமாகில், பரலோகத்திலுங்கூட நாம் அவருடைய பாதத்தில் உட்கார்ந்து அவருடைய வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருப்போம். எப்படிப்பட்டதோர் ஆசீர்வதிக்கப்பட்ட ஜீவியம் இது!

இவ்வுலகம் அநேக '*மார்த்தாள்களைக்*' கொண்டதாயிருக்கிறது. கர்த்தராகிய இயேசுவின் பாதத்தில் அமர்ந்து அவருடைய சத்தத்தைக் கேட்கக்கூடிய '*மரியாள்கள்*' தேவனுக்குத் தேவைப்படுகின்றனர். மரியாளுக்கு அந்த நல்ல பங்கு ஏதோ அதிர்ஷ்டவசமாகக் கிடைக்கவில்லை; அவள் தானாகவே அதைத் தெரிந்துகொண்டாள். அது அவளுடைய தெரிந்துகொள்ளுதலினிமித்தம் அவளுக்கு உண்டானதேயன்றி, தற்செயலாக அவளுக்குக் கிடைத்ததல்ல.

'*ஜனங்கள் புறப்பட்டு; இயேசுவினிடத்தில் வந்து, லேகியோனாகிய பிசாசுகள் பிடித்திருந்தவன் வஸ்திரந்தரித்து, உட்கார்ந்து, புத்தி தெளிந்திருக்கிறதைக் கண்டார்கள்*' (மாற்கு 5 : 14, 15). அவன் மலைகளில் ஏறி, இறங்கி, அங்குமிங்குமாக ஓடி, இதுபோன்ற காரியங்களைச் செய்துகொண்டிருந்தான். ஆனால் அவனால் ஒரு காரியத்தை மட்டும் செய்ய முடியவில்லை - அவனால் உட்கார்ந்திருக்க முடியவில்லை. நம்மில் சிலர் கதரேனருடைய நாட்டிலிருந்த இம்மனிதனைப் போல் இருக்கிறோம். ஜெபிப்பதைத் தவிர மற்றெல்லாவற்றையும் செய்வதற்கு நமக்கு நேரம் இருக்கிறது. கர்த்தராகிய இயேசு அம்மனிதனைச் சந்தித்த பின், அவன் அவரது பாதத்தில் உட்கார்ந்திருக்கிறவனாகக் காணப்பட்டான். அவன் கர்த்தராகிய இயேசுவின் பாதத்தில் உட்கார்ந்திருப்பதைக் கண்டபோது அவன் புத்தி தெளிவடைந்திருக்கிறான் என்பதை ஜனங்கள் அறியவந்தனர்.

அருமையான தேவபிள்ளையே, வியாகுலங்கள், கவலைகள் போன்றவற்றையெல்லாம் நீ வைத்துக்கொண்டிருப்பாயாகில், நீ உன் ஜீவியத்தை வீணாக்கிக்கொண்டிருக்கிறாய். கதரேனருடைய நாட்டில்

பிசாசுகளினால் பீடிக்கப்பட்டிருந்த அம்மனிதனைப் போல் நீ இருக்க வேண்டாம்; மரியாளைப் போல கர்த்தராகிய இயேசுவின் பாதத்தருகே அமர்ந்திருக்கக் கற்றுக்கொள்வாயாக.

ஜூலை 11

விசுவாசம் என்பது மெய்ப்பொருள்

'இப்பொழுது விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் மெய்ப்பொருளும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது' (எபி. 11 : 1-Eng.).

'*இப்பொழுது விசுவாசம்*' - விசுவாசம் என்பது கடந்த காலத்தைச் சார்ந்ததாகவோ அல்லது வருங்காலத்தைச் சார்ந்ததாகவோ இராமல், எப்பொழுதும் நிகழ்காலத்தோடு சம்பந்தப்பட்டதாகவே இருக்கிறது. விசுவாசம் என்பது, ஏதோ ஒரு காரியம் பின்னர் சம்பவிக்கும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருத்தலாகிய 'நம்பிக்கை' அல்ல; மாறாக அது, 'இப்பொழுது' அதாவது நிகழ்காலத்துக்குரியதாகும் - அது வேதவாக்கியங்களில் தேவனால் வாக்குப்பண்ணப்பட்டிருப்பவைகளுக்காக எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருப்பது அல்ல, அவைகளை இப்பொழுதே ஏற்றுக் கொள்வதாகும்.

எபிரெயர் 11 -ஆம் அதிகாரம் 'விசுவாசம்' என்னும் பதத்தோடு ஆரம்பித்து, 'பூரணம்' என்னும் வார்த்தையோடு முடிவடைகிறது (Eng.). விசுவாசமில்லாமல் பூரணம் என்று ஒன்று இல்லை என்பதையே இது குறிக்கிறது. ஆகவே, பிசாசானவன் நம்மிடத்திலிருந்து முதலாவது விசுவாசத்தையே திருடுகிறான். சாத்தானுடைய (சர்ப்பம்) முதல் வார்த்தைகள், மனிதனுக்குத் தேவனுடைய பரிசுத்த வார்த்தையிலிருந்த விசுவாசத்தை அழிப்பதையே குறியாகக் கொண்டிருந்தன (ஆதி. 3 : 1). எனவேதான், கர்த்தராகிய இயேசு தாம் திரும்பி வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காணமுடியுமோவென்று ஆச்சரியப்பட்டார்.

விசுவாசம் என்பது அதரிசனமானவைகளைக் கண்டு, அவைகளை இன்பமாய் அனுபவிக்க நமக்கு அருளப்பட்டிருக்கும் அதரிசனமான கண்ணாகிய ஆறாம் புலனாகும் (காணப்படாதவைகள் நித்தியமானவைகள் - II கொரி. 4 : 18). விசுவாசமானது மற்றவர்களால் எவ்விதத்திலும் காண முடியாதவைகளை நாம் காண்பதற்கு நமக்கு உதவி செய்கிறது.

'*விசுவாசம் என்பது மெய்ப்பொருள் ஆகும்*'. ஒருவரது ஜீவியத்திலுள்ள திடப் பொருள் அல்லது சாரம் விசுவாசமாகும். நாம் தேவனிடத்

திலிருந்து பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு ஆசீர்வாதத்தின் உண்மைப் பொருளும் விசுவாசமாகும் - விசுவாசம் இல்லையேல் நம் ஜீவியம் பதரைப் போல் இருக்கும். நாம் பதரைப் போல் இருப்போமாயின், நாம் புடைக்கப்படும்போது பறக்கடிக்கப்பட்டுப்போவோம். உலகம், பாவம், வியாதி, பிசாசு, முடிவாக மரணம் ஆகியவற்றை நாம் விசுவாசத்தினால் மட்டுமே மேற்கொள்ள முடியும். நமக்கு விசுவாசம் இல்லாமற்போகுமாயின், பயம் நம்மைச் சிறைப்பிடித்துவிடும். நிறம், அளவு போன்ற வற்றிலெல்லாம் பதரானது கோதுமை மணியைப் போலவே தோற்ற மளிக்கும். ஆனால் அது எடையற்றதும் உபயோகமற்றதுமாயிருக்கும் - அப்படியே விசுவாசமற்ற மனிதனும் இருக்கிறான். "*மெனே, மெனே, தெக்கேல், உப்பார்சின்*". '*தெக்கேல்*' என்பதற்கு "நீ தராசிலே நிறுக்கப்பட்டு, குறையக் (எடையற்று) காணப்பட்டாய்" என்று பொருள் (தானி. 5 : 25, 27).

அருமையான தேவபிள்ளையே, நீ பதராக அல்ல, நிறைமேனியான தானியமாக இருப்பதற்கு, தேவ வசனத்தின் மேலுள்ள விசுவாசம் உன்னில் பெருகும்படி நீ தேவனை நோக்கி வேண்டிக்கொள்வாயாக.

ஜூலை 12

ஜெபத்தின் மூலம் தேவகோபத்தை ஆற்றுவாயாக

"அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட மோசே, அவர்களை அவர் அழிக்காத படிக்கு, அவருடைய உக்கிரத்தை ஆற்றும்பொருட்டு, அவருக்கு முன்பாகத் திறப்பின் வாயிலே நின்றான்" (சங். 106 : 23).

பழைய ஏற்பாட்டுக் காலத்தைச் சேர்ந்த மோசேயின் ஜெபம், கர்த்தராகிய இயேசு செய்த பரிந்துபேசுகிற ஜெபத்தின் மெய்யான மாதிரியாக இருக்கிறது. இஸ்ரவேல் ஜனங்கள் ஒரு பொன்கன்றுக்குட்டியை உண்டுபண்ணி, அதுவே எகிப்து தேசத்திலிருந்து தங்களை அழைத்துக் கொண்டுவந்த தெய்வம் என்று உரிமைகொண்டாடியபோது, கர்த்தருடைய கோபம் அவர்கள் மேல் மூண்டது; கர்த்தர் அவர்களை அழிக்க விரும்பினார். ஆனால் மோசே மலையிலிருந்து இறங்கி வந்து, ஜனங்கள் கர்த்தரைத் துக்கப்படுத்திய இப்பெரிய பாவத்தைக் கண்ணுற்றபோது, அதற்கான பழி முழுவதையும் தன் மேல் ஏற்றுக்கொண்டு, கர்த்தரை நோக்கி, "*அவர்கள் பாவத்தை ... மன்னித்தருளும்; இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும்*" (யாத். 32 : 32) என்று மன்றாடினான். இதுவே மெய்யான பரிந்து

பேசுதலாகும். ஒருவர் முழுக் குற்றத்தையும் தன் மேல் ஏற்றுக்கொண்டு, மற்றவர்களை நீதிகரிப்பதென்பது மெய்யாகவே தெய்வீகமானதாகும். மோசேயின் இந்தச் சுபாவத்தைக் குறித்து, அவர்களை அவர் அழிக்காத படிக்கு, அவருடைய உக்கிரத்தை ஆற்றும்பொருட்டு, அவருக்கு முன்பாக அவன் திறப்பின் வாயிலே நின்றான் என்று சங்கீதம் 106 : 23 -இல் நாம் வாசிக்கிறோம்.

கர்த்தராகிய இயேசு தம்மை வாதித்து உபத்திரவப்படுத்தியவர் களுக்காகச் சிலுவையில் ஏறெடுத்ததான, "*பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே*" (லூக்கா 23 : 34) என்னும் ஜெபமே, பரிந்து பேசுகிற ஜெபங்களெல்லாவற்றிலும் மிக மேன்மையானதாயிருக்கிறது. மன்னிக்க இயலாததாயிருக்கும் இவ்வுல கில் நமக்கு மன்னிக்கிற ஒரு தேவன் இருக்கிறபடியினால் அவருக்கு ஸ்தோத்திரம்!

அருமையான வாசகரே, பரிசுத்த தேவவைராக்கியத்தால் நிறைந்து, உண்மையான ஓர் எழுப்புதலுக்காக ஜெபத்தில் பிரசவ வேதனைப்படுகிற வல்லமையான பரிந்துரையாளர்கள் தேவனுக்குத் தேவை!

ஜூலை 13

நீ எதைக் காண்கிறாய் என்பது பற்றி கவனமாயிரு!

'***ஸ்திரீயானவள் அந்த விருட்சத்தைக் கண்டாள்***' (ஆதி. 3 : 6).

ஸ்திரீயானவள் நன்மை **தீ**மை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிப்பதைத் தேவன் விரும்பவில்லையெனில், அவள் அதனைப் பார்ப்பதால் என்ன பிரயோஜனம்? நம்முடைய பாவங்களில் பெரும் பாலானவை நம்முடைய கண் வாசல்கள் வாயிலாகவே நமக்குள் பிர வேசிக்கின்றன. பிசாசானவனால் நம்மை எதையாகிலும் பார்க்கச்செய்யக் கூடுமென்றால், அதனால் நாம் வசீகரிக்கப்படுவதற்கும் நம்மை அவனால் எளிதாக வஞ்சிக்க முடியும். ஆகவேதான், '*மதுபானம் இரத்தவருணமா யிருக்கும்போது நீ அதைப் பாராதே*' என்று நீதிமொழிகளின் புஸ்தகம் நம்மை எச்சரிக்கிறது (நீதி. 23 : 31).

நாம் பெரும்பாலும், 'அதைப் பார்ப்பதில் என்ன **தீ**மை இருக்கிறது?' என்று நினைத்துக்கொண்டு, சிலவற்றைப் பார்க்கத் துணிவுகொள்ளுகிறோம்.

'அந்த மரத்தைப் பார்ப்பதில் என்ன **தீ**மை இருக்கிறது? தேவன் அதன் கனியைப் புசிக்க வேண்டாம் என்று மட்டும்தானே கூறியிருக்கிறார்' என்று ஸ்திரீயானவள் எண்ணியிருக்கக் கூடும். இருப்பினும், 'நமக்கு யாதொரு சம்பந்தமும் இல்லாத ஒன்றைப் பார்ப்பதினால் நமக்கு என்ன *இலாபம்* இருக்கிறது?' என்று சிந்திப்பதே இதன் சரியான அணுகுமுறையா யிருக்கும். 'இது தவறா என்று கேட்காதே; இது *மிகச் சிறந்ததா* என்று கேள்!' என்று ஒரு தேவமனிதன் கூறுகிறார். அப். பவுல், 'எல்லாவற்றையும் அனுபவிப்பது எனக்கு நியாயமானது, ஆனால் எல்லாம் உதவியாக (ஆதாயமானவையாக, ஆரோக்கியமானவையாக, கட்டியெழுப்புபவை யாக) இருப்பதில்லை' (I கொரி. 10 : 23 -Amp.) என்று கூறுகிறார்.

இந்த நவீன யுகத்தில், பிசாசானவன் ஜனங்களுடைய கண்களைக் கவர்ந்துகொண்டு, பத்திரிகைகள், தொலைக்காட்சி ஆகியவற்றில் சித்தி ரிக்கப்படும் படங்களில் உள்ளது போல் உலகத்தின் பகட்டாலும், அதன் மகிமையாலும் மெருகேற்றப்பட்ட தேவையில்லாத அநேக பொருட்களை அவர்கள் பார்க்கும்படிச் செய்து, அவர்களை வசீகரித்து, அவர்களைக் கண்ணிக்குள் அகப்படுத்துகிறான். அவையெல்லாம் **தீ**ங்கற்றவைபோல் தோன்றினும், வெகுவிரைவிலேயே **தீ**ண்டக்கூடிய சர்ப்பங்களாக மாறிவிடு கின்றன. ஆகவே தேவனுடைய பிள்ளையே, நீ காண்பது என்ன என்பதைப் பற்றி கவனமாயிரு. இப்பொழுதுதானே நீ உன் கண்களோடு ஓர் உடன்படிக்கை செய்துகொள்வாயாக.

ஜூலை 14

வீணான வார்த்தைகள்

'***மனுஷர் பேசும் ஒவ்வொரு வீணான வார்த்தையைக்*** (Eng.- ***பிரயோஜன மற்ற வார்த்தையைக்***) ***குறித்தும் நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்பு விக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்***' (மத். 12 : 36).

ஏவாள் சர்ப்பத்தோடு பேசிய புத்தியீனமான சிறிதளவு வீண் வார்த்தைகளே முழு மனித வர்க்கத்துக்கும் அழிவையும் சொல்லொண் ணாத் துயரையும் கொண்டுவந்தது. 'சர்ப்பத்தோடு பேசுவதில் என்ன தவறு இருக்கிறது? ஆவிக்குரிய காரியங்களைக் குறித்துதானே நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம்' என்று அவள் நினைத்திருக்கக் கூடும். நாம் எவ் விதம் பேசுகிறோம், எதைக் குறித்துப் பேசுகிறோம், யாரோடு பேசுகிறோம் என்பதைப் பற்றி கவனமாயிருப்போமாக. ராஜாவாகிய ரெகொபெயாம்

தன்னுடைய குடிமக்களோடு பேசிய சில மதியீனமான வார்த்தைகளினிமித்தம் இஸ்ரவேல் ராஜ்யம் இரண்டாகப் பிரிந்ததுடன் (I இராஜா. 12 : 14, 19, 20), அதைத் தொடர்ந்து அநேக பயங்கரமான யுத்தங்களும் நடைபெற்றன.

'நாவானது சிறிய அவயவமாயிருந்தும், பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது!' (யாக். 3 : 5). வேடிக்கையாகவோ அல்லது பொழுதுபோக்கிற்காகவோ நாம் பேசும் பக்திவிருத்திக்கேதுவல்லாத வார்த்தைகளினால் உண்டாகும் பயங்கரமான விளைவுகளைக் குறித்து எத்தனை தரம் நாம் உணர்வற்றவர்களாயிருந்திருக்கிறோம்!

17-ஆம் நூற்றாண்டில் வசித்தவரும், பளிச்சிடும் மின்னலைப் போன்ற வார்த்தைகளை உடையவரும், 'சுருக்கமான வார்த்தைகளாயினும் அர்த்தம் நிறைந்த வார்த்தைகள் உடையவர்' என்று பேர்பெற்றவருமாகிய ஜார்ஜ் ஃபாக்ஸ் (George Fox) என்னும் தேவமனிதர் தன்னுடைய சாட்சியில், 'என்னுடைய வார்த்தைகள் சுருக்கமானவையாகவும் சாரம் நிறைந்தவையாகவும் இருக்க வேண்டுமென்று கர்த்தர் எனக்கு வெளிப்படுத்தினார்' என்று கூறினார்.

"*உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக*" (கொலோ. 4 : 6) என்று அப். பவுல் போதித்தார். நம்முடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் 'பக்திவிருத்திக்கு உபயோகமான நல்ல வார்த்தை'யாகவும், 'கேட்கிறவர்களுக்குக் கிருபை அளிக்கிற' வார்த்தையாகவும் இருக்க வேண்டும் (எபே. 4 : 29 -Eng.).

ஜூலை 15

விநோதமான பிரியம்!

'***பலவீனங்களில் நான் பிரியப்படுகிறேன்***' (II கொரி. 12 : 10).

'பலவீனங்களில் பிரியப்படுதல்' என்பதின் ஒரு பொருள் யாதெனில், கர்த்தருடைய மிகச் சிறிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்குங்கூட நாம் யாதொரு தகுதியும் அற்றவர்கள் என்று நம் தகுதியின்மையைக் குறித்து நாம் உணர்வுள்ளவர்களாயிருத்தலாகும். எவ்வளவதிகமாக இந்தப் 'பிரியம்' நம்மில் இருக்கிறதோ, அவ்வளவதிகமாகக் கர்த்தர் தம்முடைய மிகப் பெரிய ஆசீர்வாதங்களுக்கு நம்மைத் தகுதியுள்ளவர்களாக்குகிறார்.

ரூத் போவாஸிடம், "*நான் அந்நியதேசத்தாளாயிருக்க ... எனக்கு எதினாலே உம்முடைய கண்களில் தயை கிடைத்தது*" என்று கேட்டாள். அவனுடைய வேலைக்காரிகளில் ஒருத்திக்கும் கூட தான் சமானமானவள் அல்ல என்று அறிக்கையிட்ட அவள், பின்னர் அவனுடைய மனைவியாக மாறினாள். அபிகாயிலுங்கூட தாவீதின் மனைவியாயிருப்பதற்கான தன்னுடைய தகுதியின்மையை உணர்ந்து, "*நான் என் ஆண்டவனுடைய ஊழியக்காரரின் கால்களைக் கழுவத்தக்க பணிவிடைக்காரியாகிய அவருடைய அடியாள்*" (I சாமு. 25 : 41) என்று கூறுகிறாள்.

யூதேயா தேசத்தார் அனைவரும் எருசலேம் நகரத்தார் யாவரும் யோவான் ஸ்நானனால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்படி அவனிடத்திற்குத் திரண்டு சென்றபோது, அவன் கூறியது யாது என்று பாருங்கள்: "*என்னிலும் வல்லவர் ஒருவர் எனக்குப்பின் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரைக் குனிந்து அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல*" (மாற்கு 1 : 7). இவ்வளவு மனத்தாழ்மையுள்ளவனாயிருந்த யோவான் ஸ்நானன் பழைய ஏற்பாட்டுக் காலத்திலிருந்த பரிசுத்தவான்களில் மிகப் பெரிய பரிசுத்தவான் என்று அறியப்படுவதில் வியப்பொன்றுமில்லையே!

சிலர், 'பிரியப்படுகிறேன்' என்று குறிப்பிடப்பட்டுள்ள இந்தப் 'பிரியத்தைக்' கொஞ்சக் காலத்துக்குப் பின் இழந்து, பெருமையுள்ளவர்களாகி, அவமானத்துக்குள்ளாகிறார்கள்.

பில்லி கிரகாம் அவர்களிடம், 'பரலோகத்துக்குச் சென்றவுடன் நீர் செய்யும் முதற்காரியம் என்னவாயிருக்கும்?' என்று ஒருமுறை கேட்கப்பட்டபோது, அவர், 'என்னை ஏன் ஆண்டவரே தெரிந்தெடுத்தீர்? இத்தனை அதிகமான ஜனங்களுக்குப் பிரசங்கிக்கும்படியாக ஒரு விவசாயிப் பையனை ஏன் தெரிந்துகொண்டீர்?' என்று கேட்பதே தான் செய்யப்போகிற முதல் காரியமாயிருக்கும் என்று பதிலளித்தார்.

தேவனுடைய மிகச் சிறிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்குங்கூட நாம் தகுதியற்றவர்கள் என்று நம் தகுதியின்மையை நாம் எப்பொழுதும் உணரக்கூடிய கிருபையைக் கர்த்தர் தாமே நமக்குத் தந்தருளுவாராக. நாம் சமுதாயத்தில் ஒரு நபராகக் கணிக்கப்பட்டிருக்கிறோமென்றால், அல்லது நம்மில் ஏதேனும் நன்மை இருக்குமென்றால், அதன் காரணம், தேவன் நமக்கு எல்லாமாயிருப்பதே ஆகும்.

'நாம் நம்மை அசாதாரணமான வகையில் சிறியவர்களாகவும் முக்கியமில்லாதவர்களாகவும் உணருதல் எப்பொழுதுமே ஒரு ஆரோக்கியமான உணர்வாகும்' என்று ராபர்ட் பென்சன் என்பவர் கூறியிருக்கிறார்.

ஜூலை 16

கூடாரங்களில் குடியிருங்கள்

"விசுவாசத்தினாலே அவன் (ஆபிரகாம்) வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப்போலச் சஞ்சரித்து, அந்த வாக்குத்தத்தத்திற்கு உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும் யாக்கோபோடும் கூடாரங்களிலே குடியிருந்தான்" (எபி. 11 : 9).

விசுவாசத்தினாலே ஆபிரகாம் கூடாரங்களில் குடியிருந்தான். பழைய ஏற்பாட்டில், 'கூடாரங்களில் வசித்தல்' என்பது விசுவாசத்தினாலே ஜீவிப்பதற்கு அடையாளமாயிருந்தது. ஆபிரகாமுடைய பிள்ளைகளும் அவனுடைய பேரப்பிள்ளைகளுங்கூட கூடாரங்களில் வசிக்கும் படியாகப் போதிக்கப்பட்டார்கள் - அதாவது அவர்களுக்கு விசுவாச ஜீவியம் கற்றுக்கொடுக்கப்பட்டது. ஆகவே, ஆபிரகாமுடைய மரணத்துக்குப் பின், அவனுடைய பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் அவனுடைய நல்ல மாதிரியைப் பின்பற்றி, கூடாரங்களில் குடியிருந்தனர்.

நாம் விசுவாசத்தினாலே ஜீவிப்பது மட்டுமல்லாது, நம்முடைய பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் தங்களுடைய தேவை எதுவாயிருப்பினும் - அது சரீரப்பிரகாரமான தேவையாயினும், ஆவிக்குரிய தேவையாயினும் அல்லது வேறெந்தத் தேவையாயினும், அதற்காகத் தேவன் மேலேயே நம்பிக்கை வைக்க வேண்டுமென நாம் அவர்களுக்குப் போதிக்க வேண்டும். நவீனமான சில '*ஆபிரகாம்களுடைய பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும்*' '*லோத்துகளாக*' மாறி, தங்களுடைய கூடார ஜீவியத்தை அல்லது விசுவாச ஜீவியத்தை இழந்திருக்கின்றனர் என்பது துக்ககரமான விஷயமாகும்.

'*வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திலே சஞ்சரித்தான்*' - தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்தைப் போல் இருக்கின்றன. நாம் ஒவ்வொரு நாளும் தேவனுடைய வாக்குத்தத்தங்களினாலேயே பிழைத்து, அவைகளிலேயே சார்ந்துகொள்வோமாக. விசுவாசமானது, இவ்வுலகை ஒரு அந்நிய தேசமாகவும், பரலோகத்தை நம்முடைய சொந்தத் தேசமாகவும் காண நமக்கு உதவி செய்கிறது.

ஜூலை 17

உயர்வான துதி

'அவர்கள் வாயில் கர்த்தரின் உயர்வான துதியும், அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும்' (சங். 149 : 8-Eng.).

'உயர்வான துதி' என்று ஒன்று இருக்குமாயின், 'தாழ்ந்த நிலையிலுள்ள துதி'யுங் கூட இருக்க வேண்டுமல்லவா? ஒரு நபர், தான் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களுக்காகவும், பிரச்சினைகளிலிருந்தும் அடிமைத் தனங்களிலிருந்தும் கிடைக்கப்பெற்ற விடுதலைக்காகவும், பல்வேறு காரியங்களைச் செய்வதற்குத் தனக்களிக்கப்பட்ட கிருபைகளுக்காகவும், தனக்கிருக்கும் நண்பர்களுக்காகவும், தனக்கு அருமையானவர்களுக் காகவும், பதிலளிக்கப்பட்ட ஜெபங்களுக்காகவும், இவை போன்ற மற்றும் பலவற்றிற்காகவும் தேவனைத் துதிப்பது இயற்கை. இது தேவனைத் துதிப்பதின் 'தாழ்வான' நிலையாகும்.

தேவனைத் துதிப்பதின் 'உயர்வான' நிலை யாது? தேவன் உங்களிடமிருந்து ஆசீர்வாதங்களை எடுத்துப்போடும்போது யோபைப் போல உங்களால் தேவனைத் துதிக்க முடிகிறதா? (யோபு 1 : 21). காரியங்களைத் திறம்பட செய்வதற்குத் தேவன் மற்றவர்களுக்கு அளித்திருக்கும் கிருபைகளுக்காக அப். பவுலைப் போல உங்களால் தேவனைத் துதிக்க முடிகிறதா? (I கொரி. 1 : 15 காண்க). கர்த்தராகிய இயேசு மத்தேயு 5 : 44 -இல் நமக்குப் போதித்திருப்பதைப் போல, உங்கள் சத்துருக்களுக்காகவும், உங்களைப் புறக்கணிக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும், உங்களைச் சிறுமைப்படுத்துகிறவர்களுக்காவும், உங்களைத் தவறாக விளங்கிக்கொள்ளுகிறவர்களுக்காகவும் - தேவன் அவர்களை ஆசீர்வதிக்கும்படி உங்களால் தேவனை ஸ்தோத்திரிக்க முடிகிறதா? தேவன் உங்கள் ஜெபங்களுக்குப் பதிலளிக்காதது போல் தோன்றும் போதோ அல்லது தேவன் உங்களுக்களித்திருக்கும் வாக்குத்தத்தங்களை நிறைவேற்றாமலிருக்கும்போதோ ஆபிரகாமைப் போல உங்களால் தேவனைத் துதிக்க முடிகிறதா? (ரோமர் 4 : 20, 21). அப். பவுலையும் சீலாவையும் போல சிறைச்சாலை போன்ற சூழ்நிலைகளில் இருப்பதாக நீங்கள் உணரும்போது உங்களால் தேவனைத் துதிக்க முடிகிறதா? (அப். 16 : 25). இவைகளே 'உயர்வான துதிகள்' ஆகும். சத்துருவின் மேல் நியாயத்தீர்ப்புச் செலுத்த நம்முடைய கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தைக் கொடுக்கும் துதிகள் இவைகளே (சங். 149 : 6 - 8); இவை,

'பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்போடும்' அணுகுண்டுகளாகும் (மத். 21 : 16 ; சங். 8 : 2); இவை சிறைச்சாலைகளின் அஸ்திபாரங்களை அசைத்து, சிறைச்சாலைக் கதவுகளைத் திறக்கும் துதிகளாகும் (அப். 16 : 26).

தேவபிள்ளையே, பிசாசின் வல்லமைகள் தோற்கடிக்கப்படுவதை நீ காண வேண்டுமா? உன்னுடைய ஜீவியத்தில் தேவனுடைய கரத்தை நீ காண வேண்டுமா? அப்படியாயின், நீ தாழ்ந்த நிலையில் தேவனைத் துதிப்ப திலிருந்து எழும்பி, உயர்வான துதிகளை அவருக்குச் செலுத்துவாயாக.

ஜூலை 18

தேவையற்ற பயம்

'இன்று என்னை இந்தத் தேசத்திலிருந்து துரத்திவிடுகிறீர்; நான் உமது முகத்துக்கு விலகி மறைந்து, பூமியில் நிலையற்று அலைகிறவனா யிருப்பேன்; என்னைக் கண்டுபிடிக்கிற ஒவ்வொருவனும் என்னைக் கொன்றுபோடுவானே என்றான்' (ஆதி. 4 : 14 -Eng.).

'*நான் உமது முகத்துக்கு விலகி மறைகிறவனாயிருப்பேன்*' என்று காயீன் தேவனிடத்தில் புலம்புகிறான். ஆனால் இது உண்மையல்ல, காயீனுடைய முகத்துக்குத் தேவன் மறைந்திருப்பார் என்பதே உண்மையாகும். தேவனுக்கு முன்பாக நிற்பதற்கோ, அவருடைய மகிமையான முகத்தைத் தரிசிப்பதற்கோ பாவியான ஒரு மனுஷனுக்குத் தைரியம் இராது.

'*என்னைக் கண்டுபிடிக்கிற ஒவ்வொருவனும் என்னைக் கொன்று போடுவானே*' - உண்மையில், காயீனைச் சுற்றிலும் அவனுடைய இரத்த சம்பந்தமான உறவினர்களேயன்றி, அந்நியர் ஒருவரும் இருக்கவில்லை. இவ்வாறிருக்க, அவனுடைய கூற்றை ஒருவரும் நம்புவதற்கு ஏது வில்லையே! தன்னைக் கண்டுபிடிக்கிற *ஒவ்வொருவனும்* தன்னைக் கொன்றுபோடுவான் என்பது காயீனுடைய சொந்தக் கற்பனையாகவே இருந்தது. ஒரு பாவி எப்போதும் தேவையற்ற பயத்தினாலும் பீதியி னாலும் ஆட்கொள்ளப்படுகிறான்.

கறுப்புக் கண்ணாடி அணிந்திருக்கும் ஒருவனுக்கு முழு உலகமும் இருண்டிருப்பதாகக் காட்சியளிப்பது போல, காயீன் கொலைபாதகனாக மாறியபோது, அவன் உலகத்திலுள்ள ஒவ்வொரு நபரும் கொலைபாத கனாக மாறிவிட்டதாக எண்ணத் தொடங்கினான். நம்முடைய இருதயம் அசுத்தமாயிருக்குமாயின், மற்றவர்களும் அசுத்தமாயிருப்பதாக நாம் எண்ணுவோம்; அவ்வாறே, நம்முடைய இருதயம் சுத்தமாயிருக்குமாயின்,

மற்றவர்களும் சுத்தவான்களாயிருப்பதாகவே நாம் எண்ணுவோம் (தீத்து 1 : 15). மற்றவர்கள் அசுத்தமாயிருப்பதாக நாம் எண்ணுவோமாயின், அதன் பொருள், நாம் அசுத்தமாயிருக்கிறோம் என்பதே.

நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போமாக. தேவையற்ற பயம் அல்லது கவலையினால் நாம் அலைக்கழிக்கப்படுகிறோமா? எதிர்மறை யான எண்ணங்களுக்கும் உணர்ச்சிகளுக்கும் நாம் அடிக்கடி இடங் கொடுக்கிறோமா? அப்படியென்றால், நம் இருதயம் செவ்வைப்படுத்தப்பட வேண்டியது அவசியம். சுத்தமில்லாத ஓர் இருதயத்தினால் கர்த்தருடைய தயையையோ அல்லது வேறெந்த நபரிலும் உள்ள நன்மையையோ காணவே முடியாது; அப்படிப்பட்ட இருதயமுள்ளவர்களால் கர்த்தரிலும் அவருடைய அன்பிலுங்கூட நம்பிக்கை வைக்க முடியாது.

ஜூலை 19

முன்மாதிரியாய் இரு!

'நான் கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றுகிறது போல, நீங்கள் என்னுடைய மாதிரியைப் பின்பற்றுங்கள்' (I கொரி. 11 : 1 -NIV).

ஒரு முறை பாஸ்டர் ஒருவர் தொலைபேசியில் தம்முடைய விசுவாசிகளில் ஒருவரை அழைத்தார். அந்த நபருடைய சிறிய மகன் அந்த அழைப்புக்குப் பதிலளித்தான். பாஸ்டர் தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டு, அவனுடைய தகப்பனாரிடம் பேச வேண்டுமென கூறினார். பையன், தான் தகப்பனை அழைப்பதாகக் கூறவே, அவர் தொலைபேசியின் மறுமுனையில் காத்திருந்தார். அதற்குப் பின்னர் அங்கு மெதுவான குரலில் இருவர் பேசிக்கொள்வதைப் பாஸ்டரால் கேட்க முடிந்தது. ஓரிரு நிமிடங்கள் கழித்து அந்தச் சிறுவன், 'பாஸ்டர், அப்பா, தான் இங்கே இல்லை என்று சொல்லச் சொல்லுகிறார்கள்' என்று தொலைபேசியில் பதிலளித்தான்.

நம்முடைய பிள்ளைகள் நேர்மையும், உண்மையும் உள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று நாம் அவர்களிடம் கூறுகிறோம்; அவர்கள் பொய் பேசும்போது நாம் அவர்களைத் தண்டிக்கிறோம். ஆனால் நாமே அவர்களுக்கு மாதிரியாக இராத பட்சத்தில், அவர்கள் நேர்மையாக இருக்க வேண்டுமென்று நாம் எப்படி அவர்களிடமிருந்து எதிர்பார்க்க முடியும்? நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு அளிக்கக்கூடிய மிகச் சிறந்த அன்பளிப்பு, உங்களுடைய நல்ல எடுத்துக்காட்டான ஜீவியமேயாகும்.

ஒரு இளம் ரோஜாச் செடியானது ஒரு குச்சியோடு சேர்த்துக் கட்டி வைக்கப்படும்போது, அது அச்செடி நேராக வளர அதற்கு உதவி செய்கிறது. பின்னர் நீங்கள் ஆதாரமாக நிறுத்திய அந்தக் குச்சியை நீக்கி விட்டாலும் அச்செடி நேராகவே வளரும். ஆனால் நேராக நிற்கும் ஒரு குச்சியோடு ஆரம்பத்திலேயே இளஞ்செடி சேர்த்து கட்டிவைக்கப்படா விடில், பின்னர் நீங்கள் அதற்கு உதவி செய்ய முற்பட்டாலும் அது மிகவும் காலதாமதமான செயலாகிவிடும்; அந்த ரோஜாச் செடி கோண லாகவே வளரும். "*பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்*" (நீதி. 22 : 6).

ஜூலை 20

கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தினுடைய விலையேறப்பெற்ற தன்மை

'நீங்கள் குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே' (I பேதுரு 1 : 18, 19).

மனிதனுடைய இரத்தம் அதன் தன்மையின் அடிப்படையில் குறைந்தபட்சம் பதினைந்து பிரிவுகளைச் சேர்ந்ததாயிருக்கிறது என்று கூறப்படுகிறது. சாதாரணமான ஒரு இரத்தப் பரிசோதனையே ஒரு குறிப்பிட்ட நபர் ஒரு குறிப்பிட்ட பிள்ளைக்குத் தகப்பனா, இல்லையா என்பதை நிரூபித்துவிடும். ஒரு தகப்பனுக்கும் பிள்ளைக்கும் இடையே பிறப்பு சம்பந்தப்பட்ட தொடர்பு இருக்கிறதா என்பதை அவர்களுடைய இரத்தம் விஞ்ஞான ரீதியாகச் சோதிக்கப்படுவதின் மூலமாக நாம் கண்டறிந்துகொள்ளலாம். *ஆனால் கர்த்தராகிய இயேசுவின் இரத்தமோ தனித்தன்மை வாய்ந்த ஒன்றாயிருக்கிறது.* அவருக்கு நம்மைப் போல ஒரு பூமிக்குரிய தகப்பன் இல்லை. ஒவ்வொருவரும் தாங்கள் தங்கள் தாயின் கருவில் உருவாகும்போதே ஒரு குறிப்பிட்ட இரத்தப்பிரிவுக்குட்பட்ட வர்களாயிருந்து பிறக்கின்றனர். ஆனால் கர்த்தராகிய இயேசுவின் இரத்தம் ஒரு குறிப்பிட்ட இரத்தப்பிரிவைச் சார்ந்ததென வகையறுக்கப்பட முடியாதது; ஏனெனில் அவரது பிறப்பு கன்னிகைப் பிறப்பாயிருந்தது. அதற்கு யாதொரு மரபு வழிப்பண்போ அல்லது தொடர்போ கிடையாது. நித்தியமானவரும் அநாதியானவருமாகிய பரம பிதாவே அவருக்குத் தகப்பனாக இருந்தார். ஆகவேதான் கிறிஸ்துவின் இரத்தம் தேவனுடைய

இரத்தம் என்றுங்கூட அழைக்கப்படுகிறது: "*தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபை*" (அப். 20 : 28).

"*தேவதூதன் அவளுக்குப்* (மரியாளுக்குப்) *பிரதியுத்தரமாக: பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால்* ***உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்***" என்றான் (லூக்கா 1 : 35). கர்த்தராகிய இயேசுவுக்கு உயிர் சாஸ்திர ரீதியான ஒரு தகப்பன் இருக்கவில்லை என்பதை இது தெளிவாக நிரூபிக்கிறது. ஆகவேதான் அவருடைய *இரத்தம் விலையேறப்பெற்றது.* '*நீங்கள் அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே*' (I பேதுரு 1 : 18, 19).

அருமையான வாசகரே, நீங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டிருக்கிறீர்கள். அவ ருடைய விலையேறப்பெற்ற இரத்தம் உங்களை மீட்கும்படியாகச் சிந்தப் பட்டபடியால் நீங்கள் அவருக்கு விலையேறப்பெற்றவர்கள்.

'*விலையேறப்பெற்ற திரு இரத்தமே*
அவர் விலாவினின்று பாயுதே
விலையேறப் பெற்றோனாய் உன்னை
மாற்ற விலையாக ஈந்தனரே'.

ஜூலை 21

பேரும் புகழும்

"கோடரிகளை ஓங்கிச் சோலையிலே மரங்களை வெட்டுகிறவன் பேர்பெற்றவனானான். இப்பொழுதோ அவர்கள் அதின் சித்திர வேலைகள் முழுவதையும் வாச்சிகளாலும் சம்மட்டிகளாலும் தகர்த்துப் போடுகிறார்கள்" (சங். 74 : 5, 6).

இங்கு இந்தப் பேர்பெற்ற மனிதன் செய்வது யாது? அவன் சோலையில் உள்ள அடர்த்தியான மரங்களின் (Eng.) மேல் கோடரிகளை ஓங்குகிறான். கோடரிகள் மாம்சத்துக்குரிய ஆயுதங்களையும், சோலையில் உள்ள அடர்த்தியான மரங்கள் பெரிய பரிசுத்தவான்களையும் காட்டுகிறது. நன்றாய் அறியப்பட்டவர்களாகவும் புகழ்பெற்றவர்களாகவும் விளங்க

விரும்பி, காரியங்களைச் சாதூரியமாகச் செய்கிறவர்கள், பரிசுத்தவான் களையும் தேவனுடைய சபையையும் அழிக்கிறவர்களாயிருக்கிறார்கள் என்பதை நாம் அடிக்கடி கண்கூடாகக் கண்டிருக்கிறோமே! உலகத்திலும், ஆவிக்குரிய உலகிலும் பேர்பெற்றவர்களாயிருக்கும் பலரும் நல்லவர்களா யிருப்பதில்லை என்பது எத்தனை உண்மையானது!

'*அவர்கள் அதின் சித்திரவேலைகள் முழுவதையும் தகர்த்துப் போடுகிறார்கள்*' - தாங்கள் புகழ்பெற்றவர்களாக வேண்டுமென்று முயற் சிக்கிறவர்கள் ஆவிக்குரியவர்கள் அல்லர்; மாறாக, அவர்கள் மாம்சீகமான வர்களாயிருக்கிறார்கள்; அவர்களது கிரியையானது பெரும்பாலும் தேவனுடைய ஊழியத்தைக் கட்டி எழுப்புவதாயிராமல், அதை அழிப்ப தாகவே இருக்கிறது. வேதாகமத்தில் இப்படிப்பட்ட சில புகழ்பெற்ற மனுஷரைக் குறித்து நாம் வாசிக்கிறோம். இவர்கள் "*சபைக்குத் தலைவர்களும் சங்கத்துக்கு அழைக்கப்பட்டவர்களும் பிரபலமானவர்களு மாகிய இருநூற்று ஐம்பது பேர்*" ஆவர். பேர் பெற்ற மனிதராகிய இவர்கள் செய்தது என்ன? இவர்கள் தேவனுக்கும் தங்கள் நடத்திப்புக்காரராகிய மோசே, ஆரோன் என்பவர்களுக்கும் விரோதமாகக் கலகம் செய்தனர்; மோசேக்கும் தங்களை நடத்துகிறவர்களுக்கும் விரோதமாகக் கலகம் செய்த தாத்தான், அபிராம் என்பவர்களுங்கூட பேர்பெற்ற மனிதராகவே இருந்தார்கள் (எண். 16 : 1 - 3 ; 26 : 9).

அன்பான தேவபிள்ளையே, நீ உன் ஞானத்தையும் செல்வாக்கை யும் உபயோகித்து ஒருவேளை (சபையில்) புகழ் பெற்றவனாகலாம். ஆனால் நீ அடைந்துகொள்ளும் புகழ், தேவனுடைய ஊழியத்துக்கு உதவி செய்வதைக் காட்டிலும், அதை அழித்துப்போடுவதாகவே இருக்கும். எனவே பேரையும் புகழையும் விட்டு ஓடி, கர்த்தராகிய இயேசுவாகிய கன்மலையின் வெடிப்புகளில் மறைந்திருப்பதே எப்போதும் சிறந்ததாகும்.

ஜூலை 22

அவர் நமது பாதங்களைக் காக்கிறார்

"***உன் காலைத் தள்ளாடிவொட்டார்; உன்னைக் காக்கிறவர் உறங்கார்***" (சங். 121 : 3).

எவ்வளவு சிலாக்கியம் பெற்ற ஜனங்கள் நாம்! யுகாயுகங்களாய் நிலைத்திருக்கும் கன்மலையாகிய கிறிஸ்துவின் மேல் உறுதிப்படுத்தப்பட்ட நம் பாதங்கள் தள்ளாடுவதற்கு அல்லது அசைக்கப்படுவதற்குத் தாம்

ஒருபோதும் இடங்கொடுப்பதில்லை என்று நம் தேவன் வாக்குப்பண்ணி யிருக்கிறார் (சங். 40 : 2 ; 121 : 3).

"*உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்*" (சங். 91 : 11, 12). "*அவர் தமது பரிசுத்தவான்களின் பாதங்களைக் காப்பார்*" (I சாமு. 2 : 9). பரிசுத்த தூதர்கள், நம் பாதங்கள் கல்லில் இடறாதபடிக்கு நம்மைத் தங்கள் பலத்த கரங்களில் தாங்கிக்கொண்டிருப்பது மட்டுமல்ல, கர்த்தர் தாமே நம் பாதங்களை இரவும் பகலும் விழிப்புடன் கவனித்துக்கொண்டிருக்கிறார் என்பது நமக்கு ஆச்சரியமளிப்பதாயிருக்கிறதல்லவா? - அவர் ஒருபோதும் உறங்குவது மில்லை, தூங்குவதுமில்லை!

இருப்பினும், கர்த்தர் நம் பாதங்களைக் காக்க வேண்டுமாயின், நம் பகுதியில் நாம் நிறைவேற்ற வேண்டிய நம்முடைய பங்கு ஒன்று உண்டு. "*சகல பொல்லாத வழிகளுக்கும் என் கால்களை விலக்குகிறேன்*" (சங். 119 : 101). இங்கு 'கால்கள்' என்பது 'நம் ஜீவியத்தின் நடக்கையைக்' குறிக்கிறது. பொல்லாங்கானவை என்று அறியப்படும் யாவற்றிற்கும் நம் ஜீவியத்தின் நடக்கை நீங்கலாயிருக்குமாயின், நம் பாதங்கள் அசைக்கப்படாதவாறும், விழாதவாறும் கர்த்தர் பாதுகாப்பார். '*என் காலை விழுகைக்கும் தப்புவித்தீர்*' (சங். 116 : 8 -Eng.).

நம் தேவன் சரீரத்தின் மிகத் தாழ்வான பகுதியாகிய நம் *பாதங் களுக்காகக்* கவலையுள்ளவராய், அவற்றைக் கரிசனையுடன் பாதுகாப்பாரே யாயின், அவர் நம் *தலையைத்* தீய எண்ணங்கள், கற்பனைகள் முதலிய வற்றிற்கு நீங்கலாகப் பாதுகாக்க எவ்வளவதிகமாக மனமுவந்திருப்பார்! மேலும் தேவன் நம் சரீரத்தின் மேல் இவ்வளவாகக் கரிசனையுள்ளவரா யிருப்பாராயின், அவர், நம் ஆத்துமாவின் மேல் எவ்வளவு அதிகமாகக் கரிசனையுள்ளவராயிருக்க வேண்டும்!

ஜூலை 23

சோதனைகள் நமக்கு நன்மை செய்கின்றன

"***ஜலம் பூமியின்மேல் மிகவும் அதிகமாய்ப் பெருகினதினால், வானத்தின் கீழ் எங்குமுள்ள உயர்ந்த மலைகளெல்லாம் மூடப்பட்டன***" (ஆதி. 7 : 19).

தேவனுடைய வசனத்தில், தண்ணீர்கள் பெரும்பாலும் உபத்திரவங் களையும் பாடுகளையும் குறிக்கின்றன. சங்கீதக்காரன், "*தேவனே, என்னை*

இரட்சியும்; வெள்ளங்கள் என் ஆத்துமாமட்டும் பெருகிவருகிறது" என்று ஜெபிக்கிறான் (சங். 69 : 1).

'உயர்ந்த மலைகள்' அதாவது அடிக்கடி தன் அருவருப்பான தலையை உயர்த்தும் நம் பெருமையான சுபாவம் மூடப்பட்டு, நசுக்கப்பட்டுப் போகும்படியாக நம் ஜீவியத்தில் சோதனைகள் 'அதிகமாய்ப் பெருகும்படி' தேவன் அனுமதிக்கிறார். இஸ்ரவேலர் வனாந்தரத்தில் சந்தித்த சோதனைகள் அவர்களைத் தாழ்மையுள்ளவர்களாக்கும் நோக்குடையவையாயிருந்தன (உபா. 8 : 2).

பூமி முழுவதும் மூடப்பட்டு, ஆகாயம் அல்லது வானம் மட்டுமே காணப்படத்தக்கதாக '*ஜலம் அதிகமாய்ப் பெருகினது*'. அருமையான தேவபிள்ளையே, கிறிஸ்துவும் பரலோக சுபாவமும் மட்டுமே உனக்குள் காணப்படத்தக்கதாக, உன் பூமிக்குரிய சுபாவத்தை அதனுடைய எல்லா மாயைகளுடனும் மூடிப்போடும் நோக்குடனேயே பாடுகள் உனக்கு அனுமதிக்கப்படுகின்றன.

ஜலம் பெருகியபோது '*மாம்சமான யாவும் மாண்டன*' (ஆதி. 7 : 21). ***மாம்சமான யாவற்றையும்*** அழிப்பதே 'ஜலப்பிரளயத்தின்' நோக்கமாகும். நாம் கடந்துசெல்லுகிற உபத்திரவங்கள் நம்முடைய மாம்சீகமான, பரிசுத்த மாக்கப்படாத சுபாவங்களை நாம் களைந்துபோடும்படியாக நமக்கு உதவி செய்கின்றன. "*இப்படியிருக்க, கிறிஸ்து நமக்காக மாம்சத்திலே பாடுபட்ட படியால், நீங்களும் அப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாகத் தரித்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் மாம்சத்தில் பாடுபடுகிறவன் இனி மாம்சத்திலிருக்கும் காலம் வரைக்கும் மனுஷருடைய இச்சைகளின்படி பிழைக்காமல் தேவனுடைய சித்தத்தின்படியே பிழைக்கத்தக்கதாகப் பாவங்களை விட்டோய்ந்திருப்பான்*" (I பேதுரு 4 : 1, 2).

எனவே அருமையான தேவபிள்ளையே, தேவனுடைய பூரண சித்தத்திற்குட்பட்ட சோதனைகளை நீ மனமுவந்து வரவேற்பாயாக. அவை தேவன் உன் மேல் கொண்டிருக்கும் அன்புக்கான நிச்சயமான அடையாளங்களே ஆகும்!

ஜூலை 24

இயற்கைக்கப்பாற்பட்டதை நாடித் தேடுங்கள்

"***இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்; என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?***" (எரே. 32 : 27).

தேவன் தம்முடைய சாயலாகவும் தமது ரூபத்தின்படியேயும் மனுஷனைச் சிருஷ்டித்தார். தேவன் அதிசயமானவர். எனவே அவர் நம்மை உண்டாக்கியபோது, நாம் அதிசயமானவர்களாயிருக்க வேண்டும் என்னும் விருப்பத்தை நமக்குள் வைத்தார். மனிதராகப் பிறந்த ஒவ்வொரு வரும் - அவர்கள் பாவிகளாயினும் பரிசுத்தவான்களாயினும் - இயற்கைக் கப்பாற்பட்டதை வாஞ்சிக்கிறார்கள். பாவிகள், போதைப்பொருட்கள், மந்திரவாதம் போன்றவற்றின் மூலம் இயற்கைக்கப்பாற்பட்டவர்களாக விளங்க வேண்டும் என்று நாடுகிறார்கள். அவர்கள் தங்களுக்குள் ஏதோ ஒரு இயற்கைக்கப்பாற்பட்ட சக்தியை வாஞ்சிக்கிறார்கள்.

தேவன் நமக்குள்ளும் நம் மூலமாகவும் இயற்கைக்கப்பாற்பட்ட ஒன்றைச் செய்ய விரும்புகிறார். அவர் நமக்காக, நாம் கற்பனை செய்யக்கூடியதைப் பார்க்கிலும் மிக மேன்மையானதொரு பெரிய திட்டம் உள்ளவராயிருக்கிறார். ஆகையினாலேயே தேவனுடைய வசனமானது, '*நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்*' (I பேதுரு 2 : 9) என்று கூறுகிறது. நம் ஜீவியம் எப்படிப்பட்ட அதிசயமானதாயிருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என் பதைக் காண்பதற்கு நம் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டிருக்குமாயின், நம் வாழ்க்கைமுறைமையையே அது எவ்வளவாய் மாற்றியமைத்துவிடும்!

தேவன் அனுதினமும் தம்மை நமக்கு அதிசயமானவராக வெளிப் படுத்த விரும்புகிறார். தேவன் உன் ஜெபங்களுக்கு உடனடியாகப் பதில் அளிக்காதிருப்பாராயின், அவர் அதற்கு அதிசயமான விதத்தில் பதில் அளிக்க விரும்புகிறார் என்பதே அதன் கருத்தாகும். நம் தேவன் அசாத்தியமானவைகளைச் செய்வதில் பிரியங்கொள்கிறார். நம்முடைய தேவனுடைய நாமங்களுள் ஒன்று 'அதிசயமானவர்' என்பதால், அவர் எல்லாவற்றையும் அதிசயமான விதத்தில் செய்ய விரும்புகிறார்.

நாம் அசாத்தியமானவைகளுக்காக ஜெபிக்க வேண்டும் என்று தேவமனிதன் ஒருவர் கூறுகிறார். தேவனைப் பொறுத்த வரை, இலகுவான ஒரு செயலைச் செய்வதைப் பார்க்கிலும் ஒரு கடினமான செயலைச் செய்வதே அவருக்கு இலகுவானது. நம் தேவன் இயற்கைக்கப்பாற்பட்ட மண்டலத்தில் வாசம்பண்ணுகிறார். நாம் ஒரு இலகுவான காரியத்தைச் செய்யும்படியாக மட்டும் கர்த்தராகிய இயேசுவிடம் கேட்கும்போது, அவருடைய வல்லமை, திறமை, மகிமை ஆகியவற்றை மட்டுப்படுத்து கிறோம்; அசாத்தியமானவைகளை அவரால் செய்யக் கூடும் என்று விசுவாசியாதிருக்கும்போது நாம் பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்து கிறோம்; அத்துடன் நாம் நம்முடைய தேவனின் வல்லமை, தயாளகுணம்,

அன்பு ஆகியவற்றைச் சந்தேகிக்கிறோம்; உண்மையில் நாம் தேவனின் கரங்களைக் கிரியைசெய்ய விடாமல் கட்டிவிடுகிறோம் என நாம் கூறலாம். அருமையானவர்களே, நம் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட வேண்டியது அவசியமாயிருக்கிறது. அப்போது நாம் அற்பமான, சிறிய காரியங்களுக்காக மாத்திரமே ஜெபித்துக்கொண்டிருக்க மாட்டோம்; மாறாக, நாம் அசாத்தியமானவைகளுக்காக ஜெபிக்கக் கற்றுக்கொள்வோம்; நாம் பெரிய காரியங்களுக்காகப் பெரிதான விசுவாசத்தோடும் வல்லமையோடும் ஜெபம்பண்ணுவோம்.

ஜூலை 25

'என் பணம் எனக்குச் சொந்தம்'

"பூமியிலே நீங்கள் சம்பிரமமாய் வாழ்ந்து, சுகபோகத்தில் உழன்றீர்கள்" (யாக். 5 : 5).

லூக்கா 16 -ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஐசுவரிய வானையும் லாசருவையும் பற்றிய சம்பவத்தில், ஐசுவரியவான் பாதாளத்திற்குச் சென்றதாக நாம் பார்க்கிறோம். அவன் ஒரு விபசாரக்காரனாகவோ அல்லது தேவனைத் தூஷிக்கிறவனாகவோ இருந்ததாக நாம் வாசிக்கிறதில்லை. அவன் கொலை செய்யவும் இல்லை, திருடவும் இல்லை. உண்மையில், அவனைப் பற்றி அநேக நல்ல காரியங்களை நாம் வாசிக்கிறோம். அவன் தன் சகோதரரை நேசித்தான். அவன் ஆபிரகாமை 'தகப்பனே' என்று அழைக்கிறான். ஆபிரகாமுங்கூட அவனிடம் ஏதேனும் பொல்லாப்பு காணப்பட்டதாக அவனைக் குற்றப்படுத்தவில்லை. அப்படியானால், அவன் பாதாளத்திற்குச் சென்றது ஏன்?

ஐசுவரியவான் இரத்தாம்பரமும் மெல்லிய வஸ்திரமும் தரித்தவனாய் அனுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்ததே அவன் பாதாளத்திற்குச் சென்றதின் ஒரு காரணமாய் இருக்கக் கூடும். வேதாகமக் காலங்களில் இரத்தாம்பரமும் மெல்லிய வஸ்திரமும், ராஜரீக வஸ்திரங்களாக, அதிக விலைமதிப்புள்ளவையாயிருந்தன. நீ ஒருவேளை ஒரு ஐசுவரியவானாயிருக்கலாம். நீ ஒருவேளை, 'நான் என் சொந்தப் பணத்தை உபயோகித்து விலையுயர்ந்த உடை அணிகிறேன்; மிகவும் விலையுயர்ந்த ஒரு வாகனத்தை அல்லது இதர சுகபோகத்திற்குரிய பொருட்களை வைத்திருக்கிறேன்' என்று சொல்லக் கூடும். ஆனால் நீ உன் பணத்தை அவ்விதம் உபயோகிக்கும்போது வேதாகமம் உன்னைக் கொலைபாதகன் என்று அழைக்கிறது. 'நான் வேறு யாருடைய பணத்தையும் எடுக்கிற

தில்லை. நான் யாரைக் கொலை செய்கிறேன்?' என்று நீ ஒருவேளை கேட்கக் கூடும். "*பூமியிலே நீங்கள் சம்பிரமமாய் வாழ்ந்து, சுகபோகத்தில் உழன்றீர்கள்; கொழுத்தவைகளை அடிக்கும் நாளில் நடக்கிறதுபோல உங்கள் இருதயங்களைப் போஷித்தீர்கள். நீதிமானை நீங்கள் ஆக்கினைக் குள்ளாகத் தீர்த்துக் கொலைசெய்தீர்கள்*" (யாக். 5 : 5, 6). நீ சம்பிரமமாய்ச் சிற்றின்பத்தில் வாழும்போது, அநேக ஏழைகளையும் சிறுமைப்பட்டவர்களையும் சுபாவத்தின் அடிப்படையில் கொலை செய்கிறாய். அவர்கள் பட்டினியினாலும் ஊட்டச்சத்துக் குறைவினாலும் சாகக் கூடும். உன்னுடைய தசமபாகம் மாத்திரமல்ல, உன்னுடைய ஒவ்வொரு நயாபைசாவும் தேவனுக்குச் சொந்தமானது என்பதை நீ நினைவிற்கொள்வாயாக. ஒரு நாள் நீ அவற்றிற்காக தேவனுக்குக் கணக்கொப்புவிக்க வேண்டும்.

சிற்றின்பப் பிரியராய் வாழ்ந்து, சுகபோக வாழ்க்கைக்காகப் பணத்தைச் செலவழிக்கிறவர்களுக்கு வேதனையுள்ள ஒரு முடிவு உண்டாகும். அவர்களது வாழ்க்கையே வேதனையுள்ளதாயிருக்கும். "*அவள் தன்னை மகிமைப்படுத்தி, செல்வச்செருக்காய் வாழ்ந்ததெவ்வளவோ அவ்வளவாய் வாதையையும் துக்கத்தையும் அவளுக்குக் கொடுங்கள்*" (வெளி. 18 : 7). அன்பான தேவபிள்ளையே, மிகவும் மகிழ்ச்சியான வாழ்க்கை என்பது ஒரு எளிமையான, தாழ்மையான வாழ்க்கையாகும். தேவன் உனக்குப் பணத்தைத் தருகிறார். ஆனால் அதை நீ அவருடைய சித்தத்தின்படியும் அவருடைய மகிமைக்காகவும் செலவழிக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார்.

ஜூலை 26

வேதவசனத்தைப் படியுங்கள்

"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு" (கொலோ. 3 : 16).

ஒரு குறிப்பிட்ட தேவபிள்ளையினுடைய மகன் சிறுவனாக இருந்தபோது ஞாயிறு பள்ளியில் பயின்று ஏராளமான வேதவசனங்களைக் கற்றுக் கொண்டான். ஆனால் ஆவிக்குரிய சத்தியங்கள் ஒன்றையும் அறியாதவனாகவே அவன் வளர்ந்துவந்தான். அவனுடைய வாலிபப் பருவத்தில் ஒரு நாள் அவன் அதிகமாய் மனச்சோர்வுற்று, தற்கொலை செய்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்தான். அவன் ஒரு முந்திரி மரத்தின் மேல் ஏறி, அதன் ஒரு கிளையில் ஒரு கயிற்றைக் கட்டி, தன் கழுத்தைச் சுற்றி

சுருக்குப் போட்டான். மரத்திலிருந்து குதிப்பதற்கு முன் ஒரு சிறிய ஜெபம் செய்யலாம் என்று அவன் எண்ணினான். அவன் அவ்விதம் ஜெபித்த போது, பல வருடங்களுக்கு முன் அவன் ஞாயிறு பள்ளியில் படித்திருந்த ஒரு வசனம் திடீரென அவனது மனதில் வந்தது: "*மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன்*" (கலா. 3 : 13). தான் செய்யப்போவது ஒரு சபிக்கப்பட்ட காரியம் என்று அவன் மனதில் உதித்தது. உடன்தானே அவன் மரத்திலிருந்து கீழே இறங்கினான். அவன் தன்னுடைய பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, தன்னுடைய ஜீவியத்தைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத் தான். இப்போது அவன் பெரியவனாக வளர்ந்து, கர்த்தருக்கென்று ஆழமாக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு கிறிஸ்தவனாக ஜீவித்துவருகிறான்.

வேதாகமத்தை நாம் படிக்கும்போது, ஆரம்பத்தில் சில வசனங்கள் நம்மில் யாதொரு ஆழ்ந்த பயனையும் ஏற்படுத்தாமலிருக்கலாம். ஆனால் தேவனுடைய வார்த்தை சரியான நேரத்தில் நம்முடைய ஜீவியத்தில் கிரியை செய்யும். கர்த்தராகிய இயேசு, "*வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை*" என்றுரைத்திருக்கிறார் (மாற்கு 13 : 31). ஆகவே வேதவாக்கியங்களைத் தியானிப்பதையும், வேதபகுதிகளை மனப்பாடம் செய்வதையும் நாம் அலட்சியம்பண்ணாதிருப்போமாக.

ஜூலை 27

புதுப்பிக்கப்பட்ட தீர்மானங்கள்

'கர்த்தர் ஆபிரகாமுக்குத் தரிசனமானார். அப்பொழுது அவன் தனக்குத் தரிசனமான கர்த்தருக்கு அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டினான். பின்பு அவன் அவ்விடம்விட்டுப் பெயர்ந்து மலைக்குப் போனான்'

(ஆதி. 12 : 7, 8).

கர்த்தர் தனக்கு எங்கெல்லாம் தரிசனமானாரோ, அங்கெல்லாம் ஆபிரகாம் அவருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினான். தேவனுடைய ஒவ்வொரு சந்திப்பும், தேவனிடத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் ஒவ்வொரு வாக்குத்தத்தமும், நம்மை ஒரு புதிய பிரதிஷ்டைக்கு (பலி பீடம்) நேராக வழிநடத்தி, ஒரு மலை உச்சியின் அனுபவத்திற்கு நம்மைக் கொண்டு செல்ல வேண்டும்.

கர்த்தர் ஆபிரகாமை எங்கெல்லாம் அனுப்பினாரோ, அங்கெல்லாம் அவன் அவருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினான். இது, அவர் அவனை எங்கு வைத்தாலும் அவருக்கு ஊழியம் செய்ய அவன் ஆயத்தமா

யிருந்தான் என்பதைக் குறிக்கிறது. பலிபீடமானது அவன் தேவனுக்குச் செய்த சேவைக்கு ஒரு சாட்சியாக இருந்தது. நாம் எங்கு சென்றாலும், நாம் கர்த்தருக்காகச் செய்யும் சேவையின் ஆவிக்குரிய நற்கந்தத்தைப் பின்வைத்துச் செல்ல வேண்டும். ஆபிரகாமின் சகோதரனுடைய மகனாகிய லோத்து ஒருபோதும் ஒரு பலிபீடத்தையாகிலும் கட்டவில்லை; ஆகவே அவன் ஜீவித்த இடங்களிலெல்லாம் அவனுக்கு நற்சாட்சி இருக்கவில்லை என்பதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை (ஆதி. 19 : 9, 14).

பிரான்சிஸ் டீ சேல்ஸ் (Francis de sales) என்பவர், 'ஒவ்வொரு நாளையும் நீங்கள் மறுபடியுமாகத் தொடங்க வேண்டும் என்பதே சரியானதாகும். ஆவிக்குரிய ஜீவியத்தைச் சிறந்த விதத்தில் முடிப்பதற்கு அதை மறுபடியும் மறுபடியுமாக ஆரம்பிப்பதைத் தவிர வேறு மேலான வழி இல்லை' என்று கூறியிருக்கிறார்.

தேவபிள்ளையே, நாம் நம்மைத் தேவனுக்கு மீண்டும் மீண்டும் புதிய விதத்தில், அவ்வப்போது - ஒவ்வொரு காலையிலும் ஒவ்வொரு இரவிலும், ஏன், நம் ஜீவியத்தின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தொடர்ந்து ஒப்புக்கொடுத்துக்கொண்டேயிருக்க வேண்டியது மிகவும் முக்கியமான தாகும். அப்பொழுது நம்முடைய யாத்திரையில் நாம் தொடர்ந்து செல்லு கையில் நமக்குப் புதிய கிருபையும், புதுப்பிக்கப்பட்ட பெலனும், புதிய சந்தோஷங்களும் உண்டாகும்; அங்கு இளைப்புக்கோ, மனச்சோர்வுக்கோ அல்லது மனத்துயருக்கோ நம்மில் இடமிராது. நம் ஆவிக்குரிய பயணத்தில் நாம் மலையையோ அல்லது பள்ளத்தாக்கையோ கடக்கவேண்டியதா யிருப்பினும், அக்கினியினூடாகவோ அல்லது தண்ணீரினூடாகவோ செல்லவேண்டியதாயிருப்பினும், மழையாயினும், வெயிலாயினும் - இவை ஒன்றும் நம்மைத் தடுத்து நிறுத்த முடியாது. அது எப்படிப்பட்ட பாதையாயினும், நாம் நம்முடைய யாத்திரையின் ஒவ்வொரு சிறு பகுதியையும் இன்பமாக அனுபவிக்கலாம். நம்முடைய ஜீவியப் பாதை முழுவதிலும் நம் நடக்கையானது 'இன்னமும் வேகமுள்ளதாகவும், மேலானதாகவும், பெலமுள்ளதாகவுமே' இருக்கும்.

ஜூலை 28

பெருமை என்னும் ஆபரணம்

"***பெருமை சரப்பணியைப்போல் அவர்களைச் சுற்றிக்கொள்ளும்***"

(சங். 73 : 6).

வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஸ்திரீகள் அனைவரிலும் மிகுந்த பெருமையுள்ளவள் யேசபேல் ஆவாள் என நாம் கூறலாம். அவள், '*தன்*

கண்களுக்கு மையிட்டு, தன் தலையைச் சிங்காரித்துக்கொண்டு, ஜன்னல் வழியாய் எட்டிப்பார்த்தாள்' (II இராஜா. 9 : 30). ஆகாபின் குடும்பத்தின் மேல் யெகூ தேவ நியாயத்தீர்ப்பை உக்கிரத்தோடு செலுத்திக்கொண் டிருந்ததை அவள் கண்கூடாகக் கண்டுகொண்டிருந்தும், அந்நேரத்தில் அவ்விதம் வெளியே எட்டிப்பார்ப்பதற்கு அவளுக்கு எவ்வளவு பெருமை யும் துணிவும் இருந்திருக்க வேண்டும்!

'*மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது*' (I பேதுரு 3 : 3, 4). ஆம், இவ்வேத வசனத்தின் வெளிச்சத்தில் பார்க்கும்போது, புறம்பாகத் தங்களை அலங்கரிக்கும் அல்லது சிங்காரிக்கும் பெண்களுக்கு ஒரு சாந்தமுள்ள ஆவி இராது என்னும் உண்மையை நாம் மறுதலிக்க முடியாது. பழைய ஏற்பாட்டில், தேவ ஜனங்கள் தங்கள் தேவனுக்கு முன்பாகத் தங்களைத் தாழ்த்தின சந்தர்ப்பங்களிலெல்லாம் தங்கள் ஆபரணங்களைக் கழற்றி னார்கள் என்று நாம் காண்கிறோம் (ஆதி. 35 : 4; யாத். 33 : 4).

யேசபேலுடைய அகந்தை அவளுக்கு மிகவும் சபிக்கப்பட்டதோர் மரணத்தைச் சம்பாதித்துக்கொடுத்தது - '*அவளைக் கீழே தள்ளினதினால், அவளுடைய இரத்தம் சுவரிலும் குதிரைகளிலும் தெறித்தது; அவன் அவளை மிதித்துக்கொண்டு, உள்ளே போனான். ... நீங்கள் போய்ச் சபிக்கப்பட்ட அந்த ஸ்திரீயைப் பார்த்து, அவளை அடக்கம்பண்ணுங்கள். ... அவர்கள் அவளுடைய தலையோட்டையும் கால்களையும் உள்ளங்கைகளையுமே அல்லாமல் வேறொன்றையும் காணவில்லை*' (II இராஜா. 9 : 33 - 35). 'நாய்கள் யேசபேலைத் தின்னும்' என்னும் எலியாவின் வார்த்தைகள் உண்மையாய் நிறைவேறின.

நாம் நம்முடைய புறம்பான அலங்கரிப்புகளையெல்லாம் களைந்து விட்டு, "*தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தி யினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீ களுக்கு ஏற்றபடியே*" நம்மை அலங்கரித்துக்கொண்டு (I தீமோ. 2 : 10), நம் தேவனோடு மனத்தாழ்மையாக நடப்போமாக.

ஜூலை 29

மிகச் சிறந்த இறையியல் கல்லூரி

'***காலைதோறும் என்னை எழுப்புகிறார்; கற்றறிந்தவர்களைப்போல நான் கேட்கும்படி என் செவியைக் கவனிக்கச்செய்கிறார்***' (ஏசாயா 50 : 4 -Eng.).

நாம் பேசக் கற்றுக்கொள்ளுமுன், கேட்க அல்லது கவனிக்கக் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். '*கற்றறிந்தவர்களைப்போல நான் கேட்கும்படி என் செவியைக் கவனிக்கச்செய்கிறார்*'. பல சந்தர்ப்பங்களிலும், கற்றறிந்தவர்கள் இன்னுமதிகமாகக் கேட்கவும் கற்றுக்கொள்ளவும் மனமுவந்திருக்கும்போது, கல்லாதவர்கள் கற்றுக்கொள்வதற்கோ அல்லது கவனிப்பதற்கோ மனதற்றவர்களாயிருக்கிறார்கள் என்பது விநோதமா யிருக்கிறது.

"*என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; ... அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது*" (யோவான் 10 : 27) என்று கர்த்தராகிய இயேசு கூறுகிறார். நம்முடைய ஆண்டவருடைய மெல்லிய சத்தத்தை நாம் கேட்கத்தக்கதாக அவர் நம் செவிகளைத் திறக்கும்படி நாம் அவரிடம் வேண்டிக்கொள்வோமாக. அப்போது மாத்திரமே நாம் அவருடைய அடிச்சுவடுகளில் அவரைப் பின்பற்றிச் செல்லக் கூடும்.

"*காலைதோறும் என்னை எழுப்புகிறார்*". ஒரு நாளின் அதிகாலை வேளையில்தான் கர்த்தர் அந்தக் குறிப்பிட்ட நாளில் நாம் செய்ய வேண்டிய காரியங்களைக் குறித்த போதனைகளையும் கட்டளைகளையும் நமக்குக் கொடுத்து, நமக்கு முன்னிருக்கிற அபாயங்களைக் குறித்து நம்மை எச்சரித்து நம்மோடு பேசுகிறார். கர்த்தர் இஸ்ரவேலரிடம், '*நான் அதிகாலையில் எழுந்து உங்களோடு பேசிக்கொண்டிருந்தேன்*' என்று திரும்பத் திரும்பக் கூறினார் (எரே. 7 : 13, 25 -Eng.).

. கர்த்தராகிய இயேசு எப்போதாகிலும் ஒரு நாள் மட்டும் அதிகாலையில் எழும்பவில்லை. '*இருட்டோடே*', பொழுது விடிவதற்கு வெகு முன்னரே (Eng.) எழுந்து புறப்பட்டுப்போய் ஜெபம்பண்ணுவ தென்பது அவருடைய இடைவிடாத, நிரந்தரமான பழக்கமாயிருந்தது (மாற்கு 1 : 35). தேவஞானமாகிய பள்ளியில் பயிலும் எந்தவொரு மாண வனும் *அதிகாலையில் எழுதல்* என்னும் ஒழுங்கைக் கற்றுக்கொள்ளாமல், ஒரு மெய்யான பரிசுத்தவானாக வெளியே வருவதில்லை. ஒரு நாள் முழுவதும் நீண்ட தூரம் நடந்து செய்த களைப்பு மிகுந்த பயணம், அந்நாளிலிருந்த தீவிரமான வேலைகள் ஆகியவற்றிற்குப் பின், கர்த்த ராகிய இயேசுவுக்கு அதிகாலையில் எழுதல் என்பது அதிக சிரமமாகத் தான் இருந்திருக்க வேண்டும். ஆனால் நம்முடைய கர்த்தரோ, '*எதிர்க்கவு மில்லை, பின்வாங்கவுமில்லை*' (ஏசாயா 50 : 5).

கர்த்தரின் மிகச் சிறந்த இறையியல் கல்லூரியில் நாம் நம்முடைய ஆண்டவரின் அடிச்சுவடுகளை மறுபடியுமாக ஒவ்வொரு அடியாகத் தேடிக் கண்டுபிடித்து, அவற்றைப் பின்தொடர்ந்து, அதன் மூலம் இலட்சக்கணக்கான ஜனங்களுக்கு ஆசீர்வாதமாக மாறுவோமாக!

ஜூலை 30

'மேன்மையான ஐசுவரியங்கள்'

"***இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று*** (***ஐசுவரியங்கள்*** -Eng.) ***எண்ணினான்***" (எபி. 11 : 26).

இது மோசே விசுவாசத்தினால் பெற்றுக்கொண்ட மிகப் பெரிய வெளிப்படுத்தலாகும். விசுவாசத்தினாலே மோசே எகிப்திலிருந்த பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று, மிகப் பெரிய ஐசுவரியங்களென்று எண்ணினான். அச்சமயத்தில், எகிப்தியப் பேரரசுதான் உலகிலேயே மிகப் பெரிய வல்லரசாகத் திகழ்ந்தது. ஏறக்குறைய உலகில் எல்லாப் பகுதிகளிலுமிருந்து பொக்கிஷங்கள் எகிப்தில் வந்து குவிந்தன. வேறு வார்த்தைகளில் கூறின், அக்காலத்து அரண்மனைகளிலெல்லாம் எகிப்திய அரண்மனையே மிக அதிகமான பொக்கிஷங்களை உடையதாய் இருந்தது. அவ்வெல்லாப் பொக்கிஷங்களையும் வேண்டாமென்று புறக்கணித்துத் தள்ளி, நிந்தைகளைச் சந்தோஷமாகத் தெரிந்துகொள்ளுதல் என்பது கற்பனை செய்து பார்க்கவும் முடியாத ஒரு காரியமாயிருக்கிறது. இக்கிருபையின் காலத்திலுங்கூட, சில பரிசுத்தவான்கள் தங்கள் நற்பெயரைக் கெடுக்கக்கூடிய விதத்தில் உண்டாகும் நிந்தைகளைச் சந்திக்கும்போது மிக அதிகமாய் அதைரியப்பட்டுவிடுகின்றனர்; சிலர் தங்கள் ஊழியத்தையும் ஆவிக்குரிய ஜீவியத்தையுங்கூட விட்டுவிடுகின்றனர். ஆனால் இங்கேயோ, வேதாகமத்தை உடையவனாயிருக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிராத ஒரு மனிதனை, தன்னுடைய காலத்திலோ அல்லது அதற்கு முந்தின கால சரித்திரத்திலோ உலக பொக்கிஷங்களைப் புறக்கணித்துத் தள்ளிவிட்டு, நிந்தைகளை அரவணைத்தலைத் தெரிந்துகொண்ட ஒருவரையும் குறித்துக் கேள்விப்பட்டிராத ஒரு தேவமனிதனை நாம் காண்கிறோம். அவனுடைய விசுவாசமே அவனை அவ்வாறு நிந்தைகளை அதிக பாக்கியமென்று (ஐசுவரியங்களென்று) எண்ணச் செய்தது.

நிந்தையைப் பெரிய ஐசுவரியங்களாகத் தங்களால் எடுத்துக்கொள்ள முடிகிறது என்று எத்தனை பரிசுத்தவான்கள் மோசேயோடு கூட சேர்ந்து சாட்சி சொல்லக் கூடும்? உலக மக்கள் நிந்தைகளை வெறுக்கையில், விசுவாசத்தின் ஐசுவரியங்களை உடையவர்கள் அவைகளை மெய்யான பொக்கிஷங்களாக எடுத்துக்கொள்கின்றனர்.

'*அவன் இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்தான்*'. கிறிஸ்து வினிமித்தம் பகைக்கப்பட்டு நிந்திக்கப்படும்போது, விசுவாசமுள்ள ஜனங்கள் பரலோகத்தில் தங்கள் பலன் மிகுதியாயிருப்பதைக் கண்டு, சந்தோஷப்பட்டுக் களிகூருவார்கள் (லூக்கா 6 : 22, 23; மத். 5 : 11, 12).

ஜூலை 31

பரிசுத்தமே உங்கள் ஜீவியத்தில் பிரதானமானதாயிருக்கட்டும்

"***நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்***" (மத். 5 : 14).

"தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று" (ஆதி. 1 : 3). தம்முடைய ஆறுநாள் சிருஷ்டிப்பில் தேவன் செய்த முதல் செயலாக வேதாகமத்தில் பதிவுசெய்யப்பட்டிருப்பது, இருள் நிறைந்த உலகில் *வெளிச்சத்தைக்* கொண்டுவந்ததே ஆகும். எனவே நித்திய ஆக்கினைக்குப் பாத்திரராயிருக்கும் ஆத்துமாக்களை இரட்சிப்பதற்காகத் தேவனுடைய வெளிச்சத்தை இந்த இருள் நிறைந்த உலகிற்குக் கொண்டுவருவதே, நம்முடைய முதல் செயலாக அல்லது சேவையாக இருப்பதாக.

தேவ வசனத்தில், 'இருள்' என்பது பொதுவாகப் பாவத்துக்கும் தீமைக்கும் ஒப்பிடப்பட்டிருக்கையில், 'வெளிச்சம்' என்பது பரிசுத்தத்தைக் குறிக்கிறது.

தேவன் கண்ட முதல் காரியம் *வெளிச்சமேயன்றி* வேறொன்றுமல்ல. '*தேவன் வெளிச்சத்தைக் கண்டார்*' (ஆதி. 1 : 4 -Eng.). இப்போதுங்கூட பாவத்தால் கறைப்பட்டிருக்கும் இந்த உலகில் துன்மார்க்கமும் கொடுமையும் மட்டுமீறிய நிலையில் இருக்கையில், தேவன் தம்முடைய பிள்ளைகளில் வெளிச்சத்தை, அதாவது தம்முடைய பரிசுத்தத்தையே காண ஆவலாயிருக்கிறார்.

தேவன் நல்லது என்று முதலாவது சாட்சிகொடுத்தது வெளிச்சத்தைக் குறித்தே அன்றி, ஒரு தூதனைக் குறித்தோ அல்லது மனிதனைக் குறித்தோ அல்லது மனுஷியைக் குறித்தோ அல்ல. "*வெளிச்சம் நல்லது என்று தேவன் கண்டார்*". தேவன் உங்கள் ஜீவியத்தின் தூய்மையைக் குறித்து சாட்சி கொடுக்கக் கூடாதவராயிருப்பாராயின், நீங்கள் எச்சரிக்கையா

யிருங்கள்; அவர் உங்களில் இருக்கக்கூடிய வேறெந்த நன்மையையும் அங்கீகரியாமற்போகக் கூடும். நம்முடைய தனிப்பட்ட ஜீவியத்தைக் குறித்து, 'உன்னிலிருக்கிற வெளிச்சம் நல்லது என்று நான் கண்டேன்' என்று தேவன் சாட்சி கூற முடியுமா?

தேவன் முதலாவது பேரிட்டது வானத்துக்கோ, பூமிக்கோ, ஜலத்துக்கோ அல்லது இருளுக்கோ அல்ல. முதலாவது அவர் *வெளிச்சத்துக்கே* பேரிட்டார். "*தேவன் வெளிச்சத்துக்குப் பகல் என்று பேரிட்டார்*". தேவன் தம்முடைய பரிசுத்த நாமத்தை அல்லது தம்முடைய 'புதிய நாமத்தை' நமக்குத் தரிப்பித்து, 'பாக்கியவானும் பரிசுத்தவானும்' என்று நம்மை அழைக்க வேண்டுமாயின், *மெய்யான ஆசீர்வாதம் அல்லது பாக்கியம் என்பது பரிசுத்தமே* என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். ஆகவேதான் அவர் நம்மைப் பரிசுத்த அழைப்பினால் அழைத்திருக்கிறார் - அது மெய்யாகவே ஆசீர்வதிக்கப்பட்டதோர் அழைப்பாகும்.

அருமையான வாசகரே, நீர் ஒவ்வொரு தெய்வீக குணாதிசயத்திலும் வளர்ந்துவரும்போது, பரிசுத்தமே தேவன் உம்மில் காணும் *முதல் காரிய மாயிருக்கட்டும்*. உம்முடைய ஜீவியத்தின் ஒவ்வொரு பகுதியிலும், ஊழியத்தின் ஒவ்வொரு பகுதியிலும் பரிசுத்தத்தை உம்மில் பேணி வளர்த்து உருவாகச் செய்கிறீரா என்பதை நீர் நிச்சயப்படுத்திக்கொள்ளுவீராக!

ஆகஸ்ட் 1

அழகும் நற்கந்தமுமுள்ள ஜீவியம்

'*நான் சாரோனின் ரோஜாவாயிருக்கிறேன்*' (உன். 2 : 1).

ரோஜா மலர், மலர்களில் மிகச் சிறந்ததாகும். சில பூக்கள் சுகந்த வாசனையுள்ளவையாய் இருக்கின்றன; ஆயினும் அவை அழகானவையாக இருப்பதில்லை; சில பூக்கள் அழகுள்ளவையாயிருந்தாலும் அவைகளுக்கு நறுமணம் இல்லை. ஆனால் ரோஜா மலர் அழகுள்ளதாகவும் அதே சமயத்தில் நற்கந்தம் வீசக்கூடியதாகவும் இருக்கிறது. கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்கும் நம்முடைய ஜீவியம் தனிச் சிறப்பு வாய்ந்த அழகுடையதாகவும், சுகந்த வாசனை வீசக்கூடியதாகவும், இனிமையுள்ளதாகவும் இருக்க வேண்டும். "*என் பிரியமே! நீ பூரண ரூபவதி; உன்னில் பழுதொன்றுமில்லை*"; "*ராஜஸ்திரீகள் அறுபதுபேரும், மறுமனையாட்டிகள் எண்பதுபேருமுண்டு; கன்னியருக்குத் தொகையில்லை. என் புறாவோ, என் உத்தமியோ ஒருத்தியே*" (உன். 4 : 7; 6 : 8, 9) என்று மணவாட்டியைக் குறித்து மணவாளன் கூறுகிறார்.

ரோஜா மலரைச் சுற்றிலும் எப்பக்கத்திலும் முட்கள் இருக்கின்றன. காற்று வீசும்போது, அதன் மென்மையான இதழ்கள் முட்களால் குத்தப்படுகின்றன. அதற்குப் பதிலாக ரோஜா மலர் என்னத்தைக் கொடுக்கிறது? அது சுகந்த வாசனையை அளிக்கிறது. கோணலும் மாறுபாடுமான ஜனங்கள் மத்தியில், நம்மைக் குத்திப் புண்படுத்தும் ஜனங்கள் மத்தியில், நேசிக்க முடியாத ஜனங்கள் மத்தியில்தான் நாம் ஜீவிக்கிறோம்; மன்னிக்கிற அன்பு, தயவு என்னும் நறுமணங்களினால் அவர்களுடைய ஜீவியங்களுக்கு நாம் நறுமணமூட்ட வேண்டும்.

கர்வாலி மரம் ஆயிரம் வருடங்கள் உயிர் வாழ்ந்தாலும் அதற்கு அழகுமில்லை, சுகந்த வாசனையுமில்லை. ரோஜா மலர் குறைந்த நாட்களே வாழ்ந்தாலும் அது அழகுள்ளதாக இருப்பதோடு, அருமையான வாசனையும் வீசுகிறது. நாம் எவ்வளவு நாட்கள் ஜீவிக்கிறோம் என்பது ஒரு பொருட்டல்ல. நம்முடைய ஜீவிய நாட்களெல்லாம் தெய்வீக அழகினாலும் வாசனையினாலும் நிறைந்திருக்க வேண்டும்.

கிறிஸ்தவ ஜீவியம் என்பது உலகிற்குக் கிறிஸ்துவையும் கிறிஸ்துவின் சாயலையும் வெளிப்படுத்தும் ஜீவியமாக இருப்பதால், அது மெய்யாகவே அழகு நிறைந்ததும், வாசனை வீசுவதுமான ஒரு ஜீவியமாகும். "*எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்*". ஆகவே, தேவனுடைய பிள்ளையே, கிறிஸ்து உன்னுடைய ஜீவியத்தை நிரப்புவாராக. அவரின்றி உனக்கு யாதொரு பரிசுத்தமும் அழகும் இல்லை. அவர் உன்னிலிருந்து பிரகாசிப்பாராக.

ரோஜா மலரானது ஒரு மூலையில் இருந்தாலுங்கூட வண்ணத்துப் பூச்சிகளும் தேனீக்களும் அதனைத் தேடி வருகின்றன. அது அவற்றை நாடிச் செல்ல வேண்டிய அவசியமே இல்லை. அதுபோன்றே நாம் கிறிஸ்துவின் சாயலை உடையவர்களாயிருப்போமாயின், தேவ அன்பை ருசிக்கும்படி ஆத்துமாக்கள் நம்மண்டை திரளாக வருவார்கள்.

அருமையான வாசகரே, தேவனுடைய தோட்டமாகிய சபையில் இன்று நீர் ஒரு முள்ளைப் போல் இருக்கக் கூடும். ஆயினும், நம்முடைய கிருபையுள்ள கர்த்தரால் உம்மை வாசனையும் தேனும் நிறைந்த ஒரு ரோஜா மலராக மாற்ற முடியும். அதற்கான ஒரே நிபந்தனை, நீர் மனஸ்தாபத்துடன் அவரிடம் திரும்புவது மட்டுமே!

ஆகஸ்ட் 2

கடைசி இடத்தை எடுத்துக்கொள்

"கர்த்தர் யாக்கோபின் வாசஸ்தலங்களெல்லாவற்றைப்பார்க்கிலும் சீயோனின் வாசல்களில் பிரியமாயிருக்கிறார்" (சங். 87 : 2).

'யாக்கோபின் வாசஸ்தலங்கள்' என்பது, பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களின் வாசஸ்தலங்களைக் குறிக்கிறது. பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் அனைவருடைய வாசஸ்தலங்கள் அனைத்தின் ஒன்று சேர்ந்த, ஒருங்கிணைந்த அழகைக் காட்டிலும் சீயோனின் வாசல்கள் மிகுந்த அழகுடையவை என்பது ஆச்சரியம் மிக்கதாயிருப்பினும், அது எவ்வளவு உண்மையானதாக இருக்கிறது!

ஒரு பட்டணத்தில் அதன் வாசல்களை விட அதிகப் பிரபலமான இடங்கள் பல இருக்கும். ஆயினும் இங்கு கர்த்தர் சீயோனின் "வாசல் களில்" பிரியமாயிருப்பதாக நாம் வாசிக்கிறோம். ஆவிக்குரிய பிரகாரமாக, இந்த வாசல்கள், இப்பூமியில் ஜீவிக்கையில் கடைசியான இடத்தை எடுத்துக்கொண்ட பரிசுத்தவான்களைக் குறிக்கின்றன. மெய்யாகவே, கர்த்தர் சீயோனின் வாசல்களில் அல்லது சுவிசேஷத்தின் நிமித்தமாகக் கடைசி யான இடத்தை எடுத்துக்கொள்ளுபவர்களிலேயே பிரியங்கொள்கிறார். அப். பவுல், *'பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனிலும் சிறியவனாகிய நான்'* (எபே. 3 : 8 -Eng.) என்று தன்னைக் குறித்துக் கூறுகிறார்.

எல்லாத் தேசங்களிலுமிருந்து வரும் திரள் கூட்டமான பரதேசிகள் சீயோனின் வாசல்களின் வழியாக உட்பிரவேசிக்கிறார்கள் என்று சங்கீதம் 87 : 2 -இன் ஒரு ஆங்கில மொழிபெயர்ப்பு (Amp. Bible) கூறுகிறது. பரிசுத்தவான்கள் கடைசியான இடத்தை எடுத்துக்கொண்டு கர்த்தருக்கு ஊழியம் செய்யும்போது, அவர்கள் மற்றவர்களுக்கு ஒரு பெரிய ஆசீர் வாதமாக மாறுகிறார்கள். அப்படிப்பட்ட பரிசுத்தவான்களின் ஜீவியத்தின் மூலமாகவும் ஊழியத்தின் வாயிலாகவும் அனைத்து தேசங்களினின்றும் ஜனங்கள் சத்தியத்தை நாடி தேவசமுகத்துக்கு வருவார்கள்.

தேவன் தம்மோடு கூட பூரணவடிவுள்ள சீயோனில் நித்தியமாய் வாசம்பண்ணும்படியாக, இப்பூமியில் கடைசியான இடத்தை எடுத்துக் கொண்டு அவருக்கு ஊழியஞ்செய்வதற்கென்று, *"சூரியன் உதிக்குந் திசை தொடங்கி அது அஸ்தமிக்குந் திசைவரை"*யிலுமுள்ள மாந்தரை அழைக்கி றார். என்ன ஓர் உன்னத அழைப்பு!

தீமையானவைகளினின்று ஒரு பட்டணத்தை அல்லது வீட்டைப் பாதுகாக்கும் பாதுகாவலர்களாகவுங்கூட வாசல்கள் செயல்படுகின்றன.

இந்த வாசல்களைப் போல, தேவனுடைய வீட்டை அல்லது தேவனுடைய சபையைப் பாதுகாக்கும்படியாக, கடைசி இடத்தை எடுத்துக்கொள்ள மனமுவந்திருக்கும் பரிசுத்தவான்கள் தேவனுக்குத் தேவை!

ஆகஸ்ட் 3

கர்த்தருடைய சேவையில் வைராக்கியமுள்ளவனாயிரு

"அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்" (ரோமர் 12 : 11).

கர்த்தராகிய இயேசு ஒரு முறை யாக்கோபின் கிணற்றண்டையில் ஒரு சமாரிய ஸ்திரீயுடன் பேசிக்கொண்டிருந்தார். அவரது வார்த்தை களைக் கேட்ட அவள் தன்னுடைய குடத்தை அங்கேயே வைத்துவிட்டு அவரைக் குறித்துச் சாட்சி சொல்லும்படியாக ஊருக்குள்ளே ஓடினாள். *"சாட்சி சொன்ன அந்த ஸ்திரீயினுடைய வார்த்தையினிமித்தம் அந்த ஊரிலுள்ள சமாரியரில் அநேகர் அவர்மேல் விசுவாசமுள்ளவர்களானார்கள்"* (யோவான் 4 : 39) என்பதை வாசிப்பது நம்மை எவ்வளவாக ஊக்குவிப்பதாயிருக்கிறது!

அதற்கு நேர்மாறாக, சீஷர்கள் என்ன செய்துகொண்டிருந்தார்கள் என்று பாருங்கள்! ஏறத்தாழ அந்த ஸ்திரீ ஊருக்குள் சென்றுகொண்டிருந்த அதே சமயத்தில்தான் சீஷர்களுங்கூட போஜன பதார்த்தங்களைக் கொள்ளும்படி ஊருக்குள் போய்க்கொண்டிருந்தார்கள் (வச. 7). சீஷர்கள் மற்றெவரையுங்காட்டிலும் அதிகமாய்க் கர்த்தராகிய இயேசுவுடன் கூட இருந்தபடியினால், அவர்கள் அந்த ஸ்திரீயைவிட அதிகமாக அவரைக் குறித்து அறிந்திருக்க வேண்டும். எது எப்படியாயினும், அதிக பட்சம் இந்த ஸ்திரீ கர்த்தராகிய இயேசுவை ஒரு சில மணி நேரம் மட்டுமே அறிந்திருந்தாள்; இருப்பினும் கர்த்தருடைய சேவையைக் குறித்து அவளுக்கிருந்த வைராக்கியத்தைப் பாருங்கள்! சமாரியா பட்டணத்தில் சீஷர்கள் சாட்சி கூறியதாகவோ அல்லது அங்கிருந்து யாதொரு ஆத்து மாவையும் கிறிஸ்துவின் பக்கமாகக் கொண்டுவந்ததாகவோ நாம் காண்ப தில்லை; ஆனால் இந்த ஸ்திரீயோ சமாரியரில் அநேகரை அவரண்டை கொண்டுவந்தாள். இப்பொழுதுங்கூட, பழைய (குளிர்ந்த) விசுவாசிகளைக் காட்டிலும் புதிய விசுவாசிகளே பெரும்பாலும் புதிய ஆத்துமாக்களைக் கர்த்தரண்டை கொண்டுவருவதில் அதிக பாரமுடையவர்களாகவும், கர்த்தருக்கு ஊழியஞ்செய்வதில் கவனமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள் என்பது எவ்வளவு விநோதமாக உள்ளது!

நாம் நம்முடைய தண்ணீர்க் குடங்களைக் (பூமிக்குரிய சிந்தையுள்ள ஜீவியத்தை) கர்த்தராகிய இயேசுவின் பாதத்தில் வைத்துவிட்டு, அவருக்காகக் கிரியை செய்ய வேண்டிய சமயம் இதுவே. "*கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து,* ***நீங்கள் உறுதிப் பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக***" (I கொரி. 15 : 58).

ஆகஸ்ட் 4

ஒன்றுக்கொன்று முரண்பட்ட பாடுகள்

"***ஆகாயவிரிவுக்குக் கீழே இருக்கிற ஜலத்திற்கும் ஆகாயவிரிவுக்கு மேலே இருக்கிற ஜலத்திற்கும் பிரிவுண்டாக்கினார்***" (ஆதி. 1 : 7).

தேவனாகிய கர்த்தர் ஜலத்தின் மத்தியில் ஆகாயவிரிவை வைத்ததோடல்லாமல், ஆகாயவிரிவுக்குக் கீழே இருக்கிற ஜலத்திற்கும் ஆகாயவிரிவுக்கு மேலே இருக்கிற ஜலத்திற்கும் இடையில் அவர் பிரிவுண்டாக்கியிருக்கிறார். ஜலம் உபத்திரவத்தைக் குறிக்கிறது. ஜலம் இவ்விதமாகப் பிரிக்கப்பட்டது என்பதை அறிந்துகொள்ளுதல் நமக்கு எவ்வளவு பெரிய ஆறுதலாக உள்ளது! ஏனெனில், மெய்யாகவே ஆகாயவிரிவுக்கு மேல் அதாவது உன்னத ஸ்தலங்களில் வசிக்கும் தேவபிள்ளைகள் படும் உபத்திரவங்கள், ஆகாயவிரிவுக்கு கீழே வசிக்கும் பொல்லாத ஜனங்கள் அல்லது உலக ஜனங்கள் படும் உபத்திரவங்களினின்று வித்தியாசமானவையாகும்.

பெரும்பாலும், கீழே உள்ள ஜலம் உப்பு நிறைந்ததாகவும் அதினிமித்தம் அதிக எடையுள்ளதாகவும் இருக்கையில், மேலே உள்ள ஜலத்திலிருந்து உண்டாகும் நீராவியானது (மழையை உருவாக்குபவை) நல்ல ருசியுள்ளதாகவும் எடை குறைந்ததாகவும் இருக்கிறது. எனவே அப். பவுல் நம்முடைய பாடுகளைக் குறித்து விவரிக்கையில், அவை '*ஒரு க்ஷணப்பொழுதில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம்*' (II கொரி. 4 : 17 -Eng.) என்று குறிப்பிடுவதில் ஆச்சரியமொன்றுமில்லையே! 'ஒரு க்ஷணப்பொழுது' என்று ஏன் குறிப்பிடப்பட்டுள்ளது? ஆம், நீராவியானது எந்த க்ஷணத்திலும் குளிர்ச்சியடைவதினால் மழையாகக் கீழே பொழிவதின் மூலம் மறைந்துபோகக் கூடும். மேலே இருக்கும் ஜலம் ஒரு க்ஷணப்பொழுதிற்கு மட்டுமே நிலைத்திருப்பதாயிருக்க, கீழே இருக்கும் ஜலமோ யாதொரு மாற்றமுமின்றி காலாகாலமாக நிலைத்திருக்கும். அவ்வாறே, தேவனுடைய பிள்ளைகளுக்கு (ஒன்று, கர்த்தருடைய இரகசிய வருகையிலோ அல்லது அவர்கள் தங்கள் பரம வீட்டுக்கு அழைக்கப்

படும்போதோ) அவர்களுடைய பாடுகளெல்லாம் சீக்கிரமாக முடிந்து விடும். ஆனால் பாவிகளைப் பொறுத்த வரையிலும், அவர்களுடைய பாடுகள், முடிவற்றதாயிருக்கும் சமுத்திரத்தின் தண்ணீரைப் போல, இப்பூமியில் அவர்கள் ஜீவிக்கும் காலத்திலும், மரணத்திற்குப் பின்னருங்கூட மிகவும் அதிகரித்து, அவர்களைச் சூழ்ந்து அமிழ்த்திவிடும்.

கடல் ஜலம் சேற்றையும் அழுக்கையும் கரையில் ஒதுக்கி, ஓர் அம்சத்தில் மனிதருக்குச் சாபமாக இருக்கையில், ஆகாயவிரிவில் இருக்கும் நீராவியோ மழைத்துளிகளாக மாறி, ஆசீர்வாதத்தின் மழையாக வறண்ட பூமியைக் குளிரப்பண்ணி, தாவரங்களுக்கு நீர்ப்பாசனம் அளித்து, பூமியிலுள்ள ஜீவராசிகள் அனைத்தின் தாகத்தையும் தணிக்கின்றன. ஆகவே, அருமையான தேவபிள்ளையே, 'அதிசீக்கிரத்தில்' நீங்கும் ('ஒரு க்ஷணப்பொழுது மட்டுமே நீடிக்கும்' -Eng.) இலேசான உன்னுடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உனக்கு (மற்றவர்களுக்குங்கூட) உண்டாக்குவதால், நீ திடன்கொள்வாயாக.

ஆகஸ்ட் 5

நீ எதைக் கொடுக்கிறாயோ அதையே பெற்றுக்கொள்ளுவாய்!

"***விடுதலைபண்ணுங்கள் (மன்னியுங்கள் -Eng.), அப்பொழுது நீங்களும் விடுதலைபண்ணப்படுவீர்கள் (அப்பொழுது உங்களுக்கும் மன்னிக்கப்படும் -Eng.). கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்***" (லூக்கா 6 : 37, 38).

இந்த வேதபகுதியில் நாம் காண்பது போல, மன்னித்தலும் கொடுத்தலும் பெரும்பாலும் ஒருங்கிணைந்தே செல்லுகின்றன என்பது ஆச்சரியமளிப்பதாயிருப்பினும் உண்மை அதுவேயாகும். மேலும், எப்போதாயினும் மிகவும் குறைவாக மாத்திரமே கொடுப்பவர்கள் பெரும்பாலும் மிகவும் குறைந்த அளவிலேயே மன்னிக்கிறவர்களாயும் இருக்கிறார்கள். ***நம்முடைய தேவன் திரட்சியாக மன்னிப்பதோடல்லாமல், திரட்சியாகக் கொடுக்கவும் செய்கிறார்.*** "*உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்*". அப்படியே உற்சாகமாய் மன்னிக்கிறவனிடத்திலுங்கூட அவர் பிரியமாயிருக்கிறார்.

"*கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்*" - நீங்கள் கொடுப்பது எதுவாக இருந்தாலும், அது உங்களுக்குத் திரும்பக் கொடுக்கப் படும். கொடுத்தல் என்பது விதைத்தலைப் போன்றதே. "*மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்*" (கலா. 6 : 7). நீங்கள் மற்றவர் களுக்குத் தொந்தரவு கொடுப்பீர்களாயின், உங்களுக்கும் அது கொடுக்கப் படும். ஒரு நபர் தான் விதைத்ததைக் காட்டிலும் எப்போதும் அதிக மாகவே அறுப்பான். அதைப் போலவே, மற்றவர்களுக்கு நீங்கள் எதைக் கொடுக்கிறீர்களோ அதை அதிகமாக - பன்மடங்காக - அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளக்கப்பட்ட விதத்தில் திரும்பப் பெற்றுக் கொள்ளுவீர்கள்! நீங்கள் மற்றவர்களுக்கு இரக்கத்தையோ, பகையையோ, அன்பையோ அல்லது மன்னிப்பையோ கொடுக்கலாம்; நீங்கள் எதைக் கொடுத்தாலும் அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுவீர்கள் - அதுவும் அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளக்கப்பட்டதாக அதை நிறைவாகத் திரும்பப் பெற்றுக்கொள்ளுவீர்கள்!

ஆகஸ்ட் 6

நற்சாட்சி

'***விசுவாசத்தினாலே முன்னோர்கள் நற்சாட்சி பெற்றார்கள்***' (எபி. 11 : 2).

விசுவாசமானது மாறிப்போகாத சாட்சியாக இருக்கிறது - தேவ னுடைய வசனம் உண்மையானது என்று அது நம்முடைய இருதயத்துடன் பேசுகிறது. அவிசுவாசம் எவ்விதம் ஒரு (தவறான) ஆவியாக இருக்கிறதோ, அது போலவே விசுவாசமும் ஒரு (சரியான) ஆவியாக இருக்கிறது. விசுவாசத்தின் ஆவி, தேவன் நமக்காகத் திட்டமிட்டிருப்பவை களை - நம்முடைய கண் காணாதவைகளை, செவி கேட்காதவைகளை (I கொரி. 2 : 9, 10) நாம் காணும்படி நமக்கு உதவி செய்கிறது. இருப்பினும், அவிசுவாசத்தின் ஆவி, பிசாசு நமக்கென்று திட்டமிடுபவைகளை - துன்பம், குழப்பம், வியாதி, வேதனை போன்றவைகளை - காணும்படி நம்மைத் தூண்டி, நமக்குள் கலக்கத்தை உண்டுபண்ணுகிறது.

நம்முடைய ஜீவியத்தின் முடிவில் தேவன் நம்மைக் குறித்து நற்சாட்சி கொடுக்க வேண்டுமாயின், நம்முடைய ஜீவியமும் ஊழியமும் தேவனுடைய வாக்குத்தத்தங்களின் மேலுள்ள விசுவாசத்தை மட்டுமே எப்பொழுதும் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். யோசுவா, காலேப் ஆகியோருடைய விஷயத்தில் நாம் காண்பது போல, விசுவாச மானது எப்பொழுதும் ஒரு நற்சாட்சியையே கொடுக்கிறது. சிலர்

எப்போதும் 'எதிர்மறையான' அபிப்பிராயமுள்ளவர்களாக, 'எதிர்மறை யான' காரியங்களையே பேசுகின்றனர். அதன் காரணம், அவர்கள் தேவ னுடைய வசனத்தை விசுவாசியாதிருப்பதே ஆகும். அவிசுவாசமுள்ளவர் களாயிருந்த அந்த வேவுகாரர் எமோரியரின் பட்டணங்களைக் குறித்து அவை 'வானத்தையளாவும் மதிலுள்ளவைகளாய்' (உபா. 1 : 28) இருந்ததாக மிகைப்படுத்திக் கூறினர். அதைப் போலவே தேவனுடைய வசனத்தை விசுவாசியாதவர்கள் தங்களுடைய பிரச்சினைகளைப் பெரிதாக்குகின்றனர். ஆனால், அப். பவுல், "*அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம்*" (II கொரி. 4 : 17) என்று கூறுகிறார்.

அருமையான தேவபிள்ளையே, இப்பூமியில் உன்னுடைய ஜீவியத் தின் வேலை முடிந்த பின்னர், உன் ஜீவியத்தின் முடிவில் தேவதூதர்களுக்கு முன்பாகவும் மற்றவர்களுக்கு முன்பாகவும் தேவனிடமிருந்து நற்சாட்சி பெற்றுக்கொள்ள நீ விரும்புகிறாயா? அப்படியாயின், நீ விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றுக்கொள்ளும்படி தேவனுடைய வார்த்தையின் மேல் நம்பிக்கை வைத்து, அதன் அடிப்படையிலேயே கிரியை செய்ய வேண்டும்.

ஆகஸ்ட் 7

ஒரு சுத்த இருதயத்திற்கான அவசியம்

"***ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்***" (I பேதுரு 1 : 22).

நாம் நம்முடைய இருதயங்களைச் சுத்திகரிக்க வேண்டும்; ஏனெனில் அவ்விதம் சுத்திகரித்தல், தேவனுடைய சத்தியங்களுக்குக் கீழ்ப்படிய நமக்கு உதவிசெய்கிறது. நம்முடைய இருதயங்கள் எவ்வளவதிகமாகச் சுத்திகரிக்கப்படுகின்றனவோ, அவ்வளவதிகமாக நாம் சத்தியங்களுக்குக் கீழ்ப்படிகிறவர்களாயிருப்போம். அதைப் போலவே, நம்முடைய இருத யங்கள் சுத்திகரிக்கப்படாவிடில், தேவ வசனத்திலிருந்து ஆழமான சத்தியங்கள் நமக்குப் போதிக்கப்பட்டாலுங்கூட, அவைகளுக்குக் கீழ்ப் படியக்கூடிய கிருபை நமக்கிராது. சுவைமிக்க தேனை ஒரு சுத்தமில்லாத கோப்பைக்குள் நாம் ஊற்றுவோமாயின், அந்தத் தேன் கெட்டுப்போகும். ஒரு சுத்திகரிக்கப்பட்ட ஆத்துமாவினால் மட்டுமே தேவனுடைய வசனத் திலுள்ள ஆழமான சத்தியங்களை ஏற்றுக்கொள்ள முடியும். ஆகவே தான் அப். பேதுரு, "*சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்*

களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசன மாகிய கலங்கமில்லாத (சுத்தமான) ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங் கள்" (I பேதுரு 2 : 2, 3) என்று கூறுகிறார்.

அருமையான வாசகரே, தேவ வசனத்திலிருந்து ஆழமான சத்தியங் களைப் பெற்றுக்கொள்ள நீர் வாஞ்சிக்கிறீரா? அப்படியெனில், ஓர் ஆழ மான விதத்தில் உம்முடைய இருதயத்தை நீர் சுத்திகரிப்பீராக!

உமது இருதயம் சுத்தமாயிராத பட்சத்தில் உம்முடைய அன்புங்கூட சுத்தமாயிராது - "*சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்*" என்று கூறப்பட்டுள்ளதே. ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருவதற்கு அல்லது கல்வாரி அன்பினால் மற்றவர்களில் அன்பு கூருவதற்கு நமக்குச் சுத்த இருதயம் அவசியம் என்பதை இது வெளிப் படுத்துகிறது. அப். பவுல், '*சுத்தமான இருதயத்தில் பிறக்கும் அன்பைக்*' (I தீமோ. 1 : 5) குறித்துப் பேசுகிறார். ஒரு மனிதனுக்குச் சுத்த இருதயம் இல்லையெனில், அவனுடைய அன்பு தூய்மையாயிராது; அது ஒரு பொய்யான அன்பாகவே இருக்கும்.

ஆகஸ்ட் 8

வழி விலகிச் செல்லுவதின் அபாயங்கள்

"***தன் கூட்டைவிட்டு அலைகிற குருவி எப்படியிருக்கிறதோ, அப்படியே தன் ஸ்தானத்தைவிட்டு அலைகிற மனுஷனும் இருக்கிறான்***" (நீதி. 27 : 8).

நல்ல சமாரியனுடைய உவமையில் குறிப்பிடப்பட்டுள்ள மனிதன், எரிகோவுக்குப் போகும்படி எருசலேமை விட்டுப் போனதினிமித்தமே தொந்தரவுக்குள்ளானான். (சபிக்கப்பட்ட பட்டணமாகிய எரிகோ, உலகத்தைக் குறிக்கிறது. எருசலேம், தேவனுடைய வீடாகிய ஆலயம் இருந்த இட மாகும்). அதைப் போலவே, நகோமியும் அவளுடைய குடும்பத்தாரும் பெத்லகேமை விட்டு மோவாப் தேசத்துக்குச் சென்றதினிமித்தம் பல பாடு களுக்குள்ளானதாக நாம் காண்கிறோம் - அவள் தன்னுடைய புருஷனை யும் இரு குமாரரையுங்கூட இழந்தாள். ஒரு நபர் எந்த இடத்தில் இருக்க வேண்டுமென்று தேவன் அவனைக் குறித்து விரும்புகிறாரோ, அந்த இடத்தை விட்டுவிடும்போது - தேவனுடைய வழிகளை விட்டு விலகும் போது - அதற்காக அவன் செலுத்த வேண்டிய கிரயம் எவ்வளவு பெரிதாயிருக்கிறது!

தேசத்தில் உண்டான பஞ்சத்தினிமித்தம் ஒரு முறை எகிப்தில் தங்கும்படி சென்ற ஆபிரகாம், எகிப்துக்குச் சமீபமாய் வந்தபோது ஒரு மனக்கலக்கத்திற்குள்ளாகி, ஒரு பொய் சொல்லும்படி தன் மனைவிக்குக் கற்பித்தான் (ஆதி. 12 : 11 - 13). சாராள் தன்னுடைய மனைவி என்று தேசத்து ஜனங்களிடத்தில் கூறினால், அவர்கள் தன்னைக் கொன்று, சாராளை எடுத்துக்கொள்ளக் கூடும் என்று அவன் பயந்தான். அவன் தன்னைக் குறித்து மட்டுமே - தன்னுடைய சொந்த சுகநலனையும் பாதுகாப்பையும் குறித்து மட்டுமே கரிசனையுள்ளவனாயிருந்தான் (நீங்கள் உங்களைக் குறித்து மட்டுமே சிந்தையுள்ளவர்களாயிருந்தால், நீங்கள் ஏற்கனவே எகிப்தில் இருக்கிறீர்கள் என்பதே அதன் பொருளாகும்). தன்னுடைய மனைவியாகிய சாராளைப் பாதுகாப்பது அவனுடைய உத்தரவாதமா யிருந்தது. அவனோ, அதற்கு மாறாகச் சுயநலத்துடன் தன்னைத் தானே தற்காத்துக்கொள்ள விரும்பினான் - எகிப்தின் நிலைவரம் இதுவேயாகும்.

ஆபிரகாம் சாராளோடு தனக்கிருந்த உறவுமுறையை வெளிப்படுத்த அஞ்சினான். உலகத்தின் அளவுநிலைக்கு நீங்கள் இறங்கிவந்து, உலகத் தோடு இணங்கிப்போக விரும்புவீர்களாயின், கிறிஸ்துவுக்குள்ளான உங்க ளுடைய சகோதரரோடு மட்டுமல்லாது, கிறிஸ்துவுடனும் உங்களுக்கு இருக்கும் மெய்யான உறவைக் குறித்துங்கூட நீங்கள் அதிகமாக வெட்கப் படுகிறவர்களாக மாறிவிடுகிறீர்கள்.

கடைசி வரை சத்தியத்துக்கு உண்மையாக நிலைத்திருக்கக் கர்த்தர் தாமே நமக்கு உதவி செய்வாராக. அப். பவுல், 'கடைசி நாட்களில் விசுவாச துரோகம் உண்டாகும்' என்று கூறியுள்ள நாட்களில் - அநேகர் சத்தியத் திற்குத் தங்கள் செவிகளை விலக்கும் நாட்களில் - நாம் ஜீவித்துக்கொண் டிருக்கிறோம். ஆகவே நம்மைக் குறித்து நாம் எச்சரிக்கையாயிருப் போமாக. நம்மைக் காக்க வல்லவரிடத்தில் நம்மை நாமே ஒப்புக் கொடுப்போமாக. '*இப்பொழுது வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர் களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவர்*' அவரே! (யூதா 24 -Eng.).

ஆகஸ்ட் 9

உன்னுடைய இளைப்பாறுதலுக்குள் நீ எவ்விதம் பிரவேசிப்பாய்?

"***தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது; சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறாம் நாள்***

ஆயிற்று" ; "*தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, ... ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்*" (ஆதி. 1 : 31 ; 2 : 2).

தேவன் தாம் செய்கிற அல்லது உருவாக்குகிற எந்தவொரு காரியத்தையும் மீண்டும் கவனமாகச் சீர்தூக்கிப் பார்க்கிறார். நாமோ பெரும் பான்மையான சந்தர்ப்பங்களில் அப்படிச் செய்ய அக்கறைகொள்வ தில்லை. தேவன் எல்லாவற்றையும் நன்றாகச் செய்திருந்தபடியால், முடி வாக, எல்லாம் மிகவும் நன்றாகவே இருந்தது. தாம் செய்த எல்லாம் நன்றாக இருந்ததைக் கண்டபோது, அது அவருக்கு இளைப்பாறுதலைத் தந்தது. நாம் செய்த ஏதோ ஒரு காரியம் தவறானது என்பதை நாம் உணரும்போது, இயற்கையாகவே நாம் இளைப்பாறுதல் அற்றவர்களா கிறோம். மறுபக்கத்தில், நாம் எல்லாவற்றையும் சரியாகச் செய்திருந்தால், வேறெங்கும் கிடைக்காத திருப்தியையும் இளைப்பாறுதலையும் நாம் பெற்றுக்கொள்கிறோம்.

தேவன் தம்முடைய நல்ல வேலையை முடித்த பின் இளைப் பாறுதலுக்குள் பிரவேசித்தது போல, நம்முடைய ஜீவியத்தின் வேலை முடி வுறும்போது நாம் தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்போம். இந்த இளைப்பாறுதலானது முடிவே இல்லாத ஒரு விடியற்காலைக்குள் நம்மைக் கொண்டுபோய்ச் சேர்க்கும். (ஏழாம் நாளில் நாம் ஒரு சாயங்காலத்தைக் காண்பதில்லை!). நம்முடைய ஜீவியமுங்கூட ஒரு விடியற்காலத்தில் முடிவுற வேண்டுமேயன்றி, மாலையில் முடிவுறக் கூடாது. அதாவது நம்முடைய ஜீவியம் மகிழ்ச்சியில் முடிவுற வேண்டும் - "*விடியற்காலத்திலே களிப்புண்டாகும்*". காலை நேரம் புத்துணர்ச்சி அளிப் பதாகவும், இன்பமளிப்பதாகவும் இருக்கிறது. நாம் பரலோகத்திலுள்ள நம்முடைய இளைப்பாறுதலுக்குப் புதிய ஜீவனோடும் மகிழ்ச்சியோடும் செல்ல வேண்டுமேயன்றி, துக்கத்தோடும் களைப்போடும், எலியாவைப் போல '*போதும்*' என்கிற சத்தத்தோடும் செல்லக் கூடாது. தேவனைப் போல, முழுமையான திருப்தியோடும் பூரணத்தின் சந்தோஷத்தோடும் பரலோகத்தில் இளைப்பாறும்படி நாம் செல்ல வேண்டும்.

நாம் நம்முடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கும்போது நம்முடைய ஜீவிய காலத்தில் நாம் செய்திருந்த கிரியைகள் நமக்கு முழுமையான திருப்தியையும் இளைப்பாறுதலையும் கொடுக்க வேண்டும். நம்முடைய கர்த்தர் தாமே நம்மிடத்தில், "*நல்லது, உத்தமமும் உண்மையு முள்ள ஊழியக்காரனே, ... உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி*" என்று கூறக்கூடிய நிலையில் நாம் காணப்படுவோமாக.

ஆகஸ்ட் 10

பாவத்திற்கு விலக்கிக் 'காக்கப்படுதல்'

"இவள் தன் சகோதரி என்று அவன் என்னோடே சொல்லவில்லையா? அவன் தன் சகோதரன் என்று இவளும் சொன்னாளே; உத்தம இருதயத்தோடும் சுத்தமான கைகளோடும் இதைச் செய்தேன் என்று சொன்னான். அப்பொழுது தேவன்: உத்தம இருதயத்தோடே நீ இதைச் செய்தாய் என்று நான் அறிந்திருக்கிறேன்; நீ எனக்கு விரோதமாகப் பாவம் செய்யாதபடிக்கு உன்னைத் தடுத்தேன்; ஆகையால், நீ அவளைத் தொட நான் உனக்கு இடங்கொடுக்கவில்லை" (ஆதி. 20 : 5, 6).

அபிமெலேக்கு புறஜாதியைச் சேர்ந்த ஒரு ராஜாவாகத்தான் இருந்தான். ஆபிரகாமுக்கு இருந்தது போல மகிமையின் தேவனைக் குறித்த தரிசனம் அவனுக்கு இருக்கவில்லை; இருப்பினும் அவனில் அதிகமான தேவபயம் இருந்தது. தான் எடுத்துக்கொண்ட ஸ்திரீ ஒருவனுடைய மனைவி என்பதை அபிமெலேக்கு அறிந்துகொண்ட போது, அவனும் அவனுடைய ஜனங்களும் "மிகவும் பயந்தார்கள்" என்று 8-ஆம் வசனத்தில் நாம் வாசிக்கிறோம்.

கர்த்தர் தாமே அவனுடைய 'இருதயத்தின் உத்தமத்தைக்' குறித்து சாட்சி கொடுக்கிறார். அபிமெலேக்கு தன்னுடைய வழிகளில் உண்மையும் உத்தமமுமுள்ளவனாயிருந்தபடியால், அவன் தமக்கு விரோதமாகப் பாவம் செய்யாதபடிக்குக் கர்த்தர் அவனைக் 'காத்தார்'. பெரிதானதோர் ஆவிக் குரிய உண்மையை நாம் இங்கு காண்கிறோம். நாம் செய்கிற எல்லாக் காரியங்களிலேயும் நாம் தேவனுக்கு முன்பாக உண்மையும் உத்தமமும் உள்ளவர்களாயிருப்போமாயின், அவருக்குப் பிரியமில்லாத காரியங்களைச் செய்ய நாம் பயப்படுவோமாயின், அறியாமையினால் பாவத்துக்குள் விழுந்துவிடாதபடி அவர் நம்மைக் காப்பார். "*அவர் தமது பரிசுத்தவான் களின் பாதங்களைக் காப்பார்*".

பத்சேபாளுடைய விஷயத்தில், தாவீது கபடற்றவனாயும் உத்தம முள்ளவனாயும் செயல்படவில்லை. ஆகவே அவன் முழுமையான பாவத் துக்குள் விழுந்தான். அவன் அதைப் பின்பு உணர்ந்துகொண்டு, "*தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்*"; "*மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்க லாக்கும். ... அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும்பாதகத்துக்கு நீங்கலா யிருப்பேன்*" (சங். 51 : 10 ; 19 : 12, 13) என்று ஜெபிக்கிறான்.

ஆகவே தேவனுடைய பிள்ளையே, நீ எதைச் செய்தாலும், அதை 'உத்தம இருதயத்தோடே' செய்வாயாக. நீ செய்யும் யாதொரு காரியத்திலும் உன்னுடைய இருதயம் உன்னைக் குற்றவாளியாகத் தீர்க்காதிருக்கட்டும்.

'*தீமையை விட்டு விலகுவதே கர்த்தருக்குப் பயப்படும் பயம்*'.

ஆகஸ்ட் 11

பயத்திற்கு நீங்கலாயிருப்பது எப்படி?

"***அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல***" (I யோவான் 4 : 18).

ஒரு மனிதன் பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளாதவனாயிருப்பானென்றால், அவன் தனக்குள் அறிக்கை செய்யப்படாத ஏதேனும் ஒரு பாவமுள்ளவனாயிருப்பானென்றால், அவனுடைய இருதயத்தில் பயம் குடிகொண்டிருக்கும். ஆதாம் தேவனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்த போது பயத்தினால் நிரப்பப்பட்டான். '*நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு பயந்தேன்*' (ஆதி. 3 : 10) என்று அவன் கூறுகிறான். உங்களுடைய ஜீவியத்தில் அறிக்கை செய்யப்படாத பாவம் இருக்கும் வரை, பயம் உங்களுக்குள் பதுங்கியிருக்கும். பயம் பல விதங்களில் தன்னை வெளிப்படுத்தக் கூடும்; எனினும், இருதயத்தில் மறைந்திருக்கும் ஏதோ ஒரு அசுத்தமே அவையெல்லாவற்றிற்கும் காரணமாகும்.

I யோவான் 4 : 18 -இல், "*பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்*" என்று நாம் வாசிக்கிறோம். இந்தப் பூரண அன்பே கல்வாரி அன்பாகும். இவ்வுலகத்திலுள்ள பாவங்கள் அனைத்திலும் மிகப் பெரிய பாவம் எது என்று உங்களுக்குத் தெரியுமா? அது, தேவனுடைய மிகப் பெரிதான கற்பனையாகிய, "*உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக*" (மத். 22 : 37, 38) என்னும் கற்பனையை மீறுவதே ஆகும். ஆகவே தேவனை நம்முடைய முழு இருதயத்தோடும் நேசியாதிருத்தலே மிகப் பெரிய பாவமாகும். அருமையான தேவபிள்ளையே, தேவனை முழு இருதயத்தோடும் நேசித்தலே மனிதனுடைய பிரச்சினைகளெல்லாவற்றுக்கும் நிவாரணம் ஆகும்.

நாம் கர்த்தராகிய இயேசுவுக்காகக் கொண்டிருக்கும் அன்பை எவ்விதம் அளக்கக் கூடும்? நம்முடைய மிக மோசமான சத்துருவை நாம் எந்த அளவுக்கு நேசிக்கிறோமோ, அந்த அளவுக்கு மட்டுமே நாம் நம்முடைய ஆண்டவராகிய இயேசுவை நேசிக்கிறோம். இந்தச் சத்தியத்தைக் குறித்து நாம் மத்தேயு 25-ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். கடைசியான அல்லது மிகவும் சிறியவனான ஒரு நபருக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதைக் கர்த்தராகிய இயேசுவுக்கே செய்தீர்கள். '*நீங்கள் என்னை வெறுத்தீர்கள். அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள்*' என்று கர்த்தராகிய இயேசு நியாயத்தீர்ப்பு நாளன்று, தங்களை நோக்கிக் கூறுவதைக் கேட்டு சிலர் அதிர்ச்சியுறுவார்கள்.

அன்பான வாசகரே, உம்முடைய எல்லாப் பாவங்களோடும் நீர் கர்த்தராகிய இயேசுவிடம் செல்லுவீராக. கல்வாரி அன்பு உம் பாவங்களனைத்தையும் மன்னித்து, உமக்காக எல்லா வாசல்களையும் திறக்கும். உம்முடைய பிரச்சினை எதுவாயிருந்தாலும், கல்வாரி அன்பு எல்லாப் பயங்களையும் மேற்கொள்ளும். கல்வாரியில் கர்த்தராகிய இயேசு மரண பயத்தைப் பரிகரித்து ஜீவனை வெளியரங்கமாக்கினார்.

ஆகஸ்ட் 12

எல்லைக்கோட்டின் மீது வசித்தல்

"***துர்இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்***" (ரோமர் 13 : 14).

ஒரு முறை ஒரு தாயார் விநோதமான ஒரு பிரச்சினையைச் சந்தித்தார்கள். ஒவ்வொரு நாள் இரவும் அவர்கள் தன்னுடைய சிறிய பையனைப் படுக்கையின் மையப்பகுதியில் படுக்க வைத்து, அவனை உறங்க வைப்பது வழக்கம். ஆனால் நள்ளிரவு நேரத்தில் சிறுவன் 'தொப்' என்ற சத்தத்தோடு கீழே விழுவான். தாயார் எழுந்து சென்று அவனைத் தூக்கி மறுபடியுமாகப் படுக்கையின் மையப்பகுதியில் படுக்கவைப்பார்கள். ஆனால் திரும்பவும் சற்று நேரம் கழித்து சிறுவன் தரையிலே விழுந்து கிடப்பான். முடிவாக, ஒரு நாள் தாயார் அந்தப் பிள்ளையை விழிப்புடன் கவனித்துக்கொண்டேயிருந்து, அந்தச் சிறுவனுடைய பிரச்சினை என்ன என்பதைக் கண்டறிந்துகொண்டார்கள். படுக்கையின் ஓரம் வரைக்கும் உருண்டு வந்து, அதன் விளிம்பைப் பிடித்துக்கொண்டு உறங்குவதே அவனுடைய வழக்கமாயிருந்தது.

இது நம்முடைய பிரச்சினையாகவுங்கூட இருக்கலாம். ஏறத்தாழ பாவத்தின் அல்லது லௌகீகத்தின் எல்லைக்கோட்டிற்கு மிக அருகாமையில் சென்று, அவற்றிற்கடுத்த அநேக காரியங்களை நாம் செய்கிறோம். 'அதைப் பார்ப்பதில் என்ன தவறு இருக்கிறது? அங்கு செல்லுவதில் என்ன **தீ**மை இருக்கிறது? அதைச் செய்யக் கூடாது என்று வேதாகமத்தில் எங்கே கூறப்பட்டுள்ளது?' என்று நாம் கேட்கக் கூடும். இப்படி கேட்பதற்குப் பதிலாக, 'அதிலிருந்து நான் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆதாயம் என்ன?' என்பதே நம்முடைய கேள்வியாக இருக்க வேண்டும். ஒரு காரியத்தின் மூலம் நாம் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆவிக்குரிய ஆதாயம் ஏதும் இல்லையென்றால், அதில் நிச்சயமாகவே ஏதோ ஒரு **தீ**ங்கு இருக்க வேண்டும்.

நாம் மாம்சீகத்திற்கு இடமளிக்கத்தக்கதாக உடலைப் பேணாமலிருப்போமாக. நம்முடைய ஜீவியத்தில் நாம் அனுமதிக்கும் காரியங்களெல்லாம் தேவ சித்தத்தின் மையத்திலுள்ளவை என்ற நிச்சயமுடையவர்களாக நாம் எப்போதும் காணப்படுவோமாக.

"*பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்*" (I தெச. 5 : 22). லௌகீகத்தின் விளிம்பு வரை செல்வதற்குச் சாதகமாக சில காரணங்களைக் கண்டுபிடித்துவைத்துக் கொண்டு, கிறிஸ்தவ ஜீவியத்தின் முடிவான எல்லைக்கோட்டின் மேல் ஜீவிப்பது - லௌகீகத்தின் மீது நாட்டமுள்ளவர்களாய் ஜீவிப்பது அபாயகரமானதாகும். '*கர்த்த ராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுதல்*' என்பது கிறிஸ்துவை வெளிப்படுத்துவதாகும். நாம் செய்கிற ஒவ்வொரு காரியத்திலும் நாம் கிறிஸ்துவை வெளிப்படுத்த வேண்டும்.

ஆகஸ்ட் 13

மன்னிப்பதில் உள்ள ஆசீர்வாதம்

'***கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான். உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; நீ சந்தோஷமாயிருப்பாய்; உனக்கு நன்மை உண்டாயிருக்கும்***' (சங். 128 : 1, 2 -Eng.).

"*கர்த்தருக்குப் பயந்து*" - தேவபயமும் மன்னிப்பும் ஒருங்கிணைந்தே செல்லுகின்றன. "*உமக்குப் **பயப்படும்படிக்கு** உம்மிடத்தில் மன்னிப்பு உண்டு*" (சங். 130 : 4).

"*அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ*" - நம்மால் மற்றவர்களை மன்னிக்க முடியாத பட்சத்தில் நாம் தேவபயத்தை இழக்கிறோம்.

அவருடைய வழிகளில் நடப்பதற்குப் பதிலாக நாம் நம்முடைய சொந்த வழிகளில் நடக்க ஆரம்பிக்கிறோம். யாராவது ஒரு நபரை உங்களால் மன்னிக்க முடியாது என்றோ அல்லது அவரை நீங்கள் மன்னிக்க விரும்பவில்லை என்றோ கூறுவீர்களாயின் உங்களுடைய மனது ஏற்கனவே உங்கள் சொந்த வழிகளிலேயே ஸ்திரப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதையே அது காட்டுகிறது. '*பின்வாங்கும் இருதயமுள்ளவன், தன் வழிகளிலே திருப்தியடைவான் (தன் சொந்த வழிகளால் நிறைந்திருப்பான் -Eng.)*' (நீதி. 14 : 14). மன்னியாமல் இருப்பதற்கு உங்களுக்கு அநேக காரணங்களும் சாக்குப்போக்குகளும் இருக்கக் கூடும்; இருப்பினும், "*மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்*" (வச. 12) என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

"*உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்*" - இது, மற்றவர்களை மன்னிப்பதில் அடங்கியுள்ள ஓர் ஆசீர்வாதமாகும். நீங்கள் மன்னிக்க மறுப்பீர்களாயின், மற்றவர்கள் உங்கள் கைகளின் பிரயாசத்தைச் சாப்பிடுவார்கள்.

'*உனக்குச் சந்தோஷம் உண்டாயிருக்கும்*' - ஆம், மன்னிக்கிற ஜனங்கள் எப்போதுமே சந்தோஷமுள்ளவர்களாயிருப்பர். 'மகிழ்ச்சியான மணவாழ்க்கை என்பது, மன்னிக்கும் தன்மையுடைய இருவரின் ஐக்கியம் ஆகும்' என்று ஒருவர் கூறியிருக்கிறார். அது மிகச் சரியானதொரு கூற்றாகும். மன்னிக்க முடியாத நபர்கள் எப்போதும் சந்தோஷமற்றவர்களாகவே இருப்பார்கள்.

'*உனக்கு நன்மை உண்டாயிருக்கும்*' - ஒரு நபர் மற்றவர்களை மன்னிக்க முடியாதவராயிருப்பாராயின், அதிகமான இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, இருதய நோய், புற்றுநோய், மற்றும் பிற வியாதிகள் அவரை வாதிக்கக் கூடும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

"*கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்*". மற்றவர்களை மன்னித்தலுங்கூட ஞானத்தின் ஆரம்பமேயாகும்.

ஆகஸ்ட் 14

'பகலின் குளிர்ச்சியான வேளையிலே'

"***பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள்***" (ஆதி. 3 : 8).

மனிதன் பாவஞ்செய்திருந்தபோதிலும், அவன் பேரில் தேவன் கொண்டிருந்த அன்பு சற்றும் மாறவில்லை. அவர் மனிதனை நேசித் திருக்கவில்லையெனில், அவனைச் சந்திக்கும்படி அவர் மறுபடியுமாகத் தோட்டத்துக்கு வந்திருக்கமாட்டார். அவனைத் தண்டித்துத் தோட்டத்துக்கு வெளியே அனுப்புவது மட்டுமே அவரது நோக்கமாக இருந்திருக்கு மென்றால், ஒரே ஒரு தூதனை அனுப்பி அவர் அந்த வேலையை மிக இலகுவாகச் செய்து முடித்திருக்கக் கூடும்.

இங்கு "உலாவுகிற" என்னும் வார்த்தையானது மூலபாஷையில், 'வழக்கமான முறையில் உலாவுதல்' என்று பொருள்படுகிறது. ஆகவே தேவன் ஏதேன் தோட்டத்தில் தம்முடைய பிள்ளைகளை எப்போதும் போல வழக்கமான முறையில்தான் சந்திக்கும்படி வந்தார். நம்முடைய பிள்ளைகள் ஏதாகிலும் குறும்பு செய்வார்களாயின் அவர்களைத் தண்டிக்கும்படி நாம் பெரும்பாலும் ஆத்திரத்துடன் விரைவது போல, அவர் பறந்தோ அல்லது ஓடியோ போகவில்லை. அவர் நமக்கு எவ்வளவு அருமையானதொரு முன்மாதிரியை வைத்திருக்கிறார்!

"*பகலில் குளிர்ச்சியான வேளையிலே*" - 'குளிர்ச்சி' என்பது 'காற்று' என்றும் பொருள்படும். ஆம், தோட்டத்தில் தேவன் உலாவியபோது, ஒரு குளிர்ந்த காற்று வீசியிருக்கக் கூடும். தேவன் தம்மோடு ஒரு குளிர்ந்த காற்றைக் கொண்டுவருகிறார். பாவம் மனிதனை இளைப்பாறுதலற்ற வனாக்குகிறது. ஆகவே அவனுக்கு ஆறுதல் தேவையாயிருக்கிறது. மனிதனுடைய துயரத்தில் அவனை ஆறுதல்படுத்தும்படியாகவே தேவன் "பகலில் குளிர்ச்சியான வேளையிலே" வந்திருக்கக் கூடும்.

யாராகிலும் ஒருவர் தவறு செய்து, அதற்காக அந்நபர் கண்டித் துணர்த்தப்பட அல்லது தண்டிக்கப்பட வேண்டுமென்றால், நீங்கள் அவரோடு செயல்படுமுன்னதாக, உங்களுடைய இருதயத்தில் கோபம் அல்லது வெறுப்பின் ஒரு சுவடாகிலும் காணப்படுகிறதா என்று பரிசோதித்துப் பாருங்கள். நாம் நம்முடைய கோபக் கனலில் எந்தவொரு காரியத்தையும் செய்யாதிருப்போமாக. தேவன் யாதொன்றையும் ஆத்திர மாகச் செய்வதில்லை. ஆகவே நாமும் எதையும் அவ்விதம் செய்யக் கூடாது.

தவறான நேரத்தில் பேசப்பட்ட ஒரு சரியான வார்த்தை தவறானது; தவறான நேரத்தில் அல்லது தவறான விதத்தில் செய்யப்பட்ட ஒரு சரியான காரியமும் தவறானதே.

ஆகஸ்ட் 15

வனாந்தரத்தின் பாடல்

'இதோ, நான் அவளுக்கு நயங்காட்டி, அவளை வனாந்தரத்தில் அழைத்துக் கொண்டுபோய், அவளோடே பட்சமாய்ப் பேசுவேன்' (ஓசியா 2 : 14).

பாலும் தேனும் ஓடுகிற ஒரு தேசத்தைப் பற்றிய வெளிப் படுத்தலுடனேயே நாம் கர்த்தரைப் பின்பற்றத் துவங்குகிறோம். ஆனால் திடீரென வறண்டதும் விடாய்த்ததுமான ஒரு நிலத்தில் நாம் இருப்பதாக உணருகிறோம். இஸ்ரவேலர் ஆவலோடு சிவந்த சமுத்திரத்தைக் கடந்தது, அச்சமயத்தில் ஒரு பரந்து விரிந்துகிடந்த பாழ்நிலத்தில் அடியெடுத்து வைப்பதற்காக மட்டுமே இருந்தது. நாம் தண்ணீர் ஞானஸ்நானத்தில் நம்முடைய கர்த்தரோடு ஓர் உடன்படிக்கைக்குள் பிரவேசித்த பின்னர், நாம் ஒரு வனாந்தரப் பிரயாணத்தைத் துவக்குகிறோம்.

வனாந்தரத்தில்தான் கர்த்தர் நம்மோடு பேசுகிறார். ஓசியா 2 : 14 -இல் கூறப்பட்டுள்ள 'பட்சமாய்' என்னும் பதத்திற்கு ஆங்கில வேதாகமத்தின் ஓரக்குறிப்பில் 'இருதயத்தோடு' என்று கொடுக்கப்பட்டுள்ளது. கர்த்தர் ஏன் நம் இருதயத்தோடு பேச விரும்புகிறார்? அவர் நம்மை எவ்வளவாக நேசிக்கிறார் என்பதை நமக்குக் காண்பிக்கவும், அவருடைய அன்பினால் நம்முடைய இருதயங்களைக் கொழுந்துவிட்டு எரியச்செய்யவுமே அவர் நம்முடைய இருதயத்தோடு பேச விரும்புகிறார். கர்த்தர் நம்முடைய இருதயத்தில் பேசுவதைக் காட்டிலும் நம்முடைய செவிகளில் பேச வேண்டுமென்றே நம்மில் அநேகர் விரும்புகிறோம்.

'*அவள் அங்கே, தன் இளவயதின் நாட்களில் தான் பாடினதுபோல் பாடுவாள்*' (ஓசியா 2 : 15). வனாந்தரப் பிரயாணத்தில் மிகக் கடுமையான வெப்பத்திலிருந்தும் குளிரிலிருந்தும் நீங்கள் பாதுகாக்கப்படும்படி மேக ஸ்தம்பம், அக்கினி ஸ்தம்பம் ஆகியவற்றின் வடிவில் உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஆச்சரியமான பாதுகாவலையும், தினந்தோறும் தப்பாமல் உங்களுக்கு விநியோகிக்கப்படும் மன்னாவையும் தண்ணீரையும் நீங்கள் பார்ப்பீர்களென்றால், உங்கள் கால்கள் வீங்காமலும், பாதரட்சைகள் தேய்ந்து போகாமலும், வஸ்திரங்கள் பழையவையாய்ப் போகாமலும் கர்த்தர் காப்பதையும், தேள்களும் சர்ப்பங்களும் உங்களைத் தீண்டாதபடி அவைகளுக்கு அவர் கட்டளை கொடுத்திருப்பதையும் நீங்கள் கவனிப்பீர்களென்றால் ... உங்களால் பாடாமல் இருக்க முடியாது. நாம் பாடுகிறோம், ஆம், வனாந்தரத்தில் நாம் பாடுகிறோம் - அது ஒரு

புலம்பற்பாடல் அல்ல, அது ஒரு ஸ்தோத்திரப் பாடல்! நாம் அபரிமிதமான சந்தோஷத்தை அனுபவித்து, 'தன் இளவயதின் நாட்களில்' இருக்கும் ஒரு கன்னிகையைப் போல பாடுகிறோம். ஆகவே, நம்முடைய வனாந்தரத்தை ஒரு வறட்சியான, பஞ்சம் நிறைந்த இடமாக அல்ல, அதைக் களிப்பு மிக்க ஒரு இடமாக மாற்றிக்கொள்வது நம்மைச் சார்ந்ததாயிருக்கிறது.

இவ்வாறாக, வனாந்தரத்தினூடாகப் பிரயாணம் செய்யும்போது - கர்த்தருக்கும் நமக்கும் இடையில் ஓர் ஆழமான நெருங்கிய ஐக்கியம் உண்டாகிறது; நமக்கு வேண்டியதெல்லாம் அவர் மட்டுமே என்ற முடிவுக்கு நாம் வருகிறோம். நம்முடைய நேசரின் மார்பில் சார்ந்து கொண்டு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் கரையை நெருங்குகையில், "*பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை*" என்று நாம் பாடிக்கொண்டிருப்போம்.

ஆகஸ்ட் 16

எப்படிப் பேசுவது?

"***ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம்***" (நீதி. 25 : 11).

"*இளைப்படைந்தவனுக்குச் சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல நான் அறியும்படிக்கு, கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் கல்விமானின் நாவைத் தந்தருளினார்*" (ஏசாயா 50 : 4). கர்த்தராகிய இயேசுவுக்குக் '*கல்விமானின் நாவு*' இருந்தது. ஆகவே '*அவருடைய வாயிலிருந்து கிருபையுள்ள வார்த்தைகள் புறப்பட்டன*'. அவரைக் குறித்து ஜனங்கள், "*அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை*" என்றும், "*இவர் கல்லாதவராயிருந்தும் வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார்*" என்றும் கூறியதாக நாம் வாசிக்கிறோம் (யோவான் 7 : 46, 15). உண்மையில், மற்ற மனுஷர் கல்விகற்பது போல நம்முடைய கர்த்தர் ஒருபோதும் கற்கவில்லை. எனவேதான் அவர் ஒருபோதும் மற்ற மனுஷர் பேசியது போல பேசவில்லை!

அநேக தேவபிள்ளைகள் தாங்கள் என்ன பேச வேண்டும் என்பதை அறிந்திருக்கிறார்கள்; ஆனால் வெகு சிலரே *எப்படிப்* பேச வேண்டும் என்பதை அறிந்திருக்கிறார்கள். அன்பான வார்த்தைகள் அல்லது ஊக்குவிக்கும் வார்த்தைகள் கடினமான தோரணையில் பேசப்

படுமாயின், அது அதைரியத்தையும் கசப்பையும் உண்டாக்கக் கூடும். கர்த்தராகிய இயேசு எப்படிப் பேச வேண்டுமென்பதை அறிந்திருந்தார்.

சமாரிய ஸ்திரீ தன்னுடைய துர்நடத்தையை அல்லது பாவங்களை ஒத்துக்கொள்ளக்கூடிய மனநிலையில் இருக்கவில்லை; "எனக்குப் புருஷன் இல்லை" என்று கர்த்தராகிய இயேசுவிடம் ஒரு முழுப் பொய்யைக் கூறி, அவள் எல்லாவற்றையும் மூடிமறைத்துவிடப் பிரயாசப்பட்டாள். கர்த்தர் அவளைக் குற்றப்படுத்துவதற்கு அல்லது ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்ப தற்குப் பதிலாக, மிகவும் ஞானமாக, "*ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல, **இதை உள்ளபடி சொன்னாய்***" (யோவான் 4 : 17,18) என்று பதிலளித்தார். இப்படிக் கூறுவ தற்குப் பதிலாக, அவர் அவளிடம், 'நீ கூறுவது ஒரு பொய். நான் ஒரு தீர்க்கதரிசி. உனக்கு ஐந்து புருஷர்கள் இருந்தார்கள் என்று எனக்குத் தெரியும்' என்று கூறியிருந்திருப்பாரென்றால், அவர் கூறியது நியாய மானது, சரியானது என்று மற்றவர்கள் அதைக் குறித்து சாட்சி கொடுத் திருந்தாலும், அந்த ஸ்திரீயின் ஜீவியம் மாற்றமடைந்திராது. "***ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை*** *வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற் பழங்களுக்குச் சமானம்*" (நீதி. 25 : 11).

"***சமயத்திற்கேற்ற*** *வார்த்தை சொல்ல*", எப்படிப் பேசவேண்டுமென்று மட்டுமல்லாமல், *எப்போது* பேச வேண்டும் என்றும் நாம் அறிந்திருக்க வேண்டும். யூதாஸ்காரியோத்து சீஷர்களுடன் கூட இருந்தபோது, மகிமை யான காரியங்களை அவர்களிடத்தில் பேசலாகாது என்பதில் கர்த்தராகிய இயேசு கவனமாக இருந்தார். "***அவன் புறப்பட்டுப்போனபின்பு இயேசு:*** *இப்பொழுது மனுஷகுமாரன் மகிமைப்படுகிறார்*" என்று கூறி (யோவான் 13 : 31), மறைக்கப்பட்ட மகிமையான வேறு பல சத்தியங்களையும் அவர்களுக்கு வெளிப்படுத்தினார். ஏற்ற சமயத்தில் நாம் பேசாமலி ருந்ததினிமித்தம் எத்தனை பிரச்சினைகள் முளைத்தெழும்பியிருக்கின்றன! "*ஏற்றகாலத்தில் சொன்ன வார்த்தை எவ்வளவு நல்லது!*" (நீதி. 15 : 23).

'கவலையீனமான ஒரு வார்த்தை சண்டையைக் கிளப்பிவிடக் கூடும்; கொடூரமான ஒரு வார்த்தை ஒரு வாழ்க்கையையே பாழாக்கிவிடக் கூடும்; கசப்பான ஒரு வார்த்தை வெறுப்பை உட்புகுத்திவிடக் கூடும்; மிருகத்தனமான ஒரு வார்த்தை அடித்துக் கொல்லக் கூடும்;

கிருபையுள்ள ஒரு வார்த்தை பாதையை இலகுவாக்கக் கூடும்; சந்தோஷமான ஒரு வார்த்தை ஒரு நாளை வெளிச்சமாக்கக் கூடும்; ஏற்ற சமயத்தில் சொல்லப்பட்ட ஒரு வார்த்தை பாரத்தைக் குறைக்கக் கூடும்; அன்புள்ள ஒரு வார்த்தை சுகமும் ஆசீர்வாதமும் அளிக்கக் கூடும்.'

ஆகஸ்ட் 17

நற்கிரியைகளும் அற்புதக் கிரியைகளும்

"*மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது*" (மத். 5 : 16).

சீஷர்கள் தங்கள் விடுதலையின் ஊழியத்தை நிறைவேற்றி முடித்துக் கர்த்தராகிய இயேசுவிடம் திரும்பி வந்தபோது, அவர் அவர்களை நோக்கி, "*ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள்*" (லூக்கா 10 : 20) என்று கூறவில்லையா? நம்முடைய ஊழியத்தைக் காட்டிலும் நம்முடைய ஜீவியத்திலேயே கர்த்தர் அதிக ஆர்வமுள்ளவராயிருக்கிறார். ஆகவே ஒரு மாசற்ற ஜீவியத்துக்கு நாம் முதலாவது முக்கியத்துவம் கொடுப்போமாக. நாம் ஓர் ஆழ்ந்த துக்கத்தோடு நம்முடைய பரிசுத்தமாக்கப்படாத நிலைவரத்தினின்று மனந்திரும்பி, அதினின்று விடுதலையாக்கப்படுவோமாக. நாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தை உபயோகித்து ஜனங்களுக்கு ஊழியஞ்செய்யும்முன், முதலாவது நம்மை நாமே சுத்திகரித்துக்கொள்ள வேண்டும்.

அநேகர் கர்த்தரை நோக்கி, "*கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே ... அநேக **அற்புதங்களைச்** செய்தோம் அல்லவா?*" என்பார்கள். ஆனால் கர்த்தர் அவர்களிடம் என்ன கூறுவார்? "*நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை*" (மத். 7 : 22, 23). ஆனால் வேறொரு இடத்தில் கர்த்தர், "*மனுஷர் உங்கள் **நற்கிரியைகளைக்** கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது*" (மத். 5 : 16) என்று கூறுகிறார். ஆகவே பிதாவின் நாமத்தை மகிமைப்படுத்துபவையாயிராமற்போகக் கூடிய அற்புதக் கிரியைகளால் நாம் பிரகாசிப்பதைக் காட்டிலும், நம்முடைய நற்கிரியைகளின் மூலம் நாம் பிரகாசிக்க வேண்டும் என்றே கர்த்தராகிய இயேசு நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். நற்கிரியைகள் பரிசுத்த ஆவியின் கனியாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகிய சுபாவங்களோடு சம்பந்தப்பட்டவையாயிருக்க, அற்புதக் கிரியைகளோ, விசுவாசத்தின் வரம், குணமாக்கும் வரங்கள், பிசாசுகளைத் துரத்துதல், அற்புதங்களைச் செய்யும் சக்தி போன்ற பரிசுத்த ஆவியின் வரங்களோடும் வல்லமையோடும் சம்பந்தப்பட்டவையாயிருக்கின்றன.

நம்முடைய நற்கிரியைகளின் மூலம் வெளிப்படுத்தப்படும் நம்முடைய நற்சுபாவமே அற்புதக் கிரியைகளை உள்ளடக்கிய நம்முடைய வரங்களைக் காட்டிலும் அதிக முக்கியமானதாகும்.

ஆகஸ்ட் 18

அக்கினி! அக்கினி!

"*அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்*" (மாற்கு 9 : 44).

கொரியா தேசத்தைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவப் பெண்மணி ஒருமுறை ஒரு தரிசனம் கண்டாள். அதில் அவள் நரகத்தைச் சுற்றிப் பார்க்கும்படி தான் அங்கு எடுத்துச்செல்லப்படுவதாகக் கண்டாள். அவள் நின்று நரகத்தினுள் உற்று நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தபோது, தன்னுடைய சொந்தத் தாயார் அங்கு அக்கினியில் எரிந்துகொண்டிருப்பதைக் கண்டு, பெரும் அதிர்ச்சிக்குள்ளானாள். தன்னுடைய மகள் தூரத்தில் நிற்பதைக் கண்ட தாயார், நரக அக்கினியை விட்டு தன்னை வெளியே கொண்டுவர அவள் ஏதாவது முயற்சி எடுக்க வேண்டும், அல்லது குறைந்தபட்சம், கொழுந்துவிட்டு எரிகிற **தீ**யினின்று சற்று நேரத்திற்காகிலும் தன்னை விடுவிக்க வேண்டும் என்று பரிதாபமான குரலில் கெஞ்ச ஆரம்பித்தார்கள். மகள் அழ ஆரம்பித்தாள்; ஏனெனில் எந்தக் காலத்திலும் யாதொரு காரணத்தை முன்னிட்டும் நரகத்திலுள்ள எந்தவொரு நபரையும் வெளியே கொண்டுவர இயலாது என்பதை அவள் மிகவும் நன்றாக அறிந்திருந்தாள்.

அந்தக் கிறிஸ்தவப் பெண்மணி கண்ட தரிசனம் மெய்யாகவே அவளை அசைத்துவிட்டது. கிறிஸ்துவுக்கென்று ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி, தன்னுடைய தாயார் கடந்து சென்றுகொண்டிருந்த பயங்கரமான வேதனையிலிருந்து ஆத்துமாக்களைத் தப்புவிக்க தன்னால் இயன்ற எல்லாவற்றையும் தேவகிருபையினால் செய்யும்படி அவள் **தீ**ர்மானித்தாள். முதலாவது தன்னுடைய புருஷனையும், பின்பு தன்னுடைய பிள்ளைகளையும் இன்னும் அநேகரையும் அவள் இரட்சிப்புக்கு நேராக வழிநடத்தினாள்.

அழிந்துபோகிற ஆத்துமாக்களைக் குறித்து உனக்கு மனதுருக்கம் உண்டா? ஆக்கினைக்குள்ளாகத் **தீ**ர்க்கப்பட்ட ஆத்துமாக்கள் நித்தியம் முழுவதும் விவரிக்க இயலாத நரக அக்கினியில் பாடுபடப் போகிறார்கள் என்பதை நீ உணருகிறாயா? அழிந்துகொண்டிருக்கும் இலட்சக்கணக்கான ஆத்துமாக்களை இரட்சிப்புக்கு நேராக வழிநடத்தும்படி மறுபடியும்

பிறந்த ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஓர் அர்ப்பணிக்கப்பட்ட சுவிசேஷ ஊழியனாகத் திகழ்வானாக.

ஆகஸ்ட் 19

கர்த்தருடைய அன்பின் அடையாளம்

"***கர்த்தர் அவனை நோக்கி: காயீனைக் கொல்லுகிற எவன் மேலும் ஏழு பழி சுமரும் என்று சொல்லி; காயீனைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் அவனைக் கொன்றுபோடாதபடிக்குக் கர்த்தர் அவன்மேல் ஒரு அடையாளத்தைப் போட்டார்***" (ஆதி. 4 : 15).

காயீனுக்கு இருந்த பயம் ஒரு தேவையற்ற பயம் என்பது வெளிப் படையானதாக இருந்தபோதிலும், கர்த்தர் அவன் மேல் மிகவும் கிருபை யுள்ளவராயிருந்து, அவனைப் பாதுகாக்கும் வகையில் அவனுக்காகச் செய்யக்கூடிய எல்லாவற்றையும் செய்தார். தேவனுடைய இந்த அற்புத அன்பைக் காணும்படி பாவிகள் கண்திறக்கப்பட்டவர்களாயிருந்தால் எவ்வளவு நலமாயிருக்கும்!

கர்த்தர் காயீனைச் சமாதானப்படுத்தி, அவனுக்கிருந்த பயம் ஆதார மற்றது என்று அவனிடம் கூறியிருந்திருக்கலாம். ஆனால் காயீன் ஒரு பாவியாயிருந்ததினிமித்தம் இது அவனைத் திருப்திப்படுத்தியிருந்திருக்க முடியாது. ஆகவே தேவன் அவனைக் கொல்லுகிற எவன் மேலும் ஏழு மடங்கு பழி சுமத்தப்படும் என வாக்குப்பண்ணினார்; அவன் இன்னமும் தமக்கு ஏழுமடங்கு விலையேறப்பெற்றவன் என்பதை இதன் மூலம் அவர் அவனுக்குக் காண்பித்தார். ஆகவே, தேவனுடைய பிள்ளையே, கர்த்த ருடைய பார்வையில் விலையேறப்பெற்றவனாயிருப்பதினின்று நீ தவறி விட்டாய் என்று ஒரு க்ஷணப்பொழுதாகிலும் ஒருக்காலும் நீ எண்ணாதே. நீ செய்திருக்கிற எல்லாத் தவறுகளின் மத்தியிலும், அவருடைய சித்தத் தின் பாதையிலிருந்து வழிதவறிய உன் சகல நடக்கைகளின் மத்தியிலுங் கூட அவர் இன்னும் உன்னை நேசிக்கிறார். ஆகவே, அவரோடு ஒரு நெருங்கிய உறவு உனக்கு இல்லையென்று நீ உணருவாயானால், இப்பொழுதே அவரைக் கிட்டிச் சேருவாயாக.

தேவனுடைய சொந்தக் கரங்களே காயீன் மேல் அடையாளம் போட்டன. அந்த அடையாளமானது, ஒரு பாவியை எல்லாவித பயத்தி னின்றும் கவலையினின்றும் பாதுகாக்கும்படி பாவியின்பேரில் அவர் கொண்டிருக்கும் அநாதி சிநேகத்தின் அடையாளமாக இருந்தது. ஒரு பாவி ஆபத்தினின்றும் பயத்தினின்றும் பாதுகாக்கப்பட இவ்விதமாக அடையாளம் போடப்பட்டிருப்பானென்றால், அற்ப விசுவாசமுள்ள

தேவபிள்ளையே, உன்னுடைய பாதுகாப்புக்காகவும் க்ஷேமத்துக்காகவும் தேவன் உன் மேல் ஓர் அடையாளத்தைப் போடுவார் என்பது எவ்வளவு அதிக நிச்சயம்!

காயீனைக் கண்ட ஒவ்வொருவராலும், தேவன் அவன் மேல் கொண்டிருந்த அன்பின் அடையாளத்தைக் காணக் கூடியதாயிருந்தது. நமக்கு விரோதமாகப் பாவஞ்செய்து நம்மைத் துக்கப்படுத்துகிறவர்கள் மேல் நாம் அப்படிப்பட்ட அன்பு, கரிசனை போன்றவற்றின் அடையாளங் களைப் போடுகிறோமா? நாம் அவர்களை உண்மையாக நேசிக்கிறோம் என்பதையும், நாம் அவர்களைத் தள்ளிவிடவோ அல்லது புறக்கணித்து விடவோ இல்லை என்பதையும் மற்றவர்களால் காண முடிகிறதா?

ஆகஸ்ட் 20

பாவ சிந்தனைகள் மிகவும் அபாயகரமானவை

'***மனுஷனுடைய இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்று கர்த்தர் கண்டார்***' (ஆதி. 6 : 5).

அநேக உண்மையான கிறிஸ்தவர்களுங்கூட பாவ சிந்தனைகள் அபாயகரமான பாவங்கள் அல்ல என்று எண்ணுவது போல் தோன்றுகிறது. தாங்கள் பாவக் கிரியைகளைச் செய்யாத பட்சத்தில், பாவ சிந்தனைகளை உடையவர்களாயிருப்பதில் தவறொன்றுமில்லை என்று அவர்கள் நினைத்துக்கொள்ளுகிறார்கள்.

அதைக் குறித்துக் கர்த்தராகிய இயேசு கூறியிருப்பதைப் பாருங்கள்: "*மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து* ***பொல்லாத சிந்தனைகளும்,*** *விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண் ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும்*" (மாற்கு 7 : 21, 22). இங்கு கொடுக்கப்பட்டுள்ள பட்டியலில் விபசாரங்கள், வேசித்தனங்கள் ஆகியவற்றிற்கும் முன்னே, பொல்லாத சிந்தனை களைத்தான் கர்த்தர் முதலாவதாக வைக்கிறார்!

நம்முடைய மனதைத் **தீ**ய சிந்தனைகள் **தீ**ட்டுப்படுத்த நாம் இடமளிப்பதற்கான முக்கியமான ஒரு காரணம், நாம் பொல்லாத சிந்தனை களை மிகவும் கடுமையான பாவங்களாகக் காணாதிருப்பதே ஆகும்.

தேவன் தம்முடைய இரக்கத்தினிமித்தமாக, தம்முடைய தண்டனை களையும் நியாயத்**தீ**ர்ப்புகளையும் மனிதர்மேல் செலுத்தத் தாமதிக்கிறார்

என்பது உண்மையாயிருந்தாலும், பாவ சிந்தனைகளுக்கு அளிக்கப்படும் தேவனுடைய பெரிய நியாயத்தீர்ப்பை நாம் அறிவோமானால், அது நம்மை நடுங்கச் செய்யும். அவற்றுக்கான அவருடைய நியாயத்தீர்ப்பு, இருபது வருடக் கடுங்காவலைக் காட்டிலும் மோசமானதாயிருக்கும். தேவனுடைய முதல் நியாயத்தீர்ப்பு (வெள்ளப்பெருக்கு) பூமியின்மேல் வந்ததற்கான காரணம், '*மனிதனின் இருதயத்து* ***நினைவுகளின்*** *தோற்ற மெல்லாம் நித்தமும்* ***பொல்லாததாக***' (ஆதி. 6 : 5) இருந்ததேயாகும். அக்காலத்தில், யாதொரு சபையோ, வேதாகமமோ, வேத போதகர்களோ, தேவ ஊழியரோ இருக்கவில்லை என்பதை நினைவிற்கொள்ளுங்கள். மேலும், அச்சமயத்தில் பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு அருளப் பட்டிருக்கவில்லை; கர்த்தராகிய இயேசுவும் சிலுவையில் அறையப் பட்டிருக்கவில்லை. ஆயினும் ***பொல்லாத சிந்தனைகள்*** மிகக் கடுமையாக நியாயந்தீர்க்கப்பட்டன. கிருபையின் காலத்தில் வசிக்கும் நாம் பயத்தோடும் நடுக்கத்தோடும் நம்முடைய இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்பட வேண்டும். ஏனெனில் முந்தின காலங்களில் இருந்ததைப் பார்க்கிலும், இக்காலத்தில் தேவ நியாயத்தீர்ப்பு கடுமையானதாக இருக்கும்.

ஆகவே, தேவபிள்ளையே, பரிசுத்த ஆவியானவர் உனக்கு உடனடி யாக உதவிசெய்யும்படி அவரிடம் கேட்பாயாக. தீமையான எண்ணங் களையும் கற்பனைகளையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் சிறைப்படுத்த உனக்கு உதவிசெய்யும்படி நீ அவரிடம் மன்றாடுவாயாக.

ஆகஸ்ட் 21

கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தின் மூலம் உண்டாகும் சமாதானம்

'***அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கினார்***' (கொலோ. 1 : 20).

மேற்காணும் வேதவசனத்தில், 'சமாதானத்தைக் கொடுத்தார்' என்று அல்ல, 'சமாதானத்தை உண்டாக்கினார்' என்று குறிப்பிடப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். சமாதானத்தை உண்டாக்குவதற்கும் சமாதானத்தைக் கொடுப்பதற்கும் இடையே மிகப் பெரியதொரு வித்தியாசம் இருக்கிறது. ஒருவருக்கு ஒரு விலையுயர்ந்த மின்னணுக் கைக்கடிகாரத்தை நீங்கள் கொடுக்கிறீர்கள் என வைத்துக்கொள்ளுவோம். அது இருநூறு டாலர்கள் விலைமதிப்புள்ளதாக இருக்கக் கூடும். ஆனால் அக்கடிகாரத்தை நீங்களே உண்டாக்கி அவருக்குக் கொடுத்தீர்கள் என்று வைத்துக்கொள்ளுவோம்.

மின்னணுப் பொறியியலைக் கற்றுத் தேறும்படி அக்கல்விக்காக நீங்கள் உங்கள் ஆஸ்தியையே செலவழித்திருப்பீர்கள்; அப்படிப்பில் உங்களுடைய பெரும்பாலான சமயமுங்கூட செலவழிக்கப்பட்டிருக்கும்! அல்லாமலும், அக்கடிகாரத்தைச் செய்தவர் நீங்களேயாதலால், அதில் ஏதாவது பழுது ஏற்படுமாயின், உங்களால் அதைப் பழுதுபார்க்கவும் முடியும். '*இரத்தத்தி னாலே சமாதானத்தை உண்டாக்கினார்*' என்பது, கர்த்தராகிய இயேசுவே சமாதான காரணர், சமாதானப் பிரபு என்று பொருள்படும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் அவ்வளவு தனித்தன்மை வாய்ந்ததாயிருக் கிறது. நாம் கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டிருப்பதினால் தேவ சமாதானத்தை எப்பொழுதும் அனுபவிக்கலாம். "*சமாதானத்தின் கர்த்தராமே எப்பொழுதும் சகலவிதத்திலும் உங்களுக்குச் சமாதானத்தைத் தந்தருளுவாராக*" (II தெச. 3 : 16).

பூரண சமாதானத்தின் இரகசியத்தை இலட்சக்கணக்கான ஜனங்கள் இன்னும் அறியாதவர்களாயிருக்கிறார்கள். ஐசுவரியம், பேர், புகழ் போன்ற வையும், மற்றும் நண்பர்களும் தங்களுக்குச் சமாதானத்தைக் கொடுக்கக் கூடும் என்று அநேகர் நினைக்கிறார்கள்; முடிவில் அவர்கள் ***சமா தானத்தின் இரகசியத்தைக்*** கண்டடையாமல், சலிப்பும் ஏமாற்றமும் அடைகிறார்கள்.

அருமையான வாசகரே, நாம் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தி னால் முழுமையாகக் கழுவப்பட்டிருப்போமாயின், எப்போதுமே பூரண மான, குலைக்கப்பட முடியாத மனச்சமாதானம் உடையவர்களாயிருப்போம். நம்மைச் சுற்றிலும் புறம்பே என்ன சம்பவிக்கிறது என்பது ஒரு பொருட் டல்ல, நம் மனதிற்குள்ளே என்ன சம்பவித்திருக்கிறது என்பதே காரியம்!

ஆகஸ்ட் 22

சிங்கத்தை ஜெயிப்பீர்!

"***கர்த்தருடைய ஆவி அவன்மேல் பலமாய் இறங்கினதினால், ... அதை ஒரு ஆட்டுக்குட்டியைக் கிழித்துப்போடுகிறதுபோல் கிழித்துப் போட்டான்***" (நியா. 14 : 6).

ஒருமுறை சிம்சோனுக்கு எதிராக ஒரு பால சிங்கம் வந்தது. நாம் சந்தித்துக்கொண்டிருக்கிற கொச்சிக்கிற சிங்கம், சிங்கத்தைப் போன்ற ஒரு மனிதனாகவோ, பிரச்சினையாகவோ, அல்லது சூழ்நிலையாகவோ இருக்கக் கூடும். ஆனால் நாம் திடன்கொள்ளுவோமாக. ஏனெனில், கானான் தேசத்தில் தாங்கள் கண்ட இராட்சதரைப் போன்ற ஜனங்களைக்

குறித்துக் காலேப் கூறியது போல, "*அவர்கள் நமக்கு இரையாவார்கள்; ... கர்த்தர் நம்மோடே இருக்கிறார்*" (எண். 14 : 9).

தேவன் சிம்சோனோடு கூட இருந்தார்; அதனால் ஒரு ஆட்டுக் குட்டியைக் கொன்றுபோடுவது போல சிங்கத்தைக் கொன்றுபோட அவனால் முடிந்தது. தேவன் நம்மோடு கூட இருக்கையில், நாம் சந்திக்கிற சிங்கம் ஒரு ஆட்டுக்குட்டியேயன்றி வேறொன்றுமல்ல. ஆனால், தேவன் நம்மோடு கூட இராவிட்டால், ஒரு ஆட்டுக்குட்டி கூட நமக்கு ஒரு சிங்கத்தைப் போல பயங்கரமானதாகத் தோன்றும். தாவீது இளைஞனா யிருக்கையில், ஒரு சிங்கம் அவனுக்கு விரோதமாக எழும்பிற்று. ஆனால் அவன் அதைக் கொன்றுபோட்டான். இந்த நவீன உலகத்தில், வாலிபர் தங்கள் மாம்சத்தில் சிங்கத்தைப் போன்ற சோதனைகளைச் சந்திக்கிறார்கள்; ஆனால் அவர்களில் பலரும் அவைகளை ஜெயிப்பதற்குப் பதிலாக அவைகளால் ஜெயிக்கப்படுகிறார்கள்.

சிம்சோன் தன்னுடைய முதலாவது சோதனையில் பெற்ற வெற்றி, அவனது விசுவாசத்தை அதிகமாகப் பெலப்படுத்திற்று. 'நீங்கள் பெற்றுக் கொள்ளும் ஒவ்வொரு வெற்றியும் மற்றொரு வெற்றிக்கு வழிநடத்தும்' என்று ஒரு தேவமனிதன் கூறியிருக்கிறார். நாம் சந்திக்கும் பெரிய சோதனைகள், நம்முடைய விசுவாசத்தை மிகவும் அதிகமாகப் பெலப் படுத்தி, நம்மைத் தேவனுடைய பார்வையில் பெரியவர்களாக மாற்றும் நோக்குடையவையாயிருக்கின்றன. சோதனைகள் நம்மைக் கீழே இழுக்கும் படியாக அல்ல, தேவ மகிமைக்கென்று நம்மை இன்னும் ஒரு படி உயர்த்தும்படியாகவே அனுப்பப்படுகின்றன.

அன்பான வாசகரே, நம்மிலுள்ள பரிசுத்த ஆவியின் அபிஷேகத் தின் மூலமாக, நம்முடைய ஜீவியத்தில் நாம் சந்திக்கிற சிங்கம் போன்ற ஒரு நபரை, பிரச்சினையை, அல்லது சூழ்நிலையை நாம் மேற்கொள்ளு வோமாக. கர்த்தர் நம்மோடிருக்கிறார் என்பதை நாம் மறவாதிருப்போமாக.

ஆகஸ்ட் 23

ஒருவரையொருவர் தைரியப்படுத்துங்கள்

"மேலும், சகோதரரே, நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறதென்ன வென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள், திடனற்ற வர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்" (I தெச. 5 : 14).

மோசே செய்த கடைசி ஊழியம் தைரியப்படுத்துகிற ஊழியமா யிருந்தது. கர்த்தர் அவனிடம், 'நீ போய் யோசுவாவைத் திடப்படுத்து' என்று கூறினார். அதற்குப் பின்னரே கர்த்தர் மோசேயை மகிமைக்குள் எடுத்துக்கொண்டார். அது போன்றே, கர்த்தராகிய இயேசுவின் கடைசி ஊழியமும் தைரியப்படுத்தும் ஊழியமாயிருந்தது. மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பிய கள்ளனை நோக்கி அவர், "இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய்" என்று கூறினார். அது அந்தக் கள்ளனுக்கு எப்படிப்பட்ட தைரியத்தை அளித்திருக்கும்! தேவ வசனத்தைக் கொண்டு நாம் மற்றவர்களைத் தைரியப்படுத்துவோமாக.

அப். பவுலின் கடைசி ஊழியங்களில் ஒன்றைப் பாருங்கள்! அவர் பயணம் செய்த கப்பல் ஒரு பெருங்காற்று மழையில் சிக்கிக்கொண்டது. அவர்களுக்கு இரவும் பகலும் பதினான்கு நாட்களாக வெளிச்சம் இருக்க வில்லை; சூரியனாவது சந்திரனாவது நட்சத்திரங்களாவது காணப்பட வில்லை; ஒருவராலும் ஆகாரம் புசிக்க முடியவில்லை; எல்லாருமே அதைரியப்பட்டுப்போயிருந்தார்கள். ஆனால் நம்பிக்கையற்ற அந்த வேளையில், அப். பவுல் எல்லாருக்கும் முன்பாக எழுந்து நின்றார். அவர் களை நோக்கி அவர், "*திடமனதாயிருங்களென்று இப்பொழுது உங்களுக் குத் தைரியஞ்சொல்லுகிறேன்*" என்றும், '*என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவன் இந்த இராத்திரியிலே என்னிடத்தில் வந்துநின்றான்*' என்றும் கூறினார். தேவன் தன் பட்சத்தி லிருக்கிறார் என்பதை அறிந்திருந்தபடியால் அவர் மற்றவர்களைத் தைரியப்படுத்தக்கூடியவராயிருந்தார். தேவபிள்ளையே, தேவன் உன் னுடைய பட்சத்திலிருக்கிறார் என்பதை நீ அறிந்திருக்கிறாயா? அப்படி யாயின், உன்னால் மற்றவர்களைத் தைரியப்படுத்தக் கூடும்.

மற்றவர்களை ஊக்குவிக்கும் ஊழியத்தைக் கர்த்தர் உனக்குத் தந்திருக்கிறார். விசுவாசத்தின் வார்த்தைகளைப் பேசுவாயாக. கானான் தேசத்தை வேவுபார்க்கச் சென்ற பன்னிருவரில் பத்துப் பேர் செய்தது போல, உன்னுடைய இயற்கையான கண்களால் நீ காண்பதைப் பேசி மற்றவர்களை அதைரியப்படுத்த வேண்டாம். நம்மைக் குறித்து ஒருக் காலும் ஒருமுறையாகிலும், '*நம்முடைய சகோதரர் நம்முடைய இருதயத்தை அதைரியப்படுத்தினார்கள் அல்லது கரைந்து போகப்பண்ணினார்கள்!*' என்று சொல்லப்பட வேண்டாம். விசுவாசத்தின் வார்த்தைகளைச் சொல்லி ஜனங்களை ஊக்குவித்த மற்ற இருவரான யோசுவாவையும் காலேபையும் போல நாம் மற்றவர்களிடம், "*நாம் அதை எளிதாய் ஜெயித்துக் கொள்ளலாம்*" என்று சொல்லுவோமாக.

ஆகஸ்ட் 24

சர்வபூமியின் சர்வ ரோக நிவாரணி

"வெட்டாந்தரையில் உண்டான எல்லாவற்றிலும் நாசியிலே ஜீவசுவாச முள்ளவைகள் எல்லாம் மாண்டுபோயின" (ஆதி. 7 : 22).

நோவாவின் பேழைக்கு வெளியே இருந்த ஏராளமான ஜனங்கள் தண்ணீருக்கு மேலே தங்களை உயர்த்தி, தண்ணீரை விட்டு வெளியே வரும்படி தத்தளித்துப் பிரயாசப்பட்டிருந்திருக்கக் கூடும். ஆனால் எவ்வள வதிகமாக அவர்கள் முயற்சித்திருந்திருப்பார்களோ, அவ்வளவதிகமாகத் தண்ணீருக்குள் அமிழ்ந்துபோயிருந்திருப்பார்கள். இன்றைக்கும் அநேகர் தங்கள் சொந்த முயற்சிகளினால் தங்களை உயர்த்திக்கொள்ள அல்லது காப்பாற்றிக்கொள்ளப் பிரயாசப்படுகிறார்கள். ஆனால் முடிவில் 'பயங் கரமான குழி', 'உளையான சேறு' ஆகியவற்றின் ஆழங்களில் தாங்கள் சிக்கிக்கொண்டிருப்பதாக அவர்கள் கண்டுகொள்ளுகிறார்கள்.

"*என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது*" (யோவான் 15 : 5) என்று கர்த்தராகிய இயேசு கூறியிருக்கிறார். வாழ்க்கையின் பிரச் சினைகளுக்கெல்லாம் கர்த்தராகிய இயேசுவே சர்வலோகத்தின் சர்வ ரோக நிவாரணியாக இருக்கிறார். மெய்யானதும் நிலைத்திருக்கக்கூடியதுமான சமாதானம், சந்தோஷம், இளைப்பாறுதல் ஆகியவற்றின் ஒரே ஊற்று அவர் மாத்திரமே! நண்பனே, உன்னுடைய பாவங்களிலிருந்தும், வியாதி களிலிருந்தும், உன்னை அமிழ்த்திக்கொண்டிருக்கிற பாரங்களிலிருந்தும், அதிகரித்துக்கொண்டிருப்பது போல் தோன்றும் உன்னுடைய பிரச்சினை களிலிருந்தும் நீ விடுதலையாக்கப்பட வேண்டுமா? பேழைக்குள்ளே வா. "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத். 11 : 28) என அவர் உன்னைப் பரிவுடன் அழைக்கிறார்.

கர்த்தராகிய இயேசு அழைக்கும்போதே நீ அவரிடம் வருவாயாக. அதிக தாமதமாகுமுன் நீ வா. '*நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தார்*' (I பேதுரு 3 : 20); கதவு அடைக்கப்பட்ட பின் தட்டிக்கொண்டிருந்தவர்களுக்கு, இனி காப்பாற்றப்படுவதற்கு வழியின்றி அதிக தாமதமாகிவிட்டது. அன்பான வாசகரே, நீர் இப்போது கிருபையின் காலத்தில் இருக்கிறீர். கிருபையின் வாசல் வெகுவிரைவில் அடைக்கப்படும். "*கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்*" (ஏசாயா 55 : 6).

ஆகஸ்ட் 25

தடைகள்

"இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான்" (லூக்கா 19 : 3).

சகேயு என்பவன் ஆயக்காரருக்குத் தலைவனாயிருந்தான். அவன் கர்த்தராகிய இயேசு எப்படிப்பட்டவரோ என்று அறிந்துகொள்ளவும் அவரைப் பார்க்கவும் வகைதேடினான் (லூக்கா 19 : 2, 3). அநேகர் கர்த்த ராகிய இயேசுவை உலகப் பிரகாரமான நன்மைகளுக்காகத் தேடினாலும், அவரை அறிந்துகொள்ள கிஞ்சித்தேனும் ஆர்வமற்றவர்களாயிருக்கின் றனர். கர்த்தராகிய இயேசுவை அறிந்துகொள்ளுதல் என்பது அவரது ஜீவியத்தையும் சுபாவத்தையும் அறிந்துகொள்ளுதல் ஆகும்.

கர்த்தராகிய இயேசுவைக் காண வேண்டுமென்று சகேயுவில் ஒரு பெரிய வாஞ்சை இருந்தபோதிலுங்கூட, அவரைச் சுற்றிலுமிருந்த திரளான ஜனக்கூட்டம் அவனுக்குத் தடையாக இருந்தது. இது இன்றைக்குங்கூட உண்மையானதாகவே இருக்கிறது. கர்த்தராகிய இயேசுவையும் சத்தியத் தையும் தேடிக்கொண்டிருக்கும் உண்மையான ஆத்துமாக்கள் இருக்கி றார்கள்; ஆனால் அந்தோ பரிதாபம்! கர்த்தராகிய இயேசுவுக்கும் சபைக்கும் தாங்கள் மிகவும் நெருங்கியிருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் தேவபிள்ளைகள் என்று அழைக்கப்படுகிற சிலர், அவரை அறிந்து கொள்வதினின்று அப்படிப்பட்ட ஆத்துமாக்களைத் தடைசெய்கின்றனர். கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்ளும் தேவ பிள்ளைகள் பலரும் கிறிஸ்துவைப் போன்ற ஜீவியம் செய்வதில்லை. இதினிமித்த மாக, சகேயுவைப் போன்ற உண்மையான ஆத்துமாக்கள் இடறுகிறார்கள் அல்லது கர்த்தராகிய இயேசுவிடம் நெருங்கி வருவதினின்று தடை செய்யப்படுகிறார்கள்.

சகேயு குள்ளனாயிருந்தது, அவன் கர்த்தராகிய இயேசுவைப் பார்ப்பதற்கு மற்றுமொரு தடையாயிருந்தது. அநேகர் நீண்ட நாட்களாகத் தேவனுடைய பிள்ளைகளாக இருந்தாலுங்கூட ஆவிக்குரிய பிரகாரமாகக் குள்ளர்களாக இருக்கின்றனர். ஆவிக்குரிய வளர்ச்சியில் குன்றியிருத்தல் நாம் கர்த்தராகிய இயேசுவைக் காண்பதற்கும், அறிந்துகொள்வதற்கும் குறுக்கே தடையாக நிற்கிறது. இதினிமித்தமாகவே, "*கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும்*" (எபே. 4 : 11) வளரும்படி நாம் அறிவுறுத்தப்படுகிறோம்.

நாம் கர்த்தராகிய இயேசுவைக் காண்பதற்கும், அவரை அறிந்து கொள்வதற்கும் மற்ற தேவபிள்ளைகளோ (கர்த்தராகிய இயேசுவைச் சுற்றி லுமிருந்த ஜனக்கூட்டம்), நம்முடைய சொந்த ஜீவியத்தின் ஆவிக்குரிய வளர்ச்சியில் நாம் குன்றியிருப்பதோ தடையாக இராதபடி நாம் கவனமா யிருப்போமாக. சகேயுவைப் போல, கர்த்தராகிய இயேசுவைக் காணும்படி யாக தேவ ஊழியரின் (காட்டத்தி மரம்) உதவியை நாடி, நாம் நம்முடைய பிரச்சினைகளுக்கு மேலாக எழும்புவோமாக.

ஆகஸ்ட் 26

உன்னுடைய பரம அழைப்பை உறுதிப்படுத்திக்கொள்

"***இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்***" (எபி. 3 : 1).

நமக்கு ஒரு பரம அழைப்பு இருக்கிறது; நாம் ஒரு பரிசுத்த ஜீவியம் செய்ய வேண்டியது அவசியம். ஆகவே நாம் அறிக்கை பண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப் பார்க்க வேண்டுமேயன்றி, நம்முடைய குடும்பங் களிலிருந்து வருகிற எதிர்ப்புகளையும், நம்முடைய சுற்றுப்புறங்களிலுள்ள பிரச்சினைகளையும், நம்முடைய பரம அழைப்பை அழித்துப்போடும்படி பிசாசானவன் கொண்டுவருகிற மற்ற காரியங்களையும் கவனித்துப் பார்க்கக் கூடாது. எத்தனை உபயோகமுள்ள, ஆசீர்வதிக்கப்பட்ட தேவ ஊழியர்களில் அவர்களுடைய மேன்மையான அழைப்பைக் குறித்த சந்தேகங்களைக் கொண்டுவந்து சத்துரு அவர்களைத் தாக்கியிருக்கிறான்!

சிம்சோனுக்கு எதிராக வந்த சத்துருவின் தாக்குதல் அவனுடைய மேன்மையான அழைப்புக்கு விரோதமான தாக்குதலாக இருந்தது. தான் பெலிஸ்தரை அழிக்கும்படியாகத் தேவனால் எழுப்பப்பட்டவன் என்பதை அவன் மிகவும் நன்றாக அறிந்திருந்தான். ஆயினும், தன்னுடைய மகா மேன்மையான அழைப்பை அசட்டைபண்ணி, அவன் இச்சைக்கு இடங்கொடுத்து, ஒரு பெலிஸ்தியப் பெண்ணை நேசித்தான். அவளோ அவனைக் காட்டிக்கொடுத்துவிட்டாள். அவன் எப்படி துக்ககரமான விதத்தில் தன்னுடைய மேன்மையும் உன்னதமுமான அழைப்பை இழந்து, பெலிஸ்தரோடு கூட மடிந்துபோனான்!

சீயோனுக்கென்றும் புதிய எருசலேமுக்கென்றும் அழைக்கப்பட்ட பலரும் தங்கள் தரிசனத்தை இழந்து, இந்த உலகத்தில் பரிதாபகரமாக மடிவது எவ்வளவு துக்ககரமான காரியம்! சோதனை வேளைகளில் உங்களுடைய மேன்மையான அழைப்பை மறந்துபோக வேண்டாம். அப். பவுலோடு கூட சேர்ந்து நீங்களும், "*அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், ... நான் கர்த்தராகிய இயேசு வினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்*" (அப். 20 : 24) என்று சொல்லுவீர்களாக.

தேவபிள்ளையே, உன்னுடைய ஜீவியத்தைக் குறித்த தேவனுடைய மேன்மையான அழைப்பை நீ ஒருபோதும் சந்தேகிக்காதே. "*உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையா யிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை*" (II பேதுரு 1 : 10).

ஆகஸ்ட் 27

ஜெப அறையில்!

"***உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்***" (சங். 91 : 1).

வேதாகமத்தில் 'மறைவான இடம்' என்பது ஏழு முறை குறிப் பிடப்பட்டுள்ளது. இந்த மறைவான இடம் யாது? அது நம்முடைய ஜெப அறையே ஆகும். நீங்கள் நீண்ட நேரம் தேவனோடு தனிமையாக இருக்க விருப்பமற்றவர்களாயிருப்பீர்களாயின், அதன் பொருள் நீங்கள் மறைவான இடத்தில் ஜீவிக்கிறவர்களல்ல என்பதேயாகும். நாம் சரீரத்தில் களைப் புற்றிருந்தால் நம்மால் ஜெபத்தில் அதிக நேரம் செலவழிக்க முடியாது என்பது மெய்யே. ஆனால், மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுமாப்போல் நாம் தேவசமுகத்திற்காக ஏங்க வேண்டும். ஒரு அர்த்தத் தில், இந்த மறைவான இடம் தேவனுடைய இருதயமாகும். ஜெப ஜீவியம் என்பது தேவனுடைய இருதயத்தில் தங்கியிருத்தலாகும். தேவனுடைய இருதயத்தில் வாசம்பண்ணுவதிலுள்ள ஆசீர்வாதத்தையும் சந்தோஷத் தையும் நீங்கள் ஒருமுறை அனுபவித்துவிட்டால், ஜெபத்தை நிறுத்தவே உங்களுக்கு மனமிராது.

மோசே தேவசமுகத்துக்கு, மலை உச்சிக்குச் சென்றான். அங்கு சம்பவித்தது என்ன? மோசே தேவனோடு பேசினதைக் காட்டிலும் தேவன்

மோசேயோடு அதிகமாகப் பேசினார். நாம் தேவனுடைய இருதயத்தில் ஜீவிப்போமென்றால், நாம் தேவனிடத்தில் பேசுவதைக் காட்டிலும் அவர் நம்மோடு அதிகமாகப் பேசுவார்.

நம்முடைய சபையின் ஸ்தாபகரான பாஸ்டர் பால் அவர்கள் இந்தியாவிலிருந்த சகோதரர் ஒருவருக்கு ஒரு அஞ்சல் அட்டையை அனுப்பினார்; அதில் பின்வருமாறு எழுதியிருந்தது: 'நீங்கள் ஊழியத்தில் எதையுமே செய்ய வேண்டியதில்லை. தேவ சமுகத்தில் மட்டும் தொடர்ந்து அமர்ந்திருந்து, தேவன் உங்களைச் செய்யச் சொல்லுகிறதை மட்டும் செய்யுங்கள்!'

நம்முடைய ஜெப ஜீவியமானது, எந்தவொரு சத்துருவும் உட்புக முடியாத ஒரு பலத்த கோட்டையைப் போன்றது. நமக்கு ஒரு நல்ல ஜெப ஜீவியம் இருக்குமாயின், 91-ஆம் சங்கீதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'இரவில் உண்டாகும் பயங்கரம்', 'பகலில் பறக்கும் அம்பு', 'இருளில் நடமாடும் கொள்ளைநோய்', 'மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரம்' ஆகியவை நமதருகில்கூட நெருங்கி வர முடியாது. ஒருவன் மிகவும் பெலவீனமான ஒரு பரிசுத்தவானாயிருப்பினும், அவன் தன்னுடைய முழங்கால்களில் நிற்பதைக் காணும்போது, பிசாசானவன் நடுங்குகிறான். இப்படியிருக்க, தங்கள் ஜெப ஜீவியத்தைப் பாதுகாத்துக்கொள்ளும் போது தங்களுக்கு எவ்வளவு பெரிய பாதுகாப்பு இருக்கிறது என்பதை அநேக கிறிஸ்தவர்கள் அறியாதிருப்பது எவ்வளவு துக்ககரமானது!

ஆகஸ்ட் 28

நம்முடைய உடன்படிக்கையின் மூலம் கிடைக்கும் பெலன்

"*மறக்கப்படாத நித்திய உடன்படிக்கையினால் நாம் கர்த்தரைச் சேர்ந்துகொள்வோம் வாருங்கள்*" (எரே. 50 : 5).

நாம் நம்முடைய தேவனோடு செய்துகொள்ளும் உடன்படிக்கை களில் உறுதியாயிருப்பதே நம்முடைய வழியில் உள்ள ஒவ்வொரு சத்துருவையும் தடையையும் மேற்கொண்டு, நாம் நம்முடைய ஆவிக் குரிய ஜீவியத்தில் முன்னேறிச் செல்ல நமக்கு உள்ளான பெலனை அளிக்கிறது. சிம்சோன் தன்னுடைய பிரதிஷ்டையைக் காத்துக்கொண்ட வரை ஒரு பராக்கிரமசாலியாக இருந்தான்; ஒருவனும் அவனுக்கு எதிர்த்து நிற்க முடியவில்லை. ஆனால் அவன் அதை நஷ்டப்படுத்தின க்ஷணத்திலேயே ஒரு சாதாரண மனிதனானான்; வெகு விரைவில் அவன் தன்னுடைய சத்துருக்களால் மேற்கொள்ளப்பட்டான்.

உடன்படிக்கையிலிருந்து கிடைக்கும் ஜீவனளிக்கும் பெலன், ஒரு தேவபிள்ளைக்கு மட்டுமே கிடைக்கக்கூடிய ஒன்றல்ல; தேவனுங்கூட தம்மிலிருக்கும் உடன்படிக்கையைக் காக்கும் தன்மையினிமித்தம் தம்மில்தாமே பெலனுள்ளவராயிருக்கிறார். ஆதியாகமம் 1 : 1-ஐ வாசித்துப் பாருங்கள். இங்கு மூலபாஷையில் தேவனைக் குறிப்பதற்கென்று குறிப்பாக உபயோகப்படுத்தப்பட்டுள்ள பதம் 'ஏலோஹிம்' (ELOHIM) என்பதாகும். இது 'El', 'Alah' என்னும் இரு பதங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள வார்த்தையாகும். 'El'என்னும் பதத்துக்கு, 'பெலன்' அல்லது 'பெலவான்' என்று பொருள். 'Alah' என்பதற்கு, 'ஓர் ஆணையின் மூலம் தமது உண்மையைக் காண்பித்தல்' என்று பொருள். ஆகவே 'ஏலோஹிம்' என்பது, 'ஆணையில் அல்லது உடன்படிக்கையில் உண்மை யாயிருப்பதினிமித்தம் தம்மில்தாமே பெலனுள்ளவராயிருக்கும் ஒருவர்' என்று பொருள்படும்.

தேவனிலுள்ள உடன்படிக்கையைக் காக்கும் தன்மையானது, வானத் தையும் பூமியையும் சிருஷ்டிக்கக் கூடியதாயிருந்தது. தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் ஒரு பூரணமான பரலோக ஜீவியத்தையும் ஒரு பூரணமான பூமிக்குரிய ஜீவியத்தையும் நம்முடைய உடன்படிக்கையைக் காக்கும் தன்மையின் மூலமாகச் சிருஷ்டிக்கக் கூடும். வேறு வார்த்தைகளில் கூறின், நாம் உடன்படிக்கையைக் காக்கும் ஜீவியத்தைக் காத்துக் கொள்ளாத பட்சத்தில், நம்மால் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தையோ அல்லது உலகப்பிரகாரமான ஜீவியத்தையோ பூரணமான விதத்தில் கட்டி யெழுப்ப முடியாது. அநேகர் கர்த்தரோடு தாங்கள் செய்த உடன்படிக்கை களில் உண்மையாயிராமற்போனதினிமித்தம் தங்களுடைய ஜீவியங்களைக் கெடுத்துக்கொண்டார்கள். நாம் எச்சரிப்படைவோமாக.

ஆகஸ்ட் 29

ஆட்கொண்டு நடத்தும் விசுவாசம்

"*மோசே பிறந்தபோது அவனுடைய தாய்தகப்பன்மார் அவனை அழகுள்ள பிள்ளையென்று கண்டு, விசுவாசத்தினாலே, ராஜா வினுடைய கட்டளைக்குப் பயப்படாமல் அவனை மூன்றுமாதம் ஒளித்து வைத்தார்கள்*" (எபி. 11 : 23).

விசுவாசத்துக்கு ஒரு பரீட்சை உண்டு. இந்தப் பரீட்சைக்காக உபயோகிக்கப்படும் கருவி 'சோதனை' என்று அழைக்கப்படுகிறது. சோதனை நேரத்தில் தங்களுடைய விசுவாசத்தை இழந்துபோகிறவர்கள்

விசுவாசிகள் என்று அழைக்கப்பட முடியாது; தங்களுடைய விசுவாசத்தைக் காத்துக்கொள்ளுகிறவர்களே விசுவாச வீரர்கள் ஆவர்.

இரட்சகரும் விடுதலையளிப்பவருமான கர்த்தராகிய இயேசு பிறந்த போது சாத்தான் அவரை உடனே அழிக்க விரும்பினான். அவ்வாறே, இஸ்ரவேலரை எகிப்தினின்று விடுதலையாக்கி இரட்சிக்கும்படி தேவனால் அனுப்பப்பட்ட மோசே பிறந்தபோதும் சாத்தான் அவனை அழிக்க விரும்பினான். அப்படியே ஜனங்களைப் பாவத்திலிருந்தும் அழிவி லிருந்தும் இரட்சிக்க நாம் பிரயாசப்படும்போது, பிசாசானவன் நம் மேல் கோபங்கொண்டு, நம்மை அழிக்க எத்தனிக்கக் கூடும். கர்த்தராகிய இயேசுவையும் மோசேயையும் பிசாசானவனால் தொட முடியாமற் போனது போல, அவனால் நம்மையும் தொட முடியாது. ஏனெனில், கர்த்தர் நம்மைச் சுற்றிலும் ஒரு மதிலாயிருப்பார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

பிள்ளையை மறைத்துவைப்பது என்பது ஒரு மதியீனமான செயலாக இருக்கும் என்று மோசேயின் பெற்றோர் அறிந்திருந்தனர். 'எவ்வளவு காலம் அவனை மறைத்து வைக்க முடியும்? பிள்ளையின் அழுகுரலை ராஜாவின் வேவுகாரர் கேட்டால் என்ன சம்பவிக்கும்?' என் பவை போன்ற பயங்கள் அவர்களில் தோன்றியிருக்கக் கூடும். அப்படிப் பட்ட பயங்கள் நியாயமானவையாகத் தோன்றினும், மோசேயின் பெற்றோரில் இருந்த விசுவாசம் அசைக்கப்பட முடியாததாக இருந்தது. அவர்களுக்கோ அல்லது அவர்களுடைய பிள்ளைக்கோ எந்தவொரு தீங்கும் நேரிடாது என்று அவர்களிலிருந்த விசுவாசம் அவர்களுக்குக் கூறிற்று! தாய்மாருடைய கரங்களினின்று பார்வோனின் சேவகர்கள் பிள்ளைகளைப் பிடுங்கிக்கொண்டு செல்வதை அவர்கள் கண்டிருக்கக் கூடும்; குழந்தைகளின் சடலங்கள் நீல நிற நைல் நதியில் மிதந்து கொண்டிருப்பதையுங்கூட அவர்கள் கண்டிருக்கக் கூடும். மோசேயின் பெற்றோருக்கு எவ்வளவு மகத்துவமான விசுவாசம் இருந்திருக்கிறது!

விசுவாசத்தின் அநந்த ஞானத்தைப் பாருங்கள். விசுவாசமானது முதலாவது மோசேயின் பெற்றோரோடு பேசி, சுற்றியிருக்கும் அபாயங்கள் எல்லாவற்றின் மத்தியிலுங்கூட அவனை ஒளித்துவைக்கும்படி அவர் களிடம் கூறிற்று. பின்பு பிள்ளையை ஒரு நாணற்பெட்டியில் வைத்து நதியோரமாய் நாணலுக்குள் வைக்கும்படி விசுவாசமானது அவர்களிடம் கூறிற்று. நதியில் முதலைகளும் மற்ற பல அபாயகரமான ஜந்துக்களும் உண்டு என்பதை அவனுடைய பெற்றோர் அறிந்திருந்தனர். அவர்களுக்கு விசுவாசமிருந்திராவிடில் அவர்களால் எவ்வாறு அப்படிச் செய்திருந் திருக்க முடியும்?

ஆம், தேவபிள்ளையே, விசுவாசம் பயமறியாது. உனக்கு உன் னுடைய தேவன் மேல் விசுவாசம் இருக்குமானால், உன்னால் அவருக் காகப் பெரிய காரியங்களைச் செய்யக் கூடும்; இருள் நிறைந்த, அறியப் படாத இடங்களுக்கு நீ தைரியத்தோடு சென்று, அழிவை நோக்கி நரகத் துக்கு நேராகச் சென்றுகொண்டிருக்கும் ஆத்துமாக்களைத் தப்புவிக்கலாம்.

ஆகஸ்ட் 30

கர்த்தராகிய இயேசுவை வெளிப்படுத்தும்படி அழைக்கப்பட்டவர்கள்

'***தம்முடைய குமாரனை எனக்குள் வெளிப்படுத்த தம்முடைய கிருபை யினால் என்னை அழைத்த தேவன்***' (கலா. 1 : 15, 16 -Eng.).

இது நமக்கிருக்கும் மேன்மையும் உன்னதமுமான அழைப்பாகும். நம்முடைய ஜீவியத்தின் நோக்கம் இதுவேயாகும். அப். பவுல் இதை விளங்கிக்கொண்டார். இதுவே நம்முடைய அழைப்பு என்பதை நாம் அறிந்தவர்களாய், நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள இந்த அழைப்பைக் குறித்து ஜாக்கிரதையுள்ளவர்களாயிருந்தால், நாம் ஒருபோதும் விழுந்து போக மாட்டோம்; நம்முடைய எண்ணங்களில் விழுகை சம்பவிக்காது. ஆனால் பெரும்பாலான நேரங்களில், கர்த்தர் நம்மை எந்த நோக்கத்தோடு அழைத்திருக்கிறார் என்பதை நாம் நினைத்துப் பார்ப்பதில்லை. அப். பவுல், தேவன் தம்முடைய குமாரனைத் தனக்குள்ளிருந்தும் தன் மூலமாகவும் வெளிப்படுத்தும்படி தன்னை அழைத்ததாகக் கூறுகிறார். இதுவே தேவன் நம்முடைய ஜீவியத்தில் செய்துகொண்டிருக்கும் பெரிய வேலையாகும்.

நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள இந்த உன்னத அழைப்பைக் குறித்த அறிவுள்ளவர்களாக நாம் இருப்போமென்றால், நாம் சந்திக்க வேண்டிய சோதனை எதுவாயிருப்பினும், நம்முடைய மனப்பான்மையும் ஆவியும் கிறிஸ்துவைப் போன்றிருக்கும்; 'கிறிஸ்து என் மூலமாக வெளிப்படுத்தப் படும்படியாகவே இந்தச் சோதனை எனக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது' என்று நாம் எண்ணுவோம். நாம் இடறலடைந்தவர்களாகவோ, மனதில் புண்பட்டவர்களாகவோ உணர மாட்டோம். ஆகவே தான் அப். பேதுரு, "*உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை*" (II பேதுரு 1 : 10) என்று எழுதுகிறார்.

உங்கள் மூலமாகக் கிறிஸ்து வெளிப்படுத்தப்படும்படியாக, முதலாவது அவர் உங்களில் உருவாக்கப்பட வேண்டும். அப். பவுல் கலாத்தியர் 4 : 19 -இல், '*கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காகக் கர்ப்பவேதனைப்படுகிறேன்*' என்று கூறுகிறார். ஒரு குழந்தை பிறப்பதற்கு முன் அது தாயின் கர்ப்பத்தில் முதலாவது உருவாக வேண்டுமல்லவா? ஆவிக்குரிய பிரகாரமாக, கிறிஸ்து நம்மில் உருவாக்கப்படுவது என்பது, கர்த்தராகிய இயேசுவின் சுபாவத்தைக் குறித்த ஒரு தெளிவான வெளிப்படுத்தலை நாம் பெற்றுக்கொள்ளுதலாகும். கர்த்தராகிய இயேசு மரியாளின் கர்ப்பத்தில் பரிசுத்த ஆவியின் மூலம் உருவாக்கப்பட்டார் (லூக்கா 1 : 31, 35). ஆகவே, பரிசுத்த ஆவியானவரின் மூலமாக நாம் முதலாவது கிறிஸ்துவின் சுபாவத்தைக் குறித்த வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பிள்ளைப்பேற்றிற்காக எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் ஒரு தாயின் ஜெபமும் ஏக்கமும், 'எப்படியாவது எனக்கு ஒரு சுகப் பிரசவம் உண்டாக வேண்டும்' என்பதாக இருக்கும். இது ஆவிக்குரிய பிரகாரமாகவுங்கூட மெய்யே. கிறிஸ்துவின் சுபாவத்தைக் குறித்து நமக்கு ஒரு வெளிப்படுத்தல் கிடைத்த பின், நம்முடைய இடையறாத ஜெபம், 'கர்த்தாவே, இந்த வெளிப்படுத்தல் என்னில் மென்மேலும் வளர்ந்து, உம்முடைய சுபாவம் என் மூலமாக வெளிப்படுத்தப்பட வேண்டும்' என்பதாக இருக்கும். தன்னுடைய கர்ப்பத்தில் உற்பவித்திருக்கும் பிள்ளையின் பாதுகாப்பைக் குறித்து ஒரு தாய் மிகவும் கவனமாக இருக்கிறாள். அவ்வாறே நாம் நம்மிலுள்ள வெளிப்படுத்தலைக் கவனமாகக் காத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுது கிறிஸ்து நம்மில் வளர்ந்துகொண்டிருப்பார்.

ஒரு தாய் ஒரு பிள்ளையைப் பெற்றெடுக்கும்போது அவளுக்கு ஒரு பிரசவ வேதனை உண்டாகிறது. ஆகவேதான் அப். பவுலுங்கூட, 'கிறிஸ்து உங்களில் உருவாக்கப்படும்படியாக நான் கர்ப்பவேதனைப்படுகிறேன்' என்று கூறுகிறார். தேவபிள்ளையே, கிறிஸ்து உன்னில் உருவாக்கப்படும்படி நீ ஜெபத்தில் பிரசவ வேதனைப்படுகிறாயா?

ஆகஸ்ட் 31

உன்னுடைய வீட்டைச் சுத்தம் செய்!

"***அவைகளைப்போல நீ சாபத்துக்குள்ளாகாதபடி அருவருப்பானதை உன் வீட்டிலே கொண்டுபோகாயாக; அதைச் சீ என்று வெறுத்து முற்றிலும் அருவருக்கக்கடவாய், அது சாபத்திற்குள்ளானது***"
(உபா. 7 : 26).

அநேக பரிசுத்தவான்கள், இந்த வசனம் தொலைக்காட்சிப் பெட்டியை வீட்டிற்குள் கொண்டுவருவதையும், கணிப்பொறியில் இணைய தளம் (Internet) இணைக்கப்படுதலையும் குறித்து நம்மை நேரடியாக எச்சரிக்கிறது என்று கூறுகிறார்கள். இவைகளிலுள்ள ஆபாசக் காட்சிகள், சரித்திரம் கண்டிராத அளவுக்கு மோசமானவையாக இருக்கின்றன. அநேக படுகொலைகள், ஆண் பெண் சம்பந்தமான முறைகேடான குற்றங்கள், கொள்ளையிடுதல், விவாகரத்துகள் முதலியவை இந்த 'முட்டாள் பெட்டியின்' (idiot box) வாயிலாக ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளின் காரணமாகவே உண்டாகின்றன என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

ஓர் அருமையான தேவமனிதன் ஒரு சிறு வியாபாரம் செய்து தன் குடும்பத்தை நடத்திவந்தார். வறுமை அவரது குடும்பத்தை வதைத்தது. அவர் தன் கஷ்டம் நீங்கும்படி மிகவும் ஊக்கமாக ஜெபித்துவந்ததுடன், தேவ ஊழியர்களின் ஜெப உதவியையும் நாடினார்; ஆனாலும் பிரச்சினைகள் நாளுக்கு நாள் மிகவும் அதிகரித்துக்கொண்டேயிருந்தன. எனவே அவர் ஒரு நாள் அதிகாலை நான்கு மணிக்கு முழங்காற்படியிட்டு, தன் வறுமைக்குக் காரணம் யாது என கர்த்தரிடத்தில் கேட்டுக்கொண்டிருந்தார். அப்போது அவர் ஒரு தரிசனம் கண்டார். அதில் அவருடைய வீட்டைச் சுற்றிலும், வீட்டிற்கு மேலும் அநேக தேவதூதர்கள் நின்றுகொண்டிருந்தனர். கறுப்பான ஒரு பெரிய உருவம் அவரது வீட்டினுள் நுழைய முயற்சித்துக் கொண்டிருந்தது. அத்தேவதூதர்களோ அதை வீட்டினுள் நுழையவிடாமல் தடைபண்ணிக்கொண்டிருந்தனர். மறுபக்கத்தில், அவரது வீட்டிலிருந்து ஒரு கயிறு வெளிப்புறமாகத் தொங்கிக்கொண்டிருந்தது. அதின் வழியாக அந்தக் கறுத்த பிசாசு அவரது வீட்டை நோக்கி ஏறிவந்துகொண்டிருந்தது. அக்கயிற்றை அவர் உற்று நோக்கியபோது, அது அவருடைய வீட்டிலிருந்த தொலைக்காட்சிப் பெட்டியோடு இணைக்கப்பட்டிருந்த கேபிள் கம்பி என்பதைக் கண்டுகொண்டார். அக்கறுத்த உருவம் அக்கயிறு வழியாக அவரது வீட்டினுள் நுழைந்து, அவ்வீட்டிலிருந்த தொலைக்காட்சிப் பெட்டியின் மேல் கால் மீது கால் போட்டு அமர்ந்துகொண்டது. அதைக் கண்டு அவர் திடுக்கிட்டார். தேவதூதர்களுங்கூட ஒன்றும் செய்யக் கூடாமல் திகைத்து நின்றனர்! இத்தரிசனத்தைக் கண்ட அவர் பயந்து நடுங்கினார். தங்கள் குடும்பத்தின் வறுமையின் காரணத்தைக் கண்டு கொண்ட அவர் ஜெபத்தை முடித்து எழுந்து, தொலைக்காட்சிப் பெட்டியை உடனடியாகத் தன் வீட்டிலிருந்து ஒழித்துவிட்டார். இப்போது அவருடைய வீட்டில் தேவன் செழிப்பையும், மகிழ்ச்சியையும், ஆசீர்வாதத்தையும் கட்டளையிட்டிருக்கிறார்.

தேவபிள்ளையே, இந்த அருவருக்கத்தக்க மாயப்பெட்டி உன்னுடைய வீட்டில் இருப்பதினிமித்தமே, ஒருவேளை வியாதி, வறுமை, குடும்பத்தில் சண்டைகள் போன்றவை உன்னுடைய வீட்டை விட்டு நீங்காமல் இருக்கக் கூடும். இன்றே நீ உன்னுடைய வீட்டைச் சுத்தம் செய்வாயாக. சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே உன்னுடைய இருதயத்தையும் வீட்டையும் சுத்தமாகக் காத்துக்கொள்ள உனக்கு உதவிசெய்வாராக.

செப்டம்பர் 1

பிசாசைப் பார்த்து நகையுங்கள்

'கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம்பண்ணினவருக்கு விரோதமாகவும், பூமியின் ராஜாக்கள் எழும்பிநின்று, அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனைபண்ணுகிறார்கள்; பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் நகைப்பார்' (சங். 2 : 2, 4).

நீ ஒரு பெரிய கப்பலில் பயணம் செய்வதாகவும், அக்கப்பலின் மாலுமி ஆண்டவராகிய இயேசு எனவும் வைத்துக்கொள். சிறிய மீன்களின் கூட்டம் ஒன்று உன்னிடத்தில் வந்து, 'நாங்கள் இந்தக் கடல் நீர் முழுவதையும் குடித்து, கடலை நீரற்றதாக்கி, கப்பலை மணலில் சிக்கிக்கொள்ளச் செய்யப்போகிறோம்' என்று அச்சுறுத்தினால், நீ அந்தச் சிறு மீன் கூட்டத்தைப் பார்த்து நகைப்பாய் அல்லவா? அவ்வாறாயின், பிசாசைப் பார்த்து நீ ஏன் நகைப்பதில்லை? அவன் ஒரு தோற்கடிக்கப்பட்ட சத்துருவே. அவன் சொல்லுகிற ஒரு வார்த்தையைக்கூட நீ நம்ப வேண்டாம். அவனது பயமுறுத்தல்கள் எல்லாம் வீணான மேன்மை பாராட்டல்களே. உனக்கு விரோதமாக அவனால் ஒன்றுமே செய்ய முடியாது. "*பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் நகைப்பார்*". சத்துருவைப் பார்த்து நகைப்பதில் நீ ஏன் அவரோடு சேர்ந்துகொள்ளக் கூடாது?

தேவன் ஏற்கனவே சத்துருவைத் தோற்கடித்து, அவனை உன் கால்களின் கீழே கொண்டுவந்துவிட்டார். எதற்காக? நீ சற்றும் இரக்கம் பாராட்டாமல் அவனை உன் கால்களின் கீழ் நசுக்கிப்போடும்படியாகவே! '*இரும்பும் வெண்கலமும் உன் பாதரட்சையாயிருக்கும்*' (உபா. 33 : 25 -Eng.) என்ற வாக்குத்தத்தத்தை நீ நினைவுகூருவாயாக. நீ இரும்பாலான பாதரட்சைகளை அணிந்திருக்கிறாய் என்றால், நீ ஓர் இரும்பு மனிதனாகவே இருக்க வேண்டும். நீ அவ்விதமாக இருப்பதாக உணருகிறாயா,

இல்லையா என்பது ஒரு பொருட்டல்ல; ஆனால் கர்த்தருடைய வசனம் அப்படித்தான் கூறுகிறது. உன் பாதங்களின் கீழே நீ சாத்தானை நசுக்கிப் போடும்படியாக உண்மையிலேயே தேவன் இரும்பாலும், வெண்கலத்தாலுமான பாதரட்சைகளை உனக்குத் தந்திருக்கிறார்.

தேவபிள்ளையே, நீ தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து, உன் பயத்தை விட்டு வெளியே வா. "*அவர் உனக்கு முன்னின்று சத்துருக்களைத் துரத்தி, அவர்களை அழித்துப்போடு என்று கட்டளையிடுவார்*" (உபா. 33 : 27).

செப்டம்பர் 2

காரியங்கள் மோசமாகத் தென்படுகின்றனவா?

"***நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, ... அதை நன்மையாக முடியப்பண்ணினார்***" (ஆதி. 50 : 20).

"சுத்த இருதயமுள்ளவர்களாகிய இஸ்ரவேலருக்குத் தேவன் நல்லவராகவே இருக்கிறார்" (சங். 73 : 1). தேவபிள்ளைகள் பலரும் ஜீவியத்தின் தூய்மையைக் குறித்துக் கருத்துள்ளவர்களாயிருப்பதில்லை. எனவே *அவர்கள் தங்கள் வாழ்க்கை தீமையால் நிறைந்திருப்பதாக உணருகிறார்கள். ஓர் அம்சத்தில், நம் இருதயம் சுத்தமில்லாததாய் இருக்கும்போது, தேவன் நமக்குச் செய்கிற நன்மையான காரியங்களுங்கூட தீமை போலவே நமக்குத் தோன்றும்.*

கிருபையுள்ள தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு வானத்திலிருந்து மன்னாவை வருஷிக்கப்பண்ணினார். மன்னாவானது கிடைத்தற்கரிய மிகச் சிறந்த உணவாயிருந்தது. காலைதோறும் அது இலவசமாகவும் புதுப் பொலிவுடனும் அளிக்கப்பட்டது. அதின் ருசி புதிய *ஒலிவ எண்ணெயின் ருசி* போலவும், *தேனிட்ட பணிகாரத்திற்கு ஒப்பாகவும்* இருந்தது (எண். 11 : 8; யாத். 16 : 31). அது தூதர்களின் ஆகாரமாயிருந்தது. மன்னாவைப் புசித்தவர்களில் ஒருவராயினும் பெலவீனராகவோ, நோயுற்றவராகவோ இருக்கவில்லை. ஆனால் அந்தப் பொல்லாத இஸ்ரவேலரால் அதில் யாதொரு நன்மையையும் காண இயலவில்லை. ***உங்கள் இருதயம் பொல்லாததாய் இருக்கும்போது, கர்த்தர் செய்யும் மிகச் சிறந்த காரியமும் உங்களுக்கு மிக மோசமானதாகவே தென்படும்.***

இதே சத்தியம் இதற்கு மாறான விதத்திலுங்கூட பொருந்தக் கூடியதாயிருக்கிறது. நம் இருதயம் தூய்மையாக இருக்கும்போது, மற்றவர்கள் நமக்குச் செய்யும் **தீ**மையுங்கூட நமக்கு நன்மையாக மாறும்!

எடுத்துக்காட்டாக, ஆதியாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள யோசேப்பைப் பாருங்கள்! அவனுடைய சகோதரர்கள் அவனைப் பகைத்தார்கள்; குழியில் போட்டார்கள்; அடிமையாக விற்றார்கள் - இன்னும் ஏராளமான தீமைகள் அவனுக்கு நேரிடக் காரணமாயிருந்தார்கள். ஆனால் கர்த்தர் அவை எல்லாவற்றையும் நன்மையாக முடியப்பண்ணினார். இந்தச் சந்தர்ப்பத்தில் யோசேப்பின் வாயினின்று பிறந்த வார்த்தைகளையே காண்போம்: "*நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்;* ***தேவனோ,*** *இப்பொழுது நடந்து வருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு,* ***அதை நன்மையாக முடியப்பண்ணினார்***" (ஆதி. 50 : 20).

நீங்கள் உண்மையிலேயே இருதயத்தின் தூய்மையை நேசித்தால், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு க்ஷணப்பொழுதும் பரலோகத்தை அனுபவிப்பீர்கள்! ஜீவியத்தின் தூய்மைக்குக் குறைவான யாதொன்றோடும் எவ்விதத்திலும் சமரசம் செய்துகொள்ளாத வைராக்கியத்துடன், இப்போதே நீங்கள் உங்கள் முழு வாழ்க்கையையும் ஆண்டவருக்கு அர்ப்பணித்து, அதன் மூலம் நீண்ட நாட்களாய் நீங்கள் கட்டுண்டிருக்கும் இருள் சூழ்ந்த நிலவறையிலிருந்து வெளியே வாருங்கள்.

செப்டம்பர் 3

தெய்வீக சுபாவத்தின் உருவாக்கும் வல்லமை

"***பூமியானது புல்லையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பித்தது; தேவன் அது நல்லது என்று கண்டார்***" (ஆதி. 1 : 12).

'*கனிகளைக் கொடுக்கும் விருட்சங்கள்*' - பரிசுத்தவான்கள், பல்வேறு ஆவிக்குரிய கனிகளைத் தரும் கனிவிருட்சங்களாயிருக்கின்றனர். தேவனின் படைப்பில் நம் கவனத்தை ஈர்க்கும் ஓர் அம்சம் யாதெனில், கனிதரும் ஒவ்வொரு விருட்சமும் தன்னகத்தே விதையைக் கொண்டதா யிருந்ததே ஆகும். விருட்சம் என்பது பரிசுத்தவான்களையும், விதை என்பது, 'தெய்வீக சுபாவத்தை அடைய வேண்டும்' என்ற வாஞ்சையை மற்றவர்களிலும் உருவாக்கும் திறனையும் காண்பிக்கிறது. சகல தெய்வீக நற்குணங்களும், ஆவிக்குரிய சுபாவங்களும் கனிகள் என்றே அழைக்கப்படுகின்றன. கலாத்தியர் 5 : 22, 23 -இல் அன்பு, சந்தோஷம், சமாதானம் போன்ற ஆவியின் கனியைப் பற்றி நாம் வாசிக்கிறோம்.

நம்மிடத்தில் காணப்படும் மெய்யான நற்பண்பு ஒவ்வொன்றும் அதே பண்பைத் தாங்களும் அடைந்துகொள்ள வேண்டுமென்ற வாஞ்சையை மற்றவர்களுக்குள் உருவாக்க வேண்டும்.

சாதாரணமான முறையில் நாம் தாழ்மையாகவோ, பரிசுத்தமாகவோ, பொறுமையாகவோ இருந்தால் போதாது. மற்றவர்கள் இத்தெய்வீகப் பண்பு களின்பால் ஈர்க்கப்படும் அளவிற்கு அவை நம் ஜீவியத்தில் யாவரும் காணத்தக்க குறிப்படையாளங்களாகக் காணப்பட வேண்டும். நம்மைப் பார்க்கிறவர்கள் நம்மைப் போல மாற வேண்டும் என்று ஆவல்கொள்ள வேண்டும்.

தேவனாகிய கர்த்தர் வெறுமனே புல்லையும் பூண்டையும் மாத்திரம் பிறப்பிக்கும்படி பூமிக்குக் கட்டளையிடவில்லை. கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பிக்கும்படியாகவே அவர் கட்டளையிட்டார். அதாவது, ஆவிக்குரிய கனிகளைக் கொடுக்கும் (திவ்ய சுபாவங்களால் நிரம்பிய) பரிசுத்தவான்களையும் அவர் சிருஷ்டிக்கிறார். இவர்கள் இன்னும் அதிகமான பரிசுத்தவான்கள் தெய்வீக சுபாவத்தில் வளரும்படி அவர் களுக்கு உதவிசெய்யும்படியாகவே அவர் அப்படிச் செய்கிறார்.

செப்டம்பர் 4

அவர்தம் கண்களினால் வழிநடத்தப்படுதல்

'***நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன். என் கண்களினால் நான் உன்னை வழிநடத்துவேன். வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப்பட்டாலொழிய, உன் கிட்டச் சேராத புத்தியில்லாத குதிரையைப் போலவும், கோவேறு கழுதையைப் போலவும் இருக்க வேண்டாம்***' (சங். 32 : 8, 9 -Eng.).

தேவன் நம்மை இருவிதங்களில் வழிநடத்தக் கூடும்.

முதலாவதாக, அவர் தமது கண்களினால் நம்மை நடத்துகிறார். 'என் கண்களினால் நான் உன்னை நடத்துவேன்' என்பதன் பொருள், 'நான் உன்னை அன்புடன் நடத்துவேன்' என்பதே. நம்மை மென்மையாகவும் அன்பாகவும் வழிநடத்த வேண்டுமென்பதே தேவனின் வாஞ்சையாகும். இவ்விதமாகவே ஒரு மேய்ப்பன் தன் ஆடுகளை நடத்திச் செல்கிறான். கர்த்தரே நம் நல்ல மேய்ப்பராயிருக்கிறார். "*என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; ... அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது*" (யோவான் 10 : 27) என்று அவர் கூறுகிறார்.

இரண்டாவதாக, அவர் தம்முடைய அன்பினால் நம்மை நடத்தும்போது நாம் அதற்கு இணங்கி ஒப்புக்கொடாத பட்சத்தில், ஒரு குதிரையோ, கழுதையோ நடத்திச் செல்லப்படுவது போல, அவர் நம்மை 'வாரினாலும் கடிவாளத்தினாலும்' வழிநடத்துவார். நீங்கள் ஒரு கழுதையின் மேல் ஏறி சவாரி செய்யும்போது, கழுதையை வலதுபுறமாகத் திருப்ப வேண்டுமாயின், நீங்கள் இடதுபுறமாக அதாவது நீங்கள் அதனைத் திருப்ப விரும்பும் திசைக்கு எதிர்ப்புறத்தில் அதைச் சவுக்கால் அடிக்க வேண்டும். சிலர் தங்களுக்கு ஏதேனும் வியாதியோ, விபத்தோ, வேறு ஏதேனும் ஆபத்தோ நேரிடும்போதுதான் கீழ்ப்படிகிறார்கள். அச்சமயம் அவர்கள், 'ஐயோ, நான் தவறு செய்துவிட்டேன். இனி தேவனுக்குக் கீழ்ப்படிவேன்' என்று புலம்பி அழுகிறார்கள். "குதிரையைப்போலவும் கோவேறு கழுதையைப்போலவும் இருக்கவேண்டாம்" என்று கர்த்தர் சொல்லுகிறார். நாம் நம்முடைய இருதயத்தைக் கடினப்படுத்தாதிருப் போமாக. "நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளை களுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக் கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றை யும் உனக்கு வரப்பண்ணேன்" என்று கர்த்தர் தம்முடைய ஜனங்களாகிய இஸ்ரவேலரிடத்தில் சொன்னார் (யாத். 15 : 26).

"*கற்றுக்கொள்ளுகிறவர்களைப்போல (மாணாக்கரைப் போல), ... என் செவியைக் கவனிக்கச்செய்கிறார்*" (ஏசாயா 50 : 4) என்று ஏசாயா கூறுகிறான். எனவே ஒரு மாணாக்கன் தன் குருவுக்குச் செவிகொடுப்பது போல, நாம் கர்த்தரின் சத்தத்துக்குக் கவனமாய்ச் செவிகொடுப்போமாக. அவ்வாறாயின், கர்த்தர் நம்மை அன்பாக, தயவாக, மென்மையாக வழிநடத்தத் தவற மாட்டார்.

செப்டம்பர் 5

தேவனின் மிகப் பெரிதான உண்மை

"***கர்த்தாவே, என் ஜெபத்தைக் கேளும், ... உமது உண்மையின்படியும் உமது நீதியின்படியும் எனக்கு உத்தரவு அருளிச்செய்யும்***" (சங். 143 : 1).

இக்கடைசி நாட்களின் இறுதி நொடிகளில் பரிசுத்தவான்கள் ஏறெடுக்கும் முக்கியமான ஜெபங்களில் ஒன்றிற்குத் தேவன் பதிலளிப் பதில் அவரது மிக முக்கியமான உண்மையும் நீதியும் வெளிப்படுத்தப்

படும். அந்த ஜெபம்தான் என்ன? அது, "*கர்த்தராகிய இயேசுவே, வாரும்*" (வெளி. 22 : 20) என்பதே.

'*உமது உண்மை மேகமண்டலங்கள் பரியந்தம் எட்டுகிறது*' (சங். 36 : 5-Eng.). நாம் நம்முடைய கர்த்தரை ஆகாயத்தில் சந்திக்கும்படி மேக மண்டலங்களை அடையும் வரைக்கும், அவர் நமக்கு உண்மையுள்ளவ ராகவே இருக்கப்போகிறார். இது எவ்வளவு அதிகமாய் நம்மை ஊக்கு விப்பதாயிருக்கிறது! கர்த்தருடைய உண்மையே நம்மை உண்மையுள்ள வர்களாக மாற்றுகிறது. '*அவரோடே கூட இருக்கிறவர்கள் உண்மையுள்ள வர்களாயிருக்கிறார்கள்*' (வெளி. 17 : 14).

தேவனுடைய பிள்ளையே களிகூரு! தேவன் உண்மையுள்ளவரா யிருக்கிறார். "*நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாளிலே நீங்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி முடிவுபரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார்* (பூரணப்படுத்துவார்). ... *உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்*" (I கொரி. 1 : 8, 9). '*உங்களில் நற்கிரியையைத் தொடங் கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவார்*' (பிலி. 1 : 5). "*சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப் படுவதாக. உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்*" (I தெச. 5 : 23, 24).

'உம்முடைய உண்மை பெரியது'.

செப்டம்பர் 6

குற்றஞ்சாட்டும் நாவு

'***ஒருவனையும் குறித்துத் தீமையாகப் பேசாதிருங்கள்***' (தீத்து 3 : 2 -Eng.).

நீங்கள் மற்றவர்களைக் குறித்துத் தீமையாகப் பேசினால், உங்கள் சொப்பனங்களுங்கூட அசுத்தமாயிருக்கும். '***அசுத்தமான சொப்பனக்கார ராகிய*** *இவர்கள் மாம்சத்தை அசுசிப்படுத்திக்கொண்டு, கர்த்தத்துவத்தை அசட்டைபண்ணி, மகத்துவங்களைக் குறித்துத் **தீமையாகப் பேசுகிறார்கள்***' (யூதா 8 -Eng.). எனவே '*ஒருவனையும் குறித்துத் தீமையாகப் பேசாதிருங்கள்*' என்று வேதவசனம் நம்மை எச்சரிக்கிறது. பரிசுத்த பிரதான தூதனாகிய மிகாவேல் கூட, பிசாசுடன் தர்க்கித்துப் பேசும்போது, '*அவனைத் தூஷண*

மாய்க் குற்றப்படுத்தத் துணியவில்லை' (யூதா 9) என்பதைக் கவனிப்பது நமக்கு வியப்பைத் தருகிறது. பரிசுத்தமான தூதனே பிசாசைத் தூஷண மாய்க் குற்றப்படுத்திப் பேசாதபோது, நாம் எந்த ஒரு மனிதனைப் பற்றியும் **தீ**மையாகப் பேசாமலிருக்க எவ்வளவு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்!

'சகோதரர் மேல் குற்றஞ்சாட்டுகிறவன்' பிசாசானவனே ஆவான். "*இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது; இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத்தள்ளப்பட்டுப் போனான்*" (வெளி. 12 : 10). இந்த வேதபகுதியிலிருந்து, சகோதரரைக் குற்றப்படுத்தும் சுபாவம், பிசாசிடமிருந்து நேரடியாக வரும் பொல்லாத ஆவி என்று நாம் அறிகிறோம். இந்த ஆவி நம்மை விட்டு வெளியேறு மாயின், நாம் தேவனின் இரட்சிப்பையும், அவருடைய வல்லமையையும், நீதியும், சமாதானமும், பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோஷமு மாகிய அவருடைய ராஜ்யத்தையும், கிறிஸ்துவின் வல்லமையையும் நம் அன்றாடக வாழ்வில் அனுபவித்து மகிழ்வோம்.

அன்பான வாசகரே, நாவானது முழுச் சரீரத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்தக் கூடும். "*ஒருவன் **சொல்**தவறாதவனானால் அவன் பூரணபுருஷ னும், தன் **சரீரமுழுவதையும்** கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக்கூடிய வனுமாயிருக்கிறான்*" (யாக். 3 : 2). ***நீங்கள் உங்கள் நாவை அடக்கிக் கட்டுப்படுத்தாவிடில், நீங்கள் ஒருபோதும் பூரணப்பட முடியாது*** என்ற உண்மையை இது வலியுறுத்துகிறது.

செப்டம்பர் 7

அந்தகாரத்திலுள்ள பொக்கிஷங்கள்

'***அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களை உனக்குக் கொடுப்பேன்***'
(ஏசாயா 45 : 4).

பெரும்பாலும் ஆவிக்குரிய பிரகாரமான அந்தகாரமும் இராக்கால மும், மகத்தான வெற்றியையும் ஆசீர்வாதத்தையும் அளிக்கும் சந்தர்ப்பங் களுடன் நெருங்கிய தொடர்புடையவையாயிருக்கின்றன. '*முடிந்தது*' என்ற வெற்றி முழக்கத்தைச் சிலுவையில் முழக்குமுன் கர்த்தராகிய இயேசு மூன்று

மணி நேரம் காரிருளான அந்தகாரத்தைச் சந்திக்க வேண்டியதாயிருந்தது. யாக்கோபின் வாழ்விலும், மிக அதிகமாய்க் குறிப்பிடத்தக்கதும், ஆசீர் வதிக்கப்பட்டதுமான நிகழ்ச்சிகள், இரவு நேரத்திலேயே சம்பவித்தன. முதலாவது, பெத்தேலைச் சேர்ந்த வனாந்தரத்தில், அவன் தன் தகப்பன் வீட்டிலிருந்து ஓடிவந்த அந்த இரவு நேரத்தில், வானம் திறக்கப்பட்டதை யும், பூமியிலிருந்து வானத்திற்கு வைக்கப்பட்டிருந்த ஒரு ஏணியையும், அதில் தேவதூதர்கள் ஏறுகிறதையும் இறங்குகிறதையும் அவன் கண்டான். கர்த்தர் அதற்கு மேலாக நின்று, அவனுக்கும் அவனுடைய சந்ததிக்கும் ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களை அளித்தார். மற்றொரு முறை அவன் லாபானின் வீட்டிலிருந்து ஓடிப்போனபோது தேவனோடு இரவில் போராடினான். அவன் மிகுதியான ஆசீர்வாதத்தைப் பெற்றதால், அவனது (சுபாவத்தைக் குறிக்கும்) பெயரே மாற்றப்பட்டு, 'தேவனின் பிரபு' என்று அர்த்தங்கொள்ளும், 'இஸ்ரவேலாக' மாறினான்.

'அத்தர்' எனப்படும் வாசனைத் தைலம் தாயாரிக்கத் தேவையான ரோஜாப்பூக்கள், முழு உலகிற்கும் பால்கன் மலைகளிலிருந்தே வழங்கப் படுகிறதாகக் கூறப்படுகிறது. இதில் வியப்புக்குரிய காரியம் என்னவெனில், நள்ளிரவுக்குப் பின் ஒரு மணி அல்லது இரண்டு மணி அளவில் பறிக்கப்படும் ரோஜாப்பூக்களே அதிக நறுமணம் வாய்ந்தவை என்பது அறிவியல்ரீதியாக மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. நம்முடைய கிறிஸ்தவ வாழ்விலும் நம் ஆவிக்குரிய ஜீவியம் மென்மேலும் அதிக நறுமணம் உள்ளதாக மாற்றப்படும்படியாகத் தேவன் அந்தகாரத்தையும், இரவையும் அனுமதிக்கிறார்:

அன்பான வாசகரே! தேவன் நமது ஆவிக்குரிய ஜீவியத்தில் இருண்ட இராக்காலங்களை அனுமதிப்பது நம்மை அழிப்பதற்காக அல்ல, நம்மைக் 'கொள்ளைப் பொருளைப் பங்கிடத்தக்கவர்களாக்குவதற்கே'. யாக்கோபு தன் குமாரனாகிய பென்யமீன் மீது கூறிய ஆசீர்வாதங்களில் ஒன்று, '*அவன் **இரவில்** தான் கொள்ளையிட்டதைப் பங்கிடுவான்*' (ஆதி. 49 : 27 -Eng.) என்பதாகும். அந்தகாரமான வேளைகளில் நாம் அதைரிய மடைவதற்குப் பதிலாக, கொள்ளையைப் பங்கிடக் கற்றுக்கொள்வோமாக - தேவனின் திரட்சியான ஆசீர்வாதங்களை அனுபவித்து, மற்றவர்களுக்கும் அவற்றைப் பகிர்ந்தளிப்போமாக. கர்த்தருடைய வாக்குத்தத்தம், '*அந்த காரத்தில் இருக்கிற பொக்கிஷங்களை உனக்குக் கொடுப்பேன்*' என்பதே (ஏசாயா 45 : 4). அந்தகாரத்தில் பொக்கிஷங்கள் இருக்கின்றன. நாம் அந்தகாரத்தினூடாகச் சென்றாலொழிய, அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியாது.

செப்டம்பர் 8

ஓய்ந்திருத்தலின் பலன்கள்

"தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளை யெல்லாம் முடித்தபின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்" (ஆதி. 2 : 3).

தேவன் தம் சிருஷ்டிப்பின் கிரியைகளையெல்லாம் முடித்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தபடியால், அந்நாளை ஆசீர்வதித்தார். எனவே ஒருவன் தன் கிரியைகளை முடித்து இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கும்போது ஆசீர்வாதங்கள் அவனைப் பின்தொடருகின்றன. நம் வாழ்க்கையானது போராட்டங்கள் நிறைந்த ஒன்றாயிருக்கிறது. ஒவ்வொரு போராட்டத்தை யும் நாம் மேற்கொண்டு, ஓர் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்க வேண்டும். இந்தக் கிருபையின் காலத்தில் நாம் அனுதினமும் தேவனுடைய இளைப் பாறுதலுக்குள் பிரவேசிக்கும் ஆவிக்குரிய அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

நாம் ஜெயஜீவியம் செய்யத் துவங்கும்போது நமக்குள் பரிசுத்த மாகுதல் படிப்படியாக ஆரம்பிக்கிறது. நாம் நமது சுய முயற்சிகளையும், போராட்டங்களையும் விட்டு ஓய்ந்து, தேவனில் இளைப்பாறும்போது, அவர் நம் மீது தமது ஆசீர்வாதத்தைக் கட்டளையிட்டு, பரிசுத்தமாக்கு தலின் கிரியையை நம்மில் படிப்படியாக நிறைவேற்றி முடிப்பார். *"ஏனெனில், அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன், தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்ததுபோல, தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான்"* (எபி. 4 : 10).

தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார். தேவனின் ஆசீர்வாதம் பரிசுத்தமாகுதலோடு இணைந்து செல்கிறது. பரிசுத்தமாக்கப்பட்ட ஜீவியம் உண்மையிலேயே ஆசீர்வாதம் நிறைந்த தொரு ஜீவியமாகும்.

கர்த்தர் ஏழாம் நாளில் தமது கிரியைகளை முடித்து அந்த நாளில் ஓய்ந்திருந்தபடியால், அந்நாளைப் பரிசுத்தமாக்கினார். நமக்குள்ளே ஒரு இளைப்பாறுதல் இருக்கும்போது மட்டுமே, தேவன் நம்மைப் பரிசுத்தமாக்கக் கூடும். நம் இளைப்பாறுதலுக்கு எவ்விதத்திலும் இடையூறு வராதபடி நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இல்லையெனில் நமக்குள் பரிசுத்தமாக்கப்படுதலின் கிரியையானது தடைபட்டுப்போகும்.

செப்டம்பர் 9

மிக நெருங்கிய உறவுமுறை

'உன்னதமானவரின் மறைவிடத்தில் வசிக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்' (சங். 91 : 1 -Eng.).

"தங்குவான்" என்ற பதத்திற்கு எபிரெய மொழியில் 'யாஷா' (YASHA) என்ற பதம் உபயோகிக்கப்பட்டுள்ளது. இதன் பொருள், 'விவாகம் செய்தல்' ஆகும். இது கிறிஸ்துவுக்கும் மணவாட்டிக்கும் இடையே உள்ள உறவு முறையைக் காண்பிக்கிறது. கர்த்தர் *'நான் உங்களை விவாகம்செய்திருக் கிறேன்'* (Eng.) என்று கூறுகிறார் (எரே. 3 : 14).

எல்லா உறவுகளிலும் கணவனுக்கும் மனைவிக்குமிடையே உள்ள உறவே மிக நெருக்கமானது. இதற்கு அடுத்த நெருங்கிய உறவு, தாய்க்கும் சேய்க்கும் இடையே உள்ள உறவாகும். இந்த இரண்டு உறவுமுறைகளுமே, 91-ஆம் சங்கீதத்தின் முதலாம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. ('சர்வவல்லவர்' என்பதற்கு எபிரெய மொழியில் 'யெல்ஷதாய்' (El-shaddai) என்னும் பதம் உபயோகிக்கப்பட்டுள்ளது. இதன் பொருள், தாயைப் போன்ற தேவன் என்பதாகும்.)

கர்த்தர் நம்மோடு மிக நெருங்கியதொரு உறவுமுறையை வைத்துக் கொள்ள விரும்புகிறார். சங்கீதம் 91-இல் கூறப்பட்டுள்ள அத்தனை வாக்குத்தத்தங்களும், தேவனோடு நெருங்கிய உறவு கொண்டிருப்பவர் களுக்கே உரியவையாகும்.

தேவனுடைய இருதயத்தில் வாழ்பவர்கள் தேவனோடு மிக நெருங்கிய உறவு கொண்டிருப்பார்கள். பூமியில் வசிக்கும்போதே நாம் கர்த்தரோடு இவ்வித உறவைக் கொண்டிருக்க வேண்டும்.

நாம் தேவனுடைய இருதயத்தில் வசிக்கும்போது, நமது இருதயம் தேவனின் இருதயம் போலவே மாறிவிடும். இதன் பொருள் என்ன? நமது இருதயம் சமாதானம், சந்தோஷம், அன்பு, கிருபை, தூய்மை, தாழ்மை, மன்னித்தல் போன்றவற்றால் நிரம்பியிருக்கும். நீங்கள் தேவனின் இருதயத்தில் இருந்தால் - தேவனின் இதயத்துடிப்பே உங்களுடைய இதயத் துடிப்பாயிருக்கும்; தேவன் உங்கள் மனதில் எதை வைக்கிறாரோ, அதையே நீங்கள் சிந்திக்க விரும்புவீர்கள்; தேவன் உங்கள் இருதயத்தில் எதை வைக்கிறாரோ, அதையே நீங்கள் விரும்புவீர்கள்.

செப்டம்பர் 10

சகல அதிகாரமும் உங்களுடையதே!

'அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள்' (மத். 28 : 18, 19).

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த போது, வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் அவருக்குக் கொடுக்கப்பட்டது. உலகத்தின் பார்வையில் நாம் அற்பமானவர்களாய்த் தோன்றினாலும், "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய்" என்ற வார்த்தையானது, அதே அதிகாரமும் வல்லமையும் நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

ஆப்பிரிக்காவில் ஒரு மிஷனரி அம்மையாருக்குச் சில ஆத்துமாக்களைக் கொண்ட சிறியதொரு சபை இருந்தது. ஒரு நாள் அவர்கள் ஒன்றுகூடி தேவனை ஆராதித்துக்கொண்டிருக்கையில், ஒரு மந்திரவாதி சபைக்குள் வந்து, 'நான் ஒரு அற்புதத்தை நடப்பிக்கப்போகிறேன். உங்கள் இயேசுவால் இதை விடப் பெரிய அற்புதத்தைச் செய்யக் கூடுமானால், நான் கிறிஸ்தவனாக மாறிவிடுகிறேன்' என்று கூறி, அம்மையாரின் வல்லமைக்கு எதிராகச் சவால் விடுத்தான். எல்லாப் பிசாசுகளின் வல்லமையும் ஒருங்கிணைந்த வல்லமையைக் காட்டிலும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு மிக அதிகமான அதிகாரமும் வல்லமையும் உண்டென்பதை அந்த அம்மையார் அறிந்திருந்தார்கள். அந்தச் சவாலை ஏற்றுக்கொண்டு, பிசாசுக்கு இருப்பதைக் காட்டிலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு மேலான அதிகாரமும் வல்லமையும் உண்டென்பதை அந்த மந்திரவாதிக்கு நிரூபித்துக் காண்பிக்கும்படி அச்சிறு கூட்டமான சபையாரும் அந்த மிஷனரி அம்மையாரை ஊக்குவித்தார்கள்.

அந்த மந்திரவாதி சபையின் முன்பாக வந்து முகங்குப்புறப் படுத்தான். அவன் ஏதோ மந்திரங்களை ஓதிக்கொண்டிருந்தபோது, அவனது உடல் தரையிலிருந்து மேலே எழும்ப ஆரம்பித்தது. குப்புறப் படுத்திருக்கும் நிலையிலேயே பிரசங்க பீடத்தின் உயரம் வரை அவனது உடல் மேலே எழும்பினது. இதைக் கண்ட அந்த மிஷனரி அம்மையார், தன்னால் அதைக் காட்டிலும் பெரிதான வேறெந்த அற்புதத்தைச் செய்யக்

கூடும் என்று திகைத்தார்கள். உண்மையில், அது வரை அவர்கள் ஒரு அற்புதமும் செய்ததில்லை. ஆனால் அவர்களும் சபையார் அனைவரும் ஜெபித்துக்கொண்டிருந்தபோது, அதிகாரத்தோடும் வல்லமையோடும் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் அவ்வம்மையார் மேல் இறங்கிற்று. அவர்கள் உடனே அந்த மனிதனுக்கு எதிரே தன் கைகளை நீட்டி, 'கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே இவனைவிட்டு வெளியே போ, பிசாசே!' என்று அவனிலிருந்த பொல்லாத ஆவியை அதட்டினார்கள். உடனே துப்பாக்கியால் சுடப்பட்டவனைப் போல, அந்த மந்திரவாதி உருளைக்கிழங்கு மூட்டையைப் போல, தரையில் தொப்பென்று விழுந்தான். அவன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் வரை, அவனால் தன் கைகால்களை அசைக்கவுங்கூட முடியவில்லை.

அன்பான தேவபிள்ளையே, உலகத்தில் இருக்கிறவனிலும் (பிசாசு) உன்னிலிருக்கிறவர் பெரியவர். கர்த்தரிலும், அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுவாயாக. நம் தேவன் தமது நாம மகிமைக்காகப் பெரிய காரியங்களைச் செய்வார்.

செப்டம்பர் 11

எழுந்திரு; தொடர்ந்து போ!

"இதோ, நாங்கள் உம்முடன் குடியிருக்கிற இந்த இடம் எங்களுக்கு நெருக்கமாய் இருக்கிறது. நாங்கள் யோர்தான்மட்டும் போய் ... அங்கே எங்களுக்கு ஒரு இடத்தை உண்டாக்குவோம்" (II இராஜா. 6 : 1, 2).

எலிசாவின் சீஷர்களான தீர்க்கதரிசிகளின் புத்திரர் தங்கள் இட நெருக்கடியான நிலையை (தாழ்வான ஆவிக்குரிய நிலையை) அறிந்த போது, அதைத் தங்கள் எஜமானிடம் அறிக்கையிட வேண்டிய அவசியத்தை உணர்ந்தார்கள். நாம் எப்போதாவது நம்முடைய கர்த்தரிடம் நம் ஆவிக்குரிய ஜீவியம் இருக்க வேண்டிய தரத்தினின்று மிகவும் குறைந்த நிலைவரத்திலிருக்கிறது என்பதை அறிக்கை செய்திருக்கிறோமா?

'நாங்கள் யோர்தான் மட்டும் போவோம்' - நம் உண்மையான ஆவிக்குரிய நிலைமையை நாம் உணர்ந்துவிட்டால், அதைக் கர்த்தரிடம் அறிக்கையிடுவது மாத்திரமல்ல, அந்த நிலைக்குப் பரிகாரம் உண்டாக்கும் படி ஏதேனும் செய்ய வேண்டும் என்றும் நாம் நெருக்கி ஏவப்படுவோம் - 'யோர்தானுக்குப்' போக வேண்டும் என்று நாம் ஏவப்படுவோம்.

தேவசித்தத்தை நிறைவேற்றும் இடமே யோர்தான் ஆகும். அங்கே கர்த்தராகிய இயேசு தண்ணீர் ஞானஸ்நானம் பெற்று, பிதாவின் சித்தத்தை நிறைவேற்றினார் (மத். 3 : 13, 15). எலிசாவின் சீஷர்கள் யோர்தானுக்குப் போகத் **தீ**ர்மானித்தது போல, நாமும் தேவனின் பரிபூரண சித்தத்தை நிறைவேற்றத் **தீ**ர்மானிக்க வேண்டும். 'கர்த்தாவே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்?' என்று கேட்பதே எப்போதும் நம்முடைய ஒரு ஜெபமாயிருக்க வேண்டும்.

தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஒருவன் எலிசாவை நோக்கி, "*நீர் தயவுசெய்து உமது அடியாரோடேகூட வரவேண்டும்*" (II இராஜா. 6 : 3) என்றான். அநேக கிறிஸ்தவர்களின் ஜீவியம் ஒரு போராட்டமாயிருக்கிறது. அவர்கள் தேவசித்தம் செய்வதற்காகப் போராடிக்கொண்டேயிருக்கிறார்கள். நம்மோடு வந்து, நமக்கு உதவிசெய்யும்படி தேவனை வேண்டிக் கொண்டாலொழிய, நாம் எவ்வளவுதான் மிகச் சிறந்த மேலான நோக்கங் களோ, உள்ளார்ந்த அர்ப்பணிப்போ உடையவர்களாய் இருந்தாலும், நம்மால் ஒருபோதும் தேவசித்தம் செய்ய முடியாது. **தீ**ர்க்கதரிசிகளின் புத்திரரின் விண்ணப்பத்திற்கு எலிசா கொடுத்த உடனடியான பதில், "*நான் வருகிறேன்*" என்பதே. இதே போல் கர்த்தரும் நம்மோடு வருவார். கர்த்தர் உன்னோடு வராமலும், உன் ஜீவியத்தில் தேவசித்தம் செய்யும்படி உனக்கு உதவிபுரியாமலும் இருப்பதாக நீ உணருவாயாகில், அதன் ஒரு காரணம், தேவன் உன்னோடு வரும்படி நீ அவரை வற்புறுத்தி அழைக்காததாய் இருக்கக் கூடும்.

செப்டம்பர் 12

மணவாட்டியை உருவாக்குதல்

'அப்பொழுது தேவனாகிய கர்த்தர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அதற்குப் பதிலாக மாம்சத்தை மூடினார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார்' (ஆதி. 2 : 21, 22 -Eng.).

மணவாட்டி உருவாக்கப்படுமுன் ***தேவன் மாம்சத்தை மூடினார்***. ஆம்! சபையிலிருந்து (தோட்டத்திலிருந்து) மணவாட்டியை உருவாக்கு முன், அவர் மனிதனின் ***மாம்சத்தை*** மூடுகிறார். வேறு வார்த்தைகளில் கூறின், கர்த்தர் நம்மைத் தம்முடைய இரகசிய வருகைக்கு ஆயத்தப்படுத்த வேண்டுமாயின், நம் மாம்சீகமான சுபாவங்கள் நீக்கப்பட வேண்டும்.

வேதாகமத்தில் '*மாம்சம்*' என்ற பதம் இங்குதான் முதன்முதல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதைக் கர்த்தர் அடைத்துப்போட்டார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். கர்த்தர் மாம்சத்தை அடைத்திருக்க, அல்லது அதை மூடியிருக்க, மனுஷன் ஏன் அதைத் திறக்க வேண்டும்?

ஒரே ஒரு விலா எலும்பு (சரீரத்திலிருக்கும் பெலவீனமான ஒரு எலும்பு) ஒரு மணவாட்டியை உருவாக்குவதற்கான ஒரு ஏதுவாக இருந்திருக்குமாயின், கிறிஸ்துவின் மணவாட்டியை உருவாக்கும் பணியில், தம்முடைய கரத்திலிருக்கும் தேவ ஊழியரை எவ்வளவு அதிகமாகக் கர்த்தரால் உபயோகிக்க முடியும்! "*ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கி யிருங்கள்*" (I பேதுரு 5 : 6).

நம் உடலில் விலா எலும்புகள் இருதயத்திற்கு மிக அண்மையில் அமைந்து, அதை மூடிப் பாதுகாக்கின்றன. இதேபோல் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலும் சில பரிசுத்தவான்கள், தேவனின் இருதயத்திற்கு மிக அருகாமையில் இருக்கிறார்கள். தேவன் அவர்களைத் தமது கரங்களில் எடுத்து, அவர்களின் ஜீவியம், ஜெபம் இவற்றின் மூலமாகக் கிறிஸ்துவின் மணவாட்டியை உருவாக்கும் வியக்கத்தக்க வேலையைச் செய்கிறார்.

நாம் 'மாம்சத்தை மூடிப்போட்டு' அதாவது மாம்சத்தின் கிரியை களை அழித்து, தேவனின் இருதயத்துடன் நெருங்கிச் சேருவோமாக. புதிய எருசலேமை உருவாக்கும் பணியில் உபயோகிக்கும்படி தேவன் தம் இருதயத்திற்கு அண்மையில் வசிக்கும் 'சரீர பெலனற்றவர்களும், மாம்சீகமற்றவர்களுமான' பரிசுத்தவான்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்.

செப்டம்பர் 13

எப்படி யுத்தம்பண்ண வேண்டும்?

"விசுவாசத்தினாலே அவர்கள் ... பலவீனத்தில் பலன்கொண்டார்கள்; யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்" (எபி. 11 : 33, 34).

நாம் தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொண்டு, நம்மில் காணப்படும் பெலவீனமான அம்சங்கள் பெலமுள்ளவையாயின என விசுவாசித்து தேவனைத் துதிக்கும்போது, நாம் ஏற்றுக்கொண்டதையும், விசுவாசித்ததையும் ஒருவேளை நம்மால் உடனடியாகவே அனுபவிக்கக்

கூடாதிருக்கலாம்; காரியங்கள் அதற்கு எதிராகவே இருப்பதாக நமக்குத் தோன்றலாம்.

நாம் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் சிந்தை, சொற்கள் போன்றவற்றில் நமக்குப் பூரண பரிசுத்தம் தேவையாயிருக்கிறது என்பதை உணர்ந்து, அதற்காகத் தேவனுடைய வார்த்தையை உண்மையாக விசுவாசித்து, அவரது வாக்குத்தத்தங்களின் மேல் உறுதியாக நிற்கத் தீர்மானிப்போமாயின், கொஞ்சக் காலத்திற்காயினும், முன் ஒருபோதும் இல்லாத அளவுக்கு நாம் பரிசுத்தமாக்கப்படாதவர்களாயிருப்பதாக நாம் உணருவோம். இது நம்மை அதைரியப்படுத்திவிடக் கூடாது - பிசாசின் தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே. ***நாம் செய்யும் ஒவ்வொரு பிரதிஷ்டைக்கும், நாம் உரிமைபாராட்டும் ஒவ்வொரு வாக்குத் தத்தத்திற்கும் விரோதமாக, நமது பிரதிஷ்டைகளை நாம் உடைத்துப் போடும்படி செய்யவும், நம்மை மனச்சோர்வடையச் செய்யவும் பிசாசுகள் அனுப்பப்படக் கூடும்.***

உதாரணமாக, நாம் மறுநாள் விடியற்காலையிலேயே எழுந்து ஜெபிக்கவோ, வேதம் வாசிக்கவோ தீர்மானிக்கிற அன்று இரவு மிகத் தாமதமாகப் படுக்கைக்குச் செல்ல வேண்டியதாகி, அடுத்த நாள் அதிகாலையில் எழுந்திருக்கக் கூடாதவர்களாகலாம் அல்லது மிக அதிகமான தலைவலியோடு எழுந்திருக்கலாம்! நம்முடைய பெலவீனங்கள் யாவும் பெலனாக மாற்றப்பட்டது என்ற வாக்குத்தத்தத்தை நாம் பற்றிக்கொண்டால் மட்டும் போதாது; வல்லவர்களாக யுத்தம் செய்யவும் வேண்டும். எனவேதான் "*யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்*" என வேதவசனம் கூறுகிறது. "*நல்ல போராட்டத்தைப் போராடினேன், ... விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்*" (II தீமோ. 4 : 7) என அப். பவுல் கூறுகிறார். மேலும் தேவனின் வாக்குத்தத்தங்களை முழுமையாய் அனுபவிக்கும் வரை, பிசாசின் சேனைகளை நாம் துரத்தியடிக்க வேண்டும். "*பலவீனனும் தன்னைப் பலவான் என்று சொல்வானாக*" (யோவேல் 3 : 10). எனவேதான் விசுவாச வீரர்களாயிருக்கும்படி தேவன் பலவீனரைத் தெரிந்துகொண்டிருக்கிறார் (I கொரி. 1 : 27).

அருமையானவர்களே, நீங்கள் பரிசுத்தத்திலோ, ஜெப ஜீவியத்திலோ, தேவ வசனத்தைத் தியானிப்பதிலோ, தேவனை நேசிப்பதிலோ, மற்றும் இவை போன்ற ஆவிக்குரிய காரியங்கள் யாதொன்றிலோ பெலவீனராய் இருக்கிறீர்களா? அந்தப் பெலவீனமான பகுதிகள் எல்லாம் உங்கள் வாழ்வின் பலமுள்ள பகுதிகளாக மாறியிருக்கின்றன என்று விசுவாசத்தின் மூலம் உரிமைபாராட்டுங்கள். நீங்கள் அவ்வப்போது அதைரியம், மனத்தளர்ச்சி, கோபம், மனமுறிவு முதலியவற்றிற்கு

இடங்கொடுக்கிறீர்களா? ஜெயத்தை உரிமைபாராட்டுங்கள். சரீரப்பிரகாரமான காரியங்கட்கும் இதே வாக்குத்தத்தத்தை விசுவாசத்தினால் உரிமைபாராட்டிக் கேளுங்கள். உங்கள் சரீரத்தின் மிகவும் பெலவீனமான பகுதி, மிகுந்த பெலமுள்ளதாகட்டும். கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலும் மிகவும் பெலனற்ற பகுதி (மிகப் பலவீனமான விசுவாசி) மிகுந்த பெலனுள்ளதாகட்டும்.

செப்டம்பர் 14

நீ ஒரு குஷ்டரோகியா?

"***பாதாளத்திலே அவன் (ஐசுவரியவான்) வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான்***" (லூக்கா 16 : 23).

ஐசுவரியவான் வெகுதூரத்தில் ஆபிரகாமையும் லாசருவையும் கண்டான். நித்தியத்தில் நீங்கள் எங்கேயிருப்பீர்கள் என்பது, இவ்வுலகில் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கை எப்படிப்பட்டதாயிருந்தது என்பதையே சார்ந்திருக்கும். ஆபிரகாம் ஒரு விதத்தில் தேவனுடைய சமுகத்திற்கு அடையாளமாயிருக்கிறான். பூமியில் இருந்தபோது ஐசுவரியவான் தேவனுடைய பிரசன்னத்தை விட்டு வெகுதூரமாய் இருந்தான். இப்போது மரித்த பின்பும், தேவனுடைய பிரசன்னத்தை விட்டு, தான் வெகுதொலைவில் இருப்பதாகவே அவன் காண்கிறான்.

நீ தேவனை விட்டு வெகுதொலைவில் இருப்பாயாகில், அதை நீ எப்படி அறிந்துகொள்ளலாம்? நீ சபை ஆராதனையில் பங்குபெற்றுக் கொண்டிருக்கக் கூடும்; ஆயினும் அதே நேரத்தில் தேவனைவிட்டு நீ வெகுதொலைவில் இருக்கக் கூடும். நீ பாடிக்கொண்டிருக்கலாம், தேவனைத் துதித்து ஆராதித்துக்கொண்டிருக்கலாம், அதிக நேரம் ஜெபத்தில் செலவழித்துக்கொண்டும் இருக்கலாம். இருப்பினும் உன் இருதயம் தேவனை விட்டு வெகுதொலைவில் இருக்கக் கூடும். நீ தேவனுடைய சமுகத்தை உணராவிட்டால், நீ தேவனை விட்டுத் தூரமாய்ச் சென்றிருக்கிறாய் என்பதே அதன் அர்த்தமாகும். இப்போது தேவன் உனக்கு எவ்வளவு அருகில் இருப்பதாக நீ உணருகிறாயோ, அந்த அளவுக்கு மாத்திரமே நித்தியத்திலும் நீ அவருக்குச் சமீபமாய் இருப்பாய்.

பழைய ஏற்பாட்டுக் காலங்களில், குஷ்டரோகிகள் பாளயத்திற்குப் புறம்பே தங்கியிருக்க வேண்டியதாயிருந்தது. குஷ்டரோகத்தால் பாதிக்கப்பட்ட சரீரத்தின் பகுதிகள் எவ்வித உணர்ச்சியும் அற்றவையாய் இருக்கும்.

ஒரு பெரிய ஊசியை எடுத்து அந்த இடங்களில் குத்தினாலும், அங்கு எவ்வித வேதனையையும் குஷ்டரோகி உணரமாட்டான். அவ்வாறே, சபையில் தேவ ஊழியர் பிரசங்கித்துக்கொண்டிருப்பார்; உன் முன்னிலையிலேயே அவர் தன் ஜீவனை வார்த்துக்கொண்டிருப்பார்; உனக்கோ எந்த உணர்வும் இராது. உன் நிலைவரம் இதுவாயிருக்குமாயின், நீ தேவனின் பார்வையில் ஒரு குஷ்டரோகியே. தேவனுடைய பிரசன்னத்தை உணராத பட்சத்தில் நீ ஒரு குஷ்டரோகியே; ஆனால் தேவனுடைய வல்லமையினாலும் கிருபையினாலும் உன் குஷ்டரோகத்தைக் குணமாக்கக் கூடும். தேவனால் உனக்குப் புத்தம்புதியதொரு சரீரத்தைத் தரக் கூடும்.

பெருமையும் இறுமாப்பும் கொண்ட அந்த நாகமான் யோர்தானின் தண்ணீரில் முழுகினபோது புதிய மாம்சத்தைப் பெற்றான். நீயோ தேவனின் கிருபைக்குள் மூழ்க வேண்டும். நீ அவருடைய கிருபையின் வசனத்திற்குள் மூழ்க வேண்டும்; நீ பரிசுத்த ஆவியாகிய நதிக்குள் மூழ்க வேண்டும்.

இன்றைக்கே நீ கர்த்தரிடத்தில் திரும்பி வந்து, 'கர்த்தாவே, உம்மை விட்டுத் தூரமாயிருக்க நான் விரும்பவில்லை' என்று கூறு. உனக்கும் தேவனுக்கும் இடையே நீ ஓர் இடைவெளியை வைத்துக்கொண்டிருப்பாயாகில், பிசாசானவன் அந்த இடத்தை எடுத்துக்கொள்வான். எனவே கர்த்தராகிய இயேசுவுடன் உண்மையான நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள். இந்த உலகத்தை விட்டுச் சென்ற பின்பு தேவனை விட்டு வெகு தூரத்தில் இருப்பதாக நீ உணர்வது, அதிக காலதாமதமான ஒன்றாகிவிடும்!

செப்டம்பர் 15

தேவனுக்கேற்ற கண்ணீர் சிந்துவாயாக

"அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக் கொள்ளுகிறார்கள்; மழையும் குளங்களை நிரப்பும். அவர்கள் பலத்தின்மேல் பலம் அடைந்து, சீயோனிலே தேவசந்நிதியில் வந்து காணப்படுவார்கள்" (சங். 84 : 6, 7).

'அழுகையின் பள்ளத்தாக்கு' என்பது கண்ணீரின் பள்ளத்தாக்காகும். 'பள்ளத்தாக்கு' என்பது மனத்தாழ்மையைக் காட்டுகிறது. மனத்தாழ்மை உள்ளவர்கள் மாத்திரமே தேவனுக்கடுத்த காரியங்களுக்காக அழக்கூடியவர்களாயிருப்பார்கள். மேட்டிமையுள்ளவர்களால் தேவசமுகத்தில் அழ முடியாது. நம்மில் நொறுங்குண்டதும், நருங்குண்டதுமான ஓர் இருதயம் இருப்பதை நம் கண்ணீரே வெளிப்படுத்தும்.

உயிர்த்தெழுந்த பின்பு கர்த்தராகிய இயேசுகிறிஸ்து (பிரதான ஆசாரியராக) செய்ய வேண்டியதாயிருந்த முதல் செயல், தம்முடைய சொந்த பாவநிவாரண இரத்தத்துடன் பிதாவின் சந்நிதிக்குச் செல்வதாயிருந்தது. உயிர்த்தெழுந்த அன்று காலையில் அவர் பிதாவிடம் செல்லவிருந்தார். அவர் அதைச் செய்யுமுன் மற்றொரு முக்கியமான காரியம் குறுக்கிட்டது. மகதலேனா மரியாள் அவருக்காக அழுது கொண்டிருந்தாள். அவள் அந்த அதிகாலை நேரத்தில் கல்லறைக்கு வந்திருந்தாள் - அதுவும் தன்னந்தனியாகக் கல்லறைக்கு முன்பாக நின்றுகொண்டு அவள் அழுதுகொண்டிருந்தாள்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் வசித்த நாட்களில், அநேகர் அவரிடம் வந்து, சுகம், விடுதலை போன்றவற்றிற்காக அழுது மன்றாடியிருப்பார்கள். ஆனால் இங்கு கல்லறையண்டை மரியாள் வந்தது ஓர் ஆசீர்வாதம் பெறுவதற்காக அல்ல. *'நான் இயேசுவை என்னுடன் எடுத்துக்கொண்டுபோக விரும்புகிறேன்'* என்று அவள் கூறுகிறாள். அவளுக்கு வேண்டியதெல்லாம் ஆண்டவராகிய இயேசு மாத்திரமே. அன்பான தேவபிள்ளையே, கடந்த நாட்களில், 'கர்த்தாவே, எனக்கு நீர்தான் வேண்டும்' என்று சொல்லி நீ எவ்வளவு நேரம் கர்த்தராகிய இயேசுவுக்கு முன்பாகக் கண்ணீர்விட்டிருக்கிறாய்? ஆசீர்வாதங்களைப் பெறுவதற்காக நீ ஜெபித்திருக்கலாம். அது நல்லதுதான். ஆனால் ஓர் ஆழ்ந்த அர்த்தத்தில், நீ ஆண்டவராகிய இயேசுவை உடையவனாயிருப்பாயாகில், நீ அவருடைய எந்தவொரு ஆசீர்வாதத்தையும் கேட்க வேண்டிய அவசியமே இராது. *'இயேசு மாத்திரம் எனக்கு வேண்டும்!'* என்ற அந்த நிலைக்கு நாம் வந்துவிட்டால், பொருள் சம்பந்தமான தேவைகளுக்காக ஜெபிக்க நாம் மறந்துவிடுவோம்.

பதினாறாம் நூற்றாண்டில் பிரான்சு தேசத்தில் கயான் அம்மையார் (Madam Guyon) என்ற பரிசுத்தமான சீமாட்டி வாழ்ந்துவந்தார்கள். அவர்கள் தேவனிடம், 'கர்த்தாவே, நீர் இந்தப் பூமியில் எனக்குத் தர விரும்பும் யாவற்றையும் என் சத்துருக்களுக்குத் தந்துவிடும்; நீர் பரலோகத்தில் எனக்குத் தர வேண்டும் என்று விரும்புகிற அனைத்து ஆசீர்வாதங்களையும் பரிசுத்தவான்களுக்குத் தந்துவிடும்; ஆனால் எனக்கோ உம்மையே நீர் தந்துவிடும்' என்று ஜெபித்தார்கள்.

"சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்" (சங். 30 : 5). இது நமக்கு ஒரு இராக்காலமாய், அழுவதற்கான காலமாய் இருக்கிறது. இந்த நாட்கள் முடிந்து, நம்முடைய கண்ணீர்த்துருத்திகள் தேவனுக்கேற்ற கண்ணீரால் நிரப்பப்பட்டிருக்கும்போது, விடியற்காலத்தில் களிப்பு உண்டாகும். அப்போது உங்கள் கண்ணீரெல்லாம் ஆசீர்வாதத்தின்

குளங்களாக மாறும். அது உங்கள் மரணமோ அல்லது நீங்கள் கர்த்த ருடைய இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படுதலோ - எதுவானாலும், அது ஒளிவீசும் மகிமையுள்ள விடியற்காலமாயிருக்கும்.

செப்டம்பர் 16

நீ அந்தக் கழுதைக்குட்டியாயிருக்கிறாயா?

'மனுஷரிலொருவனும் ஒருக்காலும் ஏறியிராத கழுதைக்குட்டியைக் கட்டியிருக்கக் காண்பீர்கள்; அதை அவிழ்த்துக்கொண்டு வாருங்கள். அது ஆண்டவருக்கு வேண்டும்' (லூக்கா 19 : 30, 31).

அவ்வூரில் குதிரைகளும், மற்றும் சாதுவான வேறு பல மிருகங் களும் இருந்திருக்கக் கூடும். ஆனால் கர்த்தராகிய இயேசுவோ, கட்டப் பட்டிருந்ததும் அடங்காததுமான இந்தக் கழுதையே தமக்கு வேண்டுமென கோரினார். இந்த உலகில் நீ உன்னை ஒரு பெரிய மனிதன் என்று எண்ணிக் கொண்டிருப்பாயாகில், கர்த்தராகிய இயேசுவுக்கு நீ தேவையில்லை.

அந்தக் கழுதைக்குட்டி கர்த்தராகிய இயேசுவைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கவில்லை; கர்த்தராகிய இயேசுதான் அந்தக் கழுதைக் குட்டியின்மேல் நினைவுள்ளவராயிருந்தார். அக்கழுதைக்குட்டி கர்த்தராகிய இயேசுவின் மேல் யாதொரு அன்பும் காண்பிக்கவில்லை; கர்த்தராகிய இயேசுதான் அக்கழுதைக்குட்டியை நேசித்தார்.

இருவழிச் சந்தியிலே அக்கழுதைக்குட்டி கட்டப்பட்டிருந்தது (மாற்கு 11 : 4). ஒவ்வொரு தேவபிள்ளைக்கும் முன்பாக இரண்டு வழிகள் வைக்கப் பட்டுள்ளன - ஒன்று, 'சுய சித்தம்'; மற்றது, 'தேவசித்தம்'. கர்த்தராகிய இயேசு அந்தக் கழுதைக்குட்டியைப் பார்த்தபோது, அதின் மேல் அவர் உட்கார்ந்தார். அதற்கு முன் அது, ஒருவனும் ஒருக்காலும் ஏறியிராத கழுதைக்குட்டியாயிருந்தது என்று தேவனுடைய வசனம் கூறுகிறது. அது அவ்வளவு பயங்கரமானதும், அடங்காததும், ஒருவராலும் அடக்கப்பட முடியாததுமான ஒன்றாயிருந்திருக்கக் கூடும். ஆனால் கர்த்தராகிய இயேசு அதின் மேல் உட்கார்ந்தார். அந்த க்ஷணப்பொழுது முதற்கொண்டு அது செல்லும் திசை, வழிகள் யாவும் முற்றிலும் மாறுதலடைந்தன.

கழுதைக்குட்டியைக் கொண்டுவரும்படி கர்த்தராகிய இயேசு தம் முடைய சீஷர்களை அனுப்பியபோது, 'அக்கழுதைக்குட்டியை அடக்கி, பயிற்சித்து, பின்னர் கொண்டுவாருங்கள்' என்று அவர் அவர்களிடம்

சொல்லவில்லை. அது இருந்தவண்ணமாகவே அதை அவர் கொண்டுவரச் சொன்னார். அவர் அக்கழுதைக்குட்டியின் மேல் உட்கார்ந்தபோது, அதைப் பற்றிய அனைத்தும் மாற்றமடைந்தன. "*இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்*". கர்த்தர் இன்னும் உன்னை மாற்றவில்லையெனில், அவர் உன்னோடு இல்லாவிடில், அவர் உன்னை ஆவிக்குரிய பிரகாரமாக ஆசீர்வதிக்கக் கூடாதவராய் இருப்பாராயின், 'நான் ஒரு அடங்காத கழுதை' என்பதை நீ உணர்ந்து ஒத்துக்கொள்ளாமல் இருப்பதே அதன் ஒரு காரணமாயிருக்கக் கூடும். தேவனற்ற ஒருவனாய் நீ இருக்கும் பட்சத்தில், நீ வெறும் காட்டுக்கழுதையாகவே இருப்பாய். FWBDN என்ற பட்டம் பெற்றவர்களே தேவனுக்கு வேண்டும். I கொரிந்தியர் 1 : 27, 28 -இன் ஆங்கில மொழிபெயர்ப்பு காண்க: F - Foolish (பைத்தியமானவர்கள்), W- Weak (பெலவீனர்), B- Base (இழிவானவர்கள்), D-Despised (அற்பமாய் எண்ணப் பட்டவர்கள்), N- Not (ஒன்றும் இல்லாதவர்கள்). கர்த்தர் உனக்காகக் கிரியை செய்வதற்கு மிகப் பெரிய தடையாய் இருப்பது உன் பெருமையே ஆகும்.

செப்டம்பர் 17

நீ தேவனிடத்திலிருந்து உன்னை ஒளித்துக்கொள்ள இயலாது

"பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவ னாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டார்கள்" (ஆதி. 3 : 8).

ஒரு காலத்தில் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் மகிழ்ச்சியைக் கொண்டு வந்த அதே தேவனுடைய சத்தம், இப்போது பயத்தையும் திகிலையும் அவர்களுக்குக் கொண்டுவந்தது. தேவனின் நடையிலோ, சத்தத்திலோ ஏற்பட்ட மாற்றம் அல்ல, அவர்களுடைய சுபாவத்தில் ஏற்பட்ட மாற்றமே அவர்களுக்குத் திகிலைக் கொண்டுவந்தது. இன்றுங்கூட, பயமும் திகிலும் நம் சுற்றுப்புற சூழ்நிலைகளினால் கொண்டுவரப்படுவதில்லை; நம் உள்ளான ஜீவியத்தின் நிலைவரமே அவற்றின் காரணமாகிறது.

ஆதாம், 'நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்தேன்' என்று சொல்லுவதற்குப் பதிலாக, 'நான் உமது கட்டளையை மீறினதினால் (பாவம் செய்ததினால்) பயந்துபோய்விட்டேன்' என்று சரியான விதத்தில் அறிக்கை செய்திருந்திருக்க வேண்டும். ஆதாம் தன்னைத் தேவனிடமிருந்து ஒளித்துக்

கொண்டது மாத்திரமல்ல, உண்மையையும் தேவனுக்கு மறைத்துவிட்டான். "*தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்*" (நீதி. 28 : 13). மனிதன் அத்தி இலைகளால் தன்னை மூடிக்கொள்ள முயன்றான். எனினும் அவை அவனுக்கு உதவவில்லை. நம்முடைய சுய நீதிகள் எல்லாம் தேவனுடைய பார்வையில் அழுக்கான கந்தை மட்டுமே (ஏசாயா 64 : 6).

பாவமானது மனிதனின் நல்மனச்சாட்சியை அவனிலிருந்து உரிந்து போட்டு, அவனுடைய பார்வையிலும், தேவனின் பார்வையிலும் அவனை நிர்வாணியாக்கிற்று. இப்போது அவன் தனக்குச் சற்றும் அடைக்கல மாயிருக்க முடியாதவற்றை அடைக்கலம் என்று எண்ணி, அவற்றினால் தன்னை மறைத்துக்கொள்ள நாடி ஓடுகிறான். தேவனே நமது மறைவிடமா யிருக்கிறார். மனிதன் தேவனிடமிருந்து தன்னை ஒளித்துக்கொள்ளும்படி எங்கு போய்ப் பதுங்க முடியும்? "*சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்*" (எபி. 4 : 13).

ஒரு காலம் வரும்; அப்போது பொய்யான அடைக்கலங்கள் அனைத்தும் மறைந்துபோகும். "*பொய் என்னும் அடைக்கலத்தைக் கல்மழை அழித்துவிடும்; மறைவிடத்தை ஜலப்பிரவாகம் அடித்துக்கொண்டு போகும்*" (ஏசாயா 28 : 17). எனவே நாம் நம்முடைய எல்லாப் பொய்யான அடைக்கலங் களையும் விட்டுவிடுவோமாக. நம்முடைய தவறுகளை மூடி மறைக்கவோ, தேவனிடமிருந்து ஒளித்துக்கொள்ளவோ முயற்சிப்பதற்குப் பதிலாக, தாவீதைப் போல, "*உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்? ... உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது; ... உமக்கு இருளும் வெளிச்சமும் சரி*" (சங். 139 : 7, 12) என்று நாம் அவரை நோக்கிக் கதறுவோமாக.

செப்டம்பர் 18

என்னிலும் பெரிய கிரியைகளைச் செய்வான்

"***மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: ... என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்***"
(யோவான் 14 : 12).

பேதுரு கர்த்தராகிய இயேசுவை மறுதலித்தான். கர்த்தராகிய இயேசு மரித்த பின், மீன்பிடித்தலுக்குத் திரும்பிச் சென்ற முதல் நபர் அவனே. ஆனால் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றபின்பு, அவன் முற்றிலும் மாற்றப்பட்ட ஒரு மனிதனானான்; பரிசுத்த ஆவியின் வல்லமை அவனுக்குள் ஒரு அற்புதத்தை நடப்பித்தது!

சொல்லப்போனால், மிகவும் வியக்கத்தக்க கிருபையைப் (அனைத் தையும் கடந்து நிற்கும் கிருபை) பேதுருவின் ஊழியத்தில் நாம் காண்கிறோம் (அப். 5 : 14 - 16): "***திரளான*** *புருஷர்களும் ஸ்திரீகளும் ... பிணியாளிகளைப் படுக்கைகளின்மேலும் கட்டில்களின்மேலும் கிடத்தி,* ***பேதுரு நடந்துபோகையில்*** *அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர் மேல் படும்படிக்கு, அவர்களை வெளியே* ***வீதிகளில்*** *கொண்டுவந்து வைத்தார்கள். ...* ***அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள்***". உண்மை யில் அப்படிப்பட்ட அற்புதம், கிறிஸ்தவ சரித்திரத்தில் (பழைய ஏற்பாடு உட்பட) முன் ஒருபோதும் நிகழ்ந்ததில்லை. படுக்கைகளில் கிடந்த பிணியாளிகள் சுகமாவதற்கு, பேதுருவின் நிழல் அவர்கள் மீது படுவதே போதுமானதாயிருந்தது. வீடுகளோ, மண்டபங்களோ போதுமானதாக இல்லாத அளவிற்கு அவனை நாடிவந்த ஜனத்திரள் அவ்வளவு அதிக மானதாயிருந்தது; பிணியாளிகளை வீதிகளில் கொண்டுவந்து வைக்க வேண்டியதாயிற்று; ***அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள்.***

கர்த்தராகிய இயேசு இவ்வுலகில் ஜீவித்த நாட்களில் அவரது வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டு, அதன் மூலம் சுகம் பெற்றவர்கள் உண்டு; ஆனால் எவரேனும் அவரது நிழல்பட்டு சுகம் பெற்றதாக நாம் வாசிப்பதில்லை. ஆம்! கர்த்தராகிய இயேசு தாம் இப்பூமியிலிருந்தபோது செய்ததைக் காட்டிலும் மேன்மையான கிரியைகளைப் பேதுருவின் மூலமாகச் செய்தார். பரிசுத்த ஆவியின் வல்லமையினால் கர்த்தருடைய கிருபையானது, ஒரு நபருக்குள்ளும் அந்நபர் மூலமாகவும் எத்தனை அற்புதங்களைச் செய்யக்கூடியதாயிருக்கிறது, பாருங்கள்!

"***தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர் களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும்,*** *நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறேன்*" (எபே. 1 : 19).

செப்டம்பர் 19

கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தின் மூலம் உண்டாகும் தைரியம்

'***ஆகையால், சகோதரரே, நாம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப் பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால்,***

அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தி னாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறது' (எபி. 10 : 19, 20).

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிர வேசிப்பதற்கான வழி, திரைச்சீலையால் அடைக்கப்பட்டிருந்தது. பிரதான ஆசாரியன் கூட வருடத்தில் ஒரு நாள் பலி செலுத்தப்பட்ட மிருகத்தின் இரத்தத்துடன், பயத்தோடும் நடுக்கத்தோடும் அதற்குள் பிரவேசித்தான். ஏனெனில் அது அவனுக்கு மரண வழியாகவும் மாறிவிடக் கூடும்! ஆனால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் இதே வழியை நமக்கு ஜீவபாதையாக, ஜீவனுள்ள வழியாக மாற்றிவிட்டது!

எபிரெயர் 10 : 19 -இல் கூறப்பட்டுள்ள 'மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு' என்பது ஆங்கில வேதாகமத்தில், 'மகா பரிசுத்தத்திற்குள் பிரவேசிப்பதற்கு' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கர்த்தராகிய இயேசு வின் இரத்தத்தால் நாம் மகா பரிசுத்தமான ஜீவியத்திற்குள் பிரவேசிக்கும் தைரியத்தை பெற்றுக்கொள்கிறோம். எவ்வளவு பெரிய சிலாக்கியம்! அவருடைய இரத்தத்தினாலே நாம் மகா பரிசுத்தத்திற்குள் பிரவேசிக் கலாம்; நாம் ஒரு மகா பரிசுத்தமான ஜீவியம் செய்யலாம். கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்ட ஒரு பரிசுத்தவான், ஆழ்ந்த துன்பங் களிலுங்கூட, தெய்வீகமான தைரியமுள்ளவனாயிருப்பான்: "*நீதிமான்களோ சிங்கத்தைப்போலே தைரியமாயிருக்கிறார்கள்*"; '*சவுரியமானதும் ஒன்றுக்கும் பின்னிடையாததுமான சிங்கம்*' (நீதி. 28 : 1; 30 : 30) என நாம் வாசிக்கிறோம். உன் வாழ்க்கையில் ஏதேனும் பாவத்தை நீ மறைத்து வைத்திருந்தால், ஆபத்து நேரத்தில் உனக்கு யாதொரு தைரியமும் இல்லாமற்போகும்; உன் இருதயம் மெழுகுபோல் உருகிப்போகும் - "*ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்துபோவாயானால், உன் பெலன் குறுகினது*".

நாம் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் (புதிய எருசலேம், சீயோன்) பிரவேசிப்பதற்கு நமக்குத் தைரியம் உண்டாகும்படி, நம் இருதயத்தைக் கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டதாய்க் காத்துக்கொள்ள கர்த்தர் தாமே நம் அனைவருக்கும் உதவி புரிவாராக.

செப்டம்பர் 20

சத்தியத்தைத் தேடுதல்

"***ஆயக்காரருக்குத் தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்த சகேயு என்னப்பட்ட ஒரு மனுஷன், இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான்***" (லூக்கா 19 : 2, 3).

சகேயுவின் தொழில் சமுதாயத்தில் அற்பமாகக் கருதப்பட்ட ஒன்றாயிருந்தது. 'ஆயக்காரரும் பாவிகளும்' என்பது, ஜனங்களுக்கு அவர்கள் மேல் இருந்த வெறுப்பை வெளிப்படுத்தும்படி ஜனங்களால் உபயோகிக்கப்பட்டுவந்த சொற்றொடராயிருந்தது. ரோம அரசாங்கத்துக்காக வரி வசூலிப்பதே ஆயக்காரரின் தொழிலாகும். வரி வசூலித்தலுக்கான வரையறுக்கப்பட்ட கண்டிப்பான விதிகள் ஏதும் இல்லாதிருந்ததால், ஆயக்காரர்கள் இலஞ்சம் வாங்குவது வழக்கமாயிருந்தது.

சகேயு கர்த்தராகிய இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தமை யால், அவர் எப்படிப்பட்டவரோ என்று பார்க்க வகைதேடினான். அவன் குள்ளனாயிருந்தபடியால், அவரைப் பார்க்கும்படி அவன் ஒரு காட்டத்தி மரத்தின் மேல் ஏறினான். குள்ளனான ஓர் ஐசுவரியவான் காட்டத்தி மரத்தில் ஏறும் காட்சி, கூடியிருந்தவர்களுக்குக் கேளிக்கையான ஒரு நிகழ்ச்சியாக இருந்திருக்கும். ஆனால் அவமானமோ, பரியாசமோ, இவையொன்றும் கர்த்தராகிய இயேசுவைப் பார்க்க வேண்டும் என்றும், அவரைத் தனிப் பட்ட விதத்தில் தான் அறிந்துகொள்ள வேண்டும் என்றும் அவனிலிருந்த வாஞ்சையைச் சற்றேனும் குறைக்கவில்லை. நீ சத்தியத்தைத் தேடாதபடி நிந்தையும் பரியாசமும் உன்னை அதைரியப்படுத்துகின்றனவா?

கர்த்தராகிய இயேசுவைப் பார்ப்பதற்காகத் தான் மேலே ஏறும்படி யாக சகேயு ஒரு காட்டத்தி மரத்தைத் தெரிந்தெடுத்தது வியப்பூட்டுவதாக உள்ளது. வேறு அநேக உயரமான மரங்கள் எரிகோவில் இருந்திருக்கக் கூடும். ஆயினும் ஒரு பொருட்டாக எண்ணப்படாத இந்த மரத்தின் மேல் சகேயுவை ஏறச் செய்தது எது? இந்த மரம் வேறு அநேக விதங்களில் மேன்மையானதாயிராவிடினும், கர்த்தராகிய இயேசு நடந்து செல்லவிருந்த அதே பாதையின் ஓரத்தில் அது நின்றுகொண்டிருந்தது. எனவே, சகேயுவைக் கர்த்தராகிய இயேசுவைக் காணச்செய்யக்கூடிய ஒரே மரம் இது மாத்திரமாயிருந்தது. ஒரு அர்த்தத்தில், காட்டத்தி மரத்தைக் கர்த்தருடைய வழியில் ஜீவிக்கிற உண்மையான தேவ ஊழியருக்கு நாம் ஒப்பிடலாம். "*ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப் படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண் டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார்*" (I கொரி. 1 : 27, 28).

அன்பான வாசகரே, நீர் சமுதாயத்தில் அற்பமானவராகக் கருதப் படுகிறீரா? நீர் பரியாசத்திற்கும் அவமானத்திற்கும் இலக்கானவரா

யிருக்கிறீரா? சகேயுவைத் தேடிவந்த கர்த்தராகிய இயேசுவுக்கு நீர் தேவை! உண்மையான தேவ ஊழியரின் உதவியை நீர் நாடுவீராக. இந்தக் காட்டத்தி மரத்தைப் போல அவர்கள் ஒரு பொருட்டாக எண்ணப்படாத வர்களாயிருக்கலாம். ஆனால் தேவனுக்கு முன்பாக அவர்கள் மேன்மை யானவர்கள்; சத்தியத்தைத் தேடுகிறவர்களுக்கு அவர்கள் மிகவும் உதவி யாயிருக்கிறவர்கள்.

செப்டம்பர் 21

முரட்டாட்டம் பண்ணாதே!

"அப்படியே காயீன் கர்த்தருடைய சந்நிதியைவிட்டுப் புறப்பட்டு, ஏதேனுக்குக் கிழக்கான நோத் என்னும் தேசத்தில் குடியிருந்தான்" (ஆதி. 4 : 16).

காயீன் தன் பாவத்தைக் குறித்த மனஸ்தாபம் அற்றவனாயிருந்த படியால், தேவன் அவன் மேல் பாராட்டிய சகல அன்பும் பாதுகாவலும் அவனைத் தேவசமுகத்தில் காத்துக்கொள்ள இயலவில்லை. ஆதலால் அவன் கர்த்தருடைய சந்நிதியை விட்டுப் புறப்பட்டுச் சென்றதாக நாம் காண்கிறோம்.

"*நோத் என்னும் தேசத்தில் குடியிருந்தான்*" - 'நோத்' என்பதன் பொருள் 'அலைந்து திரிதல்' என்பதாகும். ஒருவன் பாவம் செய்து தேவசமுகத்தை இழந்துபோகும்போது, அவனுடைய பாவமானது, மலர்ப் படுக்கையிலும் அவனை இளைப்பாறுதலற்றவனாக்குகிறது என்பது உண்மையே. "*துன்மார்க்கரோ கொந்தளிக்கும் கடலைப்போலிருக் கிறார்கள்; ... துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று என் தேவன் சொல்லுகிறார்*" (ஏசாயா 57 : 20, 21).

கர்த்தர் அவனைக் குறித்து அவன் பூமியில் நிலையற்று அலைகிற வனாய் இருப்பான் என்று சொல்லியிருந்தும், தண்டனையை வெளியரங் கமாய் எதிர்க்கும் வண்ணம், அவன் ஒரு பட்டணத்தைக் கட்டி அதில் குடியிருந்தான் (ஆதி. 4 : 17). தேவனால் உண்டாகாத எந்தக் கிரியையும் நிலைநிற்க முடியாது. அவன் கட்டின நகரம் முற்றிலுமாக ஜலப்பிரளயத்தில் அழிந்துபோயிற்று என்பது வெளிப்படை.

அன்பான நண்பனே, நீ கர்த்தரை விட்டு விலகிப் போவதினால் யாதொரு நன்மையையும் அடைந்துகொள்ளப்போவதில்லை. உன் ஆசீர்

வாதங்கள் அனைத்தையும் இழந்து, உனக்கு நீயே அழிவை வருவித்துக் கொள்வது மட்டுமே உனக்குக் கிடைக்கும் பலனாயிருக்கும். நீ அவரது சமுகத்தை விட்டுவிலகி அலைந்து திரிந்துகொண்டிருந்தால், அவரண்டை திரும்பி வருவாயாக. நீ அவருடைய அன்புக்கு உன்னை ஒப்புக்கொடுத்து, மெய் மனஸ்தாபத்தோடு அவரிடம் திரும்பி வந்தால், அவருடைய சமுகத்தி லேயே அன்றி வேறெங்கும் கிடைக்காத சமாதானத்தையும் சந்தோ ஷத்தையும் இளைப்பாறுதலையும் திரும்பவும் நீ பெற்று மகிழுவாய்.

"*என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்*".

செப்டம்பர் 22

மாயையிலும் மாயை

"என் கைகள் செய்த சகல வேலைகளையும், நான் பட்ட எல்லாப் பிரயாசத்தையும் கண்ணோக்கிப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருந்தது; சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றுமில்லை" (பிர. 2 : 11).

சாலொமோனுக்குத் திராட்சத் தோட்டங்களும், பழத்தோட்டங்களும், பூந்தோட்டங்களும் இருந்தன; அவனுக்குத் தண்ணீர் நிறைந்த குளங் களும் இருந்தன. பல மாளிகைகளை அவன் கட்டினான். வெள்ளியும் பொன்னும் அவனுக்கு இருந்தன. பாடகரும் பாடகிகளும் அவனுக்கு இருந்தனர். இவை பாவ சிற்றின்பங்களாயிராவிடினும், உண்மையில் இவை உலக சிற்றின்பங்கள் ஆகும்.

தன் நாட்களில் இருந்த ராஜாக்கள் அனைவரிலும் பெரிய ஐசுவரிய வானாயிருந்த சாலொமோன் உலகத்தின் சகல சிற்றின்பங்களையும் அனுப விக்கக் கூடிய வாய்ப்புள்ளவனாயிருந்தான். அவன் அவை யாவற்றையும் அனுபவித்துப்பார்க்கவும் செய்தான். ஆனால் அவன் தன் வாழ்வின் இறுதியில் செய்யும் அறிக்கை என்ன? இவ்வெல்லாச் சிற்றின்பங்களும் அவனது வாழ்வின் இறுதியில் அவனுடைய ஆவிக்குத் துன்பத்தையே (மனதுக்குச் சஞ்சலம்) கொண்டுவந்தன என்றும், அவனுடைய உள்ளான மனிதன் இளைப்பாறுதல் அற்றதாயிற்று என்றும் அவன் புலம்புகிறான்! அவன் தன் இருதயத்தின் வெறுமையை (மாயை) அறிக்கையிடுகிறான். "*மாயை, மாயை, எல்லாம் மாயை*" என்று அவன் திரும்பத் திரும்பக்

கூறுகிறான். அவன் எவ்வளவதிகமாக உலகத்தை அனுபவிக்க முயற்சித் தானோ, அவ்வளவதிகமாய் மிகவும் பரிதபிக்கப்படத்தக்கவனும், துக்கம் நிறைந்தவனுமானான். தேவனிடத்திலிருந்து வருகிறவைகளைத் தவிர, ஏனைய அனைத்தும் வெறுமை அல்லது மாயையே ஆகும். சங்கீதக் காரன், "*உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு*" என்கிறான் (சங். 16 : 11).

அப். பவுல் உலகத்திலுள்ள எல்லாவற்றினின்றும் தன்னை வெறுமை யாக்கிக்கொண்டார். அவர் ரோமச் சிறைச்சாலையில் பல இன்னல்களை அனுபவித்துக்கொண்டிருந்த வேளையிலும் மற்றவர்களையும் தைரியப் படுத்துகிறவராகவும் மகிழ்ச்சியால் நிறைந்து வெற்றி முழக்கமிடுகிறவராக வும் இருந்தார். அந்தப் பரிசுத்தவானுடைய வெற்றிமுழக்கத்தைக் கவனியுங்கள்: "*கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்*"; "*மேலும், என் சகோதரரே, கர்த்தருக்குள் சந்தோஷப்படுங்கள். எழுதினவைகளையே எழுதுவது எனக்கு வருத்தமல்ல*"; "*கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமா யிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்*"; "*எல்லாம் எனக்குக் கிடைத்தது, பரிபூரணமும் உண்டாயிருக்கிறது*" (பிலி. 1 : 21; 3 : 1; 4 : 4, 18). அவர் தன் வாழ்வின் இறுதியில் ரோமச் சிறைச் சாலையின் மிக மோசமான நிலவறை ஒன்றில் அடைக்கப்பட்டிருந்து கொடிய இன்னல்களைச் சகித்துக்கொண்டு மரண தண்டனையை எதிர் நோக்கிக்கொண்டிருந்த வேளையிலும், "*நல்ல போராட்டத்தைப் போராடி னேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்*" (II தீமோ. 4 : 7, 8) என்று வீர முழக்கமிடுகிறார்.

உலகத்தின் எல்லாச் சிற்றின்பங்களையும் அனுபவித்த சாலொ மோனுக்கும், தனக்கு இலாபமாயிருந்த எல்லாவற்றையும் கிறிஸ்துவுக்காக நஷ்டமாக எண்ணி விட்டுவிட்ட அப். பவுலுக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக் கவனியுங்கள். உலக சிற்றின்பங்களை உல்லாசமாய் அனுபவித்த மனிதன் தன் வாழ்க்கையின் முடிவில் நிராசையும் சலிப்பும் ஏமாற்றமும் சஞ்சலமும் அடைந்தான். கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் விட்டு அவற்றை நஷ்டமென்று எண்ணிய மனிதனுடைய வாழ்க்கையின் முடிவில் அவனுக்குச் சந்தோஷமும் வெற்றிமுழக்கமும் உண்டாயிருந்தது. இன்றைக்கும் அப். பவுலின் வாழ்க்கையும், அவரது வார்த்தைகளும் ஆயிரமாயிரமானவர்களுக்கு ஜீவனும் வெளிச்சமும் அளிக்கின்றன.

கிறிஸ்துவின் நிமித்தம் ஒரு தாழ்மையான, எளிய வாழ்க்கை செய்தல், குறிப்பாக நம் வாழ்வின் இறுதியில் சந்தோஷத்தையும், சமாதானத்தையும், வெற்றியையும் கொண்டுவரும்.

செப்டம்பர் 23

பரிசுத்தமுள்ள ஆவி

"***பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமா யிருக்கிறார்***" (ரோமர் 1 : 5).

மிகப் பெரிய சத்துருவாகிய மரணத்தின் வல்லமையை மேற் கொள்ளும்படி ஒருவருக்கு இருக்கக்கூடிய மிகப் பெரிய வல்லமை பரிசுத்தமே ஆகும். மேற்காணும் வேதபகுதியில் கர்த்தராகிய இயேசு பரிசுத்தமுள்ள ஆவியினாலேயே மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார் என்று நாம் காண்கிறோம். நம்முடைய ஆவி பரிசுத்தமாக்கப்பட்டு, அது பரிசுத்தமுள்ள ஆவியாக மாற வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறின், நம்முடைய ஆவியானது, நம்மைத் தீட்டுப்படுத்தக்கூடிய ஏதுக்களாகிய இச்சை, பெருமை, பகை, பொறாமை, கோபம் போன்றவற்றிலிருந்து விடுதலையாக்கப்பட வேண்டும்.

நாம் மரிக்கும்போது, நம்முடைய சரீரத்தை அல்ல, நம் ஆவியையே நாம் தேவனுடைய கரத்தில் ஒப்புவிக்கப்போகிறோம். கர்த்தராகிய இயேசு, "*பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்*" என்று கூறி மரித்தார் (லூக்கா 23 : 46). இரத்தசாட்சியாகிய ஸ்தேவானும் தன்னைக் கொலைசெய்யும்படியாகத் தன்மேல் கல்லெறிந்துகொண்டிருந்தவர்களை மனப்பூர்வமாய் மன்னித்து, "*கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக் கொள்ளும்*" என்ற ஜெபத்துடன் மரித்தார் (அப். 7 : 59). *பரிசுத்தமான* ஒரு தேவனின் கரங்களில் ஒரு *பரிசுத்தமான* ஆவியை மட்டுமே நாம் கொடுக்க முடியும்.

எனவே நாம் சங்கீதக்காரனுடன் சேர்ந்து, '*தேவனே சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், சரியான, செம்மையான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்*' (சங். 51 : 10 -Eng.) என்று ஜெபிப்போமாக. நமக்குள் சரியான, செம்மையான ஆவி இருந்தால், நம் முகத்தில் துப்புகிறவர்கள் உட்பட, அனைவரிடமும் நமக்குச் சரியான, செம்மையானதோர் ஆவி இருக்கும்!

செப்டம்பர் 24

எப்போது பேசாதிருக்க வேண்டும்?

"***அப்பொழுது கர்த்தர் திரும்பி, பேதுருவை நோக்கிப்பார்த்தார்***" (லூக்கா 22 : 61).

பெரும்பாலும் ஜனங்கள் தங்கள் வாழ்க்கை, குடும்பம், பிள்ளைகள், மனைவி அல்லது புருஷன், மற்றும் தங்களைச் சுற்றியுள்ள அனைத்தையும் பற்றி சோர்வும் இளைப்பும் அடைகிற ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். சோர்ந்துபோனவர்களைக் கிறிஸ்துவிடம் கொண்டுவரும்படி அவர்களிடம் எவ்விதம் பேச வேண்டும் என்பதை முன் ஒருபோதும் இல்லாத விதத்தில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய காலம் இதுவே. சில சமயங்களில் மிக இனிமையான வார்த்தைகள் எனவும், சந்தர்ப்பத்திற்கு ஏற்ற மிகப் பொருத்தமான வார்த்தைகள் எனவும் நாம் நினைக்கும் வார்த்தைகள் நமக்கே கேடு விளைவிப்பவையாயும், சூழ் நிலையை இன்னும் மோசமாக்கிவிடக்கூடியவையாயும் அமைந்துவிடு கின்றன. பொதுவாக ஜனங்கள் எங்கும் மனப் பதட்டத்திற்காளான வர்களாகவும், அலட்சியம் செய்கிறவர்களாகவும், கோபமூட்டுபவர்களா கவும் இருக்கிறார்களே அன்றி, எந்த வார்த்தையையும் ஏற்றுக்கொள்பவர் களாக இருப்பதில்லை.

கர்த்தராகிய இயேசுவை மூன்று முறை மறுதலித்த பின் பேதுரு எவ்வளவு கலக்கமுற்ற நிலையில் இருந்திருப்பான்! அச்சமயத்தில், அவனைக் கடிந்துகொண்டு சீர்திருத்தும் நோக்கத்துடன் அவனிடம் கர்த்தராகிய இயேசு கூறியிருந்திருக்கக்கூடிய எந்த ஒரு வார்த்தையும் அவனுடைய இருதயத்தைக் கடினப்படுத்தியிருக்கும் அல்லது கசப் படையவே செய்திருக்கும். ஆனால் கர்த்தராகிய இயேசுவின் அந்த ஒரு பார்வை, உலகிலேயே மிகவும் வரம்பெற்றவராயிருக்கக் கூடிய ஒரு போத கரின் சிறந்த பிரசங்கம் ஒருவருக்குள் நடப்பிக்கக்கூடிய கிரியையைக் காட்டிலும் மிகப் பெரிய காரியங்களைச் செய்தது. "*அப்பொழுது கர்த்தர் திரும்பி, **பேதுருவை நோக்கிப்பார்த்தார்.** ... கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வசனத்தை உடனே பேதுரு நினைவுகூர்ந்து, வெளியே போய், மனங்கசந்து அழுதான்*" (லூக்கா 22 : 61, 62).

கர்த்தரிடமிருந்து வந்த அந்த ஒரு ***பார்வை*** - மனதுருக்கமும், அன்பும், இனிய உத்தமத்துடன் கூடிய அனுதாபமும் நிறைந்த அந்த ஒரு

பார்வையே அந்த வேலையைச் செய்தது. அது கர்த்தரின் வார்த்தையை அவனது நினைவுக்குக் கொண்டுவந்தது. தீய சகவாசத்திலிருந்து அது அவனை வெளியே வரச் செய்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, தனதருமை இரட்சகருக்கு விரோதமாகத் தான் இழைத்த அந்தக் கசப்பான பாவத் திற்காக அது அவனை மனங்கசந்து அழச் செய்தது. எப்படிப் பேச வேண்டும் என்ற விஷயத்தில் மட்டுமல்லாது, சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடியும், தேவ நடத்துதலின்படியும், எப்போது பேசாதிருக்க வேண்டும் என்பதை அறிந்திருக்கும்படியாகவும் நாம் நம்மை ஒழுங்குக்குட்படுத்திக்கொள்ள வேண்டும். மௌனமாயிருத்தல் பொன் போல தன்னை விளங்கப் பண்ணும் சில சந்தர்ப்பங்களில், ஒருவரால் செய்யப்படும் பிரசங்கமோ சலிப்புண்டாக்குவதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமற்றதுமாகிவிடுகிறது.

செப்டம்பர் 25

பெரியதொரு வித்தியாசம்

"***பூமியின்மேல் இருந்த உயிருள்ள வஸ்துக்கள் யாவும் அழிந்து, ... நிக்கிரகமாயின; நோவாவும் அவனோடே பேழையிலிருந்த உயிர்களும் மாத்திரம் காக்கப்பட்டன***" (ஆதி. 7 : 23).

பேழையிலிருந்த நோவாவை மேலே உயர்த்திய அதே தண்ணீர், பேழைக்கு வெளியே இருந்த ஜனங்களை மூழ்கி மாண்டுபோகச் செய்தது. இங்கே பாவிகளுக்கும் பரிசுத்தவான்களுக்கும், தேவனை நம்புகிறவர்களுக் கும் மனிதர் மீது அல்லது தங்கள் மீது நம்பிக்கை வைப்பவர்களுக்கும், தேவனை நேசிக்கிறவர்களுக்கும் அவரை நேசியாதவர்களுக்கும் இடையே உள்ள ஒரு பெரிய வித்தியாசத்தை நாம் காண்கிறோம். கிறிஸ்து அற்றவர்கள் தாங்கள் சந்திக்கும் சோதனைகளில் அமிழ்ந்துபோகிறார்கள். ஆனால் கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டு, அவருக்குள் தங்களை மறைத்துக்கொள்ளு கிறவர்களோ, உயர்த்தப்பட்டு, தேவனுக்கும் பரலோகத்திற்கும் சமீபமாக இழுக்கப்படுகிறார்கள். '*தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது*' (ரோமர் 8 : 28). 'பரிசுத்தமாக்கப்பட்டவர் களுக்கு உண்டாகும் துன்பங்கள் ஆவிக்குரிய பதவி உயர்வுகளே' என்னும் கூற்று உண்மையானதே!

எனவே நீங்கள் பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும்போது பீதியடைய வேண்டாம். தாவீதைப் போல, "*உம்மை என் ஆத்துமா அண்டிக் கொள்ளுகிறது; விக்கினங்கள் கடந்துபோகுமட்டும் உமது செட்டைகளின்*

நிழலிலே வந்து அடைவேன்" என்று சொல்லுங்கள் (சங். 57 : 1). நீங்கள் 'பேழைக்குள்' இருந்தால், எந்த வெள்ளப்பெருக்கும், பிரச்சினையும் - அது எவ்வளவு பெரிதாக இருந்தாலும் உங்களை அமிழ்ந்துபோகச் செய்ய முடியாது.

செப்டம்பர் 26

நீ மரிக்கும்போது ...

"***திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்***" (யோவான் 10 : 10).

பல ஆண்டுகளுக்கு முன்பு லண்டனில் ஈஸ்ட் சரே (East Surrey) மருத்துவமனையில் திருமதி பர்கஸ் (Mrs. Burgess) என்னும் ஒரு பெண்மணி மரணப்படுக்கையில் இருந்தாள். அவளுடைய படுக்கைக்கு அடுத்திருந்த படுக்கையில் ஜோன் பிளம்ரிட்ஜ் (Joan Plumridge) என்ற பெண்மணி மிகவும் வியாதிப்பட்டவர்களாகப் படுத்திருந்தார்கள். ஒரு நாள் இரவு ஜோன் அவர்கள், மருத்துவமனையின் நுழைவாயிலின் வழியாக இரண்டு கொம்புகளைக் கொண்ட ஒரு பிசாசு நுழைவதைக் கண்டார்கள். அது நேராகத் திருமதி பர்கஸின் படுக்கை அருகே சென்று, தன் கண்களுக்கு முன்பாகவே அப்பெண்மணியைத் தூக்கிக்கொண்டுபோவதை அவர்கள் கண்டார்கள். அந்நேரத்தில்தானே திருமதி பர்கஸ் மிகவும் சத்தமிட்டு அலறி, அடுத்த கணம் மரித்துப்போனாள். இதைக் கண்ட மாத்திரத்தில், அது வரை குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருந்த ஜோன் பிளம்ரிட்ஜ் அம்மையார் தன் பாவங்களை உணர்ந்து தன் வாழ்க்கையைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தார்கள். பிற்காலங்களில் அவர்கள் கிறிஸ்துவின் அருமையானதோர் ஊழியராக மாறி, நூற்றுக்கணக்கான ஆத்துமாக்களைக் கிறிஸ்துவண்டை வழிநடத்தினார்கள்.

"*திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்*" - ஆம். முதலாவது திருடன் அதாவது பிசாசானவன் நம் வாழ்க்கையிலிருந்து சமாதானம், சந்தோஷம், கிருபை ஆகியவற்றைத் திருடுகிறான். இறுதியில் நம் ஆத்துமாவையே அவன் திருடுகிறான். ஆனால் கர்த்தராகிய இயேசுவோ நமக்கு ஜீவனைத் தர, அதுவும் பரிபூரண ஜீவனைத் தர வந்தார்.

நீ இன்று மரித்தால், உன் நித்தியத்தை எங்கு கழிப்பாய்? கர்த்தராகிய இயேசுவும் அவருடைய தூதர்களும் வந்து உன்னைப் பரலோகத்திற்குக் கொண்டுசெல்வார்களா? அல்லது பிசாசு உன்னை நரக அக்கினிக்குத் தூக்கிக்கொண்டு போவானா? நீ கர்த்தராகிய இயேசுவைப் பின்பற்றுவதையே தெரிந்துகொள்வாயாக. அவரே உன் ஜீவனும் சமாதானமுமாயிருக்கிறார். உன் தீர்மானமே உன் முடிவான இலக்கை, உன் நித்தியத்தை நிர்ணயிக்கும்.

செப்டம்பர் 27

ஒரு வல்லமையான அபிஷேகம் உனக்குத் தேவை

"***அப்படியே சிம்சோனும் அவன் தாயும் தகப்பனும் திம்னாத்துக்குப் போகப் புறப்பட்டார்கள்; அவர்கள் திம்னாத் ஊர் திராட்சத் தோட்டங்கள்மட்டும் வந்தபோது, இதோ, கெர்ச்சிக்கிற பால சிங்கம் ஒன்று அவனுக்கு எதிராக வந்தது***" (நியா. 14 : 5).

தேவன் சிம்சோன் மூலமாய் நடப்பித்த வல்லமையான செயல்களுக்கு அல்லது அற்புதங்களின் ஊழியத்திற்கு இதுவே துவக்கமாயிருந்தது. பாலசிங்கத்தோடுள்ள அவனது நேரடியான இச்சந்திப்பு, அவன் முற்றிலும் எதிர்பார்த்திராத ஒன்றாயிருந்தது. திராட்சத்தோட்டங்களில் ஒரு சிங்கம் ஒளிந்திருக்கும் என்று ஒருவரும் ஒருபோதும் கற்பனை செய்து கூடப் பார்த்திருக்க முடியாது. இதேபோல் நம் ஆவிக்குரிய ஜீவியத்திலும், நாம் எதிர்பாராத திக்குகளிலிருந்தும், சற்றும் எதிர்பாராத விதத்திலும் சோதனைகள் திடீரென்று நமக்கு எதிரிட்டு வரக் கூடும். இருப்பினும் "*கர்த்தருடைய ஆவி அவன்மேல் பலமாய் இறங்கினதினால், அவன் தன் கையில் ஒன்றும் இல்லாதிருந்தும், அதை ஒரு ஆட்டுக்குட்டியைக் கிழித்துப் போடுகிறதுபோல் கிழித்துப்போட்டான்*" (நியா. 14 : 6).

கர்த்தருடைய ஆவியானவர் ***வல்லமையாக*** அவன் மேல் இறங்கியதற்கான ஒரு காரணம், அவனுடைய கையில் ஒன்றுமில்லாதிருந்ததே ஆகும் (வச. 6). பல சந்தர்ப்பங்களிலும், நம் சோதனையின் இக்கட்டான நேரத்தில், கிருபையின் ஆவி நம் மேல் இறங்காமற்போவதின் காரணம், பிரதிஷ்டைபண்ணப்படாத ஏதோ ஒன்று நம் கையில் இருப்பதே ஆகும். தேவசமுகத்தில் நம்மை நாமே வெறுமையாக்கி, தேவனை 'ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையாக' அனுபவிப்பது எவ்வளவு பெரும் பாக்கியம்!

பெரிதான ஒரு சோதனையை நாம் சந்திக்கும்போது, நமக்குத் தேவையானது வல்லமையான அபிஷேகமே அன்றி, அதை விடப் பெரியதும் சிறியதுமான வேறொன்றும் அல்ல. முதலாம் நூற்றாண்டின் சபை ***பெரிதான*** உபத்திரவத்தைச் சந்தித்தபோது '*அவர்களெல்லார்மேலும் **பெரிதான** கிருபை உண்டாயிருந்தது*' (அப். 4 : 33 -Eng.).

தாயின் கர்ப்பத்திலேயே தேவன் சிம்சோனைத் தெரிந்துகொண்ட போதிலும், அவன் அவரிடத்திலிருந்து இந்த வல்லமையான அபிஷேகத்தைப் பெறும் வரை அவனது ஊழியம் துவங்கவில்லை. (நம் ஆண்டவரின் ஊழியமும் அப்படியே.). இந்த அபிஷேகம் அவனைப் பாலசிங்கத்தை வெற்றியுடன் எதிர்கொள்ளச்செய்தது. அதுபோன்றே, தேவன் நம்மை மேலான உன்னத அழைப்பினால் அழைத்திருக்கக் கூடும்; என்றாலும் நமக்கு வரும் சோதனைகளை நாம் மேற்கொள்ளவும், எஜமானுக்கு உபயோகமான கனத்திற்குரிய பாத்திரமாக நாம் மாற்றப்படவும், வல்லமையான அபிஷேகம் நமக்குத் தேவை.

செப்டம்பர் 28

பலியினால் உடன்படிக்கை

"***பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார்***" (சங். 50 : 5).

நாம் நம்முடைய தேவனோடே ***பலியினாலே*** ஓர் உடன்படிக்கை செய்ய வேண்டும். நாம் செய்யும் ஒவ்வொரு உடன்படிக்கையும் ஏதேனும் ஒரு பலியை அதாவது தியாகத்தை உள்ளடக்கியதாயிருக்கும். அது ஏதேனும் ஒரு சுகபோகத்தை, சிற்றின்பத்தை அல்லது நமக்கு அருமையானதாக நாம் பேணிக்கொண்டிருக்கும் ஏதோ ஒன்றினை நாம் தியாகம் செய்தலாயிருக்கும். தேவனோடு உடன்படிக்கை செய்யாதவர்களும், வாழ்க்கையைக் குறித்துக் கவலையற்றவர்களாக அதை இலேசாக எண்ணுபவர்களும் மேன்மையான காரியங்களைப் பற்றிக்கொள்ள முடியாது. அவர்களால் தேவனோடு சேர்ந்து முன்னேறிச் செல்லவும் முடியாது.

'*என்னோடு உடன்படிக்கை செய்த என்னுடைய பரிசுத்தவான்கள்*' - கிறிஸ்தவ வாழ்க்கை ஓர் உடன்படிக்கையுடன் துவங்குகிறது. நாம் இரட்சிக்கப்படும்போது கர்த்தர் நம் தேவனாகிறார்; நாம் அவருடைய பிள்ளைகளாகிறோம். தண்ணீர் ஞானஸ்நானத்தில் நாம் நம்முடைய தேவனுடன் முதலாவது ஓர் உடன்படிக்கைக்குள் பிரவேசிக்கிறோம். அதன்

பின்னர், ஆவிக்குரிய ஜீவியத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் நாம் பல்வேறு உடன்படிக்கைகளைச் செய்து, தேவனோடு நாளுக்கு நாள் நெருங்கிக் கிட்டிச் சேருகிறோம். கர்த்தர் மகிமையில் வெளிப்படும் வரை இந்த உடன்படிக்கைகளை நாம் உண்மையாய்க் காத்துக்கொள்ள வேண்டும். ஒரு மனிதன் பரிசுத்தவானா, அல்லவா என்பது, அவன் தன் தேவனோடு தான் செய்திருக்கும் உடன்படிக்கைகளில் உறுதியாய் நிற்கிறானா, இல்லையா என்பதன் மூலம் நிரூபிக்கப்படுகிறது.

கர்த்தர் வெளிப்படும் காலம் நெருங்கிவிட்டது. "என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்" என்ற அவரது அறிவிப்பை நாம் வெகுவிரைவில் கேட்கப்போகிறோம். அப்போது கர்த்தரோடு பலியினாலே உடன்படிக்கை செய்தவர்கள் - அதில் இறுதி வரை உண்மையாயிருந்தவர்கள் - அவருடைய நித்திய வீட்டிற்குள் சேர்க்கப்படுவார்கள். தேவனுடைய பிள்ளையே, நீ அந்தக் கூட்டத்தில் காணப்படுவாயா? சிந்தித்துப் பார்!

செப்டம்பர் 29

விசுவாசத்தினால் தேவனைத் தரிசிப்பாயாக

"***கர்த்தரை எப்பொழுதும் எனக்குமுன்பாக நிறுத்தி நோக்கிக்கொண்டிருக்கிறேன்; நான் அசைக்கப்படாதபடி அவர் என் வலதுபாரிசத்திலே இருக்கிறார்***" (அப். 2 : 25).

மோசேயைக் குறித்து, "*விசுவாசத்தினாலே அவன் அதரிசனமான வரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்து, ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தைவிட்டுப் போனான்*" (எபி. 11 : 27) என்று நாம் வாசிக்கிறோம். நாம் விசுவாசத்தினால் கர்த்தரைத் தரிசிக்கிறவர்களாயிருந்தால், அவருக்குள் சகல கிருபையையும் நாம் கண்டடைவதால் அவரோடேகூட பாடுபட நம்மால் கூடும்.

அதரிசனமான தேவனைத் தரிசித்திருக்கும் ஒரு மனுஷன், காணப்படக்கூடிய எந்த ராஜாவுக்கும் பயப்படத் தேவையில்லை. ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், தேவாதி தேவனுமாகிய கர்த்தரே தன்னை அழைத்து, தன்னிடம் ஒரு தூதினைக் கொடுத்து அனுப்பியிருக்கிறார் என்பதை மோசே நன்கு அறிந்திருந்தான். எனவே கண்களுக்குப் புலப்படக்கூடிய எந்த ராஜாவினாலும் அவனுடைய தூதுவர்களாலும் அவனைத் தொட முடியவில்லை. ராஜ அரண்மனையில் உருவின

ஈட்டியுடன் அதன் வாயிலைக் காக்கும் போர்ச்சேவகரும், ராஜாவின் இருபுறமும் உருவின பட்டயத்தோடே நிற்கும் மெய்க்காவலரும் இருந் திருக்கக் கூடும். எனினும் அவன் யாதொரு பயமுமின்றி ராஜ அரண் மனைக்குள் பிரவேசித்தான்.

எலியாவும், "*இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்*" (I இராஜா. 17 : 1) என்ற வார்த்தைகளுடன் ஆகாப் ராஜாவைச் சந்தித்தபோது இதே தைரியத்தையே வெளிப்படுத்தினான்.

அருமையான தேவபிள்ளையே, அதரிசனமான தேவனைப் பற்றி உனக்குத் தெளிவான தரிசனம் இல்லாவிடில், நீ சந்திக்கும் பிரச்சினை களும் சோதனைகளும் மிக எளிதில் உன்னை அசைத்துவிடும். நீ வெகு சீக்கிரத்தில் மனமுறிவடைந்து, நம்பிக்கையிழந்துபோவாய்.

அதரிசனமான தேவனை அனுதினமும் தரிசிப்பதற்கு, நம் ஜீவியத்திலுள்ள கண்களுக்குப் புலப்படாத ஒவ்வொரு சிறிய பாவத்தை யும் நாம் பெரிய பாவமாக எண்ணி, அவற்றுடன் செயல்பட வேண்டும். மேலும் கண்களுக்குப் புலப்படக்கூடிய சிற்றின்பங்களைப் புறம்பே தள்ளாவிடில், அதரிசனமானதும், நித்தியமாய் நிலைத்திருப்பதுமான பேரின்பத்தை நம்மால் அனுபவித்து மகிழ முடியாது.

செப்டம்பர் 30

துரிதமாக நியாயந்தீர்க்காதே!

"***அப்பொழுது அபிமெலேக்கு ஆடுமாடுகளையும், வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும் ஆபிரகாமுக்குக் கொடுத்து, அவன் மனைவியாகிய சாராளையும் அவனிடத்தில் திரும்ப ஒப்புவித்தான்***" (ஆதி. 20 : 14).

தேவன் ஆபிரகாமுக்குத் தரிசனத்தில் தோன்றி, மகிமையின் தேவனாகத் தம்மை வெளிப்படுத்தியது போல, அபிமெலேக்குக்குத் தம்மை வெளிப்படுத்தியதாகவோ, எலியா, எலிசா ஆகியோரைப் போல, பலத்த அற்புதங்களை அபிமெலேக்கு நடப்பித்ததாகவோ நாம் வாசிப்ப தில்லை. எனினும் அநேக அம்சங்களில் ஆபிரகாம், எலியா, எலிசா ஆகி யோரைப் பார்க்கிலும் அபிமெலேக்கு மேன்மையானவனாக இருந்தான்.

ஆபிரகாமும் சாராளும் சேர்ந்து செய்த ஏமாற்றுக் கிரியை, அபிமெலேக்கையும், அவனது நீதியுள்ள தேசத்தையும் மிக எளிதில்

பாவத்திற்கு உட்படுத்தியிருந்திருக்கக் கூடும். எனினும் அபிமெலேக்கு அவர்கள் மீது எவ்வித விரோதத்தையும் காண்பிக்கவில்லை. அவன் காண்பித்ததெல்லாம் அன்பும் இரக்கமுமே! "*அன்பானது பிறனுக்குப் பொல்லாங்குசெய்யாது*" (ரோமர் 13 : 10). 'யாதொரு மாயக்காரரும் எங்கள் தேசத்தில் நுழைந்து தொந்தரவு செய்வதை நாங்கள் விரும்பவில்லை' என்று அபிமெலேக்கு பிரகடனம் செய்து, ஆபிரகாமும் சாராளும் தன் தேசத்தை விட்டுப் போக வேண்டும் என கட்டளையிட்டிருந்திருக்கலாம். இப்படி அவன் செய்திருந்தாலும் அது நியாயமான செயலாகவே இருந் திருக்கும். இதற்குப் பதிலாக அவனோ அவர்களுக்கு வெகுமதிகளைத் தந்து அனுப்புகிறான்! ஒருவன் தன் சத்துருக்களைச் சிநேகிக்க வேண்டும் என்று கர்த்தராகிய இயேசு போதித்தார். ஆனால் அப்போதனை வெளிப் படாதிருந்த காலத்திலேயே அதனை இத்தனை சிறப்பான வகையில் நிறைவேற்றிய சிலர் இருந்திருக்கின்றனர்.

அபிமெலேக்கு ஒரு பரிசுத்தவான் என்று அறியப்பட்டிருக்க வில்லை. எபிரெயர் 11 -ஆம் அதிகாரத்திலுள்ள விசுவாச வீரரின் பட்டிய லிலும் அவனுடைய பெயர் காணப்படுவதில்லை. எனினும் அவனது குணசீலம் எல்லாக் காலங்களிலும் ஜொலித்துப் பிரகாசிக்கிறது.

பெரும்பாலும், பரிசுத்தத்தைப் பற்றிய விஷயத்தில் நாம் ஒரு பொருட்டாக எண்ணாத பலரும், பெரிய பரிசுத்தவான்கள் என்று கருதப் படுகிற அநேகரில் காணப்படாத அதிகமான தெய்வீக சுபாவங்கள் உள்ள வர்களாய் இருக்கிறார்கள். பரலோகம் ஆச்சரியங்கள் நிறைந்த ஒரு இடமா யிருக்கும் என்று சொல்லப்படுகிறது. நாம் எதிர்பார்த்திராத எத்தனை பேரைப் பரலோகத்தில் சந்திக்கப்போகிறோம் என்பதை நாம் அறியோம். எனவே தேவனுடைய பிள்ளையே, யாரையும் அற்பமாக எண்ணாதே; மாறாக, எல்லாரிடத்திலும் அன்புகூர்ந்து, யாவரோடும் சமாதானமாக ஜீவிப்பாயாக.

அக்டோபர் 1

கிருபையின் ஆச்சரியமான கிரியை

"***பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று***"
(ரோமர் 5 : 20).

கர்த்தராகிய இயேசு சத்துருக்களால் பிடிக்கப்பட்டபோது சீஷர்கள் எல்லாரும் அவரைக் கைவிட்டனர். ஆனால் பேதுருவோ அதைக்

காட்டிலும் அதிக மோசமான ஒன்றைச் செய்தான். கர்த்தரைக் குறித்து தான் ஒருபோதும் கேள்விப்பட்டிராதவனைப் போல, அவன் அவரை மறு தலித்தான். முடிவாக அவன் "*அந்த மனுஷனை அறியேன்*" என்று சொல்லி, அவரைச் சபிக்கவும் சத்தியம்பண்ணவும் தொடங்கினான். அதன் பின்னர் அவன் வெளியே போய், மனங்கசந்து அழுதான் (மத். 26 : 70 - 75). ஆனால் அதனால் என்ன பிரயோஜனம்? அதன் பின் சில நாட்களுக்குள்ளாகவே தன் பழைய தொழிலுக்குத் திரும்பிப் போக அவன் திட்டமிட்டுக் கொண்டிருந்தான்! (யோவான் 21 : 3). ஒருவேளை நீ இந்தப் பேதுருவைப் போல் இருக்கலாம். குறிப்பிட்ட ஒரு பாவத்துக்காக மனஸ்தாபப்பட்ட பின் நீ அதை மீண்டும் செய்துகொண்டிருக்கலாம். நீ அதைரியப்பட்டுப் போகாதே. கர்த்தராகிய இயேசுவில் உனக்கு இன்னும் நம்பிக்கை இருக்கிறது!

கர்த்தராகிய இயேசுவைச் சபித்து, சத்தியம்பண்ணி, மூன்று முறை மறுதலித்து, பின்மாற்ற நிலையில் இருந்த பேதுருவே மறுபடியுமாகத் தன் ஆதி நிலைவரத்துக்குக் கொண்டுவரப்பட்டு, முடிவாகத் தன் ஜீவனையே தன் ஆண்டவருக்காகத் தத்தம் செய்யக் கூடியவரானார். தன்னுடைய ஆண்டவர் எவ்விதம் சிலுவையிலறையப்பட்டாரோ அதே விதமாகச் சிலுவையிலறையப்பட தான் பாத்திரனல்ல என்று உணர்ந்ததினிமித்தம் தான் விரும்பிக் கேட்டுக்கொண்டதின்படியே தலைகீழாகச் சிலுவை யிலறையப்பட்டார். தான் சிலுவையில் அறையப்பட்டுத் தொங்கும் நிலை யானது, தன் ஆண்டவருடைய பாதத்தைத் தன்னுடைய உதடுகள் முத்தமிடும் வகையில் இருக்க வேண்டுமென்று அவர் விரும்பினார். என்னே கிருபையின் அற்புதமான கிரியை!

அருமையான வாசகரே, பேதுருவைப் போல பின்மாற்றத் தினிமித்தம் நீர் குழப்பமடைந்து வாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கலாம். நீர் மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பினாலும், மீண்டும் மீண்டும் அந்தத் தவற்றையே இழைக்கிறவராக அல்லது அதைக் காட்டிலும் மோசமான தவற்றைச் செய்துகொண்டிருக்கிறவராக இருக்கக் கூடும். தேவகிருபை யானது, கர்த்தரை மறுதலித்து, மனந்திரும்பி, மீண்டும் பின்மாற்றத்திற்குத் திரும்பிய பேதுருவையே மாற்றியிருக்கக்கூடுமாயின், அது உம்மையும் மாற்ற வல்லமையுள்ளதாயிருக்கிறது என்று நீர் விசுவாசிக்கிறீரா? ஆம். பரிசுத்த ஆவியின் வல்லமையின் மூலம் உமக்குக் கிடைக்கக்கூடிய தேவகிருபையானது, உம்முடைய எல்லாத் தோல்விகளையும் தவறுகளை யும் காட்டிலும் பெரியதாயிருக்கிறதன்றோ? அவருடைய கிருபையை நம்புவீராக. "*பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று*" (ரோமர் 5 : 20).

அக்டோபர் 2

ஒவ்வொரு எண்ணமும் சிறைப்படுத்தப்படுதல்

"***எருசலேமின் மதில்களைக் கட்டுவீராக***" (சங். 51 : 18).

தாவீது, "*சீயோனுக்கு உமது பிரியத்தின்படி நன்மைசெய்யும்; எருசலேமின் மதில்களைக் கட்டுவீராக*" (சங். 51 : 18) என்று ஜெபித்த இந்த அருமையான ஜெபம் மிகப் பொருத்தமானதும் பாராட்டப்படத்தக்கது மான ஒன்றாகும். எருசலேமின் மதில்கள் கட்டப்படும்போது தேவன் தம் ஜனங்கள் செலுத்தும் பலிகளில் பிரியப்படுவார் (வச. 19).

நம்முடைய மனதைச் சுற்றிலும் வச்சிரக்கல்லாலான மிக அதிகக் கனமுள்ள (thick) ஒரு மதில் கட்டப்பட்டிருந்தால் மாத்திரமே பளிங்குக் கொப்பான தெளிவான ஒரு கிறிஸ்தவ ஜீவியம் நமக்குச் சாத்தியமாகும். அப்பொழுது அப். பவுலுடன் சேர்ந்து நாமுங்கூட, "*எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்*" (II கொரி. 10 : 4, 5) என்று சொல்லக்கூடியவர்களாயிருப்போம்.

'பாவிகளில் பிரதானமான பாவி' என்று தன் முந்தின ஜீவியத்தைக் குறித்துக் கூறுகிற அப். பவுல், தான் கிறிஸ்துவினால் ஆட்கொள்ளப்பட்ட பின்னர், தேவனுடைய கிருபையினால் (ஏதோ ஒரு சில எண்ணங்களை அல்ல) ஒவ்வொரு எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப் படுத்தக்கூடியவராயிருப்பதாகக் கூறுகிறார். "*எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது*" (I கொரி. 2 : 16) என்று அவர் பறைசாற்றுகிறார். நாம் கிறிஸ்துவின் சிந்தை உள்ளவர்களாயிருக்கத்தக்கதாக, தேவனுடைய ராஜரீக இரக்கத்தினால் எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்த நம்மால் கூடும் என்ற அறிவு நமக்குத் தைரியம் அளிப்பதா யிருக்கிறது.

நம்முடைய மனதைச் சுற்றிலும் ஒரு வன்மதிலைக் கட்டும்படியாக நாம் கர்த்தரிடத்தில் மன்றாடுவோமாக. எருசலேமின் மதில்களைக் கட்டும் பணியைத் தடைசெய்யும்படி சத்துருக்கள் எடுத்துக்கொண்ட பிரயாசங்களி னால் நெகேமியாவைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அவன், "*நாங்கள்*

எங்கள் தேவனை நோக்கி ஜெபம்பண்ணி, அவர்கள் நிமித்தம் இரவும்பகலும் ஜாமங்காக்கிறவர்களை வைத்தோம்" (நெகே. 4 : 9) என்று கூறுகிறான். நம்முடைய மனதைப் பளிங்குக்கொப்பாகத் தெளிவாக வைத்துக்கொள்ள நாம் அப்படிப்பட்ட உறுதியான தீர்மானமுள்ளவர்களாயிருப்போமாக.

அக்டோபர் 3

உண்மையாக ஒளிகொடுப்பவர்கள்

"***பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத்தக்கதாக வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்கள் உண்டாகக்கடவது, அவைகள் அடையாளங்களுக்காகவும் காலங்களையும் நாட்களையும் வருஷங் களையும் குறிக்கிறதற்காகவும் இருக்கக்கடவது***" (ஆதி. 1 : 14).

முதலாம் நாளில் தேவன் இந்த உலகத்தில் வெளிச்சம் உண்டாகச் செய்தார். இது அவருடைய கிருபையின் சுவிசேஷத்தின் ஒளியைக் குறிக் கிறது. நான்காம் நாளில், சுடர்கள் அதனதன் சரியான இடங்களில் வைக்கப் பட்டு, அவைகளின் இயக்கம் உறுதியாக நியமனம் செய்யப்பட்டது. நாம் இந்த உலகத்திற்குப் பிரயோஜனமானவர்களாக வேண்டுமாயின், நாம் உன்னதமான ஆகாயத்தில் இருக்க வேண்டும். எனவே நாம் ஒரு உன்னத ஜீவியம் செய்வோமாக.

'சுடர்கள்' என்பதற்கான எபிரெய பதம் 'ஒளிகொடுப்பவைகள்' என்று பொருள்படும். அவை ஒவ்வொன்றும் தன்தன் விண்வெளிப் பாதை யிலேயே நிலைத்திருக்க வேண்டும். ஒருவேளை சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவை யாதொரு விதிகளுக்கும் உட்படாமல் சுயாதீன மாக அலைந்து திரியுமாயின், விண்வெளியிலுள்ள கிரகங்கள் ஒன்றோ டொன்று மோதி, அதன் விளைவாக உலகம் முழுவதற்கும் பேரழிவு உண்டாகும். அதைப் போலவே, நாம் வைக்கப்பட்டிருக்கும் இடங்களில் உண்மையாக ஊழியம் செய்யும்படியாக, தேவன் நம்மை அந்தந்த இடங்களில் 'ஒளி கொடுப்பவர்களாக' வைத்திருக்கிறார்.

நம்மில் சிலர் சூரியனைப் போலவும், சிலர் சந்திரனைப் போலவும், சிலர் நட்சத்திரங்களைப் போலவும் இருக்கக் கூடும். மிகவும் பிரகாசமான சூரியனுங்கூட பூமியின் ஒரு பகுதிக்கு முழுமையாக மறைக்கப்பட்டிருக் கும் சமயங்கள் உண்டு. அதைப் போலவே, நீர் ஒரு பெரிய பரிசுத்த வானாகவும், மிகவும் அதிகமாகப் பிரகாசிப்பவராகவும், புத்திக்கூர்மை யுள்ளவராகவும் இருந்தாலும், நீர் மறைந்திருக்க வேண்டிய காலங்களும்

சமயங்களும் உண்டு; உம்முடைய வெளிச்சமோ அல்லது நீர் மற்றவர் களுக்குப் பிரயோஜனமாயிருப்பதோ எல்லாருக்கும் எல்லாக் காலங்களிலும் வெளிப்படாமலிருக்கலாம். ஆயினும், நமக்கென்று நியமிக்கப்பட்டுள்ள இடத்தில் நாம் நிலைத்திருப்போமாக. தேவனால் ஏற்படுத்தப்பட்ட சுடர்கள் தங்கள் கடமையை உண்மையாக நிறைவேற்றுவது போல, நாமுங்கூட நம்முடைய தேவனின் சுவிசேஷச் சுடர்களாக அவருக்கு உண்மையாக ஊழியஞ்செய்வோமாக. மற்றவர்களுக்குப் பிரயோஜனமாகத் திகழும் நமது ஊழியம் மறைந்திருக்கும்படி தேவனால் குறிக்கப்பட்டிருக்கும் காலங் களில் அது மறைந்தே இருப்பதாக.

கர்த்தர் நம்மை வைத்திருக்கும் இடத்தில் நாம் இருப்போமாயின் - ஒவ்வொரு சுடரும் இரவிலிருந்து பகலை வித்தியாசப்படுத்திக் காண் பிப்பது போல (ஆதி. 1 : 16 - 18), நாமும் பரிசுத்தத்துக்கும் அசுத்தத்துக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை மனிதருக்கு எடுத்துக் காண்பிக்கிறவர் களாக - அவருடைய நோக்கத்தை நிறைவேற்றுகிறவர்களாயிருப்போம்.

அக்டோபர் 4

மறைவான ஓர் ஆசீர்வாதம்!

'***அவர் கடலின்மேல் நடக்கிறதைச் சீஷர்கள் கண்டு, கலக்கமடைந்தார்கள்***' (மத். 14 : 26).

நம்பிக்கையிழந்த நிலையில் நடுக்கடலில் கலங்கித் தவித்துக் கொண்டிருந்த சீஷர்களிடம் சென்று அவர்களுக்கு உதவி செய்தது, கர்த்தராகிய இயேசு அவர்கள் மேல் பாராட்டிய கிருபையாக இருந்தது. அதை அவர்கள் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. நம்முடைய ஆவிக் குரிய ஜீவியத்திலுங்கூட, நாம் சற்றும் எதிர்பாராமலிருக்கும் நேரத்தில் கர்த்தர் நமக்கு உதவி செய்யும்படியாக வருகிறார்.

கர்த்தராகிய இயேசு தங்களை நோக்கி வருவதைக் கண்டபோது சீஷர்கள் மகிழ்ச்சியடைந்திருக்க வேண்டும். அவர்களோ ஏதோ ஒரு கலக்கம் தான் தங்களை அணுகி வருகிறது என்று நினைத்து, பயத்தினால் அலறினார்கள். இன்றுங்கூட அநேக தேவபிள்ளைகள் இந்த நிலைவரத்தி லேயே இருக்கின்றனர். அவர்களுடைய அக்கினி சோதனைகளில் 'உதவி' அவர்களை அணுகி வரும்போது, அவர்கள் பகுத்தறிவில்லாதவர்களா யிருப்பதால் திகிலடைந்து அலறுகின்றனர்.

அருமையான தேவபிள்ளையே, உன்னுடைய கண்கள் பிரகாசிப் பிக்கப்பட்டிருந்திருக்குமாயின், உன்னுடைய பிரச்சினைகளுக்கும் கலக்கங்

களுக்கும் காரணமாயிருப்பதாக நீ கருதும் அநேக காரியங்கள் உண்மையில் 'மறைவான ஆசீர்வாதங்களே' என்பதை உன்னுடைய மிகுந்த ஆறுதலுக்கேதுவாக நீ கண்டுணர்ந்து, அவற்றைப் பாராட்டுதலுடன் வரவேற்பாய். பயத்தினால் அலறுவதற்குப் பதிலாக, நீ மகிழ்ச்சியினால் ஆர்ப்பரிக்கக் கூடியவனாயிருப்பாய். எல்லாவற்றையும் தேவகுமாரனின் விசுவாசத்தினூடாகக் காண்பதற்குக் கர்த்தர் தாமே உன்னுடைய ஆவிக்குரிய கண்களைத் திறந்தருளுவாராக.

அக்டோபர் 5

பலவீனத்தில் பலன்கொண்டார்கள்

"*விசுவாசத்தினாலே ... பலவீனத்தில் பலன்கொண்டார்கள்*" (எபி. 11 : 33, 34).

எபிரெயர் 11 -ஆம் அதிகாரம் விசுவாச வீரர்களைக் குறித்துப் பேசுகிறது; ஏறத்தாழ பழைய ஏற்பாட்டுக் காலத்தைச் சேர்ந்த விசுவாச வீரர்கள் அனைவருமே இந்த அதிகாரத்திலுள்ள பட்டியலுக்குட்படுத்தப்பட்டிருக்கின்றனர். இந்தப் பட்டியலுக்குட்பட்டுள்ள ஆண்களும் பெண்களும் அசாதாரணமான பெலத்தோடும் தாலந்துகளோடும் திறமைகளோடும் பிறந்தவர்கள் என்று ஒருவர் எண்ணக் கூடும். ஆனால் அவர்களெல்லாரும் இயற்கையாகப் பெலவீனமான மனுஷராயிருந்தனர் என்பதும், தேவ மகிமைக்கென்று அசாதாரணமான காரியங்களைச் செய்வதற்காக அவர்களுக்கிருந்த பெலன் அல்லது திறமை கர்த்தரிடத்திலிருந்தே வந்தது என்பதுமான உண்மையை மேற்கூறப்பட்டுள்ள வேதபகுதி நமக்குத் தெளிவாக்குகிறது.

கிதியோன் மிகவும் கோழையாயிருந்ததினிமித்தம் மீதியானியருக்குப் பயந்து, தன் திராட்சை ஆலைக்குச் சமீபமாய்க் கோதுமையைப் போரடித்துக் கொண்டிருந்தான். சாமுவேல் தாவீதின் வீட்டுக்கு வந்தபோது, மற்றெல்லாப் பிள்ளைகளும் அழைப்பிக்கப்பட்டபோதிலும் அவனுடைய தகப்பனுங்கூட தாவீதை அழைப்பிக்க மறந்தவனாக, அவனை அழைப்பிக்க வேண்டியதின் அவசியத்தை உணராத அளவுக்கு அவன் அசட்டைபண்ணப்படத்தக்க மிகவும் அற்பமான ஒரு பையனாகத் தோன்றினான். 'யாக்கோபு' என்ற பெயரின் அர்த்தமே 'எத்தன்' என்பதாகும் - அவன் தன் சகோதரனையும், தன் தகப்பனையும், தன் மாமனையும் ஏமாற்றி, ஒரு அர்த்தத்தில் தன்னைத்தானே வஞ்சித்துக்கொண்டான். இருப்பினும், தேவன் தம்மை 'யாக்கோபின் தேவன்' என்று அழைத்துக்கொள்வதில் பிரியங்கொண்டார். நம்முடைய தேவன் இன்னும் 'யாக்கோபின் தேவனாகவே' இருக்கிறார்.

இயற்கையாகவே நீ மிகவும் பெலவீனமான ஒரு நபராயிருக்கக் கூடும். அநேக ஆவிக்குரிய அனுபவங்களைப் பெற்ற பின்னருங்கூட நீ முன்பு போலவே பெலவீனனாக, கோழையாக, எளிதில் புண்படக் கூடியவனாக, எளிதில் கோபப்படுகிறவனாக, உற்சாகமற்றவனாக, மற்றும் இது போன்ற நிலைவரங்களில் இருப்பதாக உணரக் கூடும். எது எப்படி இருப்பினும், *விசுவாசத்தினாலே நீ பெலவீனத்தில் பெலன்கொள்ள* முடியும்.

மனித சரீரத்தின் ஒரு எலும்பில் ஓரிடத்தில் முறிவு ஏற்பட்டு, பின்னர் சுகமாக்கப்படுமாயின், அப்பகுதியே அந்த எலும்பின் மிகவும் பலமான, உறுதியான பகுதியாக மாறி, இனி எளிதில் முறிவடையக்கூடாத பகுதியாக இருக்கும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். மனித சரீரத்தைச் சிருஷ்டித்த தேவனே நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தையும் கட்டி எழுப்புகிறவராயிருக்கிறார். தேவனுக்கு ஸ்தோத்திரம்! ***அவர் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் அம்சங்கள் எல்லாவற்றிலும் மிகவும் பெலவீனமான அம்சத்தையே எல்லாவற்றையும் காட்டிலும் மிகுந்த பெலமுள்ள அம்சமாக மாற்ற விரும்புகிறார்***.

அக்டோபர் 6

விடுதலைக்கான பிரமிக்கப்படத்தக்க ஓர் ஏது

'***கர்த்தர் மோசேயை நோக்கி: புறப்பட்டுப் போங்கள் என்றார். அப்பொழுது இஸ்ரவேலரின் சேனைக்கு முன்னாக நடந்த தேவதூதனானவர் விலகி, அவர்களுக்குப் பின்னாக நடந்தார்; அவர்களுக்கு முன் இருந்த மேகஸ்தம்பமும் விலகி, அவர்கள் பின்னே நின்றது***' (யாத். 14 : 15, 19).

சிவந்த சமுத்திரத்தண்டை கர்த்தர் மோசேயையும் தம்முடைய ஜனத்தையும் *புறப்பட்டுப்*போகக் (*முன்னேபோக* -Eng.) கட்டளையிட்ட பின், அது வரை அவர்களுக்கு முன்னாகச் சென்றுகொண்டிருந்த அவருடைய சமுகத்தின் தூதனானவருடன்கூட, மேக ஸ்தம்பமும் அவர்களுக்குப் *பின்னாகச்* சென்றது என்பது நமக்கு வியப்பூட்டும் வகையில் ஒரு முரண்பாடாகத் தோன்றுகிறதன்றோ! ஆனால் நம் தேவனிலோ அல்லது அவரது வார்த்தையிலோ யாதொரு முரண்பாடும் இல்லை! அவர் தம் ஜனத்திற்காகச் சகலத்தையும் ஒருங்கிணைந்து செயல்படச் செய்கிற தேவனாயிருக்கிறார். தேவனுக்கு ஸ்தோத்திரம்!

இந்த ஆச்சரியமான வேதபகுதியை நாம் தியானிக்கும்போது, தேவன் தம்முடைய ஜனத்துக்காக வைத்திருக்கும் ஈடு இணையற்ற தெய்வீக அருளையும் பாதுகாப்பையும் குறித்து நாம் வியப்படைகிறோம்.

இஸ்ரவேலர் சந்திக்க வேண்டியதாயிருந்த சகல தொந்தரவுகளிலும் பிரச்சினைகளிலும் இதுவே அதிக இக்கட்டான ஒன்றாயிருந்தது. தம்முடைய ஜனத்தை விடுதலையாக்குவதற்குத் தேவன் உபயோகித்த வழிகளெல்லாவற்றிலும் இதுவே மிகவும் பிரமிக்கத்தக்கதாகவும் இருந்தது.

பார்வோனும் அவனுடைய சேனைகளும் இஸ்ரவேல் புத்திரரை விடாப்பிடியாகத் தொடர்ந்து வந்தபோதிலும், அவர்கள் தம்முடைய ஜனங்களுக்கு இனி ஒருபோதும் ஒரு பயங்கரமாக இருக்கக் கூடாது என்று தேவன் முன்நிர்ணயம் செய்திருந்தார். ஒரு தண்ணீர்க் கல்லறையே அச்சத்துருக்களின் முடிவாக இருக்க வேண்டுமென தேவன் நிர்ணயித்திருக்கையில், மறுபக்கத்தில் தேவஜனத்துக்கு அதே தண்ணீர் அவர்களுக்கு இருபுறமும் அவர்களைப் பாதுகாக்கும் மதிலாக அமைந்தது. அது வரை அவர்களுக்கு முன்னே சென்றுகொண்டிருந்த தேவதூதனான வரும் மேக ஸ்தம்பமும் இப்பொழுது அவர்களுக்குப் பின்னாக வந்த போது தேவன் தங்களைக் கைவிட்டுவிட்டார் என்று அவர்கள் எண்ணி வெகுவாகப் பயந்திருக்கக் கூடும். ஆனால் தேவன் தாம் அவர்களைக் கைவிட்டதினாலல்ல, அவர்களை நேசித்து எகிப்தியர் அவர்களை மேற்கொள்வதைத் தடுக்க விரும்பியதினாலேயே அப்படிச் செய்தார். சத்துருவின் மேல் இருளைக் கொண்டுவந்த அதே மேகஸ்தம்பம், தேவஜனங்களுக்கு இரவு முழுவதும் வெளிச்சத்தைக் கொண்டுவந்தது.

அதைப் போலவே, அருமையான வாசகரே, பிரச்சினை போல் தோன்றும் அதே காரியங்கள் மெய்யாகவே தேவஜனங்களுக்கு ஒரு ஆசீர்வாதமாக இருக்கின்றன! எல்லாக் காரியங்களும் நன்மை அளிப்பவையாக நமக்குத் தோற்றமளிக்காமலிருக்கக் கூடும். ஆனால் '*தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது*' (ரோமர் 8 : 28).

அக்டோபர் 7

ஒரு நொறுங்குண்ட இருதயம் தேவை

"***தேவனாகிய கர்த்தர் பூமியின்மேல் இன்னும் மழையைப் பெய்யப் பண்ணவில்லை; நிலத்தைப் பண்படுத்த மனுஷனும் இருந்ததில்லை. அப்பொழுது மூடுபனி பூமியிலிருந்து எழும்பி, பூமியையெல்லாம் நனைத்தது***" (ஆதி. 2 : 5, 6).

பூமியிலிருந்து எழும்பிய மூடுபனியினால் பூமியை நனைப்பதில் தேவன் விருப்பமுள்ளவராயிருந்தார். பூமியிலிருந்து எழும்பிய மூடுபனி

யானது, பூமிக்குரிய பற்றுகள் எல்லாவற்றினின்றும் தங்களைக் காத்துக் கொண்டு, அவை யாவற்றிற்கும் மேலானதொரு தூய்மையான உன்னத ஜீவியம் செய்யும் பரிசுத்தவான்களுக்கு ஒப்பிடப்படலாம். மற்றவர்களிலுள்ள வறண்ட அனுபவங்களை நீக்கவும், அவர்களுக்கு ஓர் ஆசீர்வாதத்தின் ஊற்றாக இருக்கவும் தேவன் அப்படிப்பட்ட பரிசுத்தவான்களை உபயோகிப்பதில் பிரியமுள்ளவராயிருக்கிறார்.

மனிதன் பாவம் செய்த நாள் வரை நிலத்தைப் பண்படுத்துவதில் பாடுபட வேண்டிய அவசியம் அவனுக்கிருக்கவில்லை. அவ்வாறே, மனிதன் பாவம் செய்யும் வரை அவனுடைய இருதயம் மிருதுவானதாக, பூரணமானதாக, பாவமற்றதாக இருந்தபடியினால், அது நொறுக்கப்பட வேண்டிய யாதொரு அவசியமும் இருக்கவில்லை. ஆனால் மனிதன் பாவம் செய்தபோது, தேவன் பூமியைச் சபித்தார்; அது முள்ளையும் குருக்கையும் முளைப்பித்தது. இப்பொழுது மனிதன் பாடுபட்டு நிலத்தைப் பண்படுத்த வேண்டியதாயிற்று. முள்ளும் குருக்கும், மனிதனுடைய விழுகைக்குப் பின் அவனில் வளர்ந்த தீய சுபாவங்களுக்கு ஒப்பிடப்படலாம். இப்படிப்பட்ட தீய சுபாவங்கள் நம்மிலிருந்து அகற்றப்படும்படியாக, நாம் ஒரு நொறுங்குண்ட இருதயத்துக்காகப் பிரயாசப்பட வேண்டும்.

கனி வகைகளையும், பூக்களையும், உபயோகமுள்ள மற்ற பல மரங்களையும் விளையச்செய்வதற்கு நிலத்தைப் பண்படுத்துதல் அவசியமாயிருந்தது. அவ்வாறே, நம்மில் சுகந்த வாசனை வீசக்கூடிய ஜீவியமும் (பூக்கள்), திவ்விய சுபாவங்களும் (கனிகள்) உண்டாக வேண்டுமாயின், நம்முடைய கடினப்பட்ட இருதயம் நொறுக்கப்பட வேண்டியது அவசியமே.

நாம் யாவருக்கும் ஓர் ஆசீர்வாதத்தின் ஊற்றாக மாறும்படி, ஒரு நொறுங்குண்ட இருதயத்துக்காகப் பிரயாசப்பட்டு, நம்மிலுள்ள தீய சுபாவங்கள் எல்லாவற்றையும் அகற்றி, வாசனை வீசக்கூடியதும் தெய்வீகமானதுமான சுபாவத்தை நம்மில் விருத்திசெய்துகொள்ளுவோமாக.

அக்டோபர் 8

நீ எங்கே போய்க்கொண்டிருக்கிறாய்?

"***தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட***

சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?" (I யோவான் 4 : 20).

பல வருடங்களுக்கு முன்பு, கிரேஸ் என்னும் பெயர்கொண்ட மிகவும் அருமையான விசுவாசி சகோதரி ஒருவர் இருந்தார்கள். ஒரு காலத்தில் இந்துமதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்த அவர்கள் கர்த்தரை ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நான சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டார்கள். அவர்கள் தசமபாகமும் காணிக்கையும் கொடுப்பதில் உண்மையுள்ளவர்களாய் இருந்தார்கள். கர்த்தருக்கு ஊழியஞ் செய்வதிலும் அவர்கள் வைராக்கியமுள்ளவர்களாய் இருந்தார்கள்; அநேக ஆத்துமாக்களை அவர்கள் கிறிஸ்துவிடம் வழிநடத்தினார்கள். அவர்கள் தன்னுடைய மகனையுங்கூட கர்த்தரின் ஊழியத்துக்காக அர்ப்பணித்தார்கள்.

ஒரு நாள் அச்சகோதரி அதிகமாக வியாதிப்பட்டு மரணத்தருவாயிலானார்கள். அப்பொழுது அவர்கள், மகிமையுடன் பிரகாசித்துக்கொண்டிருந்த புதிய எருசலேம் நகரத்தை ஒரு தரிசனத்தில் கண்டார்கள். அவர்கள் மிகவும் சந்தோஷப்பட்டு, கர்த்தரிடம், 'கர்த்தாவே, நான் இப்பொழுதே அங்கு வர வாஞ்சிக்கிறேன். என்னுடைய பிள்ளைகளையெல்லாம் உம்முடைய பொறுப்பில் விட்டுவிடுகிறேன்' என்று கூறினார்கள். கர்த்தர் மறுமொழியாக, 'நீ பரலோகத்துக்கு வருவதில்லை; நீ நரகத்துக்குத்தான் போய்க்கொண்டிருக்கிறாய். நான் உனக்குக் காண்பித்த புதிய எருசலேம் பட்டணமே நான் உனக்காக ஆயத்தம்பண்ணின ஸ்தலமாகும். ஆனால் நீயோ அதற்குத் தகுதியற்றவளாகி, இப்பொழுது நரகத்துக்கு நேராகச் சென்றுகொண்டிருக்கிறாய்' என்று கூறினார். சகோதரி கிரேஸ் அதிர்ச்சியுற்று, 'என்ன ஆண்டவரே! நான் உம்முடைய பிள்ளை தானே! நான் எப்படி நரகத்துக்குச் செல்ல முடியும்?' என்று கேட்டார்கள். கர்த்தர் அவர்களிடம், 'இல்லை, நீ நரகத்தின் பிள்ளைதான். நீ உன்னுடைய மூத்த சகோதரியை வெறுத்து, அவளோடு நீண்ட நாட்களாகப் பேசாமலிருக்கிறாய். ஆகவே, நீ நரகத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறாய்' என்று பதிலளித்தார். மனந்திரும்பாமல் இன்னும் இந்துவாகவே இருந்த தன்னுடைய சகோதரியிடம் தான் கொண்டிருந்த வெறுப்புணர்வைக் குறித்து சகோதரி கிரேஸ் உணர்த்தப்பட்டார்கள். அவர்கள் கர்த்தரிடம், 'கர்த்தாவே, தயவுசெய்து என்னை இப்பொழுது எடுத்துக்கொள்ளாதேயும்; நான் என்னுடைய பாவத்தை உணருகிறேன்; நான் என்னுடைய சகோதரியை மன்னித்து, அவர்களோடு ஒப்புரவாகிக்கொள்ளுகிறேன். தயவுசெய்து எனக்கு மற்றுமொரு தருணத்தைத் தாரும்' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்கள்.

தேவனுக்கு ஸ்தோத்திரம். கிரேஸ் அப்பொழுது மரிக்கவில்லை. அவர்கள் தன்னுடைய சகோதரியை அழைத்தனுப்பி, அவர்களை

அரவணைத்து, அழுது மன்னிப்பு கேட்டார்கள். கர்த்தர் சகோதரி கிரேஸைப் பூரணமாகச் சுகமாக்கினார். அவர்களுடைய அன்பும், தன்னைத் தாழ்த்தி மன்னிப்பு கேட்ட செயலும் அந்த மூத்த சகோதரியைத் தொட்டதினிமித்தம் அவர்களும் கர்த்தரைத் தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள்.

நீங்களும் உங்களுடைய மனைவி, புருஷன், பிள்ளைகள், தகப்பன், தாய், புருஷனின் (அல்லது மனைவியின்) குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் மேல் பகையை வைத்துக்கொண்டிருப்பினும், நீங்கள் மறுபடியும் பிறந்த ஒரு கிறிஸ்தவராகவோ, அல்லது ஒரு பெந்தெகொஸ்தே விசுவாசியாகவோ இருப்பதினால் பரலோகத்துக்குச் சென்றுகொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கக் கூடும். உங்களை நீங்களே வஞ்சித்துக்கொள்ள வேண்டாம். நீங்கள் கண்களினால் காண்கிற உங்கள் சகோதரனையோ, சகோதரியையோ, புருஷனையோ அல்லது மனைவியையோ உங்களால் நேசிக்க முடியவில்லையெனில், நீங்கள் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூர முடியும்? உங்கள் இருதயம் பளிங்கைப் போல துலாம்பரமானதாக இருக்கிறதா என்பதையும், உங்களுக்கு ஒருவர் மீதும் - மரித்துப்போன ஒருவர் மீதும்கூட - பகையுணர்வில்லை என்பதையும் நிச்சயப்படுத்திக்கொள்ளுங்கள்.

அக்டோபர் 9

சில வார்த்தைகளில் அநேக காரியங்கள்

"***இளைப்படைந்தவனுக்குச் சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல நான் அறியும்படிக்கு, கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் கல்விமானின் நாவைத் தந்தருளினார்***" (ஏசாயா 50 : 4).

பெரும்பாலான சந்தர்ப்பங்களில், அதிகமாகப் பேசுவதற்கு நமக்குக் கல்வியறிவு வேண்டுமென்ற அவசியமே இல்லை; ஆனால் 'ஒரு வார்த்தை' பேசுவதற்கு நாம் அதிகமாகக் கற்றிருக்க வேண்டியது அவசியம்.

ஒரு விஷயம் மிகவும் முக்கியமான ஒன்றாயிருப்பினும், அது, வாசிப்பவர்கள் பொறுமையிழந்துபோகும் அளவிற்கு மிதமிஞ்சிய அளவிலான மிகப் பெரியதொரு புத்தகமாக எழுதப்பட்டிருக்குமாயின், அது பெரும்பாலும் குறைவான பலன்களையே தரும். நம்முடைய அனுதின ஜீவியத்தில் நாம் பேசும் வார்த்தைகளும் அப்படியே!

கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டு மரித்த பின்னர் மகதலேனா மரியாள் ஆழ்ந்த துயரம் நிறைந்ததொரு காலகட்டத்தினூடாகச் சென்றாள்.

கடைசியாக அவளால் அதற்கு மேல் வீட்டுக்குள் தங்கியிருக்க முடியாத அளவுக்கு அவள் மிகுந்த மனவேதனைக்குள்ளானாள். வாரத்தின் முத லாம் நாள் அதிகாலையில், தான் மிகவும் அதிகமாக அன்புகூர்ந்த தன் ஆண்டவரின் மரித்த சரீரத்தை எடுத்துக்கொள்ளும்படியாக அவள் கல்லறைக்கு ஓடினாள். அப்போது, கர்த்தரிடத்திலிருந்து புறப்பட்ட ஒரு வார்த்தை மரியாளுக்குள் ஒரு ஆச்சரியமான கிரியையை நடப்பித்தது. அந்த ஒரு வார்த்தையானது, அச்சூழ்நிலையின் மேல் ஒரு காந்தத்தைப் போன்ற வசீகரிக்கும் சக்தியுள்ளதாக இருந்தது.

"*இயேசு அவளை நோக்கி: மரியாளே என்றார். அவள் திரும்பிப் பார்த்து: ரபூனி என்றாள்; அதற்குப் போதகரே என்று அர்த்தமாம்*" (யோவான் 20 : 16). 'மரியாளே' என்று கர்த்தரிடத்திலிருந்து புறப்பட்ட அந்த ஒரு வார்த்தை அவளுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் மகத்தான கிரியையை நடப்பித்தது; அதற்குப் பிறகு அவள் துயரமுள்ள பழைய மரியாளாய் இருக்கவில்லை. அவளுடைய இரட்சகரிடமிருந்து புறப்பட்ட அந்த ஒரு வார்த்தை, தன்னோடு பேசிக்கொண்டிருந்தவரும், முதலில் தோட்டக்காரன் என்று தான் தவறாக விளங்கிக்கொண்டவருமான அவர் யார் என்பதை அவளுக்கு உணர்த்திற்று. அதற்கு முன், கர்த்தர் அவளுக்கு அருகில் நின்றுகொண்டிருந்தபோதிலும், அவள் அவரைக் கர்த்தராகிய இயேசு என்று அறியவில்லை. ஒரு பிரசங்கம் அல்ல, ஒரே ***ஒரு வார்த்தை***தான் அவள் அவரை இனங்கண்டுகொள்ளும்படி செய்தது; அது அவளுடைய எல்லாப் பயங்களையும் அதைரியங்களையும் சோர்வுகளையும் அகற்றி, அவளுடைய இருதயத்தைப் பரலோக சந்தோஷத்தினாலும் சமாதானத் தினாலும் கிருபையினாலும் நிறைத்து, அவளைப் பரவசமடையச் செய்தது.

"*சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல*" நாம் கற்றுக்கொள்வோமாக.

அக்டோபர் 10

வேடனுடைய கண்ணி

"***உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான். ... அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கு ... தப்புவிப்பார்***" (சங். 91 : 1, 3).

'நிழல்' என்னும் பதம் எபிரெய மொழியில் ***பாதுகாவல்*** என்று பொருள்படும். ஒரு நபர் ஒரு சிங்கத்திற்குத் தன்னை மறைத்துக் காத்துக் கொள்ளும்படி ஒரு மரத்தின் நிழலில் இருக்க முடியாது. நாம்

அல்லலுற்றிருக்கும் சமயங்களில் நம்முடைய தேவனைப் போல் நம்மை ஆதரிக்கவோ, காப்பாற்றவோ ஒருவராலும் முடியாது. நாம் உன்னத மானவரின் மறைவிடத்திலிருந்தால் மட்டுமே நம்முடைய யெல்ஷதா யாகிய (El-shaddai) சர்வவல்லமையுள்ள தேவனின் பாதுகாவலுக்குள் இருக்க முடியும். அந்த மறைவிடத்துக்குள் எந்தவொரு சத்துருவும் உட்புக முடியாது. சத்துருவால் நம்மைக் காணவுங்கூட முடியாது. தாயைப் போன்ற நம்முடைய தேவன் நம்மை அவ்விதமாகப் பாதுகாப்பார்!

"*அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கு ... தப்புவிப்பார்*" (வச. 3) - பறவையானது கண்ணியிலகப்படும் வரை வேடன் மறைந்தே இருப்பான். பறவை கண்ணிக்குள் விழுந்துவிட்டால், அது தப்பிப் பிழைத்து உயிர் வாழ்வதற்கான எல்லா நம்பிக்கையும் அற்றுப்போய்விடும்.

பாவம் ஒரு கண்ணியாயிருக்கிறது. 'பாவம் முதலாவது வஞ்சிக் கிறது; பின்னர் உணர்வற்றவர்களாக்குகிறது; அதற்குப் பின்னர் அழிக்கிறது' என்று ஒரு தேவமனிதன் கூறியிருக்கிறார். '*அவன் ஒரு குருவி தன் பிராணனை வாங்கும் கண்ணியை அறியாமல் அதில் விழத் தீவிரிக்கிறது போல போனான்; அம்பு அவன் ஈரலைப் பிளந்தது*' (நீதி. 7 : 23). பலருடைய விஷயத்தில், அவர்கள் தாங்கள் ஒரு மரணக் கண்ணியில் சிக்கிக் கொண்டிருப்பதை உணருவதற்கு முன்பாகவே, தங்கள் பாவத்தை விட்டு வெளியே வர முடியாத அளவுக்கு அதில் ஆழமாக அமிழ்ந்து விடுகிறார்கள்.

மரணம் ஒரு கண்ணியாயிருக்கக் கூடும். "*பாதாளக் கட்டுகள் என்னைச் சூழ்ந்து கொண்டது; மரணக்கண்ணிகள் என்மேல் விழுந்தது*" (II சாமு. 22 : 6). தேவனுடைய நேரம் வருமுன்னதாகவே நாம் அந்தக் கண்ணிக்குள் விழுந்து மரிக்கும்படியாகப் பிசாசானவன் நமக்குக் கண்ணியை வைப்பான். அது மரணக் கண்ணி என்பதை நாம் பகுத்தறியக் கூடாமல் இருக்கலாம். வியாதியானது, பரலோக ராஜ்யத்துக்குள் பிரவே சிக்கும்படியான சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்ளும்படியாக நமக்குக் கொடுக்கப்படும் சான்றிதழ் அல்ல. நம்முடைய ஜீவியத்தின் வேலை முடிவுறும்போது தேவன் அதனை நமக்குத் தெரிவிப்பார். ஒரு தொழிலாளி தன் எஜமானுக்கு உண்மையுள்ளவனாயிருப்பானென்றால், அவன் தன் பணியினின்று ஓய்வுபெறப் போகிறான் என்பதை அந்த எஜமான் அத்தொழிலாளிக்கு முன்கூட்டியே அறிவிக்காமலிருப்பானோ?

நாம் உன்னதமானவரின் மறைவிடத்தில் ஜீவிப்போமாயின், நிச்சயமாகவே நம்முடைய தேவன் வேடனுடைய கண்ணிக்கு நம்மைத்

தப்புவிப்பார். உன்னதமானவரின் மறைவிடத்திலிருக்கிற நம்மைப் பிசாசானவன் காணக்கூடாதவனாயிருப்பானாதலால், அவனால் நம்மைக் கண்ணியில் அகப்படுத்த முடியாது.

அக்டோபர் 11

தேவன் உன் மீது கொண்டிருக்கும் கரிசனை

"தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார்" (ஆதி. 2 : 22).

"*அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார்*" - மனுஷியைச் சிருஷ்டிக்கும் பணியானது ஆதாமுக்கு அருகாமையில் வைத்து நடைபெற வில்லை என்பதை இது வெளிப்படுத்துகிறது.

தேவன் ஆதாமுக்கு ஒரு மணவாட்டியை ஆயத்தப்படுத்த வேண்டுமென்ற பாரமும் பொறுப்புணர்வும் உள்ளவராயிருந்தார். மணவாட்டியைத் தேவன் தாமே தெரிந்தெடுத்து, அவளைப் பூரண மனுஷியாக உருவாக்கினார். தனக்கென்று ஒரு மணவாட்டியைக் கண்டுபிடிப்பதைக் குறித்துக் கவலைப்பட வேண்டியவன் மனிதன் அல்ல. ஒரு மனைவியைத் தேடும்படி அநேகர் சபைக்கு வெளியே செல்லுகின்றனர். நாம் தோட்டத்தில் இருப்போமாயின், நமக்கேற்ற துணையைத் தேடும் வேலையைத் தேவன் தாமே செய்வார். தோட்டத்தில் எந்த இடத்திலும் தனக்கென்று ஒரு மனைவியை ஆதாமால் கண்டுபிடிக்க முடியவில்லை என்பது உண்மையே; ஆனால் அந்தக் காரியத்தைத் தேவன் பொறுப்பேற்றுக் கொண்டார். அநேக பெற்றோர்களும் வாலிபர்களும், 'சபையில் ஏற்ற ஒரு நபரை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை, ஆகவே சபைக்கு வெளியே ஒரு துணையை நான் தெரிந்தெடுத்துக்கொண்டேன்' என்று கூறுவதை நாம் கேட்கிறோம். தங்கள் விருப்பத்திற்கேற்ற ஒரு துணையை அவர்கள் நாடித்தேடுவதே அவர்களிலுள்ள பிரச்சினையாயிருக்கிறது.

தேவன் நம்மைச் சபைக்குள் அதாவது மெய்யான தேவனுடைய தோட்டத்துக்குள் கொண்டுவந்திருக்கிறார்; நமக்கேற்ற துணையைச் சபைக்குப் புறம்பேயிருந்து அல்ல, அதற்கு உள்ளேயிருந்தே அவர் நமக்குத் தருவார். நம்முடைய சொந்தத் தெரிந்தெடுப்பு, நம்முடைய ஜீவியத்திற்கான தேவனுடைய திட்டத்தைத் தடைசெய்யாதிருப்பதாக.

ஸ்திரீக்குத் தான் நேசிப்பதற்கும் அன்புசெலுத்துவதற்குமுரிய ஒரே ஒரு நபராக இருந்தது மனிதன் மட்டுமே; மனிதனுக்குங்கூட மனுஷி

மட்டுமே அவன் நேசிக்கக்கூடிய ஒரே நபராக இருந்தாள். நாம் நேசிப்பதற்கு நமக்கு ஒரே ஒரு நபர் மட்டுமே உண்டு; அவர்தான் கிறிஸ்து. கிறிஸ்துவுக்குங்கூட தாம் நேசிப்பதற்கென்று ஒன்றே ஒன்றுதான் உண்டு; அது அவருடைய சபையே. ஆகவே மெய்யான தேவனுடைய சபையில் இராதவர்கள் ஒருபோதும் அவருடைய மணவாட்டியாக உருவாக்கப்பட முடியாது.

அக்டோபர் 12

உங்கள் எல்லையை அறிந்துகொள்ளுங்கள்

"உசியா கோபங்கொண்டான்; அவன் தூபகலசத்தைத் தன் கையிலே பிடித்து, ஆசாரியரோடே கோபமாய்ப் பேசுகிறபோது, ஆசாரியருக்கு முன்பாகக் கர்த்தருடைய ஆலயத்திலே தூபபீடத்தின் முன்நிற்கிற அவனுடைய நெற்றியிலே குஷ்டரோகம் தோன்றிற்று" (II நாளா. 26 : 19).

ராஜாவாகிய உசியாவின் மனம் (பெருமையினால்) மேட்டிமையாகி, அவன் தூபங்காட்ட ஆலயத்துக்குள் பிரவேசித்தான் என்று 16-ஆம் வசனத்தில் நாம் வாசிக்கிறோம். தூபங்காட்டுதல் ஆசாரியரின் கடமையே அன்றி, அது ராஜாக்களுடையது அல்ல. பிரதான ஆசாரியனாகிய அசரியாவும் மற்ற ஆசாரியர்களும் அவனுக்கு எதிர்த்துநின்று, "*உசியாவே, கர்த்தருக்குத் தூபங்காட்டுகிறது உமக்கு அடுத்ததல்ல*" என்று கூறினார்கள். அவனோ ஆசாரியரின் மேல் கோபங்கொண்டான். அது அவனை ஒரு குஷ்டரோகியாக மாற்றிற்று.

ஒரு முறை சகரியா என்னும் பேர்கொண்ட ஒரு நபர் தன் குடும்பத்திலிருந்த சில பிரச்சினைகளைக் குறித்து கலந்தாலோசிக்கும்படி ஒரு தேவ ஊழியரை அணுகினார். சம்பாஷணையின்போது, அவர் அத்தேவ ஊழியரின் மேல் அதிகக் கோபமடைந்தார். அந்நேரத்திலேயே அவர் பக்கவாதத்தினால் தாக்கப்பட்டார். அந்த வாதத்திலிருந்து சுகம் பெறாதவராகவே அவர் மிகவும் பரிதபிக்கப்படத்தக்க மரணம் அடைந்தார்!

அருமையான வாசகரே, நீர் பெருமைக்கு இடங்கொடுத்து, எந்த ஒரு தேவ ஊழியருடைய கடமையிலாவது அல்லது உத்தரவாதத்திலாவது தலையிட்டிருக்கிறீரா? நடத்திப்புக்காரர் உமக்கு ஆலோசனை கொடுத்த போது அல்லது உம்மைக் கடிந்துகொண்டபோது எப்போதாவது நீர் அவரிடம் கோபமாக நடந்துகொண்டதாக அவ்விஷயத்தில் குற்ற

உணர்வுள்ளவராய் இருக்கிறீரா? நீர் இந்நிலையில் இருப்பீராயின், இம்மட்டும் ஆவிக்குரிய (ஏன், சரீரப்பிரகாரமாகவுங்கூட) குஷ்டத்தினால் தேவன் உம்மை அடிக்காதிருப்பது தேவனுடைய இரக்கங்கள் மாத்திரமே என்பதையும், மனந்திரும்புவதற்கென்று உமக்குத் தவணையாகக் காலம் நீட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது என்பதையும் உணர்ந்துகொள்ளுவீராக.

நீர் அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நபராயிருக்கக் கூடும்; ஆனால் எல்லை மீறிச் செல்ல அது உமக்கு அனுமதி அளிப்பதில்லை. *நீர் ஒரு உசியா ராஜாவாக இருப்பீராயின்*, உம்முடைய கோபத்தைவிட்டு இன்றே மனந்திரும்புவீராக!

அக்டோபர் 13

இரண்டு கிரீடங்கள்

"***நீர் அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்***" (சங். 8 : 5).

தேவன் நமக்கு இரண்டு கிரீடங்களைத் தர விரும்புகிறார். அவை மகிமையின் கிரீடமும் கனத்தின் கிரீடமும் ஆகும்.

தேவன் மனிதனைச் சிருஷ்டித்தபோது, மகிமை, கனம் ஆகிய இவ்விரண்டு கிரீடங்களினாலும் அவனை முடிசூட்டினார் என்பது கவனிப்பதற்கு ஆச்சரியமாக உள்ளது. ஆனால் பாவம் அவனுக்குள் பிரவேசித்தபோது, அவனுடைய தலையினின்று கிரீடங்கள் விழுந்தன - மனிதன் தன்னுடைய மகிமையையும் கனத்தையும் இழந்தான். "*வெட்கப் பட்டோம்; ... நாணம் நம்முடைய முகங்களை மூடிற்று*"; '*எல்லாரும் பாவஞ் செய்து, தேவமகிமையற்றவர்களானார்கள்*' (எரே. 51 : 51; ரோமர் 3 : 23).

ஆயினும், இக்கிருபையின் காலத்தில் மீண்டும் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்படும்படி தேவன் ஒரு புதிய மனிதனைச் சிருஷ்டித்துக்கொண்டிருக்கிறார். நாம் எவ்வாறு இந்தக் கிரீடங்களைப் பெற்றுக்கொள்ளுகிறோம்? ***மகிமை*** என்றால் என்ன? '*பரிசுத்தத்தில் மகிமை யுள்ளவராகிய உமக்கு ஒப்பானவன் யார்?*' (யாத். 15 : 11 -Eng.). நம்முடைய தேவன் பரிசுத்தத்தில் மகிமையுள்ளவராயிருப்பதால், தேவனுடைய பரிசுத்தமே மெய்யான மகிமையாகும். ***கனம்*** என்றால் என்ன? '*கனத்துக்கு முன்னானது தாழ்மை*' (நீதி. 15 : 33 -Eng.). ஆகவே, மகிமையின் கிரீடமும் கனத்தின் கிரீடமும் தேவனுடைய ***பரிசுத்தத்தையும்,*** அவருடைய ***தாழ்மையையும்*** குறிக்கின்றன.

பொதுவாக ஒரு கிரீடமானது தலையின் மேலேயே வைக்கப் படுகிறது. தலை என்பது நம்முடைய எண்ணங்களைக் காட்டுகிறது. சில சமயங்களில் நம்முடைய வார்த்தைகளிலும் புறம்பான தோற்றத்திலும் பரிசுத்தமும் தாழ்மையும் இருக்கக் கூடும்; ஆனால் நம்முடைய எண்ணங்களில் அவை இல்லாமலிருக்கலாம். நம்முடைய மனது அல்லது சிந்தனைகளெல்லாம் தம்முடைய தாழ்மையினாலும் தம்முடைய பரிசுத்தத் தினாலும் நிறைந்திருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அவையே நமக்கு மகிமையின் கிரீடமாகவும் கனத்தின் கிரீடமாகவும் இருக்கும்.

பரிசுத்தமும் தாழ்மையும் நம்முடைய எண்ணங்களை அலங்கரிக்கா விடில், நாம் அவமானத்தோடுதான் ஜீவித்துக்கொண்டிருக்கிறோம், அதினிமித்தம் '*நம்முடைய தலையினின்று கிரீடம் விழுந்துவிட்டது*' என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

அக்டோபர் 14

தேவனுடைய பாரத்தைப் பகிர்ந்துகொள்ளுங்கள்

"***ஒருவரும் இல்லையென்று கண்டு, விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லையென்று ஆச்சரியப்பட்டார்***" (ஏசாயா 59 : 16).

தீர்க்கதரிசியும் நியாயாதிபதியுமாகிய சாமுவேலின் மூலம் தேவன் இஸ்ரவேலை ஆளுகைசெய்துகொண்டிருந்தபோது, தங்களை ஆள ஒரு ராஜா வேண்டுமென்று ஜனங்கள் கேட்டார்கள். ஜனங்கள் தன்னைத் தள்ளிவிட்டார்கள் என்று சாமுவேல் கர்த்தரிடத்தில் கூறியபோது, அவர், "*அவர்கள் உன்னைத் தள்ளவில்லை, நான் அவர்களை ஆளாதபடிக்கு, என்னைத்தான் தள்ளினார்கள்*" (I சாமு. 8 : 7) என்று கூறினார்.

முன்னொரு சந்தர்ப்பத்தில் ஜனங்கள் தங்களுக்கென்று பொன்னி னால் தெய்வங்களை உண்டுபண்ணினபோது, மோசே அவர்களுக்காகப் பரிந்துபேசி, தேவனுடைய கோபத்தினின்று அவர்களை இரட்சித்தான் (யாத். 32 : 31 - 34). இப்பொழுது அவர்கள் தங்களுக்கு ஒரு ராஜா வேண்டுமென்று கேட்டபோது, தேவன் எவ்வளவாகத் துக்கப்படுவார் என்பதைச் சாமுவேல் உணர்ந்துகொண்டான். தேவனுடைய துக்கத்தை அவன் தன்னுடைய துக்கமாகவே தன் மேல் ஏற்றுக்கொண்டான். அவர்கள் மேல் இரக்கமாயிருக்கும்படி தேவனிடம் அவன் விண்ணப்பம்பண்ணி னான். எல்லாராலும் இவ்விதமாக ஜெபிக்க முடியாது; தேவனுடைய மனதை விளங்கிக்கொள்ளுகிறவர்கள் மட்டுமே இவ்விதம் ஜெபிக்க முடியும்.

விண்ணப்பம்பண்ணுகிறவன் ஒருவனும் இல்லையென்று தேவன் ஆச்சரியப்பட்டார் என்று ஏசாயா 59 : 16 -இல் நாம் வாசிக்கிறோம். பரிந்து பேசுகிறவன் ஒருவனும் இல்லை என்று தேவன் இன்றும் ஆச்சரியப் படுகிறார். சில ஊழியங்கள் வெளியரங்கமாகக் காணக்கூடியவையாயிருக்க, பரிந்துபேசுதலின் ஊழியமோ, பரலோகத்திலுள்ள பரமபிதா மட்டுமே காணக்கூடியதும், அறைவீட்டினுள் செய்யப்படுவதுமான ஊழியமா யிருக்கிறது.

பரிசுத்த ஆவியானவர் நமக்காகப் பரிந்துபேசுகிறவராக இருக்கிறார். "*ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார்*" (ரோமர் 8 : 26); நமக்காக வேண்டுதல் செய்யும்படி கர்த்தராகிய இயேசு எப்பொழுதும் உயிரோடிருக்கிறார் (எபி. 7 : 25). அப்படியெனில், கிருபாசனத்துக்கு முன்பாக நம்முடைய இடைவிடாத பரிந்துபேசுதலின் மூலம் நாம் தேவனுடைய பாரத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் அல்லவா? அப்படிப்பட்ட பரிந்துரையாளர்களையன்றோ தேவன் தேடிக்கொண்டிருக்கிறார்?

அக்டோபர் 15

எந்தச் சாக்குப்போக்கும் செல்லாது!

"***அதற்கு ஆதாம்: என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீ யானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன் என்றான்***" (ஆதி. 3 : 12).

பாவமானது, ஒருவன் தான் இழைக்கும் தவறுகளுக்காக மற்றவர் களைக் குற்றப்படுத்தச் செய்கிறது. இங்கே ஆதாம் தன்னுடைய பாவத்துக் காக ஸ்திரீயைக் குற்றஞ்சாட்டுகிறான். ஒவ்வொரு மனிதனும் தான் செய் யும் பாவத்துக்குத் தானே உத்தரவாதியாயிருக்கிறான். ஆதாம் ஸ்திரீயைப் பிரியப்படுத்தும்படியாகவும், அவள்பேரில் தான் கொண்டிருக்கும் அன்பை அவளுக்கு வெளிப்படுத்தும்படியாகவும் அவளுடைய கையிலிருந்து அவ்விருட்சத்தின் கனியை வாங்கிப் புசித்திருந்திருக்கலாம். ஆனால் இப் பொழுதோ, அன்பை வெளிப்படுத்துவதற்குப் பதிலாக, அவன் தன்னுடைய பாவத்துக்காக அவளைக் குறைகூறி, பகையையே வெளிப்படுத்துகிறான்.

ஆதாம் தேவனையுங்கூட குறைகூறுகிறான். "***தேவரீர் தந்த ஸ்திரீயானவள்***" என்று அவன் கூறுகிறான். இப்படிச் சொல்லுவதினால் அவன், 'தேவனே, அது உம்முடைய தவறுதான்; நீர் இந்த ஸ்திரீயை

எனக்குத் தந்திராவிட்டால் நான் பாவம் செய்திருக்கமாட்டேனே!' என்றே மறைமுகமாகக் குறிப்பிடுகிறான்.

மேலும், மனந்திரும்பும்படி தேவன் ஸ்திரீக்கு ஒரு தருணத்தை அளிக்கும்போது, அவள் சர்ப்பத்தைக் குறைகூறுகிறாள் (ஆதி. 3 : 13). கனியைப் புசிக்கும்படியாகச் சர்ப்பமானது அவளை வஞ்சித்தது மெய்யே; ஆனால் அவள் ஏன் அதைத் தன் புருஷனுக்குக் கொடுத்தாள்? அவனுக்கு அதைக் கொடுக்கும்படி சர்ப்பம் அவளிடம் கூறவில்லையே!

பாவம் எப்பொழுதும் ஏதாவதொரு சாக்குப்போக்கைக் கண்டு பிடிக்கிறது. ஆனால், தேவனுடைய பிள்ளையே, உன்னுடைய சாக்குப் போக்கு எதுவாயிருப்பினும், அது தேவசமுகத்தில் செல்லாது என்பதை நினைவில் வைத்துக்கொள். உன்னுடைய தவறான கிரியைகளுக்காக வேறு யாரோ ஒருவரைக் குறைகூறி, நீ தப்பித்துக்கொள்ள முடியாது. "உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்துபிடிக்கும் என்று நிச்சயமாய் அறி யுங்கள்" (எண். 32 : 23); '*பாவஞ்செய்கிற ஆத்துமா சாகும்*' (எசே. 18 : 4).

அக்டோபர் 16

நீ உடை அணியும் விதத்தைப் பற்றி கவனமாயிரு!

"***தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார்***" (ஆதி. 3 : 21).

மனிதனை உடுத்துவிக்கிற விஷயத்தைத் தேவனே பொறுப்பேற்றுக் கொண்டார். தேவன் அவர்களுக்காகச் செய்த தோல் உடையானது நாம் என்றும் பின்பற்றத்தக்கதொரு 'மாதிரி வஸ்திரமாக' இருந்தது. அது அவர் களுடைய முழுச் சரீரத்தையும் மூடிற்று. விரிவாக்கப்பட்ட ஆங்கில வேதாகமம் (Amp. Bible), 'உடைகள்' என்பதை 'நீண்ட மேலங்கிகள் அல்லது தளர் மெய்யங்கிகள்' என்று குறிப்பிடுகிறது. அது, இன்று பெரும்பாலும் ஜனங்கள் உடுத்துகிறதாக நாம் காண்கிற அரைகுறையான ஆடையும் அல்ல; கண்ணாடி போன்ற ஊடுருவிக் காணத்தக்க மெல்லிய வஸ்திரமும் அல்ல.

நாம் சரியான விதத்தில் உடை அணிய வேண்டும். அதாவது, அப். பவுல் கூறுவது போல நாம் 'தகுதியான வஸ்திரத்தினால்' உடுத்துவிக் கப்பட்டிருக்க வேண்டுமென்று கர்த்தர் நம்மைக் குறித்து விரும்புகிறார்

(I தீமோ. 2 : 10). அவை விலையுயர்ந்த வஸ்திரங்களாகவோ அல்லது மற்றவர்களை வசீகரிக்கக்கூடிய வஸ்திரங்களாகவோ இருக்கக் கூடாது என்று மற்றொரு ஆங்கில மொழிபெயர்ப்பு கூறுகிறது.

பழைய ஏற்பாட்டிலுங்கூட தம்முடைய ஜனங்கள் உடை அணியும் விதத்தைக் குறித்துக் கர்த்தர் மிகவும் கருத்துள்ளவராயிருந்தார். செப்பனியா 1 : 8 -இல் அவர், "*மறுதேசத்து வஸ்திரம் தரிக்கிற யாவரையும் தண்டிப்பேன்*" என்று கூறுகிறார். மேலும் அவர், "*புருஷரின் உடைகளை ஸ்திரீகள் தரிக்கலாகாது, ஸ்திரீகளின் உடைகளைப் புருஷர் தரிக்கலாகாது*" என்றும் கூறுகிறார். இதைச் செய்யும் எந்தவொரு நபரையும் தாம் அருவருப்பதாக அவர் கூறுகிறார்! (உபா. 22 : 5).

தேவனுடைய பிள்ளையே, மேற்கூறப்பட்டுள்ளவற்றின் வெளிச்சத்தில் நீ அணியும் உடைகள் எவ்விதமாக இருக்கின்றன? உன்னுடைய உடைகள் கர்த்தரைப் பிரியப்படுத்துகின்றனவா? "*தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே*" நாம் உடை அணிய வேண்டும் (I தீமோ. 2 : 10). நாம் கிறிஸ்தவர்கள் என்பதை நம் முடைய உடை வெளிப்படுத்துகிறதா? தேவன் தாமே நமக்கு உடைகளை உண்டாக்குவாரெனில், அவை எப்படிப்பட்டவையாய் இருக்குமோ, அவ்விதமாகவே நம்முடைய உடைகள் காணப்படுகின்றனவா?

அக்டோபர் 17

தெரிந்தெடுப்பதற்கான விசுவாசம்

'விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டான்' (எபி. 11 : 24, 25).

ஒரு நபர் ஒன்றைப் பற்றிக்கொள்ள வேண்டுமாயின், அதற்கு முன்னதாக அவன் மற்றொன்றை விட்டுவிட்டிருக்க வேண்டும்; அவ்வண்ணமாகவே, அவன் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டுமாயின், அதற்கு முன்னதாக அவன் மற்றொன்றை மறுத்திருக்க வேண்டும் அல்லது வெறுத்திருக்க வேண்டும். '*இதினிமித்தம் புருஷன்* ... ***விட்டு*** ... ***பற்றிக் கொண்டிருப்பான்***' (ஆதி. 2 : 24 -Eng.). பொதுவாக, ஜனங்கள் தங்கள்

ஐம்புலன்கள் தங்களுக்குக் கொடுக்கும் உத்தரவின்படியே காரியங்களைத் தெரிந்தெடுக்கின்றனர். மேலும் மனிதனின் புலன்கள் பொதுவாக ஐசுவரியங்கள், கனம், மகிமை, புகழ், ஸ்தானம், அதிகாரம், வல்லமை போன்றவற்றைத் தெரிந்தெடுத்து, நிந்தைகள், வறுமை, பாடுகள், நெருக்கங்கள் போன்றவற்றை வெறுத்துவிடுகின்றன. இருப்பினும், ஒரு ஆவிக்குரிய மனிதனுக்கு ஐம்புலன்களைக் காட்டிலும் மிகவும் மேன்மையானதான ஆறாம் புலன் ஒன்று உண்டு - அது விசுவாசம் என்னும் புலன் ஆகும். தங்களுடைய ஆவிக்குரிய கண்கள் பிரகாசிப்பிக்கப்பட்டவர்கள் மாத்திரமே மோசே தெரிந்துகொண்டதைத் தாங்களும் விசுவாசத்தினால் தெரிந்தெடுக்கக் கூடியவர்களாயிருப்பர். சத்தியத்தினிமித்தமும் கிறிஸ்து வினிமித்தமும் நாம் தெரிந்தெடுக்கும் காரியங்கள், இந்த உலகத்தின் பார்வைக்குப் பைத்தியமாகத் தோன்றினாலும், மனித ஞானத்தை விட தேவனுடைய பைத்தியமானது மிகவும் மேன்மையானதாகும். இந்த வெறுத்தலும் தெரிந்தெடுத்தலும் ஒரு நபர் வளர்ந்து பக்குவமடைந்த நிலையை அடைந்திருப்பதைக் காட்டுகின்றன.

மோசே அன்றைய உலக வல்லரசாயிருந்த எகிப்தின் மிக உயர்ந்த பதவியை வெறுத்துவிட்டு, அடிமைகளோடு பாடுபடுவதைத் *தெரிந்து கொண்டான்*. மற்றவர்களால் வற்புறுத்தப்படுவதின் நிமித்தம் சிலர் பாடுபடக்கூடும். ஆனால் மோசேயைப் போல பாடுபடுதலைத் *தெரிந்தெடுப்பதற்கு* ஒருவருக்குப் பெரிய விசுவாசம் தேவைப்படுகிறது.

தேவ ஜனங்களோடு ஜீவிப்பதில் பாடுகள் உண்டு. விசுவாசமே மோசேக்குச் சரியான அறிவைக் கொடுத்தது. பாடுபடும் அந்த அடிமைகள் தேவனுடைய ஜனங்கள் என்பதை அவன் விளங்கிக்கொண்டான். ஒரு இயற்கையான மனிதனோ, 'இவர்கள் நிர்ப்பந்தமான அடிமைகள், அதிர்ஷ்ட மற்றவர்கள், தேவனால் கைவிடப்பட்டவர்கள். நான் ஏன் அவர்களோடு கூட பாடுபட வேண்டும்?' என்று நினைத்திருக்கலாம். மெய்யான பரிசுத்த வான்கள் இன்னார் என்பதை அடையாளங்கண்டுகொள்ள விசுவாசம் ஒருவருக்கு உதவி செய்கிறது.

பாவசந்தோஷம் தற்காலிகமானது; ஆனால் மன்னிக்கப்படாத பாவத்துக்கான தண்டனையோ என்றென்றைக்குமுள்ளது. விசுவாசத்தினாலே அரமனையின் சந்தோஷங்கள் பாவ சந்தோஷங்கள் என்றும், அவை அநித்தியமானவை என்றும், தெய்வீக சந்தோஷங்களே என்றென்றைக்குமுள்ளவை என்றும் மோசே அறிந்திருந்தான். "*உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு*".

அக்டோபர் 18

மோசம்போகாதிருங்கள்

"***அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே?***"
(II பேதுரு 3 : 4).

"*மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்*" (வெளி. 22 : 20) - வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்குத்தத்தங்களிலேயே மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட வாக்குத்தத்தமாகிய இது, மிக அதிகமாகப் பரிகசிக்கப்பட்டதும் அசட்டைபண்ணப்பட்டதுமான சத்தியங்களில் ஒன்று என நாம் கூறலாம். இருப்பினும், அப். பேதுரு இதைக் குறித்து இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே தீர்க்கதரிசனமாக உரைத்திருக்கிறார்: "*கடைசி நாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுய இச்சைகளின்படியே நடந்து, அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு சகலமும் சிருஷ்டிப்பின்தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள்*" (II பேதுரு 3 : 3, 4). இப்பொழுதுங்கூட (கிறிஸ்தவர்கள் மத்தியிலுமுள்ள) பரியாசக்காரர், 'அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? கர்த்தருடைய வருகையைக் குறித்து எங்களுடைய சிறுவயது முதற்கொண்டே நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர் சீக்கிரமாக வருகிறாரென்றால், இத்தனை ஆண்டுகளாகியும் அவர் இன்னும் ஏன் வரவில்லை?' என்று கேட்கின்றனர். அப்படிப்பட்டவர்கள் கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு ஆயத்தமாயிராதபடிக்குத் தங்களையும் மற்றவர்களையுங்கூட வஞ்சிக்கின்றனர்.

அப்படிப்பட்ட பரியாசக்காரர், '*உமது பார்வைக்கு ஆயிரம் வருஷம் இராச்சாமம் போல இருக்கிறது*' (சங். 90 : 4) என்னும் தேவ வசனத்தைக் குறித்த அறிவற்றவர்களாயிருக்கின்றனர். ஒரு ஜாமம் என்பது மூன்று மணி நேரமாகும். இரவு நேரத்தில் நான்கு ஜாமங்கள் உண்டு: முதலாம் ஜாமம் - மாலை ஆறு மணி முதல் இரவு ஒன்பது மணி வரை; இரண்டாம் ஜாமம் - இரவு ஒன்பது மணி முதல் நள்ளிரவு வரை; மூன்றாம் ஜாமம் - நள்ளிரவு முதல் காலை மூன்று மணி வரை; நான்காம் ஜாமம் - காலை மூன்று மணி முதல் ஆறு மணி வரை. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கர்த்தராகிய இயேசு, "*நான் சீக்கிரமாய் வருகிறேன்*" என்ற கூறினார். ஒரு அர்த்தத்தில், தேவனுடைய பார்வையில் ஆயிரம் வருஷம் இராச்சாமம் போலிருப்பதால், இந்த வாக்குத்தத்தமானது 'இரண்டு ஜாமங்களுக்கு' முன்னர்தான் அதாவது ஆறு மணி நேரத்துக்கு முன்னர்தான் கொடுக்கப் பட்டுள்ளது என நாம் கூறலாம்!

அருமையான வாசகரே, "*மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்*" என்னும் கர்த்தருடைய வார்த்தைக்கு நம்முடைய மறுமொழி, "*ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்*" என்பதாக இருக்க வேண்டும். இந்த வாக்குத்தத்தமானது வேதாகமத்திலுள்ள கடைசி அதிகாரத்தில் திரும்பத் திரும்ப மூன்று முறை கூறப்பட்டுள்ளது - அதாவது இரண்டு முறை, "*இதோ, சீக்கிரமாய் வருகிறேன்*" (வெளி. 22 : 7, 12) என்றும், முடிவாக, "*மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்*" (வச. 20) என்றும் கூறப்பட்டுள்ளது.

அக்டோபர் 19

தேவனோடு சஞ்சரித்தல்

'***ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிருந்தான்***' (ஆதி. 5 : 24).

தேவனோடு நடத்தல் என்கிற விஷயத்தைப் பற்றி ஏனோக்குக்கு ஒரு முன்மாதிரியைக் காண்பிக்கவோ அல்லது அவ்விஷயத்தைப் பற்றி அவனுக்குப் போதிக்கவோ இவ்வுலகத்தில் ஒருவரும் இல்லாதிருந்த போது அவன் தேவனோடு சஞ்சரித்தான். தங்களுக்கு ஒருவரையுமே முன்மாதிரியாகக்கொள்ள முடியாதிருக்கும்போதுகூட தம்மோடு சேர்ந்து நடக்கிற ஜனங்கள் தேவனுக்குத் தேவை.

இரண்டுபேர் ஐக்கியமுள்ளவர்களாயிருந்தாலொழிய ஒருமித்து நடந்து போக முடியாது (ஆமோஸ் 3 : 3). ஆகவே, ஏனோக்கு கர்த்தர் தன்னைக் கொண்டுபோன பாதைகளிலெல்லாம் அவரிடம் முறுமுறுக்காமலும் கேள்வி கேட்காமலும் அவரோடு பூரண ஒற்றுமையுடன் ஜீவித்திருந்திருக்கிறான்.

ஏனோக்கு ஒரு குடும்பஸ்தனாயிருந்தபோதிலும் தேவனோடு சஞ்சரித்தான். தாங்கள் தேவனோடு நடப்பதற்குத் தங்களுடைய குடும்பம் ஒரு தடையாக உள்ளது என்று அநேகர் எண்ணுகின்றனர். ஏனோக்குடைய மனைவியோ அல்லது பிள்ளைகளோ தேவனோடு சஞ்சரித்ததாக வேதாகமம் கூறுவதில்லை. அவர்கள் அதில் பிரியப்படாதவர்களாக இருந்திருக்கக் கூடும். ஒருவேளை அவர்கள் ஏனோக்குக்கு ஒரு முள்ளாக இருந்திருக்கக் கூடும். இருப்பினும் அவன் தேவனோடு நடந்தான். தேவபிள்ளையே, உன்னைச் சுற்றிலுமுள்ளவர்கள் தேவனோடு நடக்காமலிருக்கும்போதுகூட நீ தேவனோடு நடக்கிற அனுபவத்தை உடையவனாக இருப்பது *சாத்தியமானதாகும்*.

"*ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருக்கையில், காணப்படாமற்போனான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டார்*" (ஆதி. 5 : 24).

"தேவன் அவனை எடுத்துக்கொண்டார்" அல்லது தேவன் அவனுடைய 'சுயத்தை' எடுத்துக்கொண்டார். நாம் தேவனோடு நடக்கும்போது, நாம் காணப்படமாட்டோம்; கிறிஸ்து மட்டுமே காணப்படுவார்.

தேவனோடு சஞ்சரிக்கும் ஒரு மனிதன் பிறரோடு நடந்துகொள்ளும் விதம் எவ்வளவு மென்மையாகவும் கனிவுள்ளதாகவும் இருக்கும்!

அக்டோபர் 20

மாம்ச புயம்

"எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது" (II கொரி. 10 : 4).

திம்னாத் ஊரின் திராட்சத்தோட்டங்களில் ஒரு பாலசிங்கம் சிம்சோனுக்கு எதிராக வந்து கெர்ச்சித்தபோது, அவன் தன்னோடு கூட இருந்த தன்னுடைய பெற்றோரின் உதவியை நாடவில்லை. அவன் அப்படி நாடியிருந்திருப்பானென்றால், சந்தேகத்துக்கிடமின்றி முழுமையான தோல்வியையே தழுவியிருந்திருப்பான்; அவனும் அவனுடைய பெற்றோரும் கொல்லப்பட்டிருப்பர். பல சந்தர்ப்பங்களிலும் நாம் நம் முடைய பிரச்சினைகளில் மனித உதவியை நாடி அல்லது 'மாம்ச புயத்தின் மேல் நம்பிக்கை வைத்து' தோல்வியில் முடிவுறுகிறோம்.

தாவீது கோலியாத்தை அல்லது வேறெந்தச் சத்துருவையும் எதிரிடுவதற்கு முன், அவன் தன்னுடைய ஜீவனையே பறித்துக்கொள்ளப் போவதாக அச்சுறுத்திய சிங்கத்தைச் சந்திக்க வேண்டியதாயிருந்தது. தேவன் அவனோடு இருந்ததினிமித்தம், அவன் அதைச் சந்திப்பதற்கான ஞானத்தையும் கிருபையையும் பெற்றுக்கொண்டான். தேவன் உன்னோடிருப்பாராயின், உன்னுடைய ஆவிக்குரிய ஜீவியத்தை அழிக்கும்படி வரும் சத்துருவை நீ மேற்கொள்வது திண்ணம்.

தாவீது, '*அதின் தாடியைப் பிடித்து, அதை அடித்துக் கொன்று போட்டான்*' (I சாமு. 17 : 35). சிங்கத்தின் சரீரத்தில் ***மாம்சம்*** இல்லாத ஒரே பகுதி அதினுடைய தாடி மட்டுமே. ஆகவே அவனால் அதைப் பற்றிப் பிடித்துக்கொண்டு சிங்கத்தை இலகுவாகக் கொல்ல முடிந்தது. "*எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது*" (II கொரி. 10 : 4).

அருமையான வாசகரே, நம்முடைய பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு நாம் ஒருபோதும் ***மாம்சத்தையோ*** அல்லது மாம்சீக ஞானத்தையோ

உபயோகிக்கக் கூடாது. "*ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு*" (எபே. 6 : 12). நாம் தேவனோடு செம்மையான இருதயமுள்ளவர்களாய் இருப்போமாயின், நம் முடைய ஜீவியத்தில் எழும் ஒவ்வொரு சூழ்நிலையோடும் செயல்படுவதற்கும், நாம் சந்திக்கக்கூடிய பிரச்சினைகளெல்லாவற்றையும் சரியான விதத்தில் சமாளிப்பதற்கும் தேவையான ஞானத்தை அவர் நமக்கு ஏற்ற வேளையில் அளிப்பார்.

அக்டோபர் 21

மரித்த மனிதன் பேசுகிறான்

"விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக் குறித்து தேவனே சாட்சிகொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்" (எபி. 11 : 4).

"*விசுவாசத்தினாலே ஆபேல் ... மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்*". இங்கு, விசுவாசமானது பலியோடு (தியாகத்தோடு) சம்பந்தப்படுத்தப்பட்டுள்ளது. உங்களுக்கு விசுவாசம் இருக்கிறதென்று நீங்கள் கூறியும், உங்களால் யாதொரு தியாகமும் செய்ய முடியவில்லையெனில், உங்களுடைய விசுவாசம் செத்ததாயிருக்கிறது. உங்களுக்கு எவ்வளவதிகமான விசுவாசம் இருக்கிறதோ, அவ்வளவதிகமாக நீங்கள் தியாகமுள்ளவர்களாயிருப்பீர்கள். மெய்யாகவே, விசுவாசமானது மேன்மையான பலியோடு சம்பந்தப்பட்டதாயிருக்கிறது.

ஆபேல் தன்னுடைய பலியை விசுவாசத்தினாலே செலுத்தியதினிமித்தம் அவனுடைய பலி மேன்மையானதாயிருந்தது - விசுவாசமானது மிகச் சிறந்ததைத் தேவனுக்குச் செலுத்தவும் மிகச் சிறந்த ஜீவியம் செய்யவும் அவனுக்கு உதவி செய்தது (ஆதி. 4 : 2 - 4). ஆபேலுடைய ஜீவியம் தேவனோடு செம்மையானதாக இருந்தது என்பதை நாம் எவ்விதம் அறிகிறோம்? "*ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கிகரித்தார்*" (வச. 4). இங்கு 'ஆபேலுடைய காணிக்கையையும் ஆபேலையும் கர்த்தர் அங்கீகரித்தார்' என்று குறிப்பிடப்படவில்லை என்பதைக் கவனிக்கவும். வேறு வார்த்தைகளில் கூறின், தேவன் ஆபேலுடைய ஜீவியத்தை அங்கீகரித்ததினிமித்தம், அவனுடைய காணிக்கையையும் அங்கீகரித்தார். இதே அர்த்தத்தில் பேசும்போது, தேவன் காயீனுடைய

ஜீவியத்தை அங்கீகரிக்காதபடியினாலேயே அவனுடைய காணிக்கை யையும் அங்கீகரிக்கவில்லை என்று நாம் கூறலாம்.

"*விசுவாசத்தினாலே ... அவன்* (ஆபேல்) *மரித்தும் இன்னும் பேசுகிறான்*". வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மிகப் பெரிய அற்புதங் களில் ஒன்றாக இது தோன்றுகிறது. மரித்து உயிரோடெழுப்பப்பட்டு, அதற்குப் பின் பேசியவர்கள் இருந்தனர்; ஆனால் இங்கே மரித்தும் இன்னும் பேசிக்கொண்டிருக்கிற ஒருவனை நாம் காண்கிறோம்! அவன் விசுவாசத் தினாலே இன்னும் பேசிக்கொண்டிருக்கிறான். ஆபேல் மரித்துவிட்டபோதி லும், அவனுடைய விசுவாசம் மரிக்கவில்லை. எந்தத் தேசத்தைச் சேர்ந்த வர்களோடும், எந்தத் தலைமுறையினரோடும் பேசுவதற்கு விசுவாசத்துக்கு ஒரு மொழி உண்டு. அது இயற்கைக்கப்பாற்பட்டதும் வல்லமை வாய்ந்த துமான ஒரு மொழியாகும். விசுவாசத்தினால் பேசுகிற ஒரு மனிதன், தான் பேசுவதை ஒருபோதும் நிறுத்துவதே இல்லை. பேசுவதற்கு எப்போதும் அவனுக்கு ஒரு தூது உண்டு; அத்தூதிற்குச் செவிகொடுக்கக் கூடிய ஜனங்களும் எப்போதும் அவனுக்கு உண்டு. சந்தேகம் என்பது ஒரு தேவ ஊழியனைச் சகரியாவைப் போல சில காலத்துக்கு ஊமையனாக்கி விடுகிறது. விசுவாசமோ எல்லாச் சமயங்களிலும் பேசுகிறது.

ஆபேல் என்ன பேசிக்கொண்டிருக்கிறான்? 'என்னை ஊக்குவிப்ப தற்கு எனக்கு வேதாகமமோ, சபையோ, போதகர்களோ இல்லாதிருந்த போதிலும் நான் விசுவாசத்தினாலே ஒரு நீதியுள்ள ஜீவியம் செய்து, என் னுடைய விசுவாசத்துக்காக மரித்தேன். நான் பின்பற்றத்தக்க மாதிரியைக் காண்பிக்கக்கூடிய ஒருவரும் எனக்கு முன் இருக்கவில்லை. என்னுடைய பெற்றோர் பாவஞ்செய்து, முழு உலகத்தையும் பாவத்திற்குட்படப்பண்ணி னார்கள். இருப்பினும், நான் தேவனை மட்டுமே நோக்கிப் பார்த்து, விசுவாசத்தினாலே ஜீவித்து, விசுவாசத்தினாலே மரித்தேன்' என்பதே ஆபேலின் தூதாகும். இவ்வாறிருக்க, நாம் விசுவாசத்தினால் ஜீவித்து, விசுவாசத்தினால் ஒரு பலி செலுத்தாவிடில், அதற்காக நாம் என்னதான் சாக்குப்போக்குகள் சொல்லக் கூடும்?

அக்டோபர் 22

அதைரியத்திற்கு எதிர்த்துநில்லுங்கள்

"***ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப் பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள்***" (எபி. 12 : 3).

அதைரியத்தை மேற்கொள்ளும்படி, அது எவ்விதம் வருகிறது என்பதை நாம் முதலாவது அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். தேவனையும் அவருடைய வார்த்தையையும் நோக்கிப் பார்ப்பதற்குப் பதிலாக, நம்முடைய சுற்றுச்சூழலையும், நாம் வைக்கப்பட்டுள்ள சூழ்நிலை களையும் பார்க்கும்போது நமக்கு அதைரியம் உண்டாகிறது. அப்போது நம் கண்கள் நம்முடைய பிரச்சினைகளின் மேல் வைக்கப்பட்டிருக் கின்றனவேயன்றி, அவைகளைப் பரிகரிப்பவரின் மேல் பதிக்கப்பட்டி ருப்பதில்லை. ஆகவே, அதைரியத்தை மேற்கொள்ளும்படி நாம் நம் முடைய கண்களைப் பிரச்சினைகளின் மேலிருந்து எடுத்து, கர்த்தர் மேல் அவைகளைப் பதிக்க வேண்டும். ஆகவே தான் எபிரெயர் 12 : 1 -இல், "*இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்*" என்று நாம் வாசிக்கிறோம். "*இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்*" என்று 3 -ஆம் வசனம் கூறுகிறது. 'கர்த்தராகிய இயேசுவை நோக்கி' என்பது, அவர் நமக்கு அளித்திருக்கும் வாக்குத்தத்தங்களை நோக்கிப் பார்த்தலாகும். நம்முடைய தேவன் சகல விதமான ஆறுதலின் தேவன் என்று II கொரிந்தியர் 1 : 3 கூறுகிறது. மூல பாஷையில் இது, 'சகலவித திடமளித்தலின் தேவன்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சிக்லாகில் சகலமும் தாவீதுக்கும் அவனோடிருந்தவர்களுக்கும் விரோதமாகச் சம்பவித்துக்கொண்டிருந்தபோது - அவர்களுடைய வீடு களெல்லாம் சுட்டெரிக்கப்பட்டு, ஸ்திரீகளும் பிள்ளைகளும் சிறைபிடிக்கப் பட்டு, ஜனங்களெல்லாரும் மிகவும் நெருக்கப்பட்டபோது - தாவீது கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டான். அவன், இருண்ட பாதையினூடாகக் கடந்து செல்லும் ஒரு சந்தர்ப்பத்தில், தன்னுடைய துன்பத்தை அறிக்கையிடுவதற்குப் பதிலாக "*கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்?*" என்று கூறுகிறான்.

அருமையான தேவபிள்ளையே, நீ ஒருவேளை வியாதியினூடாகக் கடந்து சென்றுகொண்டிருக்கக் கூடும். வியாதியின் அறிகுறிகளையும் உன்னுடைய பெலவீனத்தையும் வேதனையையும் பற்றிப் பேசுவதற்குப் பதிலாக, '*அவருடைய தழும்புகளால் நான் குணமானேன்*' என்று அறிக்கை யிடுவாயாக. உன்னுடைய வறுமையில், '*என் தேவன் என் குறைவையெல் லாம் நிறைவாக்குவார்*' என்று அறிக்கையிடுவாயாக. உனக்கு உதவிசெய்ய உன் அருகில் ஒருவரும் இல்லாத சந்தர்ப்பங்களில், '*தேவன் எனக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையு மானவர்*' என்று முழங்குவாயாக. உன் வாழ்வில் துயர சம்பவங்கள் நிகழும்போது, '*தேவன் என் ஆனந்த மகிழ்ச்சி*' என்று கூறுவாயாக. நீ

பெலவீனமாயிருக்கும்போது, '*கர்த்தர் என் பெலன்*' என்று சொல்லுவாயாக. நீ பசியாயிருக்கும்போது, '*இயேசு என் ஜீவ அப்பம்*' என்று சொல்லுவாயாக. நீ தாகமாயிருக்கும்போது, '*அவர் எனக்கு ஜீவத்தண்ணீருள்ள நீரூற்று*' என்று கூறுவாயாக. சகலமும் இருளாகவும், மந்தாரமாகவும் இருக்கும்போது, '*அவர் என் வெளிச்சம்*' என்றும், குழப்பத்தின் மத்தியில், '*அவர் என் சமாதானம்*' என்றும், நீ எல்லாவற்றையும் இழந்துவிட்டது போல் உனக்குத் தோன்றுகையில், '*அவர் எனக்கு எல்லாவற்றுக்கும் எல்லாமானவர்*' என்றும் கூறுவாயாக. அப்பொழுது நீ திடப்படுத்தப்படுவதோடல்லாமல், மற்றவர் களையுங்கூட தைரியப்படுத்தக் கூடியவனாயிருப்பாய்.

அக்டோபர் 23

தகுதியானவற்றிற்காகப் பிரயாசப்படுங்கள்

'***ஜலம் பெருகி, பேழையைக் கிளம்பப்பண்ணிற்று; அது பூமிக்குமேல் மிதந்தது. உயிருள்ள வஸ்துக்கள் யாவும் அழிந்து நிக்கிரகமாயின***' (ஆதி. 7 : 17, 23).

ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்து பரலோகத்துக்கு உயர்த்தப் பட்டான். அவ்வாறே, நோவாவும் தேவனோடு சஞ்சரித்தான்; அவனுடைய தேவன் பேழையின் மூலம் அவனை உயர்த்தினார்.

நோவா தன்னுடைய ஆரோக்கியத்தையும் செல்வத்தையும் நேரத்தையும், தன் வசமிருந்த யாவற்றையும் பேழைக்காகச் செலவழித் தான் என்பது வெளிப்படையான காரியமாயிருக்க, அவன் காலத்திலிருந்த மற்றவர்களோ தங்கள் வாழ்நாள் முழுவதையும் பூமிக்குரிய காரியங் களிலேயே செலவழித்திருக்கக் கூடும். நோவா தன்னையும் தனக்குண்டான யாவற்றையும் பேழையை உண்டாக்குவதற்காகவே செலவு செய்ததினிமித் தம் மற்றவர்களால் பரிகசிக்கப்பட்டிருந்திருப்பான் என்பதில் ஆச்சரியப் படுவதற்கொன்றுமில்லை. ஏனெனில் அவர்களுடைய பார்வையில், அவன் தன்னுடைய வாழ்க்கையை ஒரு மதியீனமான காரியத்துக்காக வீணாக்கிக் கொண்டிருப்பவனாகவே காணப்பட்டான். இருப்பினும், கடைசியில், பூமியின்மேல் ஜலப்பிரளயம் உண்டான நியாயத்தீர்ப்பின் நாளன்று நோவா செய்ததே நிலையானது என்பதும், மற்றவர்களுடைய கிரியைகள் அழிவுக்குரியவை என்பதும் பூரணமாக நிரூபிக்கப்பட்டது.

'*மனுஷன் சூரியனுக்குக்கீழே படுகிற எல்லாப் பிரயாசத்தினாலும் இருதய சலிப்புடன் கூடிய அவனது முயற்சியினாலும் அவனுக்குப் பலன்*

என்ன?' (பிர. 2 : 22 -Eng.) என்று ராஜாவாகிய சாலொமோன் கேட்கிறான். முடிவாக, மனிதன் தன்னுடைய பிரயாசத்தின் பலனையெல்லாம் வேறொருவனுக்கு விட்டுச் செல்ல வேண்டுமென்று அவன் கண்டுபிடித்த தினிமித்தம் தான் பட்ட பிரயாசங்கள் எல்லாவற்றின் மேலும் அவனுக்கு வெறுப்புண்டாயிற்று.

நியாயத்தீர்ப்பின் நாள் சீக்கிரமாக வருகிறது. பிரயாசப்படுவதற்குத் தகுந்த அல்லது பயனுடைய காரியங்களுக்காகத்தான் நாம் பிரயாசப் பட்டுக்கொண்டிருந்தோமா, இல்லையா என்பதை அந்நாளில் நாம் அறிந்துகொள்ளுவோம். நாம் நம்முடைய சுயத்துக்காகவா அல்லது கிறிஸ்துவுக்காகவா, தற்காலத்துக்காகவா அல்லது நித்தியத்திற்காகவா - எதற்காகப் பிரயாசப்பட்டோம் என்று நாம் அறிந்துகொள்ளுகிற நாள் வரு கிறது. நம்முடைய கிரியைகளில் எத்தனை நிலைத்திருக்கின்றன என்பது அன்று வெளியாகும். "*அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும்*" (I கொரி. 3 : 13).

ஆகவே நாம் கர்த்தராகிய இயேசுவோடு என்றென்றைக்கும் இருக்கும்படியாக வெகுசீக்கிரத்தில் உயர்த்தப்படப்போவதால் நாம் தேவனுடைய ராஜ்யத்துக்காகச் செலவுபண்ணவும் செலவுபண்ணப்படவும் மகிழ்ச்சியுடன் நம்மை அர்ப்பணித்து, அநுதினமும் கர்த்தராகிய இயேசு வோடு கூட நடப்போமாக.

அக்டோபர் 24

நீ ஒரு முத்துச்சிப்பியாக இரு!

"***கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே (அல்லது மனப்பான்மையே) உங்களிலும் இருக்கக்கடவது***" (பிலி. 2 : 5).

நாம் சந்திக்கும் பிரச்சினைகளில் தொண்ணூற்றொன்பது சதவீதத் திற்குமுரிய காரணம் நம்முடைய தவறான மனப்பான்மையே ஆகும். நம்முடைய பிரச்சினை அல்ல, அப்பிரச்சினையைக் குறித்த நம்முடைய தவறான மனப்பான்மையே நமது உள்ளான கலக்கத்துக்கான காரணமா யிருக்கக் கூடும்.

எடுத்துக்காட்டாக, ஒரு மண்துகள் உங்களுடைய கண்களில் ஒன்றில் விழுந்துவிடுமாயின், உடனே அக்கண் சிவந்து, அதில் எரிச்சலும், வேதனையும் உண்டாகிறது. ஆனால் அதே மண்துகள் ஒரு முத்துச் சிப்பிக்குள் செல்லுமாயின், அதினிமித்தம் தனக்கு உண்டாகக்கூடிய

உறுத்துதலைத் தவிர்ப்பதற்காக அதினுள் உள்ள புழு ஒருவித திரவத்தைச் சுரந்து, அதினால் முழு மண் துகளையும் மூடுவதோடல்லாமல், இறுதியாக அந்த மண்துகளை ஒரு அழகான முத்தாகவும் மாற்றிவிடுகிறது. மண்துகள் எவ்வளவு பெரியதாக இருக்கிறதோ அவ்வளவு பெரியதாக அந்த முத்தும் இருக்கும்.

நம்முடைய பிரச்சினைகளெல்லாம் ஒரு மண்துகளைப் போன்ற வையே. அவற்றுக்கான உங்கள் பிரதிக்கிரியையானது கண்ணில் ஒரு மண்துகள் விழும்போது உண்டாகும் கிரியையைப் போல (தவறான மனப்பான்மையோடு கூடியதாக) இருக்குமாயின், அது ஏராளமான பிரச்சினைகளுக்கு வழிவகுத்துவிடும்; ஆனால் முத்துச்சிப்பியைப் போல நீங்கள் (சரியான மனப்பான்மையோடு) செயல்படுவீர்களாயின், அதில் உங்களுக்கு ஒரு பெரிய ஆசீர்வாதமுண்டு.

அருமையான நண்பனே, இன்று நீ பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்துக்கொண்டிருக்கக் கூடும். அவைகளைக் குறித்த சரியான மனப் பான்மை உனக்கு உண்டா? உன்னுடைய சுபாவத்தை மெருகேற்றும் படியாகவே பரமபிதாவானவர் உன் ஜீவியத்தில் பிரச்சினைகளை அனுமதித் திருக்கிறார் என்பதை உணர்ந்தவனாக, உன்னுடைய எல்லாப் பிரச்சினை களுக்காகவும் நீ தேவனை ஸ்தோத்திரிக்கிறாயா? அப்படியென்றால், நீ உன்னுடைய சோதனைகளினின்று மிகச் சிறந்த ஜெயம்பெற்றவனாய் வெளிவருவாய்.

அக்டோபர் 25

மகிமையின் தேவன்

'இப்போது கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ என்றார்' (ஆதி. 12 : 1 -Eng.).

'*இப்போது கர்த்தர் ஆபிராமை நோக்கி*' (ஆதி. 12 : 1) - இது தேவன் ஆபிரகாமோடு பேசிய இரண்டாவது சந்தர்ப்பமாகும். முதலாவது கர்த்தர் மெசொப்பொத்தாமியாவில் அவனுக்கு மகிமையின் தேவனாகத் தரிசன மானார் (அப். 7 : 2). ஒரு மனிதன் தேவனுடைய மகிமையைக் காணும் போது, அவன் தேவனைத் தவிர வேறொன்றையும் விரும்பமாட்டான். மோசே தேவனுடைய மகிமையைக் காண விரும்பியதற்கான காரணம் அதுவேயாகும்.

ஆபிரகாம் தேவனுடைய மகிமையைக் கண்டதினிமித்தம் தன் னுடைய தேசத்தையும் இனத்தையும் குடும்பத்தையும் மற்றும் பலவற்றை யும் விட்டுவிட மனமுவந்திருந்தான். முதலாவதாகத் தசமபாகம் கொடுத் தவன் அவனே. ஜனங்கள் தேவனுக்கென்று எதையாகிலும் கொடுக்க வேண்டுமாயின், தேவனுடைய மகிமையைப் பற்றிய வெளிப்படுத்தல் அவர்களுக்கு அவசியம். தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் அப். பவுல் கர்த்தருடைய மகிமையைக் கண்டார். இதுவே தனக்கு இலாபமாயிருந்த எல்லாவற்றையும் குப்பையாக எண்ணுவதற்கு அவரை வழிநடத்திற்று (பிலி. 3 : 7, 8, 11).

ஸ்தேவான் தேவனுடைய மகிமையைப் பற்றிய பிரசங்கத்தை ஆரம்பித்தபோது, அவருடைய சத்துருக்களுங்கூட அவருடைய முகம் ஒரு தேவதூதனுடைய முகம் போலிருக்கக் கண்டார்கள் (அப். 6 : 15). உங்களுடைய முகம் அதாவது இருதயம் மாற்றப்படும்போது, தேவனுடைய மகிமையைப் பற்றி மட்டுமே உங்களால் பேச முடியும். முடிவாக, ஸ்தேவான் கண்டதெல்லாம் தேவனுடைய மகிமையேயன்றி வேறொன்றுமல்ல (அப். 7 : 55). தன்னைக் கல்லெறிவதற்காக நின்று கொண்டிருந்த கொலைபாதகர்களை அவர் காணவில்லை என்பது எவ்வளவு ஆச்சரியமாக உள்ளது! நீங்கள் தேவனைக் குறித்த உணர்வுள்ள வர்களாக இருக்கும்போது (தேவனைப் பற்றி மட்டுமே நினைவுள்ளவர் களாய்த் தேவமகிமையில் ஆழ்ந்திருக்கும்போது), நீங்கள் உங்களைப் பற்றிய நினைவுள்ளவர்களாகவோ (சுய உணர்வுள்ளவர்களாகவோ), அல்லது உலகத்தைக் குறித்த உணர்வுள்ளவர்களாகவோ (உங்களைச் சுற்றிலும் இருப்பவைகளைக் குறித்து சிந்தித்துக்கொண்டிருக்கிறவர்க ளாகவோ) அதன் பின்னர் ஒருபோதும் இருப்பதில்லை என்பதை இது தெளிவாக நிரூபிக்கிறது. ஸ்தேவான் தேவமகிமையைக் குறித்த தன் னுடைய பிரசங்கத்தை முடித்தபோது, தேவமகிமையைக் கண்டுகொண்டே மகிமைக்குள் பிரவேசித்தார்! அதுவே மெய்யான மகிமையாகும்!

மகிமையின் தேவன் ஆபிரகாமுக்கு மெசொப்பொத்தாமியாவில் தரிசனமாகி, அந்தத் தேசத்தை விட்டு கானானுக்குப் போகும்படி சொன்ன போது, அவன் அதற்குக் கீழ்ப்படிந்தான்.

ஆரம்பத்தில், ஆபிரகாமின் கீழ்ப்படிதல் தேராகின் நிமித்தம் முழுமையானதாக இருக்கவில்லை. ஆதியாகமம் 11 : 31 -காண்க. ஆகவே பதின்மூன்று வருடங்களுக்கு அவனுக்குத் தேவனிடமிருந்து மேற்கொண்டு யாதொரு வாக்குத்தத்தங்களோ அல்லது தரிசனங்களோ கிடைக்கவில்லை. அடுத்து, ஆதியாகமம் 12 : 1 -இல் நாம் காண்பது போல, தேவன் அவனுக்கு இரண்டாவது தருணத்தைக் கொடுத்தார். ஒருவேளை நீங்கள்

பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட நாளிலோ அல்லது தேவனின் விசேஷமான சந்திப்பைப் பெற்ற ஒரு நாளிலோ மகிமையின் தேவன் உங்களுக்குத் தரிசனமாகி, கானானுக்கு (தேவனுடைய மிகச் சிறந்ததை அடைந்துகொள்ளும்படி) உங்களை அழைத்திருக்கக் கூடும். நீங்கள் பதின்மூன்று வருடங்களோ அல்லது அதற்கும் அதிகமாகவோ குறை வாகவோ தாமதித்திருக்கக் கூடும். ஆரானிலிருந்த ஆபிராமைப் போல தேவனிடமிருந்து மேற்கொண்டு வாக்குத்தத்தங்களோ அல்லது சந்திப்பு களோ கிடைக்கப்பெறாமல் நீங்கள் 'ஆரானில்' இருக்கக் கூடும். ஒருவேளை இப்போது, நீங்கள் இதை வாசித்துக்கொண்டிருக்கும்போதே, கர்த்தர் உங்களுக்கு இரண்டாவது ஒரு தருணத்தை அளிக்கிறார். மகிமையின் தேவனைப் பற்றிய உங்கள் தரிசனம் இன்று புதுப்பிக்கப்படுவதாக!

அக்டோபர் 26

'உன்னுடைய இருதயத்தை எனக்குத் தா!'

"*என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது*" (சங். 40 : 8).

மேற்கூறப்பட்டுள்ள வசனத்தில் "உமது நியாயப்பிரமாணம் என் *உள்ளத்திற்குள்* இருக்கிறது" என்று நாம் வாசிக்கிறோமேயன்றி, 'என் *தலைக்குள்* இருக்கிறது' என நாம் வாசிப்பதில்லை. தேவனுடைய பிள்ளை கள் சிலர் தங்களுடைய மரணப்படுக்கையில்தான் தாங்கள் தங்கள் ஜீவிய காலத்தில் தேவசித்தத்தைப் பிரியத்தோடு மனமுவந்து செய்யவில்லை என்பதை உணருகிறார்கள். அவர்கள் அசுத்த ஆவிகளால் தாக்கப்படு கிறார்கள்; பிசாசு தங்களைத் தாக்க வருவதாக அவர்கள் சொப்பனங்கள் காண்கிறார்கள் - இவையெல்லாவற்றிற்கும் காரணம், அவர்கள் தங்கள் ஜீவிய காலத்தில் முறுமுறுத்து முறையிட்டுக்கொண்டிருந்ததும், தேவசித்தம் செய்ய மகிழ்ச்சியற்றவர்களாயிருந்ததுமேயாகும். தேவனுக்கடுத்த காரி யங்கள் அவர்களுடைய தலையில் இருந்ததேயொழிய, அவர்களுடைய இருதயத்தில் இருக்கவில்லை. அவர்கள் தங்கள் சுய சித்தம் செய்து, தங்கள் சொந்த வழிகளில் நடந்தனர்.

இருதயமும் மனதும் ஒன்றோடொன்று தொடர்புடையவையாகும். "*அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவி*" (I நாளா. 28 : 9) என்று நாம் வாசிக்கிறோம். ஆகவே உங்களுடைய இருதயம் தேவனோடு செம்மையாயிராத பட்சத்தில், ஒரு நாள் உங்களுடைய மனது நிச்சய மாகவே பிசாசினால் தாக்கப்படும். உங்களுக்கு ஜெபிக்க வேண்டுமென்ற

விருப்பம் இருக்கும். எனினும் உங்களுடைய மனது கலக்கமுற்றுக் குழம்பியிருக்கும். பிசாசானவன், 'ஜெபம் முக்கியமானது அல்ல. அங்கு மிங்கும் ஓடி உன்னுடைய வேலையை செய்' என்று உங்களிடம் கூறு வான். உங்களுடைய இருதயம் தூய்மையை வாஞ்சிக்கும்; ஆனால் பிசாசானவன் உங்களுடைய மனதைத் தாக்கிக்கொண்டிருப்பான். உங்களுடைய மனது இரவில் உண்டாகும் திகிலூட்டும் கனவுகளாலுங்கூட தாக்கப்படக் கூடும். தலைக்கும் இருதயத்துக்கும் இடையே எப்பொழு துமே ஒரு போராட்டம் உண்டு. இவற்றுள் இருதயமே ஜெயிக்க வேண்டும்.

"*என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா*" (நீதி. 23 : 26) - நீங்கள் இரட்சிக்கப்பட்டபோது உங்கள் இருதயத்தைக் கர்த்தராகிய இயேசுவுக்குக் கொடுத்தீர்கள். உங்களுடைய இருதயத்தை மறுபடியுமாகக் கர்த்தராகிய இயேசுவுக்குக் கொடுங்கள். அப்பொழுது பிசாசானவனால் உங்கள் மனதைத் தாக்க முடியாது. நம்முடைய ஜீவியத்தின் மிகவும் பெலவீன மான நேரங்களில் பிசாசானவன் நம்மைத் தாக்கும்படி காத்துக்கொண் டிருக்கிறான். நாம் நம்முடைய இருதயத்தைத் தேவனுக்குக் கொடுப்போ மாயின், தேவசித்தம் செய்ய நாம் மனமகிழ்ச்சியுள்ளவர்களாயிருப்போ மாயின், ஜீவனானாலும், மரணமானாலும், பிசாசானவனால் நம்மைத் தாக்க முடியாது. நம்முடைய ஜீவியத்தின் மிகவும் பெலவீனமான நேரம் மிகவும் பெலமான நேரமாக மாறும். "*பலவீனத்தில் பலன்கொண்டார்கள்*" (எபி. 11 : 34) என்று நாம் வாசிக்கிறோமே!

அக்டோபர் 27

'என் இயேசுவும் நானும்!'

"*அவர்கள் படவில் ஏறினவுடனே காற்று அமர்ந்தது*" (மத். 14 : 32).

ஆம், இது ஆச்சரியப்படத்தக்க உண்மையே. நம்முடைய வாழ்க்கைப் படகிற்குள் கர்த்தராகிய இயேசு வரும்போது, காற்று அமரு கிறது; மிகுந்த அமைதல் உண்டாகிறது.

இச்சம்பவத்தின் மிகவும் ஆச்சரியமான பகுதி அப். யோவானால் பதிவு செய்யப்பட்டுள்ளது: "*அப்பொழுது அவரைப் படவில் ஏற்றிக்கொள்ள மனதாயிருந்தார்கள்; உடனே படவு அவர்கள் போகிற கரையைப் பிடித்தது*". கர்த்தராகிய இயேசு படவில் ஏறும் வரை, அவர்கள் இராமுழுதும் தண்டு வலித்தும் பிரயாசப்பட்டுங்கூட படவு ஒரு நிர்ப்பந்தமான நிலைவரத்தில், முன்னும் பின்னும் அலைவுபட்டு, நடுக்கடலிலேயே இருந்தது. உங்

களுடைய ஜீவியத்திலோ அல்லது ஊழியத்திலோ கர்த்தராகிய இயேசு இல்லாமல் உங்களால் முன்னேறிச் செல்ல முடியாது. "*கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா; கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா*" (சங். 127 : 1, 2).

கர்த்தராகிய இயேசுவும் பேதுருவும் தண்ணீரில் நடந்தது ஒரு பெரிய அற்புதமாயிருக்க, கர்த்தராகிய இயேசு படவில் ஏறினவுடன்தானே (நடுக்கடலில் இருந்த) படவு கரை சேர்ந்தது அதைக் காட்டிலும் மேலான தோர் அற்புதமாகும்! ஒருவேளை உங்களுடைய ஜீவியத்தில் யாதொரு முன்னேற்றமுமின்றி ஓரிடத்திலேயே தரித்து நின்றுபோன நிலையில் நீங்கள் இருக்கக் கூடும். உங்களுடைய வாழ்க்கைப் படகின் மாலுமியாக நீங்கள் கர்த்தராகிய இயேசுவை உங்களுடைய ஜீவியத்துக்குள் வரவழைக் காதிருப்பதே அதற்கான காரணமாகும். இப்பொழுதே கர்த்தராகிய இயேசுவை உங்கள் உடன்பங்காளியாக்கிக்கொள்ளும் ஒரு உடன் படிக்கைக்குள் பிரவேசித்து, அதினாலுண்டாகும் மாற்றத்தைப் பாருங்கள்.

அருமையான தேவபிள்ளையே, கர்த்தராகிய இயேசு எப்பொழுதும் உன்னுடைய வாழ்க்கைப் படகிலும், உன்னுடைய திட்டங்களனைத்தின் மையத்திலும் காணப்படுவாராக. அவரே உன்னுடைய மாலுமியாக, வழி காட்டியாக, அடைக்கலமாக, நிவாரணமாக இருப்பாராக. அப்படியென் றால், நீ யாதொரு சிரமமுமின்றிப் பரலோகக் கரையைச் சென்றடைவாய்.

அக்டோபர் 28

தேவனுடைய முதன்மையான கரிசனை

"***தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று***" (ஆதி. 1 : 3).

வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள தேவனுடைய உதடுகளினின்று பிறந்த முதல் கட்டளையானது, "***வெளிச்சம்*** *உண்டாகக்கடவது*" என்ப தாகும். அது எளிமையானதாகவும் சுருக்கமானதாகவும் இருப்பினும், அது விழுந்துபோன தூதர்களுக்கும் பரிசுத்த தேவனுக்குமிடையே இருந்த ஆழ்ந்தகன்ற பிளவை நிவிர்த்தி செய்வதைத் தழுவிய ஒரு விரிவானதும் பல்வகைப் பெருக்கமுடையதுமான ஒரு விஷயமாயிருந்தது. தேவன் அந்த வார்த்தைகளைப் பேசிய கூஷணத்தில்தானே அவரிடத்திலிருந்து வல்லமை புறப்படவே, "***வெளிச்சம்*** உண்டாயிற்று". இது ஒரு விசுவாசத் தின் கட்டளையாயிருந்தது. ஏனெனில், தேவன் வெளிச்சத்தைக் குறித்துப்

பேசியபோது, வெறும் காரிருளேயன்றி, வெளிச்சம் எங்குமே காணப்பட வில்லை. ஆகவே, "*விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது*" (எபி. 11 : 1). தேவன் வார்த்தையை உரைத்தபோது வெளிச்சம் எங்கிருந்து வந்தது? 'மெய்யான ஒளி'யாகிய தேவனிடத்திலிருந்தே அது வந்தது. அவருடைய தெய்வீகத் தூதானது, அவருடைய கிரியையை விட்டுப் பிரிக்க முடியாததாக, அதைத் தொடர்ந்து அக்கிரியையுடன் இணைந்ததாய் இருந்தது; அவர் தம்மிலி ருந்ததையே பேசியதினிமித்தம் வெளிச்சம் உண்டாயிற்று. இவ்வாறு, நாம் போதிப்பதையே பயிற்சிக்க வேண்டும் என்பதற்கான நம்முடைய முதல் மாதிரி தேவனே ஆவார்!

பரிசுத்தம் அல்லது பரிசுத்தமாகுதல் என்பது, அநேக பிரசங்கபீடங் களிலிருந்து அரிதாகக் கேட்கப்படுகிற ஒரு விஷயமாயிருக்கிறது என்பது ஒரு துக்ககரமான விஷயமாகும். ஒரு மெய்யான தேவ ஊழியனின் ஜீவியமும் தூதும் தேவனுடைய இந்த முதல் தூதைப் பிரதிபலிப்பதாகவும், அத்தூதிற்கு அவனே பிரதிநிதியாகவும் அடையாளமாகவும் நிற்பதாகவும் இருக்கும். அவனில் ஒரு ***வெளிச்சத்தின் தூது*** (message of light) இருக்குமே யன்றி, ஒரு சாரமற்றதும் ***உறுதியற்றதுமான தூது*** (light message) இராது.

அருமையான வாசகரே, நம்முடைய பரிசுத்தமே தேவனுடைய முதன்மையான கரிசனையாயிருப்பதால், அவர் கொடுத்த முதல் தூதானது வெளிச்சத்தை அல்லது பரிசுத்தத்தைப் பற்றியதாயிருந்தது. இந்த அறிவு நமக்கு மெய்யாகவே உற்சாகமளிப்பதாயிருக்கிறது. ஒரு பரிசுத்த ஜீவியம் செய்ய நாம் நம்மையே அர்ப்பணிக்கும்போது, அநேகர் நம்மை விளங்கிக்கொள்ளாமலோ அல்லது பாராட்டாமலோ இருக்கலாம்; ஆயினும் நம்முடைய தேவனே நம் அர்ப்பணிப்பைக் கண்டு, அதைக் குறித்து சந்தோஷப்படக்கூடிய முதல் நபராயிருப்பார்.

அக்டோபர் 29

கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்படுதல்

'***இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப் படுவோம்***' (ரோமர் 5 : 9).

நாம் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்படக் கூடும். ஒருவேளை இதுவே நாம் அவருடைய இரத்தத்தின் மூலம் பெற்றுக்

கொள்ளும் மிகப் பெரியதும் ஆச்சரியமானதுமான ஓர் அனுபவமா யிருக்கக் கூடும். '*நீதிமான்களாக்கப்படுதல்*' என்பதன் பொருள், நாம் ஒருபோதும் பாவமே செய்திராதவர்கள் போலாக்கப்படுகிறோம் என்ப தாகும். நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்துடன் ஒருவன் தன் பாவத்தைக் குறித்து மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பி அதை அறிக்கை செய்தால், அந்தப் பாவத்தைத் துடைத்துப்போட்டு, அதை அறவே அகற்றி விடவும், பாவம் செய்த நபரை நீதிமானாக்கவும் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்துக்கு வல்லமை உண்டு.

ஒருமுறை ஒரு அலுவலகத்தில் வேலை செய்துகொண்டிருந்த ஒரு தேவபிள்ளையிடம் கணித சம்பந்தமான சில கணக்கீடுகள் செய்து முடிக்கப்படும்படி ஒப்புவிக்கப்பட்டன. அவர் தன்னுடைய வேலையை முடித்து தன் மேலாளரிடம் கொடுத்துவிட்டு வீடு திரும்பினார். அங்ஙனம் அவர் தன் வீட்டுக்குச் சென்றுகொண்டிருக்கையில், தான் செய்த கணக்கு ஒன்றில் ஒரு பெரிய தவறிழைத்திருப்பதாகத் திடீரென்று அவரது மனதில் உதித்தது. அவர் அதிர்ச்சியுற்றார். அந்தப் பத்திரம், டீசல் இயந்திரங்களை உற்பத்தி செய்வதில் உபயோகப்படுத்தப்படும் மிக முக்கியமான ஒரு பத்திரமாக இருந்ததால், அந்தத் தவற்றினால் உண்டாகக்கூடிய விளைவுகள் பெரும் நஷ்டத்திற்கு வழிவகுப்பவையாகிவிடும். ஆனால் இப்போது என்ன செய்வது? அவர் தன்னுடைய வீட்டுக்குச் சென்றவுடன் தேவசமுகத்தில் முழங்காற்படியிட்டு, தன்னுடைய பெருமை, மதியீனம், மிதமிஞ்சிய தன்னம்பிக்கை போன்றவற்றிற்காக மனஸ்தாபப்பட்டார். கர்த்தர் தன்னை மன்னித்துவிட்டார் என்ற நிச்சயம் அவருக்குக் கிடைத்தது; அத்துடன் அவருடைய கவலை அவரை விட்டு அகன்றது. இருப்பினும், அவர் தான் செய்த பிழையைக் குறித்து மனம் வருந்திக்கொண்டிருந்தார். தேவனால் அவருடைய மேலாளருடைய மேஜைக்குச் சென்று அவர் செய்த தவற்றைத் திருத்த முடியுமா? (ஆம், அதை விட அதிகமாகவே தேவனால் செய்யக் கூடும்!) அடுத்த நாள், அவர் தன்னுடைய மேலாளருடைய அறை நோக்கிச் சென்றுகொண்டிருக்கையில், அவருடன் பணிபுரிந்துகொண் டிருந்த சக ஊழியரில் ஒருவர் அவரைச் சந்தித்து, மேலாளர் அங்கு பணிபுரிந்துகொண்டிருந்தவர்கள் யாவரையும் அழைத்து, அந்தத் தேவ மனிதருக்கு இருந்த திறமையைப் பாராட்டி, 'நம்முடைய அலுவலகத்தில் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள வாலிபன் மிகவும் புத்திக்கூர்மை யுள்ளவராக இருக்க வேண்டும்; கணக்கிடுதலில் நான் ஒரு தவறிழைத் திருந்தேன். என்னுடைய தவற்றை அவர் கண்டுபிடித்து, அதைத் திருத்தி விட்டார்' என்று கூறியதாகச் சொன்னார்.

அருமையான வாசகரே, இது மிகப் பொருத்தமானதோர் எடுத்துக் காட்டாயிராவிடினும், '*அவருடைய இரத்தத்தினால் நீதிமான்களாக்கப்படுதல்*'

என்னும் சத்தியம் மாறாததாயிருக்கிறது. உம்முடைய பாவங்களுக்காகவும் மதியீனமான தவறுகளுக்காகவும் நீர் மெய்யாகவே மனஸ்தாபப்பட்டு மனந்திரும்புவீராயின், உம்மை மன்னித்து நீதிமானாக்குவதற்குக் கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்துக்கு வல்லமை உண்டு என்பதை நினைவிற்கொள்ளுவீராக.

அக்டோபர் 30

விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டேன்!

'***நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டேன்***' (சங். 139 : 15).

உண்மையான பரிசுத்தவான்களை ஒளிப்பிடத்தில் வைத்து உருவாக்கவே தேவன் இன்னும் விரும்புகிறார். உலகம் பெரிய பரிசுத்த வான்களென்று கணித்த சிலர் நரகக்குழியில் இருப்பதையும், உலகத்தால் அசட்டைபண்ணப்பட்டு புறக்கணித்துத் தள்ளப்பட்ட வேறு சிலரோ மிக மேன்மையான பரிசுத்தவான்களாக நித்தியத்தில் இருப்பதையும் காண்பது, ஒரு நாள் நம் அனைவரையும் மெய்யாகவே வியப்பில் ஆழ்த்துவதாயும் அதிர்ச்சிக்குள்ளாக்குவதாயும் இருக்கப்போகிறது!

தம்முடைய பரிசுத்தவான்கள் கிறிஸ்துவுக்குள் மறைந்து ஜீவிக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் - "*உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது*" (கொலோ. 3 : 3). 91 -ஆம் சங்கீதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மகிமையான ஆசீர்வாதங்களெல்லாம், '*உன்னதமான வரின் மறைவிலிருக்கிறவர்களுக்கே*' உரியவையாகும். உன்னதமானவரின் மறைவிலிருக்கும் பரிசுத்தவான்கள் இரகசிய பாவங்களை வெறுத்துவிடு வார்கள். இந்தப் பாவ உலகத்தின் வசீகரங்களையும் மகிமைகளையும் விட்டுவிட்டு, கிறிஸ்துவுக்குள் மறைந்திருக்கும் ஒரு ஜீவியம் செய்வ தென்பது எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்ட ஒன்றாகும்!

விரிவாக்கப்பட்ட ஆங்கில வேதாகமம் (Amp. Bible) மேற்காணும் வசனத்தை இவ்விதமாகக் கூறுகிறது: நான் '*பூமியின் ஆழங்களில் (இருளும் மர்மமும் நிறைந்த மண்டலத்தில்) நுட்பமாக, விசித்திர விநோதமாய் (பல்வேறு வண்ண நிறங்களால் சித்திரத்தையல் வேலைப்பாடு செய்யப் பட்டது போல) உருவாக்கப்பட்டேன்*'. பல்வேறு அழகான நிறங்களுள்ள அல்லது பூரணங்களையுடைய மேன்மை வாய்ந்ததொரு பரிசுத்தவானாக உன்னை உருவாக்க வேண்டுமென்று தேவன் திட்டம் வகுத்திருப்

பாராயின், அவர் உன்னைப் 'பூமியின் தாழ்விடங்களுக்கு' அல்லது கர்த்தராகிய இயேசுதாமே செல்ல வேண்டியதாயிருந்ததான 'அடிமட்டத் திற்குத் தாழ்த்தப்படும்' சூழ்நிலைகளினூடாகக் கொண்டுசெல்லக் கூடும். சில காலத்துக்காகிலும் காரியங்கள் உனக்கு மர்மமாகத் தோன்றும் வகையில், கர்த்தர் உன்னை அப்படிப்பட்ட இருளான பகுதிகளினூடாகவோ அல்லது கால கட்டங்களினூடாகவோ எடுத்துச்செல்லக் கூடும். இவையெல்லாம் மகிமையின் மாளிகைகளின் அஸ்திபாரங்களேயாகும். '*சிறுமைப்பட்டவனே, பெருங்காற்றில் அடிபட்டவனே, தேற்றரவற்றவனே, இதோ, நான் உன் கல்லுகளைப் பிரகாசிக்கும்படி வைத்து, நீலரத்தினங்களை உன் அஸ்திபாரமாக்குவேன்*' (ஏசாயா 54 : 11).

தேவகிருபையினால், தேவனுக்குள் மறைந்திருந்து எல்லாவிதமான இருளான, சிறுமைப்படுத்தப்படுகிற பாதைகளினூடாகவும் நாம் கடந்து சென்ற பின், முடிவாக, "*நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும்*" (சங். 139 : 14) என்று வியந்து கூறத்தக்கவர்களாயிருப்போம்.

அக்டோபர் 31

ஆசீர்வதிக்கப்பட்ட ஓர் அறிக்கை

"நீர் என் இருதயத்தைப் பரிசோதித்து, இராக்காலத்தில் அதை விசாரித்து, என்னைப் புடமிட்டுப்பார்த்தும் ஒன்றும் காணாதிருக்கிறீர்; என் வாய் மீறாதபடிக்குத் தீர்மானம்பண்ணினேன்" (சங். 17 : 3).

கர்த்தருடைய இரகசிய வருகைக்கென்று காத்துக்கொண்டிருக்கிற ஒவ்வொரு மெய்யான தேவபிள்ளையின் அறிக்கையும் இதுவாகவே இருக்க வேண்டும். சங்கீதக்காரன், தேவன் தன்னுடைய இருதயத்தைப் பரிசோதித்து, இராக்காலத்தில் தன்னை விசாரித்து, வெளிப்படையாகப் பல்வேறு வழிகளில் புடமிட்டுப்பார்த்தும் யாதொரு **தீ**ய நோக்கத்தையோ அல்லது உத்தேசத்தையோ தன்னுடைய இருதயத்தில் காணவில்லை என்று கூறுகிறான்.

இங்கு, 'இராக்காலம்' என்பது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் இருள் நிறைந்த சமயங்களைக் காட்டுகிறது. செழிப்பான காலங்களில் நம்முடைய இருதயம் தேவனோடு செம்மையானதாக இருக்கக் கூடும்;

எந்தவொரு தவறான நோக்கமும் நம் இருதயத்தில் உட்பிரவேசிக்க நாம் இடமளிக்காமலிருக்கக் கூடும். ஆனால் நம்முடைய ஜீவியத்தின் 'இரவுகளில்' அதாவது சகலமும் துக்கம் நிறைந்ததாகவும் இருள் சூழ்ந்ததாகவும் இருக்கையிலுங்கூட தேவன் நம்மைச் சந்திப்பார் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். அச்சமயங்களில், நம்முடைய இருதயம் தேவகிருபையினால் நிரப்பப்பட்டிராவிடில், **தீ**ய எண்ணங்களும் கேள்விகளும் நம்முடைய மனதை நிரப்ப நாம் இடமளித்து, நாம் கர்த்தரை விட்டுத் தூரமாகச் சென்றுவிடக் கூடும். '*நீர் ஒன்றும் காணாதிருக்கிறீர் - எந்தவொரு தீய நோக்கத்தையும் - என்னில் காணாதிருக்கிறீர்*' (Amp.) என்ற சங்கீதக்காரனின் சாட்சி மெய்யாகவே நமக்குத் தைரியமூட்டுவதாயிருக்கிறது.

இச்சங்கீதம், பின்வரும் ஆசீர்வதிக்கப்பட்ட நம்பிக்கையின் நிச்சயத்தோடு முடிவுறுகிறது: "*நானோ நீதியில் உம்முடைய முகத்தைத் தரிசிப்பேன்; நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்*" (வச. 15). "நான் விழிக்கும்போது" என்பது இங்கு 'நான் உயிர்த்தெழும்போது' என்று பொருள்படும். ஆனால் இப்பொழுதோ, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் உண்டாகும் விழிப்புணர்வு ஒவ்வொன்றும் கிறிஸ்துவின் சாயலை நமக்குள் பொழிந்தருள வேண்டும். நாம் நமக்குள் எவ்வளவதிகமாகக் கிறிஸ்துவை உடையவர்களாயிருக்கிறோமோ, அவ்வளவதிகமான திருப்தியுடையவர்களாக இருப்போம். உண்மையில், கர்த்தருடைய முகத்தைக் காண்பது போல வேறெதுவுமே ஒரு பரிசுத்தவானைப் பூலோகத்திலோ அல்லது பரலோகத்திலோ திருப்திப்படுத்த முடியாது. மறுபக்கத்தில் இவ்வுலகத்தின் காரியங்கள் நம்மை மென்மேலும் திருப்தியற்றவர்களாகவும் சந்தோஷமற்றவர்களாகவும் மட்டுமே மாற்றும். மேலும் அவை நம்மை மென்மேலும் எரிச்சலுள்ளவர்களாகவும் வியாகுலமுள்ளவர்களாகவும் கவலையுள்ளவர்களாகவும் மாற்றும். ஆகவே நாம் மென்மேலும் திருப்தியுள்ளவர்களாயிருக்கும்படி, கர்த்தருக்காகவும், அவருடைய கிருபைக்காகவும், அவருடைய திவ்விய சுபாவங்களாகிய தூய்மை, தாழ்மை, சாந்தம் போன்றவற்றுக்காகவும் அனுதினமும் அதிகமதிகமான பசியும் தாகமும் உள்ளவர்களாயிருப்போமாக.

தான் கர்த்தருடைய முகத்தை நிச்சயமாகக் காணலாம் என்ற நம்பிக்கை தாவீதுக்கிருந்தது. அவனுடைய இந்த நம்பிக்கைக்கு மிகப் பெரிய தூண்டுகோலாயிருந்தது அவனுடைய சுத்த இருதயமே ஆகும். "*இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்*". கிறிஸ்துவின் சாயலைக் காட்டிலும், ஒரு தேவனுடைய பிள்ளை தான் அடைந்துகொள்ளும்படி ஆசிக்க வேண்டிய அதி மேன்மையான காரியம் வேறொன்றில்லை.

நவம்பர் 1

உன்னுடைய இலக்கு என்ன?

"***கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்***" (சங். 27 : 4).

தாவீது ஒரு காரியத்தை வாஞ்சித்தான், அதை அவன் தன் முழு இருதயத்தோடும் வாஞ்சித்தான்; கர்த்தரைப் பார்க்க வேண்டுமென்பதே அவனுடைய ஒரே வாஞ்சையாக இருந்தது. நாமுங்கூட தேவனைத் தேடுகிற விஷயத்தில் ஒரே சிந்தையுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்றே தேவன் விரும்புகிறார். யாதொன்றினாலாகிலும் நம் சிந்தை சிதறடிக்கப்பட நாம் இடமளிப்போமாயின், நம்முடைய மிக முக்கியமான ஆவிக்குரிய நாட்டமாகிய இதில் நாம் ஒருபோதும் வெற்றியடையவே மாட்டோம்.

அப். பவுலுங்கூட இதைப் போலவே ஏக சிந்தையுள்ளவராக இருந்தார்: "***ஒன்று*** *செய்கிறேன்*" என்று அவர் கூறினார்: "*பின்னான வைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்*" (பிலி. 3 : 13, 14).

தேவபிள்ளையே, நீ ஒரே சிந்தையுள்ள ஒரு நபராக இருக்கிறாயா அல்லது வேறு அநேக காரியங்களின் மீது உன் மனது பதிக்கப்பட்டிருக்கிறதா? - கர்த்தர் இன்றையதினம் உன்னிடம் இந்த ஒரு காரியத்தைக் கேட்கிறார். நீ எதைத் தேடிக்கொண்டிருக்கிறாய்? ஒருவேளை இவ்வுலகத்தின் காரியங்களில் நீ உன்னுடைய மனது முழுவதையும் ஒருமிக்கச் செலுத்தும்படி பிசாசானவன் உன்னைச் சோதித்துக்கொண்டிருக்கக் கூடும். "*மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக்குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது* ***ஒன்றே,*** *மரியாள் தன்னை விட்டெடுபடாத* ***நல்ல பங்கைத்*** *தெரிந்துகொண்டாள்*" என்று கர்த்தராகிய இயேசு மார்த்தாளைக் கடிந்துகொண்டார் (லூக்கா 10 : 41, 42). அந்த ஒரு காரியத்தை நீ அசட்டையாக விட்டுவிட்டால், நீ உன்னைவிட்டு எடுபடக்கூடிய மற்ற பல்வேறு காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக்கொண்டேயிருப்பாய்.

சிலர் பொருள் சம்பந்தமான காரியங்களை அடைந்துகொள்வதைத் தவிர வேறெந்த இலக்கும் இல்லாதவர்களாயிருக்கின்றனர். அவர்களுடைய

விருப்பமெல்லாம், தாங்கள் கல்லறைக்குச் செல்லும் முன்பு தங்களுடைய பொருள் சம்பந்தமான (பூமிக்குரிய) இலக்குகளை அடைந்துதீர வேண்டும் என்பதாகவே இருக்கிறது. நம்முடைய இலக்கு அல்லது குறிக்கோள் கல்லறைக்கு அப்பாற்பட்டதாயிருக்க வேண்டும்.

தான் தன்னுடைய குறிக்கோளை அடைந்துகொள்வான் என்ற நம்பிக்கை தாவீதுக்கு இருந்தது. ஏனெனில் 23 -ஆம் சங்கீதத்தில் அவன், '***நிச்சயமாகவே*** *நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்*' (Eng.) என்று கூறுகிறான். நமக்கு ***ஒரே ஒரு குறிக்கோள்*** இருக்கட்டும், அதன் மேலேயே நம்முடைய மனதை நாம் பதித்திருப்போமாக.

நவம்பர் 2

தேவன் எல்லாக் காலத்திலும் நல்லவர்!

'***சுத்த இருதயமுள்ளவர்களுக்குத் தேவன் நல்லவராகவே இருக்கிறார்***'
(சங். 73 : 1).

ஆம், '*சுத்த இருதயமுள்ளவர்களுக்குத் தேவன் நல்லவராகவே இருக்கிறார்*' என்ற இந்த ஓர் இரகசியத்தை மட்டும் நாம் அறிந்திருந்தால் போதும், அப்போது *தேவன் நமக்கு எல்லாக் காலத்திலும் நல்லவராகவே இருப்பார்.* இந்த ஆசீர்வதிக்கப்பட்ட இரகசியத்தை முழு உலகமும் அறிய வருமானால் அது எவ்வளவு அருமையாக இருக்கும்! மாரி காலங்களிலும் கோடை காலங்களிலும், பிறந்த நாட்களிலும் இறந்த நாட்களிலும், பண்டிகை நாட்களிலும் அடக்க நாட்களிலும், விருந்து நாட்களிலும் உபவாச நாட்களிலும், களிப்பின் நாட்களிலும் துக்க நாட்களிலும், செழிப்பான நாட்களிலும் வறுமை நிறைந்த நாட்களிலும், வெற்றியுள்ள நாட்களிலும் சோதனை நாட்களிலும், ஆரோக்கியமுள்ள நாட்களிலும் வியாதியுள்ள நாட்களிலும் - ***எல்லாக் காலத்திலும் தேவன் நல்லவராகவேயிருக்கிறார்.*** இருப்பினும், இதற்கு ஒரே ஒரு நிபந்தனை மட்டுமே உண்டு. அது: '***இருதயத்தைச் சுத்தமாகக் காத்துக்கொள்***' என்பதே.

தாவீது தேவனை நேசித்து அவரோடு நடந்த ஒரு தேவமனிதனாயிருந்தபோதிலும், ஒரு நாள் அவன் பாவம் செய்ததினால் தன்னுடைய இருதயத்தின் தூய்மையை இழந்துபோனான். அப்போது அவனுடைய எலும்புகளெல்லாம் முறிக்கப்பட்டது போல அவனுக்கு அவ்வளவதிகமான வேதனை உண்டாயிற்று; அவன் தன்னுடைய எல்லாச் சந்தோஷத்தையும் இழந்தான். மீண்டும் தன் பழைய நிலைவரத்துக்குத் திரும்பி

வருவதற்கான இரகசியத்தை அறிந்திருந்த அவன், "*தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்*" (சங். 51 : 10) என்று தேவனை நோக்கிக் கதறினான். தேவனுக்கு ஸ்தோத்திரம்! ஒருவனுடைய இருதயம் அசுத்தமாயிருத்தலே ஒரு தவறான ஆவி (எரிச்சலடைதல், கோபப்படுதல் போன்றவை) அவனில் கிரியை செய்வதற்குக் காரணமாகிறது என்னும் உண்மையை அநேக கிறிஸ்தவர்கள் உட்பட இலட்சக்கணக்கான ஜனங்கள் அறியாதிருப்பது எவ்வளவு துக்ககரமான காரியம்! ஒருவனது இருதயம் சுத்தமாயிருக்கும்போது அவனது ஆவியும் செம்மையானதாக இருக்கும்.

அன்பான நண்பனே, உன்னுடைய கசப்பான சோதனைகளினின்று வெளியே வருவதற்கான ஒரு வழியை நீ தேடிக்கொண்டிருக்கிறாயா? தேவன் அவையெல்லாவற்றையும் இனிமையான, ஆசீர்வதிக்கப்பட்ட அனுபவங்களாக மாற்றித்தர வேண்டுமென்று நீ விரும்புகிறாயா? இருதயத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுதலே 'பாலும் தேனும் ஓடுகிற' ஒரு மகிழ்ச்சிகரமான வாழ்க்கையின் இரகசியமாகும்.

நவம்பர் 3

இவ்விதமாக உங்கள் வெளிச்சம் பிரகாசிப்பதாக!

"***அவைகள் பூமியின்மேல் பிரகாசிக்கும்படிக்கு வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்களாயிருக்கக்கடவது***" (ஆதி. 1 : 15).

தேவன் வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்களை வைத்தார். "*கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்*" (எபே. 2 : 7). தேவன் கிறிஸ்து இயேசுவுக்குள் உன்னதங்களிலே நம்மை வைத்திருக்கிறார். நாம் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ளும்போது இந்தப் பரலோக ராஜ்யத்துக்குள் பிரவேசிக்கிறோம். தேவன் நம்மை வைத்திருக்கும் இடம் எதுவாயினும், அது நமக்குப் பரலோகமே; அதை நாம் பரலோகமாக எடுத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுது நாம் பிரகாசித்து, மற்றவர்களுக்கு வெளிச்சம் கொடுக்கக் கூடியவர்களாயிருப்போம். ஆனால் நாம் நம்முடைய சொந்த சித்தத்தின்படி ஓர் இடத்தைத் தெரிந்துகொள்வோமாயின், லோத்து சோதோமைத் தெரிந்துகொண்டபோது அது அவனுக்குக்

கர்த்தருடைய தோட்டத்தைப் போல தென்பட்டது போல, நாம் தெரிந்து கொள்ளும் இடம் நமக்குப் பரலோகத்தைப் போல் தோன்றக் கூடும்; ஆனால் சோதோமின் மேல் அக்கினியும் கந்தகமும் வருஷிக்கப்பட்ட போது அது நரகத்தைப் போல் மாறியது போல, அது நமக்கு வெகு விரைவிலேயே நரகமாக மாறிவிடும். நம்மிலிருந்து ஒளிக்கதிர்கள் வீசுவதற்குப் பதிலாக, நாம் மற்றவர்களை அந்தகாரத்தில் அமிழ்த்துகிறவர்களாயிருப்போம்.

தேவன் நம்மை உன்னதங்களிலே வைத்திருக்கிறார்; நாம் பூமிக்கு வெளிச்சம் கொடுக்க வேண்டும் என்று நம்மைக் குறித்து அவர் எதிர்பார்க்கிறார். ஒளிகொடுப்பதின் மூலம் ஆளுகை செய்தலே ஆளுகை செய்வதற்கான தேவனின் முறைமையாகும். ஆளுகை செய்வதற்கான மிகச் சிறந்த வழி இதுவே. ஆளுகை செய்கிறவர்கள் மற்றவர்கள் தங்களைப் பின்பற்றக்கூடிய மாதிரியாகத் திகழ வேண்டும். ஆளுகை என்பது அதிகாரத்தின் அடிப்படையிலிராமல், சுபாவத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும். சுயநலமற்றதொரு ஜீவியம் செய்து, தேவனால் நியமிக்கப்பட்டுள்ள மாதிரியின்படி ஆளுகை செய்ய நமக்கு வெளிப்படுத்தலும் பிரகாசிப்பிக்கப்படுதலும் அவசியம். கர்த்தராகிய இயேசு, "*இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது*" (மத். 5 : 16) என்றார். நம்முடைய நற்கிரியைகளின் மூலமாக நாம் உலகத்திற்கு வெளிச்சம் கொடுக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

நவம்பர் 4

"நான்தான், பயப்படாதிருங்கள்"

"***உடனே இயேசு அவர்களோடே பேசி: திடன்கொள்ளுங்கள், நான்தான், பயப்படாதிருங்கள் என்றார்***" (மத். 14 : 27).

கர்த்தராகிய இயேசு, கொந்தளிக்கிற தண்ணீரில், யாதொரு மனித உதவியும் இன்றி, ஆதாரமாகப் பற்றிப் பிடித்துக்கொள்வதற்கென்று ஏது மற்றவராகத் தனிமையாக நடந்துகொண்டிருந்த போதிலும் அமைதியாகவும் மனமகிழ்ச்சியுள்ளவராகவும் இருந்தார். மறுபக்கத்தில், அவருடைய பன்னிரண்டு சீஷர்களோ - அவர்களில் அநேகர் மிக அதிகமாகக் கொந்தளிக்கிற கடலிலும் தண்டுவலிப்பதில் தேர்ச்சிபெற்றவர்களும் நல்ல

அனுபவமுள்ளவர்களுமாயிருந்தபோதிலும் - அனைவரும் படவில் ஒன்றாக உட்கார்ந்துகொண்டிருந்தபோதிலும் - கூச்சலிட்டு அலறிக்கொண்டிருந்தனர்!

கொந்தளிக்கிற கடலைத் தன்னந்தனியாகக் கடக்கும்படி விட்டு விடப்பட்டவராயிருந்த ஒரு நபர், படவில் அமர்ந்து யாத்திரை செய்துகொண்டிருந்த கூட்டத்துக்கு நம்பிக்கையையும் தைரியத்தையும் ஊட்டிக்கொண்டிருப்பதைக் காண்பது ஆச்சரியமளிப்பதாயிருக்கிற தல்லவா? இங்கு தெய்வீக அமைதிக்கும் மனித பெலவீனத்துக்கும் இடையே உள்ள மிகவும் அற்புதமான, ஆச்சரியமளிக்கக்கூடிய முரண் பாட்டை நாம் காண்கிறோமன்றோ?

இந்த ஆச்சரியமான சம்பவத்தைச் சுவிசேஷகனாகிய மாற்கு குறிப்பிடுகையில், '*அவர் கடலின்மேல் நடந்து அவர்களிடத்தில் வந்து, அவர்களைக் கடந்துபோகிறவர் போல் காணப்பட்டார்*' (மாற்கு 6 : 48) என்று கூறுகிறார். உண்மை தான்! சில சமயங்களில் கடினமான சூழ்நிலைகளில் நாம் இருக்கும்போது, கர்த்தராகிய இயேசு நம்மைக் கடந்துபோகிறவர் போல் காணப்படக் கூடும். ஆனால் அவர் ஒருபோதும் அவ்விதம் செய்யமாட்டார்.

அன்பான வாசகரே, ஒரு க்ஷணப்பொழுதாகிலும் நாம் பயப்படுவதை நம்முடைய கர்த்தர் விரும்புவதில்லை. நாம் கர்த்தராகிய இயேசுவோடு உறுதியாய் நின்றுகொண்டு, நமக்கு வரும் சோதனைகளில் அசைக்கப் பட்டுப் போக மறுத்துவிடுவோமாக. அப்போது சோதனைகளில் அசைந்து போயிருப்பவர்களுக்கு நாம் உதவிசெய்யக்கூடியவர்களாயிருப்போம்.

கலங்கிடுவேனோ பதறிடுவேனோ
கர்த்தரில் விசுவாசம் இருக்கையிலே
அசையா என் நம்பிக்கை நங்கூரமே
இயேசுவில் மாத்திரமே.

நவம்பர் 5

மண்ணின் மகிமை

"***தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்***" (ஆதி. 2 : 7).

மண்ணுக்கு யாதொரு அழகும் பெலனும் இல்லை; அது காலின் கீழ் மிதிக்கப்படுகிறது. இந்த மண்ணிலிருந்து தான் தேவன் மனிதனை

உருவாக்கினார். தேவன் நிகரற்றவர், அவருடைய பெலனும் அழகும் இணையற்றவை. ஆனால் மனிதன் வெறும் மண்ணாயிருக்கிறான், அவன் மண்ணுக்குத் திரும்புகிறான். மனிதனின் உடலில் காணப்படும் இரசாயனப் பொருட்களும், மண்ணில் காணப்படும் இரசாயனப் பொருட்களும் ஒன்றே என்று விஞ்ஞானிகள் சமீபத்தில் கண்டுபிடித்திருக்கின்றனர் - இது மண்ணிலிருந்து மனிதன் சிருஷ்டிக்கப்பட்டவன் என்பதை நிரூபிக்கிறது.

மனிதன் மற்றெல்லாச் சிருஷ்டிகளுக்கும் பின்னர், கடைசியான வனாகவே சிருஷ்டிக்கப்பட்டதோடல்லாமல், (பரதீசின் மண்ணினால் அல்ல) வெறும் சாதாரண மண்ணினாலேயே சிருஷ்டிக்கப்பட்டபடியால், மேன்மைபாராட்ட அவனுக்கு ஒன்றுமே இல்லை. ஆயினும் மனிதன் தேவனுடைய ஒரு விசேஷித்த சிருஷ்டியாயிருந்தான். தேவனுடைய அதே சுவாசம் மனிதனுக்குள் ஊதப்பட்டது. தேவனுடைய சுவாசம் அல்லது தேவனுடைய நித்திய ஜீவனைப் பெற்றிருக்கும் சிலாக்கியம் மனிதனுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது. தம்முடைய சிருஷ்டிகளிலெல் லாம் மகுடமும் மிகச் சிறந்த சிருஷ்டியுமாகிய மனிதனைத் தேவன் மண்ணிலிருந்து சிருஷ்டித்தது போலவே, இப்போது மனிதன் தன்னை மண்ணென்று தாழ்த்தும்போது, தேவன் அவனை ஒரு மகிமையான சிருஷ்டியாக உருவாக்குகிறார்.

'*முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான்; பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார்*' (I கொரி. 15 : 45). முதலாம் ஆதாம் பாவஞ்செய்து நம்மெல்லார் மேலும் சாபத்தை வருவித்தான். ஆனால் பிந்தின ஆதாமாகிய நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் மூலமாக நாம் இழந்துபோன எல்லா ஆசீர்வாதங்களையும் திரும்பப் பெற்றுக்கொள்ள லாம். நாம் மண்ணென்று நம்மைத் தாழ்த்தி, ஒரு மகிமையான மனி தனைத் தேவன் நம்மில் உருவாக்கும்படி அவருக்கு இடமளிப்போமாக.

நவம்பர் 6

பரிசுத்த ஆவியின் வழிநடத்துதல்

"***மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்***" (ரோமர் 8 : 14).

நாம் தேவசித்தம் செய்யும்போது, சில வேளைகளில் இவ்வுலக ஜனங்களுக்குப் பைத்தியக்காரர் போல் தோற்றமளிக்கக் கூடும்.

நம்முடைய வழிகள் அவர்களுக்கு அர்த்தமற்றவை போல் தோன்றக் கூடும். தேவன் மோசேயைப் பயிற்றுவித்துக்கொண்டிருந்தபோது, அவனுடைய கோலைத் தரையிலே போடும்படி அவனிடம் கூறினார். அவன் அப்படிச் செய்தபோது, அது சர்ப்பமாயிற்று. அப்பொழுது அதனுடைய வாலைப் பிடிக்கும்படி கர்த்தர் அவனிடம் கூறினார். எந்தவொரு விவேகமுள்ள மனுஷனும் ஒரு சர்ப்பத்தின் வாலைப் பிடிக்கமாட்டான். ஏனெனில் அது திரும்பிக்கொண்டு அவனைக் கடித்துவிடும். ஆனால் மோசே தேவனுக்குக் கீழ்ப்படிந்தபோது, சர்ப்பமானது மறுபடியுமாக ஒரு கோலாக மாறிற்று.

ஒரு குறிப்பிட்ட வழியினூடாகக் கர்த்தர் நம்மை ஏன் வழிநடத்துகிறார் என்பதை நாம் விளங்கிக்கொள்ளாமலிருக்கக் கூடும். ஆனால் அவருடைய வழிநடத்துதலின்படி நாம் செல்வோமாயின், நமக்குப் பூரணமான மனச்சமாதானம் இருக்கும். '*கிறிஸ்து கொடுக்கிற சமாதானம், நீங்கள் எடுக்க வேண்டிய தீர்மானத்துக்கு உங்களை வழி நடத்துவதற்காகவேயாகும்*' என்று கொலோசெயர் 3 : 15 - இன் வேறொரு ஆங்கில மொழிபெயர்ப்பு (GNB) கூறுகிறது. ஒரு குறிப்பிட்ட காரியத்தைக் குறித்து ஜெபம்பண்ணுகையில் உங்கள் ஆவியில் ஒருவித கலக்கத்தை நீங்கள் உணருவீர்களாயின், தேவன் அதனை 'வேண்டாம்' என்று சொல்லுகிறார் என்பதையே அது விளங்கப்பண்ணும். மறுபக்கத்தில், அவ்விஷயத்தைப் பற்றி ஜெபிக்கும்போது உங்களுக்கு உண்மையாகவே மனச்சமாதானம் இருக்குமாயின், அந்த வழியில் தேவன் உங்களை வழிநடத்துகிறார் என்பதே அதன் பொருளாகும். நீங்கள் தேவனோடு செம்மையான இருதயமுள்ளவர்களாக இருப்பீர்களாயின், நீங்கள் ஜெபிக்கும்போது தேவன் உங்களுக்கு மறுமொழியாக, '***வேண்டாம்***' என்றோ, '***காத்திரு***' என்றோ, அல்லது '***சரி***' என்றோ கூறுவதை உங்களால் உணர முடியும்.

'சமாதானம்' என்னும் வார்த்தைக்குக் கிரேக்க மொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள வார்த்தை ***மத்தியஸ்தர்*** என்னும் பொருள் கொண்ட 'UMPIRE' என்பதாகும். பரிசுத்த ஆவியானவர், விளையாட்டுப் போட்டிகளில் இரு சாராருக்கிடையே நிற்கும் நடுவரைப் போல செயல்படுகிறார். நீங்கள் ஒரு நபரோடு பேசிக்கொண்டிருக்கும்போது, பரிசுத்த ஆவியானவர் திடீரென்று, 'அதைச் சொல்லாதே' என்று கூறுவதாக நீங்கள் உணரக் கூடும். ஒரு நபரைக் குறித்து நீங்கள் தீமையாகச் சிந்திக்க முனைந்தால், பரிசுத்த ஆவியானவர், 'நீ தப்பெண்ணங்கொண்டிருக்கிறாய், அதை நிறுத்து!' என்று கூறக் கூடும். சில சமயங்களில் நீங்கள் ஒரு நபரைச் சந்திக்க விரும்பும்போது பரிசுத்த ஆவியானவர் உங்களிடம் 'வேண்டாம்' என்று கூறக் கூடும்.

சிலருடைய மனச்சாட்சி கடினப்பட்டிருப்பதினிமித்தம் அவர்களால் பரிசுத்த ஆவியானவரின் எச்சரிப்பைக் (நடுவரின் ஊதல் ஒலியை - whistling) கேட்க முடிவதில்லை. தேவபிள்ளையே, உன்னுடைய மனச்சாட்சி மரித்திருக்கிறதா? அல்லது உயிரோடிருக்கிறதா? பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலை உணரக்கூடிய நிலையில் நீ இருக்கிறாயா?

நவம்பர் 7

பெரிய விசுவாசம்

"***உனக்கும் அவைகளுக்கும் ஆகாரமாகச் சகலவித போஜனபதார்த்தங்களையும் சேர்த்து, உன்னிடத்தில் வைத்துக்கொள்***" (ஆதி. 6 : 21).

முழு உலகத்தையும் குறித்த பாரத்தை - ஒவ்வொரு ஜீவராசியும் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற பாரத்தை - தேவன் நோவாவில் வைத்தார். ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படவும் புதிய எருசலேமுக்கும் சீயோனுக்கும் ஆயத்தமாக்கப்படவும் வேண்டும் என்ற ஒரு பாரம் நம்மில் இருக்க வேண்டும். எல்லா ஜீவஜந்துக்களுக்கும் நோவா ஆகாரம் கொடுக்க வேண்டியதாயிருந்தது. அழிந்துபோகிற ஆத்துமாக்களுடைய இரட்சிப்பைக் குறித்த பாரமுடையவர்களுக்குக் கர்த்தர் ஆவிக்குரிய ஆகாரத்தை அல்லது வெளிப்படுத்தல்களைக் கொடுக்கிறார்.

'*உனக்கும் அவைகளுக்கும் அது ஆகாரமாக இருக்கும்* (Eng.)' - நீ ஆவிக்குரிய ஆகாரத்தைப் புசிக்கும்போது, நீ மற்றவர்களையும் போஷிக்க வேண்டியவனாயிருக்கிறாய் என்பதை மறந்துவிடாதே. அதே சமயத்தில் மற்றவர்களுக்காக நீ ஆவிக்குரிய ஆகாரத்தைச் சேகரிக்கும் போது, அது உனக்கும் அவசியம் என்பதையும் மறந்துபோகாதே.

"*நோவா அப்படியே செய்தான்*" - நோவாவுக்கு எவ்வளவு பணமும், பொருட்களும், மற்றும் பல ஏதுக்களும் தேவைப்பட்டிருந்திருக்கும்! ஆபிரகாமைப் போலவோ அல்லது யோபைப் போலவோ அவன் மிகுந்த ஐசுவரியமுள்ளவனாயிருந்ததாக நாம் வாசிப்பதில்லை. ஆயினும் அவ்வேலை செய்வதற்கான பாரத்தைத் தேவன் அவனுக்குக் கொடுத்த போது, அவர் அவனுடைய தேவைகளையும் சந்தித்தார். பேழையைக் கட்டுவதற்குத் தேவையானவற்றை மட்டுமல்லாமல், ஒவ்வொருவருக்கும் தேவையான ஆகாரத்துக்கும் அவசியமானவற்றையெல்லாம் அவர் அவனுக்கு அளித்தார். இந்த விஷயத்தில் விசுவாசத்தினால் ஜீவித்த முதல் மனிதன் நோவாவே ஆவான்.

நம்முடைய ஆவிக்குரிய தேவைகளுக்கு மட்டுமல்லாமல், பொருள் சம்பந்தமான, சரீரப்பிரகாரமான தேவைகள் அனைத்திற்குங்கூட நாம் விசுவாசம் உள்ளவர்களாயிருக்க வேண்டும் என்று தேவன் விரும்பு கிறார். நம்முடைய சொந்த ஆவிக்குரிய தேவைகளுக்காகவும், மற்றவர் களுடைய தேவைகளுக்காகவுங்கூட நம்மில் விசுவாசம் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். "*விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமா யிருப்பது கூடாதகாரியம்*" (எபி. 11 : 6).

நவம்பர் 8

கர்த்தராகிய இயேசுவின் பாதத்தில் ...

'***மரியாள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள்***' (லூக்கா 10 : 39).

கர்த்தராகிய இயேசுவின் பாதத்தில் அமர்ந்திருத்தல் என்பது அவருடைய வார்த்தைகளைக் கேட்பதினின்று வித்தியாசமானதாகும். கர்த்தராகிய இயேசுவின் பாதத்தில் உட்காருதல் என்பது தேவனுடைய சமுகத்தில் உட்காருதலினின்றும் வித்தியாசமானதாகும். நாம் தேவ சமுகத்தில் ஜெபித்துக்கொண்டிருக்கக் கூடும்; ஆனால் கர்த்தராகிய இயேசுவின் பாதத்தில் நாம் அமராதிருக்கலாம்.

கர்த்தராகிய இயேசுவின் பாதத்தில் உட்காருதல் என்றால் என்ன? அது, நம்முடைய ஆவியில் மிகவும் எளிமையான, தாழ்மையான இடத்தை நாம் எடுத்துக்கொண்டு, தேவனுக்கு எல்லாவற்றையும் காட்டிலும் மிக உன்னதமான இடத்தைக் கொடுத்து, எல்லாக் காரியங்களிலேயும் தேவசித்தத்தை மட்டுமே செய்ய நாடுதலாகும். அது தேவசித்தத்துக்கு நம்மை ஒப்புக்கொடுத்தவர்களாக நாம் தேவசமுகத்தில் நேரம் செலவழிப் பதாகும்.

கர்த்தர் நம்மோடு பேசவில்லையென்றால், நாம் அவரது பாதத்தில் அமரவில்லை என்பதே அதன் பொருளாகும். நாம் கர்த்தராகிய இயேசு வின் பாதத்தில் அமரும்போது, அவர் நம்மோடு பேசுவார். "*நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்*" (சங். 46 : 10). இது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் மிகவும் இனிமையான ஓர் அனுபவமாகும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் ஆரம்பத்தில், நாமே கர்த்தராகிய இயேசுவோடு கூட அதிகமாகப் பேசிக்கொண் டிருப்போம். ஆனால் நாம் வளர்ந்துவரும்போது, அவருடைய பாதத்தில்

உட்காரக் கற்றுக்கொள்கிறோம்; கர்த்தராகிய இயேசுவே நம்மோடு அதிகமாகப் பேசுவார்; நாம் குறைவாகப் பேசுவோம் அல்லது ஒன்றுமே பேசமாட்டோம்.

'*மரியாள் நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள்*' - கர்த்தராகிய இயேசு வின் பாதத்தில் அமரக் கற்றுக்கொள்ளுகிறவர்கள், மரியாள் செய்தது போல, தங்களுடைய ஜீவியத்தில் மிகச் சிறந்ததைத் தெரிந்துகொள்ளக் கூடும். அவர்கள் மட்டுமே தங்களுடைய மிகச் சிறந்ததைக் கர்த்தராகிய இயேசுவுக்குக் கொடுக்க முடியும். உங்களுடைய ஜீவியத்திலுள்ள மிகச் சிறந்ததை நீங்கள் செலவழிக்கக்கூடிய மிகச் சிறந்த வழி எது? அது கர்த்தராகிய இயேசுவின் பாதத்தில் உட்கார்ந்து அவருடைய வார்த்தை களைக் கேட்பதே ஆகும். கர்த்தராகிய இயேசுவின் வாயிலிருந்து புறப்பட்டு வரும் ஒரு வார்த்தை நமக்குச் சம்பூரண திருப்தியளிப்பதற்கும், நம்மை உயிர்ப்பிப்பதற்கும், ஊக்குவிப்பதற்கும் போதுமானதாயிருக்கிறது.

கர்த்தராகிய இயேசு நம்மோடு பேசும்படியாகக் காத்துக்கொண் டிருக்கிறார். ஆனால் அவருடைய பாதத்தில் அமர்ந்து அவருக்குக் கவனமாய்ச் செவிசாய்க்க நாம் மனமுவந்திருக்கிறோமா?

நவம்பர் 9

'கன்னி மனது' தேவை!

"***இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்***" (மத். 1 : 23).

கிறிஸ்து நம் மூலமாக வெளிப்படுத்தப்படுவதே நம்முடைய ஜீவியத்தின் நோக்கமாகும். மற்றவர்கள் தங்கள் ஜீவியத்தின் மூலமாகக் கிறிஸ்துவை வெளிப்படுத்த அவர்களுக்கு உதவிசெய்வதே நம்முடைய ஊழியத்தின் நோக்கமாகும். நம்முடைய அழைப்பின் முக்கியமான நோக் கங்கள் இவைகளே. நிலத்தில் விதைக்கும்படி சென்ற விதைக்கிறவனைப் போல் நாம் இருக்கிறோம். அந்த விதை, ஒரு அம்சத்தில் கிறிஸ்துவே ஆகும். மற்றவர்களுடைய இருதயங்களில் நாம் கிறிஸ்துவை விதைக் கிறோம். ஒரு நபர் கிறிஸ்துவைப் போலாகும்படி நீங்கள் அவருக்கு உதவி செய்வீர்களாயின், அந்த நபர் வேறொருவருக்கு அப்படிப்பட்ட உதவியைச் செய்வார். அவர் மற்றொருவருக்கு அப்படியே உதவி செய்வார். இவ்விதமாக நம் மூலமாகக் கிறிஸ்து பலுகிப் பெருக வேண்டும்.

உங்களுடைய சுபாவத்தின் மூலமாக நீங்கள் கிறிஸ்துவை வெளிப் படுத்துகிறீர்களா? "*ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்*". ஒரு கன்னி மனதில் மட்டுமே கிறிஸ்து உருவாக முடியும். கிறிஸ்துவின் சுபாவம் நம்மில் உருவாக்கப்பட வேண்டுமென்றால், நமக்கு ஒரு தூய்மை யான மனது அவசியம். நாம் பூரணமான தூய்மையை அடைந்துகொள்ள வேண்டுமென்றால், நமக்குப் பெரிதானதோர் ஏக்கமும் தாகமும் அவசியம்.

சாராள் மிகவும் வயது முதிர்ந்தவளாயிருந்தாள். தனக்கு ஒரு பிள்ளை பிறப்பதென்பது அசாத்தியமானது என்று அவள் எண்ணினாள். சில வேளைகளில் நாம் சாராளைப் போல் இருக்கக் கூடும். நம் மூலமாகக் கிறிஸ்து வெளிப்படுவதற்குப் பல தடைகள் இருக்கக் கூடும். நாம், 'என் ஜீவியத்தில் நான் அநேக தவறுகள் இழைத்திருக்கிறேன்; நான் இன்னும் தவறுகள் செய்துகொண்டிருக்கிறேன்; கிறிஸ்துவின் சுபாவத்தைப் போல என் சுபாவம் மாற்றப்பட முடியும் என்று நான் எண்ணுகிறதில்லை' என்று கூறிக்கொண்டிருக்கக் கூடும். இல்லை, நாம் நம்முடைய நம்பிக்கை யையும் விசுவாசத்தையும் விட்டுவிடக் கூடாது. கிறிஸ்துவின் சுபாவம் உங்களில் உருவாக்கப்படுதல் என்பது ஒருபோதும் அசாத்தியமானதே அல்ல. நீங்கள் உங்கள் எண்ணங்களிலுங்கூட ஆழமான தூய்மை வேண்டுமென ஏங்குவீர்களாயின், பரிசுத்த ஆவியானவர் உங்கள் மேல் வந்து, கிறிஸ்துவை உருவாக்கும் வேலையை உங்களில் செய்வார்.

நவம்பர் 10

தேவன் ஜெபத்துக்குப் பதிலளிக்கிறாரா?

"***இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்***" (யோவான் 16 : 24).

தேவன் நம்முடைய எல்லா ஜெபங்களுக்கும் ஏன் பதிலளிக்கிற தில்லை என்பதை அநேக தேவபிள்ளைகள் விளங்கிக்கொள்ளுகிறதில்லை. ஓர் அர்த்தத்தில், தேவன் நம்முடைய எல்லா ஜெபங்களுக்கும் பதிலளிக் கிறார் - சில ஜெபங்களுக்கு அவருடைய பதில், 'ஆம்' என்பதாகவும், சிலவற்றிற்கு, 'இல்லை' என்பதாகவும், வேறு சிலவற்றிற்கு, 'காத்திரு' என்பதாகவும் இருக்கிறது.

நம்முடைய முடிவு துக்ககரமானதாயிராமல், சந்தோஷமானதா யிருக்க வேண்டுமென்பதே தேவன் நம் ஜெபங்களுக்கு அளிக்கும்

பதிலின் முடிவான நோக்கமாயிருக்கிறது: "*இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள்,* ***அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்***" (யோவான் 16 : 24). ஆம், நம்முடைய சந்தோஷம் நிறைவாயிருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரேயன்றி, நம் துக்கம் நிறைவாயிருக்கும்படி அவர் விரும்புகிறதில்லை. நாம் கேட்கிற சில காரியங்கள் நமக்குக் கொடுக்கப் பட்டால், நம்முடைய ஜீவியத்தின் முடிவில் நாம் துக்கமடைவோம் என்பதைத் தேவன் அறிந்திருக்கிறார்.

தேவபக்தியுள்ள ஒரு தம்பதியினருக்கு மூன்று பெண்பிள்ளைகள் இருந்தனர். தகப்பன் தனக்கு ஓர் ஆண்பிள்ளை கண்டிப்பாக வேண்டுமென்று மிக அதிகமாக ஆசித்தார். அவர் உபவாசித்து ஜெபித்து, கர்த்தரிடம் அழுதார். அவருக்கு ஒரு மகனைக் கொடுப்பது தம்முடைய சித்தம் அல்லவென்றும், அவருடைய பெண்பிள்ளைகள் ஓர் ஆண் பிள்ளையைக் காட்டிலும் மேலானவர்களாக இருப்பார்களென்றும், அவர் கள் அவரைக் கடைசி வரை பராமரித்துக்கொள்ளுவார்கள் என்றும் கர்த்தர் மிகத் தெளிவாக அவருக்கு வெளிப்படுத்தினார். ஆனால் அவர் தொடர்ந்து உபவாசித்து, ஒரு மகனுக்காகக் கர்த்தரிடம் கெஞ்சிக்கொண் டிருந்தார். முடிவாக, கர்த்தர் அவருக்கு ஒரு மகனைத் தந்தார். அவன் ஒரு கெட்டகுமாரனாக - புகைபிடிக்கிறவனாக, மது அருந்துகிறவனாக, முறைகேடான ஜீவியம் செய்கிறவனாக மாறிவிட்டான். அவன் நிமித்த மாகத் தகப்பன் மனமுடைந்துபோனார். ஒரு மகன் வேண்டும் என்று தேவனிடம் வற்புறுத்திக் கேட்டதற்காக அவர் மிகவும் மனம்வருந்தினார். கர்த்தரால் வாக்குப்பண்ணப்பட்டபடியே, அவருடைய பெண்பிள்ளைகள் கடைசி வரை அவரைப் பராமரித்துக்கொண்டனர். ஆனால் தகப்பனோ தன்னுடைய கெட்ட குமாரன் நிமித்தம் தன் மரணம் வரை, துக்கமுள்ள ஒரு மனுஷனாகவே இருந்தார். தகப்பன் மரித்தபோது அவருடைய அடக்க ஆராதனைக்குங்கூட மகன் வரவில்லை!

அன்பான தேவபிள்ளையே, நீ உத்தம இருதயத்தோடு ஜெபித்த சில ஜெபங்களுக்கு நேர்மறையான பதில் அளிக்கப்படவில்லை என்பது மெய்யே. ஆனால் அவைகளுக்குத் தேவன் ஏன் அவ்விதம் பதிலளிக்கவில்லை என்பதை முடிவில் நீ அறிந்துகொள்ளுவாய். உன்னுடைய வாழ்க்கை சந்தோஷத்திலேயேயன்றி துக்கத்தில் முடிவுறக் கூடாது என்று தேவன் விரும்புகிறார்; நீ பெரிதான நித்திய மகிழ்ச்சி உள்ளவனாய் இருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். ஆகவே உன்னுடைய பதிலளிக்கப்படாத ஜெபங்கள் அனைத்திற்காகவும் நீ தேவனை ஸ்தோத்திரிப்பாயாக.

நவம்பர் 11

கிருபையின் மேல் கிருபை

"***அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபைபெற்றோம்***" (யோவான் 1 : 16).

புதிய ஏற்பாட்டில், இரட்டிப்பான கிருபை - "கிருபையின்மேல் கிருபை" (யோவான் 1 : 16) என்ற ஓர் அனுபவம் இருக்கிறது. நமக்கு விரோதமாகத் தவறிழைத்த நபரை மன்னிக்க நமக்குக் கிருபை அவசியம்; மேலும் அவரை நேசிக்க மற்றொரு கிருபை நமக்குத் தேவை. சிலருக்கு ஒரே ஒரு கிருபை மட்டுமே இருக்கிறது - 'நான் அவனை மன்னிக்கிறேன், ஆனால் என்னால் அவனை நேசிக்க முடியாது' என்று அவர்கள் கூறுகின்றனர். வேறு சிலரால் மன்னிக்கவுங்கூட முடிவதில்லை.

மன்னிப்பதற்கும் அன்புகூருவதற்கும் தேவையான இரட்டிப்பான கிருபை தாழ்மையிலிருந்து வருகிறது. ஏனெனில் தேவன் தாழ்மையுள்ளவர் களுக்குக் கிருபை அளிக்கிறார். தேவனுடைய முக்கியமான சுபாவங்களில் ஒன்று, தாழ்மையாகும். எனவேதான் அவரைக் குறித்து, "*இஸ்ரவேலின் தேவனும் இரட்சகருமாகிய நீர் மெய்யாகவே உம்மை மறைத்துக்கொண்டி ருக்கிற தேவனாயிருக்கிறீர்*" என நாம் வாசிக்கிறோம் (ஏசாயா 45 : 15). தேவன் தாழ்மையுள்ளவராக இருப்பதினால், மிக மோசமான பாவியையும் மன்னித்து நேசிக்க அவரால் கூடும். நாம் பெருமையுள்ளவர்களாயிருப்பதி னிமித்தமே மற்றவர்களை மன்னிக்கவும் நேசிக்கவும் நம்மால் முடிவதில்லை.

ஒருமுறை ஒரு போர்ச்சேவகன் இரட்சிக்கப்பட்டான்; அவனுடைய ஜீவியம் முற்றிலுமாக மாறிற்று. ஒரு நாள் அவன் தன் வேலையை முடித்து, களைப்புற்றவனாகத் தன்னுடைய படுக்கைக்குச் சென்று, ஜெபிக்கும்படி தலைவணங்கினான். நாஸ்திகனாயிருந்த மற்றொரு போர்ச்சேவகன் இதைக் கண்ணுற்று, அவன் மீது கடுங்கோபங்கொண்டு, தன் காலில் அணிந் திருந்த காலணியுடன் அவனைத் தலையில் எட்டி உதைத்தான். ஆனால் அந்தப் போர்ச்சேவகனோ தொடர்ந்து ஜெபித்துக்கொண்டிருந்தான். மறுநாள் காலையில் தன்னுடைய உடன்போர்ச்சேவகனை எட்டி உதைத்த போர்ச்சேவகன் இரட்சிக்கப்பட்டான். எப்படி? அவன் காலையில் எழுந்தபோது, தான் யாரை எட்டி உதைத்தானோ அந்தக் கிறிஸ்தவப் போர்ச்சேவகன் தன்னுடைய காலணிகளை மெருகேற்றி (polish) வைத்திருப்பதைக் கண்டான். அது அந்த நாஸ்திகனை அசைத்துவிட்டது. அது அவன் தன்னுடைய **தீ**ய வழிகளை விட்டுவிட வேண்டுமென்ற வாஞ்சையை அவனில் உண்டாக்கிற்று.

தேவபிள்ளையே, உனக்கு எவ்வளவு கிருபை இருக்கிறது? உனக்குக் "கிருபையின்மேல் கிருபை" இருக்கிறதா அல்லது ஆத்திரம், கோபம், மற்றும் கசப்பு ஆகிய உணர்வுகளோடு நீ போராடிக் கொண்டிருக்கிறாயா? உனக்கு விரோதமாகத் தவறிழைக்கப்பட்டு, நீ புண்படுத்தப்படும்போது மன்னிப்பும் அன்பும் தானாகவே உன்னிலிருந்து பாய்ந்துவர வேண்டும் என்று நீ விரும்புகிறாயா? நீ உன்னைத் தாழ்த்து; அப்பொழுது அந்த இரட்டிப்பான கிருபை உனக்குக் கிடைக்கும்.

நவம்பர் 12

கிறிஸ்துவில் நம் ஸ்தானம்

"***ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான்***" (ஆதி. 2 : 23).

தன்னுடைய விலா எலும்புகளில் ஒன்று எடுக்கப்பட்டதை ஆதாம் அறியாதவனாக, அல்லது அதைத் தன் சரீரத்தில் உணராதவனாக இருந்தபோதிலும், அவனால் அதைத் தன்னுடைய ஆவியில் பகுத்தறிந்து கொள்ள முடிந்தது. ஸ்திரீயை ஆதாமுக்கு அறிமுகப்படுத்தி வைத்து, அவனுடைய மனைவியின்பால் அவனுடைய உத்தரவாதங்கள் யாவை என்பது குறித்து ஒருவரும் அவனுக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கவில்லை. நாம் தேவனோடு கூட நடக்கும்போது, சபையில் நம்முடைய ஸ்தானம் இன்னது என்பதையும், நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நம்முடைய கடமைகள் இன்னின்னவை என்பதையுங்கூட நாம் விளங்கிக்கொள்ளக்கூடியவர்களாயிருப்போம். "*நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை*" (I யோவான் 2 : 27).

"*என் எலும்பில் எலும்பும்*" - மூலபாஷையில் 'எலும்பு' என்பதற்கு, 'மூலக்கூறு' (substance) என்றுங்கூட ஓர் அர்த்தமுண்டு. ஆதாம் கிறிஸ்துவுக்கு ஒரு நிழலாட்டமாயிருக்கிறான். கிறிஸ்துவின் மணவாட்டியானவள் கிறிஸ்து வின் அதே மூலக்கூறு (ஜீவியம் அல்லது சுபாவம்) உள்ளவளாயிருக் கிறாள். கிறிஸ்துவின் அதே ஜீவியத்தையும் சுபாவத்தையும் கொண்ட ஒரு கூட்டம் பரிசுத்தவான்களைத் தேவன் ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கிறார்.

'*இவள் மனுஷனிலிருந்து எடுக்கப்பட்டாள்*' - ஒரு மணவாட்டியைப் பெற்றுக்கொள்ள ஆதாம் எவ்வளவு பெரிய தியாகம் செய்ய வேண்டியதாய்

இருந்தது - அவனுடைய முக்கியமான எலும்புகளில் ஒன்று வெளியே எடுக்கப்பட்டது! ஒரு விலா எலும்பை வெளியே எடுக்க விலா உருவக் குத்தப்படவேண்டும். நம்முடைய மணவாளனாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்தபோது தம்முடைய விலாவிலே குத்தப்பட்டார். மரண வேதனையோடு கூடிய அவருடைய தியாகமே கிறிஸ்துவின் சபையை உருவாக்கிற்று. நமக்காக அவர் எவ்வளவு அதிகமான விலைக்கிரயத்தைச் செலுத்தியிருக்கிறார்!

கிறிஸ்துவிலிருந்து மணவாட்டி 'எடுக்கப்படுவது' மாத்திரமல்ல, மணவாட்டிக்கு இருக்கிற அனைத்தும் - எல்லா ஆசீர்வாதங்களும் - அவருக்குள்ளேயே இருக்கின்றன. ***கிறிஸ்துவுக்குள்*** நாம் உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவைக்கப்பட்டிருக்கிறோம்; ***கிறிஸ்துவுக்குள்*** உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம் (எபே. 2 : 7 ; 1 : 3). கிறிஸ்து இல்லாமல் நாம் ஒன்றுமில்லை, நமக்கும் ஒன்றுமில்லை.

நவம்பர் 13

கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதே!

"***நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்***" (எபே. 4 : 26).

"*நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது*" (எபே. 4 : 26) என்னும் வசனத்தில் சிலர் தாங்கள் கோபத்தைப் பேணி வளர்க்கும் படியான ஒரு சாக்குப்போக்கினைக் கண்டுபிடிக்கின்றனர். 'கோபங்கொண்டு பாவஞ்செய்யாதிருக்க விரும்புகிறவன், பாவத்தின் மீதேயன்றி வேறொன்றின் மேலும் கோபங்கொள்ளக் கூடாது' என்று இதை ஒரு தேவமனிதன் சரியாக வியாக்கியானப்படுத்துகிறார்.

சில கிறிஸ்தவர்கள் தங்கள் கோபத்தை, 'நீதியான வைராக்கியம்' என்று அழைத்துக்கொண்டு, தங்களைத் தாங்களே நீதிகரித்துக்கொள் கின்றனர். வேதவசனத்தின்படி, 'நீதியான வைராக்கியம்' என்பது தேவனுக்காக ஒரு 'கடும் வைராக்கியம்' கொள்ளுதலைக் குறிக்கிறது. அது ஒருவர் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும்போது வெளிப்படுத்தப் படுவதாகும். உதாரணமாக, அப். பவுல், "*பரிசுத்தஆவியினால் நிறைந்த வனாய் அவனை (ஒரு மாயவித்தைக்காரனை) உற்றுப்பார்த்து: எல்லாக் கபடமும் எல்லாப் பொல்லாங்கும் நிறைந்தவனே, பிசாசின் மகனே, நீதிக்கெல்லாம் பகைஞனே, கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓயமாட்டாயோ?*" (அப். 13 : 9, 10) என்று கேட்டார்.

"*சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக் கடவது*" - ஒருவன் சூரியன் அஸ்தமிக்கும் வரை கோபத்துடன், ஆத்திரத் துடன் இருப்பதற்கு வேதாகமம் தனக்கு அளிக்கும் அனுமதியாக இதை எடுத்துக்கொள்ளக் கூடாது. கர்த்தர் சூரியன் அஸ்தமிக்குமுன் வரக் கூடும்; அப்பொழுது அவன் கைவிடப்பட்டுப்போகக் கூடும். தன்னுடைய நிதானத்தை இழந்து கோபிப்பதன் மூலம், ஒரு தேவபிள்ளை தன்னுடைய ஜீவியத்தில் மெய்யான ஒளியாகிய நீதியின் சூரியன் அஸ்தமிப்பதற்கும், அதன் மூலம் ஆவிக்குரிய அந்தகாரம் தனக்குள் கொண்டுவரப்படு வதற்கும் இடமளிக்கிறான். ஆகவே, "*கோபத்தை நெகிழ்ந்து, உக்கிரத்தை விட்டுவிடு*" (சங். 37 : 8).

சாந்தகுணம், கோபத்துக்கு எதிரானது ஆகும். "*வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப் பாறுதல் கிடைக்கும்*" (மத். 11 : 28, 29) என்று கர்த்தராகிய இயேசு கூறுகிறார். கர்த்தருடைய சாந்தகுணத்திலே இளைப்பாறுங்கள்; கசப்பு, ஆத்திரம், கோபம் ஆகியவற்றினால் கொதிப்படைய வேண்டாம்.

நவம்பர் 14

மரிக்கும்போது ஆசீர்வதித்தல்

"***விசுவாசத்தினாலே யாக்கோபு தன் மரணகாலத்தில் யோசேப்பி னுடைய குமாரர் இருவரையும் ஆசீர்வதித்து, தன் கோலின் முனையிலே சாய்ந்து தொழுதுகொண்டான்***" (எபி. 11 : 21).

'*விசுவாசத்தினாலே யாக்கோபு தன் மரணகாலத்தில் ஆசீர்வதித்தான்*' - இது விசுவாசத்தின் ஒரு பலனாகும். மெய்யான பரிசுத்தவான்கள் தாங்கள் மரிக்கும்போதுங்கூட மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்க வேண்டுமே யொழிய, பாரமாயிருக்கக் கூடாது. யாக்கோபு மரிக்கும்போது ஒரு ஆசீர் வாதமாயிருந்தான். தான் மரிக்கும்போது அவன் யோசேப்பின் குமாரர் இருவரையும் ஆசீர்வதித்தான். விசுவாசமானது நாம் பிறருக்கு ஆசீர் வாதமாயிருக்கும்படி நமக்கு உதவி செய்கிறது.

"*விசுவாசத்தினாலே யாக்கோபு ... தொழுதுகொண்டான்*" - இது விசுவாசத்தின் மற்றொரு பலனாகும். நம்முடைய இறுதி சுவாசம் வரை கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளும்படி விசுவாசம் நமக்கு உதவிசெய்கிறது. யாக்கோபு எவ்வாறு தொழுதுகொண்டான்? அவன் தன் கோலின் முனையிலே சாய்ந்து தொழுதுகொண்டான். 'கோலின் முனையிலே சாய்ந்துகொள்ளுதல்', தேவனுடைய மிக உன்னதமான வாக்குத்தத்தங்களின் மேல் நம்பிக்கை வைத்தலைக் காட்டுகிறது. கர்த்தராகிய இயேசு செய்தது போல, தன் கடைசி க்ஷணப்பொழுது வரை தேவனைத் தொழுதுகொள்ள யாக்கோபுக்குச் சிலாக்கியமும் சுயாதீனமும் இருந்தது. (கர்த்தராகிய இயேசு தம் மரண நேரத்தில் தம்முடைய ஆவியைத் தேவனிடத்தில் ஒப்புவித்தார்.) யாக்கோபு தன்னுடைய மரண நேரத்தில் அந்நிய தெய்வங்களைத் தொழுதுகொள்ளுகிறவர்களாகிய புறஜாதியாரின் தேசத்தில் இருந்தபோதிலும், அவன் தன்னுடைய மரணபரியந்தம் விசுவாசத்தைக் காத்துக்கொண்டான். தேவனை மெய்யாக ஆராதிக்கிறவர்கள் தங்களுடைய கடைசி நிமிடம் வரை உண்மையாகவே மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருப்பார்கள்.

'*யாக்கோபு யோசேப்பினுடைய பிள்ளைகள் இருவரையும் ஆசீர்வதித்தான்*'. அவன் தன்னுடைய இரு கரங்களாலும் ஆசீர்வதித்தான். கர்த்தராகிய இயேசுவும் இதையே செய்தார். லூக்கா 24 : 50 காண்க. மற்றவர்களை ஆவிக்குரிய ஆசீர்வாதங்களாலும் பூமிக்குரிய ஆசீர்வாதங்களாலும் ஆசீர்வதிப்பதற்கு இது நிழலாட்டமாயிருக்கிறது.

கர்த்தர் வரத் தாமதித்து, மரணத்தின் மூலமாக நம்முடைய பரம வீட்டுக்கு நம்மை எடுத்துக்கொள்வது அவருக்குப் பிரியமாயிருக்கு மெனில் - நம்முடைய கடைசி நிமிடம் வரை அவரை ஆராதிக்கக் கர்த்தர் தாமே நமக்குக் கிருபை அருளுவாராக.

நவம்பர் 15

தேவனுடைய மனதை அறிந்துகொள்வது எப்படி?

"தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை" (I கொரி. 2 : 9).

தேவன் நமக்காக எவ்வளவு மகிமையானதும், கிருபை நிறைந்ததுமான திட்டத்தை வைத்திருக்கிறார்! அவர் நமக்காக எதைத்

திட்டம்பண்ணி வைத்திருக்கிறார் என்பதை நம்மால் அறிந்துகொள்ளக் கூடுமா என்பதே இப்பொழுது மிக முக்கியமான கேள்வியாகும். ஆம், அது நம்மால் கூடும். ஏனெனில், '*நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தியிருக்கிறார்*' (I கொரி. 2 : 10 -Eng.) என்று அடுத்த வசனம் கூறுகிறது. தேவபிள்ளைகள் சிலர் தேவனுடைய திட்டத்தை அறிந்துகொள்ளத் தவறி, பிசாசினுடைய திட்டத்துக்கு அல்லது தங்களுடைய சொந்தத் திட்டங்களுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்து, தங்களையே அழித்துக்கொண்டிருக்கிறார்கள்.

தேவனுடைய சித்தத்தை அறிந்துகொண்டு, அவருடைய திட்டத்திலேயே நடக்க நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் பிறந்தபொழுது, நம்முடைய மனது களங்கமற்றதாயிருந்தது. இருப்பினும், தீய எண்ணங்கள் நம்முடைய மனதைக் கெடுத்துத் தீட்டுப்படுத்த நாம் அவற்றிற்கு அனுமதியளித்தோம். ஒவ்வொரு தீய எண்ணமும் நம்முடைய தூய மனதைக் கறைப்படுத்தும் ஒரு கரும்புள்ளியைப் போன்றது. நாம் நம்முடைய மனதை அவ்விதமாகத் தொடர்ந்து தீட்டுப்படுத்திக்கொண்டேயிருக்கும்போது, 'கரும்புள்ளிகள்' அதிகரித்து, மனதை முழுமையாகக் கெடுத்துவிடுகின்றன. தேவனுடைய திட்டங்கள் மகிமையானவையாக இருந்தாலும், நம்முடைய மனது களங்கமற்றதாகவும், கறைப்படாததாகவும் இருந்தால் மட்டுமே நம்மால் அவைகளை அறிந்துகொள்ளக் கூடும்.

அன்பான தேவபிள்ளையே, உன்னுடைய ஜீவியத்தில் தேவனுடைய திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று நீ விரும்புவது மெய்யே. ஆனால் நீ தேவனுடைய திட்டத்தை அறிந்துகொள்ள உனக்கு ஒரே ஒரு வழி மட்டுமே உண்டு - ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினாலும் பரிசுத்த ஆவியின் வல்லமையினாலும் ஒவ்வொரு தீய எண்ணத்தையும் நீ மேற்கொள்ளுவாயாக. தேவன் உனக்காக வகுத்திருக்கும் திட்டத்தை அவர் உன்னுடைய மனதில் எழுதும்படியாகவும், அவருடைய அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான கிருபையை நீ கண்டடையும் படியாகவும், உன் மனது சுத்தமாகவும் தூய்மையாகவும் இருப்பதாக. அப்பொழுது உன்னுடைய கிறிஸ்தவ ஜீவியமானது, 'சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளதாக' இருக்கும்.

நவம்பர் 16

தேவனுடைய அன்பும் பரிவும்

"அவர் ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து, புசிக்கவேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின

விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்" (ஆதி. 3 : 17).

மனிதன் இந்தப் பூமியின் மேல் நம்பிக்கை வைக்காமல் தேவனில் நம்பிக்கை வைக்கும்படியாக, அவன் தன்னுடைய பற்றை மண் மீது அல்லது பூமியின் மீது வைக்காதிருக்கும்படியாக - இங்கே தேவன் தம் முடைய இரக்கத்தினால் எவ்விதம் மனுஷனைச் சபிக்காமல் பூமியையே சபிக்கிறார் என்பதை நாம் காண்கிறோம். மேலும் தேவன் மனிதனைத் தாழ்மையுள்ளவனாக்கும்படியாக - அவனை வாதிக்கப்படும் இடத்திற்கு அல்ல, கடுமையாக உழைக்கக்கூடிய இடத்துக்கே அனுப்பினார்; அவனைப் பாதாளத்துக்கு அனுப்பாமல், ஏதேன் தோட்டத்திற்குப் புறம்பேயிருந்த பூமிக்கே அனுப்பினார்.

ஆதியாகமம் 3 : 21 - இல் தேவனிலுள்ள தாயைப் போன்ற சுபாவத்தை நாம் மீண்டும் காண்கிறோம். மனிதன் பாவத்தில் விழுந்து தன்னுடைய வார்த்தைகளிலும் கிரியைகளிலும் தேவனுக்கு விரோதமாகக் கலகம்பண்ண ஆரம்பித்து, அவருக்குத் தன்னை ஒளித்துக்கொள்ள முயற்சிக்கையில், தேவன் அவனுக்காக உடைகளை உண்டாக்குகிறார். தனக்கு உடை வேண்டுமென்று மனிதன் கேட்கவில்லை; ஆனால் தேவன் தாமே அதன் அவசியத்தை உணர்ந்தார். அவ்வாறே, இரட்சிப்பின் அவசியத்தைப் பாவிகளாகிய நாம் உணரவில்லை; ஆனால் கர்த்தர்தாமே அதை உணர்ந்து, நம்மை இரட்சிப்பினால் உடுத்துவிக்கும்படியாகப் பரலோகத்திலிருந்து இறங்கி வந்தார். தேவன் அவர்களுக்கு வெறுமனே ஆடைகளைக் கொடுத்துவிட்டுப் போய்விடவில்லை; ஒரு தாய் தன் பிள்ளையை உடுத்துவிப்பது போல, அவர் 'அவர்களை உடுத்துவித்தார்'. சர்வவல்லமையுள்ள தேவன் தாமே உடைகளை உண்டாக்கினாரேயன்றி, எந்தவொரு தூதனும் அவற்றை உண்டாக்கவில்லை. விழுந்துபோன மனிதன்பேரில் தேவன் கொண்டிருந்த அன்பு எவ்வளவு பெரியது! அவர் எவ்வளவாக அவனுக்காகவும் அவனுடைய நிர்ப்பந்தமான நிலைக் காகவும் பரிதபித்தார்!

முடிவாக, மனிதன் ஜீவவிருட்சத்தின் கனியைப் புசித்து, தன்னுடைய விழுந்துபோன நிலையிலேயே என்றைக்கும் ஜீவிக்காதபடி மீண்டும் தேவன் தமது இரக்கத்தில் அவனைத் தோட்டத்தை விட்டு வெளியே அனுப்பிவிட்டார் (வச. 22, 23). தேவன் சுபாவத்தில் பூரணரா யிருக்கிறபடியால் **தீ**மையைக் குறித்த அவரது அறிவு **தீ**ங்கு செய்யும்படி அவரைச் சோதிப்பதில்லை. ஆனால் நற்சுபாவம் அற்றவனாயிருக்கும் ஒரு மனிதனுக்கிருக்கும் **தீ**மையைக் குறித்த அறிவு அபாயகரமானது. ஆகவே அவனுடைய ஆயுட்காலம் குறைக்கப்படாதிருந்திருக்குமாயின்,

பூமியில் அவனுடைய பொல்லாப்பு இப்போதுள்ளதைப் பார்க்கிலும் மிகவும் பெரிதாயிருந்திருக்கும். மேலும், இப்போது அவனுடைய ஆயுட் காலம் குறைக்கப்பட்டிருப்பதால், அவனுடைய சொந்தப் பாவத்தினால் அவன் இப்பூமியில் அனுபவிக்கும் துக்கங்களுக்கும் துன்பங்களுக்கும் ஒரு முடிவு இருக்கும்.

கர்த்தர் மனிதனை எவ்வளவாக நேசிக்கிறார்! '*அவர் தமது அன்பி னிமித்தமும், தமது பரிதாபத்தினிமித்தமும் அவர்களை மீட்டுக்கொண்டார்*' (ஏசாயா 63 : 9). இப்படியிருக்கிறபடியால் அவருடைய மாபெரும் அன்புக்குப் பாத்திரராக நாம் நடந்துகொள்ளுவோமா? எல்லாவற்றிலும் நாம் அவரைப் பிரியப்படுத்த நாடுவோமா?

நவம்பர் 17

கிருபை பொழியும் நாவு

"***எல்லா மனுபுத்திரரிலும் நீர் மகா சவுந்தரியமுள்ளவர்; (ஏனெனில்) உம்முடைய உதடுகளில் அருள் (கிருபை*** -Eng.) ***பொழிகிறது; ஆகை யால் தேவன் உம்மை என்றென்றைக்கும் ஆசீர்வதிக்கிறார்***" (சங். 45 : 2).

ஒரு மனிதன் பூமியில் ஜீவிக்கும்போது அவனுடைய வாயில் எவ்வளவதிகமான கிருபை இருக்கிறதோ அவ்வளவதிகமாக அவனுடைய உயிர்த்தெழுந்த சரீரம் அழகுள்ளதாயிருக்கும் என்னும் ஆசீர்வதிக்கப் பட்ட சத்தியத்தை அநேகர் உணர்ந்துகொள்வதில்லை. உங்களுக்கு மோச மானவைகளைப் பேசும் ஒரு வாய் இருக்குமென்றால், உயிர்த்தெழு தலுக்குப் பின் உங்களுக்கு ஒரு அருவருப்பான சரீரம் இருக்கும். அந்தச் சரீரம் நித்தியமானதாயிருக்கப்போகிறது என்பதை நினைவிற்கொள்ளுங் கள்! 'ஒரு மனிதனைத் தேவன் என்றென்றைக்குமாய் ஆசீர்வதித்தல்' அவனுடைய உதடுகளில் பொழியும் அருளையும் (கிருபையையும்) சார்ந்ததாயிருக்கிறது.

மேற்காணும் வசனத்தைத் தொடர்ந்து வரும் வசனம் இன்னும் அதிக உள்ளார்ந்த அர்த்தமுள்ளதாகவும், இதைத் தெளிவாக விளக்குவதாகவும் உள்ளது: '***மகா பராக்கிரமசாலியே,*** *உமது மகிமையும் உமது மகத்துவமு மாகிய உம்முடைய பட்டயத்தை நீர் உம்முடைய அரையிலே கட்டிக் கொள்ளும்*' (சங். 45 : 3 -Eng.). எந்த ஒரு பரிசுத்தவானுடைய உதடுகளில் அருள் (கிருபை) பொழிகிறதோ, அப்பரிசுத்தவானின் நாவு இருபுறமும்

கருக்குள்ள ஒரு பட்டயத்தைப் (தேவனுடைய வசனம்) போல் இருக்கும். *அவன் சவுரியவானாக, மகா பராக்கிரமசாலியாக, மகிமையினாலும் மகத்துவத்தினாலும் முடிசூட்டப்பட்டவனாயிருப்பான்.* உங்களுக்கு அசுத்தமான வைகளைப் பேசும் ஒரு வாய் இருக்குமாயின், நீங்கள் நிச்சயமாகவே மிகவும் பெலவீனமானவர்களாக, வெட்கத்தினாலும் துயரத்தினாலும் நிறைந்த வர்களாக இருப்பீர்கள் என்பதையுங்கூட இது நிரூபிக்கிறதல்லவா?

கர்த்தராகிய இயேசுவைக் குறித்து, அவருடைய வாயிலிருந்து கிருபையுள்ள வார்த்தைகள் புறப்பட்டன என்று குறிப்பிடப்பட்டுள்ளது (லூக்கா 4 : 22). "*அவர் வாய் மிகவும் மதுரமாயிருக்கிறது; (ஆகவே) அவர் முற்றிலும் அழகுள்ளவர்*" (உன். 5 : 16). கர்த்தராகிய இயேசுவைத் தாங்கள் கைதுசெய்யாமல் திரும்பி வந்ததற்குச் சேவகர்கள் பரிசேயர்களுக்கு அளித்த காரணம் நம்மை மிக அதிகமாய் ஊக்குவிப்பதாயிருக்கிறது: "***அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை***" (யோவான் 7 : 45, 46). கிறிஸ்துவிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தை களைக் குறித்து அவருடைய சத்துருக்களுக்குங்கூட சாட்சி இருந்தது.

அன்பான வாசகரே, நித்தியத்தில் உம்முடைய நித்திய அழகும் நித்திய ஆசீர்வாதங்களும், இப்பூமியில் ஜீவிக்கும்போது நீர் உம்முடைய உதடுகளில் கொண்டிருந்த கிருபையையும் சார்ந்திருக்கும்.

நவம்பர் 18

நீ ஒரு யோனாவாயிருக்கிறாயா?

'யோனா விண்ணப்பம்பண்ணி: நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன், நீர் என் சத்தத்தைக் கேட்டீர் என்றான்'
(யோனா 2 : 1, 2, 9).

இங்கு யோனா முதல் முறையாக ஜெபிப்பதை நாம் காண்கிறோம். அந்நாட்களில் கடற்பிரயாணம் ஜீவனா, மரணமா என்ற நிச்சயமற்றதாக, உயிருக்கு ஆபத்தான ஒன்றாயிருந்தபோதிலும் தர்ஷீசுக்குக் கப்பற் பிரயாணம் செய்யத் தீர்மானிக்குமுன் அவன் ஜெபிக்கவில்லை. கப்பல் 'பெரிய கொந்தளிப்பினால்' தாக்கப்பட்டபோது புறஜாதியாரான கப்பற் காரர் அனைவரும் அவரவர் தம்தம் தேவர்களை நோக்கி வேண்டுதல் செய்தபோது, மெய்யான தேவனாகிய யேகோவாவை ஆராதிக்கிறவ னாகிய இவன் ஜெபித்தானா? இல்லவே இல்லை; அக்கடுங் கொந்தளிப்பு

அவனுடைய ஆழ்ந்த நித்திரையினின்று அவனை எழுப்பிவிடவுங்கூட இல்லை!

அப்பொழுது குற்றவாளியைப் பிடிக்கும்படியாகக் கப்பற்காரர் சீட்டுப்போட ஆரம்பித்தனர். தான் பிடிபடுவான் என்றும், பயங்கரமான பின்விளைவுகளைத் தான் சந்திக்க நேரிடும் என்றும் யோனா அறிந் திருந்தான். ஆனால் இதுவுங்கூட ஜெபிக்கும்படி அவனுடைய கடினப் பட்ட இருதயத்தை அசைக்கவில்லை. எதிர்பார்க்கப்பட்டபடியே "யோனா வின் பேருக்குச் சீட்டு விழுந்தது"; அவன் பிடிபட்டான். யோனாவின் இருதயம் கற்பாறையை விட கடினமானதாயிருந்தது - விடுதலைக்காக இன்னுங்கூட அவன் தேவனுடைய முகத்தைத் தேடவில்லை.

இவையெல்லாவற்றின் மத்தியிலுங்கூட, தேவன் தம்முடைய இரக்கத்தினால் அவன் தன்னுடைய சுய சித்தத்தின் நிமித்தம் நீண்ட காலத்துக்கு முன் இழந்துபோயிருந்த ஜெபஜீவியத்துக்கு அவனை மீண்டும் கொண்டுவர தீர்மானித்திருந்தார் போல் தெரிகிறது. இப்பொழுது யோனா ஒரு பயங்கரமான மரணத்தைச் சந்திக்கும்படி கொந்தளிக்கும் கடலினுள் எறியப்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது. அந்தோ பரிதாபம்! யோனா ஜெபிக்கக் கூடாது என்று தீர்மானித்திருந்தவன் போல் காணப் பட்டான்! இந்தப் பிடிவாதமுள்ள பரிசுத்தவான் முடிவாகக் கடலினுள் தூக்கி எறியப்பட்டான். இப்பொழுது அவன் எதிர்ப்பார்க்கக்கூடியதெல்லாம் ஒரு தண்ணீர்க் கல்லறையே. இப்போதாகிலும் அவன் ஜெபித்தானா? இல்லை, அவன் இன்னும் ஜெபிக்கவில்லை! எவ்வளவு பிடிவாதம்! அப்படிப்பட்ட நம்பிக்கையற்ற நிலைவரத்தில் மிக மோசமான ஒரு நபருங்கூட ஜெபித்திருந்திருப்பான் அல்லவா?

ஆயினும், நம்முடைய தேவன் யோனாவை ஜெபம்பண்ணச் செய்யும்படி தாம் மேற்கொண்ட பிரயாசங்களில் அவனைப் பற்றி இன்னும் நம்பிக்கையிழந்துபோகவில்லை. யோனாவை விழுங்கும்படி கர்த்தர் ஒரு பெரிய மீனை ஆயத்தப்படுத்தியிருந்தார். பாவம் யோனா! மீனின் வயிற்றில், தான் ஏற்கனவே பாதாளத்தில் இருப்பதாக அவன் நினைத்துவிட்டான் போல் தெரிகிறது. "*நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன்*" என்று அவன் கூறுகிறான். இப்பொழுது தான் அவன் கூக்குரலிட்டு ஜெபிக்கிறான்!

நாம் எவ்வளவாய்ச் சமாதானத்தை அவ்வப்போது இழந்துவிடு கிறோம்! நாம் எவ்வளவாய்த் தேவையில்லாத வேதனைகளைச் சுமக்கி றோம்! இவையெல்லாம் ஒவ்வொரு காரியத்தையும் நாம் ஜெபத்தில் தேவனிடத்தில் கொண்டு செல்லாததினிமித்தமே!

அன்பான வாசகரே, உம்முடைய ஜெப ஜீவியம் எப்படி இருக்கிறது? உம்முடைய ஆதி ஜெபஜீவியத்திற்கு நீர் திரும்பி வரவில்லையெனில், அழுது ஜெபிக்க உமக்குப் போதிக்கும்படி உம்மை நரகம் போன்றதொரு சூழ்நிலைக்குத் தேவன் கொண்டுசெல்ல வேண்டியதாயிருக்கும்! சிந்திப்பீர்! செயல்படுவீர்!

நவம்பர் 19

நாம் ஆயத்தமாயிருக்க முடியும்!

"***கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப் பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந் திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்***" (I கொரி. 15 : 51, 52).

கர்த்தர் பரலோகத்திலிருந்து மத்திய ஆகாயத்திற்கு இறங்கிவருதல், கல்லறைகள் திறக்கப்படுதல், பூரணமாக்கப்பட்டு மரித்த பரிசுத்தவான்கள் கர்த்தரோடு சேர்ந்துகொள்ளும்படி கல்லறைகளிலிருந்து எழும்புதல், பூரண மாக்கப்பட்டு ஜீவனோடிருக்கும் பரிசுத்தவான்கள் தங்கள் அற்பமான சரீரங்கள் மகிமையான சரீரங்களாக மாற்றப்பட்டு கர்த்தரை மத்திய ஆகாயத்தில் சந்தித்தல் - இந்தச் சம்பவங்கள் யாவும் ஒரு நொடிப் பொழுதுக்குள் நடைபெறும்.

அதிசீக்கிரத்தில் நடைபெறப்போவதும் மிகவும் மகிமையானது மான அந்தச் சம்பவத்துக்கு நாம் எப்படி எப்பொழுதும் ஆயத்தமா யிருக்க முடியும்? ஆயத்தமாக்கப்பட்ட நிலைவரத்திலேயே நம்மால் எப்பொழுதும் ஜீவிக்க முடியுமா? ஆம்; நிச்சயமாக முடியும்! இது பற்றி நம்மை ஊக்குவிக்கக் கூடிய ஒரு வேதபகுதியைப் பாருங்கள்: '*கர்த்த ராகிய நான் அதைக் காப்பாற்றி, ஒவ்வொரு கூணப்பொழுதும் அதற்குத் தண்ணீர்ப்பாய்ச்சி, ஒருவரும் அதைச் சேதப்படுத்தாதபடிக்கு அதை இரவும் பகலும் காத்துக்கொள்வேன்*' (ஏசாயா 27 : 3 -Eng.). இது தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு அல்லது தேவனுடைய சபைக்குக் கொடுக்கப் பட்டுள்ள வாக்குத்தத்தமாகும் (வச. 2). கர்த்தர் நம்மை இரவும் பகலும் காப்பாற்றி, நமக்கு ஒவ்வொரு கூணப்பொழுதும் தண்ணீர் பாய்ச்சுவதாக வாக்களித்திருக்கிறார். நமக்கு ஒவ்வொரு கூணப்பொழுதும் தண்ணீர் பாய்ச்சுவது என்பது அவர் தம்முடைய ஆசீர்வாதங்கள், அபிஷேகம், கிருபை ஆகியவற்றை நம் மேல் (அவர் வரும் அந்த கூணப்பொழுது உட்பட) ஒவ்வொரு கூணப்பொழுதும் பொழிந்தருளுவதைக் காட்டுகிறது.

அன்பான தேவபிள்ளையே, நீ கர்த்தருடைய இரகசிய வருகையில் உன்னுடைய திறமையினாலோ அல்லது உன்னுடைய பரிசுத்தத்தினாலோ எடுத்துக்கொள்ளப்படலாம் என்று ஒருபோதும் எண்ணாதே. தேவனுடைய இரக்கங்களினால் மாத்திரமே கர்த்தராகிய இயேசு வரும்போது நாம் அவரைச் சந்திப்போம்.

நவம்பர் 20

நீ எப்படி ஜீவிக்கிறாய் என்பதே முக்கியம்!

"***மெத்தூசலாவுடைய நாளெல்லாம் தொளாயிரத்து அறுபத்தொன்பது வருஷம்; அவன் மரித்தான்***" (ஆதி. 5 : 27).

'மெத்தூசலா' என்பதற்கு 'அவன் மரிக்கிறான்' என்று ஒரு பொருள் உண்டு. வேதாகமத்தில் இடம்பெற்றுள்ள அனைவரிலும் மிக அதிக நீண்ட நாட்கள் வாழ்ந்த ஒருவன் தன்னோடு கூட மரணத்தை எப்பொழுதும் சுமந்துகொண்டிருந்தான் என்பது நம்மைச் சிந்திக்கச் செய்கிறதன்றோ? பூமியில் அவன் அவ்வளவு நீண்ட காலம் வாழ்ந்தபோதிலும், அவன் குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான் என்பதைத் தவிர, வேறு எதையாகிலும் செய்ததாகக் கூறப்படவில்லை என்பது பரிதாபத்திற் குரியது! தேவன் அவனுக்கு ஆரோக்கியத்தையும் மற்ற பல நன்மையான காரியங்களையும் கொடுத்திருந்தபோதிலும், தேவமகிமைக்கென்று அவன் யாதொரு காரியத்தையும் செய்யவில்லை.

நீங்கள் *எவ்வளவு காலம்* ஜீவிக்கிறீர்கள் என்பது ஒரு பொருட்டல்ல, ஆனால் நீங்கள் *எப்படி* ஜீவிக்கிறீர்கள் என்பதே முக்கியமானது. 'உங்கள் நாட்களை எண்ண வேண்டாம், ஆனால் உங்கள் நாட்களை எண்ணத் தகுந்தவையாக்குங்கள்'. ஒவ்வொரு நாளும் உங்களுடைய மிகச் சிறந்த சாதனையின் நாளாக இருக்கட்டும். நித்திய விலைமதிப்புள்ள காரியங்களிலேயே உங்களுடைய ஒவ்வொரு நிமிஷத்தையும் மூலதனமாக வைத்துச் செயல்படுவீர்களாக.

பதினேழு வயது நிரம்பிய ஒரு பெண்பிள்ளை மரித்து கர்த்தரோடு இருக்கும்படியாகச் சென்றாள். அவளுடைய ஜீவியம் சுகந்த வாசனை

உள்ளதாகவும், கனிகொடுக்கக்கூடிய ஒன்றாகவும் இருந்தது; தன்னுடைய வாழ்க்கையின் வாலிபப் பருவத்தில் அவள் எடுத்துக்கொள்ளப்பட்டதைக் குறித்து அனைவரும் துக்கமடைந்தனர். கர்த்தர் ஏன் அவளை அவ்வளவு இளம் வயதிலேயே எடுத்துக்கொண்டார் என்று ஒரு விசுவாசி கர்த்தரிடம் கேட்டார். அப்பொழுது அவர் ஒரு சொப்பனம் கண்டார். அதில் அந்தப் பெண்பிள்ளை பரலோகத்திலிருந்தாள்; அவளை ஒரு தேவதூதன் மற்றொரு தேவதூதனுக்கு அறிமுகப்படுத்திக்கொண்டிருந்தான். 'இவளுக்கு எண்பத்தைந்து வயது' என்று அத்தூதன் சொல்லிக்கொண்டிருந்தான். அப்பொழுது அந்த விசுவாசி நித்திரையினின்று விழித்துக்கொண்டார்; கர்த்தர் அவரிடம், "அவள் சரீரப்பிரகாரமாகப் பதினேழு வயதுள்ளவளாக இருந்தாள்; ஆகிலும், ஆவிக்குரிய பிரகாரமாக அவள் 'பூரண வயதை' அடைந்துவிட்டாள். நான் என்னுடைய வேலையை அவளில் செய்து முடித்துவிட்டேன்; அவள் தன்னுடைய ஜீவியத்தின் வேலையை முடித்து விட்டாள்" என்று கூறினார்.

நவம்பர் 21

பின்மாற்றத்தின் விளைவுகள்

"*நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்*" (எபி. 10 : 39).

நீங்கள் பின்மாற்றமடையும்போது, உங்களுடைய குடும்பமுங்கூட பின்மாற்றமடைந்து, கஷ்டப்பட வேண்டியதாகலாம். ஆபிரகாம் தன் வழியை விட்டு விலகி எகிப்துக்குச் சென்றபோது, சாராள் தொல்லைக் குள்ளானாள். அவள் பார்வோனின் அரண்மனைக்குக் கொண்டுபோகப் பட்டாள். பார்வோன் '*அவன் நிமித்தம் ஆபிரகாமுக்குத் தயைபாராட்டினான்*' (ஆதி. 12 : 15, 16). இப்பொழுது ஆபிரகாம் உலகத்தால் கனம்பண்ணப் படுகிறான். இந்த உலகத்தின் பாராட்டுதலையும் கனத்தையும் பெற்றுக் கொள்வதற்கான வழி, கிறிஸ்துவை மறுதலித்தல் அல்லது உலகத்தோடு சமரசம்பண்ணிக்கொள்ளுதலே என்பது இதிலிருந்து தெள்ளத்தெளிவாகத் தெரிகிறது. சபை நிர்வாகம் உலக அரசாங்கத்தின் உதவியைப் பெற்றுக் கொள்ளும்வகையில் சில சபைகள் சில வேளைகளில் உலகத்தோடு சமரசம்செய்துகொள்கின்றன.

"*ஆபிராமுடைய மனைவியாகிய சாராயின் நிமித்தம் கர்த்தர் பார்வோனையும், அவன் வீட்டாரையும் மகா வாதைகளால் வாதித்தார்*"

(ஆதி. 12 : 17). உலகத்தாரோடு சமரசம் செய்துகொள்ளுதல் நல்லது என்று சிலர் எண்ணிக்கொள்கின்றனர். 'அது உலகத்தாருக்கு நன்மை பயக்கும்; நாம் அவர்களைக் கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்திக்கொள்ளலாம்' என்று அவர்கள் கூறுகின்றனர். அவர்களோடு சமரசம்பண்ணிக்கொள்வதினால் நீங்கள் அவர்களுக்கு யாதொரு நன்மையும் செய்வதில்லை; உண்மை யில், அவர்கள் மீது (எகிப்தின் மீது) மகா வாதையையே வரப்பண்ணு கிறீர்கள்.

தேவனுடைய ஜனங்கள் உண்மையில்லாதவர்களாக இருக்கும் போது, அவர்களை அந்நிலையிலிருந்து வெளியே கொண்டுவரும்படி தேவன் உலகத்தை வாதிக்க வேண்டியதாகிறது அல்லது அதற்குத் தொந் தரவை அனுப்ப வேண்டியதாகிறது. யோனாவைக் குறித்த தேவனுடைய திட்டம் நிறைவேற்றப்படும்படியாக - புயலினிமித்தம் அவன் கப்பலை விட்டு வெளியே தூக்கியெறியப்பட்டது போல, தேவஜனங்கள் வெளியே அனுப்பப்படும்படி - தேவன் தம்முடைய இரக்கத்தினிமித்தமே எகிப்தில் சில பிரச்சினைகளை அனுமதித்தார்.

ஆபிரகாமுடைய பின்மாற்றத்திலிருந்து நாம் பல காரியங்களைக் கற்றுக்கொள்கிறோம். நம்முடைய சோதனைகளில் நாம் எகிப்துக்குப் போவோமென்றால் (அல்லது பின்வாங்கிச் செல்வோமானால்) நாமும் நமக்கருமையானவர்களும் அதிகமான சோதனைகளைச் சந்திக்க நேரிடுவதுடன், மற்றவர்களுங்கூட நம் நிமித்தமாகத் தேவையில்லாத உபத்திரவத்திற்குள்ளாவார்கள்.

முடிவாக, ஆபிரகாம் எகிப்திலிருந்து தப்பித்துக்கொண்டான். தேவனுடைய அளவற்ற இரக்கத்தினால் நாம் நம்முடைய பின்மாற்றத்தை விட்டு ஒருவேளை வெளியே வரக் கூடும்; ஆயினும், நம்முடைய பின்மாற்றத்தின் விளைவுகளோ நித்தியமானவையாக இருக்கக் கூடும். ஆபிரகாம் அடிமைப்பெண்ணாகிய ஆகாரை எகிப்திலிருந்து பெற்றுக் கொண்டான் என்று கூறப்படுகிறது. அவள் மூலமாக அவனுக்குப் பிறந்த இஸ்மவேல் இஸ்ரவேலருக்கு நிரந்தரமான சத்துருவாக மாறினான். மேலும், ஆபிரகாம் தப்பிக்கொண்டபோதிலும், அவனுடைய சகோதரனின் மகனாகிய லோத்து எகிப்திலிருந்து முற்றிலுமாக விடுதலையாக்கப்பட வில்லை. எகிப்தை ருசித்த லோத்து தன்னுடைய இருதயத்தில் 'எகிப்தை' இருத்தி வைத்துக்கொண்டான் (ஆதி. 13 : 10). ஒருவேளை நம்முடைய பின்மாற்ற நிலையினின்று நாம் திரும்பிவரக் கூடியவர்களாயிருக்கலாம்; ஆனால் நம்மால் அல்லது நமது செல்வாக்கினால் பாதிக்கப்பட்டவர்கள் ஒருவேளை திரும்பிவராமலே போய்விடக் கூடும்.

நவம்பர் 22

உன் உன்னத அழைப்பை அசட்டைபண்ணாதே!

"*நாம் அவனைக் (யோசேப்பு) கொன்று, இந்தக் குழிகள் ஒன்றிலே அவனைப் போட்டு, ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்தது என்று சொல்லுவோம் வாருங்கள்; அவனுடைய சொப்பனங்கள் எப்படி முடியும் பார்ப்போம் என்றார்கள்*" (ஆதி. 37 : 20).

யோசேப்புக்கு அவனுடைய மேன்மையான உன்னத அழைப்பைப் பிரதிபலிக்கும் வகையில் சொப்பனங்கள் உண்டாயின என்பதை நாமெல்லோரும் அறிவோம். அவன் தன்னுடைய சகோதரர்கள் மேல் ஆளுகை உடையவனாக இருப்பான் என்றும், அவனுடைய முழுக் குடும்பமும் அவனுக்கு முன்பாக வணங்கிநிற்கும் என்றும் தேவன் அவனுக்குத் தெளிவாகக் காண்பித்தார் (ஆதி. 37 : 7, 9). யோசேப்பு கடந்து சென்ற சோதனைகள் பெரும்பாலும் அவனுடைய உன்னத அழைப்புக் கெதிரான தாக்குதல்களாகவே இருந்தன. அவனுடைய சகோதரர் '*அவனை அவன் சொப்பனங்களின் நிமித்தம் இன்னும் அதிகமாய்ப் பகைத்தார்கள்*' (வச. 8) என்று நாம் வாசிக்கிறோம்.

நம்முடைய உன்னத அழைப்பினிமித்தம் பிசாசானவன் நம்மைப் பகைக்கிறான் என்பதையும், நம்முடைய பூமிக்குரிய அல்லது சரீரப்பிரகார மான ஜீவியத்தை அல்ல, நம்முடைய பரம தரிசனத்தைத் (உன்னத அழைப்பு) தாக்கும்படியாகவே அவன் முனைந்துநிற்கிறான் என்பதையும் நாம் உணருகிறோமா? யோசேப்பு கண்ட சொப்பனங்கள் அவனுடைய வாழ்க்கையில் நிறைவேறாத வண்ணம், ஒரு பரிதபிக்கப்பட்ட மரணத்தைச் சந்திக்கும்படியாக அவன் குழியினுள் தூக்கியெறியப்பட்டான். நம்முடைய ஜீவியத்தைக் குறித்த தேவனுடைய உன்னத அழைப்பை அழிக்கும்படி யான தன்னுடைய முயற்சியில், பிசாசானவன் நம்மை ஒரு குழிக்குள்ளும், சிறைச்சாலை போன்ற சூழ்நிலைகளுக்குள்ளும் தூக்கியெறியக் கூடும்.

தேவன் இஸ்ரவேல் ஜனங்களைப் பாலும் தேனும் ஓடுகிற தேசத் துக்குக் கொண்டுசெல்வதாக வாக்களித்து, அவர்களை எகிப்தை விட்டு வெளியே அழைத்துவந்தார். ஆனால் அவர்கள் வனாந்தரத்தில் ஒரு சோதனையைச் சந்தித்தபோது, தங்களுடைய அழைப்பைச் சந்தேகித்தனர் (யாத். 14 : 11). பரலோகத்துக்கு நிழலாட்டமாயிருக்கும் கானானுக்கென்று அவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். ஆயினும் அவர்கள் தங்கள் அழைப்பைக் குறித்த தரிசனத்தை இழந்துபோனபடியால், வனாந்தரத்தில்

மரித்தனர். இந்தக் காலத்திலுங்கூட (ஒரு வனாந்தரத்தைப் போலிருக்கும்) இவ்வுலகத்தில், தங்கள் பரம தரிசனத்தை இழந்து பரிதாபகரமாக அழிந்துபோகும் சிலர் இருக்கின்றனர்.

நம்முடைய சோதனை நேரங்களில் நாம் நம்முடைய உன்னத அழைப்பை மறவாதிருப்போமாக. ஒவ்வொரு சோதனையிலும் நம் முடைய அழைப்புக்கு என்ன சம்பவிக்கப்போகிறது என்பதைக் காண பிசாசானவன் விழிப்புடன் கவனித்துப்பார்த்துக்கொண்டேயிருக்கிறான் என்பதை நாம் மறவாதிருப்போமாக.

நவம்பர் 23

ஏன், கர்த்தாவே?

"*மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்*" (உபா. 29 : 29).

தேவன் ஏன் நம் வாழ்க்கையில் பாடுகளை அனுமதிக்கிறார் என்று நாம் அநேகந்தரம் கேள்வி கேட்கிறோம். கர்த்தராகிய இயேசு பேதுருவிடம், "*நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய்*" (யோவான் 13 : 7) என்று கூறினார்.

தேவன் நம் ஜீவியத்தில் பாடுகளை அனுமதிப்பதற்கான ஒரு காரணம், நம்மைப் பெரியவர்களாக மாற்றும்படி அல்ல, நம்மைத் தாழ்மை யுள்ளவர்களாக, சிறியவர்களாக மாற்றுவதற்கே ஆகும். இஸ்ரவேலரைச் சிறுமைப்படுத்தும்படி தேவன் அவர்களை வனாந்தரத்தில் நாற்பது வருடங்கள் நடத்திவந்தார் (உபா. 8 : 2). உங்களைக் குறித்து யாராகிலும் தீமையாகப் பேசும்போது நீங்கள் கோபமடைவீர்களாயின், மனதில் புண்பட்டவர்களாக, அந்த நபரை நேசிக்கக்கூடாதவர்களாயிருப்பீர் களாயின், அது உங்களுடைய பெருமையினிமித்தமே ஆகும்! ஒரு கோழி தன்னுடைய செட்டைகளின் கீழ் கோழிக்குஞ்சை மட்டுமே வைக்க முடியுமேயன்றி மற்றொரு கோழியை வைக்க முடியாது. நாம் சிறியவர் களாக மாறாத பட்சத்தில், தேவனால் நம்மைத் தம்முடைய செட்டைகளின் கீழ் வைக்க இயலாது. நாம் பறந்துபோகப்போகிறோமாதலால் நமக்குக் கொம்புகளே இருக்கக் கூடாது. பறக்கிற எந்தவொரு பறவைக்கும் கொம்பு இல்லை. ஆகவே நாம் தேவனோடு மனத்தாழ்மையாக நடப்போமாக.

பாடுகள் நம்முடைய சுபாவம் மாறுதலடையவும் உதவி செய் கின்றன (ரோமர் 5 : 3, 4 காண்க). இந்த வசனத்திலுள்ள 'பொறுமை' என்பது

ஒரு மொழிபெயர்ப்பில் 'சுபாவம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நம் முடைய பாடுகள் நம்மில் ஒரு அழகான சுபாவத்தை உருவாக்குதலாகிய ஒரு நேர்த்தியான கிரியையை நமக்குள் செய்துகொண்டிருக்கின்றன. நம்முடைய பாடுகள் நமக்கு உள்ளான பெலனைத் தருகின்றன. ஆகவே நம்முடைய தேவன் நம்மை வெறுப்பதினாலல்ல, நம்மை நேசிப்பதினா லேயே நமக்குப் பாடுகளை அனுமதிக்கிறார்! நீங்கள் ஒரு இருண்ட குறுகலான குகைவழிப் பாதையினூடாகச் சென்றுகொண்டிருக்கலாம். ஆனால் அந்த இருண்ட குகையின் முடிவில் நீங்கள் ஒரு வெளிச்சத்தைக் காண்பீர்கள்.

உங்களுடைய பாடுகளினிமித்தம் உங்களுடைய கிறிஸ்தவ ஜீவியத்தை நிறுத்திவிட வேண்டாம் - முன்னேறிச் சென்றுகொண்டே யிருங்கள்! பாடுகளைச் சந்தோஷமாகச் சகித்து முன்னேறிச் சென்ற பலரும் முடிவில் உண்மையாகவே ஆசீர்வதிக்கப்பட்டனர் (ஆபிரகாம், தாவீது போன்றோர்). பாடுபட விருப்பமற்றிருப்பவர்களுக்கு ஒரு நல்ல முடிவு இராது (லோத்து, சவுல் போன்றோர்). சவுல் பாடுபட விரும்பவில்லை. ஒருமுறை கூட அவன் தேவனைத் துதிக்கவில்லை. ராஜாவாகிய தாவீது பாடுகளைச் சகித்தான்; தன் பாடுகளிலும் தேவனைத் துதித்தான். ஆகவே அவனுடைய முடிவு மேன்மையானதாயிருந்தது.

நம்முடைய ஜீவியத்தின் முடிவு மகிமையாக இருக்க வேண்டும். நாம் பாடுபடும்போது முறுமுறுத்து, முறையிட்டு, கோபப்பட்டால், அது நமக்கு யாதொரு மகிமையையும் கொண்டுவராது. ***தேவன் பாடுகளை அனுமதித்து, அவ்வேளையில் நம்முடைய மனப்பான்மை எவ்வாறிருக்கிற தென்று கவனித்துக்கொண்டேயிருக்கிறார்.***

நவம்பர் 24

உன்னுடைய மிகச் சிறந்ததை வீணாக்காதே!

"***இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்***" (மாற்கு 14 : 8).

இங்கிலாந்து தேசத்தை அரசாட்சி செய்துவந்த விக்டோரியா மகாராணியார் தேவ பக்தியுள்ள ஒரு பெண்மணியாக இருந்ததால் தன்னுடைய குடிமக்களின் நலனைக் குறித்து மிகுந்த கரிசனையுள்ள வர்களாக இருந்தார்கள். அவர்கள் அவ்வப்போது ஒரு சாதாரண பிரஜையைப் போல் உடை அணிந்து, தெருக்களின் வழியாக நடந்து

செல்லுவது வழக்கம். ஒரு நாள் அவர்கள் அவ்விதம் நடந்து சென்று கொண்டிருக்கையில், மழை பெய்யத் தொடங்கிற்று. அருகாமையில் இருந்த நல்ல வசதி படைத்த ஒருவரது வீட்டின் கதவை அவர்கள் தட்டி, தனக்கு ஒரு குடையை இரவலாகத் தர முடியுமா என்று கேட்டார்கள். கதவைத் திறந்த பெண்மணி, தன்னிடம் இரண்டு குடைகள் இருப்பதாகக் கூறி, அவற்றுள் பழையதை அவர்களுக்குக் கொடுக்க முன்வந்தாள். விக்டோரியா மகாராணியார் அப்பழைய கிழிந்த குடையை வாங்கிக் கொண்டு சென்றார்கள். அரண்மனையைச் சென்றடைந்தவுடன், குடையை அந்தப் பெண்மணிக்குத் திருப்பிக்கொடுக்கும்படி ஒரு தாதியை அனுப்பி, குடை கொடுத்தமைக்காக விக்டோரியா மகாராணியார் அவளுக்கு நன்றி தெரிவிப்பதாகக் கூறச் சொன்னார்கள். தன்னுடைய வீட்டிற்கு வந்திருந்த வர்கள் மகாராணியார் என்பதை அறியவந்தபோது, பேரதிர்ச்சியடைந்த அவள், தான் அவர்களுக்கு நல்ல குடை கொடுக்கத் தவறியதை எண்ணியெண்ணி மனம் வருந்தினாள். தன் தேசத்தின் மகாராணியாருக்கு மிகச் சிறந்ததைச் செய்ய தனக்குக் கிடைத்திருந்த பொன்னான வாய்ப் பினைத் தான் தவறவிட்டதற்காக அவள் ஆழ்ந்த வருத்தமடைந்தாள்.

பெத்தானியாவைச் சேர்ந்த மரியாள் கர்த்தராகிய இயேசுவின் பாதத்தில் மிகச் சிறந்த தைலத்தை வார்த்து, அதை அவருக்கென்று அர்ப்பணித்தபோது, அது வீணான செலவு என்று பலரும் எண்ணினர். குறிப்பாக யூதாஸ்காரியோத்து அவளது அச்செயலினிமித்தம் கோபமுற்று, அந்தப் பணம் தரித்திரருக்குக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டுமென்று கூறினான் (யோவான் 12 : 5). ஆனால் அது பற்றிய கர்த்தராகிய இயேசுவின் கணிப்போ வித்தியாசமாயிருந்தது. அவர் அவளது செயலைப் பாராட்டி, ஏற்றுக்கொண்டார்.

கர்த்தராகிய இயேசுவுக்காக நீங்கள் அன்போடு கூட செய்யும் யாதொன்றும் ஒருபோதும் வீணானது அல்ல; ஆனால் அது நித்தியமான ஒரு முதலீடே ஆகும். பிதாவானவர் மிகச் சிறந்ததை - கர்த்தராகிய இயேசுவை - நமக்குத் தந்தார்; கர்த்தராகிய இயேசு மிகச் சிறந்ததை - தம்முடைய ஜீவனை - நமக்காகத் தந்தார். நாமுங்கூட நம்மிடத்திலுள்ள மிகச் சிறந்ததைக் கர்த்தருக்குக் கொடுக்க வேண்டாமா?

மரியாள் கர்த்தராகிய இயேசுவுக்குச் செய்த காரியம் வீணென்று யூதாஸ்காரியோத்து கருதினான். ஆனால் அவனுடைய ஜீவியத்தைப் பாருங்கள் - அவன் தன்னுடைய சொந்த ஜீவியத்தையே வீணாக்கி விட்டான்; இப்போதுங்கூட நரகபாதாளத்தில் அவன் தன்னுடைய ஜீவியத்தை வீணாக்கிக்கொண்டிருக்கிறான்; நித்தியம் முழுவதும் அவன் அதை வீணாக்கிக்கொண்டிருப்பான்.

அருமையான நண்பனே, உன்னுடைய மிகச் சிறந்ததை - உன்னுடைய நேரம், தாலந்துகள், உனக்கு அருமையானவையாகவும் விலையேறப்பெற்றவையாகவும் நீ கருதுபவை, மற்றும் உனக்கிருக்கும் எல்லாவற்றையும் கர்த்தராகிய இயேசுவுக்குக் கொடுப்பாயாக.

'ஒரே ஒரு வாழ்க்கை மட்டுமே, அது சீக்கிரமாகக் கடந்துபோகும்;
கிறிஸ்துவுக்காகச் செய்யப்படுவது மட்டுமே நிலைக்கும்;
அவருடைய சித்தம் செய்ய ஒரே ஒரு தருணமே உண்டு;
ஆகவே உன் நாட்களையெல்லாம் இயேசுவுக்குக் கொடு;
பிரதிபலன் தரக் கூடிய ஒரே வாழ்க்கை அதுவே!
ஏனெனில் ஒரே ஒரு வாழ்க்கையே அன்றி வேறொன்றுமில்லை!'.

நவம்பர் 25

காத்திரு!

'பேழை அரராத் என்னும் மலைகளின்மேல் தங்கிற்று. ஜலம் வடிந்து கொண்டேவந்தது; மாதத்தின் முதல் தேதியிலே மலைச்சிகரங்கள் காணப்பட்டன' (ஆதி. 8 : 4, 5).

பேழையானது தங்கும்படி ஓரிடத்திற்கு வருமுன், அது எந்தவொரு முடிவோ அல்லது இலக்கோ அற்றது போல ஜலத்தின்மேல் அங்குமிங்கும் அலைவுபட்டுக்கொண்டிருந்தது. கர்த்தர் நோவாவிடம் வெகுவிரைவில் வரவிருந்த வெள்ளப் பெருக்கத்தைக் குறித்துக் கூறினாரேயன்றி, அதனுடைய முடிவைக் குறித்து யாதொன்றும் கூறவில்லை. இது அவனுடைய விசுவாசத்திற்கு ஒரு பரீட்சையாக இருந்திருக்க வேண்டும். ஆகாரத் தட்டுப்பாடு உண்டாகக் கூடுமோ என அவன் பயமடைந்திருக்க வாய்ப்புண்டு; ஆனால் அவன் அதைக் குறித்து பயப்படவே இல்லை என்று நாம் மிகவும் நிச்சயமாக அறிவோம். தேவனோடே சஞ்சரித்துக் கொண்டு, தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே உத்தமனாயிருந்த நோவா, "*நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்*" (II தீமோ. 1 : 12) என்று வெற்றி முழக்கமிட்டிருந்திருக்க வேண்டும்.

தன்னுடைய விசுவாசப் பரீட்சையில் நோவா உண்மையாகப் பேழையில் தங்கியிருந்தது போல, நாம் கிறிஸ்துவில் நிலைத்திருப் போமாக. தன் சுகமாகுதலுக்காகவும் விடுதலைக்காகவும் யோபு காத்திருந்த

போது அவன் உரைத்த விசுவாசமும் நம்பிக்கையுமுள்ள வார்த்தைகளைக் கவனியுங்கள்: '*என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்று நான் அறிந்திருக் கிறேன். அவரை நானே பார்ப்பேன்; அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்!*' (யோபு 19 : 25, 27). கொடிய சோதனைகளால் சூழப்படும் போது, பிரச்சினைகள் முடிவில்லாமல் தொடர்ந்துகொண்டேயிருப்பதாகத் தென்படும்போது, என்றைக்காவது ஒரு நாள் நல்ல நாட்களைக் காண்போம் என்ற நம்பிக்கை முழுவதுமாக அற்றுப்போனதாகவோ அல்லது அது கண்ணுக்குப் புலப்படாமலோ இருக்கும்போது - கர்த்தருக்குள் அமர்ந்து அவருக்குக் காத்திருங்கள். எந்த விதத்திலும் பதட்டமடையாதிருங்கள்.

'கர்த்தருக்குக் காத்திரு; திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு!'

நவம்பர் 26

வெற்றி முழக்கம்

"விசுவாசத்தினாலே எரிகோ பட்டணத்தின் மதில்கள் ஏழுநாள் சுற்றிவரப்பட்டு விழுந்தது" (எபி. 11 : 30).

யோசுவாவின் புஸ்தகத்தை நாம் வாசிக்கும்போது, எரிகோவின் மதில்கள் எவ்வாறு விழுந்தன என்பதைக் குறித்து நாம் தெளிவாக விளங்கிக்கொள்ளக்கூடாமலிருக்கக் கூடும். அம்மதில்கள் விழுந்தது - தங்கள் ஆயுதங்களைப் பிடித்துக்கொண்டு முன் நடந்த மனிதர் நிமித்த மாகவோ, அல்லது எக்காளங்களை ஊதி, பெட்டியைச் சுமந்துசென்ற ஆசாரியர்களின் நிமித்தமாகவோ, அல்லது இஸ்ரவேலர் அலங்கத்தைச் சுற்றி ஏழு நாட்கள் நடந்ததினாலோ, அல்லது அவர்கள் முடிவாக ஆர்ப்பரித்ததினாலோகூட அல்ல; அதற்கான காரணம் மேற்காணும் வசனத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது - '***விசுவாசத்தினாலே*** எரிகோ பட்டணத்தின் மதில்கள் விழுந்தது'. அவர்களுக்குக் கர்த்தருடைய வார்த்தையின் மேல் விசுவாசம் இருந்திராவிடில் (யோசுவா 6 : 2 - 5), அவர்கள் மதில்களைச் சுற்றி வந்திருக்கவோ அல்லது ஆர்ப்பரித் திருக்கவோ மாட்டார்கள். விசுவாசத்தினாலேயே அவர்கள் இவையெல்லா வற்றையும் செய்தார்கள்; அப்போது தேவன் அவர்களுக்கு ஜெயத்தைக் கொடுத்தார். எரிகோவின் மதில்களை ஜெயிக்க கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்திருந்த ஆயுதம் விசுவாசம் என்னும் ஆயுதமே ஆகும்; பூமியிலும் பூமியின் கீழும் அதற்கு எதிரான யாதொரு ஆயுதமும் இல்லை. "*எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்*

களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது" (II கொரி. 10 : 4). இந்நாட்களிலுங்கூட சத்துருவின் அரண்களை நிர்மூலமாக்க நமக்கு அந்தப் பலமுள்ள விசுவாசம் அவசியம்.

கர்த்தர் தேசத்தில் வல்லமையான காரியங்களைச் செய்ய விரும்பும் போது, தேவஜனங்களை அச்சுறுத்தி மிரட்டும்படி பிசாசானவன் சில 'எரிகோவின் மதில்களை' எழுப்பக் கூடும். சத்துருவின் தந்திரங்களினால் நாம் அசைந்துபோகக் கூடாது; விசுவாசத்தினால் நாம் ஜெயத்தொனி முழக்க வேண்டும். கானான் அப்படிப்பட்ட ஜனங்களுக்கே உரியது. அப்பெரிய மதில்களில் ஒரு கீறல் கூட தென்படாதிருந்தும், அவர்கள் எரிகோவின் மதில்களைச் சுற்றி ஆறு நாட்கள் நடந்தார்கள் என்பதை நினைவிற்கொள்ளுங்கள். ஏழாம் நாளில் அவர்கள் ஏழு முறை நடந்தார்கள். இவ்வாறு அவர்கள் ஏழாவது நாளில் மட்டும் மொத்தத்தில் சுமார் முப்பத்தைந்து மைல்கள் நடந்ததினால் மிகவும் அதிகமாகக் களைத்துப் போயிருந்திருக்கக் கூடும். ஒருவேளை ஆர்ப்பரிப்பதற்கு அவர்களில் யாதொரு பெலனுமில்லாமல் இருந்திருக்கக் கூடும். அவர்களுக்கு விசுவாசம் இருந்திராவிடில், சந்தேகம் அவர்களில் பெருகி, அவர்கள், 'இந்த ஏழு நாட்களும் நாம் இத்தனை முறை நடந்தது மதில்களில் ஒரு கீறலைக் கூட உண்டாக்கவில்லையே! இப்பொழுது, நாம் சரீரத்தில் மிகவும் பெலவீனராயிருக்கும்போது ஆர்ப்பரிப்பதினால் அது அம்மதில்களில் எப்படி ஒரு பாதிப்பை ஏற்படுத்த முடியும்?' என்று எண்ணியிருந்திருக்கக் கூடும். அவர்களுடைய விசுவாசம் எல்லாத் தடைகளையும் வென்றது!

அன்பான தேவபிள்ளையே, கர்த்தர் நமக்குத் தேசத்தைத் தந்திருக்கிறார்; நாம் அதை விசுவாசத்தினால் கண்டு வெற்றி முழக்கமிடுவோமாக. விசுவாசிக்கிறவர்களில் கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்! அவர்கள் மூலமாகவும் அவர் பெரிய காரியங்களைச் செய்வார்!

நவம்பர் 27

தந்திரமான பெருமை

"***அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே. ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது***" (யாக். 4 : 6).

யூதாஸ்காரியோத்து பெருமை நிறைந்தவனும், இறுமாப்புள்ளவனுமாயிருந்தான். கர்த்தராகிய இயேசுவின் பாதத்தில் ஊற்றப்பட்ட தைலம் விற்கப்பட்டு, அந்தப் பணம் தரித்திரருக்குக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று அவன் கூறினான். கர்த்தராகிய இயேசுவை மறைமுகமாகக் கடிந்துகொள்ளும் அளவுக்கு அவன் அவ்வளவு பெருமையுள்ளவனாயிருந்தான். கர்த்தராகிய இயேசுவைக் காட்டிலும் தனக்குச் சகலமும் நன்றாகத் தெரியும் என்பது தான் அவனது நினைவு. அவன், ஒரு மனுஷனுக்கு இருக்கக்கூடிய பெருமைகளிலெல்லாம் மிக மோசமான வகை பெருமையாகிய ஆவிக்குரிய பெருமை உள்ளவனாயிருந்திருக்க வேண்டும். மற்றவர்களைக் காட்டிலும் நம்மை மேன்மையானவர்களாக எண்ணுகிற விஷயத்தில் நாமும் அடிக்கடி குற்றமுள்ளவர்களாக இருக்கிறோமல்லவா?

யூதாஸ் மரித்த விதத்தைப் பாருங்கள்! சவுலைப் போல, அவனும் தற்கொலை செய்துகொள்ள முயற்சித்தான்; தன்னுடைய முயற்சியில் அவனும் தோல்வியடைந்தான் என்பது வேதவாக்கியங்களின் மூலம் தெளிவாகத் தெரிகிறது. "*அநீதத்தின் கூலியினால் அவன் ஒரு நிலத்தைச் சம்பாதித்து, தலைகீழாக விழுந்தான்; அவன் வயிறுவெடித்து, குடல்களெல்லாம் சரிந்துபோயிற்று*" (அப். 1 : 18). யூதாஸ் நான்றுகொண்டு மரிக்கும்படி (ஒரு கயிற்றில்) தொங்கிக்கொண்டிருந்தபோது, அக்கயிறு அறுந்து போயிருந்திருக்க வேண்டும் என்றும், அதினிமித்தம் அவன் கீழே விழவே, ஒரு கூர்மையான கல் அல்லது தரையிலிருந்த ஏதோ ஒன்று அவனுடைய வயிற்றில் நீண்ட ஆழமான பிளவை ஏற்படுத்தி, அதின் விளைவாக அவனுடைய குடல்களெல்லாம் சரிந்து விழுந்திருக்க வேண்டும் என்றும் கூறப்படுகிறது. தான் விழுந்த இடத்தில் பரிதாபமான கோலத்தில் கிடந்த அவனுடைய அவல நிலையைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். அது மிகவும் பயங்கரமான காட்சியாகவுங்கூட இருந்திருக்க வேண்டும். தந்திரமான விதங்களிலுள்ள பெருமையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்!

பெருமையுள்ள ஒருவன் ஜெபிக்கும்போது, அவனுடைய வலதுபக்கத்தில் நிற்பது பிசாசே அன்றி, கர்த்தராகிய இயேசு அல்ல. அவனுடைய ஜெபம் தேவனுக்குப் பிரியமற்றதாயிருப்பது மட்டுமல்லாமல், அது பாவமாகவும் மாறிவிடுகிறது! இதை யூதாஸ்காரியோத்தைக் குறித்த விஷயத்தில் நாம் வாசிக்கிறோம் - "*சாத்தான் அவன் வலது பக்கத்தில் நிற்பானாக. ... அவன் ஜெபம் பாவமாகக்கடவது*" (சங். 109 : 6, 7).

நம்முடைய ஜீவியங்களில் ஒளிந்திருக்கும் பெருமையை நாம் கண்டறியப் பரிசுத்த ஆவியானவர்தாமே நம் மனக்கண்களைப் பிரகாசிப்பிப்பாராக. நமக்கும் மற்றவர்களுக்கும் கிருபையைக் கொண்டுவரத்தக்க விதத்தில் கிறிஸ்துவின் சிந்தை நம்முடைய ஜீவியத்தை ஆளுகை செய்யத்தக்கதாக - இந்தப் பெருமையென்னும் பிசாசை நம்முடைய ஜீவியத்தை விட்டு வெளியே துரத்திவிட கர்த்தர்தாமே நமக்கு உதவிசெய்வாராக.

நவம்பர் 28

முடிவில்லாத ஒரு விடியற்காலை

'*பொழுதுவிடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்கும்*'
(II பேதுரு 1 : 19).

தேவனுடைய சிருஷ்டிப்பின் வேலை ஒரு முடிவில்லாத விடியற்காலையில் முடிவுற்றது: "*அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது; சாயங்காலமும் **விடியற்காலமுமாகி** ஆறாம் நாள் ஆயிற்று*" (ஆதி. 1 : 31). தேவனுக்கு ஸ்தோத்திரம், ஏழாம் நாளில் நாம் ஒரு சாயங்காலத்தைக் காண்பதில்லை: "*தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்*" (ஆதி. 2 : 2).

மனிதனின் வேலை வழக்கமாக மாலையில் முடிவுறுகிறது. ஆனால் தேவனுடைய வேலையோ (அவர் தம்முடைய மகிமையான சபைக்காக வெளிப்படும்போது) மிக அதிக மகிமையாயிருக்கும் ***பிரகாசமான விடியற் காலத்தில்*** முடிவுறும். ஆகவே தேவனுடைய முதல் தூதாகிய "வெளிச்சம் உண்டாகக்கடவது" என்பதின் அர்த்தமும், அதன் அருட்பணியும், அவ ருடைய ***கடைசித் தூதாகிய*** "*மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்*" (வெளி. 22 : 20) என்பதின் நிறைவேறுதலாகிய அவருடைய இரகசிய வருகையில்தான் நிறைவேற்றப்படும் என்பதில் வியப்பொன்றுமில்லையே!

'எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளி'யாகிய கர்த்தராகிய இயேசு, பாவ இருளை நீக்கும்படி ஏற்கனவே ஒருமுறை இந்த இருள் நிறைந்த உலகத்துக்கு வந்துவிட்டார். ஆனால் இருளின் அதிகாரத் திலிருந்து விடுதலையாக்கப்பட்டு வெளிச்சத்தின் பிள்ளைகளாக மாறி யிருப்பவர்களுக்காக இரண்டாம் முறை அவர் நீதியின் சூரியனாக உதிப்பார்.

'*ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உனக்கு வெளிச்சம் தருவார் என்று சொல்லியிருக் கிறார்*' (எபே. 5 : 14 -Eng.).

நாம் ***கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவாகிய*** அந்தப் பெரிய மகிமையான ***ஒளியில்*** முழுமையாக மறைந்துபோகும் வரை, மகிமையான சுவிசேஷத்தின் ஒளி நம்முடைய இருதயங்களில் தொடர்ந்து பிரகாசித்துக் கொண்டேயிருந்து, நம்மை மகிமையிலிருந்து மகிமைக்கு எடுத்துச் செல்வதாக! ஆமென்.

நவம்பர் 29

மாபெரும் ஆவிக்குரிய பெலத்தின் இரகசியம்

"***சவரகன் கத்தி என் தலையின்மேல் படவில்லை; நான் என் தாயின் கர்ப்பத்தில் பிறந்ததுமுதல் தேவனுக்கென்று நசரேயனானவன்; என் தலை சிரைக்கப்பட்டால், என் பலம் என்னை விட்டுப்போம்; அதினாலே நான் பலட்சயமாகி, மற்ற எல்லா மனுஷரைப்போலும் ஆவேன்***"
(நியா. 16 : 17).

சிம்சோனுக்கு ஒரு மேன்மையான அழைப்பு இருந்தது. அவன் பிறக்குமுன்னரே ஒரு தேவதூதன் அவனுடைய தாயாருக்குத் தரிசனமாகி அவனுடைய பிறப்பைக் குறித்துக் கூறினான். அவனுடைய வாழ்க்கை முறைமை எப்படி இருக்க வேண்டும் என்பதைக் குறித்தும், தேவஜனங் களுக்கு நியாயாதிபதியாயிருக்கும்படியான அவனுடைய அழைப்பைக் குறித்தும் ஏற்கனவே முன்னறிவிக்கப்பட்டிருந்தது. இவையெல்லாவற்றின் மத்தியிலுங்கூட, சிம்சோனுடைய ஜீவியமும் ஊழியமும் முழுமையான ஒரு தோல்வியில் முடிவுற்றன. அவன் தன்னுடைய எல்லாப் பெலனையும் அபிஷேகத்தையும் இழந்தான். பெலிஸ்தியரின் அடிமைத்தனத்திலிருந்து அவனால் இஸ்ரவேல் ஜனங்களை விடுதலையாக்க முடியவில்லை. அவன் முடிவாகத் தற்கொலை செய்துகொண்டான். ஏன்? தேவன் அவனைக் குறித்த தம்முடைய திட்டத்தை நிறைவேற்றத் தவறிவிட்டாரோ? அல்ல! தேவனால் அவனுக்கு விலக்கப்பட்டிருந்த ஒரு சவரகன் கத்தி (பாவம்) தன்னுடைய தலையின் மேல் (எண்ணங்களில்) பட அனுமதித்ததினால், சிம்சோனே தேவனுக்கு நம்பிக்கைத்துரோகம் இழைத்துவிட்டான்!

நாம் நம்முடைய ஜீவியத்தைக் குறித்து ஓர் உன்னதமான அழைப் பைப் பெற்றிருக்கக் கூடும்; தேவன் நமக்காகப் பெரிய காரியங்களைத் திட்டம் வகுத்திருக்கக் கூடும். ஆயினும், அவர் தம்முடைய திட்டத்தை நம்மில் நிறைவேற்ற நாம் செய்ய வேண்டிய பகுதி ஒன்று உண்டு. அது, நாம் நம்முடைய ஜீவியத்தைத் தூய்மையில் காத்துக்கொள்வதாகும்.

சிம்சோன் தன்னுடைய நசரேய விரதத்தைக் காத்துக்கொள்ளத் தவறி, தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றக்கூடாத பரிதாபமான நிலைக் குள்ளானான். ஆனால் தேவனுக்கு ஸ்தோத்திரம், தன்னுடைய நசரேய விரதத்தைக் காத்துக்கொண்ட ஒருவன் இருந்தான். அவன் தான் சாமுவேல். அவனுடைய தாயாகிய அன்னாள், "*உமது அடியாளுக்கு ஒரு ஆண் பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன்; **அவன் தலையின்மேல் சவரகன்***

கத்தி படுவதில்லை" (I சாமு. 1 : 11) என்று ஒரு பொருத்தனை பண்ணினாள். இந்தப் பொருத்தனையைச் சாமுவேல் தன்னுடைய ஜீவியத்தின் முடிவு வரை காத்துக்கொண்டான். இதன் விளைவாக, பழைய ஏற்பாட்டில் ஒருவருக்கும் கொடுக்கப்பட்டிராத விதத்தில், பல்வகை ஊழியங்கள் அவனுக்கு ஒருமிக்கக் கொடுக்கப்பட்டன. சாமுவேல் ஒரு ஆசாரியனாகவும் தீர்க்கதரிசியாகவும் நியாயாதிபதியாகவும் இருந்தான் - மூன்று ஆசீர்வதிக்கப்பட்ட ஊழியங்கள் அவனுக்குக் கொடுக்கப்பட்டன. இம்மூன்று உத்தியோகங்களிலும் அவன் தலைசிறந்து விளங்கினான். நாம் சாமுவேலைப் போல, நம்முடைய தலையின் மேல் சவரகன் கத்தி பட அனுமதியாதிருப்போமாயின் - அதாவது பாவம் நம்முடைய சிந்தனைகளுக்குள் பிரவேசிக்க நாம் இடமளிக்காமலிருப்போமாயின் - கர்த்தர் நம்மை நிறைவாக ஆசீர்வதித்து, யாவருக்கும் ஆசீர்வாதமாக மாற்றுவார்.

அன்பான நண்பனே, ஒருவேளை இன்று நீ சிம்சோனைப் போல இருப்பதாக உணர்ந்துகொண்டிருக்கக் கூடும். பாவசிந்தனைகளுக்கு மறுபடியும் மறுபடியுமாக இடங்கொடுத்து, நீ உன்னுடைய மனதைத் தீட்டுப்படுத்தி, தேவனை விட்டுவிட்டிருக்கலாம். மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பி கர்த்தரிடம் வா. இந்தக் கிருபையின் காலத்தில், அவரால் ஒரு சிம்சோனை ஒரு சாமுவேலாக மாற்றக் கூடும்!

நவம்பர் 30

கொடுக்க வேண்டிய சரியான இடம்

'***உங்கள் தேவனாகிய கர்த்தர் தெரிந்துகொள்ளும் ஸ்தானத்தில் அங்கே உங்கள் தசமபாகங்களைக் கொண்டு வர வேண்டும்***' (உபா. 12 : 5, 6).

தசமபாகம் கொடுத்த முதல் மனிதன் ஆபிரகாம் ஆவான். இந்தச் சத்தியத்தை ஒருவரும் அவனுக்குப் போதிக்கவில்லை. மகிமையின் தேவன் அவனுக்குத் தரிசனமானபோது, கொடுப்பதிலுள்ள கிருபையையும் மகிமையையும் பற்றி அவன் அறிந்துகொண்டான் என்பது வெளிப்படை (ஆதி. 14 : 18 - 20).

உன்னதமான தேவனுடைய ஆசாரியனாகிய மெல்கிசேதேக்குக்கு ஆபிரகாம் தசமபாகம் கொடுத்தான். நாமுங்கூட மெல்கிசேதேக்குக்கு அதாவது மெல்கிசேதேக்கின் முறைமையின்படி தங்களைப் பிரதிஷ்டை பண்ணிக்கொண்ட ஆசாரியர்களாகிய தேவ ஊழியர்களிடத்தில் தசமபாகம் கொடுக்க வேண்டும் - இவனது பிரதிஷ்டையைக் குறித்து "*இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன்*" (எபி. 7 : 3) என நாம்

வாசிக்கிறோம். கர்த்தராகிய இயேசு தம்முடைய சீஷர்களுக்கு இந்தப் பிரதிஷ்டையைக் கற்றுக்கொடுத்தார் - "*யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்*" (லூக்கா 14 : 26). ***இவ்விதமாகத் தங்களைப் பிரதிஷ்டை பண்ணிக்கொள்ளாதவர்கள் வேதவாக்கியத்தின் அடிப்படையில் தசமபாகத்தைப் பெற்றுக்கொள்ளத் தகுதியற்றவர்கள் ஆவர்.***

ஆபிரகாம் மெல்கிசேதேக்குக்குத் தசமபாகம் கொடுக்குமுன், மெல்கிசேதேக்கு ஆபிரகாமுக்கு அப்பமும் திராட்சரசமும் கொடுத்தான் (இது கர்த்தருடைய பரிசுத்த பந்தி பரிமாறுவதற்கு ஒரு மாதிரியாக இருக்கிறது). ஒரு விசுவாசி எந்த இடத்தில் ஆராதனையில் பங்குபெற்று, கர்த்தருடைய பரிசுத்த பந்தியில் பங்கெடுக்கிறாரோ அந்த இடத்தில் தான் தசமபாகம் கொடுக்க வேண்டும் என்பதை இது காட்டுகிறது. எந்த இடத்தில் ஊழியத்தின் தேவை அதிகமாய் இருக்கிறதோ, அந்த இடத்திற்குத் தங்கள் தசமபாகத்தைக் கொடுக்கலாம் என்று சிலர் எண்ணுகின்றனர். ஆனால் தேவனுடைய வார்த்தை, '*உங்கள் தேவனாகிய கர்த்தர் தெரிந்துகொள்ளும் ஸ்தானத்தில் அங்கே உங்கள் தசமபாகங்களைக் கொண்டு வர வேண்டும்*' (உபா. 12 : 5, 6) என்று கூறுகிறது.

தசமபாகம் கொடுப்பதற்கு முன்னே ஆபிரகாம் ஆசீர்வதிக்கப்பட்டான் - "*உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னான். இவனுக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்*" (ஆதி. 14 : 20). நாம் தசமபாகம் கொடுப்பது நன்றியின் அடையாளமாக இருப்பதுடன், தேவன் நம்மை ஆசீர்வதித்து நம்முடைய சத்துருவாகிய பிசாசானவனின் மேல் நமக்கு ஜெயத்தை அளித்திருக்கிறார் என்பதற்கான அத்தாட்சியாகவும் இருக்கிறது.

வயோதிபர் ஒருவர் தான் தசமபாகம் கொடுக்க ஆரம்பித்ததிலிருந்து கர்த்தர் தன்னை அபரிமிதமாக ஆசீர்வதித்துவருவதாகவும், அதினிமித்தம் அவர் கர்த்தருக்குப் பத்தில் ஒரு பாகம் கொடுப்பதிலிருந்து பத்தில் ஒன்பது பாகங்கள் கொடுக்குமளவுக்குத் தான் கொடுப்பதைக் கொஞ்சங்கொஞ்சமாக அதிகரித்துக்கொண்டேவந்ததாகவும் சாட்சி பகர்ந்தார்! "*தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டுவாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்*" (மல். 3 : 10).

டிசம்பர் 1

கர்த்தராகிய இயேசுவை நோக்கிப் பார்

"***காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து, அமிழ்ந்துபோகையில்: ஆண்டவரே, என்னை ரட்சியும் என்று கூப்பிட்டான்***" (மத். 14 : 30).

கர்த்தராகிய இயேசுவை நோக்கிப்பார்த்தபடியே, பேதுரு தண்ணீரின் மேல் அநேக அடிகள் எடுத்துவைத்து நடந்துகொண்டிருந்தான். ஆனாலும் காற்று பலமாயிருக்கிறதை அவன் கண்ட அந்த க்ஷணப்பொழுதில், பயந்து, அமிழ்ந்துபோகத் துவங்கினான். விசுவாசமானது நம்மை உறுதியாய் நிலைநிறுத்துகையில், பயமோ நம்மை அமிழ்ந்துபோகச் செய்கிறது. கர்த்தராகிய இயேசுவை நோக்கிப் பார்த்தவனாகத் தண்ணீரின் மேல் நடந்து சென்றுகொண்டிருந்தபோது, தன்னை அமிழ்ந்துபோகாமல் காக்கக் கூடிய தாயிருக்கும் கிறிஸ்துவின் பெலத்தைப் பேதுரு அனுபவித்தான். ஆனால் அவன் தன் கண்களைக் கர்த்தரை விட்டு விலக்கியபோதோ, அவனுடைய சொந்தப் பெலவீனம், அவன் தன்னைத் தண்ணீருக்கு மேலாக (அதாவது, உலகத்துக்கு மேலாக) காத்துக்கொள்வதினின்று அவனைத் தடை செய்தது. நமக்கு வரும் சோதனைகள் கொஞ்சக்காலம் நீடிக்கக் கூடும். ஆனால் பல சந்தர்ப்பங்களிலும் அச்சோதனைகளின் மத்தியில் நாம் கிறிஸ்துவின் வல்லமையையும், நம் சொந்த பெலவீனத்தையும் விளங்கிக் கொள்கிறோம்.

அவன் "*அமிழ்ந்துபோகையில்: ஆண்டவரே, என்னை ரட்சியும் என்று கூப்பிட்டான்*". இங்கு பேதுரு சரியான காரியத்தைச் செய்தான். தன் விசுவாசக் குறைவினால் அவன் அமிழ்ந்துபோய்க் கொண்டிருந்த போதிலும், ஆண்டவராகிய இயேசு ஒருவர் மாத்திரமே தன்னை இரட்சிக்க வல்லவர் என்று அவன் அறிந்திருந்தான். அவனுக்கு மிக அருகில்தானே படகில் மற்ற பதினொரு சீஷர்களும் இருந்தபோதிலும், அவர்களில் ஒருவரையும் அவன் நாடவில்லை; அவர்கள் தனக்கு உதவி செய்யும்படி அவர்களை வேண்டிக்கொள்ளவுமில்லை. "*மனுஷனுடைய உதவி விருதா*" (சங். 60 : 11) என்று நாம் வாசிக்கிறோம். அநேகர் தங்கள் வியாதி நேரத்திலும், பிற சோதனைகளிலும், மனித நிவாரணங்களைத் தேட முயன்று, தவறான நம்பிக்கைக்கு இடமளித்து, நம்பிக்கையற்ற நிலைக்குள்ளாகிறார்கள்.

ஒருவேளை தற்சமயம் நீ உன்னுடைய சோதனைகள், பிரச்சினைகள் ஆகிய சமுத்திரத்தில் மூழ்கிப்போகும் நிலையில் இருக்கக் கூடும். உன் பெலவீனத்தையும், உன் சோதனைகளையும் நீ பாராதே. ஏனெனில்

அவை உன்னைப் பயமுறுத்தி, அமிழ்ந்துபோகச்செய்துவிடும். கர்த்தரை மாத்திரம் நோக்கிப்பார். எந்த மனித உதவியையும் நாடாதே. கிறிஸ்துவின் வல்லமையை நோக்கிப் பார்.

டிசம்பர் 2

உன் 'தேராகு' மரிக்கட்டும்

"***தேராகு தன் குமாரனாகிய ஆபிராமை ... அழைத்துக்கொண்டு, அவர்களுடனே ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்தை விட்டு, கானான் தேசத்துக்குப் போகப் புறப்பட்டான்; அவர்கள் ஆரான்மட்டும் வந்தபோது, அங்கே இருந்துவிட்டார்கள். ... தேராகு ஆரானிலே மரித்தான்***" (ஆதி. 11 : 31, 32).

தேவன் ஆபிரகாமிடம் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விட்டுவிட்டு, தாம் காண்பிக்கும் தேசத்துக்குப் போகும்படி சொல்லியிருந்த போதிலும், தேராகு மரிக்கும் வரை, ஆபிரகாம் தேவனால் வாக்குப் பண்ணப்பட்டிருந்த அத்தேசத்துக்குப் (கானானுக்குப்) போக முடிய வில்லை. 'தேராகு' என்பதன் பொருள் 'தாமதித்தல்' என்பதாகும். தேராகு ஆபிரகாமை ஆரானிலே தங்கும்படி செய்துவிட்டான். ஆரான் என்பது கானானுக்குப் போகும் பாதிவழியில் இருந்த ஓரிடமாகும். 'தேராகு' உன் வாழ்வில் உயிரோடு இருந்தால், நீ கிறிஸ்துவுக்கு உன்னை முழு இருதயத்துடனும் அர்ப்பணிக்கக் கூடாதவனாக, அரைகுறையான மனதுடனேயே அவரைச் சேவிப்பாய். இன்று சில தேவபிள்ளைகளின் வாழ்க்கையில் இது மிக உண்மையானதாகவே இருக்கிறது. பிற்பாடு பார்த்துக்கொள்ளலாம் என்று காரியங்களைத் தள்ளிப்போடுதல் அல்லது தாமதித்தலாகிய 'தேராகின்' ஆவி, சிலருடைய ஜீவியத்தைப் பாழாக்கிவிடுகிறது. அவர்கள் கானானில் அல்ல, ஆரானிலேயே முடிவடைகிறார்கள். கானான் என்பது சுவிசேஷத்தின் சம்பூரணமான ஆசீர்வாதங்களைக் குறிக்கிறது. 'தேராகு' உன் வாழ்வில் உயிரோடு இருந்தால், நீ பரம கானானுக்குப் போகாமல், வழியிலேயே நின்றுவிடவும் கூடும்.

தேவபிள்ளைகள் அநேகர் தாமதம்பண்ணச் செய்யும் ஆவியினால் அழிக்கப்பட்டுப்போயிருக்கின்றனர். சோதோம் பட்டணம் அக்கினியால் அழிக்கப்படவிருந்ததால், லோத்து தன் குடும்பத்தார் அனைவருடனுங் கூட அதை விட்டு சீக்கிரமாக வெளியேற வேண்டும் என்று தேவதூதர்கள் மாலை நேரத்திலேயே லோத்தை எச்சரித்தார்கள்; ஆனால் அவனோ

அடுத்த நாள் காலை வரை 'தாமதித்துக்' கொண்டிருந்தான் என்று நாம் வாசிக்கிறோம். இதன் விளைவாக அவன் குடும்பத்தைத் தாக்கிய அழிவைப் பற்றி நாமனைவரும் அறிவோம். உண்மையிலேயே ***நம் ராஜாவின் வேலை துரிதமாகச் செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.***

இன்றைக்கு உன் வாழ்க்கையில் 'தேராகு' மரிக்கட்டும் - அப்போது மாத்திரமே உன்னால் கானான் தேசத்தை நோக்கி வீரநடைபோட இயலும்.

டிசம்பர் 3

திரட்சியான கிருபையின் கிரியை

"பின்பு தேவன்: நீந்தும் ஜீவஜந்துக்களையும், பூமியின்மேல் வானம் என்கிற ஆகாயவிரிவிலே பறக்கும் பறவைகளையும், ஜலமானது திரளாய் ஜநிப்பிக்கக்கடவது என்றார்" (ஆதி. 1 : 20).

'தண்ணீர்' கிருபையைக் குறிக்கிறது. நமக்குள் இருக்கும் தேவ கிருபையானது, 'நீந்தும் ஜீவஜந்துக்களை', ஆங்கில மொழிபெயர்ப்பின்படி 'அசையும் உயிரினங்களைத்' திரளாய்ப் பிறப்பிக்கக்கூடியதாயிருக்கிறது. 'அசையும் உயிரினங்கள்' என்பது மீட்கப்பட்ட ஆத்துமாக்களைக் குறிக்கிறது. இந்த மீட்கப்பட்ட ஆத்துமாக்கள் தேவமகிமைக்காக உலகத்தையே அசைக்கக் கூடியவர்களாய் இருக்கின்றனர். '*ஜீவ ஜந்துக்கள்*' ஜீவனுள்ளவை - திரட்சியான கிருபையைப் பெற்றுக்கொள்வதன் மூலம் நாம் திரளான ஆத்துமாக்களைப் பிறப்பிக்கலாம் - இந்த ஆத்துமாக்கள் ஒரு தொடர் சங்கிலியான பிரதிக் கிரியை போல வேறு பல ஆத்துமாக்களையும் அசைக்கக்கூடியவர்களைப் பிறப்பிப்பார்கள்.

'*ஆகாயவிரிவிலே பறக்கும் பறவைகள்*' - மிக உன்னதமான பரலோக ஜீவியம் செய்யும் ஆத்துமாக்கள் திரட்சியான கிருபையினால் உருவாக்கப் படுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள், ***கர்த்தராகிய இயேசு வரும்போது இலகுவாகப் பறந்துவிடுவார்கள்!*** '*பூமிக்கு மேலே வானவெளியில் பரலோகத்தின் ஆகாயவிரிவிலே பறப்பார்கள்*' - 'திறக்கப்பட்டிருக்கும் பரலோகத்தைப் பற்றிய தரிசனம்' நமக்கிராவிடில், நாம் உலகத்தாரைக் காட்டிலும் மேலான ஜீவியம் செய்யவோ, உலகத்திற்கு மேலாகப் பறக்கவோ முடியாது.

அருமையான தேவபிள்ளையே, நமக்குள் இருக்கும் இந்தத் திரட்சியான கிருபையானது, நமக்குள்ளேயும், நம் மூலமாயும் பெரிய காரியங்களைச் செய்ய வல்லமையுள்ளதாயிருக்கிறது. நம் மீது பொழிந்தருளப் பட்டுள்ள தேவனுடைய கிருபையை நாம் விருதாவாக்க வேண்டாம்.

அப். பவுலைப் போல நாமும், '*என்மீது அருளப்பட்ட அவருடைய கிருபை விருதாவாய்ப் போகவில்லை*' (I கொரி. 15 : 10 -Eng.) என்று முடிவில் கூறத்தக்கவர்களாயிருக்கும்படியாக, நம் சுயத்திற்கு மரித்துக்கொண்டே யிருந்து, தேவகிருபை நம் வாழ்க்கையில் கிரியை செய்யும்படி அதற்கு இடமளிப்போமாக.

டிசம்பர் 4

பரிசுத்த ஆவிக்குள் ஜீவிப்பாயாக!

'ராஜா கேட்கிற காரியம் மிகவும் அருமையானது. மாம்சத்தோடே வாசம்பண்ணாத தேவர்களே ஒழிய ராஜசமுகத்தில் அதை அறிவிக்கத் தக்கவன் ஒருவனும் இல்லை என்றார்கள்' (தானி. 2 : 11 -Eng.).

இந்தக் கல்தேயர் மெய்யான தேவனை அறியாதவர்களாயிருந்த போதிலும், 'மாம்சத்தோடே வாசமாயிராத தேவர்கள்' அல்லது பரிசுத்தவான் கள் என்று ஒரு கூட்டத்தார் எங்கேயோ இருந்தனர் என்பதை அறிந்திருந் தனர். இப்படிப்பட்ட பரிசுத்தவான்களுக்கு மட்டுமே அரிதான காரியங்கள் அதாவது ஆழமான அல்லது மறைக்கப்பட்டிருக்கும் சத்தியங்கள் வெளிப் படுத்தப்படும் என்றும் அவர்கள் அறிந்திருந்தனர். பின்புதான் தானியேல் இப்படிப்பட்ட ஒரு மனிதனாயிருந்தான் என்பது நிரூபிக்கப்பட்டது.

கர்த்தர் ஆழமான சத்தியங்களையும், தம்முடைய வார்த்தையில் மறைந்திருக்கும் இரகசியங்களையும் வெளிப்படுத்த, '*மாம்சத்தோடே வாசம் பண்ணாத*' பரிசுத்தவான்கள் அவருக்குத் தேவைப்படுகின்றனர். அப். பவுல், "*தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட் பட்டவர்களாயிராமல், ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள்*" (ரோமர் 8 : 9) என்று கூறுகிறார். தானியேலுக்குள் ஒரு விசேஷித்த ஆவி இருந்தது (தானி. 6 : 3). நாம் மாம்சத்தில் அல்ல, பரிசுத்த ஆவிக்குள் பிழைக்கும் படி, கர்த்தர் நம்மைத் தம்முடைய ஆவியினால் நிரப்பியிருக்கிறார்.

அன்பான தேவபிள்ளையே, நீ பரிசுத்த ஆவிக்குள் ஜீவித்தால், இவ்வுலகத்தின் ஞானிகளுக்கு மறைக்கப்பட்டிருக்கும் ஆழமான காரியங்களைக் கர்த்தர் உனக்கு வெளிப்படுத்துவார்.

ராஜாவினிடத்திலிருந்து பிறந்த தீர்மானம் என்னவெனில், "*நீங்கள் சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் எனக்கு அறிவியாமற்போனால் துண்டித்துப்போடப்படுவீர்கள்*" என்பதே. நாம் பரிசுத்த ஆவிக்குள்

ஜீவிக்காதவர்களாய், ஆவிக்குரிய ஆழமான உள்ளுணர்வும் வெளிப் படுத்தலும் அற்றவர்களாய் இருந்தால், பிசாசுக்கும் அவனுடைய தந்திரங் களுக்கும் இரையாகிவிடுவோம் என்பது நிச்சயம். "*மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்*" (ரோமர் 8 : 6).

டிசம்பர் 5

ஏன் இந்தச் சோதனைகள்?

"***கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்***" (சங். 34 : 8).

தாவீது தனிமையாய் ஆடுமேய்த்துக்கொண்டிருந்தபோது ஒருவிசை ஒரு சிங்கமும், ஒருவிசை ஒரு கரடியும் அவனுக்கு எதிராக வந்தன. இவை நம் தனிப்பட்ட ஜீவியத்திற்கு விரோதமாக வரும் சோதனைகளுக்கு அடையாளமாயிருக்கின்றன. கோலியாத், இஸ்ரவேலர் அனைவருக்கும் பொதுவான எதிரியாயிருந்தபடியால், 'கோலியாத்' என்பது தேவஜனங்கள் அனைவருக்கும் அல்லது முழுச்சபைக்கும் விரோதமாக மொத்தமாக வருகிற சோதனைகளைக் குறிக்கிறது. தாவீது சிங்கத்தையும் கரடியையும் சந்தித்தபோது அவற்றால் தோற்கடிக்கப்பட்டுப்போயிருந்தாலோ, அல்லது அவற்றை எதிர்க்கக்கூடாதபடி மிகுந்த பயந்த சுபாவமுள்ளவனாய் இருந் திருந்தாலோ, பிற்பாடு கோலியாத்தையும் பெலிஸ்தியர் அனைவரையும் எதிர்க்க அவனுக்குத் தைரியம் இருந்திராது. நம்முடைய தனிப்பட்ட ஆவிக்குரிய ஜீவியத்திற்கு விரோதமாக வரும் சோதனைகளிலும் பரீட் சைகளிலும் நாம் ஜெயம் பெற்றாலொழிய, தேவஜனங்களை எதிரிட்டு வரும் *கோலியாத்துகளை* மேற்கொண்டு, சபையைப் பாதுகாக்க நம்மால் முடியாது.

இளைஞனாக இருந்தபோது தனக்கு எதிராகக் கெர்ச்சித்துக்கொண்டு வந்த சிங்கத்தைத் தாவீது ஜெயித்த ஜெயமானது, அவனைச் சிங்காசனத் திற்குக் கொண்டு செல்லும் பாதையின் முதல் படியாக அமைந்தது. தேவ னுடைய பிள்ளையே, ஜெயங்கொள்ளுகிறவர்களுக்காகவே தேவனுடைய சிங்காசனம் காத்துக்கொண்டிருக்கிறது என்பதை நினைவிற்கொள்வாயாக.

சிம்சோன் சந்தித்த பாலசிங்கம், இறுதியில் அவனுக்கு இனிமையான தேனைத் தந்தது. அவன் அதைச் 'சாப்பிட்டுக்கொண்டே நடந்தான்'; தன் பெற்றோருக்கும் அதைக் கொடுத்தான் (நியா. 14 : 8, 9). சிம்சோன் அந்த இனிமையான தேனைச் 'சாப்பிட்டுக்கொண்டே நடந்தது' போல, நாமும் நமக்கு வரும் சோதனைகளில் ஜெயம்பெற்று, தேவனின் அன்பை ருசித் துக்கொண்டே, புசித்துக்கொண்டே போக வேண்டும். "*கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்*". இந்தத் 'தேன் போன்ற அனுபவத்தை' மற்றவர்களோடும் நாம் பகிர்ந்துகொள்வோமாக.

கர்த்தர் நம்முடைய வாழ்க்கையில் சோதனைகளை அனுமதிப்பதன் நோக்கம், நம் ஜீவியத்தைக் கசப்பானதாக மாற்ற அல்ல; ஆனால் அதை இன்னும் அதிக மேன்மையானதாகவும் இனிமையானதாகவும் மாற்றி, நம்மோடிருக்கும் அருமையானவர்களையும் பெலப்படுத்தும் பொருட் டாகவே இருக்கும்.

டிசம்பர் 6

சாந்தகுணமுள்ளவர்களைத் தேவன் நடத்துகிறார்

"***சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்***" (சங். 25 : 9).

கர்த்தர் சாந்தகுணமுள்ளவர்களை மட்டுமே வழிநடத்துவார். கோபங் கொள்ளுகிற, அல்லது சினந்தெழுகிற ஜனங்களுக்கு அவர் தமது வழி நடத்துதலைத் தரமாட்டார். எனவேதான், மோசே கோபங்கொண்டபோது, தேவன் தம் வழிநடத்துதலை அவனை விட்டு அகற்றிவிட்டார். அவன் சாந்தமாய் இருந்த காலம் முழுவதும், தம் ஆலோசனையை அவனுக்குத் தர கர்த்தர் ஒருபோதும் தவறவில்லை. ஆனால் அவன் தன் சாந்தமுள்ள ஆவியை இழந்தபோதோ, 'நீ கானானுக்குள் பிரவேசிக்கப்போவதுமில்லை, அதற்குள் ஜனங்களை வழிநடத்தப்போவதுமில்லை' என்று அவர் சொல்லி விட்டார். "*உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்*" (சங். 73 : 24) என்று சங்கீதக்காரன் நிச்சயத்துடன் கூறுகிறான். நாம் சந்திக்கும் நிந்தைகள், புறக்கணிப்புகள், உபத்திரவங்கள் ஆகியவற்றைச் சாந்தத்தோடு சகித்து, நாம் சாந்தகுணமுள்ள வர்களாய் நடந்தால், நாம் கர்த்தருடைய சமுகத்தைச் சென்றடையும் வரை, அவர் நமக்குத் தமது ஆலோசனைகளைத் தந்துகொண்டேயிருப்பார். நாம் ஒருபோதும் இடறவோ, வழிதவறிச் செல்லவோ மாட்டோம்.

சில தேவபிள்ளைகள் தாங்கள் கோபப்படுகிறதைக் குறித்து, 'அது நியாயமான கோபம், தேவனுக்கேற்ற கோபம்' என்று கூறுகின்றனர். நீ இவ்விதம் கூறுகிற ஒரு நபராயிருப்பாயென்றால், கர்த்தர் உனக்கு ஒன்றும் போதிக்க முடியாது. '*என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில் நான் சாந்தமும்*

மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்' (மத். 11 : 29) என்று அவர் கூறுகிறார். சாந்தகுணமுள்ளவர்களுக்கே கர்த்தரால் கற்றுக்கொடுக்க முடியும்.

தாவீது சாந்தமும், மனத்தாழ்மையுமான சுபாவத்தை எப்போதும் தன்னில் காத்துக்கொண்டதால் எப்போதும் தேவ ஆலோசனையைப் பெற்றுக்கொண்டான். "*என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; ... அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது*" (யோவான் 10 : 27) என்று கர்த்தராகிய இயேசு கூறுகிறார். ஆடுகள் தங்கள் மேய்ப்பனைச் சாந்த மாய்ப் பின்பற்றுவது போல நாம் கர்த்தராகிய இயேசுவைப் பின்பற்றா விட்டால், அவர் தம்முடைய ஆலோசனைகளால் நம்மை நடத்துவார் என்று நாம் எதிர்பார்க்க முடியாது.

டிசம்பர் 7

'தோட்டத்தில்' தங்கியிரு

'தேவனாகிய கர்த்தர் ஏதேனில் அதன் கிழக்கே ஒரு தோட்டத்தை உண்டாக்கி, தாம் உருவாக்கின மனுஷனை அதிலே வைத்தார்'
(ஆதி. 2 : 8 -Eng.).

ஆறுதலும் மனமகிழ்ச்சியும் நிறைந்த ஒரு விசேஷமான இடத்தில் தேவன் மனிதனை வைத்தார். 'ஏதேன்' என்ற வார்த்தையே 'மகிழ்ச்சி' என்று பொருள்படுகிறது. அதிலிருந்த தோட்டம் அந்த மகிழ்ச்சியை இன்னும் அதிகரிக்கச் செய்தது. இது சபைக்கு அடையாளமாயிருக்கிறது. நாம் மறுபடியும் பிறக்கும்போதும், அதைத் தொடர்ந்து ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்கும்போதும், கர்த்தர் நம்மைத் தம் சபையில் வைக்கிறார். இது நமக்கு மனமகிழ்ச்சியைத் தருகிறது; தேவனும் நம்மில் மனமகிழ்ச்சியாயிருக்கிறார்.

'*தாம் சிருஷ்டித்த மனிதன்*' - கர்த்தர் தாம் ஒரு உருவாக்கு தலின் வேலையை நமக்குள் செய்து (அதாவது பழைய சுபாவத்தை மாற்றி, தெய்வீக சுபாவத்தை உருவாக்குதல்), நம்மைச் சபையில் வைக்கிறார். "*நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்*" (எபே. 2 : 10).

மனிதனுக்கு உணவும், உறைவிடமும், பாதுகாப்பும் தந்து, அவனுடைய தேவைகளையெல்லாம் சந்திக்கும்படி தேவன் ஏதேனிலே

மனிதனுக்காக ஒரு தோட்டத்தை உண்டாக்கினார். இதேபோல் நமக்கு ஆவிக்குரிய போஜனம், உன்னதமானவரின் மறைவிடத்தில் அடைக்கலம், அந்தகார வல்லமைகளினின்று பாதுகாப்பு இவற்றை அளித்து, நம்முடைய இதர ஆவிக்குரிய தேவைகளையெல்லாம் சந்திக்கும்படி தேவன் நம்மைச் சபையில் வைத்திருக்கிறார். ஆதிமனிதன் பாவம் செய்து, அதினிமித்தம் தோட்டத்தை விட்டு வெளியே துரத்தப்பட்டான். அது அவனுடைய மகிழ்ச்சி நிரம்பிய வாழ்வுக்கு முடிவைக் கொண்டுவந்தது.

தேவன் நம்மை வைத்திருக்கும் 'தோட்டத்தில்' நாம் தங்கித் தரித்திருப்போமாக. குயவனுடைய கைகளிலிருக்கும் களிமண்ணைப் போல், அவர் நம்மைத் தம் வாஞ்சைக்கேற்ப வனையும்படி அவர்தம் கரங்களில் நம்மை ஒப்புக்கொடுப்போமாக. நம் அன்புள்ள தேவன், நம்முடைய சகல தேவைகளையும் சந்திக்கும்படி முன்னேற்பாடுகளைச் செய்துவைத்திருக்கிறார். தேவன் நம்மை எங்கே வைத்திருக்கிறாரோ, அங்கே நாம் தரித்திருந்து, நம் ஜீவியத்தைப் பாவத்திற்கும், லௌகீகத் திற்கும் நீங்கலாகக் காத்துக்கொள்வோமாக.

டிசம்பர் 8

திருடன் கற்பித்த பாடங்கள்

"சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டு விடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ, அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்" (எபி. 10 : 25).

இங்கு, 'நாளானது சமீபித்து வருகிறது' என்பது கர்த்தருடைய இரகசிய வருகை சமீபமாயிருப்பதைக் குறிக்கிறது. நிருபக்காரன் வலி யுறுத்திச் சொல்ல விரும்புவது யாதெனில், கர்த்தருடைய இரகசிய வருகை சமீபித்திருக்கிறபடியால், முன்பைக் காட்டிலும் அதிகமாக நாம் சபையாக ஒன்றுகூடிவந்து, ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருக்க வேண்டும் என்பதே. இரண்டாயிரம் வருடங்கட்கு முன்பு காரியம் இப்படி இருந்த தென்றால், கர்த்தருடைய இரகசிய வருகையை எந்நேரத்திலும் எதிர் பார்க்கக்கூடிய கடைசி வினாடிகளில் வந்திருக்கும் நாம், இப்போது சபையாகக் கூடிவந்து ஐக்கியப்படுவதையும், ஒருமித்து ஆராதிப்பதையும் அசட்டைபண்ணாதிருக்க எவ்வளவு அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருக்க வேண்டும்!

ஜேக்கப் என்னும் பெயர்கொண்ட ஒரு வாலிபன், ஒரு நாள் ஞாயிறு காலையில் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்குப் போய்க் கொண்டிருந்தான். இடையில் அவன் ஒரு காட்டைக் கடக்க வேண்டிய தாயிருந்தது. அவன் அக்காட்டுப் பாதையில் நடந்து சென்றுகொண்டி ருந்தபோது, ஒரு திருடன் அவனைப் பிடித்து, அவனிடம் இருந்த பணத்தையெல்லாம் கொடுத்துவிடும்படி மிரட்டினான். தன்னிடம் பணம் இல்லையாதலால், தன்னை விட்டுவிடும்படி ஜேக்கப் திருடனிடம் கெஞ்சினான். பணத்தைத் தராவிடில் அவனைக் கொலை செய்யப் போவதாகத் திருடன் மிரட்டினான். ஜேக்கப் திருடனிடம் தான் ஒரு பெந்தெகொஸ்தே விசுவாசி என்றும், தான் பொய் சொல்லுவதில்லை என்றும் கூறி, தன்னை விட்டுவிடும்படி கெஞ்சினான். உடனே திருடன் அவனுடைய தொண்டையை இறுகப் பிடித்துக்கொண்டு, கோபத்துடன், 'அப்படியென்றால் இது ஞாயிறு காலை ஆயிற்றே, நீ சபை ஆராதனையில் அல்லவா இப்போது இருந்திருக்க வேண்டும்!' என்று கேட்டான். ஜேக்கப் என்ன சொல்வதென்று தெரியாமல் திக்குமுக் காடிவிட்டான். சொல்லுவதற்கு அவனுக்கு ஒன்றுமே இருக்கவில்லை. 'இனிமேல் ஆலயத்திற்கு ஒழுங்காகச் செல்வாயா?' என்று அதிகாரத்துடன் கேட்டான், திருடன். இதற்கு ஜேக்கப் உடனே சம்மதித்தான். பின்பு, 'நீ தசமபாகம் செலுத்துகிறாயா?' என்று திருடன் கேட்டான். ஜேக்கப் அதிர்ச்சியுற்றான். ஒரு திருடனிடமிருந்து இப்படிப்பட்ட ஒரு கேள்வியை அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை. தான் ஒரு பெந்தெகொஸ்தே விசுவாசி யாக இருப்பதால், பொய் சொல்லுவதில்லை என்று அவன் திருடனிடம் ஏற்கனவே சொல்லியிருந்தான். எனவே இந்தக் கேள்விக்கு அவன் மிகுந்த சாந்தத்துடன், 'இல்லை, நான் தசமபாகம் செலுத்துவதில்லை' என்று பதிலளித்தான். திருடனுக்கு அதிக கோபம் வந்துவிட்டது. திருடன் அவனைப் பிடித்து ஒரு முயலை உலுக்குவது போல அவனை உலுக்கி, 'இனிமேல் நீ உண்மையாகத் தசமபாகம் செலுத்துவாயா?' என்று சத்த மிட்டான். அவ்வாலிபன் அவசரமாக, இனி தான் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டான். அப்போது திருடன் அவனைத் தன் வழியே போகும்படி விட்டுவிட்டான். அடுத்த ஞாயிற்றுக்கிழமை ஜேக்கப் சபைக்கு வந்து, இச்சம்பவம் பற்றி ஆராதனையில் சாட்சி கூறினான். அவனது வாழ்க்கை மாற்றப்பட்டது. பிற்காலத்தில் அவன் மிகவும் நல்லதொரு தேவ ஊழியனாக மாறினான்.

நீங்கள் ஆலயத்திற்குப் போவதற்கும் தசமபாகம் செலுத்துவதற்கும் துவங்குவதற்கு, நீங்கள் 'திருடனால்' பிடிக்கப்படும் வரை காத்திருக்க வேண்டாம்!

டிசம்பர் 9

உன்னுடைய 'ஈசாக்கு'

"மேலும் விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்ட போது ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான். ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று அவனோடே சொல்லப்பட்டிருந்ததே; இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களைப் பெற்றவன், ... தனக்கு ஒரே பேறானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான்" (எபி. 11 : 17 - 19).

'ஈசாக்கு' என்பது நாம் மிக அதிகமாய் நேசிக்கிற எந்தவொரு காரியத்தையும் குறிக்கிறது. நம்முடைய *ஈசாக்கைப்* பலியாக ஒப்புக் கொடுக்க நமக்கு விசுவாசம் தேவை.

தேவன் நமக்குச் சோதனைகளை அனுமதிப்பதின் ஒரு நோக்கம், நம்மை நம்முடைய *ஈசாக்கைப்* பலியாக ஒப்புக்கொடுக்கச் செய்வதே ஆகும். ஒவ்வொரு சோதனையும், நம் இருதயத்திலிருந்து இன்னும் ஏதோ ஒன்று - அது நம் பெயரோ, புகழோ, அல்லது வேறு ஏதோ ஒரு *ஈசாக்கு* - வெளியேற்றப்பட வேண்டும் என்று நம்முடன் பேசுகிறது. ஒவ்வொரு சோதனையும் நம் விசுவாசத்தை அதிகரிக்கச் செய்யும் நோக்குடையதாயிருக்கிறது. நம்முடைய *ஈசாக்குகளையெல்லாம்* நாம் ஒப்புக்கொடுத்து விட்டுவிடாமல் இருக்கும் வரை நம் விசுவாசம் பூரணப்படாது.

"வாக்குத்தத்தங்களைப் பெற்றவன் ... பலியாக ஒப்புக்கொடுத்தான்" - நாம் நம்முடைய *ஈசாக்கைப்* பலியாக ஒப்புக்கொடுத்தலானது, நாம் ஏற்கனவே *ஈசாக்கைக்* காட்டிலும் மேலான ஒன்றை அதாவது கிறிஸ்து வையும் அவருடைய நித்திய ஆசீர்வாதங்களையும் பெற்றுவிட்டோம் என்பதைக் காண்பிக்கிறது. தேவன் தம்முடைய மிகச் சிறந்ததை நமக்குத் தருவதினால், நாமும் நம்முடைய மிகச் சிறந்ததை அவருக்குத் தருகி றோம். நாம் அவருக்குக் கொடுப்பது அவர் நமக்குக் கொடுப்பதைக் காட்டிலும் ஒருபோதும் அதிகமானதாய் இருக்க முடியாது. விசுவாசத் தினால் ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றுக்கொண்டான்; விசுவாசத்தினால் ஈசாக்கை அவன் ஒப்புக்கொடுக்கவும் செய்தான். நாம் எதை விசுவாசத் தினால் பெற்றுக்கொள்கிறோமோ, அதை விசுவாசத்தினால் ஒப்புக் கொடுக்கவும் மனமுவந்தவர்களாயிருக்க வேண்டும்.

அன்பான தேவபிள்ளையே, கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கும்போது, அவருடைய அந்த ஆசீர்வாதங்கள் மேல் உன் மனதை வைக்காதே. உன் முழு இருதயத்துடனும் கர்த்தரை நேசிப்பதிலிருந்தும், அவர் ஒருவரை மாத்திரம் நேசிப்பதிலிருந்தும் உன் மனது சிதறடிக்கப்பட நீ ஒருபோதும் இடங்கொடுத்துவிடாதே.

டிசம்பர் 10

சரியான பாதையைத் தெரிந்தெடு

"***அவர் போகும் வழியில் முன்னாக ஓடி, அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான்***" (லூக்கா 19 : 4).

யாதொரு நோக்கமும் குறிக்கோளுமின்றி அநேகர் தங்கள் ஆவிக்குரிய ஓட்டத்தை ஓடுகிறார்கள். ஆனால் சகேயுவோ, கர்த்தராகிய இயேசு நடக்கவிருந்த அதே வழியிலேயே அவருக்கு முன்பாக ஓடினான். அன்பான தேவபிள்ளையே! நீ இந்த ஆவிக்குரிய ஓட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கலாம்; ஆனால் கர்த்தராகிய இயேசு தெரிந்துகொள்ளும் அந்தப் பாதையிலேயே நீயும் ஓடுகிறாயா? கர்த்தராகிய இயேசு, மகா பரிசுத்தத்திற்குச் செல்லும் வழியை, அதாவது சீயோனுக்கும், புதிய எருசலேமுக்கும் செல்லும் வழியையே தெரிந்தெடுத்திருக்கிறார். அதையே நீயும் தெரிந்து கொள்ளுவாயாக. அது மாத்திரமே அவரைச் சந்திக்கவும், அவரை முகமுகமாய்த் தரிசிக்கவும் உனக்கு உதவி செய்யும்.

தாம் தெரிந்துகொள்ளும் வழியை உனக்குக் காண்பிக்கக் கர்த்தர் ஆவலாயிருக்கிறார். நீ உன் பாதைகளில் நின்று, சரியான வழி எதுவென்று 'பார்த்து விசாரித்துக் கேட்டால்', '*வழி இதுவே, இதிலே நட என்று உனக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உன் காதுகள் கேட்கும்*' (எரே. 6 : 16; ஏசாயா 30 : 21). எனவே நீ பெரும்பாதையான வழியின் மேல் உன் இருதயத்தை வைப்பாயாக (எரே. 31 : 21 -Eng.). அதற்கு நேராக உன் முகத்தைத் திருப்புவாயாக (எரே. 50 : 5). "*நான் உமது கற்பனைகளின் வழியாக ஓடுவேன்*" (சங். 119 : 32) என்று கூறிய சங்கீதக்காரனைப் போல, கர்த்தருடைய வழியில் நடக்க உனக்கிருக்கும் ஆவலை நீ அவருக்குக் காண்பிப்பாயாக - "*தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்*".

'சகேயு' என்னும் வார்த்தைக்கு, 'வெண்மை' அல்லது 'தூய்மை' என்பது பொருள். எனவே அன்பான வாசகரே, நீர் பரிசுத்தத்தை வாஞ்சிக்காவிட்டால், அவருடைய பாதையில் உம்மால் செல்ல முடியாது. "*இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்*" (மத். 5 : 8).

டிசம்பர் 11

கிறிஸ்துவோடு நமக்குள்ள தொடர்பு

"***புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்***" (ஆதி. 2 : 24).

நாம் இங்கு புருஷனின் கடமையை மட்டுமல்ல, ஸ்திரீயின் கடமையையும் கூட காண்கிறோம். புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு ஸ்திரீயுடன் இசைந்திருக்க வேண்டுமென்றால், அந்த ஸ்திரீயினிடத்தில், ஒரு தகப்பனையும் ஒரு தாயையும் அல்லது ஒரு தகப்பனின் குணநலன்களையும் ஒரு தாயின் குணநலன்களையும் அவன் காண வேண்டும். கிறிஸ்துவுக்கு முன்பாக நிறுத்தப்பட வேண்டிய சபையானது, தகப்பனின் அன்பையும், தாயின் கரிசனையுள்ள அன்பையும் உடையதாய் இருக்க வேண்டும். கர்த்தர் நம்மில் எப்படிப்பட்ட சுபாவத்தைக் காணக்கூடியவராயிருக்கிறார்? நாம் அவருடைய மணவாட்டியாவதற்குத் தகுதியுள்ளவர்களாய் இருப்போமா?

ஒரு புருஷன் தன் மனைவியை நேசித்து, தன் தகப்பனையும், தாயையும் விட்டு அவளோடு இசைந்திருப்பது போல, கர்த்தராகிய இயேசு சபையை நேசித்தபடியால் பிதாவின் மடியையும் பரலோகத்தையும் விட்டு, மனித சாயலாகப் பூமிக்கு வந்தார். பின்பு அவர், "*கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்*" (எபே. 5 : 27). கர்த்தர் எவ்வளவாய் நம்மை நேசிக்கிறார்! எந்த அளவுக்கு நாம் அவரை நேசிக்கிறோம்?

கிறிஸ்துவும் சபையும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் மூலம் இணைக்கப்படுகிறார்கள். சபையானது ஆவியின் கனியைத் தருவதின் மூலம் அந்த ஐக்கியத்தில் வளருகிறது. "நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி (கிறிஸ்து என்னும் வேறொருவருக்கு விவாகம்பண்ணப்பட்டவர்களாகி -Eng.), தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி" (ரோமர் 7 : 4) என்று கூறப்பட்டிருப்பது போல, நாம் தேவனோடு ஐக்கியமாயிருந்து, அவருக்காகக் கனிகொடுப்போமாக. அவர் நம்மைச் சேர்த்துக்கொள்ளும்படியாக வரும்போது, நாம் அவருடைய கறையற்ற மணவாட்டியாகக் காணப்படுவோமாக.

டிசம்பர் 12

உன் அஸ்திபாரத்தை அழித்துப்போடாதே!

"***அஸ்திபாரங்களும் நிர்மூலமாகிறதே, நீதிமான் என்னசெய்வான்?***" (சங். 11 : 3).

நாம் தேவனோடு செய்யும் உடன்படிக்கைகள் நம் ஆவிக்குரிய கட்டடத்தின் அஸ்திபாரமாக அமைகின்றன. நம் உடன்படிக்கைகளில் நாம் உறுதியாய் இருந்தால் மட்டுமே நம் ஆவிக்குரிய ஜீவியம் புதிய எருசலேமாகக் கட்டப்பட முடியும். "*அஸ்திபாரங்களும் நிர்மூலமாகிறதே, நீதிமான் என்னசெய்வான்?*" (சங். 11 : 3). நீ தேவனோடு செய்திருக்கும் உடன்படிக்கையை முறிக்கும்போது, உன் ஆவிக்குரிய கட்டடத்தின் அஸ்திபாரத்தையே உடைத்துப்போடுகிறாய்.

நாம் தேவனோடு செய்யும் உடன்படிக்கைகள் மட்டுமல்ல, அப் போஸ்தல உபதேசமும் நம் கட்டடத்தின் அஸ்திபாரமாக அமைகிறது. "*நீங்கள் ... அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்தி பாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்பு கிறது*" (எபே. 2 : 19 - 21). அநேகர் அப்போஸ்தலரின் உபதேசமாகிய அஸ்திபாரத்தின் மேல் கட்டி எழுப்பப்படுவதை விரும்பாமல், சுயாதீனராய் இருக்க விரும்புகின்றனர். சிலர் தேவனுடைய ஊழியக்காரரோடு சேர்ந்து நின்றாலும், அற்பமான சிறுசிறு விஷயங்களுக்காக அவர்களிடம் அவ்வப் போது இடறல் அடைகிறார்கள். நீ இப்படி இடறல் அடைந்தால், அஸ்தி பாரக் கல்லுடனேயே நீ இடறல் அடைகிறாய் என்பதை நினைவிற் கொள்வாயாக. நீ அஸ்திபாரக் கல்லுடன் இடறல் அடையவோ, அதி லிருந்து நீக்கப்படவோ நேரிட்டால், உன் ஜீவியம் ஒருக்காலும் கட்டி யெழுப்பப்பட முடியாது. அஸ்திபாரக் கற்கள் இல்லாமல் ஒரு கட்டடம் எப்படி கட்டியெழுப்பப்படக் கூடும்? இக்காரணத்தினாலேயே, அடிக்கடி தேவனுடைய ஊழியரோடு மனத்தாங்கல் அடையும் அநேக விசுவாசிகள், தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் செழித்தோங்குவதில்லை.

ஆகவே, அருமையான தேவபிள்ளையே, உன் துக்கத்திற்குக் காரணமான யாவற்றையும் மன்னித்து மறந்து, தேவனுடைய ஊழியக் காரருடன் சேர்ந்து நிற்கத் தீர்மானிப்பாயாக. அவர்களுடைய கிரியைகளி னிமித்தம் அன்பினால் அவர்களை மிகவும் மேன்மையாக எண்ணிக் கொள்ளுவாயாக (I தெச. 5 : 13 -Eng.). இப்படி நீ செய்தால், நீ ஒரு புதிய வாழ்க்கையைத் துவங்கக் கர்த்தர் உனக்கு உதவிசெய்வார்; முடிவில் நீ கிறிஸ்துவின் மணவாட்டியாக, புதிய எருசலேமாகத் துலங்குவாய்!

டிசம்பர் 13

விசுவாசத்திற்காகப் போராடு!

"***விசுவாசத்தினாலே யோசேப்பு இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தை விட்டுப் புறப்படுவார்களென்பதைப்பற்றித் தன் அந்தியகாலத்தில் பேசி, தன் எலும்புகளைக்குறித்துக் கட்டளைகொடுத்தான்***" (எபி. 11 : 22).

விசுவாசமானது மரணத்திலும் நமக்கு நம்பிக்கையைத் தருகிறது. தேவன் தமது ஜனங்களை ஒரு நாள் சந்திப்பார் என்றும், தன் எலும்புகள் எகிப்தில் (இந்த உலகத்தில்) இராமல், அவை கானானுக்குக் (பரலோகத் திற்கு) கொண்டுசெல்லப்படும் என்றும் யோசேப்பு அறிந்திருந்தான். இது கர்த்தருடைய இரகசிய வருகையில் நாம் எடுத்துக்கொள்ளப்படுவதைப் பற்றிய நம்முடைய நம்பிக்கைக்கு அடையாளமாயிருக்கிறது.

யோசேப்பு (விசுவாசத்தில்) 'கட்டளைகொடுத்தான்'. அவன் தயவாக வேண்டிக்கொள்ளவில்லை. மரிக்கும்போதுங்கூட விசுவாசமானது ஒருவ னுக்குத் தெய்வீகமாகக் கட்டளையிடும் அதிகாரத்தையும் வல்லமையை யும் தருகிறது.

'*விசுவாசத்தினாலே யோசேப்பு தான் மரிக்கும்போது, இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தைவிட்டுப் புறப்படுவார்களென்பதைப்பற்றி*' பேசினான். இஸ்ரவேலர் எகிப்து தேசத்தைவிட்டுப் புறப்படுவார்கள் என்ற ஆசீர்வதிக்கப்பட்ட நம்பிக்கையை யோசேப்பு தன் மரண நேரத்திலும் தனக்கு முன் வைத்திருந்தான் என்பதை இது காண்பிக்கிறது. யோசேப்பின் எலும்புகள் கிறிஸ்துவின் உபதேசங்களுக்கு அடையாளமாயிருக்கின்றன. எலும்புகள் எவ்விதம் மனித சரீரத்தின் உறுதிவாய்ந்த திடப்பகுதியா யிருக்கின்றனவோ, அவ்விதமே கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கும் மெய்யான உபதேசங்களே உறுதியான திடப்பகுதியாக இருக்கின்றன. பரிசுத்தவான்களுக்கு 'ஒருவிசை என்றென்றைக்குமாக' (யூதா 3 -மூல பாஷையில்) ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்திற்காக (உபதேசங்களுக்காக) நாம் தைரியமாய்ப் போராட வேண்டும் என்று அப். யூதா கூறுகிறார். யோசேப்பு மரிக்கும் தருவாயில் தன் எலும்புகளைக் குறித்துக் கட்டளை கொடுத்தான் - இது, உண்மையான பரிசுத்தவான்கள், தாங்கள் மரிக்கும் போதுங்கூட, உள்ளான பெலன் வாய்ந்தவர்களாக, விசுவாசத்திற்காக அதாவது தங்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட உபதேச சத்தியங்களுக்காகப் போராடுவார்கள் என்பதைக் காட்டுகிறது.

டிசம்பர் 14

என் தேவன்!

"***நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர்***" (சங். 91 : 2).

இஸ்ரவேலின் முதல் ராஜாவாக இருக்கும்படி சவுல் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டவனாயிருந்தபோதிலும், அவன் தேவனை "என் தேவன்" என்று குறிப்பிடுவதாக நாம் வேதாகமத்தில் எங்கும் வாசிப்ப தில்லை. ஆனால் தாவீது அநேக முறை "*என்* தேவன்" என்று குறிப் பிடுவதை நாம் காண்கிறோம். அப். பவுலுங்கூட '*என்* தேவன் உங்கள் குறைவுகளையெல்லாம் நிறைவாக்குவார்' என்று கூறுகிறார்.

தேவன் எப்படி 'என் தேவனாக' அல்லது நம் சொந்த, தனிப்பட்ட தேவனாக மாறுகிறார்? பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெறுவதாலோ, தண்ணீர் ஞானஸ்நான சத்தியத்திற்குக் கீழ்ப்படிவதாலோ, தேவசித்தம் செய்வதாலோ நீ தேவனைத் தனிப்பட்ட விதத்தில் உன்னுடைய தேவனாக மாற்றிக்கொள்ள முடியாது. தேவன் 'உன் தேவனாக' மாற வேண்டுமாகில், தேவசித்தம் செய்வது உனக்குப் பெருமகிழ்ச்சி அளிப்பதாக இருக்க வேண்டும். 'என் தேவனே, உம்முடைய சித்தம் செய்வதில் நான் மனமகிழ்ச்சியாயிருக்கிறேன்' (சங். 40 : 8 -Eng.). நீ ஒருவேளை தேவசித்தம் செய்யலாம்; ஆனால் பெருமகிழ்ச்சியோடு அதை நீ செய்யாதிருக்கலாம். நீ தேவசித்தத்தை விருப்பத்தோடும் பெருமகிழ்ச்சியோடும் செய்யும்போது, சர்வ வல்லமையுள்ள, சர்வ வியாபியாகிய தேவன், உன் சொந்த, தனிப்பட்ட தேவனாக மாறுகிறார்.

தேவனை அறிந்துகொள்வதும், தேவனைப் பற்றி அறிந்து கொள்வதும் இரண்டு வெவ்வேறான காரியங்களாகும். தேவனுடைய வசனத்தை வாசிப்பதன் மூலமும், தூதுகளைக் கேட்பதன் மூலமும், மற்றும் பல ஏதுக்களின் மூலமும் நாம் தேவனைப் பற்றி அறியவருகிறோம். ஆனால் தேவனோடு ஜீவிக்கும்போது மட்டுமே நாம் தேவனைத் தனிப் பட்ட முறையில் அறிந்துகொள்கிறோம். இதற்கு, தேவசித்தம் செய்வதில் நாம் மகிழ்ச்சியாயிருக்க வேண்டும். "*உமது நியாயப்பிரமாணம் என் **உள்ளத்திற்குள்** இருக்கிறது*" (சங். 40 : 8) - நாம் பிரியத்தோடும் பெரு மகிழ்ச்சியோடும் தேவசித்தம் செய்தாலொழிய, நாம் நம்முடைய தேவனை நம் இருதயத்தில் அறிந்துகொள்ள முடியாது; நாம் நம்முடைய புத்தியில் அதாவது தலையில் மட்டுமே அவரை அறிந்தவர்களாயிருப்போம்.

நாம் தேவசித்தம் செய்வதில் மனமகிழ்ச்சியாயிருந்தால், தேவனும் நம்மில் மகிழ்ச்சியாயிருப்பார். நாம் பாடுவதும் ஜெபிப்பதும் துதிப்பதும் அவருக்கு மகிழ்ச்சியைத் தரும். நாம் தேவசித்தத்தில் மனமகிழ்ச்சியா யிராவிட்டால், நம்முடைய பாடல்கள் செவிக்கு இனிமையானவையாக இருந்தாலுங்கூட, அவர் அவற்றைக் குறித்து "உன் பாட்டுகளின் இரைச்சலை என்னைவிட்டு அகற்று" என்றே கூறுவார் (ஆமோஸ் 5 : 23).

"*என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன்*" - தானியேல் தேவசித்தம் செய்வதில் பெருமகிழ்ச்சிகொண்டிருந்தான். எனவே தேவன் அவனுக்குப் பலத்த அடைக்கலமானார். அவன் சிங்கங்களைக் குறித்து அஞ்சவில்லை. '*என்* தேவன் தம்முடைய தூதனை அனுப்பினார்' என்று அவன் சொல்லுகிறான். தேவசித்தம் செய்வது நமக்கு மனமகிழ்ச்சியா யிராவிட்டால், நமக்கு ஒரு பொய்யான அடைக்கலம் மட்டுமே இருக்கும். "*பொய் என்னும் அடைக்கலத்தைக் கல்மழை அழித்துவிடும்*" (ஏசாயா 28 : 17). நாம் சந்தோஷத்தோடும் மனமகிழ்ச்சியோடும் தேவசித்தம் செய்யாவிடில், தேவன் நம்முடைய அடைக்கலமாயிருக்கவில்லை என்பதையும், நம் முடைய அடைக்கலங்கள் யாவும் பொய்யான அடைக்கலங்களாகவே இருந்தன என்பதையும் ஒரு நாள் நாம் உணர்ந்து, துக்கப்பட்டு அழுது புலம்புவோம்.

டிசம்பர் 15

சாபத்திற்கு நீங்கலான ஒரு வாழ்க்கை!

"***அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; ... உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்***" (ஆதி. 3 : 18, 19).

"*அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்*" - தேவன் பூமியை ஓர் அழகான தோட்டத்தைப் போல உருவாக்கினார். ஆனால் மனிதனின் பாவம் களைகளையும் முட்களையும் அதற்குள் கொண்டுவந்தது. பாவம் உன் இருதயத்தில் முட்களைப் பிறப்பிக்கிறது - அதாவது உன்னையும் மற்றவர்களையும் புண்படுத்தும் சுபாவங்களை அது உன்னில் உண்டுபண்ணுகிறது. நீ ஒரு முள்ளாக இராதபடி, கர்த்தராகிய இயேசு முட்கிரீடமணிந்து, இந்தச் சாபத்தைத் தம் மேல் ஏற்றுக்கொண்டார்.

"*உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்*" - இங்குதான் முதன்முதலாக வேர்வை, ஆகாரம் ஆகியவை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

பாவத்தில் விழுமுன் மனிதன் தன் ஆகாரத்திற்காகப் பிரயாசப்பட வேண்டியதாயிருக்கவில்லை. அவன் கனிகளைப் புசித்துச் சந்தோஷமா யிருந்தான். அதற்காக அவன் எந்தப் பிரயாசத்தையும் மேற்கொள்ள வேண்டியதாயிருக்கவில்லை. ஆனால் இப்போது அவன் கடினமாக உழைக்க வேண்டியதாயிருக்கிறது. பாவம் செய்த பின் அவனுடைய இருதயம் கடினப்பட்டது போல, நிலமுங்கூட கடினமாகி, இப்போது அவன் பாடுபட்டு அதைப் பண்படுத்த வேண்டியதாயிற்று.

உலகப்பிரகாரமான காரியங்களுக்காகக் கவலைப்படுவதிலிருந்து நாம் விடுதலையாக்கப்பட்டு, சுயாதீனராக இருக்க வேண்டும் என்று தேவன் நம்மைக் குறித்து விரும்புகிறார். நம் கவலைகளையெல்லாம் நாம் அவர் மேல் வைத்துவிட வேண்டும் என்று அவர் விரும்புகிறார். "*அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள்*" (I பேதுரு 5 : 7). கர்த்தர் நமக்காகக் கவலைப்படுவ தாக வாக்குக் கொடுத்திருக்கிறார். எனவே தேவனுடைய பிள்ளைகளே, "*என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள்*" (மத். 6 : 31). இப்படிப்பட்டவைகளுக்காகக் கவலைப்படுபவர்கள் தேவனை அறியாத புறஜாதியாரே ஆவர்.

சாபத்திற்கு நீங்கலான ஒரு வாழ்வை நமக்குச் சம்பாதித்துத் தரும்படி கர்த்தராகிய இயேசு மிக உயர்ந்த கிரயத்தைச் செலுத்தியிருக் கிறார். நாம் இந்தப் புது வாழ்வைச் சந்தோஷமாக அனுபவிக்கிறோமா? அல்லது இன்னும் சாபத்தின் கீழ் இருக்கிறோமா?

***டிசம்பர்* 16**

நீ ஜீவனை விரும்புகிறாயா?

"***ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக் கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடு களையும் விலக்கிக்காத்து***" (I பேதுரு 3 : 10).

நம் நாவு பொல்லாததாய் இருக்குமாயின், நம் எதிர்காலமும் பொல்லாததாகவே இருக்கும் என்கிற பயப்படத்தக்க உண்மையை இங்கு நாம் காண்கிறோம். '*ஜீவனை விரும்பி நல்ல நாட்களைக் காணவேண்டு மென்றிருக்கிறவன், பொல்லாப்புக்குத் தன் நாவை விலக்கக்கடவன்*'. வேறு வார்த்தைகளில் கூறின், உன் நாவு பொல்லாததாய் இருந்தால், உண்மையில்

உன் ஜீவனை நீயே வெறுக்கிறாய்; எதிர்காலத்தில் நல்ல நாட்களைக் காணவும் உனக்கு விருப்பம் இராது.

உன் வாழ்க்கை உன் நாவுடன் நெருங்கிய தொடர்புள்ளது. உன் நாவு பொல்லாததாக இருக்கும்போது, உன் வாழ்க்கையும் பொல்லாத தாகவே இருக்கும். அவ்வாறே உன் நாவு இனிமையானதாக, கிருபை யுள்ளதாக, மனதுருக்கமுள்ளதாக, இரக்கமுள்ளதாக இருந்தால், உன் வாழ்க்கையும் அதுபோலவே அமையும். "*ஆரோக்கியமுள்ள நாவு ஜீவவிருட்சம்*" (நீதி. 15 : 4).

நீ சாக வேண்டும் என்று அடிக்கடி வாஞ்சிக்கிறாயா? இந்தப் பிரச்சினை, அந்தப் பிரச்சினை என்று அதற்கு நீ பல சாக்குப்போக்கு களைச் சொல்லக் கூடும். ஆனால் மெய்யான பிரச்சினை உன் நாவே ஆகும். "*மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்*" (நீதி. 18 : 21). உன் நாவு பொல்லாததாய் இருக்குமாயின், நீ ஜீவனை விரும்புவதற்குப் பதிலாக அதை வெறுக்கிறாய். உன் நாவு ஜீவ ஊற்றாக இருந்து, இனிமையும் கிருபையுமுள்ள வார்த்தைகளை மொழிந்தால், உன் வாழ்க்கை யும் கிருபையாலும் நன்மையாலும் நிரம்பியிருப்பதை நீ காண்பாய். நீ மரணத்தை விரும்பமாட்டாய்.

'*கபடத்துக்குத் தன் உதடுகளை விலக்கிக்காத்து*' - நீ உன் வார்த்தை களில் உண்மையற்றவனாய், வஞ்சகமுள்ளவனாய் இருந்து, இரட்டை இருதயத்தோடு அதாவது உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுகிற வனாய் இருந்தால், நிச்சயமாகவே நீ நல்ல நாட்களைக் காண மாட்டாய்.

***டிசம்பர்* 17**

எல்லாம் இயேசுவினாலேயே!

"***தங்கள் வஸ்திரங்களை அதின்மேல் (கழுதைக்குட்டி) போட்டு, இயேசுவை அதின்மேல் ஏற்றினார்கள். அவர் போகையில், அவர்கள் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள்***" (லூக்கா 19 : 35, 36).

கர்த்தராகிய இயேசு அந்தக் கழுதையின்மேல் உட்கார்ந்தபோது அதற்கு எத்தகையதொரு கனம் கிடைத்தது! அந்தக் கழுதை சென்ற இடமெங்கும் அதற்கு அமோக வரவேற்பு கிடைத்தது - ஜனங்கள் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள்; மரக்கிளைகளைத் தறித்துப் பரப் பினார்கள். அந்தக் கழுதை சாதாரண தரையின் மேல் நடக்கவே இல்லை.

அந்தக் கழுதை திடீரென ஒரு க்ஷணப்பொழுதிற்கு, 'என்னிலுள்ள மேன்மையினிமித்தமாகவே இந்த ஜனங்கள் யாவரும் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்' என்று எண்ணி, கர்த்தராகிய இயேசுவைத் தன் முதுகின் மேலிருந்து கீழே தள்ளிவிட்டிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை யூகித்துப் பாருங்கள்! அக்கழுதைக்கு முன்பாகத் தங்கள் வஸ்திரங்களையும் மரக்கிளைகளையும் பரப்பிய அதே ஜனங்கள், அதைக் கல்லெறிந்து கொன்றிருப்பார்கள்!

அருமையான தேவபிள்ளையே, கர்த்தராகிய இயேசு உன் மேல் அமர்ந்திருப்பதினால் மட்டுமே இப்போது நீ சகல விதமான பூமிக்குரிய ஆசீர்வாதங்களாலும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களாலும் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறாய். நீ கர்த்தராகிய இயேசுவை மறந்தால், எல்லாம் மாறிப் போகும். ஒரு நாள் நீ கட்டப்பட்டிருந்தாய் என்பதையும், ஒரு நாள் நீ பிரயோஜனமற்றவனாய் இருந்தாய் என்பதையும், ஒரு நாள் நீ கட்டுக் கடங்காதவனாய் இருந்தாய் என்பதையும், ஒரு நாள் நீ நம்பிக்கையற்ற வனாய், மோசமானவனாய், ஒருவராலும் நேசிக்கப்படக்கூடாதவனாய் இருந்தாய் என்பதையும் ஒருபோதும் மறந்துவிடாதே. நீ இப்போது காணும் எல்லா ஆசீர்வாதங்களும், கடந்த நாட்களில் உனக்கு உண்டா யிருந்த பாக்கியங்களும், இனி நீ அனுபவிக்கப்போகும் ஆசீர்வாதங் களும் - இவை அனைத்தும் கர்த்தராகிய இயேசுவினால் மட்டுமே உனக்குச் சொந்தமாகின்றன. உன் வாழ்வின் எல்லா மகிமையையும் கர்த்தராகிய இயேசுவே எடுத்துக்கொள்ளட்டும்.

கர்த்தராகிய இயேசு இறுதியாக அந்தக் கழுதையைத் தேவனுடைய பரிசுத்த நகரமாகிய எருசலேமுக்கு நடத்திச்சென்றார். தான் எருசலேமுக்குச் செல்வதை அந்த ஏழைக் கழுதை ஒருபோதும் எதிர்பார்த்திருந்திராது. அன்பான தேவபிள்ளையே, கர்த்தராகிய இயேசு நம் வாழ்க்கைக்குள் வந்த பின், அவர் நம்மைப் பாதி வழியில் விட்டுவிட்டுப் போகமாட்டார். அவர் நம்மைப் புதிய எருசலேமுக்கும் சீயோனுக்கும் கொண்டுசெல்ல விரும்புகிறார். "*நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை*" என்று அவர் வாக்குப்பண்ணியிருக்கிறாரே.

'ஆண்டவராகிய இயேசுவே, நீர் என் மேல் அமரும்படியாக என்னைத் தெரிந்தெடுப்பதற்கும், என்னைத் தேவனுடைய பரிசுத்த நகரத்திற்குக் கொண்டுசெல்வதற்கும் என்னில் என்ன நன்மையைக் கண்டீர்?' என்று அந்தக் கழுதை கேட்டிருக்கலாம். தேவபிள்ளையே, புதிய எருசலேமுக்குப் போக நீ எவ்விதத்திலும் பாத்திரனல்ல. கழுதையை நேசித்த ஆண்டவராகிய இயேசு, உன்னை மிகவும் அதிகமாய் நேசிக் கிறார். அந்தக் கழுதையைப் பூமிக்குரிய தேவனுடைய நகரத்திற்குக்

கொண்டுசென்ற அதே ஆண்டவராகிய இயேசு, உன்னையும் தம் இரக்கத்தினால் பரலோகத்திலுள்ள புதிய எருசலேமுக்கும் சீயோனுக்கும் நிச்சயமாகக் கொண்டுசெல்வார்.

டிசம்பர் 18

பறப்பதற்கென்றே பிறந்தவர்கள்

"இதோ, நானும், கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம்"
(ஏசாயா 8 : 18).

ஒரு கழுகின் குஞ்சு, தான் ஒரு நாள் நிச்சயமாய்த் தன் தாயைப் போல பறந்து செல்லும் என்பதையும், அது மண்ணில் ஊர்ந்தோ, தரையில் நடந்தோ செல்வதில்லை என்பதையும் அறிந்திருக்கிறது. நாம் நம்முடைய தேவனால் பிறப்பிக்கப்பட்டவர்கள். நம் ஆண்டவராகிய இயேசுவின் நாமம் "அதிசயமானவர்" என்பதாகும். அவருடைய பிள்ளைகளும் அவரைப் போலவே அதிசயமானவர்கள். ஆகையினாலேயே வேதவசனம், "*இதோ, நானும், கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் ... இஸ்ரவேலில் அடை யாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம்*" என்று கூறுகிறது (ஏசாயா 8 : 18). நம் அற்புதமான இயேசு நம் வாழ்க்கையை அற்புதமாக்குகிறார்.

இந்த அற்புதமான இயேசு உன் வாழ்க்கைக்குள் பிரவேசிப்பாராக. அவர் உன் வாழ்க்கையை அற்புதமானதாக்க விரும்புகிறார். உன் வாழ்க்கையில் அவர் அதிசயங்களைச் செய்ய விரும்புகிறார். அவர் கசப்பை இனிமையாக்குவார்; தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றுவார்; இருளை வெளிச்சமாக்குவார். அவர் ஒன்றுமில்லாமையிலிருந்து அனைத் தையும் சிருஷ்டிப்பார். உன் எண்ணங்கள், உன் வார்த்தைகள், உன் சுபாவம், உன் சமாதானம், உன் சந்தோஷம் ஆகிய அனைத்தும் அதிசய மானவையாக மாறும். கர்த்தராகிய இயேசுவோடு சம்பந்தப்பட்ட ஒவ் வொன்றும் அதிசயமானது; உன்னுடன் சம்பந்தப்பட்ட அனைத்தையுங் கூட அவர் அதிசயமானவையாக மாற்றுவார். கர்த்தராகிய இயேசுவோடு சேர்ந்து வாழும் இவ்வாழ்க்கை எல்லாவற்றையும் காட்டிலும் மிகவும் அற்புதமானதும் பரவசமளிப்பதுமாகும்.

நம் ஆண்டவராகிய இயேசு வெகு சீக்கிரத்தில் மிகவும் அதிசயமான ஒன்றைச் செய்யப்போகிறார். மனிதன் சிருஷ்டிக்கப்பட்ட நாள் முதல் நடப்பிக்கப்படாத ஒன்று - ஒருபோதும் செய்யப்படக்கூடாத

மிகப் பெரிய அற்புதம் - ஒருவேளை இன்றே கூட செய்யப்படக் கூடும். ஒரு அற்புதமான நாளில், கர்த்தராகிய இயேசு தம்முடைய அதிசயமான தூதர்களுடனும், அதிசயமான பரிசுத்தவான்களுடனும், அதிசயமான விதத்தில் வருவார். அப்போது நம்முடைய இந்தச் சரீரம் அதிசயமான விதத்தில் மாற்றப்படும். "*ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்*" (I கொரி. 15 : 51). '*பின்பு நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவோம்*' (I தெச. 4 : 17). கர்த்தராகிய இயேசுவின் இரகசிய வருகையில் சபை எடுத்துக்கொள்ளப்படும் இந்த நிகழ்ச்சியே, அதிசயங் களிலெல்லாம் மிகப் பெரிய அதிசயமாக இருக்கப்போகிறது!

தேவபிள்ளையே, நாம் மரிப்பதற்காகப் பிறந்தவர்களல்ல; நாம் பறப்பதற்காகப் பிறந்திருக்கிறோம். நம் ஆண்டவராகிய இயேசு வரும் போது நமது பாதங்கள் தரையில் இருக்கமாட்டா. கர்த்தரைச் சந்திக்கும்படி நாம் அற்புதமான விதத்தில் பறந்துபோவோம். அதற்கு நீ ஆயத்தமா?

டிசம்பர் 19

கிருபையைத் தேடிக்கொள்

"***நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது***"
(ஆதி. 6 : 8).

தேவனுடைய வசனத்தில் இங்கு தான் 'கிருபை' என்ற பதம் முதலாவது குறிப்பிடப்பட்டுள்ளது. உலகமானது அடியோடு சீர்கெட்டுப் போய், ஜனங்கள் தேவனின் இருதயத்தைத் துக்கப்படுத்திக்கொண்டிருந்த காலகட்டமே இந்தச் சந்தர்ப்பம் ஆகும். எங்கும் இருளும் பாவமும் நிறைந்து காணப்படும் நேரத்தில், தம்முடைய ஜனங்கள் பாதுகாக்கப்படும் படியாகத் தேவன் அவர்கள் மீது தம்முடைய கிருபையைப் பொழிந்தருளு கிறார்.

நோவாவுக்குக் கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது. கர்த்தருடைய கண்களை மட்டும் நோக்கிப்பார்ப்பதே கிருபையைப் பெற்றுக்கொள்வதற்கான இரகசியம் ஆகும். நோவா வேறு எங்கேயாவது தன் கண்களைத் திருப்பியிருந்தால், கிருபைக்குப் பதிலாக, அவமானமே அவனுக்கு உண்டாயிருந்திருக்கும். நாம் கர்த்தரை நோக்கிப்பார்ப்பதற்குப் பதிலாக மனிதரை நோக்கிப்பார்ப்பதன் காரணமாகவே, அடிக்கடி தேவனுடைய கிருபையை இழந்துபோகிறோம் அல்லது தவறவிடுகிறோம்.

நோவா கிருபையைத் தேடியபடியால் அதைக் 'கண்டடைந்தான்' (ஆதி. 6 : 8 -Eng.). அவன் கிருபையைத் தேடியிருந்திராவிடில், ஒருபோதும் அதை அவன் கண்டடைந்திருக்க மாட்டான். அவனைக் கிருபையைத் தேடும்படி செய்தது யாது? அது அவனைச் சூழ்ந்திருந்த அக்கிரமமே ஆகும். "*பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று*" (ரோமர் 5 : 20). எனவே தேவபிள்ளையே, நீ தீங்கினால் சூழப்பட்டிருக்கும் போதும், சோதனையான சூழ்நிலைகளிலும், கிருபைக்காகக் கர்த்தருடைய கண்களை நோக்கிப்பார்க்கத் தவறாதே.

பழைய ஏற்பாட்டில், நோவாவுக்குள் இருந்த தேவகிருபை, அவனைப் பூரணனும் (ஆதி.6 : 9 -Eng.) நீதிமானுமாக்கிற்று. அவ்வாறாயின், இந்தக் கிருபையின் காலத்தில், தேவகிருபையானது நம்மைப் பூரணப் படுத்தி நீதிமான்களாக்குவது எவ்வளவு அதிக நிச்சயம்! '*கிருபையின் பரிபூரணத்தைப் பெறுகிறவர்கள், இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே*' (ரோமர் 5 : 17).

டிசம்பர் 20

பரிந்துபேசுபவர்கள் எங்கே?

'***என் தாசனாகிய நீதிபரர் தம்மைப்பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்து கொள்வார். அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக் காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டார்***' (ஏசாயா 53 : 11, 12).

"*என் தாசனாகிய நீதிபரர் தம்மைப்பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்*". இந்த அறிவு உண்மையில் இணையற்றதாகும். இவ்வுலகத்தின் அறிவானது, ஒரு மனிதனைத் தன்னைத்தான் நீதிமானாக்கி, மற்றவர்கள் மீது எல்லாக் குற்றத்தையும் சுமத்திவிடச்செய்யும் இயல் புடையது. கர்த்தராகிய இயேசு பரிசேயரிடம், "*நீங்கள் மனுஷர்முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள்*" (லூக்கா 16 : 15) என்று கூறினார். தெய்வீக அறிவானது இதற்கு எதிர்மாறாகச் செயல்படுகிறது. இது ஒருவன் தன் மீதே எல்லாக் குற்றங்களையும் ஏற்றுக்கொண்டு, மற்றவர்களை நீதிமான்களாக்க அவனுக்கு உதவிசெய்கிறது. நமக்கு இந்தத் தெய்வீக அறிவு உண்டா?

ஜெபத்தில் பிரசவ வேதனைப்படுவதற்கு அல்லது பரிந்துபேசு வதற்கு இந்த இணையற்ற அறிவு ஏன் அவசியமாகிறது? உண்மையான

பரிந்துரையாளர்கள் மற்றவர்களின் அக்கிரமங்களைச் சுமக்க வேண்டியதா யிருப்பதினாலேயே! "*அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்து கொள்வார்*". ஒருவன் தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்திருந்தால், அவனுக்காக வேண்டிக்கொள்பவன், தானே அந்தப் பாவத்தைச் செய்தது போல தேவனிடம் வேண்டிக்கொள்கிறான். எனவேதான், கிறிஸ்து '*அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டார்*' என்று நாம் வாசிக்கிறோம்.

மேலும், கிறிஸ்து '*அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார்*' என்றுங்கூட நாம் வாசிக்கிறோம் அதாவது அவர் அக்கிரமக்காரருடன் தம்மை ஒன்றாக்கிக்கொண்டார். வியாதியின் அகோரத்தினால் மிக அதிக மாக வேதனையை அனுபவித்துக்கொண்டிருக்கும் ஒருவருக்காக நாம் ஜெபிக்கும்போது, நாமே நம்முடைய சரீரத்தில் அக்கொடிய வேதனையை அனுபவித்துக்கொண்டிருப்பது போல் நினைத்து ஜெபிக்க வேண்டும். மரணத் தருவாயில் இருக்கும் ஒருவருக்காக நாம் ஜெபிக்கும்போது, நம்மை நாமே அவருடைய இடத்தில் வைத்து ஜெபிக்க வேண்டும். '*அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றினார்*'. நம்முடைய ஆத்து மாக்கள், இரண்டாம் மரணத்தைச் சந்திக்கும்படி நரகத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தபடியால், கர்த்தராகிய இயேசு மிகுந்த வியாகுலத் துடன் நமக்காக வேண்டுதல் செய்தார்.

கர்த்தராகிய இயேசுவைப் போல மற்றவர்களுக்காக ஜெபத்தில் பிரசவவேதனைப்பட்டு பரிந்துபேசி *வேண்டிக்கொள்பவர்கள் எங்கே?*

டிசம்பர் 21

கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தின் மூலம் ஜெயஜீவியம்

"***ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்***" (வெளி. 12 : 11).

கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தின் மூலம் நாம் பெற்றுக் கொள்ளும் ஓர் ஆசீர்வாதம் ஜெயஜீவியம் ஆகும். பாவம், சாத்தான், வியாதி (பரம்பரையாக வரும் வியாதிகள், சாபக் கட்டுகள், பில்லிசூனியம் அல்லது மந்திரவாதம், குழந்தைப் பருவ வியாதிகள் முதலியன), பயங்கள் (மரணம், வியாதி, எதிர்காலம் போன்றவற்றைக் குறித்த பயங்கள்) ஆகிய வற்றை மேற்கொள்ளக்கூடிய ஜெயஜீவியத்தைக் கர்த்தராகிய இயேசு

கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் நாம் பெற்றுக்கொள்கிறோம். சுருங்கக் கூறின், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தமானது, பிசாசு, உலகம், பாவம் இவற்றால் வரும் எதையும் நம்மை மேற்கொள்ளச் செய்யும் ஒப்பற்ற வல்லமையை உடையதாயிருக்கிறது.

அது 'சிங்கத்தின் இரத்தம்' என்று அல்ல, 'ஆட்டுக்குட்டியின் இரத்தம்' என்றே அழைக்கப்படுகிறது. வேறு வார்த்தைகளில் கூறின், நாம் கிறிஸ்துவின் இரத்தத்தினால் தொடர்ந்து கழுவப்பட்டுவரும்போது, படிப் படியாக, சாந்தமும் மனத்தாழ்மையுமுள்ள ஆட்டுக்குட்டியாகவே மாறிவிடு கிறோம். "*இதோ, சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடேகூட ... இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேரையும் நிற்கக் கண்டேன்*" (வெளி. 14 : 1). ஆட்டுக்குட்டியானவருடன் நிற்பவர்கள், சுபாவத்தில் ஆட்டுக்குட்டிகளாகவே காணப்பட வேண்டும்.

எந்த இரகசிய பாவத்தையும் மறைத்து வைக்காமல், அனைத்தை யும் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து, அவற்றிற்காக மனஸ்தாபப்பட்டு, அவற்றை அறிக்கைசெய்து, கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தால் முற்றிலும் கழுவப்பட கர்த்தர் தாமே நமக்கு உதவி புரிவாராக. அப்போது நாம் அனைத்தையும் ஜெயித்து, அவருடைய சகல ஆசீர்வாதங்களையும் இப்போதும் நித்தியம் முழுவதிலும் இன்பமாய் அனுபவிக்கலாம். "*ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்*".

டிசம்பர் 22

உன் ஈகை எப்படியுள்ளது?

"***காணிக்கைப் பெட்டியில் பணம் போட்ட மற்றெல்லாரைப் பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்; அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத் திலிருந்தெடுத்துப்போட்டார்கள்; இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் என்றார்***"
(மாற்கு 12 : 43, 44).

தேவபக்தியுள்ள இந்த விதவையின் ஆழ்ந்த அர்ப்பணிப்பைக் காண்பது நமக்கு ஆச்சரியத்தை அளிக்கிறதல்லவா? காணிக்கைப் பணத் தின் பெரும்பகுதியைக்கொண்டு ஆசாரியர்கள் என்ன செய்துகொண் டிருந்தார்கள் என்று இந்த விதவை அறிந்தவளாயிருந்திருக்கக் கூடும். அவர்கள் காணிக்கைப் பணத்தை ஆலயத்தை அழகுபடுத்துவதற்கான விலையுயர்ந்த அழகிய கற்களுக்காகவும், ஆலய அலங்கரிப்பை

அதிகரிப்பதிலும் வீணாகச் செலவழித்தார்கள் என்பது வெளிப்படை (லூக்கா 21 : 5). அவள் ஒரு சாதாரண ஸ்திரீயாக இருந்திருந்தால், 'காணிக்கைப் பணத்தை எவ்வளவு தவறாகச் செலவழிக்கிறார்கள் என்பதை நான் கண்டும் அறிந்துமிருக்கிறேன். ஆகவே, எனக்கு உள்ளதெல்லாவற்றையும் நான் ஆலயத்திற்குக் கொடுப்பதில் பயன் என்ன?' என்று சிந்தித்திருப்பாள்.

இந்த விதவையின் காணிக்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்வது யாது? முதலாவது அவள் தான் கொடுப்பது தேவனுக்கே அன்றி, மனிதருக்கு அல்ல என்று விசுவாசித்தாள். மேலும் அவள், தான் தன்னுடைய மிகச் சிறந்ததைக் கொடுக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்ற வெளிப்படுத்தலையும் பெற்றிருந்தாள் என்பது வெளிப்படை. தேவனுடைய அன்பு, அவருடைய தூய அன்பு நம் ஆத்துமாவை நிரப்பும்போது, தியாகம் செய்து, கொடுப்பது ஒரு மகிழ்ச்சியான காரியமாக இருக்குமே ஒழிய, அது பிரமாணத்தினிமித்தமோ அல்லது கட்டாயத்தின்பேரிலோ செய்யப்படுவதாக இராது. தேவன் பேரிலுள்ள நம் அன்பு வளரும்போது, நம்மைச் சுற்றிலும் என்ன நிகழ்ந்தாலும், நமக்கு உள்ள அனைத்தையும் அவருக்குக் கொடுக்க நாம் மென்மேலும் மனமுவந்திருப்போம்.

இந்த ஏழை விதவை தனக்கு உண்டாயிருந்த எல்லாவற்றையும் தேவனுக்குக் காணிக்கையாகப் போட்டுவிட்ட அந்த நேரத்தில், அதற்கான பூரண மாதிரியான கர்த்தராகிய இயேசுவைப் பின்பற்றியே அவள் அப்படிச் செய்தாள் என்று கூறுவதற்கு, அவர் இன்னும் மரித்திருக்கவில்லை. இந்த உண்மையைக் கருத்திற்கொண்டு பார்த்தால், பாவிகளாகிய நமக்காகத் தம்முடைய கடைசிச் சொட்டு இரத்தத்தையும் சிந்திய நம் கர்த்தருக்காக நாம் கொடுப்பதற்கு எவ்வளவு அதிகமாய் மனமுவந்தவர்களாகவும், மகிழ்ச்சியுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்!

அன்பான தேவபிள்ளையே, நீ தேவனுக்குக் கொடுக்க வேண்டியதாயிருக்கும் ஏதேனும் ஒன்றை, சூழ்நிலைகளைக் கண்டு கொடுக்காமல் நிறுத்தி வைத்திருக்கிறாயா?

டிசம்பர் 23

ஒரு நாள் வருகிறது!

"***அவனுக்கு அறுநூற்றொரு வயதாகும் வருஷத்தில், முதல் மாதம் முதல் தேதியிலே பூமியின்மேல் இருந்த ஜலம் வற்றிப்போயிற்று; நோவா பேழையின் மேல்தட்டை எடுத்துப்பார்த்தான்; பூமியின்மேல் ஜலம் இல்லாதிருந்தது***" (ஆதி. 8 : 13).

தண்ணீர் தொடர்ச்சியாகப் பிரவாகித்து, வெள்ளம் உயர்ந்துகொண்டிருந்த ஒரு காலகட்டம் இருந்தது. அது போலவே தண்ணீர் படிப்படியாகக் குறைய ஆரம்பித்த ஒரு காலமும் இருந்தது. நம் கிறிஸ்தவ ஜீவியத்திலுங்கூட சோதனைகள் பெருகும் காலம் ஒன்று உண்டு; அவை முடிந்துபோனது போல தோன்றும் காலமும் ஒன்று உண்டு. நம்முடைய பாடுகள் காலவரம்பின்றி, நியாயமின்றி நீடித்துக்கொண்டிராது என்று அறிந்து, நாம் திடன்கொள்ளுவோமாக.

ஒரு நல்ல காலைப்பொழுதில் தண்ணீரெல்லாம் வற்றிப்போய், ஒரு 'புதிய பூமி' கண்ணுக்குப் புலப்படுவதை நோவா கண்டபொழுது அவனுக்கு அது மெய்யாகவே சந்தோஷமும் வியப்புமாய் இருந்தது. மறக்க முடியாத அந்தப் புதிய வருடப்பிறப்பின் தினத்தன்று, முதல் மாதம் முதல் நாளில் இது நடைபெற்றது. ஆம்! நம் தண்ணீரெல்லாம் அல்லது கண்ணீரெல்லாம் துடைக்கப்பட்டு, புதிய பூமி, புதிய வானம், புதிய எருசலேம் ஆகியவற்றுடன் கூடிய ஒரு புதிய யுகம் வெகு சீக்கிரத்தில் துவங்கப் போகிறது.

அந்த நாளில்தான் நோவா "*பேழையின் மேல்தட்டை எடுத்துப் பார்த்தான்*". பேழையின் மேல்தட்டு அதாவது கிறிஸ்துவின் முகத்தை மறைத்திருந்த அந்தத் திரை நீக்கப்பட்டு, நாம் நம்முடைய கர்த்தரை முக முகமாய்த் தரிசிக்கும் அந்த நாள் எவ்வளவு மகிழ்ச்சிகரமான நாள்! '*அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்போம்*' (I யோவான் 3 : 2).

தேவனுடைய பிள்ளையே, களிகூரு! நம்பிக்கையில் களிகூரு! நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மைபாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொள். 'அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது, உங்களுக்குப் புகழ்ச்சியும், கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும். அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும், அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூருகிறீர்கள்' (I பேதுரு 1 : 7, 8).

'அந்த நாள் பாக்கிய நாள்
நான் என் இயேசுவைப் பார்க்கும் நாள்!
கிருபையினால் என்னை மீட்டவரின்
திருமுகம் நான் தரிசிக்கும் நாள்!
அவர் என்னைக் கரம் பிடித்து நடத்தி,
வாக்குத்தத்தத் தேசத்திற்குள் நடத்திச் செல்லும்
அந்நாள் எத்தகையதொரு மகிமையின் நாள்!'.

டிசம்பர் 24

'கிருபை பெற்றவள்'

"***அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து: கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான்***" (லூக்கா 1 : 28).

பாலகனாகிய இயேசு மரியாளுக்குள் வளர்ந்துவந்தார். அவள் மூலம் அவர் வெளிப்படுத்தப்பட்டபோது அவள் எவ்வளவு ஆசீர் வதிக்கப்பட்டவளானாள்! "*இதோ, இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்*" (லூக்கா 1 : 48). நீ கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை உலகத்திற்கு வெளிப்படுத்தும் அந்த நாள் முதல், சந்ததிகள் உன்னை ஆசீர்வதிக்கத் துவங்குவார்கள்.

கர்த்தராகிய இயேசு வெளிப்படுத்தப்பட்டபோது, ஏரோதும் அவ னுடைய ஜனங்களும் வெகுவாய்க் கலங்கினபோதிலும், பரம சேனையின் திரள் மிகவும் களிகூர்ந்து மகிழ்ந்தது. நம் மூலமாய்க் கிறிஸ்து வெளிப் படுத்தப்படும்போது, பரிசுத்தவான்கள் மத்தியில் மிகுந்த களிகூருதல் உண்டாகும்; ஆனால் பிசாசும் அவனுடைய தூதர்களுமோ நடுங்குவார்கள்.

குழந்தையாயிருந்த இயேசுவைப் பார்க்க மேய்ப்பர்கள் வந்தார்கள். நம் வாழ்க்கையின் மூலம் கர்த்தராகிய இயேசுவை நாம் வெளிப்படுத்தும் போது, அநேக 'மேய்ப்பர்கள்' நம்மிடம் வருவார்கள் - அநேக தேவ ஊழியர்கள் எழும்புவார்கள். ஆத்துமாக்களை இரட்சிப்புக்கு வழிநடத்தி, அவர்களைக் கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாகப் போஷித்து வளர்க்கும்படி அநேகர் தேவனுக்கு ஊழியம் செய்ய அடியெடுத்து வைக்கும்படி ஏவி எழுப்பப்படுவார்கள்.

கிறிஸ்து மாம்சத்தில் வெளிப்பட்டபோது, அநேக ஞானிகள் தூரத்திலிருந்து வந்தார்கள். அப்படியே நாம் கிறிஸ்துவை நம் ஜீவியத்தில் வெளிப்படுத்தும்போது விலையேறப்பெற்ற ஆத்துமாக்கள் வெகுதூரத் திலுள்ள இடங்களிலுமிருந்து நம்மிடம் வந்து சேருவார்கள். அவர்கள் வெறுங்கையோடு வரமாட்டார்கள். அவர்கள் தங்கள் பொக்கிஷங்களைத் திறப்பார்கள். இந்த ஞானிகள் அவ்வளவு நீண்ட பிரயாணம் செய்து வந்த பின்னர், யோசேப்பையும் மரியாளையும் மட்டும் பார்த்திருந்தால், அவர்கள் தங்கள் பொக்கிஷங்களைத் திறந்திருக்க மாட்டார்கள். நாம் உலகத்திற்குக் கர்த்தராகிய இயேசுவைக் காண்பிக்கும்போது எவ்வளவு நிறைவாக ஆசீர்வதிக்கப்படுவோம்!

ஜனங்கள் நம்மைப் பார்ப்பதிலோ, நம்முடைய மேன்மையைப் பற்றி அறிந்துகொள்வதிலோ ஆர்வமுள்ளவர்களாயிருப்பதில்லை. அவர் கள் கர்த்தராகிய இயேசுவையே நம்மில் பார்க்க விரும்புகிறார்கள். "*ஐயா, இயேசுவைக் காண விரும்புகிறோம்*" (யோவான் 12 : 21) - இதுதான் எல்லா இடங்களிலும் ஜனங்களின் கதறுதலாயிருக்கிறது. ஆனால் நாம் அவர் களுக்கு உதவிசெய்யக்கூடியவர்களாயிருக்கிறோமா? எத்தனை முறை நாம் நம்முடைய சுயநலம், சண்டையிடுதல், முறையிடுதல் போன்றவற்றை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துகிறோம்! சில சந்தர்ப்பங்களில், கர்த்தராகிய இயேசுவை மற்றவர்களுக்குக் காண்பிப்பதற்குப் பதிலாக, நாம் எவ்வளவு திறமையுள்ளவர்கள், எவ்வளவு பெரியவர்கள் அல்லது எவ்வளவு நன்றா கக் கற்றுத் தேர்ந்தவர்கள் என்பதை மற்றவர்களுக்குக் காண்பிக்கிறோம்!

டிசம்பர் 25

ஞானியாக இருப்பதின் இரகசியம்

"***அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்***" (மத். 2 : 11).

கர்த்தராகிய இயேசு பிறந்தபோது, முதலாவது அவரைப் பார்க்கும் படி வந்தவர்கள் மேய்ப்பர்களே. தேவதூதன் ஒருவன் அவர்களுக்குத் தரிசனமாகி, மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியைக் கொடுத் தான். தேவனுடைய மகிமை அவர்களைச் சூழ்ந்தது. பரம சேனையின் திரள் தேவனைத் துதிப்பதை அவர்கள் கண்டார்கள். அந்த மேய்ப்பர்கள் இயேசுவைப் பார்க்கத் துரிதமாக வந்தார்கள். ஆனால் சாஸ்திரிகளைப் (ஞானிகள் -Eng.) போல அவர்கள் இயேசுவுக்குக் காணிக்கையாக ஏதாகிலும் கொடுத்தனர் என்றோ, அவருக்கு முன்பாகப் பணிந்து கொண்டனர் என்றோ, அவரைத் தொழுதுகொண்டனர் என்றோ வேதா கமம் கூறுவதில்லை.

ஞானிகள் இயேசுவைப் பார்க்கும்படி தூர தேசத்திலிருந்து வந்தார்கள். அது தானே ஒரு தியாகமாயிருந்தது. அத்துடன் அவர் கள் குழந்தையாகிய இயேசுவைப் பார்த்தபோது, "*சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து,*

பொன்னையும் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்" (மத். 2 : 11).

மேய்ப்பர்கள் இயேசுவுக்கு ஒன்றும் கொடுக்கவில்லை. அவர்கள் 'ஞானிகள்' என்று அழைக்கப்படவும் இல்லை. ஆனால் அவரைப் பார்க்கும்படி வந்து, அவரைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங் களைக் காணிக்கையாக அவருக்குக் கொடுத்தவர்களோ 'ஞானிகள்' என்று அழைக்கப்படுகிறார்கள். இன்றைக்குங்கூட அந்த மேய்ப்பர்களைப் போல அநேகர் இயேசுவிடம் ஏதேனும் ஒரு ஆசீர்வாதம் பெறும்படி வருகிறார் கள். அவர்கள் 'ஞானிகள்' என்று அழைக்கப்பட முடியாது. ஆனால் தங்கள் பொக்கிஷங்களை இயேசுவுக்கு அர்ப்பணித்து, அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் உண்மையாகவே 'ஞானிகளாயிருக்கிறார்கள்'. இயேசு வுக்குக் காணிக்கைகளைக் கொடுத்தவர்கள் 'ஞானிகள்' என்று அழைக்கப் பட்டிருக்க, ஐசுவரியத்தைத் தனக்கென்றே வைத்துக்கொண்ட ஐசுவரிய வான் 'மதிகேடன்' என்று அழைக்கப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்! (லூக்கா 12 : 20).

ஞானிகள் பொன், தூபவர்க்கம், வெள்ளைப்போளம் இவற்றைப் பாலகனாகிய இயேசுவுக்குக் காணிக்கையாக அளித்தது, நாம் நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகியவற்றைக் கர்த்தராகிய இயேசுவுக்கு அர்ப் பணிப்பதைக் குறிக்கிறது. மேலும் பொன், தூபவர்க்கம், வெள்ளைப்போளம் ஆகியவை, நாம் இயேசுகிறிஸ்துவை ராஜாவாகவும் (பொன்), ஆசாரியராக வும் (தூபவர்க்கம்), தீர்க்கதரிசியாகவும் (வெள்ளைப்போளம்) அங்கீகரிப்ப தையும் குறிக்கிறது. ஞானிகள் அவரைப் பணிந்துகொண்டு இக்காணிக்கை களை அவர் முன் வைத்தபின்னர், ஏரோது அவர்களுக்கு ஏற்கனவே அதிகாரத்துடன் கட்டளையிட்டிருந்தபோதிலும், அவனைப் போய்ப் பார்க்கவோ, அவனுக்குக் கீழ்ப்படியவோ, அவர்களுக்கு அவசியமிருக்க வில்லை (மத். 2 : 8, 12). நாம் நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தை ஆண்டவராகிய இயேசுவுக்குக் காணிக்கையாக்கி, அவரைப் பணிந்து கொண்டு, அவரை ராஜாவாக, ஆசாரியராக, தீர்க்கதரிசியாக அங்கீகரித்து, அவரையே நம்முடைய எல்லாவற்றுக்கும் எல்லாமாக ஏற்றுக்கொண்ட பின்னர், சாத்தானுக்கு நம் மீது எந்த அதிகாரமும் இல்லை - அவனுடைய வல்லமைக்கு நீங்கலாக நாம் விடுதலையுள்ளவர்களாயிருக்கிறோம்.

தங்களுக்கு உண்டானவை எல்லாவற்றையும் கர்த்தராகிய இயேசு வுக்கு அர்ப்பணித்து, அவரைப் பணிந்துகொள்ளுபவர்கள் இன்றைக்கும் 'ஞானிகளே'. அன்பான வாசகரே, நீர் ஒரு ஞானியா அல்லது ஒரு மதியீனனா?

டிசம்பர் 26

மீண்டும் அதைச் சொந்தமாக்கு!

'தேவனுடைய மனுஷன் அது எங்கே விழுந்தது என்று கேட்டான்; அவன் அந்த இடத்தைக் காண்பித்தான்' (II இராஜா. 6 : 6).

தீர்க்கதரிசிகளின் புத்திரர்கள் மரத்தை வெட்டும்போது, ஒருவனின் கோடரி அதன் கைப்பிடியினின்று கழன்று தண்ணீரில் விழுந்தது.

கோடரி நம் ஆவிக்குரிய அனுபவங்களையும், ஆசீர்வாதங் களையும் குறிக்கிறது. உன் 'கோடரியை' நீ இழந்துபோயிருப்பாயாகில், அதை நீ எந்த இடத்தில் தவறவிட்டாய் என்று கண்டுபிடிக்க வேண்டியது முக்கியமானதாகும். உன் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை நீ இழந்துபோவ தற்கு வேறு யாரும் பொறுப்பல்ல. '*ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு. ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பு*' (வெளி. 2 : 4, 5). பிசாசுக்கு எங்கு இடம் கொடுத்தோம் என்று நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்பதற்கு நாம் நேரம் எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். அவன் எந்த வாசல் வழியாக உள்ளே நுழைந்தான் என்று நாம் கண்டறிய வேண்டும். இதைக் குறித்து நீ கவலையற்றவனாயிருந்து, உன் ஆவிக்குரிய ஜீவியம் குன்றியிருப்பதற்குச் சூழ்நிலைகளும் மற்றவர் களுமே காரணம் என்று எண்ணுவாயாகில், நீ சகாயம் பெற்றுக் கொள்ளவோ, மீண்டும் முந்தின சீருக்குக் கொண்டுவரப்படவோ முடியாது.

ஒருவன் தன் கோடரியை இழந்துபோகும்போது, உடன்தானே, மரம் வெட்டும் வேலை நின்றுவிடும்; அதன் விளைவாக வீடு கட்டும் வேலை யும் நின்றுபோகும். நீ ஆதி அன்பை நஷ்டப்படுத்திய மாத்திரத்தில் உன் ஆவிக்குரிய வீடு அல்லது ஜீவியம் கட்டியெழுப்பப்படும் வேலை அத்துடன் நின்றுபோகும். "நீங்கள் ... மரங்களை வெட்டிக்கொண்டு வந்து, ஆலயத்தைக் கட்டுங்கள்; அதின் பேரில் நான் பிரியமாயிருப்பேன்; அதினால் என் மகிமை விளங்கும்" (ஆகாய் 1 : 8) என்று கர்த்தர் உரைத்திருக்கிறார். எனவே தேவனுடைய பிள்ளையே, நீ உன் நிலையைக் கர்த்தரிடம் அறிக்கையிடவோ, நீ இன்ன இடத்தில் விழுந்தாய் என்பதை அவருக்குக் காண்பிக்கவோ காலம் தாழ்த்தாதே.

கர்த்தர் தமது சபையாகிய தோட்டத்தில் உலாவி, '*ஆதாமே, நீ எங்கேயிருக்கிறாய்?*' என்று அழைக்கிறார். ஆதாமைப் போல அவரிட

மிருந்து உன்னை ஒளித்துக்கொள்ள நீ முயற்சி செய்யாதே. நம்முடைய தேவன் இரக்கமும் கிருபையுமுள்ள தேவனாயிருக்கிறார். அவர் உனக்குத் துணை செய்யவும், நீ இழந்துபோன எல்லா ஆவிக்குரிய அனுபவங்களையும் உனக்குத் திரும்ப அளிக்கவும் விரும்புகிறார். அவர் உன்னைத் தம்முடன் நெருங்கிய தொடர்புடையவனாயிருக்கும் நிலைக்குக் கொண்டு வர விரும்புகிறார். எனவே உன் ஜீவியத்தில் உன்னை 'விழச்' செய்த அந்தக் குறிப்பிட்ட 'காரியத்துடன்' தேவன் செயல்படுவதற்கு அவருக்கு நீ இடங்கொடு.

டிசம்பர் 27

எல்லாம் ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளது!

"***புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது***" (எபி. 10 : 7).

நாம் பிறப்பதற்கு நீண்டகாலத்திற்கு முன்பே தேவன் நம் வாழ்க்கையைக் குறித்த அனைத்தையும் முன்குறித்து, தீர்மானித்து, திட்டமிட்டு வைத்திருக்கிறார். நாம் எங்கே பிறக்க வேண்டும், எங்கே மரிக்க வேண்டும் என்பதை அவர் திட்டமிட்டிருக்கிறார். எந்தத் தேசத்தில் நாம் பிறக்க வேண்டும்? நம் பெற்றோர் யாராயிருக்க வேண்டும்? ஐசுவரியமுள்ள குடும்பத்திலா, ஏழைக் குடும்பத்திலா - எப்படிப்பட்ட குடும்பத்தில் நாம் பிறக்க வேண்டும்? எவ்வளவு காலம் இவ்வுலகத்தில் நாம் உயிர் வாழ வேண்டும்? நாம் இப்பூமியில் வசிக்கும்போது எந்தெந்த இடங்களில் வாழ வேண்டும் என்றெல்லாம் அவர் திட்டமிட்டிருக்கிறார். '*அவர்களுக்காகக் குறிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருக்க வேண்டிய குறிப்பான இடங்களையும் தீர்மானித்தார்*' (அப். 17 : 26 -NIV.).

சங்கீதம் 139 : 16 -இல் நாம் ஒரு புத்தகத்தைக் குறித்து வாசிக்கிறோம். உன்னைக் குறித்து எழுதப்பட்டுள்ள புத்தகம் ஒன்று உன் பெயருடன்கூட கர்த்தரிடத்தில் உண்டு - '*என் அவயவங்கள் அனைத்தும் உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது*'. உன் நிறம் எப்படி இருக்க வேண்டும்? நீ எவ்வளவு உயரம் வளர வேண்டும்? உனக்கு இருக்கப்போகிற கண்களின் நிறம் யாது? இவை போன்ற அனைத்தும் கர்த்தரால் ஏற்கனவே திட்டமிடப் பட்டுள்ளன. 'நான் பிறக்கும் முன்பே நீர் என்னைக் கண்டீர். என் வாழ்வின் ஒவ்வொரு நாளையும், நான் சுவாசிக்கத் துவங்குமுன்பே நீர் திட்டம் பண்ணினீர். ஒவ்வொரு நாளும் உம்முடைய புத்தகத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளது' என்று இதே வசனத்தை வேறொரு ஆங்கில மொழிபெயர்ப்பு

கூறுகிறது (Living Bible). அப்படியெனில், தேவன் நமக்காகத் திட்டமிட்டுள்ள எல்லாவற்றையும் நன்றாக அறிந்துகொள்ளுதலும், அதற்கு நம்மைச் சமர்ப்பித்தலும் எவ்வளவு முக்கியமானது!

ஆபிரகாம் தன்னைக் குறித்த தேவனுடைய திட்டத்தில் பூரணமாகப் பொருந்தினான். அதினிமித்தம் அவன் எவ்வளவு பெரிய ஆசீர்வாதமாக மாறினான்! அவன் மரித்துப் பல்லாயிரம் ஆண்டுகட்குப் பின்பும், இன்னும் ஆசீர்வாதமாகவே திகழ்கிறான். அன்பான தேவபிள்ளையே, நீ விரும்பும் இடங்களுக்கெல்லாம் ஓடாதே. உன் வாழ்க்கையைப் பற்றிய தேவனின் திட்டத்தைக் குறித்து நீ ஒருபோதும் முறுமுறுக்காதே. தேவனுடைய பூரண சித்தத்திற்கும், திட்டத்திற்கும் ஒப்புக்கொடுப்பதே சாலச் சிறந்ததாகும். மிகச் சிறந்த திட்டம் ஒன்றைத் தேவன் உனக்காக வகுத்திருக்கிறார். நாம் நம்மையும், நம்முடைய சொந்தத் திட்டங்களையும் கர்த்தருக்கு ஒப்பு வித்தால், அவர் தம்முடைய திட்டத்தின்படி நம் வாழ்க்கையில் சகலத்தை யும் மிக அழகாகச் செய்து நிறைவேற்றுவார். தேவனிடத்தில் அன்புகூருகிற வர்களுடைய வாழ்க்கையில் எதுவும் தற்செயலாய் நிகழ்வதில்லை. சகலமும் தேவனாலேயே திட்டமிடப்படுகின்றன.

'தேவனை நேசிப்பவருக்கு நடப்பதில்லை எதுவும் தானாக;
அவர்தம் அன்பின் கரமே திட்டமிடும் ஒவ்வொன்றையும் தயவாக;
அவருடைய கடிகாரத்தின்படி அதினதின் காலத்தில் நேர்த்தியாய் வடிவமைக்கப்படும்
ஒவ்வொன் றும் அவரால் திட்டமிடப்பட்டவையே - காரியங்கள் தாமாக நிகழ்வதில்லையே!'

டிசம்பர் 28

ஆம்! உன்னையும் தேவனால் மாற்றக்கூடும்

"***ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்***" (II கொரி. 3 : 18).

பல சந்தர்ப்பங்களில் கர்த்தராகிய இயேசுவைப் பார்க்கும்படி வந்தவர்களைக் கடிந்துகொள்ளுகிற விஷயத்தில் சீஷர்கள் அனைவருமே குற்றமுள்ளவர்களாயிருந்தனர். ஆனால், 'கடிந்துகொள்ளும் வேலையில்' மிக மோசமானவன் பேதுருவே. அவன் கர்த்தராகிய இயேசுவையே

கடிந்துகொண்டான்! "*பேதுரு அவரைத் தனியே அழைத்துக்கொண்டுபோய்: ... அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்கினான்*" (மத். 16 : 22).

தூங்குகிற விஷயத்திலும் பேதுரு தலைவனாயிருந்ததாகத் தெரி கிறது. மறுரூப மலையில் மோசேயும் எலியாவும் மகிமையில் தோன்றி கர்த்தராகிய இயேசுவுடன் சம்பாஷித்துக்கொண்டிருந்த மகிமையான நேரத்தில் அவருடனிருந்த மூன்று சீஷர்களும் என்ன செய்துகொண்டி ருந்தனர்? அவர்கள் நித்திரை மயக்கமாயிருந்தனர்! இந்தச் சந்தர்ப்பத்தில் பேதுருவின் பெயர் பிரத்தியேகமாகக் குறிப்பிடப்படுகிறது! (லூக்கா 9 : 32). கெத்செமனே தோட்டத்தில் கர்த்தராகிய இயேசு மிகுந்த வியாகுலம் அடைந்திருந்த அந்தக் கணங்களில் அவருடைய சீஷர்களில் ஒருவ ராலும் அவருடன் விழித்திருக்க முடியவில்லை. ஆனால் கர்த்தராகிய இயேசு குறிப்பாகப் பேதுருவை நோக்கியே, "*ஒரு மணிநேரம் நீ விழித்திருக்கக்கூடாதா?*" என்று கேட்டார்.

ஆனால் பெந்தெகொஸ்தே நாளில் சீமோன் பேதுருவை மறுரூப மாக்கப்பட்ட ஒரு மனுஷனாக நாம் காண்கிறோம். பரிசுத்த ஆவியின் வல்லமையின் மூலமாகக் கலிலேயாவைச் சேர்ந்தவனான இந்தச் சீஷனைத் தேவனுடைய கிருபையானது மிக அதிகமாய் நிறைத்ததினால், அந்த நாளிலேயே அவனுடைய பிரசங்கத்தின் மூலமாக மூவாயிரம் பேர் இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர். இந்த மூவாயிரம் பேரும் அந்நேரத்தில் உணர்ச்சிவசப்பட்டு, கர்த்தராகிய இயேசுவைத் தாங்கள் ஏற்றுக்கொண்டதாக அறிக்கைசெய்து, பின்பு கடந்து சென்றுவிட்ட வர்கள் அல்லர்; "*அவர்கள் (அனைவரும்) அப்போஸ்தலருடைய உபதேசத் திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்*" என்று நாம் வாசிக்கிறோம் (அப். 2 : 42).

அன்பான வாசகரே, உம் பரிசுத்தமாக்கப்படாத சுபாவங்களின் பளுவினால் நீர் ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டவராகவோ, நசுக்கப்பட்ட வராகவோ இருப்பதாக உணருவீராகில், இதோ, உமக்கு ஒரு வார்த்தை - பேதுருவை எது மாற்றியதோ, அது உம்மையுங்கூட இன்று மாற்றக்கூடிய தாயிருக்கிறது! ***பரிசுத்த ஆவியின் வல்லமையின் மூலம் தேவனுடைய கிருபை யானது*** உம்மையும் மாற்ற வல்லமையுள்ளதாயிருக்கிறது. கோழையா யிருந்த பேதுரு, பாடுகளைக் கண்டு பயந்த அந்தப் பேதுரு, "*அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்*" (I பேதுரு 4 : 13) என்று கூறுமளவுக்குக் கிருபையின் வல்லமையால் நிரப்பப்பட்டார். சபைச் சரித்திரமானது அவர் இறுதியாகத் தலைகீழாகச் சிலுவையில் அறையப்பட்டு, இரத்தசாட்சியாக மரித்தார் என்று கூறுகிறது.

டிசம்பர் 29

உன் 'தண்ணீர்க்குடத்தை' வைத்துவிடு!

'அப்பொழுது அந்த ஸ்திரீ, தன் குடத்தை வைத்துவிட்டு, ஊருக்குள்ளே போய், ஜனங்களிடம் பேசினாள்' (யோவான் 4 : 28).

அந்தக் கீழை நாட்டின் தாங்கொணா நண்பகல் வெயிலில், அந்தச் சமாரிய ஸ்திரீ கிணற்றில் தண்ணீர் மொண்டுகொள்ள வந்தாள். நமதாண்ட வர் அங்கு அவளைச் சந்தித்து, அவளுடைய முறைகேடான ஜீவியத்தைக் குறித்து அவளுக்கு உணர்த்தினார்; அந்தக் கிணற்றின் அருகே, ஒரு ஆழமான சுத்திகரிப்பின் வேலை, மறுரூபமாக்குதலின் வேலை அவளது ஜீவியத்தில் நடப்பிக்கப்பட்டது. 'நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றைப்' பற்றி கர்த்தராகிய இயேசு அவளிடம் பேசிய பின்னர், அவளுடைய தண்ணீர்க்குடம் அவளுக்கு அவசியமான ஒன்றாகத் தென்படவில்லை.

கர்த்தராகிய இயேசு ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளை நம் இருதயத்தில் திறந்தவுடன்தானே, நாமுங்கூட நம் 'தண்ணீர்க் குடங்களை' அல்லது 'வெடிப்புள்ள தொட்டிகளை' வீசியெறிந்துவிடலாம். "*என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள்; தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப் புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக்கொண்டார்கள்*" (எரே. 2 : 13). வெடிப்புள்ள தொட்டிகள் என்பதை, இந்த உலகத்தின் நிலையில்லாத காரியங்களை நம்புவதற்கு அல்லது அவற்றைச் சார்ந்துகொள்வதற்கு நாம் ஒப்பிடலாம். தன் புருஷன்மாரை அவ்வப்போது மாற்றிக்கொள்வது தன்னைச் சந்தோஷமுள்ளவளாக்கும் என்று கற்பனை செய்துகொண்ட இந்தச் சமாரிய ஸ்திரீயைப் போல, தேவனுடைய பிள்ளைகளாகிய நாமும் சில சமயங்களில், நம் இருதயத்தை நித்திய மகிமையின் மேல் பதிக்காமல், உலக மாயையின் மேல் பதித்துவிடுகிறோம்.

ஒருவேளை அந்த ஸ்திரீ மிக விரைவாகத் தன் ஊருக்குள் நடந்து சென்று, அங்கிருந்த ஜனங்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துச் சாட்சி கூறி, அவர்களை அவரண்டை அழைத்துவருவதற்காக அந்தத் தண்ணீர்க் குடத்தை அங்கேயே வைத்துவிட்டுப் போயிருந்திருக்கக் கூடும். தான் தண்ணீர்க் குடத்தைச் சுமந்துகொண்டு போனால் அந்த ஊருக்குள் ஓடிப்போய்விட்டுத் திரும்புவதற்கு இன்னும் அதிக கால தாமதமாகக் கூடும் என்று அவள் நினைத்திருக்கலாம். இந்தக் காலதாமதமானது ஜனங்கள் கிணற்றினண்டை மேசியாவைச் சந்திக்க வருவதற்குத்

தாமதத்தை உண்டுபண்ணிவிடக் கூடும்; அவள் தாமதித்துக்கொண்டிருந்தால், கர்த்தரும் ஒருவேளை தம் பிரயாணத்தைத் தொடர்ந்து, அவ்விடம் விட்டுப் போய்விடக் கூடும் என்றும் அவள் நினைத்திருக்கலாம். எது எப்படி இருப்பினும், இந்த ஸ்திரீயைப் பற்றிய ஒரு விஷயம் நம்மை ஊக்குவிப்பதாகவும், நம் மனதைப் பிரகாசிப்பிப்பதாகவும் இருக்கிறது. கர்த்தராகிய இயேசுவே மெய்யான மேசியா என்று அறிந்துகொண்ட மாத்திரத்தில், இனியும் அவள் நேரத்தை வீணாக்கிக்கொண்டிருக்க விரும்பவில்லை. தன்னுடைய கடந்த கால வாழ்க்கை முழுவதையும் தான் 'மாயையிலும் பாவத்திலும் பெருமையிலும்' செலவழித்துவிட்டதை உணர்ந்தவளாய் அவள், 'இனி மீந்திருக்கும் சொற்ப வாழ்நாட்காலத்தை யாவது, நித்தியமாய் விலைமதிப்புள்ள காரியங்களில் நான் முதலீடு செய்ய வேண்டும்' என்று **தீ**ர்மானித்தாள்.

டிசம்பர் 30

கிறிஸ்துவுக்காக 'நலமானவற்றை' விட்டுவிடுதல்

"***ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்***" (பிலி. 3 : 7).

தன் தேவனுக்காக நலமானவற்றை விட்டுவிட்ட முதல் மனிதன் ஆபிரகாம் ஆவான். அதினால் அவன் 'விசுவாசத்தின் தகப்பன்' என்று அழைக்கப்படுவதில் வியப்பொன்றுமில்லையே. இன்று தேவனுடைய வசனத்தின் மூலம் மகிமையான வெளிப்படுத்தல்களைப் பெற்றிருந்தும், இப்புதிய ஏற்பாட்டுக் காலத்தின் மற்ற பல ஒப்பற்ற ஆசீர்வாதங்களை உடையவர்களாயிருந்தும், அநேகர் கர்த்தருக்காக - நல்ல காரியங்களை விட்டுவிடுவது ஒருபுறம் இருக்கட்டும் - *தீமையானவற்றை* விட்டுவிடுவதையே கடினமானதாக உணருகிறார்கள்!

தேவன் ஏன் ஆபிரகாமை அவனுடைய சொந்தத் தேசம், இனம், தகப்பன் வீடு முதலியவற்றை விட்டுவிடும்படி கூறினார்? அவர் அவனுக்கு அதைவிடச் சிறந்த தேசம், வீடு முதலியவற்றைக் கொடுக்க விரும்பியதினாலேயே! *கர்த்தர் நமக்கு மேலானதொன்றைத் தரும்படி வைத்திருந்தால் ஒழிய, நமக்குள்ள ஏதாயினும் ஒன்றை விட்டுவிடும்படி கேட்கவும்மாட்டார்; நம்மிலிருந்து ஒன்றை எடுத்துக்கொள்ளவும்மாட்டார்.* '***உன்னுடைய மிகச் சிறந்த ஒன்று, தேவனுடைய மிகச் சிறிய ஒன்றுடனாகிலும் ஒப்பிடத்தக்கதல்ல***'.

ஆபிரகாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, தனக்குண்டான 'நலமான வைகளை' விட்டுவிட்டுப் போனபோது, கர்த்தர் அவனுக்குத் தம்முடைய மிகச் சிறந்ததாகிய கானானைக் கொடுத்தார். "*மலைக்கு ஓடிப்போ*" என்று கர்த்தர் லோத்துக்குக் கட்டளையிட்டபோது (ஆதி. 19 : 17), அவன் அதற்கு இசைய மறுத்து, கர்த்தருடைய மிகச் சிறந்ததை இழந்தான்; ஆனால் ஆபிரகாமோ புறப்பட்டுச் சென்று மலையின் மேல் ஏறி "*கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டான்*" (ஆதி. 12 : 8). அநேக வருடங்களுக்குப் பிறகு தேவன் ஆபிரகாமிடம் மோரியா மலையின் மேல் அவனுடைய மகனைப் பலியிடச் சொன்னபோது, தன்னுடைய மிகச் சிறந்ததை ஆண்டவருக்குக் கொடுக்கும்படி அந்த முதிர்வயதிலும் அவன் மலையின் மேல் ஏறத் தயங்கவில்லை.

தேவபிள்ளையே, கர்த்தர் உன்னிடத்திலுள்ள நலமானவற்றை விட்டுவிடும்படி உன்னிடம் கேட்பாராயின், நீ அவற்றை விட்டுப் பிரிய மனமற்றவனாயிராதே. நீ அவருக்குக் கீழ்ப்படிந்து அவற்றை விட்டு விடுவாயாகில், அவற்றைக் காட்டிலும் மேன்மையானவைகளை அவர் உனக்குத் தருவார்.

டிசம்பர் 31

வைரக்கற்களைப் பார்க்கிலும் விலையேறப்பெற்றது!

"***நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப் படுத்திக்கொள்ளுங்கள்***" (எபே. 5 : 16).

இன்று வருடத்தின் கடைசி நாளுக்கு நாம் வந்திருக்கிறோம். கடந்து போன நாட்கள் யாவும் மிக மிக விலையேறப்பெற்ற நாட்களாயிருந்தன. அன்பான தேவபிள்ளையே, கர்த்தர் உனக்குக் கொடுத்திருந்த காலம் விலையேறப்பெற்றது - அது விலையேறப்பெற்ற வைரக்கற்களைப் பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றது என்பதை நீ உணருகிறாயா?

ஒரு நாள் மாலை மயங்கும் நேரத்தில் வாலிபன் ஒருவன் ஒரு கடற்கரை ஓரமாய் நடந்து சென்றுகொண்டிருந்தான். அப்போது ஒரு சிறிய சாக்குப்பை அவனுடைய கால்களில் தட்டுப்பட்டது. அவன் அதைத் திறந்து பார்த்தபோது, அதில் சிறிய கற்கள் இருக்கக் கண்டான். அவன் அந்தச் சாக்குப்பையை எடுத்துக்கொண்டு, தான் நடந்துபோகும் வழியில்

ஒவ்வொரு கல்லாகக் கடலில் எறிந்துகொண்டே போனான். கடைசியில் ஒருசில கற்கள் மாத்திரம் அந்தச் சாக்குப்பையில் மீந்திருந்தன. அவற்றை அவன் தன் சட்டைப்பைக்குள் போட்டுக்கொண்டான். அவன் வீட்டிற்குப் போய், சட்டைப்பையில் இருந்த கற்களை வெளியே எடுத்துப் பார்த்த போது, விளக்கினொளியில் அவை மின்னித் துலங்கிக்கொண்டிருந்தன! அப்போது அக்கற்கள் சாதாரண பாறைத் துண்டுகள் அல்ல, அவை ஒவ்வொன்றும் வைரக்கற்கள் என்பதைக் கண்ணுற்று அவன் அதிர்ச்சி யுற்றான்! அவ்விலையேறப்பெற்ற கற்களில் பெரும்பாலானவற்றைக் கடலி னுள் எறிந்துவிட்டதை எண்ணியெண்ணி அவன் மிகவும் மனம் வருந்தினான்.

ஆம்! கடந்து போன நாட்கள் ஒவ்வொன்றும் விலையேறப்பெற்ற இரத்தினக் கற்களைப் பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றவையா யிருந்தன. விலையேறப்பெற்ற உன் நேரத்தைக் கடந்த நாட்களில் நீ வீணாக்கிவிட்டாயா? அந்த வாலிபனின் சட்டைப்பையில் ஒருசில வைரக்கற்களே மீந்திருந்தது போல, நமக்கு இன்னும் சில வருடங்கள் அல்லது சில மாதங்கள் அல்லது சில நாட்கள் மட்டுமே மீந்திருக்கலாம். அவற்றையும் நாம் மாயக் கடலில் எறிந்துவிடப்போகிறோமா?

அன்பான வாசகரே! நீர் இதை வாசிக்கும்போது, வருடம் முடிவதற்கு இன்னும் சில மணி நேரம் மட்டுமே மீந்திருக்கக் கூடும். உம் விலையேறப்பெற்ற நேரத்தின் பெரும்பகுதியை நீர் வீணாக்கிவிட்ட தற்காக மனஸ்தாபப்படுவீரா? கர்த்தர் இன்னும் ஒரு புதிய வருடத்தையோ, வருடத்தின் ஒரு பகுதியையோ உமக்குக் கொடுத்தால், நீர் அதன் ஒவ்வொரு நொடிப்பொழுதையும் உண்மையுடனும் ஜாக்கிரதையுடனும் கர்த்தருடைய மகிமைக்காகவே செலவழிக்கத் தீர்மானிப்பீரா?

"ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக் கிறார். ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்துகொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங் கள். ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்" (எபே. 5 : 14 - 17).